அக மருந்து, உள்ளுக்குச் சாப்பிடும் அல்லது கொடுக்கு மருந்து, medicine taken or given internally; 2. உடம்பினுள் புகட்டு மருந்து, medicine which is administered or injected into the body.

Note.—இது 32 வகைப்படும். அலை. குடிநீர், சூரணம், மாத்திரை, லேகியம், செந்தூரம், பேதி மருந்து, நீர்ப்பெருக்கி முதலியன. It consists of 32 kinds—such as decoction, powder, pill, electuary, oxide, purgative, diuretic etc. See தொகை பகராதி.

அகமனம், (அ + கமனம்) பெண்ணிடம் சேரா திருத்தல்; புணராமை, abstinence from sexual intercourse ; 2. (அகம் + மனம்) உள்ளே யிருக்கு மனம், mind within.

அகமனி, பெண்ணினிடம் சேராதவன், a confirmed bachelor, a celibate; 2. ஆகாய மார்க்கத்திற் செல்லமுடியாதவன், one who is incapale of travelling in the aerial regions, as opposed to சுமனி—one who is capable of doing so with the aid of mercurial pills called 'Gagana Kuligai' (animated).

அக மாலிகம், கருங்குமிழ், a black variety of Kandahar tree—Gmelina arborea alias G.tomentosa,

அக முகம், உள்நோக்கிய முகம், இதனை அந்தர் முக நோக்கமெனவுங் கூறுவர், face turned inwards, as in an abscess. 2. தனக்குள் பார்த்தல், (in philosophy) inward look.

"அஞ்ச புலன் வழிபோகாத அகமுகமாய்"
(வள்ளலார் சரித்திரம்)

அக மூலம், உள்மூலம் அதாவது ஒருவரும் பார்க்க முடியாதபடி ஆசனத்திற்குள்ளுண்டாகும் ஓர் விதமூல நோய், Piles within the anal orifice; hemorrhoids within tbe sphincter ani—Internal piles; 2. உள்ளிருக்கும் மூலாதாரம், one of the six psychic centres in the human body situated in the sacral region; 3. உள்வேர், internal root ; 4, உட்காரணம், internal cause;

5. உடம்பினுள்ளே இருக்கும் ஆதி வஸ்து அதாவது ஆன்மா, the primordial substance inside the body i. e., the soul.

அகம், தானியம், grain ; 2. மரப்பொது; tree in general; 8. மனம், mind, 4. வெள்வேல் a tree, white-bark Acacia—Acacia leucophloea ; 5. உள், interior; 6. உட்பக்கம், the inner part, inside; 7. மார்பு, chest or thorax; 8. வேதனை, pain; 9. குணகுணம், natural disposition ; 10. பாம்பு, a snake; 11. மலை, mountain; 12. காமவின்பம், sexual pleasure; 18. ஆகாயம், ether; 14. ஆன்மா, the soul; 15. பகல், day; 16. அகங்காரம், the operative principle of transmigration —Egotism.

" அகமறிவுடன் அடக்கமறிவர்
அக மாயறிவுடன் அட்டமக்கடை"

17. உடம்பு, as in

"தேகமென்ற அகமிதாம் சக்தி மாண்பர்."
(இராம—வைத்தி—குறிப்பு)

NOTE.—(In Vedantam) தெளிவு சோருபம். தானென்று மனம், the produot of Mahat. (In Sankyam) the third of the 8 elements of oreation—Individualisation.

அகம்பனம், மூச்சுத் திணறுதல், the suspension of the vital function when the lungs are deprived of air; suffocation.

அகம்பாவம், see அகங்காரம்.

அகம்மியகை, சோர புருட—ஞெடு சேர்ந்த பெண். a married woman who has had illicit intercourse; an adulteress; 2. சோரம் போன பெண், an unmarried female guilty of fornication,— A fornicatress.

அகம்மியம், சேரக்கூடாமை, that which is unfit to be approached.

அகம்மியா, (அகம்மியம் - அனயின்மை) அனவு கடந்து புருடர்களோடு கூடும் பெண், விபசாரி, a prostitute; a harlot.

NOTE.—களாதப்ப புருடர்களோடு சேருவதால் பலவித நோய்கட் குள்ளாவனென் றருதியே இவ்வாக உலோ தானென் வேர்வைப்பட்டது. Cohabitation with prostitutes is forbidden because of the danger of catching contagious diseases.

அகம்மியா கமனம், பொது மாதரைச் சேர்தல், cohabiting with a public woman or a prostitute; (2) சோரப்புணர்ச்சி அதாவது பிறன் மனையாளைப் புணர்தல், illicit intercourse with a married woman—Adultery; 8. விபசாரம், fornication.

அகம்மியாகமனம் பண்ணல், சோரத்தனம் செய்தல், to commit lewd actions. 2. பிறன் மனையாளோடு புணர்தல், to commit adultery.

அகம்மியா கமனன், தூர்த்தன், he who commits lewd acts; a fornicator; 2. பிறன் மனையைப் புணருபவன், an adulterer.

அகம்மியை, see அகம்மியா.

அகர காயம், உடம்பின் முன் பக்கம், the fore or front part of the body.

அகரக் களங்கு, குதக்களங்கு, an impure oxide of mercury.

அகரத் திரவம், பாலேடி, தயிர்தெ, the thin upper part of standing milk or curd.

அகர நீர். முத்துச்சிப்பியின் நடுவிலிருக்கும் நீர் (திருவள்ளு - பஞ்ச) the water deposited in the centre of a pearl-oyster.

அகர பரணி, பூனைக்காலி, a plant, Cow-hage or Cat-bean—Mucuna pruriens alias Carpopogon pruriens.

அகர பாதம், பாதத்தின் முற்பகுதி, the forepart of the foot.

அகரம், தமிழ் முதலெழுத்து,

" அகரமுதல் அனவெழுத்தும் ஆதிபகவன்
முதற்றேயற்று இறிவேதான் வேலிபதரமும்."
(அ. மு. ரூளை')

the first letter of the Tamil Alphabet; 2. மூன்றெழுத் தொன்று; இது வெங்கை குறிக்கும்;

" அறைகுவேன் அகரம் வெருளாத
ஆச்சரியம் உகாமத சந்நியாசர்"
(சத்த. ஞானம்.)

one of the three mystic letters (A+U +M) referring to Siva. 8. இரசம், Mercury—Hydrargyrum; 4. மூலாதாரம்,

'அரவெழுத்தால் அந்வெழுத்தேறனாம்'

one of the six psychic centres of the body situated at the base of the spinal column at the sacral region.
5. முன்பாகம், the front part.

அகராஜசம், வெண்தை, a herb, Indian Rhubarb —Ipomaea turpethum.

அகரி, ஓர் வகைப் புல், a kind of grass—Andropogon serratus.

அகரு, இதுவொரு காட்டுச் செடி. குத்துக்குத் தானாக விருக்கும். இதில் லெதிய மரங்களாகவும் வளரும். இதன் இலைகள் மாறி மாறியும் ஒரக்களிலரும்பு வாய்ந்தவைகளாகவும், பூ பூனை வாலைப் போலவும் விருக்கும். காய், மூன்று அறைகள் கொண்டது. இதில் இரண்டு விதங்கள் உண்டு—1. தெப்பல் அகரு இது

மாத்திற்கு உபயோகப்படும். 2. திருஷ்ணாகரு இது கருப்பாகவும் கனம் வாய்ந்ததாயு மிருக்கும். தன்னீரிலுங்கு மிழும். இதற்கு இந்தியில் 'ஊதேகறகி' என்று பெயர். இது நமிழ் தேசத்தில் மரமல்ல. கூடவே இருந்தாலும் அரைமரம்; சிறிய வகை. a kind of woody shrub found in groups but some of them grow into even small trees. Leaves usually alternate, with toothed margins. The flowers resemble the tail of the cat and the fruits contain three cells each. It consists of two kinds namely–1. Floating Agaru used in medicine. 2. Sinking Agaru, a black and heavy variety sinking in water. It is called 'oothay karaki' in Hindustani. It is not a native of the Tamil country and so, very little is known about it; 2. ஓர் மரம், a kind of tree, the wood of which is fragrant; Agallochum — Amyris Agallocha. 3. (அ + கரு) in Sanskrit கனமில்லாமை, not heavy 4. அகருக்கட்டை, the fragrant light wood of அகரு tree; eagle wood —Aquila Xylaloo.

NOTE.—1. (In Botany) it is said to belong to Excoecaria genus and the species best known are classified as Agallocha (Tigers' Milk) and Sebifera (China tallow).

The other South Indian species, indigenous and naturalised are—Baccata, Cochin, Chinensis, Indica, Insignis and Oppositifolia.

NOTE.—2. This name is also used for (a) Aquilaria Agallocha (eaglewood) (b) Pterocarpus santalinus (Red sanders) as in அகருக்கட்டை."

அகருக் கட்டை, அகரு மரத்தின் கட்டை. இதைப் பீனசம், தலையில், தினவு, புடைகள் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம், fragrant aloe wood of the tree—Amyris Agallocha. It is used in catarrh of the nose, headache, prurience, swellings etc.

NOTE.—It is very doubtful if this could be the Agil mentioned in the Tamil Materia Medica and sold in bazaars. The variety appears to be a different one.

அகரு சந்தம், செஞ்சந்தனம், a tree; Red sanders—Pterocarpus santalinus.

NOTE.—The term is apparently used for Red sanders without distinction as both are fragrant

அகரு சந்தனம், செஞ்சந்தனம், see note under அகருக்கட்டை.

அகருத் திராவகம், அகருக்கட்டை யினின்றிறக்கும் வடிநீர், a liquid extracted from Agaru wood. It is used for strength, cleaning bowels and promoting digestion.

அகரு மத்தம், குங்கிலியம், a resinous gum, Indian Dammer—Shorea robusta.

அகரோகம், சயரோகம், consumption; 2. உள் நோய், internal disease.

அகர், அகரு, which see.

அகர்க் கட்டை, அகருக்கட்டை, a kind of fragrant wood—Amyris Agallocha.

அகர்ணகம், see அகர்ணம்.

அகர்ணம், (அ + கர்ணம்) காதின்மை, lack of ears, absence of ears; 2. காது கேளாமை, thickness of hearing; defect in the power of hearing; 3. செவிடு, lack or loss, complete or partial of the sense of hearing — Deafness.

அகர் நாதன், (அகரம் + நாதன்) பகலுக்கு நாதன், அதாவது சூரியன், ruler of the day i. e., the sun

அகர் முகம், (அகர் = பகல்) விடியற்காலம், the first appearance of light in the morning, day-break, dawn; 2. காலைப் பொழுது (லயகாலை) morning time i, e, till 10 A. M.

அகல சத்து, (அகலம் + சத்து) மலைச்சத்து அதாவது சிலாசத்து, ஓர் உபரசச்சரக்கு fossil-exudation; stone-lac supposed to issue from stones of mountains in hot weather—Bitumen. It is produced in mountains where iron abounds. It is classified in Tamil medical treatises as one of the 120 kinds of natural drugs.

அகல நடத்தில், மெதுவான அகண்ட நாடியின் நடை, slow and broad pulsation; a pulse full with wide excursions. See அகற்றி நடத்தல்.

அகல முளி, ஆடுதின்னாப்பாளை, a plant which even the goat will not eat, owing to its extreme bitterness, worm-killer—Aristolochia bracteata.

அகல மூலி, மலைமூலி, herbaceous plant growing on mountains; mountain herb.

அகலம், மார்பு, the chest, breast; 2. பூமி the earth ; 3. ஆகாயம், the sky ; 4. மலை, mountain.

அகலவாலி சுறேதம், வால் நீண்ட குரங்கு, a long-tailed monkey—Macaca ferox.

அகலழுக வுதல், மருந்திட்டுச் சீலைமண்செய்த அகல் கிவக்கும்படி ஊதுதல், blowing red-hot the luted earthen vessel containing medicine.

அகலறை, மலையிலுட்குகை, the cave in a mountain ; 2. மலையிலுச்சி, the top of a mountain; 3. மலைப்பாகம், the part of a mountain.

அகலாதரை, ஆடா தோடை, a plant, winter cherry—Adatodha vesica alias Gendarussa adatodha.

அகலிகம், புழுக்கொல்லி, see அகலமுனி.

அகலியம், மரப்பொது, tree in common.

அகவுள், பூமியிலுட்பக்கம், the interior of the earth, underground; 2. பெண் குறியிலுட்புறம், the membranous canal extending from the external orifice in the vulva to the uterus—Vagina 3. யோனி வாயில், the vaginal orifice,

அகல், நிதம்பம், அதாவது அடிவயிற்றிலிருந்து பெண் குறிவரை மேகன வெனும் புக்கு முன்தோன்றிப் பருவ காலத்தில் மயிரால் மூடப்பட்டிருக்கும் நிணமேடாகிய அல்குலின் மேற்பகுதி, an euphemism for the Mons veneris—that portion of the body extending from the lower part of the abdomen forming the eminence in front of the pubis, (which is at the front of the pelvis) covered with hair at puberty in the female; 2. வெள்வேல மரம், a tree, white bark Acacia—Acacia leucophloea ; 3. பெருமரம், tooth-leaved tree of Heaven—Ailanthus excelsa; 4. மண விளக்கு, an earthen lamp 5. ஓர் அளவு, a measure, 6. விரிவு, expanse; 7. அகில், Chittagong wood—Chukrussia tabularis.

அக வஞ்சம், வெள்ளி, silver,—Argentum.

அக வடி, அடியின் உட்புறம் அதாவது உள்ளங்கால், the underside of the foot; sole.

அக வலி, உள்வலி internal pain, as opposed to புறவலி, external pain; 2. மனவன்மை, strength of the mind. see அகரோய்

அக வலிமை, உடம்பினுள் ளமைந்த வலிவு, bodily strength,

அக வாசிகம், கருங்குறிஞ்சா, a black variety of குறிஞ்சா, a plant ; Common Indian Ipecacuanha—Tylophora asthmatica.

அக வாயில், மனம், the mind.

அக வாயுக்கள், உடம்பினி லுள்ள அந்தக்கரணங்களைச் சீவனோடு கூட்டி நின்று ஆட்டுவிக்கும் ஐந்துவித வாயுக்கள், அவையாவன— 1 வைரம்பன், 2 முக்கியன் 3 பிரபஞ்சணன், 4 அந்தரியாமி, 5 மகா பிராணன். The five vital airs, which in communion with the soul, are supposed to operate upon the intellectual faculties of human beings.

NOTE.—The soul is said to be embedded in the five-fold sheaths or garments. Ordinarily the soul and its coverings are manifested together. But the soul is different from the sheaths when the Upadhis are not manifested.

அக விதழ், பூவி னுள்ளிதழ், (in botany) the inner petals of a flower, 2 பூந்தாது, the male organ of fructification in flowers within the petals—Stamen.

அகவு, அமுக்கிரா, Horse root—Withania (Physalis) Somnifera.

அக வுயிர், உடம்பினுள்ளுயிர், the life or soul in the body.

அகவை, வயது, the period which represents the whole or a part of the age of any animal or object; age ; 2. பதினது வயதுக்குட் பட்டவள், a female under sixteen years of age.

அக வைரம், உள் வைரம், (In biology) formation of knobby or wart-like prominences in the heart of a tree—Inner tuberosity.

அகழான் / அகழெலி } நண்டைப் போல் வளையில் வசிக்கு மோர்வகை யெலி, வயலெலி. இது பத்தியத்திற் குதவும், a field-rat—Millardia meltada. It is useful in diet.

அகழிப் பவுத்திரம், வாத பித்தத்தினுல் மறைந்து அகழியைப்போல் ஆசனவாயைச் சுற்றி நான்கு பக்கமும் துவாரங்களே யுண்டாக்கி இரத்தம் சீழ் முதலியவைகளே யொழுகச் செய்யு மோர் வகைப் பவுத்திரம். இதற்கு வடமொழியில் 'பரிட்சேபி பகந்தர விரணம்' என்று பெயர். An abnormal channel of communication between the bowel and the surface round the anus—A kind of Anal Fistula.

அகழெலி, வாசபெலி; வயலெலிகளுக் குள்ளிது வொரு பெரிய சாதி. இதன் மயிர் நீளமாயும் நிறது மூறப்பாயும் சிலை நிறம் வாய்ந்து மிருக்கும். சிறு மயிர்கள் மிருதுவாயும் புகை நிறம் வாய்ந்ததாயு மிருக்கும். வயிற்றின் பாகத்தில் மயிர் வெளுப்பும் சாம்பல் நிற முங் கலந்ததாக விருக்கும். முழு நிறமோ சாதாரண வெலியின் நிறத்தைப் போலி ருக்கும், தலை சிறியது; காதும் சிறியது. சிறுமயிர்களாடர்ந்து காணும். வால் உடம்பின் நீள முண்டு. மீசை நீளம் அடர்த்தி. பற்கள் மஞ்சளாயிருக்கும். குளம் தோண்டும் ஓட் டார்க ளிதைப் பிடித்துண்பார்கள். இது வலைக்குள் சேகரித்து வைத்திருக்கும் நெற் கதிர்களைத் தோண்டியெடுத்துத் தங்களுக்கு மழைக்காலத்தில் உதவும் படிக்குக் கொண்டு போவார்கள். mole-rat—Nesokia Indica alias Arvicola Indica alias Mus dubius. Its fur is rough, long and somewhat brown; the short furs softer but dusky, paler beneath and tinged grey. The color is like that of the common rat; head short, ears small, and tail naked and nearly as long as the body; ears small and covered with fine small hair; whiskers long and full and incisors orange yellow. Tank diggers or wodders as they are called, capture this animal in great numbers and use them as food; they plunder the grain stored up in the holes and take it home for use in winter.

அகளங்கம், (அ + களங்கம்) குற்றமற்றது, that which is free from impurities; 2. பிறவிப்பாஷாணம் முப்பத்திரெண்டில் ஒன் றுகிய சீதாங்க பாஷாணம், one of the 32 kinds of native or natural Arsenic.

அகளம், சாழி, a large pot with a wide mouth, 2, பிடா, a large earthen pot for storing grain ; 3. சாடி, a jar

அகளி, தண்ணீரூற்றும் அகண்ட சட்டி, a wide-mouthed water-pot ; 2. கொப்பரை, a kettle; see அகளம்.

அகள், see அகவு.

அகற்பப் பிராணயாமம், மூச்சொடுக்கும் பழக் கம், breathing exercise ordinarily without meditation.

அகற்பித மரணம், (அ + கற்பிதம் + மரணம்) நியமித்த காலத்திற்கு முன் ணுண்டாகும் சாவு; அகால மரணம், death occurring before the prescribed time—Premature death or untimely death.

அகற்றல், விரித்தல், to unfold; 2. உச்சாடனம் magic art causing one to disappear 3. விசால மாக்கல், to extend to widen.

அகற்றி நடத்தல், நடக்கும்போது அரையாப் புக்கொண்டவன் போல் காலை அகலவைத் தல்; to straddle while walking; to walk with the legs far apart like a person suffering from bubo on the groin or from hydrocele.

அகற்றுதல், காலை விரித்தல், to widen the legs apart.

அகனம், வேங்கை மரம், a tree called the Indian Kino—Pterocarpus bilobus.

அகனதி, சொடிவேலி, வெண்கொடிவேலி, a shrub, Leadwort, or white-flowered Leadwort, Ceylon Leadwort—Plumbago Zeylanica 2. செங்கொடி வேலி, Rosy-flowered Leadwort, Officinal Leadwort —Plumbago rosea 3. வெள்ளைக்குன்றிமணி, White Indian liquorice—Abrus precatorius (albiflora.)

அகனிதம், see அகனி.

அகன், எருக்கு, a milky shrub, Swallow-wort bearing curled flowers—Calotropis gigantea.

அகன் மணி, உயர்ந்த ரத்தினங்களி லொன்று, one of the superior gems ; a flat gem.

அகன்ற நாளம், விரிந்த இரத்த நாளம், enlarged vein; varicose vein.

அகன்றில், ஆண் (அன்றில்) பறவை, the male of a bird noted for its attachment to its mate—Indian Nightingale.

அகன்னம், செவிடு, deafness. see அகர்ணம்

அகன்னிய கனி, நாளுக்குநாள், from day to day.

அகாண்ட குசுமம், காலத்தவறிப் பூத்தல், blossoming out of season.

அகாண்ட சாதம், (அ + காண்டம் + சாதம்) அகாலப் பிறப்பு அகாலது காலமில்லாத காலத்தில் பிறந்தது, premature birth.

அகாண்ட சூல, குத்தல் வலி, acute pain.

அகாண்ட பாதசாதம், பிறந்தவுட னிறத்தல், dying soon after birth.

அகாண்ட பாதம், அகாலசம்பவம், unnatural or untimely occurrence.

அகாண்டம், (அ + காண்டம்) அகாலம், கால மில்லாத காலம், out of season, before

the natural time ; 2. முண்ட மில்லாதது, that without a trunk.

அகாத சுரம், கொடிய சுரம், a condition marked by excessively high temperature or aggravated febrile symptoms—Hyperpyrexia.

அகாத நோய், அதிக நோய், a virulent disease.

அகாத பசி, கொடிய பசி, extreme hunger —Hyperorexia, see அதிபசி.

அகாத பித்தம், கொடிய பித்தம், excessive secretion of bile—Hypercholia.

அகாதப் புளிப்பு, மிகப் புளிப்பு, excess of acidity—Hyperacidity.

அகாதம், மிகுதி, excess—Hyper.

அகாத வலி, பொறுக்க முடியாத வலி, excessive sensibility to pain—Hyperalgesia; 2. அதிக வலி, excessive pain—Hyperalgia, 3. ஆழ்ந்த வலி, deep-seated pain.

அகாத வியர்வை, அதிக வியர்வை, excessive sweating—Hyperephidrosis.

அகாத வுதிரம், மிகுதியான இரத்தம், vast quantity of blood—Polyemia; 2. அளவிறந்த இரத்தம், super-abundance of blood—Plethora.

அகாத வொழுக்கு, மிகுதியான வொழுக்கு அல்லது போக்கு, excessive evacuation as in bleeding or purging—Hypercenosis.

அகாதிதம், (அ+காதிதம்) கடித்துத்தின்னக் கூடாதது, that which can only be swallowed and not masticated.

அகாத்தியம், கடித்து உண்ணத் தகாதது, that which is not fit for chewing.

அகாந்தம், கான்றி, a large tree, Devil's abode ; Belleric Myrobalan—Terminalia belerica.

அகாமவினை, தான் விரும்பாமலே, நோய், காமவிகாரம், தெய்வீகம், பயம், அவிவேக முதலியவைகளா லியற்கையான அறிவழிந்து செய்யுந்தொழில், any indiscriminate or foolish action done through disease, lasciviousness, accident, fear, ignorance etc, without any desire on one's part and for which he is not responsible.

NOTE. வினைகள் காமியம், அகாமியம் என இருவகைப் படும். காமியம் ஒன்றை விரும்பிச் செய்வது; அகாமியம், ஒன்றையும் விரும்பாது ஈசுவப்பிரீதியாகச் செய்வது. அகாமியத்தை அகாமிய வினை யெனவும் கூறுவர்.

Actions are of two kinds—namely (1) that which is done with desire and (2) that which is done without desire as a work for God.

அகாயம், (அ+காயம்) உடம்பின்மை, absence of body; 2. தேகமற்றது, that which has no material body.

அகாரம், தமிழில் முதலெழுத்து,

" அவ்வெழுத்தும் அகாரமுத வன்மைத்தே"

(சத்த. ஞானம்)

the first letter in the Tamil Alphabet;

2. எல்லாவற்றிற்குங் காரணமாயுள்ளது,

" அகாரமல்லோ சதுவுடனே மிக்கவாச்ச
அகாரமல்லோ அன்னைபொடி நத்தைபாச்ச
அகாரமல்லோ ஆடுமிற மித்தைபாச்ச
அகாரமல்லோ கன்னாறு தெட்டநாச்ச
அகாரமல்லோ மதியுடனே விரியுமாச்ச
அகாரமல்லோ அகன்டபர வெளியுமாகி
அகாரமல்லோ குருவுடனே டேதாச்ச
அகாரமடா உபதேசப் பொருளுமாச்சே.'

(கொங். குத்.)

" ஆப்பா அகாரமது மூலமாகும்." (சம். ஞா.)

it stands for that which is the life of everything in this world as could be learnt from the above stanzas.

3. இது சிவனைக் குறிக்கும்,

"குகச்சாமற் சொல்லி வைத்தேன் அகாரம் சன்
கூடிநிற்கும் உகார மல்லோ சத்தியாகும்."

(அக. மெய். ஞா.)

It represents the God Siva;

4. இது காரணத்தைக் குறிக்கும்,

"காணுநீ அகாரமொடு உகாரமென்பார்
காரணமாக் காரியத்த னென்று சொல்வார்."

(கொங். ஞானம்.)

"தேனே அகாரம் செடியாம் சிவரூபம்
தானே யுகாரம் கலமான சத்திதான்
வேனே மகாரம் விளக்கு மதுவாமே."

(சட்டமுனி சிகண்டி.)

"அகார காரணத்தனே யனேகனேக ரூபாய்."

(சிவ-வாக.)

of the two namely cause and effect, it stands for the cause of that which brings about any change;

5. மூன்றெழுத்தி லொன்று, one of the three mystic letters; 6. வீடு, house; 7. மரம், a tree; 8. மாமரம், a mango tree—Mangifera indica. 9. காயுருவி, Indian burr—Achyranthes aspera.

அகார வப்பு, கல்லுப்பு, Rock-salt—Sodium Chloride. It is found in many places in vast deposits and is cut out in the solid

state from mines; 2, காயுருவி உப்பு, salt extracted from the plant, Indian burr.

அகால கருப்பம், ஏற்ற காலத்தில் ஹண்டாகாமல் அக்காலத்திற்கு விரோதமாக முந்தியோ அல்லது பிந்தியோ உண்டாகுங் கருப்பம். அதாவது,

1. பெண்கள் பருவமடைந்து மாத யிடாய் தோன்றுவதற்கு முன்னும்.

2. பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதிற்கு முன்னும் அல்லது ஐம்பது அல்லது ஐம்பத்திரண்டு வயதிற்குப் பின்னும், ஏற்படும் கர்ப்பம். சில பெண்களுக்கு ஒன்பது வயதிலும் சிலருக்கு எழுபத்திரண்டாம் வயதிலும் கருப்பம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. பிள்ளை பெற்ற 8 வாரத்திற்குள் ஹண்டாகும் கருப்பம்.

4. மூன்று வருடம் வரையிலும் சிலருக்கு அசௌ மாதிரமிருந்தி கி வ்ளோயருந்து கொண்டி பிறகு மீண்டும் பிரபாகை போடி வெளிப்படும். இதனைத் தமிழில் 'மும்மாங்காய்' எனவும் வடமொழியில் 'லிங்கக்ஷ கர்ப்பம்' எனவும் கூறுவர். Pregnancy occurring before or after the usual period as in the following cases.—

1. Before the appearance of catamenia.

2. At the earliest age (before the eleventh or the twelfth year) or at the latest age (between the fiftieth and the fifty-second year).

The youngest age at which this condition is reported to have occurred is 8 years and 10 months (9 years) and the latest recorded age is 72 years although it usually ceases beween the ages 40 and 50.

3. Eight weeks after a woman's last confinement.

4. Pregnancy continuing for a period of 3 years. The child is said to lie concealed in the womb for a period of 3 years without movements. This is termed 'Mummangai' in Tamil and 'Linakya Garbham' in Sanskrit.

NOTE.—This is unknown in Western Medical Science as the normal condition of pregnancy in women is only 280 days or 10 lunar months. It is very much doubted if this could be Spurious pregnancy i, e, any condition in the abdomen that simulates pregnancy as in Hysteria —Pseudocyesis.

அகால கலிதம், காலமில்லாத காலத்திலேற் படும் இந்திரிய ஸ்கலிதம், untimely discharge of semen as, nocturnal emission.

அகால சம்பவம், காலமில்லாத காலத்தி ஹண்டாகும் சம்பவம், happening not at the right season; untimely occurrence; 2. சாதாரணமாய் ஏற்படும் காலத்திற்கு முன்னதாக ஹண்டாகும் சம்பவம், what happens before the usual time—Premature happening.

அகாலசூதகம், ஏற்பட்ட காலத்தி லல்லாது இடற்கைக்கு விரோதமாக ஹண்டாகும் மாத யிடாய் அல்லது தீட்டு. உதிரம் பெண்களுக்கு 12 வயது முதல் 40 வயது வரைக்கும் சாதாரணமாக 28 நாளைக் கொருமுறை போனித் துவாரத்தின் வழியாக வெளிப்படுவதால் இப்போக்கிற்கு மாதயிடாய் அல்லது மாத முழுகு என்ற பெயர் இடப்பட்டது.

சிலருக்குக் கருப்பந் தரித்தும் மாத மாதம் சோணிதம் வெளிப்படுகொண்டேயிருக்கும். இதற்குத் 'தங்கு பிண்டம்' எனவும் வடமொழியில் 'சுப்தி பிண்டம்' என்னும் பெயர். மற்றுஞ் சிலருக்குக் கருப்ப காலத்தில் லல்லது மற்றக் காலங்களிற் சூதகம் தோன்றுது.

இத் தீட்டு, தேகக்கூறு, சோகை, கருப்பவாயு முதலான நோய்களுக்குத் தக்கவாறு மேற்கண்ட கெடுப்படிக் காணுமல் வேறுபட்டுக் காணும். இம் முறைக்கேடு சிலருக்கு 25 வயதிலேயே ஆரம்பித்துச் சில வருஷங்களுக்குள் போக்கு முழுவதுமே நின்றுவிடும். அல்லது 77 வயது வரை நீடித்துக் கொண்டு மிருக்கும்.

Menstruation which does not occur regularly at the usual period —Irregular menstruation.

During the menstrual life (12 to 40 years) it generally occurs once in 28 days.

Sometimes, it may occur even during the whole period of pregnancy or only during pregnancy and not at other times.

It may also be irregular owing to diseases of various kinds such as, Anaemia, Hysteria etc.

At the end of menstrual life usually occurring between the ages 45 and 50 (Menopause) this irregularity may commence.

Menopause may occur even as early as the 23rd year or as late as the 77th year.

NOTE.—1. The uterine discharge (Metrorrhagia) occurring between the menstrual periods is independent of the menstrual discharge.

NOTE.—2. Hemorrhage from the uterus is due to systemic disease. It is sometimes seen during the course of eruptive fevers—Pseudo-menstruation.

அகால நரை, பித்தக் கோளாறினால் இளவயதி லுண்டாகும் நரை, premature grayness of young adults from bilious causes.

அகால நித்திரை, நியமிக்கப்பட்ட காலத்தி லல்லாமல் மற்றக் காலங்களில் இயற்கைக்கு விரோதமாகத் தூங்குதல். அசாவது பகல் நித்திரை. Sleeping during unusual hours—Day-sleep.

NOTE.—Sleeping during the day should be avoided by adults especially after meal as it tends to induce dyspepsia and possibly liver diseases.

அகால பலிஷ்டை, see அகாலசூசகம்.

அகாலப் பக்குவம், காலமில்லாத காலத்தில் பெண்கள் பருவ மடைதல்.

சாதாரணமாகப் பெண்கள் 11 அல்லது 12வது வயதில் பக்குவ மடையார்கள். சூசகத்தைக் கழுதிப் பக்குவ மடைந்ததாகக் கருதப்படாது. சில பெண்கள் ருதுவாவ தற்கு முன்னமே பருவமடைந்து விடுவார் கள். இது தேக வியல்பையும் திடத்தையும் பொறுத்தது. மற்றுஞ் சிலரோ, கோயிலும், கல்வாழ்க்கையுமில்லாதிருப்பினும், பிற்பட காலும், நெடுங்காலம் வரைக்கும் பருவ மடையாதிருப்பார்கள்.

The attainment of puberty (in a female) at an improper age.

A girl between 11 and 12 would be immature. Puberty may not generally be attained at the first menstruation but only subsequently.

Some girls may have all the bodily developments of puberty before menstruation and this depends upon the nature, strength and other pathological conditions of the body. Some others may not mature for some years after the catamenial flow, as in the case of girls in good circumstances for want of exercise and development of the body. Sexual maturity may be attained before the onset of menstruation but it is very rare.

NOTE 1.—Puberty is the period at which the generative organs of the female become capable of exercising the functions of reproduction—Reproductive Maturity.

NOTE 2.—The attainment of puberty is not a sudden event. It is a process spread over many months or years. Menstruation is one of the steps though it may be delayed.

அகாலப் பசி, பொய்ப் பசி, imaginary or false hunger; 2. சிறிது முதலிய வியாதி களினால் காலக்கிரமத்தி லுண்டாகும் பசி, untimely hunger caused by the effects of diseases such as, diabetes etc.—Exaggerated hunger.

அகாலப் பருவம், காலமில்லாத காலம் unseasonable time; 2. சீதோஷ்ணமில்லாத காலத்தி லடையும் பக்குவம், maturity before the season; see அகாலப் பக்குவம்; 3. அகால ருது, which see.

அகாலப் பிரசவம், ஒன்று மாதமுதல் எட்டு மாதத்திற்குள் கருப்பிண்டம் காலக்கிரமத்தி லெளிப்படல், the premature expulsion of the foetus before the child is viable, i.e., occurring at any time between the 5th and the 8th month after conception —Miscarriage.

NOTE.—According to the old belief, the period of viability of an infant is its 8th month or the months subsequent and not the 6th month and after as it is since found out.

2. சரியாக மாதமுதல் கருப்பையிலிருக் கும் உயிர் வளர்ந்த பின், இரத்தோ அல்லது உயிருடனே காலக் கிரமத்தி லெளிப்படுதல். labour taking place before the normal period of gestation, but when the foetus is viable—Premature delivery alias Premature labor.

NOTE 1.—Premature delivery is one before 266 days and a protracted pregnancy is one after 280 days. 2. This is opposed to காலப்பிரசவம், a full-time propedelivery.

NOTE 2.—According to some authors, expulsion of the ovum during the first three months is abortion; from this time to viability (3 to 6 months) it is termed immature delivery or miscarriage and from the period of viability to that of maturity (6 to 9 months) premature delivery.

NOTE 3.—In law, the term miscarriage is applied to expulsion at any period short of the full term (a period of 273 to 280 days or about 40 weeks.)

3. மேற்கண்ட கால அளவைக் கடந்து பெண்கள் கருப்பத்தில் குழந்தை அசைவின்றி இருந்து 3 வருடத்திற்குப் பின் மிக்கப் பிரயாசையுடன் வெளிப்படுதல், labor taking place without due regard to the above prescribed time limits, after 3 years, during which the child may remain concealed in the mother's womb without exhibting any symptom of its movements.

NOTE.—This is unknown in Western Medical Science. For explanation see அகால கர்ப்பம், under clause 4.

அகாலப் பிரேதவடக்கம், நெடுங்காலம் நோயினாலும் கரம்புத் தளர்ச்சியினாலும் சுணங்கி சவத்தைப் போல் உயிரொடுங்கிக் கிடக்கும் நோயாளியை இறந்ததாகத் தப்பெண்ணங் கொண்டு காலத்திற்கு முன்னதாகவே புதைத்தல், the premature burial of a living patient as a result of suspended animatiou brought about in him by the crisis of a lingering disease or of nervous exhaustion.

NOTE.—This grave error is generally committed under the advice of the physician in attendance, who, unable to distinguish natural death from suspended animation (trance) through ignorance of psychological principles involved in it, announces that the patient is dead.

அகாலப் பிறப்பு, see அகாலோற்பனம்.

அகாலப் புணர்ச்சி, காலமில்லாத காலத்தில் அதாவது, பகற் காலத்திலும், உண்டவுடனும், உணவு செரிப்பதற்கு முன்னும், எண்ணெய் தேய்த்து முழுகிய காலத்தும், நோய்கொண்ட காலத்திலும், பத்திய வேளையிலும், பெண்கள் மாதவிடாய்க் காலத்திலும், ருதுவாகாத சமயத்திலும் கொக்கோக நூலில் நியமிக்கப்பட்ட காலங்கள் தவிர மற்றக் காலங்களிலும், மாதர்களோடு சம்போகம் செய்தல், sexual intercourse during unseasonable and unsuitable time, contrary to all rules of precept and practice such as, day-time, immediately after meal and before its digestion, after an oil-bath, during illness or while under medical treatment, during the menstrual period or before the attainment of puberty in females etc., and also at times other than those contemplated in the erotic or sexual science of Kokkohamuni.

NOTE 1.—Such intercourses are considered undesirable and therefore to be abstained from, from hygienic standpoint. Human beings are not provided with natural instinct as the animals are and therefore the need for the power of discretion in this respect.

NOTE 2.—The second half of the night is considered to be the best time on hygienic and scientific grounds for sexual intercourse for the reason, that the night meal would have been digested by the time and the mind will be calm and undisturbed without cares or anxieties.

2. பருவமடையாததற்கு முன் பெண்களைப் புணருதல், intercourse with a girl before her puberty.

c. f. அகிரமப் புணர்ச்சி.

அகாலப்பூப்பு, பெண்கள் காலமில்லாத காலத்தில் பூப்படைதல், development of the sexual organs before or after the prescribed time; 2. மகளிர் அகால சூதகம் அதாவது பெண்களுக்குச் சாதாரணமாகச் சரியான வயதில் மாதவிடாய் ஏற்படாமல், நோய், பைசாசம், கருப்பக்கோளாறு முதலியன போன்ற காரணங்களினால் வெகு நாள் கழித்து உண்டாகும் சூதகம், instead of appearing at the usual age, the menstrual discharge is delayed owing to illness, devilry (Hysteria), diseases of the generative organs and so on—Delayed menstruation. See also அகாலசூதகம்; 3. காலமில்லாத காலத்தில் பூத்தல், (In botany) blossoming out of season.

அகாலப் போசனம், காலமல்லது வேளை தவறிப் புசித்தல், food taken at irregular intervals; untimely meal.

அகால மரணம், எற்பட்ட காலத்திற்கு முன் சம்பவிக்கு மரணம், death happening before the normal time — Premature death; 2. காலமில்லாக் காலத்திலேற்படுஞ் சாவு, an untimely death; 3. திடீரென ஆபத்து நேர்ந்துண்டாகுஞ் சாவு, an accidental death.

அகால மிருத்து, see அகால மரணம் ; 2. அனியாய மரணம், death caused by murder, suicide etc — Unnatural death.

அகால மூப்பு, வயதடையாததற்கு முன்னமே மிழுதான மடைதல், premature old age—Senilism.

அகாலம், ஏற்பட்ட காலத்திற்கு முன் அல்லது பின், before or after the prescribed time—Unseasonable time; 2. பருவமின்மை, unseasonableness; 3. அளவில்லாத காலம், unlimited duration.

அகால ருது, ஏற்பட்ட காலந் தவறி யுண்டாகு மகளிர் முதற் பூப்பு.

இது பெண்களுக்கு 12 அல்லது 14 வயதிற்குள் ளுண்டாகும். இதற்கு முன்னே அல்லது பின்னே உண்டாவது முறைமைக்கும் வழக்கத்திற்கும் விரோதமாகக் கருதப்படும். இது மனித வமிசத்திற்கும், தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்கும், கூட்டுறவின் சம்பந்தத்திற்கும், ஆசாரத்திற்கும், தக்கவாறு வேறுபடும்.

மேலுட்டில், 18 வயது முதல் 19 வயதிற் குள்ளும், நமது தேசத்தில் 12 வயது முதல் 15 வயதிற்குள்ளும் ஏற்படுவது சகசம்.

சுசுருதர் ஆயுள்வேதத்தில் 12 வயதிற்குப் பின்னென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் 10 வயதிலும் 15 வயதுக்கு மேற்பட்டு 20 வயது வரை தாமதித்து முண்டாகும்.

இது வாழ்க்கைக்கும், உடம்பின் தன்மைக்கும் தக்கவாறு ஏற்படும்.

நமது நாட்டில் 15 வயதுக்கு மேம்பட்டுண்டாவது மிகவும் அபூர்வம்.

The first menstruation which does not occur at the proper time or age.

NOTE.—Menstruatin is the monthly discharge of mucous and blood from the womb, beginning as a rule, about the age of puberty and continuing as long as the capacity for child-bearing lasts.

It commences ordinarily between 12 and 14 years of age and the discharge appearing before or after this period, is considered an irregularity. This may vary according to race, climate, (warm—early, cold.—late) social condition, mode of life etc.

அகால

The normal period at which it occurs amongst Europeans is from age 18 to 19; among Indians, it is between the ages 12 and 15.

According to Ayurvedic science of Susruta, the menstrual discharge begins after the 12th year.

Indigent girls seldom menstruate before 12 years, but girls well-nourished and in good circumstances may begin to menstruate at 11 years. Menstruation at or before the age of 10 and beyond 18 is uncommon.

It may be delayed even till after the age of 20. This delay sometimes occurs in girls who exhibit at this period of life an extraordinary fatty development of the body—Delayed menstruation.

In India however, menstruation is seldom delayed beyond 15 years.

NOTE :—A child of 3 years is reported to have had a bloody vaginal discharge every month and another girl aged 5 years is said to have menstruated every 6 weeks and was sexually developed as much as a girl of 12 or 13 years.

அகால வடக்கம், தன்மானவப் பிரமத்தி லடங்கச் செய்வதற்காக, யோகின் தக்களுக்கு மரணம் அணுகாததற்கு முற்றிலே பூமிக்குள் குழி வெட்டி அதிலிறங்கி அடக்குதல், premature burial sought by a living Yogi voluntarily in a grave lined with masonry and covered with a large stone, for purposes of entering into Samadhi to attain union with the universal soul or the Divine Spirit.

This is a condition self-induced and purely hypnotic arising from auto-suggestion.

NOTE.—By this, the ego is blotted out, the mind becomes super-conscious and the subject enjoys absolute and undisturbed rest.

For further particulars see under Samadhi.

அகால வழுக்கை, நோயிலுல்லாது இயற்கையாகவே வாலிபர்களுக்குச் சில வயதிலேயே தலையில் உண்டாகும் வழுக்கை, the idiopathic premature baldness of young adults — Alopecia Prematura, alias Alopecia simplex.

NOTE.—It is most common in males and is often associated with premature grayness.

அகால வுண்டி, see அகாலப்போசனம்.

அகால வெள்ளெழுத்து, எழுத்து முதலிய தெரிய வருவதன் எண்ணுக்கு முதலில் காணப்பட்டுப் பிறகு காரணமில்லாமலே மயங்கி மறையுந் தன்மையையுடைய, தெரிவர் களுக்குப் பித்தக் கோளாறுகளினு லுண் டாகும் ஓர் வகைக் கண்ணேப், an eye-disease arising in youngsters from bilious causes in which small objects which were at first visible, suddenly disappear owing to some defects in the lens of the eyes—Errors of refraction.

NOTE.—This is opposed to சால வெள்ளெ முத, which is in popular language called 'old sight'—a condition that is reached at about 45 to 50 years of age, and in which from growing inelasticity of the crystalline lens of the eye (failure of accommodation) the near point of distant vision is removed to an inconvenient distance from the eye, with consequent diminution in size of the retinal image—Presbyopia.

அகாலோற்பனம், (அகாலம்+உற்பனம்=அகாலப் பிறப்பு) காலந் தவறிப் பிறத்தல், birth before or after the prescribed time; 2. காலந் தவறிக் காய்த்தல், (in botany) bearing fruit at an unseasonable time.

அகி, இரும்பு, iron—Ferrum ; 2. சீசம், lead Plumbum; 3. ஓர் வகை மரம், a kind of tree ? 4. சூரியன், the sun; 5. பாம்பு, a snake.

அகி கண்டம், (அகி+கண்டம்—snake and fragment) மயிர்மாணிக்கம், wild fenugreek —Sida rhombifolia.

அகிகாந்தம், காற்று, wind, air ; 2. சூரியகாந் தம், sun stone—Jasper.

அகினை, இலவமரம், silk-cotton tree—Bombax Malabaricum; 2. பட்டுப் பருத்தி, அதாவது இலவம் பஞ்சு, silk-cotton—Bombax pentandrum.

அகி கோசம், பாம்புச் சட்டை, the slough or cast-off skin of a snake.

அகிச் சத்திரம், ஓர் விஷம், a kind of vegetable poison? 2. ஓர் பூடு, a plant—Odina pennata ?

அகிஞ்சிரம், செங்கத்திரி, caper shrub—Capparis sepiaria alias Cactus opimtia, 2. கருங்குவாளி, the plant—Momordica cochin-chinensis.

அகிஞ்சை, கொல்லாமை, abstinence from killing; 2. (அ+ஹிம்சை=அஹிம்சை) தன் பம் இல்லாமை, harmlessness; இது மருவி, அஞ்சை என வரும் போதும்.

அகிதம், உணவு, food; 2. நன்மை இல்லாதது, that which is not conformable to a standard of taste; 3. தீமை, evil. 4. (அ+ இதம்) இத மின்மை, unpleasantness.

அகிதண்டிகன், பாம்பாட்டி, a snake-charmer; a snake exhibitor.

அகி நிர்வலயோனி, see அஜிசோசம்.

அகிபதி, பெரும் பாம்பு, a big snake. 2. பாம் புக் ரசன், King of snakes.

அகி பத்திரம், கரும்பு, sugar-cane—Saccharam officinarum.

அகி பந்தன், இரும்பு, சீசம் இவைகளைக் கட்டிச் சீர்பக்த பாஷாணம், a kind of native arsenic capable of consolidating iron and lead.

அகி புக்கு, கிரி, a mungoose—Herpestes Mungo ; 2. மயில், the pea-cock—Pavo cristatus; 3. கருடன், the Brahminy kite —Haliastur indicus.

அகி புசம், கருடன், the Brahminy kite —Haliastur indicus. 2. மயில், the peacock —Pavo Cristatus; 3. கந்தகாகுலி the ichneumon plant—Vanda roxburghii.

அகி புட்பம், நாகேசரப்பூடு, a plant, Ceylon ironwood—Mesua Roxburghii.

அகி பூதனம், குழந்தைகளுக்கு மலவாயி லண்டை சேரும் மலமூத்திராதிகளை அடிக் கடி சுத்தப்படுத்தாத காரணத்தை முன் னிட்டு அவ்விடத்தில் தினவுடன் குருக் கள் கண்டு பின்னர் பாம்பைப்போல் சட்டை கழற்றித் தின்புறுத்துமோர் சரும நோய், itch-like eruptions appearing about the anus in children and resulting in slough-ing, owing to the deposit of urine, perspiration, feces etc. consequent on the neglect in cleansing that part.

அகி பேனம், பாம்பின் விஷம், saliva of the snake; the snake-poison; 2. அபினி, opium—Papaver Somniferum.

அகி மரால் } வெள்வேல மரம் a tree
அகி மார் } white bark Acacia—Acacia leucophloea alias Vachellia fernesiana.

அகிம்சை, மனோவாக்குக் காயங்களால் தீங்கு செய்யாமை, not causing harm or injury to others by thought, word or deed. See அஹிம்ஸை.

அகியாசாசம், கற்பூரப் புல், lemon grass—Andropogon schoenanthus.

அகிரன், நெருப்பு, fire; 2. சூரியன், the sun.

அகிரிபு, see அஹிபுக்கு

அகிருதித்துவம், see அக்ருத்யகேடு.

அகிருத்தியம், தப்பானசெய்கை; illegal action as rape, adultery etc.

அகிருத்திரம விஷம், மரம், புல், பூண்டி முதலான அசரப்பொருள்களிலுமும், பாஷாண முதலிய தாதுக்களிலுமும், தேள், பாம்பு, சிலந்தி முதலிய பிராணிகளின் சங்கம விஷத்திலுமே மேற்படும் விஷரோய், diseases arising indirectly from the vegetables, mineral and animal poisons. It is opposed to கிருத்திரம விஷம்—poisons imported into the system directly by mixing it with other substances,

அகிரை, குரலடைப்பு, obstruction to the place of production of the voice; 2. குரலின்மை, voicelessness due to some peripheral lesion—Aphonia.

அகிர், தலைச்சுண்டி, a scurf, which forms on the head and comes off in small scales or particles like bran—Dandruff. See அசர்; 2. ஓர் வகைப் பாஷாணம், a kind of poison?

அகிலங் கட்டை, அகருக்கட்டை, Aquila or eagle wood—Zylaloo.

அகில சரீரம், உடம்பின் முழு பாகம், the body as a whole; 2. எல்லாப் பிராணிகளி னுடம்பு, bodies of all creatures in general.

அகிலதம், வெற்றிலைக் கொடி, the betel plant or creeper.

அகில மாமூலி, கன்ஞரி, a fragrant root. Indian Sarasaparilla—Hemidesmus indicus.

NOTE.—It is also called Country or False Sarasaparilla—Periploca indica.

அகிலமேதசம், அடிக்குருந்தியாவட்டம், Double blossomed common wax-flower; Dog-bane—Tabernaemontana coronaria.

அகிலமேதகி, செம் தொட்டி, சிறு காஞ்சொறி climbing nettle—Tragia involucrata.

அகிலம், எல்லாம், all; the whole; 2. பூமி, earth; 3. நீர், water.

அகிலி, செவ்வகில் மரம், a tree; Red Cedar —Cedrela Toona.

அகிலி மீரு, ஓர் மரம், Chittagong wood—Chukrassia tabularis. See note under அகில்.

அகிலோலிதம், see அகிலதம்.

அகில், அகிற்கட்டை; பஞ்ச வினரகளிலொன்று; இது அருமணம், நற்கோலி, கிடாரம், காரகில் என நான்கு வகைப்படும்.

இதுதான் கள்ளி மரத்தினுட் பாகத்திலிருக் கும்வாசனைக்கட்டை. இதை அகருக் கட்டை யெனக் கொள்ளப்பொருந்தாது. வாசனையி லொன்று மிருந்தாலும் இது வேறினம். இது மரத்தி னடிவிலும் அடிப்பாகத்திலு முண்டாகும் வேறு பாட்டினு லிவ்வாசனை யைக் கொடுக்கும். இது சாதாரணமாய் பஞ்சாங்க மிருந்தாலும் இதில் நான்கு வகை நிறங்களுண்டு. இது மிகவும் மிகையுயர்ந் தது மல்லாமல் மருந்திற்குச் சிறந்ததாகவுங் கருதப்படும். இது கோயிலில் நறும்புகை யிட வும் சுடுகாட்டில் பிணத்தைச் சுடவும் உப யோகப்படும். இக்கட்டையைச் சிறுதுண்டு களாக நறுக்கிக் கஷாயமிட்டுக் கொடுக்கச் சுரமும், சன்னியும் தீரும். இதைக் கடைக ளில் நீறுத்து விற்பார்கள். இதிலிருந்து மணி மாலை செய்து பூசைக் குபயோகிப்பார்கள். தற்காலத்தி லிது கிடைப்பதரிது. ஆசாம், மலையாகாடு, இமயமலை முதலிய விடங்களி லுள்ள மலைச்சாரல்களி லகப்படுவதாகச் சொல்லப் படுகிறது.

A fragrant wood known as Agil-wood or Indian scented wood — one of the five aromatics. It consists of four varieties—white, red, yellow and black. The correct botanical name † is not known.

† NOTE.—There is much confusion about this name as could be evinced from the several kindred names in colloquial use with different terminations and this is quite evident from Lushington's Vernacular List of Plants, wherein it will be found that.—

(1) அகல், அகில், அகிலு அகிலிமீரு, all these refer to one and the same plant Chittagong-wood —Chukrassia tabularis.

(2) அகணி, அகணியகில், அகுணி, அகுணியகில் all these refer to White Cedar—Dysoxylum

It is this aromatic wood which is formed inside the Kalli tree (Euphorbia genus). It should not be confounded with Agaru (eagle wood). Although the fragrance may be nearly the same, they belong to different botanical groups. The interior part, or trunk possesses or absorbs aroma from the oleaginous particles stagnating there & concentrating as the result of diseased action. Although the wood is usually yellowish in colour, it generally consists of 4 distinct colours.

The wood is very costly and is useful in medicine. The resinous extract is burnt in temples and the wood is broken into chips and used in decoction in fever and delirium. It is sold by weight in bazaars. It is also used for making rosary beads. It is rarely to be found now, but is said to be available on the mountainous tracts of Assam, Shylet, Malaya and the Himalayas.

அகில் தூள், அகில் கட்டையினின்று தயாரிக்க ஓர் வாசனைப் பொடி, a kind of aromatic powder prepared from Agilwood; 2. அகருப்பொடி, sandal or eagle-wood powder.

அகில் மரம், வாசனை புள்ள அகில் மரம்; a fragrant Agilwood tree—See அகில்.

அகி விஷபாசம், பாம்பின் விஷ மிறக்கல், neutralising the poison of snake. 2. கக்கரானை, the ichneumon plant—Vanda roxburghii. See அகிபுசம்

தகி ஸவரி, பாம்பின் சத்துரு அதாவது மயில் a pea-cock—Pavo Cristatus; 2. கருடன், the Brahmini Kite—Haliastur indicus.

NOTE.—The word indicates all creatures hostile to snakes, in general.

அகிற் கட்டை, ஓர் வாசனைக் கட்டை. இக் கட்டையின் லேபனம் களர்ந்த தேகத்தை யிறுகச்செய்யும். இதன் புகையால் சுரம், வாந்தி, அருசி, அயர்ச்சி முதலியன நீங்கும், a sweet scented wood of Agil (used for burning the dead). The powder of this wood when rubbed on the body, will make it sound and strong and its smoke will cure fever, vomiting, insipidness and languor. See அகில்.

அகிற் குறடு, see அகிற்கட்டை.

அகிற் கூட்டு, ஏலம், காசுக்கட்டி, கற்பூரம், தேன், அகில் ஆகிய இவைகள் சேர்ந்த வாசனைக் கலவை, a mixture of five aromatic ingredients— Cardamom, catechu, camphor honey and Agilwood, used for perfuming the hair.

அகிற் சிலை, see அகில்மரம்.

அகிற் புகை, அகிற் கட்டையின் புகை, the smoke of burning Agilwood to perfume the hair of women.

அகிற் றூள், (அகில்+தூள்=அகிற்றூள்) the fragrant powder of Agilwood. see அகில் தூள்.

அகினிறம், தூரு, copper acetate; blue vitriol; copper sulphate–Cupric sulphus.

NOTE.—The preparation adopted originally by the Hindus especially the Tamil

---

binecteriferum.

(3) அகில், Iron-wood—Hopea parviflora, of Malabar.

(4) அகில், Agilwood—Hemicylia Porteri.

(5) ஆகில், ஆசில் Cedrela Toona, which in Malayalam is known as Agil and in Canarese, Devadaru.

(6) அகில், அகில்மரம்—Blinding-tree, Tiger's milk Spurge–Excoecaria agallocha alias E. crenulata.

(7) அகில், அகரு, ஓர் வாசனை மரம், Aquila or Eagle-wood—Aquilaria agallocha.

None of these terms will apply to Agil contemplated in Tamil Medicine for the reason that it is said "கள்ளி வளித்தில் அகில் பிதக்கும்" which means that the word Agil will be formed inside a Kalli tree—Euphorbia genus.

Moreover, in the Tamil Materia Medica பதார்த்த குண சிந்தாமணி, it will be found that Agaru and Agil are differently classified and different properties are ascribed to them; whereas no such distinction could be seen elsewhere. Even Doctor Ainslie, in his Materia Medica admits that he was not able to ascertain whence it came or what the appearance of the tree was.

It is not to be forgotten here that the bazaarmen taking advantage of its rarity, sell under its name other fragrant woods which are cheap and easily procurable such as, Devadaru—Erythroxylon Areolatum, and Red sandal—Pterocarpus santalinus.

lians as described in the Tamil Medical science, refers to a compound akin to copper acetate and not copper sulphate since no sulphur is found in its composition. See தூசை.

அகீம், அரபி, பாரசீக வைத்திய நூற்களில் தேர்ச்சி யடைந்த புனனி வைத்தியன், a physician who is well acquainted with Persian and Arabic system of medicines.

அகுச மாதிதம், சிவப்புக் குண்டு மிளகாய், a variety of red chilly.

அகுசலாபு, அதிவிடயம், a medicinal root used in dysentery. Indian Atees—Aconitum Heterophyllum.

NOTE.—There is another root common in the bazaars of Southern India which is erroneously considered as a variety and called காட்டி அதிவிடயம், while in fact it is not, but probably it is another species of Aconitum.

அகுட கந்தம், பெருங்காயம், asafoetida—Ferula asafoetida.

அகுடம், கடுகு ரோகிணி, a drug used as a purgative for children; a cathartic-drug—Helleborus niger; 2. கருப்புக் கடுகுரோகணி, black Hellebore.

அகுட ரோகிணி, see அகுடம்.

அகுடாரிசம், கருங்குங்கிலியம், black Dammer—Canarium strictum.

அகுட்டம், மிளகு, black pepper—Piper nigrum; 2. கடுகுரோகிணி, see அகுடம்.

அகுணம், இலட்சண மில்லாமை, ugliness, disagreeable appearance; 2. குண மில்லாமை, lack of the requisite qualifications; 3. குற்றம், defect; 4. தர்க்குணம், bad quality; 5. குறைவு, want, deficiency.

அகுணன், குணமற்றவன், a man of no character; 2. வேண்டிய குணங்களற்றவன், an unqualified person.

அகுணி, கொண்டி, a cripple; 2. ஓர் வகை யகில், as அகுணியகில், an eagle-wood without fragrance; Bastard or white cedar—Dysoxylum binectariferum; 3. தர்க்குணன், a man of bad character.

அகுணி யகில், செம்பில் மரம், a tree, Cup-calyxed white ceder—Dysoxylum binectariferum.

அகுதி, வேல மரம், a tree of Acacia genus 2. கருவேல மரம், Black Babool—Acacia Arabica.

அகுப்பியகம், see அகுப்பியம்.

அகுப்பியம், (அ+குப்பியம்) இழிவில்லாத வுலோகம். அதாவது, பொன், வெள்ளி—not a base metal but gold or silver.

அகுப்வை, கயிந்தும்பை, a plant, a species of Trichodesma—Borago Indica.

அகுரம், சடராக்கினி, fire in the stomach—Gastric fire

அகுரா, அகுர் } see அகோரி.

அகுரு, குக்குலு, அகருக் கட்டையைப் போல் வாசனையுள்ள காவிசற்குப் பெயர், Indian bdellium—Amyris Agallocha alias Balsmodendron roxburghii. It is so called from its fragrance similar to that of Agilwood; 2. அகிலமரம், a kind of fragrant tree—Aquilaria agallocha; 3. இலகுவானது, that which is light; 4. கனமில்லாதது, that which is not heavy; 5. தூக்க மரம், Sissum—Dalbergia sisso.

அகுலாதிசம், காசலாங் கண்ணி (காசி+சாலக் கண்ணி,) a medicinal plant known as Eclipse plant—Eclipta prostata.

அகுலி, கறுவிலி, a tree, common sebesten—Cordia obliqua.

NOTE.—The correct pronounciation is கறுவிழி, but colloqually it is கறுவிலி. The following are the different species—

நெ கறுவிலி—Cordia myxa.

பெரு கறுவிலி—a variety bearing large fruits—Cordia obliqua.

காய் கறுவிலி—Cordia monoica.

பொன் கறுவிலி—Cordia sebesten a (speciosa).

காசு கறுவிலிச—Eugenia Jambolana (caryophyllifolia)

அசி கறுவிலி—Cordia sebestena.

அகுலோதிகம், நீலக்கொடி வேலி, blue flowered leadwort, Cape lead-wort—Plumbago capensis.

அகுவைக் கட்டி, அரையாப்புக்கட்டி, inflammation and swelling of a lymphatic gland properly and generally of the groin and usually following syphilitic and other venereal affections—Venereal bubo.

அகுளி நாதன், நவநாத சித்தர்களி லொருவன், one of the nine original Siddhars.

அகுஞ்தி } வேபமரம், Margosa tree—
அகுஞ்நி } Azadirachta indica.

NOTE.–The correct spelling appears to be அருஞ்தி.

அகுஷ, கருஞ்சேம்பு, a black or blue variety of சேம்பு, a garden plant—Caladium nymphaeifolium.

அகுள், களகம்பளத் தோல், the excrescense of a goat's neck.

அகூட கந்தகம், } பெருங்காயம், asafoetida—
அகூட கந்தம், } Ferula Asafoetida.

அகூபாரம், } கடல் ஆமை, sea-turtle—
அகூபாரன், } Chelonia.

2. கடல், sea; 3. கல் மலை, rock; hill.

அகேசம், மொட்டை, shaven head; 2. வழுக்கை, baldness—Alopecia; 3. மயிரின்மை, மயிர்க்குறைவு, absence or lack of hair—Atrichia.

அகேசன், மயிரில்லாதவன், one who has lost the hair on the scalp—a bald headed man; 2, மொட்டையன், one with clean shaven head.

அகை, கூறுபாடு, division, section.

அகைதல், வருந்தல், suffering; 2. தளிர்த்தல், pushing out new shoots.

அகைத்தல், வருத்துதல், causing to suffer; 2. அறுத்தல், cutting into pieces; 3. ஈன்றல், sending forth a growth as, from the seed of a plant.

அகைமம், புல்லுருவி, a parasitic plant —Loranthus pentandrus; 2. குருவிச்சை, Honey-suckle Mistletoe — Loranthus elasticus; 3. கருந்தாளி, a tree–Diospyros Ebenum alias D. assimilis.

அகை யுருவி, புல்லுருவி, a plant which grows on another plant and feeds upon its juices—Parasite.

அகை யுளாதிகம், கருங்காணம், black horse gram; forest horse gram—Dolichos medicagineus.

அகோடம், பாக்கு மரம், areca-nut tree—Areca catechu; 2. கோணல் அல்லது வளைவில்லாதது, that which is without a bend; 3. கழுகு, an eagle—Falconinae.

அகோரக் காய்ச்சல், கடுமையான காய்ச்சல், a high fever—Hyperpyrexia.

அகோரப் பசி, கொடிய பசி, a voracious hunger; 2. அடங்காப் பசி, a gluttonous appetite—Adephagia.

அகோரப் பல்லதகி, சங்கிலை, the leaf of a plant — Monetia barlerioides, alias Azema tetracantha; 2. பீச்சங்கிலை, smooth Volkameria—Cleodendron inerme.

அகோர மயமாதி, உடம்பின் உஷ்ணத்திற்குக் காரணமான விடம்—ஆக்கினை, the seat of heat in that portion of the body situated in the forebrain—Thermogenic centre (in the Carpus striatum.)

NOTE.—It corresponds to the Medulla oblongata and is one of the six psychic centres in the human body. When the mind reaches this centre, the man is said to attain perfection in all faculties of Astral life.

அகோர வீரம், சுவாதிஷ்டானம், one of the 6 psychic centres of the body that is situated in the genital region.

NOTE.–This corresponds to the Hypogastric centre wherefrom the selfish sentiments are alleged to originate. For further details see under ஆதாரம்.

அகோர வேதனி, மிகவும் கொடிய வலி, excessive pain—Hyperalgia,

அகோர வெரிச்சல், பொறுக்க முடியாத வெரிச்சல், unbearable burning sensation in the body.

அகோ ராத்திரம், பகலிரவு, day and night.

அகோனி, மோதிரக்கள்ளி, a rambling shrub 10–15ft—Hugonia obovata. It is also called creeping falsah. Bruised roots are used in reducing inflammatory tumours and in bites of serpents.

அகோரை, உஷ்ண நாள், a sultry day.

அக்கக் கோழி, அக்கிக்கொடி, twin leaved mountain ebony—Bauhinia diphylla.

அக்க சாலை, பொன், வெள்ளி உலோகங்களைக் கொண்டு வேலைசெய்யுமிடம், an industrial establishment wherein works in gold and silver are carried on; 2. தட்டான் கடை, a gold smith's shop; 3. நாணயச் சாலை, a Mint.

அக்கணம், பொரிகாரம், வெண்காரம், an artificial salt – Sodium biborate—Borax 2. அந்தட்சணம், at the same instant or time.

அக்கணி, தான்றி மரம், a tree, Beleric Myrobalan—Terminalia belerica.

அக்கறுதிரம், கருங்கற்றாழை, a kind of black medicinal aloe, Hepatic aloe—Aloe vera (officinalis).?

அக் கண்டகம், தெரிந்திலை, a medicinal shrub (unidentified.)

அக்கதம், பங்கப்படாதது, that which is not defiled or polluted.

அக்கத யோனி, ஆடவனோடு புணராத பெண், a woman who has had no carnal connection with a man—A virgin.

அக்க தேவி, சோளம் புல், guinea grass—Panicum maximum.

அக்கந்தம், see அக்கரு.

அக்க பாரி, கருஞ் சடைச்சி, a black species of Matted-Hair plant; Common Indian Linden—Grewia tiliaefolia; 2. ஓர் கறுப்பு நீர்ப்பூண்டி, a black variety of an aquatic plant—Cerataphyllum demersum; 3. கருப்பிசின், black bismuth.

அக்கப் பிரம், மாமரம், mango tree—Mangifera indica.

அக்க மணி, உருத்திராட்ச மணி, a bead sacred to Siva; 2. உத்திராட்ச மரம், a tree. olive linden—Elaeocarpus tuberculatus.

அங்குலித் திராணிகம், சன்னி முதலிய நோய்களினால் பீடிக்கப்பட்டுப் பல்கிட்டியிருக்கும் போது நோயாளிகளின் வாயைத் திறக்க முயலுகையில் அவர்கள் பற்களால் விரல் கடி படாமல் இருப்பதற்காக உபயோகிக்கு மோர்சிக்கச் சருவி, a surgical instrument akin to pincers for keeping apart or for holding anything difficult to be held by the hand—Forceps; a surgical instrument for holding the mouth open—Mouth-gag.

அங்குலி பஞ்சகம், ஐந்து விரல், the five fingers.

அங்குலி பிராசனம், விரல்களினால் அள்ளி சாப்பிடல், eating with the fingers.

அங்குலிப் பருவன், விரற்கணு, finger-joint.

அங்குலி முகம், விரல் தனி, tip of the finger.

அங்குலி மோடனம், விரல் தொடித்தல், see அங்குலி சந்தேசம்.

அங்கூடம், கீரி, the mungoose; Indian Ichenumon—Herpestes mungo.

அங்கூட்டு நெய், ஐங்கூட்டெண்ணை, அதாவது, ஆமணக்கு, எள், வேம்பு, புங்கு, புன்னை ஆகிய இந்த ஐந்துவித எண்ணெய்களையுங் கூட்டிக் காய்ச்சிய ஓர் தைலம், a medicated oil prepared from a mixture of the, 5 kinds of oil namely, Castor, Gingellyy Margosa, Poonga (Pongamia) and Pinna. (Calophyllum).

அங்கூரம், தளிர் sprout; 2. புதிதாய் முளைத்த புல், a fresh shoot of grass; 3. எலும்பில் தோன்றிய முள், (in Anatomy) a spinous process in the bone—Spicule.

அங்கை, உள்ளங்கை, palm of the hand.

அங்கையப் பூடு, நிலத்துளசி, a kind of basil—Ocimum prostatum.

அங்கையா னஞ்சம், பொற்றலிகை யாத்தகரை, a plant—title from the colour of flowers, Mary-gold; verbesina—Wedelia calendulacea.

அங்கோடம், see அங்கோலம்.

அங்கோதகம், அழிஞ்சில்—a plant, Alangium hexapetalum.

அங்கோத மூலி, செங்குன்றி, Rosary pea—Abrus precatorious.

அங்கோலக் கன்னி, வாலுளுவை, intellect tree; black-oil tree—Celastrus paniculata.

அங்கோல சாரம், அழிஞ்சிலி னின்று தயாரிக்கும் ஓர் விஷச்சாத்து, a poison prepared from the plant Ankola.

அங்கோலத் தைலம், அழிஞ்சிற் றைலம், oil extracted from the seeds of Alangy and used for magical purposes.

அங்கோல மாசகம், கரும்புரசு, a black variety of Bengal Kino—Butea frondosa (nigra)?

அங்கோலம், அழிஞ்சில் மரம், Alangy; Hill sack tree—Alangium Lamarckii alias A. decapitalum.

NOTE.—A tree whose root, bark, fruits, flowers, leaves etc, are medicinal and are used as antidotes for poison, snake-bites etc. It is also said to be useful for occult purposes owing to its psychic virtues. It will be found grown in rocky places in Malabar, Coromandel and Assam. The juice of the root is used in dropsy.

For furthur details see under அழிஞ்சில். 2. ஓர்வகை மரம், ovate sage-leaved Indian Linden—Grewia excelsa.

அங்கோலவம், see அங்கோலம்.

அங்கோல வைரவன், see அங்கோலம்.

அங்கோலை, அழிஞ்சிற்பட்டை, the bark of Alangium tree.

அசகங்கை, இல்லைப்பால், the milky juice of the tree called tiger's milk spurge—Excoecaria Agallocha.

அசக சாதம், see அசசம்.

அசகணகம், கருக்துவரை, black dholl—Cajanus indicus.

அசகண்டம், வேளை, a small medicinal shrub, five-leaved cleome — Cleome pentaphylla; 2. நரவேளை, vailay plant —Cleome felina alias Gynandropsis pentaphylla.

அசகண்டா, அசகண்டர், அசகண்டி, } see அசகண்டம்.

அசகந்தம், மொச்சி நாற்றம், goat's smell.

அசகந்திகம், எலுமிச்சந்துளசி, lemon basil—Ocimum gratissimum.

அசகம், மலையாடு. mountain sheep; 2. வெள்ளுள்ளி, garlic; 3. அசத்தி, which see; 4. உடம்பு பருத்துத் தடித்து எங்கும் கருணைக்கிழங்கு முளைகளைப்போல் கொப்புளங்களையும், ரணங்களையும், உண்டாக்கும் எட்டுவகை அம்மைகளில் ஒன்று. இதனால் தில், முகம் இவ்விடங்களில் வீக்கங்கண்டு நாவரட்சி, தாகம், பிசுபிசுப்பான நீர்க்கசிவு முதலிய குணங்களுண்டாகும், one of the eight kinds of small-pox in which pustules develop to the size of a yam-root shoots and spread all over the body. It is followed by swelling in joints and the face, parched tongue, thirst, viscous perspiration etc.

5. கண்மணியில் சிகப்பாகச் சதை வளர்ந்து பிதுங்கி, ரணமாகிச் சீழ்வடியும் ஓர் கண்நோய், a disease of the pupil of the eye in which small reddish tumours are found protruding through the transparant cornea and discharging pus.

அசகரம், ஓர்வகை மலைப்பாம்பு; பெரும்பாம்பு, இது, எதிர்ப்பட்ட வெள்ளாடு முதலிய பிராணிகளின் எலும்பை முறித்து விழுங்குமேயல்லது கடித்து மரணமுண்டாக்காது, a kind of mountain snake; huge snake —Boa constrictor. This snake actually swallows up goat and other victims after crushing their bones by surrounding them. The death is caused here not by the effects of any poison; 2. ஓர் பூடு, a kind of plant.

அசக ரோகம், see அசகம்.

அச கர்ணகம், குங்கிலியம், Indian dammer—Shorea robusta.

அசகர்ணம், மருகமரம், goat's ear tree—Terminalia alata alias T. tomentosa.

அசகல்லி, see அசகல்லிகாரோகம்.

அசகல்லிகா ரோசம், (அசம் + கல்லிகா = ஆட்டு + அதர்) ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதர். அதைப்போல் படருவதால் இப்பெயர். வாதத்தினால் உடம்பில் மணிக்கோர்வையைப் போல சீளமாக மிதுமிதுப்புடன் நோயில்லாத கொப்புளங்களையெழுப்பி இரணத்தை யுண்டாக்கு மோர் நோய். இது குழந்தைகளுக்கு முக்கியமாய்க் காணும் நோய், (literally) it means goat's cheek. It is an inflammatory skin disease marked by pimples or eruptions of a deep red colour, arranged in the form of a rosary. These pimples are glossy, knotty and painless and they are of the same colour as the surrounding skin and their origin is usually ascribed to the action of deranged Kapam and Vayu. It is peculiar to infants.

அசகா. இரத்தத்தைக் கொண்டு கருவிழியில் பளபளப்பான ரணக்கொப்புளத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் சிறுசிறு கொப்புளங்களை எழுப்பி அதனால் அக்கண்ணில் அதிக வலியையும் இரத்தம்போல் சிவந்த நீர் ஒழுக்கையும் உண்டாக்கு மோர் கண்நோய், இது ஆட்டின் புழுக்கையைப் போல் கரடான கொப்புளங்களை எழுப்புவதால் இதற்கு 'ஆஜிகரோகம்' என்றும் பெயர், a painful reddish growth resembling the hard excreta of a goat, found shooting forth from beneath the surface of the cornea with small vesicles around it It is attended with excessive pain and reddish slimy secretion—Vesicular keratitis.

அசகாமிகம், கருப்பு மொச்சை, a black variety of leguminous creeper of Dolichos genus —Dolichos senencis.

அச காயம், கொற்ப காயம், simple injury.

அச காரிதம், முயல், a hare.

அச காவம், ஓர் விஷ செந்து, a venomous vermin; 2. அட்டை, தேள், முதலியன, centipedes, scorpion etc.

அசகியா பீடம், சகிக்க முடியாத வலியை யுண்டாக்கல், causing an unbearable pain.

அசகும்பி, ஓர் நீர்ப்பூடு, an aquatic plant—Pistia stratiotes.

அசதி

அசகேந்தா, இருமிசத்தரு, germ-killer, an agent that destroys germs—Germicide.

அசலக, ஓர் அம்மை. இது பருத்தும், தடித்தும் உள்ள அனேக கொப்புளங்களை யெழுப்பி இரணத்தை யுண்டாக்கும். இதனால் கீல்களிலும் முகத்திலும் வீக்கமும், தாகமும், பிசுபிசுப்புள்ள சீழ் முதலியனவும் உண்டாகும் a kind of small pox marked by large and well-defined pustules in the body and swelling on the face and the joints. It is followed by thirst and discharge of sticky pus.

அசக்த, துறந்த, detached from worldly feelings or passions.

அசக்தன், வலியில்லாதவன், a weak or debilitated man.

அசக்தி, துறத்தல், detachment from worldly feelings or passions; 2. வலிமின்மை, weakness or debility.

அச சிரிங்கி, ஓரியமரம், Indian ash tree—Odina wodier; 2. காரிக்காந்தள், goat's horn mangrove—Aegiceras majus; 3. ஆடுதின்னுப்பாலை, worm-killer—Aristolochia bracteata.

அசசீரம், ஆட்டுப்பால், sheep's milk.

அசசுரம், கெருஞ்சில், a thorny shrub—Tribulus terrestris; 2. முருங்கை, drumstick tree—Hyperanthera moringa alias Moringa pterygosperma.

அசடற்று வோடல், குற்றமற நீங்கல், a radical cure, as in diseases.

அசடு, புண்ணின் பொருக்கு, an incrusted substance formed over a sore in healing—Scab; 2. உலோகங்களி லிருந்து உதிரும் பொருக்கு, the scum or extraneous matter in metals thrown off in the process of melting.

அசடுவா, பால், milk.

அசடெழும்பல், சிம்பெழும்பல், the membranous seperation of bone or other tissues from the living structure, as in Dry necrosis etc—Exfoliation.

அசட்டி, அசமதாகம், which see,

அசதி, சோர்வு, drowsiness; 2. பலவீனம், weakness; 3. களைப்பு, weariness; 4. மயக்கம், stupor; 5. அயர்தி, lassitude; 6. வசவி, an immoral woman; 7. உணர்வழிவு, unconciousness.

அசதோ

அசதி சன்னி, வாதபித்த கிலேட்டுமதோஷங்களினால் வாயு பேதப்பட்டுச் சிவந்திலையைத் தாக்குவதனால் பிரமை தட்டி மூர்ச்சை கண்டு, கீழே விழுந்து பிரேதத்தைப்போல் இடக்கச் செய்யுமோர் வகைச் சன்னி நோய், a kind of apoplexy affecting the brain or other vital parts as a result of the changes in the three humors of the system.

It overpowers all the functions of both the mind and the body with the result that the person so affected suddenly collapses and remains as if dead—Asthenic apoplexy.

NOTE.—Death many otherwise be the result if the patient is not promptly attended to.

அசதி நித்திரை, அயர்க்க தூக்கம், deep sleep from exhaustion or fatigue; 2. உணர்வழிக்க தூக்கம், unconscious sleep; sleep due to a sudden privation of sense

அசதி நோய், சரம்பின் அசதியால் ஏற்படும் நோய், a disease from nervous exhaustion—Neurasthenia.

அசதியா யிருத்தல், சோர்வடைந் திருத்தல், a state of complete exhaustion.

அசத்தன், வன்மையற்றவன், a weak or enfeebled person—Weakling.

அசத்தி, பலவீனம், weakness; debility; 2. வலிமின்மை, powerlessness; general loss or absence of strength—Asthenia; 3. பலமற்றபெண், an enfeebled woman.

அசத்து, see அசத்தி.

அசத்துவ, சக்தியற்ற, characterised by asthenia or loss of strength—Asthenic.

அசத்துவம், சக்தியின்மை, deficiency or loss of vital or muscular power—Adynamia.

அசந பன்னி, see அசனபன்னி.

அசநவு, இலையத்தி, a kind of fig-tree?

அசநாமகம், ஓர்வகைத்தாது, a kind of mineral?

அசநீர், ஆட்டு மூத்திரம், goat's urine.

அசநீர் வாயு, ஓர் நோய், a kind of disease?

அசநோற்பவ விக்கல், உணவுக் குற்றங்களினால் வயிற்றில் வாதமேற்பட்டு அதனால் தொண்டைக் கம்மல், அற்பத்தொனி, இணுக்கிருமல், மூதலியவைகளை யுண்டாக்குமோர் விக்கல்,

இது இத்தவகை விக்கல்களில் ஒன்று. இக் கோய் முதியமாய்க் காரமான பதார்த்தங் கள், எளிதில் சீரணிக்காத கடினபண்டங்கள் முதலியவைகளைச் சாப்பிடுவதனு லுண்டா கும், a kind of hiccough due to the neurotic condition of the stomach arising from dietary defects or indigestion. It is marked by sore throat, feeble voice and a slight cough. It is one of the five kinds of hiccough described in the Indian Medical science—Singultus gastricus nervosus.

It is chiefly due to eating hot substances and other articles of food not easily digestible.

அசந்ததி, மக்களில்லாமை, the state or condition of remaining issueless.

அசந்த நித்திரை, see அசதி நித்திரை.

அசந்தாசம், உப்பு, common salt.

அசந்தானம், பின்னே யில்லாமை, see அசந்ததி.

அசந் தீண்டாப் பாலை, ஆடு தின்னுப்பாலை, a plant which even goat will not touch owing to its extreme bitterness--Aristolochia bracteata.

அசபம், அசலை, அசலவு, } அம்சமந்திரம், அதாவது சோகம் என்னும் மந்திரம் 'அவன் தான் நான்' எனப் பொருள்படும்.

யோகிகள் பிரமத்தில் லயப்படுவதற்காக இதை வாயிற் பழக்கத்தினுல் வெகு சுலப மாக உச்சரிப்பார்கள், a particular mantram, Hamsam which is but 'Sohaim' (*He is I*) described in one of the 108 kinds of Upanishads. It is uttered by Yogis without effort during inhalation for identifying him with the Self.

2. குண்டலியில் வசிக்குமோர் சக்தி.

"குண்டலி யதனிற் கூடிய அசபை"
—(விநாயகர் அகவல்)

A cosmic power said to be lying dormant and coiled up in the Kundalini situated in Mooladar (மூலாதாரம்), the base of the spine in the region of the Sacral plexus.

It is described in the Tantric science of the Dravadians. It is roused by Siddhars by special forms of meditation and other practices for purposes of Spiritual awakening and it is by this power, they acquire wonderful psychic powers, spiritual visions and finally the highest spiritual illumination.

அசபைபடி மூலி, ஓர் பூண்டி, a kind of plant ?

அசப்பியன், கணவாய் மீன், cuttle-fish.

அசப்பிரியை, ஆடி பிரியமாகத் தின்னும் இலக் கை, that plant which is dear to a goat—Jujube.

அசமடம், see அசமதாகம்.

அசமதாசம், ஓமத்தைப் போன்ற ஓர் கடைச் சரக்கு. இது தென்னிந்தியாவுக்கே உரித் தானது. இது ஓமத்தைப்போல் அவ்வ ளவு வாசனை யுள்ளதாக வீராது. இது வாயுவைப் போக்கக் கூடியது மன்றி சரு சுருப்பையு முண்டாக்கும், a distinct South Indian species and the seeds are nearly the same as omum (Sison ammi), but with inferior aroma, a carminative and stimulant—Carum roxburghiana alias Pimpinella involucrata.

அசமதாக விதை, ஓமம் போன்ற ஓர் விதை, a seed, nearly the same as omum; Ajmud — Apium graveolans. It is an aromatic and medicinal seed. See அசமதாகம்.

அசமதாக வோமம், see அசமதாக விதை.

அசமநாகி, குரோசாணி ஓமம், Khorasan omum, Henbane—Hyoscyamus niger.

அசமந்தம், அசமந்தியம், } மலைபத்தி, downy climbing cluster fig—Ficus macrocarpa.

அசமநீர், வெள்ளாட்டு மூத்திரம், goat's urine.

அசமந்தம், மந்தகுணம், lethargy; drowsiness; 2. மலைபத்தி, a downy climbing fig-tree—Ficus macrocarpa.

அசமந்திபம், அசமந்தியம், } see அசமந்தம்.

அசமருதம், அசமாருதம், } அத்தி, Fig-tree—Ficus racemosa alias F. glomerata.

அசமுசாரி, மலபந்த மின்மை, அதாவது மலம் தாராளமாய் இறங்கல், a state of the bowels in which the evacuations are free and regular without difficulty. It is opposed to costiveness.

அசமேலிகம், கருப்பு அம்மான் பச்சரிசி, a black species of an annual plant—Euphorbia hypericifolia alias E. Indica

அசமோடிகம், பல பூண்டுகளைக் குறிக்கும் பெயர், a common name for several plants such as, Carroway, Ajwan, Parsley etc.

அசமோதகம், அசமோதம், } ஓமம், Dill seed—Sison Ammi—Carum copticum; 2. அசமதாகம், which see.

அசமோதாசம் கருப்பு அறுகம்புல், a black bent grass—Cynodon dactylon. See இருலிருகு.

அசம், ஆடு, sheep; 2. வெள்ளாடு, goat; 3. வெங்காயம், onion—Allium; 4. மூன்று வருஷத்திய நெல், paddy 3 yrs old; 5. அத்தி, fig tree; 6. சந்தனம், sandal, 7. சந்தனமரம், sandalwood tree—Santalum; 8. ஆன்மா, soul.

அசம்பவம், நேரக்கூடாமை, improbability; 2. சூனியம், non-existence—Nihilism; 3. கலப்பில்லாமை, free from adulteration; state or quality of being pure—Purity; 4 சம்பவிக்காதது, what did not happen.

அசம்போகம், சம்போகத்துக்குத் தகுதியற்றது, unsuited for intercurse; one with whom intercourse is forbidden; 2. போகமின்மை, absence of sexual intercourse or union; 3. அனுபவமின்மை, having no experience.

அசயம், கோரைப்புல், a grass of the Cyperus genus—Cyperus pertenuis; 2. சிவப்புல், a kind of grass sacred to Siva.

அசரக்கம், கசகசா, poppy seed or white poppy—Papaver somniferum.

அசரண யோனி, கலவித் தொழில் மூடிப் பதற்கு முன்னதாகவே பெண்களுக்கு காதநீரை வெளிப்படுத்து மோர்வகை யோனி நோய், a vaginal disease in which larger quantity of ova is secreted before the completion of sexual act.

அசரம், அசைவில்லாதது, inanimate or motionless things.

அசரல், உறங்கல், falling asleep.

அசரணுயிர் காத்தோன், see அரசணுயிர்க் காத்தோன்.

அசராது, கொன்றை, Cassia tree; Indian laburnum—Cassia indica.

அசரீரம், உடம்பின்மை, incorporeality.

அசரு, தலைச்சுண்டு, dandruff; 2. அயர்த்து போதல், getting tired or exhausted; 3. தூங்கல், sleeping; 4. புண்ணின் அசடு, scab.

அசரை, ஆற்றில் மேயும் ஓர் சிறிய மீன், the name of scaleless fishes inhabiting a river and other fresh water places; lamprey—Cobitis thermalis.

அசர், see அசரு.

அசர்தல், களைத்தல், to get fatigued or become exhausted; 2. உறங்கல், see அசரல்,

அசலக் கால், தென்றற் காற்று, South breeze,

அசலம், பூமி, the earth; 2. இரும்பு, iron; 3. மலை, mountain; 4. கல்லத்திணை, millet; 5. கற்பாஷாணம், a kind of arsenic found in some rocks.

அசலப்பணம், சீலாஞ்சனம், antimony.

அசல வற்பத்தி, கற்பரி பாஷாணம், poison found underneath rocks. See also அசலம்.

அசலா மாங்கம், வெட்டிவேர், root of kusa grass — Andrcpogon aromaticus alias A. muricatum.

அசலை, பூமி, the earth; 2. மலை, mountain.

அசலோமன், பூனைபவரை, cowhage—Carpopogon pruriens.

அசலோமி, பொற்றலைக் கையாந்தகரை, a medicinal plant with yellow flower, Mary-gold verbesina — Verbesina calendulacea.

அசல், கொசுகு, mosquito; 2. பூமி, the earth; 3. உயர்ந்த, superior; 4. இயற்கை, natural; 5. மூதற்பிரதி, the original.

அசல் சாதி மூலி, கஞ்சாங்கோரை a kind of wild white basil—Ocimum alba.

அசவல், கொசுகு, mosquito.

அசவாகிகம், கருப்பு கசகசா, black poppy seeds.

அசவை, முள்வேங்கை, spinous kino tree —Bredelia retusa; B. Hamiltoniana; 2. ஓர் மந்திரம், see அசபை; 3. பெரு விரலடி, the root of the thumb.

அசறு, இட்டம், iron crust; 2. சிறுபூச்சி, a small insect; 3. சேறு, mire; 4. தலைச் சுண்டு, dandruff; 5. புண்ணின் அசடு, scab, as in, ஆறின புண்ணிலும் அசறு கிற்

கும், the scab will remain although the wound is healed up; 6. புழு, worm; 7. வண்டு, beetle. See அசரு.

அசறு பிடித்தல், (in botany) செடி அல்லது பழத்தில் பூச்சி பிடித்தல், the sticking of small insects to fruits or herbs; 2. புண்ணின்மேல் பக்கு வண்டாதல், the formation of a scab on a sore while it is healing.

அசறுப் புழு நோய், உடம்பிலுள் நெளுச்சினால் ஏற்பட்ட கோய்கள், diseases arising from the action of microbes in the system.

அசறை, see அசரை.

அசற் சரக்கு, இயற்கை மருந்துச் சரக்கு, natural drug as distinguished from artificial compound; 2. உயர்ந்த சரக்கு, a superior kind of drug unadulterated.

அசனங் கொள்ளல், சோறு சாப்பிடல், to eat boiled rice i. e. to take food.

அசன பர்ணி, ஓர் பூடி, a plant—Marsilea quadrifolia?

அசன பன்னி, சித்தகத்தி, Common sesbane—Sesbania aegyptiaca; 2. சோறு, boiled rice; 3. வெள்ளுள்ளி, white onion — Alluim sepra; 4. வெள்ளைப் பூண்டு, garlic—Alluim sativum; 5. வேம்பை, kino tree—Terminalia tomentosa alias Pterocarpus marsupium.

அசன பாணிகம், கருப்புப் பாவட்டை, black bottle-flower—Webera corymbosa (nigrum).

அசனப் பல், பால் பல், milk-tooth.

அசனப் பிரியம், உணவின் மேல் ஆசை, desire for food.

அசனப் பிரியன், சாப்பாட்டு ராமன், an Epicurian; 2. மிதமிஞ்சிப் புசிப்போன், a glutton.

அசனப் பெருக்கம், உதராக்கினி மிருத்தியால் அதிகமாகப் புசித்தல், to indulge the appetite to excess as a result of great hunger (Hyperoroxia).

அசன மருந்தல், சோறுண்ணல், to take food.

அசன மாற்றல், உணவை மாற்றுதல், to change the food or diet.

அசனம், கொழுப்பு, fat; 2. வேம்பை மரம், East Indian kino—Terminalia tomentosa alias Pterocarpus marsupium; 3. உண்ணல், eating; 4. உணவு, food; 5. சோறு, boiled rice; 6. வெள்ளுள்ளி, garlic; 7. பசி, hunger.

அசனம் பண்ணல், சாப்பிடல், enting, to take food; 2. சோறு சமைத்தல், to cook food, to prepare meals.

அசனம்பண்ணு முதற் சொள்ளல், சாப்பிடுவதற்கு முன் மருந்துண்ணல், to take medicine before meals.

அசனவு, இலையத்தி, a kind of fig-tree—Ficus genus? See அசவு

அசனவேதி, சீரகம், cumin seed—Cuminum cyminum. It is so called from its use in flavouring curry powders; 2. போசன குடாரி, that which is used to increase the tone of the stomach and aid digestion—Stomachic; 3. தூவையல், a strong sauce to get increase of saliva.

அசனமிர்தத் தைலம், வேம்பைப்பட்டை, சித்தில் முதலியவைகளி லிருந்து வடிக்குந் தைலம், a medicated oil prepared using the barks of several plants such as, kino tree, Moon-creeper etc.

அசனமிர்தம், (அசனம் + அமிர்தம்) சோறும், பாலும், a mixture of milk and boiled rice.

அசனி, சாம்பிராணி யிலை, frankincense leaf; 2. வயிரம், diamond; 3. அனிச்சமரம், a kind of sensitive tree, ringworm-root—Rhinacanthus communis.

அசனுகம், கருவழிதல், abortion.

அசனுதம், கருவழிக்கக் கூடிய மருந்து, a medicine that could bring about abertion—Abortive drugs.

அசனே மந்தாரை, கருப்பு மந்தாரை, a black variety of a flowering shrub, மந்தாரை —Bauhinia variegata.

அசனேற்பவ விக்கல், அசனம் + உற்பவம் + விக்கல்) அதாவது உணவுசேற்பிம் விக்கல், hiccough arising from indigestion or from food hastily swallowed.

NOTE.—It also appears as a symptom during the progress of diseases of the liver and neurotic condition of the stomach and it may come on after cholera or during the last stages of other diseases. See also அசோற்பவ விக்கல்.

அசன்றிகா, வேசி, a small medicinal plant—Cleome pentaphylla; 2. நாயுவேசி, a plant—Cleome felina.

அசா, தளர்ச்சி, faintness, as in, அசாஅக்கா னுற்ற வருத்தம், distress from lassitude.

அசாகம், அரசு, peepul tree—Ficus religiosa.

அசா கரம், சரிகாலி, eclipse plant—Eclipta prostrata alias E. alba.

அசாகை, களி, a paste of flour; 2. (அ+சாகை) சாகாமை, the condition or quality of being immortal; 3. இலையில்லாமை, without branches.

அசா சருமம், ஆட்டுத்தோல், sheep's skin.

அசாசி, சருஞ் சீரகம், black cumin seed—Nigella sativa; 2. சிந்தில், moon creeper, bile killer—Tinospora cordifolia.

அசா சீவி ஆட்டுவாணிகர், எலும்பு முறிவு, காயம் இவைகளைக் கட்டல், அட்டை யிடல் முதலியவைகளைச் செய்து மோர்வகை காதி யார், a class of men called *'attuvaniar'* who could attend to dislocated joints and fractured bones in olden days amongst the Tamilians. They also used to apply leeches in the way that we do at present.

அசாடம், தாளிச பத்திரி, a plant—Flacourtia cataphracta.

அசாணி மூலி, வேலிப் பருத்தி, stinking swallow wort—Daemia extensa alias Asclepias Echinata. See also அச்சாணி மூலி.

அசாதம், பிறவாதது, that which is not born; 2. சுத்தமில்லாமை, uncleanliness.

அசாது, கற்புநீங்கிய மனை, an uncharte woman.

அசாத்திய அதிசாரம், பலவித காற்றத்துடன் கழிச்சல் கண்டு சுரமும், மயக்கமு முண்டாகி நினைவு தடுமாறச் செய்யுமோர் நோய். இது மரணத்தை உண்டாக்கும், a severe type of chronic diarrhoea characterised by fever, giddiness, loss of consciouness, fetid fecal discharge, etc. It may generally end in death.—Acute Inflammatory Diarrhoea.

அசாத்திய எலி விஷம், மூர்ச்சை, வீக்கம், வேற்றுருவம், சுரம், இரத்தவாந்தி யாகிய குணங்களை யுண்டாக்கு மோர்வித எலிக் கடி, an incurable rat-bite characterised by faintness, swelling, change of features, fever, vomiting of blood and other symptoms.

அசாத்திய கட்டி, சீழ் கட்டுண்டு சதையாக மாறி ஆறுத கட்டி, a chronic abscess in which the pus is absorbed and converted into a flesh-like mass — Cold abscess. It is of comparatively slow development with little inflammation.

அசாத்திய கண்டமாலை, அழலின் வேரைப் போல் கழுத்தைச் சுற்றிலும் முதலில் கிளைத்து எழுச்புவதும் பிறகு அழுத்தவது மாயுள்ள ஓர் தீராத நோய். இது சுரம், இருமல், வாந்தி, பக்கவலி, உடம்பிளைப்பு, ஆகிய குணங்களைக் காட்டும், a disease showing itself by crops of glandular tumours round the neck, which suppurute and heal up every time at the onset. It is marked by fever, cough, vomiting and pain in the sides, emaciation etc. Later on the lesions heal completely; in some cases they become incurable.

அசாத்திய கபால நோய், தலை மண்டையிற் சரணம் ஓர் தீராத நோய். இதனால் தலை மயிர் புசை புசையாக உதிர்ந்து அந்த இடத்தில் வேதனையை யுண்டாக்கும், a disease of the scalp attended with inflammation of the hair-follicles resulting in loss of hair in the affected area—Alopecia follicularis.

அசாத்திய சருப்பம், பெண்களின் வஸ்தி தானத்தில் சிக்கிக்கொண்டு குழந்தை வெளிப்படாமல் வயிற்றைக்கீறி பெடுக்க நேரிடும் ஓர் கஷ்டமான கருப்பம், pregnancy in which the delivery is obstructed in the natural passages by transverse presentation and the child is removed by operation, as in Contracted pelvis.

NOTE.—This operation is known as Caesarean section, which means the incision of the uterus through the abdominal walls and extraction of the foetus therefrom.

This kind of operation is only resorted to, when the mother's life is in peril and the expulsion of the foetus becomes nearly impossible by the natural passages, owing to the existence of deformity either in the parturient canal or in the forms and structures of the foetus. It is principally undertaken to save both the mother and the child.

அசாத்திய கழலை, உடம்பில் பதிய ஆழ்ந்தும் பக்கங்களிற் தனிர்த்தும் உடம்பு முழுவதும்

பரவி, அடிக்கடி இளைக்கும் தன்மை வாய்ந்து, கடைசியாக ஆயையும் பற்றும் ஓர் வகைத் தீராத கழலை, tumours which tend infiltrate the tissues, and produce secondary growths in the adjacent glands. They are disseminated throughout the body, affect the general health, tend to recur after removal and eventually destroy life—Malignant tumours.

2. இரத்தக்கழலை முதலியன வற்றிலும், இரத்த கரம் போட்டத்தின் தவாரங்களிலும், அல்லது எலும்புப் பொருத்துகளின் பள்ளங்களிலும் உண்டாகும் தீராத கழலைக் கட்டிகள், incurable tumours appearing in the regions of circulation, in the cavity of an artery or in any vulnerable joint of the body, such as those formed in cases of aneurism, hematoma etc—Malignant tumor.

அசாத்திய சழிச்சல், பெருவாரி நோய் உலாவும் காலத்திலும், கோடையிலும், வாந்தி பேதி அல்லது சீத பேதி கண்டு மலத்துடன் இரத்தம் கலந்து வந்தகாலத்தும், கயரோகம் முதலிய கனத்த நோய்களின் ஈருக மாறுப்பேதி கண்டகாலத்தும், கிராணி கண்ட காலத்தும் மரணகாலத்திலும் ஏற்படும் தீராத பேதிகள், any acute dysentery or diarrhoea occurring with serous mucous or bloody stools in any of the following circumstances.—

1. During the time of epidemics or the great heat of summer.
2. At the crisis of any complicated disease.
3. As steady progress to a fatal ending, as in malignant diarrhoea.
4. In chronic cases such as tuberculosis occuring at the time of death —Malignant dysentery.

அசாத்திய காசம், இருமல் உக்கிரமாகவும், மேல்மூச்சு, தாகம், பேதி முதலிய குணங்களுடன் கூடியதும், சில பாலர்களைத் தாக்கிக் கண்டத்திலுள்ள விசத்திக் கோளத்தை வீங்கச்செய்து அதனால் மாரடைப் புண்டாக்கித் திடீரென ஆயையக் கொள்ளை கொள்ளுவதும் ஆகிய தீராத காச நோய்கள், spasmodic asthma marked by severe paroxysms, hard breathing, thirst, purging etc; thymic asthma occurring usually in children or adults characterised by obstruction to respiration due to enlargement of the thymus, with a tendency to end in sudden death. It is therefore considered incurable.

அசாத்திய குட்டம், உடம்பிலுள்ள தசை, நாடி, கரம்பு முதலியவைகளில் பூச்சிகள் ஏற்பட்டு அதனால் உடம்பில் திமிர், வீரணம், சதை யழுகல், விரற்தலைவு முதலிய தன்பங்களை யுண்டாக்கி மற்றும் வேற்றுக் குரல், உருமாற்றம் முதலிய வேறுபாடுகளையு முண்டாக்கும் ஓர்வகை தீராத குட்ட நோய், a chronic form of leprosy arising from a constitutional disorder due to a specific microbe (bacillus leprae) in the skin and nerve. It is marked by anesthesia, deep ulceration, and gangrene. The lesion is also followed by affection of the larynx and change of appearance in the body.

அசாத்திய குணம், நோய்கள் தீராது மரணத்திற் கேதுவாகும் தன்மையைக் குறிக்கும்நிலைமை, a condition in which diseases exhibit symptoms impossible for treatment, but pointing to death.

அசாத்திய குறி, தீர்க்க முடியாத நோய்களின் அடையாளம் அல்லது இலட்சணம், symptom or symptoms which are clear indications that the disease cannot be cured, but will prove fatal ultimately.

அசாத்திய சன்னி, உடம்பினின்று இரத்தம் அல்லது இந்த நீர், மூளை அல்லது முள்ளந்தண்டைத் தாக்குவதாலும், நாடி நரம்புகளின் சோர்வினால் ஏற்படும் செத்தப்பிரமை, சிவ இயக்கம் முதலியவைகளாலும், அதிர்ச்சியாலு முண்டாகும் மூர்ச்சை, புத்திமயக்கம், இரத்தங் கக்கல், பேதி, நாடித் துடிப்பு, மேல் மூச்சு ஆகிய காரணங்களினாலும் ஏற்படும் தீராத சன்னி, apoplexy arising from the following causes is considered incurable and is invariably fatal.

1. apoplexy followed by coma from effusion of blood into the brain or the vertebral column.
2. functional disturbance of the nervous system followed by cerebral excitement, vital depression and prostration.
3. apoplectic shock attended with fatigue, loss of senses, vomiting of blood, purging and quickening of pulse and respiration.

NOTE.—Indian Medical Science makes no distinction of Apoplexy, delirium and shock for the reason that the common term சன்னி is used invariably in all such cases.

அசாத்திய சுரம், சப்த தாதுக்களிற் பிரவேசித்து நெடு நாளாக நீங்காமல் சுங்கிபாத சுரலட்சணத்தை யடைந்த சுரமும், காலை மாலை அதிகரித்தும் அடிக்கும் சுரமும், உடம்பின் பலத்தைக் குறைத்துச் சுறுசுறுப்பையும் கரையச்செய்து கோழையைத்தள்ளும் சுரமும், பித்தப் பையை வீங்கச்செய்யும் சுரமும், ஆகிய தீராத சுரங்கள், fevers of the following type, considered incurable :—

1. chronic or long-continued fever resulting in typhoid.
2. fever occurring both in the morning and in the evening continued for a long period.
3. fever attended with weakness and emaciation and other symptoms of consumption.
4. fever followed by enlargement of the spleen and the stomach.

அசாத்திய கிலேட்டுமம், பித்தம் அல்லது வாதம் கூடியதினால் கெடித்து உபத்திரவத்தைச் செய்யக்கூடிய கிலேட்டிம நோய், a chronic phlegmatic disease due to the physiological activities of the body resulting from the combination of the two humours bile and wind (vatha) in the system. The disease is considered incurable.

அசாத்திய சுவாசம், சுரம் வாந்தி, தாகம், பேதி, விக்கம் இவைகளுடன் காணுவதாகிய காச ரோகம் அல்லது சுவாச ரோகம், chronic asthma and bronchitis attended with fever, vomiting, thirst, purging and swelling. These are considered incurable.

அசாத்திய சோகை, உடம்பு முழுவதும் இரத்தங் குறைந்து பரவிய வீக்கம் நெடு நாளாகியும் வாடாமற் போனகாலத்தும், வயிறு, குதம், அல்குல், ஆண்குறி ஆகிய இவ்விடங்களில் வீக்கங்கண்டு அத்துடன் சுரம், மேல் மூச்சு, பேதி முதலிய துர்க்குணங்கள் கண்டபோழ்தும், எலும்பிற்குள்ளிருக்கும் மச்சதாதுவை நோயானது தாக்கினபொழுதும், இரத்த உற்பத்திக்குக் காரணமான இரத்த தாதுக்கள் ஈன மடைந்தகாலத்தும் ஏற்பட்ட தீராத இரத்தக்கேடு, anemia which is reckoned as incurable and at times proves fatal.

1. in the long-continued swelling of the body which in no way abates or is reduced.
2. when inflammation or swelling of the stomach, arms, or the genitals is accompanied by fever, hard-breathing, purging etc.
3. when the disease is followed by degeneration of the bone-marrow and failure of blood-formation due to the incapacity of blood-making organs.

NOTE.—In Allopathic system, acute anemia and pernicious anemia were until recently considered incurable and fatal.

அசாத்திய சோபை, see அசாத்தியசோகை

அசாத்திய தாகம், நோயினால் பீடிக்கப்பட்டு அறிவழிக்க காலத்திலும், தாக்கு வெளிப்படநின்று விட்டகாலத்திலும், தொண்டைக்குள் தண்ணீர் இறங்காத காலத்திலும், அந்தரதாகத்திலும், மரணப்போழ்திலும் காணும் தீராத தாக விடாய், unquenchable or morbid thirst (Polydypsia) in a patient exhibiting the following symptoms.—

1. loss of senses or consciousness.
2. protrusion of the tongue (Glossocele).
3. incapability to swallow water.

அசாத்திய நரை, உடம்பு முதிர்ச்சியினாலேற்பட்ட நரை, permanent greyness of hair due to old age.

அசாத்திய நாடி, நாடி கடையைத் தன்மாத்திரைக்குக்கொண்டிவர முடியாத காலத்திலும், நாடி கடையின் வேகம் மேன் மேலும் அதிகரித்து மரணத்திற் கேதுவாக்குங் காலத்திலும் ஏற்பட்ட நாடி ஓட்டம், pulse which is incapable of being restored to its normal condition or the abnormal increase in the pulse-rate indicating the approach of death.

அசாத்திய பல் நோய், பல்வேரின் தனியில் ஈரண முண்டானபொழுதும், கீழ் வடிந்து சிலயோடினகாலத்திலும், சொத்தை விழுந்தபொழுதும் உண்டாகும் பல்நோய்கள், severe tooth ache, accompanied by inflammation of the tough fibrous membrane

surrounding the teeth (Dental Periosteum), attended with discharge of pus, due to necrosis of the alveoli, or rotten condition of the gum and caries of the tooth.

அசாத்திய பாண்டு, ஈகைால் சரீரத்து வயிறு வடிர்தாலும் அல்லது வயிறு வீங்கிக் கை கால்களின் வீக்கம் வடிர்தாலும், மர்மஸ்தானம், பிடர்கு, குதம் முதலியவைகள் வீங்கினாலும், சுரம், கழிச்சல் அல்லது மயக்கம் கண்டாலும், உண்டாகும் தீராத பாண்டு ரோகம். An incurable Pandu (Anasarca) attended with.—

1. edematous swelling of the extremities with emaciation of the abdominal region or *vice versa*,
2. swelling of the scrotum, genitals or the part about the anus
3. fever, diarrhoea or sub-comatose state (partial giddiness).

அசாத்திய பித்தம், அளவு கடந்த பித்தம், excessive secretion of bile in the system; 2. கள்ளுண்டவனைப் போல் உணர்ச்சியற்று வாய் வறட்சி தாகம் முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் வகைப் பித்த நோய், a bilious disease followed by insensibility similar to the condition of a drunken person and marked by parched tongue and intense thirst; 3. வாதமும் பிலேட்டுமமும் கூடிய ஓர் பித்த நோய், a chronic biliousness due to the concerted action of the three Dhoshas (humours) in the system.

அசாத்திய பிரமேகக் கட்டி, மார்பு, குதம், தலை, தோள், முதுகு, ஆகிய இவ்விடங்களிலாவது, உடம்பில் வேறு மர்மஸ்தானமூட்டுகளிலாவது எழும்பி, நோயாளியைப் பாய்க்குப் பலியாகக்கிடத்தும் தீராத பிரமேகத்திலுல் எழும்பிய கட்டி, gummatus tumour appearing about the region of the heart, anus, head, shoulder, back or any of the vital joints of the body attended with supervening symptoms producing extreme prostration in a patient.

அசாத்தியப் பிரமேகம், நோய் கொண்ட பெண் குறிப் புணர்வதிலுல் ஏற்பட்ட வெள்ளை நெடி நாளாகக் குணப்படாமல், வாதபித்தப் பிரமேகம், தந்திப் பிரமேகம், மூத்திரக் கிரிச்சனம், கல்லடைப்பு ஆகிய நோய்களாக

மாறிச் சிலசமயத்து அசாத்திய மாகும் பிரமேக நோய்.

அன்றியும் இந்நோய் மூத்திரப் பையில் ருந்து குண்டிக்காய்க்கு மாறினாலும் அல்லது பெண்களுக்குக் கருப்பையை அடைந்தாலும் அதிதீராத நோயாகும், gonorrhoea which is said to be chronic when it is being neglected for a long time without adequate treatment, and when it develops in its last stage into gonorrhoeal rheumatism, gleet, stricture of urinal passage arising from neglected gleet and stone in the bladder.

Moreover in bad cases, the disease may spread from the bladder to the kidneys or in a woman it may reach the womb and its appendages.

அசாத்திய பூதம், பித்த மேலீட்டினுல் சரீரம் புகுந்தாக்கப்பட்டு அதனுல் தனக்குள் ஏதோ ஒன்றைக் காரண மில்லாமலே நினைத்துக் கொண்டோ அல்லது பார்த்துத் திடுக்கிட்டோ, மனோ நிடமும், நினைவு மழிந்து, தெருவைக் கூச்சலிட்டுத் தன் பின் ஓடிவரும் படித் தலையை யிரித்துக்கொண்டும், திருவாணமாகவும் ஓடி அலையும் ஓர் விதத் தீராத பைத்திய நோய். இதைச் சாதாரணமாகப் பிசாசு பிடித்த தெனச் சொல்வதுண்டு, a form of chronic dementia with a wide range of mental disorders brought about by the functional disturbance of the brain due to derangement of bile in the system. It is characterised by loss or serious impairment of intellect, will and memory and by the action performed independantly of the will in response to some impulse or external stimulus in which the affected individual suddenly runs and wanders about naked with hair dishavelled so as to excite the curiosity of youngsters who run after such a person It is incurable, and as such, it is attributed to devilry.

அசாத்திய பீலிகம், வாதபீலிகம் ஆகாவது மண்ணீரலுக்கு வாதத்தினு லேற்படும் சரம் புவலி, a radiating neuralgic pain resulting from the morbid condition of the spleen—Splenalgia; 2. வீங்கிப் பருத்துக் காணும் மண்ணீரல் நெடி நாளாகியும் வித்தைக்கு வசப்படாமல் அதனுல் அதிசார பேதி கண்டு உடம்பை இளைக்கச் செய்து மரணத்தை யுண்டாக்கும் ஓர் தீராத நோய்,

a chronic form of the enlargement of spleen marked by anaemia and emaciation due to its being long unattended to. At the, last stage, diarrhoea or dysentery becomes permanent and the person sinks.

NOTE.—Up to a certain point this state may terminate in recovery, but a stage of splenic blood-deterioration is at length reached, when medicines are useless.

அசாத்திய மசூரிகை, அம்மை நோயில் கொப்புளங்கள் ஒன்றே டொன்று கலந்து கொண்டு விரணமாஞலும், கொப்புளங்கள் சுண்டு உடனே மறைந்தாலும், அல்லது கொப்புளங்களில் இரத்தம் போய்க் கலந்து கருகி முகத்தில் குழி விழுந்தாலும், அசாத்திய மெனக் கொள்ளப்படும் நோய், a severe form of variola or small-pox in which.—

1. the pustules become more or less confluent—Confluent variola.

2. the contents of the pustules become absorbed — Variola Siliquosa,

3. or in which the hemorrhage occurs into the pustules — Malignant variola.

It is held to be incurable as death nearly always occur.

NOTE.—1. The probability of death in such cases varies greatly with the severity of the cases and the character of the eruption.

2. When the attack is complicated with other diseases such as, fever, bronchitis, pneumonia etc. the chances of recovery are greatly reduced.

அசாத்திய மூட கர்ப்பம், பலவீனம், ஆயாசம், முதலிய காரணங்களினுல் அபான வாயுவானது கர்ப்பத்தை நிலே தடுமாறச் செய்து, யோனி, வயிறு இவைகளில் சூலையை யுண்டாக்கிக் கற்பிணிக்குக் கழுத்து நிற்காமலும் கைகால்கள் செல்லிட்டும், அறிவழிந்தும் போகச் செய்வதுடன், பிண்டத்தையும் கர்ப்பிணியையும் இறக்கச் செய்யும் கருப்பம், a condition of pregnancy brought about by the child in the uterus taking an unnatural course or position due to pressure through weakness, languor etc. It is marked by sharp pain in the genital and the abdomen, chillness of the extremeties, loss of senses, and lack of firmness in the neck. It finally ends in the death of both the mother and the child. See also அசாத்திய கருப்பம்.

அசாத்திய மூலம், திரிதோஷங்களினுல் குதத்தின் அடி வாயத்தில் முளை ஏற்பட்டுப் பெருத்து ஆழ்ந்த வேருள்ளதான புற மூலமும், ஆசன வாயிலில் வெடிப்பும் விரண முங்கண்டி ஆண் பிள்ளைகளுக்குக் முத்திரப் பையிலும் பெண் பிள்ளைகளுக்குக் கருப்பப் பையிலும் அழற்சியை யுண்டாக்கி, அத்துடன் குளிர்சுரம், சுரம்புச் சோர்வு, சோகை முதலிய குணங்களையும் காட்டிம் உள் மூலமும், மூலக் கிரகணியை யுண்டாக்கும் மூல மூளையுமாகிய நோய்கள்.

இவைகளை எளிதில் குணப்படுத்த முடியாத காரணத்தினுல் சத்திரச் சிகிச்சையாலொழிய வேறு வகையில் பூரணமாக சௌக்கியப் படுத்த முடியாதெனக் கொள்ளப்படும். அன்றியும், மூல நோயால் வருந்துபவர்களுக்குக் கை, கால், நாபி, ஆசனம் விதை, முகம் ஆகிய விடங்களில் வீக்கம், ஏற்படுமாகில், மரணத்தை யுண்டுபண்ணுமே ஒழிய வேறு வழி கிடையாது எனவும் கருதப்படும்.

Incurable Piles or Haemorrhoids of the following types.

1. external piles, deep-seated and enlarged, arising on the external sphincter ani as a result of the derangement of the three humours in the system.

2. internal piles associated with fissure and ulcer of the anus causing reflex irritability of the bladder in men and the womb in women and various other diseases such as, ague, nervousness, anaemia etc.

3. piles both internal and external giving rise to dysenteric symptoms.

They are held to be incurable unless surgical operation is promptly resorted to, in order to effect a permanent and complete cure.

Morover piles accompanied by swelling in any of the parts of the body such as, the limbs, the navel region, anus, scrotum and face, invariably result in death.

அசாத்திய மேகம், எளிதில் சிகிச்சைக்கு வசப்படாத மேகநோய்கள்—நிரிச்சுரம், அசுமரி

அசாத்

(கீரடைப்பு, கல்லடைப்பு), கிரிதிவு, மச்சை அழற்சி இரத்தம் அல்லது வசா மேகங்கள்.

உடம் பெரிச்சல், உணவில் வெறுப்பு, சுரம், தேகி முதலிய குணங்களும், தப்பமான இடங்களில் கட்டிகளும் ஏற்பிக் மேக நோய்கள் இவைகள் அசாத்திய மெனக் கூறப்படும், incurable urinary diseases such as—

1. stricture, retention of urine, stone in the bladder or the kidneys, diabetes (meletus), diabetes (affecting the marrow,) diabetes insipidus, Hematuria and Chyluria.

2. diabetes marked by burning sensation in the body, unquenchable thirst, loss of appetite, fever, diarrhoea etc. as well as diabetes followed by carbuncle.

அசாத்தியம், 1. முடியாமை, impossibility ; 2. குணமாகாமை. that state or condition in which no cure or remedy from medical skill is possible ; 3. இயலாமை, impracticability.

அசாத்திய ரோகம், சூதமுனிநாடி 30-ன் வாக்கியப்படி அடியிற்கண்ட தீராத நோய்கள்—

1. "ஊனென்ற உடம்புதனில் தீரா ரோகம்
உரைக்கிறேன் இன்னதென்று முக்தி முக்தி
முக்கியதோர் பாதமுடன் புறங்கால் வீசம்
முகத்திலே லீக்கமது கன்றதோலும்
பிக்கியதோர் கழிச்சலுடன் இருணியாகும்
பேசரிய தீராத சத்தியமாகும்
சிக்கியதோர் வாந்தியுடன் விக்கல் சன்டால்
தீராத தீராத தின்னமாகும்
அக்கியதோர் கூய மிருமல் சலக்கிருணி
ஆலுயுர் தீராத அசாத்தியத்தானே.

2. "அசாத்தியத்தான் சொல்லுகிறேன் ராசாங்கத்தில்
அறிந்திடவே மின்னமொரு அடவாய்க்கேளு
அசாத்தியத்தான் நீர்க்கோர்வை சதியே குன்மம்
ஆனதொரு வலி குன்மம் யோனிப்புத்து
அசாத்தியத்தான் குறை நோவு நாக்கில் புத்து
அண்டத்தில் பவுத்திரமும் தொண்டைத்தூறும்
அசாத்தியத்தான் முயல்கிறுக்கு உள்வீச்சோடு
ஆலுயுர் தீராத அறிந்துகொள்ளே.

3. தானென்ற சலக்கழிச்சல் மதமதப்பு
தலைதனிலே அதிர்த்தெழுந்த பினைவதாலும்
காலென்ற ருத்திரவலி கடியுங் கண்டமாலே
கன்னத்திற் புத்துடனே குமரன்டன்
தேனென்ற மகாவாதம் சன்னிவாதம்
சேத்துமசயம் உளமார்ந்த சமார்ந்தை கவிசை
ஊனென்ற உயிரழிக்கு மளவும் போகா
உன்னபடி சொன்னேம் யாம் உறுதிப்பாரே.

ஆயுள்வேதப்படிக் சாதாரணமாய் வாதம் அபஸ்மாரம், இரத்தவாந்தி, சுயம், குன்மம், மேகம் ஆகிய விவ்வாறும் அசாத்திய நோய் களெனக் கருதப்படும்.

அசாத்

Incurable diseases, such as those mentioned in the stanzas quoted from Soodamuni Nadi (thirty)—

1. Any disease accompanied by, swelling in the genital, instep or back of the hand, diarrhoea, dysentery, vomiting attended with hiccough etc., consumption, asthma and diabetes.

2. Dropsy, dyspepsia attended with colic, chancre, leprosy, cancer of the tongue, fistula of the scrotum, fungoidal growth in the throat, epilepsy and deliriam,

3. Urinary disorders, anesthesia, cancer of the brain or the head, heart disease, goitre, cancer of the cheek, paralysis, cerebral and apoplectic rheumatism, phlegmatic asthma, diseases of the internal organs, and ascites.

According to Ayurveda, generally the six diseases viz. rheumatism, epilepsy, vomiting of blood, consumption, dyspepsia and diabetes are considered incurable.

அசாத்திய வதிசாரம், ஆசனவாய் புண் பட்டாலும், அங்கக் திறக்காலும், வயிறுப்பிளுலும், சில்லிட்டாலும் அல்லது வேறு எவ்விதமான தற்குறிகளைக் காட்டினாலும் அது தீராது என்று கருதப்படு மோர்வகை அசீரணக் கழிச்சல், incurable diarrhoea accompanied by ulceration of the anus, gaping of the anus, distended abdomen and chillness of the extremities.

அசாத்திய வாத ரோகம், அதிக நடுக்கல், வீக்கம், தாங்கமுடியாத வலி, உடம்பு முழுவதும் திமிர், ஆகிய குணங்களுடன் உடம்பு மெலிவு, வாட்டம் முதலிய குறிகளையுங் காட்டு மோர் வாத நோய். இதை மருந்தினால் எளிதில் நீக்க முடியாது, a form of chronic rheumatism attended with a characteristic tremor of the muscles, swelling, unbearable pain, numbness, and progressive muscular atrophy. It cannot be easily cured by medicine.

அசாத்திய வாந்தி, இருமல், இரைப்பு, திரிதோஷம், முதலிய குணங்களோடு, மலமாக்கவும், இரத்தம் அல்லது சீழாகவும், மலமூத்திரங்கள் காற்றத்துடனும், உண்டாகும் தீராத வாந்தி, incurable vomiting attended with cough, hard breathing, deranged condition of the three humours in the system etc. and marked by the presence

of fecal matter, blood or fetid stomach contents.

அசாத்திய விஷக்கடி, பைத்திய சுன்னிக்குக் காரணமான வெறிநாய் கடி, மற்றும் உடலில் இரத்தத்தை முறித்து விஷத்தன்மையை யுண்டாக்கும் புலி, கரடி, சிங்கம் முதலிய தஷ்டப் பிராணிகளாலும் விஷப் பாம்புகளி னலும் ஏற்பட்ட கடிகள்.

இவை தீராதவைகளென்றும், சில வேளை களில் மரணத்தை உண்டாக்கக் கூடியவை களென்றும், கருதப்படு கின்றன.

இது குணப்படும் இது குணப்படாதென் பதைக் கடியினால் உடம்பினுள் சேறிய விஷத்தின் அளவைக் கருதியும், கடியுண்டவர்க ளின் உடம்பின் பாகத்தை நன்கு கவனித்துப் பரீக்ஷைசெய்து பார்த்தும் சொல்ல வேண்டி யிருக்கிறது.

சுன்மம், மேகம் முதலிய நோய்களினால் பீடிக்கப் பட்டவர்களுக்கும், குழந்தைகள், கிழவர், பலவீனர், மெலிந்தோர், கற்பிணிகள் முதலானவர்களுக்கும், விஷக்கடி அதிகப் படுமே ஒழிய அதைத் தீர்க்க முடியாது,

Incurable bites of the following animals—

1. the bite of a rabid dog developing symptoms of hydrophobia,
2. the bites of tiger, bear, lion etc resulting in blood-poisoning.
3. the bite of venomous snakes such as cobra etc.

The possibility of a cure can be determined only after considering the amount of venom injected into the body by the bite as well as the nature and the part of the body bitten.

Persons suffering from dyspepsia, gonorrhoea or other urinary disorders, children, old, debilitated and emaciated persons, and pregnant women, cannot be cured as the poison becomes doubly strong and operative in their cases.

அசாத்திய விஷக்குறி, உடம்பில் எவ்விதத்திலா வாவது உட்கொண்ட விஷம், மணி மந்திர ஔஷதங்களால் தீராது மரணத்திற் கேது வாக்கும் குறிகள் அவையாவன :—சுகம், உதடு, உடம்பு முதலியவை கருத்தல், முகம் வேறு படல், நாடி மெலிவு, மூர்ச்சை, தொடிய வயிற்றுவலி, கைகால் சில்லிடல், மேல்மூச்சு, விக்கல், தொண்டை யடைப்பு,

படுக்கையாய் கிடத்தல், தலை தொங்கல், வீங்கி கண்ணிப்போன கடிவாயில், மூக்குச் சில்லிடல், தசை தள்ளல் முதலியன.

Fatal symptoms of poisons exhibited in the system of a patient at the time when no antidotes administered, no magnetic passes made, and no other means of cure employed are effective—The following are amongst those symptoms—

1. blue skin (Cyanosis), nails and lips, pinched features, imperceptible pulse, unconsciousness, intense abdominal pain, cold extremities, difficult respiration, hiccough, constriction of the neck, general collapse, relaxation of the muscles of the neck etc.
2. swelling and lividness of the part affected.
3. coldness of the nose and frothy mouth etc.

அசாத்திய விரதிரதிக் கட்டி, வயிற்றின் உட் புறத்தில் கட்டி புண்டாகி உடைத்து மிக்க வேதனையை புண்டாக்கி, வாயால் சீழ், இரத் தம் முதலியவைகளே விழச் செய்யும் ஓர் விதக் கட்டி, an incurable abscess developed inside the abdomen the contents of which (pus and blood) find their way out through the mouth; 2. தன விதிரதிக் கட்டி, incurable abscess of the woman's breast—Mammary abscess.

அசாத்திய விரணம், தீராத இரண நோய்கள் அவையாவன :—

1. சீழ் கொண்டு ஓரங்களிற் சதை பருத்த புண்.
2. பசுவின் கொம்பைப் போலெழும்பிக் கெட்ட இரத்தமும் சீழும் கசிந்து கொண் டிருக்கும் சிலந்தி.
3. நடுவிற் குழி விழுந்து அல்லது ஓரத் தில் வெடித்துப் புண்ணுரும் சிலந்தி.
4. நரம்பு, நார்த்தசைகளுடைய புண்.
5. திரிதோஷ சம்பந்தத்தால் உறைந்த இரத்தம், நிணம், கொழுப்பு, மூளைப்பசை முதலியவை கசியும் இரணம்.
6. நோயால் மெலிந்து இளைத்தவனின் வயிற்றில் தங்கிய மல மூத்திராதிகள் கசி யும் இரணம்.

7. தலை அல்லது தோண்டைச் சிலந்தி.

8. உடம்பிற் சேகரை தங்கியுள்ள பாகங்களிற் காணும் மிரை நோய்கள்.

Incurable ulcers such as—

1. An ulcer cropping up like a fleshy tumour with its edges raised like those of the genital of a mare and characterised by a copious secretion of pus etc.

2. a condylomatous ulcer which is soft and raised like the horn of a cow and the one which is elevated at its base secreting an exudution of vitiated blood or thin slimy discharge.

3. an ulcer with an embossed or heaved up centre and dipped or fissured at its extremity.

4. an ulcer covered with shreds of ligaments.

5. an ulcer due to the deranged condition of any of the fundamental humours, and secreting coagulated blood, fat, marrow and brain-matter.

6. an ulcer in a weak or emaciated person. located within the cavity of the abdomen and secreting a mixture of urine, pus, blood, fecal matters etc.

7. an ulcer in the head or throat traversed by a net of capillaries.

8. an ulcer in any of the vital parts of the body.

அசாத்திய வீக்கம், தாகம், மெலிவு, சுரம், வாந்தி, விக்கல், அதிசாரம், ஆகியவை சகோடி கூடி விஷ சம்பந்தமாக ஏற்பட்ட வடியாதவீக்கம். இது மரணத்தைபு முண்டு பண்ணும், irreducible swelling arising from the effects of poison and poisonous bites and characterised by the following symptoms—dyspnoea, thirst, weakness, fever, vomiting, hiccough, dysentery etc.,

It is extremely hard to cure and may even soon prove fatal.

அசாத்மிய போசனம், தேசம், காலம், வாதாதி பிரகிருதி, அப்பியாசம் முதலியவைகளுக்கு ஒற்றுமை யில்லாத வுணவு, food unsuitable to one's constitution when considered with other circumstances, such as place, climate, natural temperament, habit, idiosyncrasy etc.

அசாத்மியம், வழக்க மில்லாததை ஏற்படுத்திக் கொள்ளுதலும் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத தன்மை, unsuitability to the constitution brought about by acquired habit : disagreement to one's constitution due to adopting a thing contrary to one's habit.

அசாந்திரி, பூமி சருக்கரைக் கிழங்கு, a pot. herb—Convolvulus argentens.

அசா பாலகன், ஆட்டுவாணிகன், see அசாகி.

அசாரதை, சாரமின்மை, that which is sapless.

அசாரம், ஆமணக்குச் செடி, castor oil plant —Ricinus communis; 2. வாழை, plantain tree—Musa paradisiaca ; 3. சாரமற்றது, that which is deprived of sap or juice ; 4. சாரமின்மை அதாவது ருசியின்மை, that which is tasteless, insipidity.

அசாவாணம, களர்ச்சி யின்மை, vigour as opposed to faintness.

அசா விடல்
அசா விடுதல் } இளைப்பாறுதல், to take rest.

அசாறான், ஓர் பூனை மருந்து, இது மூத்திரக் கிரிச்சனம், கல்லைடைப்பு உதிரச் சிக்கல், வாதம், பாண்டு, காமாலை, நீரடைப்பு, சுரம் பிரிவு, சேல் வாதம், வீக்கம் முதலிய நோய்களுக் குதவும். இதைப் புகையிடத் தேள் ஓடிப்போம், a well known drug in Unani medicine. It is prescribed in cases of stricture of urinary passages, stone in the bladder, scanty discharge (as in menstruation), rheumatism, dropsy, jaundice etc., A fumigation of this drug drives away scorpion.

அசிகம், கீழுதடுக்கும் மோவாய் கட்டைக்கும் இடையே யுள்ள பாகம், that part of the face between the underlip and the chin.

அசிகை, பட்டுப்பருத்தி, silk cotton—Bombox malabaricum.

அசிசெறுகாத் தப்பு, கறியுப்பு, black salt.

அசித கருணி, கருப்பு வழுதலை, black brinjal plant—Solanum melongenum.

அசிதத் துரும், மலைப்பச்சை, Mysore gamboge; painter's gamboge—Xanthochymus pictorius.

அகித மய்ப்பு, பூமிர், an efflorescent salt obtained from the soil of fuller's earth.

அகிதம், கருமை, blackness, 2. விஷப்பிராணி, a poisonous animal; 3. கருநாகம்பு, a black snake; 4. நீலிப்பூடி, indigo plant —Indigofera tinctoria.

அகித வெலி, விஷத்தன்மையுள்ள ஓர்வகைக் கருப்பு எலி. இதன் உதடு கறுத்திருப்பதினாலிப்பெயர். இதன் கடி வாந்தி, வலிப்பு, மார்புவலி, முதலிய குணங்களை யுண்டாக்கும், a kind of black poisonous rat. It is so called from the colour of its lips and its bite is marked by vomiting, convulsion, cardiac disturbances etc.

அகி தாசுமம், இந்திர நீலமணி, a precious stone of the corundum class and of various shades of blue sapphire.

அகி தாம்புருகம், நீலோற்பலம், blue water-lily—Nymphaea stellata.

அகிதேசுமம், புட்பராகம், a white precious stone—Lapis lazuli,

அகிதேலு, ஓர் பூடி, a plant?

அகிதை, அவுரி, indigo plant—Indigofera tinctoria.

அகிதோகதம், கற்பலா, which see.

அகிதோற்பலம், நீலத்தாமரை, blue lotus—Monochoria vaginalis; 2. நீலமணி, sapphire, see அகிதாசுமம்; 3. நீலோற்பலம், blue water-lily—Nymphae stellata.

அகித்தி, முழுதும் அடையாத சித்தி, (*in philosophy*) incompleteness in the eight forms of supernatural attainments; 2. முழுதும் நிறைவேற்றுமை, imperfect accomplishment; 3. அத்தாட்சியற்றது, (*in logic*) want of proof.

அகித்து, சடப்பொருள், matter

அகிந பத்திரி
அகிந பத்திரிகை
அகிந பத்திரை } வௌவால், bat.

அகிநம், மான்தோல், the skin of a deer.

அகிப காந்தம், see கருவீழி.

அகி பத்திரகம், அகி பத்திரம், } கரும்பு, sugar cane—Saccharum officinarum.

அகி பத்திரி, கரும்பு, see அகிபத்திரம்; 2. கத்தியைப்போன்ற இலைகள், sword shaped leaves.

அகிமோசம், ஓர் காற்றப் பூடி, a stinking plant, —Fetid mimosa.

அகிர நானம், கண்டஸ்நானம், அதாவது கழுத்து வரையில் குளித்தல், a bath up to the neck without immersing or wetting the head.

அகிர பத்திரகம், கஸ்தூரி வெண்டை, musk mallow plant—Abelmoschus esculentes.

அகிர பித்தம், see இரத்த பித்தம்.

அகிர மாத்திரிகம், அன்ன ரசம், chyle.

அகிரம், வெட்டிவேர், a fragrant root; khus khus root—Andropogon muricatus; 2. காற்று, wind; 3. உடல், body; 4. தவளை, frog; 5. வெள்ளை, whiteness; 6. தலைமயிர், hair of the head.

அகிரவணம், செவிடு, deafness; 2. காதின்மை, state or condition of being deprived of ear; 3. காது கேளாமை, thickness of hearing.

அகிரன், சூரியன், the sun; 2. நெருப்பு, fire.

அகிராற்சகம், வெண் துளசி, white basil;

அகிருத்தர ரோகம், பெரும்பாடு. இது அசீரணம், கருப்ப பாதம், அதிகப் புணர்ச்சி, அதிக நடை, அதிகத் தூக்கம், உடல் மெலிவு, அதி பாரம் எடுத்தல், பகல் நித்திரை முதலிய காரணங்களை முன்னிட்டு யோனி வழியாய் அடிக்கடி அல்லது நீடித்த இரத்தப் பெருக்கை யுண்டாக்கும் வியாதி, a disease in women, resulting in an immoderate flow of blood through the vagina, sometimes too frequent or too long continued, arising from various causes such as, indigestion, abortion, abnormal indulgence in sexual intercourse, excessive walking or sleeping, weakness, carrying of heavy loads, day sleep etc.—Menorrhagia. See அகிர்க்கர நோய்.

அகிரு பாதம், கண்ணீர்ப் பெருக்கு, habitual or persistent overflow of tears due to oversecretion or impeded outflow through the normal channel of excretion—Epiphora. c. f. Lachrymation; 2. இரத்தப் பெருக்கு, the flow of blood from wounded or ruptured vessels—Hemorrhage.

அகிர்க்க சிராவம், இரத்தம் வாங்கல், bleeding, letting blood.

அசிர்க்க தாம், ஆதகப் பெருக்கு, excessive menstruation—Menorrhagia.

அசிர்க்க பாதம், இரத்த வீழ்ச்சி, the flow of blood; 2. இரத்தத் தளி, a drop of blood; 3. இரத்த வொழுக்கு, oozing of blood from a wound.

அசிர்க்க பானம், இரத்தங் குடித்தல், drinking of blood.

அசிர்க்கர நோய், இரத்த சம்பந்தமான நோய், any disease arising from altered condition of blood in the system; 2. இரத்தப் பெருக்கையுண்டாக்கும் பெரும்பாடு, மூக்கு ரத்தம், இரத்தங்கக்கல் முதலிய நோய்கள், diseases resulting in hemorrage such as, Menorrhagia, Epistaxis, Hemoptysis etc.

அதிசார சிலேட்டுமம், செரியாமையினுல் பேதி, வயிற்றிரைச்சல், விலாக்குத்து, நெஞ்சுமாயி, காவறட்சி, உடம்பெரிச்சல், இருமல், தாகம், முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் நோய், a form of diarrhoea from indigestion due to the phlegmatic condition of the system. It is marked by rumbling noise in the bowels, darting pain in the sides and in the intercostal region, chest pain, parched tongue, burning sensation of the body, cough, thirst etc; 2. அசீரணத்தினுல் குழந்தைகளுக்குப் பேதியும் அதில் சீதமும் ஏற்பட்டு, அத்துடன் சுரமும் காயுமோர் கபநோய், diarrhoea from indigestion in children due to phlegmatic causes. It is followed by fever and watery stools containing thin, white mucous—Watery or Serous diarrhoea.

அதிசார சுர சமரகி, அதிவிடயம், Indian Atees—Aconitum heterophyllum. It is so called from its power in bringing down fever (in diarrhoea) to a normal condition. See அதிசாரக்கினி.

அதிசார சுரம், see அதிசாரக் காய்ச்சல்.

அதிசாரஞ் சுருக்கி, இலவம் பிசின், the gum of the silk-cotton tree; 2. அதிசார பேதியை நிறுத்தும் மருந்து, any drug capable of arresting diarrhoea.

அதி சாரணம், மாவிலங்கு, lingam tree, holy garlic poar—Capparis trifoliata alias Crataeva religiosa.

அதிசார தோஷம், விஷப் பூச்சியினும் அல்லது அசுத்தபண்டம், பாஷாணம் அல்லது விஷத்தன்மை வாய்ந்த பேதிமருந்து முதலியவைகளை உட்கொள்ளுவதினுலும், கோயை உண்டாக்கும் உடம்பின் நிலைமை. இதில் வயிறுபொருமி, வியர்த்து, வாய்பிதற்றி, உடம்பு நடுக்கங் கண்டு, இரத்தம் விழும், a morbific diathesis followed by diarrhoea due to bacterial action or the irritation of the intestines due to improper food, chemic poisons, dratic purgatives containing narcotic poison etc. It is marked by a rumbling noise of the bowels, perspiration incoherent speech, tremor, blood in stools etc.—Inflammatory or Irritative diarrhoea.

அதிசாரத் திரவியம், அதிசாரத்திற்காகக் கொடுக்கும் சரக்குகளின் தொகுப்பு, a group of elementary drugs prescribed for arresting or regulating diarrhoea — Astringents.

அதிசார நாசனி, அதிசாரத்தைப் போக்கு மோர் வகைச் சரக்கு, drug capable of curing diarrhoea; 2. வறட்சண்டி, a plant—Mimosa tripeutra; 3. வெட்பூலா, white honey plant—Flueggia; 4. நின்பூ an unidentified drug?

அதிசார பந்தனி, அதிசாரத்தைக் கட்டி மோர் சரக்கு, any drug arresting diarrhoea; 2. மருவகம், a plant known as Maid's love—Artemesia abrotanum.

அதிசார பந்து, சற்சடசிங்கி, see அதிசாரங் கட்டி.

அதிசார பித்தம், வயிற்றி லிரைச்சலுடன் ஏற்படும் பேதி, வயிற்றுப் பிசம், விலாவலி, ஈரலெரிச்சல், மயக்க முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் நோய், a form of diarrhoea arising from the deranged condition of bile in the system. It is marked by rumbling noise in the stomach, accompanied by purging, distension of the abdomen, pain in the sides, burning sensation, giddiness and other abdominal disorders—Gastrogenic diarrhoea.

அதிசார பேதி, செரியாமையினு லேற்படும் பேதி, diarrhoea due to indigestion—Dyspeptic diarrhoea; 2. அதிசாரக் கழிச்சல், acute diarrhoea; 3. நீரபேதி, a fluid

discharge in which the stools consist chiefly of blood and mucous—Dysentery.

அதிசார மூரி, ஊணங்கொடி, a winding plant—Convolvulus racimosus.

அதிசாரம், பெருங்குடலினுட் புறத்திலிருக்கும் இலேட்டும சவ்வுக்குத் தாபிதமும், இரணமும் கண்டு அதனால் மலத்தில் நீரமும், இரத்தமும் கலந்து விழுவதுடன் வயிற்று வலியும் காணும் நோய்—நீதபேதி, an acute specific disease due to the inflammation of the large intestine. It is marked by frequent stools containing blood and mucous and attended with griping pain in the bowels—Dysentery;

2. மலமானது வாயுவினால் கரைத்து தண்ணீராகி வயிற்றில் இரைச்சலையும் பேதியையு முண்டாக்கு மோர் நோய். இது அநேகமாய் உணவின் குற்றங்களினால் ஏழை சனங்களைத் தாக்கும். சவலைக் குழந்தைகளுக்கும், தாய்ப் பாலில்லாமல் செயற்கை உணவினலாதரிக்கப்படும் குழந்தைகளுக்கும், பல்முளைக்கும் குழந்தைகளுக்கும் இது சாதாரணமாக வண்டாகும், diarrhoea arising from the deranged condition of Vayu. It is characterised by watery stools, and rumbling noise in the stomach.

Poorer classes are chiefly attacked by this disease, the use of incompatible articles of food being the main cause. Children weaned and those brought up by artificial food as well as those without mother's milk and children during their teething period are liable to this disease—Diarrhoea.

3. கிரகணி அதாவது சாதம் செரியாமல் அக்கினிமீறி, வாயு அதிகரித்து, மூலத்தில் தங்கி, எக்நேரமும் பேதியை யுண்டாக்கு மோர் நோய். இது உணவின் குற்றம், அகாலபோசனம், அசுத்த நீரருந்தல், அதிகமாகப் போதை செய்தல், மலசல ஜினம் முதலியவைகளினால் ஏற்படும். வேகத்தையடக்கல், குடலிற் பூச்சிகளுண்டாகுதல் முதலிய காரணங்களினாலு முண்டாகும். சதா மலவாயிலிருந்து மலம் ஒழுகுவதால் இதற் கிப்பெயர், a chronic dysentery arising from indigestion due to the excessive heat in the iliac region especially colon. It is chiefly due to extraneous causes such as, incompatible articles of food, untimely meals, use of poisonous substances, drinking impure water, excessive use of liquor, voluntary repression of any natural urgings of the body and germination of parasites in the intestines—Bacillary dysentery. The disease is so named from the constant oozing out of liquid fecal matter from the anus.

NOTE.—Chronic dysentery may continue for many months or even years before recovery takes place and any deviation from a prescribed monotonous diet is certain to bring on a renewed attack.

4. ஆங்கிலேய நூற்படி, அடிக்கடி நீராக மலங்கழியுமோர் வகைக் கழிச்சல் எனப் பொருள்படும்.

இது சாதாரணமாய்ப் பெருங்குடலின் உட்புறத்திலிருக்கும் சவ்வுக்குத் தாபிதமும், இரணமுங்கண்டு அதனால் மலம் நீராகவும் அத்துடன் சீதம், இரத்தம், ஊன், நிணநீர், பித்தநீர், முதலானவைகள் கலந்தும் சமயத்திற் கேற்றவாறு உடம்பை யடித்தோ அல்லது வெளிக் காரணங்களினாலோ, குழந்தைகளுக்கோ, சிறுவர்கள், அல்லது பெரியவர்களுக்கோ காணும் கழிச்சல் என்று சொல்லப்படும். அந்நூற்படி இது பல வகைத் தாயினும், அதிற் கூறியுள்ள எல்லா வகை நோய்களையும் நமது நாட்டிற் காணலாம்.

முதலாவது— குழந்தைகளைத் தாக்கும் நோய் வரலாறு.—

1. வேனிற் காலத்திலாவது, உஷ்ண தேசத்திலாவது தாக்குமாதலால் இதற்கு உஷ்ணக் கழிச்சலென்று பெயர்.

2. மாந்தத்தினால் நீராகவும், அடிக்கடி மிருதியாகவும் பேதியாதலால் மாந்தக் கழிச்சலெனப்படும்.

3. சாதாரணமாய் உணவின் குற்றம், சீதளம், செரியாமை, மலபந்தம் முதலியவைகள் சம்பந்தப்பட்டால் அது குழந்தைக் கழிச்சலென்று சொல்லப்படும்.

4. வெண்மையாகச் சீதங்கலந்து பேதியாகில் வெள்ளுடைக் கழிச்சலென்பர்.

5. ஊன் கலந்து தண்ணீராய்ப் பேதியாதலால் ஊன் கழிச்சலெனப்படும்.

6. நெஞ்சிற்கபம், வயிற்றிரைச்சல் இவைகள் காணில் சங்கரக் கழிச்சலென்று சொல்லப் படுவதுண்டு,

அதிசா

இரண்டாவது — சிறுவர்கள் அல்லது பெரியோர்களைத் தாக்கும் நோய் வரலாறு:—

(a) சௌரியாமையினாலும், பித்த நீர்க் கோளாறினாலும் உண்டாகுங் கழிச்சலுக்கு அசீரணக் கழிச்சலென்று பெயர்.

(b) வெயிற் காலத்திலும், ஆனி, ஆடி மாதங்களிலும், உட்டிணப் பிரதேசங்களில் சீதபேதிக்கு முன்னதாகவும் காணுங் கழிச்சலுக்குச் சீதக் கழிச்சலென்று பெயர்.

(c) அசுத்தமான வுணவு, உணவின் வகைக் குற்றம், விஷம், ஆகிய இவைகளினாலேற்படும் பேதிக்கு வயிற்றுக் கடுப்பு என்று பெயர்.

(d) வாந்தி பேதிக்கு முன்னதாக வுண்டாகும் கழிச்சல், வாந்தி பேதிக் கழிச்சலெனப்படும். இதில் ஊன் வெளிப்பட்டு, வாந்தி கண்டு, ஓய்ச்சல் காணும்.

(e) உடம்பை யடித்த கழிச்சலாலல் திரிதோஷக் கழிச்சலென்று சொல்வதுண்டு.

(f) சௌரியாமையினாலுண்டாலல் அது சௌரியாக் கழிச்சல்.

(g) கணச் சூட்டினால் உடம்பு மெலிந்து காணும் கழிச்சல் தான் கணக் கழிச்சல்.

(h) ஏழை சனங்களுக்குத் தொத்து வியாதியைப் போல் பிடித்துச் சுகாதார முறையை அனுசரிக்காது சுற்றுத்தினாலும் பெருவாரியாகக் காணுங் கழிச்சல் பெருவாரிக் கழிச்சலென்று சொல்லப்படும்.

According to *Allopathic science*, it is an abnormal frequency and liquidity of fecal discharge.

It is generally a term given to a number of disorders due to the inflammation and sometimes ulcers of the intestines, especially in the colon. It is attended with frequent stools containing mucous, blood, serum, chyle or gastric fluids. It may be either constitutional or due to external causes, such as, imprudence in diet, atmospheric changes, chillness etc. So it originates from numerous causes, and every kind of it is met with in our country.

அதிசா

Firstly in children,—

1. if it attacks them in the Summer season or in hot countries, it is termed *Summer diarrhoea or Diarrhoea alba.*
2. if it is attended with watery fecal discharge ordinarily due to indigestion it is known as *Simple diarrhoea.*
3. if it arises from errors in diet, chillness, indigestion, constipation etc, it is called *infantile diarrhoea.*
4. if it is one in which the stools contain thin white mucous, it is named *white diarrhoea.*
5. if the fecal discharge is softened by copious serous fluid, it is known as *Serous or watery diarrhoea.*

Secondly in youngsters and adults—

(a) if it arises from indigestion or gastric disorders, it is called *gastrogenic diarrhoea.*

(b) if the attack is during the heat of Summer or in hot countries during June and July premonitory to dysentery it is known, as *dysenteric diarrhoea.*

(c) if it is one from irritation of the intestines due to improper food, errors in diet and poisons etc., it is termed *Irritative diarrhoea.*

(d) if it is of a serous form premonitary to cholera, accompanied by vomitting and collapse it is called *Choleraic diarrhoea*

(e) if it is due to some constitutional disease, it is named *'Cachetic diarrhoea.*

(f) if it is of a form attended with fluid stools containing undigested food it is known as *Lienteric diarrhoea.*

(g) if it is of a variety peculiar to tuberculosis marked by emaciation, it is called *Tuberculous diarrhoea*

(h) if it is of a kind attacking many a poorer classes, in a particular area not observing the sanitary principles and then converting

into an epidemic form, it is called *Epidemic dysentery.*

அதிசாரம், சதசிசாரம். இது வெடியுப்பு சுவாக்காரம், சோற்றுப்பு, பூனீறு முதலிய வைகளைச் சொண்டி செய்யும் ஓர்வகை உப்பு, a kind of salt prepared from a mixture of nitre, sal-ammoniac, common salt and Pooneer (fuller's earth); 2. அதிமதுரம், sweet liquorice root—Abrus precatorius, 3. கல்லுப்பு, sea-salt; 4. சவ்வீரம், corrosive sublimate — Hydrargyri perchloridum; 5. அதிக சத்து, essence or extract; 6. மிக்க இனிப்பு, excessive sweetness.

அதிசாரம் போக்கி, ஓமிய மரம், Indian ash tree—Odina wodier. It is so called from its virtue of curing diarrhoea.

அதிசார ரோகம், அசீரணபேதி அல்லது சீத பேதி, diarrhoea or dysentery.
See அதிசாரம்.

அதிசார வுபரசம், சருப்பத்தி லுண்டாகும் ஓர் வகை நீர், a fluid of the uterus; 2. பனிக் குடத்து நீர், a liquid that forms in the amniotic sac in which the foetus lies —Liquor amni.

அதி சிகுவை, அடி நாக்கின்கீழ் மீக்கத்தை உண்டாக்கிப் பினிநீர்ப்பை அல்லது சிறு முளைகள்போற் கொப்புளங்களை எழுப்பிப் புசிக்க முடியாது வலியை யுண்டாக்கு மோர் நோய், a disease of the under surface of the tongue accompanied by a cyst or swelling and pustules all over the parts and thereby causing inability to take food.

அதி சிவம், நாக்கு அல்லது உண்ணாக்கி லுண்டாகு மோர்மித வீக்கம், a peculiar swelling of the tongue or (uvula).

அதிசிலிகம், see அதி சிவம்.

அதி சீதம், மிகக் குளிர்ச்சி, extreme chillness.

அதி சுடுகை யன்னம், சுடுசாதம், hot rice.

அதிசுட்சம், சமாக்கினியின் குறைவால் நாளுக்கு நாள் உடம்பு மெலிந்து, கழுத்து, வயிறு தொடை முதலிய உறுப்புகள் உலர்ந்து சும்பித் தேவாங்கைப்போல் இளைத்த உருவத்தை அடையச் செய்யு மோர் நோய், a progressive wasting disease arising from moderate appetite due to digestive disorders. It is marked by loss of fat, blood and muscles in the thighs, neck, abdomen etc. and a general emaciation owing to want of nutrition—Idiopathic muscular atrophy.

அதிசுரம், சொடிய சுரம், high fever—Hyperpyrexia,

அதி சுவாசம், மேல்மூச்சு, hard breath; 2. அளவு கடந்து மிடி மூச்சு, breathing in excess of the needs of the system—Luxus breathing.

NOTE.—Accelerated respiration is that which exceeds 25 respirations per minute.

அதி சுழுத்தி, மயக்கத்தோடு கூடிய தூக்கம், (*In pathology*), a sleep accompanied by giddiness or suspension of sensibility—Coma; 2. மூன்று மவத்தைகளாகிய உயிர் நிலை உபாதி. (In *Vedanta philosophy*) a state in which the soul rapt in visions seems to have passed out of the body. This engrossment of the faculties is generally experienced only in the Yoga practice.

3. சப்தாவஸ்தைகளி லொன்று, அதாவது தற்கால நிலைமையைக் கருதிய பின்னிட்டு நடக்கப்போகுங் காரியங்களை யறிதல்—எதிர்கால வுணர்ச்சி, (*In Agama Philosophy*) an intellectual faculty of knowing the future events from the present condition or circumstances.

4. பரவசம் அதாவது கடவு ளிடத்தி லுள்ள பக்தி அல்லது அன்பின் மேலீட்டி னால் தன்வச மற்றிருத்தல், (*In religious philosophy*) suspension of the functions of the senses in the contemplation of the Supreme—a state of rapture and delight of an outburst of feeling—Ecstasy.

5. மனமானது மேம்பட்ட விஷயங்களில் ஈடுபடுவதால் தன்னுடம்பையும் தன்னைச் சுற்றிலுமுள்ளவைகளையும் மறந்து நிற்கும், நரம்பைப்பற்றிய வோர்நிலைமை,(*in Psychology*), a nervous condition in which the mind is absorbed in a dominant idea and the person concerned becomes insensible to his body and to the surrounding objects—Trance.

6. குறி சொல்லும் பொழுதும் ஆவேசமடையும் பொழுதும் மூர்ச்சை யடையு மோர் நிலைமை, (*In historical use*) a state of paroxysm supposed to accompany prophetic inspiration, frenzy etc—Poetic frenzy or rapture.

NOTE.—'Susupti' as it is termed in other languages is the consciousness of blissful ignorance or positive consciousness. It is a state of calmness of existence in which

there will be absence or negation of pleasure or pain.

A searching analysis of the psychological experience will only lead to the conclusion that it is a sort of deep sleep in which the mind is carried every day to Brahmam and the subject becomes identified or one with the truth.

For further details see under சுழுத்தி.

அதி தல சிலேட்டுமம், ஓர்வகைச் சிலேட்டும நோய், a kind of phlegmatic disease ?

அதிதனு, பொன், gold.

அதி தாகம், மிக்க விடாய், intense thirst—Anadypsia.

அதி தாபக வாதம், (அதி = மிகுதி + தாபகம் = எரிக்கச் செய்தல்) உடம்பைத் தகிக்கச் செய்து மோர் வாதநோய். இது உணவின் குற்றத்தினும் பிறத்து சர்வாங்கத்தையும் அனுசரித்து பேதி, வாந்தி, ஆயாசம், வயிற்றுப்பிசம் முதலிய பலவித வேறுநோய்களையுண்டு பண்ணி, மறத்தல், சுழலல், உதரல், முதலிய குணங்களைக் காட்டி, தகிக்கச் செய்யும். மூன்று நாள்வரை அசாத்தியம் பிறகு சாத்தியமாகும், a kind of nervous prostration arising from errors in diet and extending all over the body.

It is attended with purging, vomiting, distension of the abdomen etc and also accompanied by numbness, giddiness, tremor and other distressing symptoms. The seriousness will continue for three days after which the patient may show progress—Gastric neurasthenia.

அதி தாரம், இலந்தை, Indian plum—Ziziphus jujuba.

அதிதி பூசிதம், சக்தி சாரணை, a plant; spreading hogweed—Boerhaavia procumbens alias B. diffusa.

அதி திப்பம், பசி யின்மை, loss of appetite—Anorexia.

அதி தீபம், பேரரத்தை, greater galangal—Alpinia galanga (major).

அதி தீபனம், மிகுந்த பசி, voracious hunger—Bulimia 2. பொறுக்க முடியாப் பசி, an unbearable or abnormal increase in the sensation of hunger—Hyperorexia.

அதி துமம்ற் பீனசம், கபால வறட்சியினும், நாசித் தண்டாகிய எலும்பில் அடிபடுவதனும் வாயு மிகுத்து, நாசி, கண், வாய், செவி, ஆகிய இடங்களை அடைப்பதனும், என்னேரமும் தும்மலை யுண்டாக்கு மோர் வகைப் பீனசம். இதற்கு வட மொழியில் புரி சட்சல பீனசம் என்று பெயர், a kind of nasal catarrh marked by constant sneezing. It is due to the dryness of the scalp, traumatic causes and obstruction in nasal passages and other openings due to the deranged condition of Vayu—Acute Catarrhal Rhinitis.

அதி தூற்பலம், மிக்க பலவீனம், excessive weakness—Hyperasthenia.

அதி தூக்கம், மிகுந்த தூக்கம், excessive drowsiness—Hypersomnia; 2. ஆழ்ந்த நித்திரை deep sleep; 3. மெய்மறந்த தூக்கம், unconscious sleep.

அதி தூலம், மிக்கப் பரிந்த வுடம்பு, excessive development of the muscular tissues—Hypermyotrophy; 2. மிக்கச் சொழுத்த வுடம்பு, excessive accumulation of fat in the system—Obesity.

அதி தூல ரோகம், ஆண் பிள்ளைகளுக்குப் பூதம் போல் உடம்பைப் பருக்கச் செய்து மோர் நோய், (*in male*) an abnormal overgrowth of the body—Gigantism. It is said to be the result of a disease of the pituitary body.

2. பெண்களுக்குச் சூதக வாயு, செல் காச்சு முதலிய காரணங்களினால் உடம்பு பருத்துக் காணுவது மல்லாமல் மார்பு, தொடை வயிறு பிட்டம் முதலியன அளவு கடந்து பெருத்தும் அதனால் ஆயாசம், இரைப்பு, மேல் மூச்சு முதலிய குணங்களையும் காட்டு மோர் நோய், (*in female*) excessive or monstrous size and stature as a result of irregular menstruation, and good circumstances in life without exercise etc. It is marked by an abnormal growth in certain organs or parts of the body such as, the chest, abdomen, thighs, buttocks, etc.

NOTE.—A hereditary tendency to get fat is also an unavoidable cause. Next comes laziness and over indulgence in food, especially when combined with a sleepy disposition.

அதி தோவயம், சர்வத் திராவகம், a fluid that dissolves any substance or in which any solution is effected—Universal solvent.

அதி நடுக்கம், மிகுந்த பயம், excessive tremor or fear—Hypertromos.

அதி நரம், சீமை அதிமதுரம், sweet root—Glycirrhiza glabra.

அதி நாரம், இலந்தை, Indian plum—Zizi-phus jujuba see அதிதாரம்.

அதிநிதி, நவச்சாரம், hydrochlorate of ammonia—Sal ammoniac.

அதி நீர், மிக்கநீர், excess of water, as in cold ; 2. அதி மூத்திரம், excessive urine, as in diabetes.

அதி நீர்த் தாகம், மிக்க விடாய், excessive thirst.

அதி நீலம், இலுப்பை, honey tree—Bassia longifolia alias B. latifolia.

அதிபசமி, கொன்றை, Indian laburnam—Cassia fistula.

அதி பசி, அகாதபசி, abnormal increase in the sensation of hunger—Hyperorexia.

அதிப தாதி, செம்பசளை, a red species of Indian spinach—Spinacha oleracea.

அதி பதி, சண்பகம், Indian Magnolia—Michelia champaca.

அதி பதிங்கி, கொடி வேலி, a plant, Lead-wort—Plumbago Zeylanica,

அதிபதிச் சங்கம், வாலுளுவை, climbing staff-plant—Celastrus paniculata alias Vernonia anthelmintica.

அதி பதிச்சம், see அதிபதிச் சங்கம்.

அதி பதிஞ்சி, see அதிபதிங்கி.

அதி பதுங்கி, see அதிபதிங்கி.

அதி பத்திரம், தேக்கு மரம், teak tree—Tee-tona grandis ; 2. மயிர் மாணிக்கம், morn-ing mallow—Sida acuta.

அதிபம், வேம்பு, margosa tree—Azardir-achta indica alias Melia Azadirachta ; 2. மூளையின் முக்கிய பாகம், the superior portion of the brain—Cerebrum.

அதி பலம், மிகுந்த பலம், abnormal strength ; 2. கேர்வாளம், croton-oil plant—Croton tigilium ; 3. மயிர் மாணிக்கம், morning mallow—Sida acuta.

அதி பலா, சிறுதுத்தி, evening mallow — Abutilon crispum.

அதி பலை, பேரா முட்டி, fragrant sticky mallow — Pavonia odorata ; 2. தாகத்தைத் தீர்த்து அதிக பலத்தைத் தரும் ஓர் மந்திரம், a powerful mantram, or incanta-tion for removing thirst and bestowing strength and vigour to the body.

அதி பல் கூச்சம், see அதிபற் கூச்சம்.

அதி பறிச்சம், வாலுளுவை, intellect tree—Celastrus paniculata. See அதிபதிச்சங்கம்.

அதிபற் கூச்சம், பற்கள் அதிகமாகக் கூசுதல், great sensitiveness of the teeth—Odon-themodia.

அதி பாதிதம், முற்றுமொடிந்தது, that which is completely broken ; 2. முழுவதும் முறிந்த எலும்பு, (*in medicine*) the com-plete fracture of a bone.

அதிபாரகம், கோவேறு கழுதை. இது கழுதைக் கும் குதிரைக்கும் பிறந்தது, mule which is an offspring of an ass and a mare or a horse and a she-ass.

அதி பாற் சொறிவு, மிகுதியான பால் சுரப்பு, excessive secretion of milk—Hyperlac-tation ; 2. முலைப்பால் மிகுதியாகச் சுரந்து ஒழுகுதல், an excessive secretion and flow of milk in a nursing woman—Galactorrhea.

அதிபானம், மதுபானம், toddy, liquor ; 2. அதிகமாகக் குடித்தல், drinking liquor to excess—Guzzle.

அதிபித்தம், பித்தாதிக்கம், excessive secre-tion of bile—Hypercholia. See also அகாத பித்தம்.

அதிபூதம், மாயாமலம், the spiritual substra-tum of the material or gross objects ; 2. மாயாசக்தி the all-penetrating influ-ence of the Supreme Spirit. 3. பிரகிருதி மாயை அதாவது பிரபஞ்சத்திற்குக் காரண மான மாயை, material Maya (illusion) from which this material world is crea-ted. See அசுத்த மாயை.

அதி பேதி, குய்ய பேதி, over-purgation i. e., excessive purging or the result of too free use of cathartic medicines—Hyper-catharsis ; 2. அதிசார பேதி, which see ; 3. அதிகமாகப் பேதித்தல், (*in alchemy*) subjecting to decomposition or test-ing several times.

அதி போகம், மிகுந்த பெண்போகம், excess of or over indulgence in, sexual enjoy-ment ; 2. அதிகமான இன்பம், excessive pleasure.

அதிபோக சக்தி, நெடுநேரம் சம்போகம் செய் தற்குரிய ஆண்மை, virile power for sustaining sexual enjoyment for a longer duration ; 2. அதிகமாகப் புணர்ச்சி செய்தற்குரிய வலிவு, power in man for excess of sexual intercourse.

அதிபோசம், ஊட்டத்தினாலும், அதிகமாக உபயோகிப்பதனாலும் அல்லது வேறுவித காரணத்தினாலும், அங்கம் மிகுதியாக வளருதல், excessive growth of an organ by over-nourishment, over-use or any other cause—Hypertrophy.

அதி போசனம், அளவுகடந்து புசித்தல், excess in the amount of food taken; —Hyperalimentation.

அதி போசன ரோகம், மிகுந்த ஊட்டம் அல்லது சாப்பாட்டினால் ஏற்படும் நோய், disease due to excess in eating or excessive nourishment.

அதிமதக் குரு, நீரிழிவு ரோகத்தில் சர்க்கரையினால் ஏற்படும் குருக்கள், small papules occurring in diabetes due to irritation of the skin—Symptomatic prurigo.

அதிமதக் குருதி, அதிகமாகத் தித்திப்புச் சேர்ந்த இரத்தம், excess of sugar in the blood —Hyperglycemia.

அதி மதரப் பாணி, see அதிமதுரப் பால்.

அதி மதரப் பால், அதிமதுரச் செடியின், வேரினின்று வடிக்கும் பால். இது ஓர் கடைச் சரக்கு, இதை வாயிலடக்கிக் கொள்ள காவதட்டி, வாய்ப் புண், வேக்காளம், முதலியவை நீங்கும், a dry extract prepared from the decoction of the roots of honey creeper by evaporation—Liquorice.

It is a bazaar drug found often useful in cases of thirst or parched tongue, stomatitis or ulcers of the mouth, inflammation of the mouth etc. It gives to pharmacopoea *glicirrhizae radix* (officinal.)

அதி மதுரம், மிக்கத் தித்திப்பு, (lit) excessive sweetness; 2. சீமை அதி மதுரம், honey-creeper—Glycirrhiza triphylla; 3. காட்டு அதிமதுரம் அல்லது குன்றிவேர், Indian liquorice root—Abrus precatorious.

NOTE.—This is usually sold in bazaars as a substitute for the genuine drug if it is not available.

அதிமதுரம், ஓர் கடைச் சரக்கு, இது வொரு கொடியின் வேர், சாதாரணமாக வங்காள தேசம், பாரசீகம், பஸ்ஸாரா, முதலியவிடங்களிலிருந்து இறக்கு மதியாகிறது. இதற்குச் சீமை அதிமதுரமென்று பெயர். இது பெருவிரற் கனத்தில், பார்வைக்குச் சிகப்பு அல்லது சாம்பல் நிறமாயும் ஒடித்தால் மஞ்சள் நிறமாயும் இனிப்பாயு மிருக்கும். இது தான் பெரும்பாலும் எல்லாக் கடைகளிலும் விற்கப் பட்டு வருகின்றது.

நாட்டு அதிமதுர மென்னு மோர் வகையுமுண்டு. அதுதான் குன்றி மணிவேர், கடைகளி லிதை மேற் சொன்ன வேருக்குப் பதிலாகக் கொடுப்பார்கள். இது சிறியதாகவும் விரற் பருமனுள்ள தாகவும் ஒடித்தால் வெண்மையாகவும் சிறிது இனிப்பாகவும், வழ வழப்புள்ளதாகவு மிருக்கும்.

மூதற் சொன்ன வேரைக் கஷாய மிட்டு இருமல், க்ஷயம், பெரும்பாடு, வெள்ளை முதலிய நோய்களுக்குக் கொடுக்கப்படும். அது மலத்தை இளக்கும்.

இதன் தூள் பீனசத்திற்கும், சில்லி மூக்கிலிருந்து வருமிரத்தத்தை நிறுத்தவும், கசியமாகக் கொள்ளப்படும்.

இதைக் கரிய போளம், நிலா விரை, நிலவேம்பு, முதலிய கசப்புச் சரக்குகளோடு இனிப்பைத் தருவதற்காகச் சேர்ப்பதுண்டு. இதைக் கஷாய மிட்டுப் பனங் கற்கண்டோடு சேர்த்துக் கொடுக்க நீர்ச் சுருக்கு குணமாகும்.

A sweet root of liquorice plant or Honey creeper — Glycirrhiza glabra, alias G. triphylla.

It is the root of a creeper and is imported from Bengal, Persia, Bussorah and other places. It is called 'Foreign sweet-root.'

It is very long, about the size of a thumb, flexible, fibrous, of a brown or grey colour but yellow inside and sweet in taste. It is this kind that is mostly met with in bazaars.

Another variety called Indian or Country liquorice root, which is nothing but the root of *Abrus precatorious*. It is not only used as a substitute for the root above mentioned (*G. glabra*), but is also sold indiscriminately under the same name.

It is much smaller and seldom grows to the size of a thumb. It is brown externally and white internally and is not distinctly sweet. It is mucilaginous.

It has a high repute in infusion for cough, consumption, gonorrhoea, menorrhagia etc, and is considered a mild laxa-

tive. The powder of the root is used as snuff in catarrhal affections of the nose and to arrest bleeding, as in epistaxis.

It has the power of covering the flavour of nauseous medicines like Black myrrh, Indian senna, Chiretta etc. A decoction of the root mixed with palmyra sugar-candy cures painful urination.

NOTE.—The root is demulcent, cooling and useful in inflammatory affections such as, hoarseness, sore throat etc. It is much used in pharmaceutical preparations as an adjunct using clarified butter and for covering the flavour of decoctions, oils, and ghritas or similar nauseous preparations

அதி மந்தம், கண்ணே வேருடன் பிடுங்குவது போல் மிக்க வலியையும், அத்துடன் ஒற்றைத் தலைவலியையு முண்டாக்கு மோர் விதக் கண்ணேய், a disease invariably attended with an excruciating pain in the eye with a feeling as if it is being rooted out. The pain extends upward to one side of the head.

அதி மந்தாரம், கண்களில் வலியை யுண்டாக்கிக் கடித்து நீர் வடிதலுடன் பார்வையில் சூத்த லுண்டாக்கிப் பார்வையை நாளுக்கு நாள் இருண்டு வரும்படிச் செய்யுமோர் கண்ணேய். இதற்கு மருந்திட அதிகமாகுமே யன்றிக் குணப்படாது, a chronic disease of the eye marked by inflammation and darting pain of the cornea, watery discharge from the eyes, and gradual hazy appearance. It is incurable and if treated likely to grow worse—Interstitial keratitis.

அதி மந்திதம், கண்ணேயால் துன்புருதல், suffering from eye-disease (ophthalmia).

அதி மயிர் வளர்த்தி, தலேமயிர் அதிகமாக வளருதல், excessive growth of hair on the scalp; 2. உடம்பில் அதிகமாக மயிர் முளேத்தல், excessive growth of hair all over body—Hypertrichiasis universalis.

அதி மலம், மாவிலிங்கம், sacred lingam tree—Crataeva religiosa; 2. அதிக மலந் தள்ளல், excessive discharge of fecal matter.

அதி மாங்கிசம், பொதுவாக அர்த்தங் கொள்ளில், மிக்கச் சதைவளர்த்தி எனலாம். இது உடம்பில் பல உறுப்புகளிற் ஏற்படலாம், Literally it means the excessive growth of flesh in any organ or part of the body.—Hypertrophy see அதிக மாமிசம்; 2. கண்ணிற் சதை வளர்ந்து துன்புறுத்து மோர் நோய்; a disease of the conjunctiva characterised by the thickening of the membrane—Pterygium.

அதி மாத்திரை, அளவிற்கு மேல், above measure; in excess of prescribed limit; excessive; (*in medicine*) overdose.

அதிமாமிசகம், ஈறு சுறக்கு அதனுல் ஏற்படும் பல்வலி, painful sensation in the gum of the teeth due to its abnormal growth; 2. உண்ணுக்கு வளர்ந்து அதனு லுண்டாகு மழற்சி, inflammation due to the elongation of the uvula—Uvulitis.

அதிமாமிசக் கழலை, சதை வளர்த்தி மிகுதி யாகவுள்ள கழலேக்கட்டி, a tumour blended with sarcoma—Hemangio-sarcoma.

அதிமாமிச சருமன், வெள் விழிமேல் சதை வளர்த்து உலர்ந்த இரத்த வுண்டையைப் போல் கறுத்தும், பருத்து மிருக்கு மோர் கண்ணேய், a soft, thick, extended overgrowth of flesh resembling a dried clot of blood in colour, on the white of the eye.

அதி மாமிச பாகம், உடம்பி னுறுப்புகளில் ஏதாவதொரு பாகத்தில் உண்டாகும் சதைப் பெருக்கு அல்லது சதை வளர்த்தி, morbid enlargement or overgrowth of any part of an organ—Hypertrophy,

See also அதி மாமிசம்.

அதி மாமிசம், (அதி + மாமிசம்) = அதிகமான சதை வளர்த்தி, excessive growth of flesh; 2. உடம்பின் உருப்புக்களில் சதை பருத்தற் காணல், the morbid enlargement or over-growth of an organ in the body—Hypertrophy; 3. ஏதாவதோர் உறுப்பில் அல்லது உடம்பின் ஓர் பாகத்தில் புதிதாக வுண்டாகும் கழலே முதலிய சதை வளர்த்தி, any new or abnormal formation of flesh in any organ or part of the body, like a, tumour, false membrane etc—Neoplasm; 4 உடம்பின் சூட்டினுல் கண்சிவந்து சதை வளர்ந்து உறுத்து மோர் கண்ணேய், an inflammation of the eyes, especially of the conjunctiva, characterised by an abnormal growth and painful irritation—Conjunctivitis;

5. பாலை பச்சை நிறமாகி நாளுக்கு நாள் கண் புகைச்சல் அதிகமாகிச் சதை வளர்ந்து

பார்வையை மிழந்து, எரிச்சல், நீர் வடிதல், கமிர்ந்து நேரே பார்க்க அலகினுல் குத்தினைப் போல் வலியை யுண்டாக்கு மோர் கண் நோய், an inflammation of the cornea marked by greenish growth over the pupil of the eye, progressive hazy appearance resulting in the loss of sight, watery discharge from the eyes, and darting pain in the uvea (dark portion) with the inability to look erect and straight—Green cataract.

6. புரைக் கழலை, சதைப் பற்றுள்ள கழலை, a fleshy growth or tumour generally of a malignant character—Sarcoma. See அதி மாங்கிஷம்; 7. ஒரு கழலைக்குள் வளரும் மற்றொரு கழலை, a proliferous cyst situated within a cyst—Serocystic sarcoma.

அதி மாமிச ரோகம், உடம்பின் வெளி அல்லது உள் ளுறுப்புக்களிலும், எலும்பு, நரை, தோல், முதலிய பாகங்களிலும், சதை வளர்வதா லேற்படும் நோய், any disease due to hypertrophy or overgrowth of the flesh in any organ or part thereof, either internal or external or on the surfaces of the bones, flesh, skin etc, 2. பற்களின் வேர்ச் சந்துகளில் ஆணியை யொத்த கட்டிகளை எழுப்பித் தாடையிலும், காதுகளிலும் வலியையும், ரத்தத்தை முண்டாக்கு மோர் வகைப் பல் நோய், a disease of the teeth in which alveolar spaces are filled with sarcoma-cells It is attended with fever, pain in the cheeks and the ears—Alveolar sarcoma. See சுக்ர மூல ரோகம்.

அதி மாமிசா சுரும ரோகம், கண்ணின் வெள் விழியில் அதிகமாய்ச் சதை வளர்ந்து காணப்படு மோர் நோய், a fleshy growth in the white of the eye; 2. பிறவியில் ஏற்படும் கண்ணின் சதை மடிப்பு, an anomaly of the eye in which a patch of the thickened conjunctiva extends over a part of the cornea—Epitarsus or Congenital pterygium.

அதி மிதம், ஈரமில்லாதது, that which is deprived of moisture.

அதி மிருத்தியாதி மாத்திரை, கோரோசனை மாத்திரை, a pill prepared from bezoar mixed with other ingredients. It is generally prescribed by Veidyans for children.

அதி முத்தகம், அனிச்சை, ring-worm root—Rhinacanthus communis; 2. மஞ்சள் மந்தாரை, mountain ebony—Bauhinia tomentosa.

அதி முத்தம், குருக்கத்தி, delight of the woods—Hiptage madablota alias Gaertnera racemosa; 2. கரி வேங்கை, a tree—Dalbergia cugeinensis.

அதி முத்திர நீக்கி, சிவப்புப் பொன்னங் கண்ணி, a red species of edible plant; river Blatty—Illecebrum sessile.

அதிமூத்திரம், மூத்திரம் மிகுதியாகப் பெறுதல், excessive secretion of urine—Hyperdiuresis; 2. பகு மூத்திரம், a kind of diabetes—Diabetes insipidus.

அதி மூத்திர வொழுக்கு, மூத்திரம் மிகுதியாக வொழுகுதல், an excessive flow of urine—Urorrhagia; 2. மூத்திர நாளை யினின்று அதிமாக மூத்திரம் ஒழுகுதல், an abnormal discharge from the urethra—Urethrorrhea.

அதி மைதுனம், அதிகமாகப் பெண்ணைப் புணருதல், excess of sexual intercourse.

அதி மோகம், காம விகாரம், excessive venereal impulse in the male—Satyriasis; 2. ஒருதலைக் காமம், abnormal increase of the sexual impulse before it is reciprocated—Sexual hyperesthesia.

அதி மோதம், மிக்க வாசனை, extraordinary fragrance; 2. மல்லிகை மரம், jasmine tree—Jasmine arboreum.

அதி யக்கினி, நோயா லேற்படும் அதிகோரப் பசி, extreme hunger from morbid causes, as in diabetes; 2. மிக்கச் சூடு, extreme heat.

அதியசனம், உண்ட வுணவு செரியா முன்னம் மறுபடியும் உணவை உட்கொள்ளுதல், eating too soon after a meal before it is digested; 2. அளவு கடந்து புசித்தல், immoderate eating; gormandizing.

அதி யண்டம், பூனைக்காலி, cowhage plant—Carpopogon pruriens alias Flacourtia cataphracta.

அதி யத்தம், எலும்பின், மேற் பாகம், the upper part of a bone.

அதி யத்தி, எலும்பின் மேல் எலும்பு வளர்தல், a bone growing over another; a bony

growth projecting outward from the surface of a bone—Exostoses.

அதியமில பரணி, புளியிலை, tamarind leaves —Tamarindus indica; 2. மாவிலை, mango-leaf—Mangiferus indica; 3. புளிச்சிறு கீரை, a medicinal plant having sour leaves; Sour greens—Oxalis corniculata.

அதி யமிலம், புளிமா, sour mango tree—Spondias mangifera; 2. புளிகாரத்தை, a species of citron—Citron aurantium.

அதியம், அப்பிரக பாஷாணம், a kind of mineral poison prepared from mica.

அதி யருவதம், ஏற்கனவே யிருக்கும் கழலைமேற் புறப்படும் மற்றொரு அசாத்தியக் கழலைக் கட்டி, an incurable tumour cropping up on one existing already—Secondary tumour; 2. ஏக காலத்தில் அல்லது ஒன்றன் பின் ஒன்றாக வெழும்பும் பல கழலைக்கட்டிகள், numerous contiguous tumours cropping up simultaneously or one after another—Multiple tumour.

அதி யாத்துமிகம், ஆன்மாவுக் குரிய, relating to the soul; 2. பரமாத்துமா, the Supreme spirit.

அதி யாமம், அறுகம் புல், couch grass — Agrostis linearis; 2. முயற்புல், Cynodon grass—Cynodon dactylon.

அதி யுட்டிணம், மிக்க வெப்பம், extreme heat; 2. மிக்கக் கொதிப்பு, excessive rise in temperature—Hyperthermia.

அதியுமிழ்தல், மிகுதியாக எச்சல் உமிழ்தல், spitting saliva in excess; 2. அதிகமாக வாய்நீ ரூறலால் உமிழ்தல், constant spitting owing to excessive flow of saliva; 3. ரசமருந்தை உபயோகித்தலால் வாய் பிடித்துச் சதா வாயில் நீர் ஒழுகல், abnormal flow of saliva due to misuse of mercury —Mercurialism alias Mercury Ptyalism.

அதி யோகம், அதிமாகச் செய்யு மருந்துப் பிரயோகம், over dosage; 2. பேதியாகு மருந்தை அதிகமாகப் புகட்டல், over-drugging with purgatives.

NOTE.—Wrong application or misuse of Vastis (enema) also comes under this head.

அதி யோமகம், சிவப்பு வாடாமல்லி, red globe everlasting jasmine—Gomphrena globosa.

அதியோனிப் பூப்பு, சிறு பெண்களுக்குப் பருவத்திற்கு முன்னதாகவே சனன வுறுப்புகள் அதிவிரைவாகப் பக்குவப் படுதல், excessive activity of the genital glands, resulting in precocious puberty, genital over-development etc.—Hyper-genitalism.

அதி ரசக் குழம்பு, மிகவும் தித்திப்பான பாயசம், thickened juice or liquid essence obtained by boiling crushed rice, wheat or other grains in milk and sugar.

அதி ரசம், அனேகப் பூண்டுகளின் பெயர், the names of various plants; 2. ஓர் தித்திப்புப் பணியாரம், a confection or cake prepared from rice flour, using sugar and ghee; 3. இரசம், mercury; 4. உப்பு, common salt, from its lending taste to the prepared curries; 5. ஓர் தித்திப்புக் குடிநீர், a sweet drink like syrup mixed with water; 6. மிக்க இனிப்பு, excessive sweetness.

அதி ரதம், see அதிரசம்.

அதி ரத்தம், மிகுந்த ரத்தம், excess of blood; 2. மிகச் சிவப்பு, bright red; 3. உடம்பினில் எப்பாகத்திலாவது மிகுதியாக வேற்படும் இரத்தம், excessive blood in any part of the body—Hyperemia.

அதி ரத்த ரோகம், இரத்தாதிக்கம், இதனால் தலையில் இறுக்கமான உணர்ச்சியும், சிவந்த நிறமும், மூக்கில் இரத்தவொழுக்கு முண்டாகும், excess of blood in the system and fullness of pulse. It is attended with a feeling of tension in the head, a florid complexion and liability to nose-bleed—Plethora.

அதிர புரசத்தான், அலரி, oleandar rosebay—Nerium odorum.

அதிரல், புனலிப்பூ, bastard rosewood climber—Dalbergia volubilis; 2. காட்டு மல்லிகை, wild jasmine—Jasminum angustifolium; 3. நடுக்கல், trembling.

அதி ராகம், கந்தகம், sulphur.

அதி ராம்பை, பொற்றலைக் கையாந்தகரை, eclypta with yellow flowers; Marygold verbesina—Wedelia calendulacea.

அதிரி, கல், stone.

அதிரி கர்ணி, காக்கணம், a plant, crow's beak —Clitoria ternatea.

அதிரிசம், குருடு, blindness; 2. பார்க்க முடியாமை, incapability of seeing.

அதிரிசயம், காணப்படும் பொருளைக் காணுமற் போகச் செய்யுமோர் வித்தை, the art of rendering a visible thing invisible; 2. தன்னைப் பிறர் பார்க்காதபடி மறைத்துக் கொள்ளும் வித்தை. சித்தர்கள் மறைப்பு மையைக் கொண்டும் இவ்வாறு செய்வதுண்டு, the art of making oneself invisible to others or making things invisible. This is generally performed by Siddhars with the help of a magic unguent prepared by them. See மறைப்புமை.

அதிரிசன், குருடன், a blind man; one who is destitute of the sense of sight.

அதிரி சாரம், இரும்பு, iron; 2. கற்சத்து, essence of stone; 3. சல்மதம், a fossil exuding from rocks—Asphaltum.

அதிரிசியம், அதிருசியம், } See அதிரிசயம்.

அதிருக்கு, குருடு, blindness.

அதிருசன், see அதிரிசன்.

அதி ருட்டம், இந்திரியங்களாற் காணப்படாதது, that which cannot be perceived by the senses; 2. பார்வைக் கெட்டாதது, that which is beyond the reach of vision.

அதிருட்டி பூதனை, ஓர் வகைப் பெண்பேயின் சேட்டையினாற் குழந்தைகளுக் கேற்படும் தோஷநோய். இதனால் வாந்தி, சுரம், இருமல், இளைத்தல், விக்கல், பயம், முகவெண்ணமை, ஈனத்தொனி, சொற்பத் தூக்கம், மலபேதம் முதலிய குணங்கள் உண்டாகும். இது ஸ்ரகதோஷ மெனவும் சொல்லப்படும், a morbific diathesis in children said to have been caused by the influence of a female evil-spirit or demoness.

It is marked by vomiting, fever, cough, emaciation, hiccough, fear, refusing to suckle, feeble voice, drowsiness, changes in fecal discharge etc.

அதிருட்டி பூதனை, ஓர் குருட்டுப் பெண்பேய், இது குழந்தைகளை வருத்தும் ஏழு பெண்பேய்களுள் ஒன்று, a blind female evil spirit or demoness. It is one of the seven female demonesses attacking children.

NOTE.—(*In Astrology*) It is said that according to the position of the stars at the time of birth of a child, diseases are brought about under the influence of demons who are entirely at the command or control of the planet acting in response to the principles of Meteorology.

அதி ரூபை, see அதிராம்பை.

அதி ரூதை, 33 வயது முதல் 50 வயது வரையில் ஏதோ ஒரு வயது வாய்ந்துள்ள பெண், a woman of any age between 33—50.

அதிரூப பீட குரு, முப்பு வாதிகள், அதாவது வாதம் செய்ய வேண்டி, முப்புவைத் தயாரிப்பவர், alchemists skilled in the preperation of the Universal Solvent called '*Muppu*', which is specially noteworthy in the Tamil Medical Science.

அதி ரூபம், கான்றிக்காய், belleric myrobalan, or devil's abode—Terminalia belerica.

அதி ரோகம், மிகுபிணி, serious or complicated disease; 2. சய ரோகம், consumption, 3. காசம், asthma; 4. தொன்ற நோய், chronic disease; 5. சலரோகம்—Polyuria.

அதி ரோமம், உடம்பி லெங்கும் மயிர் மூளுதல், growth of hair all over the body—Hypertrichosis universalis.

அதிர், நடுக்கம், shivering; 2. பயம், fear.

அதிர் சன்னி, சன்னியாற் பீடிக்கப் பட்ட பொழுது காணும் நடுக்கம், an involuntary shivering or tremor caused in delirium; 2. உடம்பு தாங்கமுடியாத, நோய், அடி, காயம், இரணம், புண் இவைகளினுல் ஏற்படும் அதிர்ச்சியா லுண்டான ஓர் சன்னி, delirium as a result of unbearable pain due to a blow, wound, ulcer etc.—Traumatic delirium.

NOTE.—It is a condition of reflex depression of the vital functions which occurs after injury or which may result from mental excitement induced by slight injury. It is a temporary exhaustion of nerve force. It may also be psychic, irritative or toxic.

அதிர்ச்சி, தாங்க முடியாத அடிகாயம், தடியடி, அறுவை, முதலியவைகளினு லுடம்பிற்கும் மனத்திற்கும் ஏற்படும் அதிர்ச்சி, a sudden perturbation of the body and the mind; prostration due to unbearable severe blows, injuries, operations, strong emotions etc.—Shock.

NOTE.—It is the relaxation or abolition of the sustaining or controlling influence

which the nervous system exercises over the vital organic functions of the body.

It is the result of a profound impression made on the cerebrospinal axis-either directly through the agency of an afferent nerve or through the circulatory medium.

அதிர்ச்சி, அதிகப்படுதல், increasing.

அதிர்தல், நடுக்கல், trembling.

அதிர்ப்பு, அதிர்வு, } அச்சம், sudden disturbed emotion ; 2. நடுக்கம், shivering,

அதிலவிதம், வெள்ளிலோத்திரம், bark of a silvery-white tree (*Lodram*)—Simplocos racemosa. It is a foreign plant.

அதில வோடகம், see அடிலவோடாகம்,

அதி லோக முருஞ்சாகம், இரசகற்பூரம், muriate of mercury.

அதி லோகம், இரசகற்பூரம், see அதிலோக முருஞ்சாகம்.

அதி லோகிதம், மிகச் சிவப்பு, very or extremely red.

அதிவகா, அதிவிடயம், Indian attee—Aconitum heterophyllum.

அதி வசம், அதி வசம்பு, } see அதிவிடயம்,

அதி வளர்த்தி, மிக்க உயரம், excessive tallness—Gigantism.

அதி வாத நாடி, உடம்பில் வாதம் கலித்திருப்பதைக் குறிக்கும் நாடி கடை, pulsation indicating excess of flatulancy in the system.

அதி வாதம், வாதக்கழிப்பு, excess of flatulency.

அதி வாந்தி, மிகுதியாக வாந்தியெடுத்தல், excessive vomiting—Hyperemesis.

அதி வாய் நீரூறல், வாயினின்று மிகுதியாக நீர் சுரத்தல், abnormal secretion of saliva—Hyper-salivation.

அதி வார்த்தை, மிகுதியாகப் பேசல், excessive talking—Loquaciousness ; 2. பைத்தியம், சன்னி, பைசாசம் முதலிய காரணங்களினால் அறிவழிந்து மிகுதியாகப் பேசுதல், too much of unconscious talk due to lunacy, delirium, devilishness etc.

அதி வாலகன், குழந்தை, infant.

அதி வாலிகம், சிகப்பு மருதோன்றி, red-leaved fragrant nail dye,—Lawsonia spinosa alias Barleria cristata

அதிவிடயம், இதவோர் கடைச்சரக்கு இதன் பூண்டு 2. 3. அடி உயரம். வளரும், அடித்தண்டு கோணலாயும், தாறுமாறுகவும் அடியில் மிருதுவாயும், மேலே சிறு தளிர்கள் வாய்த்து மிருக்கும். பூ நீலமாக மிருக்கும், வேர் 1 2. அங்குல நீளமுள்ளதாயும் வெளியே சுபில நிறமும் வெண்மையும் வாய்ந்து கசப்பாகவு மிருக்கும். வாசனையற்றதாயிருந்தால் வெளுப்பாக மிருக்கும். மற்றொரு விதம் கருப்பு, நீளம், சிறியது. அது இமயமலைச் சாரலில் மிகுதியாக உண்டு. இதற்கு வட இந்தியாவில் 'அந்தீஸ்' என்ற பெயர். இதில் நாட்டு அதிவிடய மென்று ஒருவகையுண்டு அதன் வேர்கள் மிகவும் சிறியவைகளாகவும், பார்வைக்கு மற்றதைப் போலவும், ஆனால் வாய்க்கு விறுவிறுப்பாகவு மிருக்கும். இது நேபாள தேசத்தில் மிகுதியாய்க் கிடைக்கும்,

மேற்சொன்ன இரண்டுவகை வேர்களும் கசப்பாகவும், காரமாகவும், விறுவிறுப்பாகவும்,உஷ்ணத்தைத் தரத்தக்கவை களாகவும் இருக்கும்; சீரண சக்தியையுங் கொடுக்கும். இவைகளால் தாது சக்தியும் பலவீர்த்தியுமுண்டாகும். இது ஒருசாதாரணி,கடைகளில் சாதாரணமாய் வெண்மையான சூரணமாய் இதை விற்பார்கள். இது மிகவும் கசப்பானது, சிறிது காரமும் உண்டு. குற்றமற்ற அதிகமான பூந்தாது வாய்ந்ததாயு மிருக்கும். இது 'பீஷ்' என்னும் பாஷாணத்தை விடக்கொடியதல்ல. இதன் கிழங்குக்குத்தான் அதிவிடய மென்று பெயர், இதற்குப் பலத்காரி குணமுண்டு. இதன் சூரணத்தைக் குளிர்காய்ச்சல் நின்ற பிறகு பலவீனத்திற்குக் கொடுக்கலாம். இக்கிழங்கினுள் சில தாவாரங்களுண்டு, கருப்புள்ளி யுடையதாயும் 'அடிசன்' என்று மோர்வித சத்துள்ளதாகவு மிருக்கும். முறைசுரம், விடாசுரம் இவைகளுக்கு இதன் தூளைத் தேனில் கூட்டிக் கொடுக்கலாம்.

A bazaar drug called Indian atees—Aconitum heterophyllum. Shrub 2, to 3 ft in length; stem obscurely-angled, smooth below, pubescent above; flowers blue.

The root of this species as sold in bazaars, occurs in smell tubers 1-2 inches in length. It is grey externally and slightly wrinkled longitudinally; inter-

nally it is white. It is inodorous and of a pure bitter taste. The other kind is black, small and long and is found on the Himalayan elevations. The root is known by the name of Atees in N. India.

There is another root in the bazaars of S. India, which is erroneously considered to be a variety of the above root Country Aconitum heterophyllum. It bears more resemblance to the above kind, but acrid in taste. The 2 kinds mentioned above (black and white) are bitter and astringent, pungent and heating, aid in digestion, useful as a tonic and as an aphrodisiac. They are valuable febrifuges.

The root is generally sold in the bazaars as a fine white powder and it is extremely bitter and slightly astringent with abundant *farina*, which is free from noxious qualities. It is not so injurious a poison as the *Bish*. The *atee* is the bulbous root. It is a tonic, and it also checks diarrhoea. It is useful in convalescent state after fever. The porous root contains an alkaloid principle *Atisin* and the white salt Hydrochlorate of atisine in minute grains, it is bitter in taste and is given in intermittent fever.

அதி விடாகிகம், செவ்பு ரோஜா, red rose.

அதி விடை, see அதிவிடயம்.

அதி வியதை, மிகுந்த வேதனை, excessive suffering.

அதி வியர்வை, மிகுதியாக வியர்வை காணல், excessive sweating—Hyperephidrosis.

அதி விருட்டி, பெரு மழை, heavy or copious rain.

அதி விஸ்ப நுகர்ச்சி, அதிகமாகச் சுகத்தை விரும்புதல், indulging too much in luxury.

அதி விஸ்ப விருப்பம், இன்பந் தருபவனவைகளி லதிகமாக மோகங் கொள்ளல், morbid increase in the feeling of pleasure in agreeable acts.

அதி வீரம், see சவ்வீரம்.

அதி வீரியகாரி, விந்துவைப் பெருக்குந் தன்மை யுடைய மருந்து, medicine capable of increasing the virility—Aphrodisiac.

அதி வெப்பம், மிகுஞ் சொதிப்பு, excessive temperature—Hyperthermia.

அதி வெள்ளை, பரங்கிப் பாஷாணம், sublimate of mercury.

அதி வெள்ளைச் சிந்தூரம், see அதி வெள்ளை.

அதி வேக தீபனம், கொடிய பசி, excessive hunger—Bulimia.

அதி வைத்தியம், அதிகமாய் மருந்து புகட்டல், administration of drugs or medicines in excess—Nimia Deligentia Medici.

அதி ஸுப்பை, பொடுதலை, a plant—Verbena nodiflora.

NOTE.—பொதலைக்காய் should not be confounded with piper longum (அரிசித் திப்பிலி)

அதிஸுதி பூண்டு, கொடிவேலி Ceylon leadwort—Plumbago Zeylanica.

அதீ சாரம், see அதிசாரம்.

அதீதக் கடுப்பு, மிக்க வேகமுண்டாதல், extreme irritiability—Hypererethism.

அதீதக் கூச்சம், உடம்பின் சதைக் சேற்படும் அதிகவுணர்ச்சி, excessive sensitiveness of the skin—Hyperesthesia.

அதீத ஸ்பரிசவுணர்ச்சி, see அதீதக் கூச்சம்.

அதீத பேதி, மிகுதியாக வுண்டாகும் பேதி, excessive purgation—Hypercathersis.

அதீதப் பிரசவம், முறை பிறழ்வான அல்லது காலவரம்பு கடந்த பிரசவம், a perverted condition or abnormality in delivery —Allotriotexis; 2. காலந்தவறிப் பின்னே பெறுதல், giving birth to a child after the stpiulated time ;

See also அகாலப்பிரசவம்.

அதீதம், பொன், gold; 2. மேற்பட்டது, that which is in excess ; 3. எட்டாதது, that which is beyond reach; 4. கடந்தது, that which has exceeded the limit; 5. கொன்றை மரம், Cassia tree.

அதீத விஷந் தீண்டி, நாகப்பாம்பு, a very venomous reptile—Cobra.

அதீதன், ஆசை மூன்றுங் கடந்தவன், அதாவது மண், பெண், பொருள், one who has surrendered all the three that is naturally attractive in this world i.e, world, women and wealth ; 2. பாசத்தினின்றும் விடுவிக்கப் பட்டவன், one who is released from the clutches of Maya.

அதீத் திரியம், காணப் படாதது, that which is not apprehended; 2. புலனுக் கெட்டாதது, that which is not perceived by the senses.

அதீபனம், மந்தாக்கினி, absence or diminution of appetite occurring in gastric diseases, fevers and many other chronic affections—Anorexia.

அதீரம், தைரிய மின்மை, want of courage.

அதுக்கம், அமுங்குதல், reduced condition, as in a boil.

அதுக்கல், கடித்தல், மெல்லுதல், to masticate; to chew; 2. அமுக்கல், pressing or squeezing with fingers.

அதுக்கு, see அதக்குதல்.

அதுக்குதல், see அதக்குதல்.

அதுங்குதல், see அமுங்குதல்.

அதுட்ட விரணம், சீழ், இரத்தம், சிலேத்தண்ணீர் முதலியன வடிந்தாலும், சிகிச்சைக்கு ஆறும் விரணம்; an ulcer that could heal under treatment though attended with discharges of fluid, blood and pus.

அதுமவளுமவளதுவு மாதல், பூரணத்தில் லயித்தல் அல்லது சலத்தல், becoming absorbed in the Absolute.

அதும்பை, கலிழ் தும்பை, a flowering plant.

அதைத்த முகம், வீக்கமான முகம், swollen face.

அதைத்தல், வீங்கல், swelling; to be bloated.

அதைப் பான, வீக்கமான, turgid.

அதைப்பு, வீக்கம், swelling, especially such as is due to the effusion of serous fluid into the areolar tissues—Edema; 2. நீர்க் கோர்ப்பு, an unnatural collection of fluid in any cavity of the body; 3. விம்மல், turgescence; 4. எலும்பி னெழுச்சி, இது உள்வெளியென யிருவகைத்து, protuberance of a bone—Tuberosity. This may be internal or external.

அதைப் புள்ள, வீக்கமுள்ள, marked by swelling or edema—Edematose.

அதைரியம், வீரமின்மை, lack of courage—Timorousness.

அதோ, கீழ், under, beneath (*in medicine.*) hypo; sub.

அதோசத தோஷம், சலரோக தோஷ சம்பந்தத்தினல் கொப்புளின் கீழ் வாயு அணு சரித்து அதனுல் மலம் மூகல், வாயுலர்தல், முதலிய குணங்களைக் காட்டும் ஐவகைத் தோஷங்களுள் ஒன்று, one of the five affections of the body marked by, evacuation of bowels, parched tongue etc. It is due to the deranged Vayu arising from the affection of urinary organs and extending to the abdominal region.

அதோ கந்தம், காயுருவி, a plant—Achyranthes aspera.

அதோங்கம், (அதோ + அங்கம்) கீழ் அவயவம், அதாவது குதம் அல்லது யோனி, that portion of the body below the waist as, the anus or the vulva (*Pudendum muliebre.*)

அதோசாணு, முழங்காற் கீழ், below the knee.

அதோ சீவிகம், உண்ணாக்கு, the uvula.

அதோ தரம், கீழ் வயிறு, the abdominal region.

அதோதிதம், சிவப்பு முள்ளுக்கீரை, red nail dye plant — Amaranthus spinosus; 2. செம்முள்ளி, common nail dye—Barleria prionitis alias B. cristata.

அதோ துவாரம், see அதோங்கம்,

அதோ தேசம், see அடிப்பக்கம்.

அதோ நாபி, நாபியின் கீழ்ப்பாகம், that portion below the navel region.

அதோப காசம், சம்போகம், sexual intercourse.

அதோ பக்தம், சாப்பிட்டவுட னெடுத்துக் கொள்ளு மருந்து, a dose of medicine to be taken just after meals.

அதோபரம், மல வாயில், the anus.

அதோ பாகம், அடிப் பக்கம், bottom; கீழ்ப் பாகம், the lower portion, especially of the body.

அதோ பாதம், கீழ்ப் பாகம், the lower portion of the foot; 2. கீழ்க் கால், the lower portion of the leg; 3. சின்னமூளையி னிரண்டு பாகங்களையும் இணைத்துக்கொண்டிருக்கும் நார்க்கட்டுகளாலாகிய கால்கள் இரண்டினி லொன்று, one of the fibrous bands by which the cerebellam is attached to the brain—Inferior crus.

See மத்திய பாதம்.

அதோபார தோஷவரி, உடம்பின் அடிப் பாகத் தைக் குணப்படுத்தல் அல்லது உறுதிப் படுத்தல், curing or strengthening the lower part of the body.

அதோ பிரகன் ஞாம், அதோ பிரகன நாளம், } கீழ் உடம்பினின்று இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு போகு மோர் வகை நாளம், a vein formed by the junction of the two common iliac veins. It empties into the right auricle of the heart—Inferior Vena cava. It is opposed to ஊர்த்துவ பிரகன்ஞாம், the Superior Vena cava.

அதோ மாயை, அசுத்த மாயை, inferior illusion—Material Maya.
See அசுத்த மாயை.

அதோ மார்க்கம், கீழ் நோக்கிய வழி, (*In pathology*) downward descending motion, as in hemorrhage, labour etc; 2. கீழ் மார்க்கமாகிய நிலை, (*In religion*) the last and inferior stage in meditation or religious worship, 3. காயுருவி, a plant Indian burr—Achyranthes aspera.

அதோமுகக் கட்டி, வயிறு அல்லது இடுப்பு முதலிய கீழ்ப் பாகங்களிற் பெரிதாயும், கருப்பாயும், எழும்பி மிக்க வலியை யுண்டாக்கி, நிமிர வொட்டாமற் செய்யுமோர் விதக் கட்டி. இதினின்று பிசபிசுப்பான நீர் வடியும், a large blue-coloured abscess appearing on the abdomen or on the back or other parts of the lumber region and rendering the patient unable to stand or sit erect. It is marked by a deep-seated pain and a slimy discharge.—Lumbar or psosas abscess.

அதோ முகம், கீழ் நோக்கிய முகம், downward face; 2. தலை கீழ், headlong; 3. மேல் கீழ் upside down; 4. கறி முன்னை, a plant—Premna esculenta.

அதோமுக ரத்த பித்தம், உடம்பின் கீழ்ப்பகுதியில், யோனி, மூத்திரம், மலம், மயிர் ஆகிய வைகளின் துவாரங்களின் வழியாக இரத்தப் போக்கை யுண்டாக்கு மோர் நோய், hemorrhage or discharge of blood through the natural openings in the lowest part of the body such as, the vagina, the urinary passage, the anus and the hair follicles.

அதோமுக வாதம், உடம்பினில் கீழ் முகமாக நோக்கும் வாதம், இது நாபியிலிருக்கும் சமானவாயு, குதத்திலிருக்கும் அபானவாயு வுடன்கூடிப் பிறகு பித்தத்தை யனுசரித்து மார்பில் எரிச்சலை யுண்டாக்கி, அடிவயிற்றிலும், கவுட்டியிலும் கீழ்முகமாக விறங்கிப் பீஜத்தில் வீக்கத்தையும் வலியையும் உண்டாக்கும்; அதனால் ஆண்குறியின் துவாரம் அடைபட்டுச் சுக்கிலம் வெளிவராமலும் மூத்திரம் தளித்தளியாகவும் இறங்குவதுடன், ஆசனவாய் சுருங்கி அதனால் மலபந்தமுமுண்டாகும். பெண்களுக்குக் காணும்போது அல்குலில் இறங்குவதால் அத்துவாரம் சுருங்கி மேற்படிக் குறிகளைக் காட்டும், a disease resulting in the descent of Vayu (*air*) from the abdominal region to the sacral region in consequence of the combination of the Samanan(*vital air essential for digestion*) and Apanan (*vital air essential for excretion*) through the lower channel, inguinal canal etc.

The descent so caused gives rise to diseases in four different ways as mentioned below—

1. to swelling and pain, entering into the scrotum.
2. to obstruction to urethra and stricture of urine, entering into the urinary passage.
3. to contraction of rectum and constipation, entering into the intestines.
4. (*in females*) brings on the same symptoms as mentioned above in the case of a male, entering into the vagina.

அதோ முகி, கவிழ்தும்பை, a plant with its flowers facing downwards — Leucas procumbens.

அதோ முகியான், கன்று போடும் பசு, a cow in calf.

அதோ யந்திரம், யந்திரத்தி னடிபாகம், the lower part of an apparatus.

அதோ ரத்த பித்தம், ஆசனவாய், யோனித்துவாரம் அல்லது மூத்திரப்பை இவைகளினின்று வெளிவரும் இரத்த வொழுக்கு, a discharge blood from the anus, bladder or the vagina.

See அதோமுக ரத்த பித்தம்.

அதோலம்பம், தூங்கல், sleep.

இது அந்தப் பூதனை வென்னும் பெண் பேயின் செய்கையா லுண்டாகிப் பிறந்த மூன்றுவது வருஷம் அல்லது மூன்றுமாதம் அல்லது மூன்று நாளிலிருந்து தொடரும், a morbific diathesis in children characteried by fever, aversion to milk, vomiting, dysentery or diarrhoea, cough or hiccough, swelling and an inclination to lie always on the face.

It is supposed to be due to the attack of a female demon acting under the influence of evil planets in the third year, the third month or the third day after delivery.

NOTE.—Such diseases occur without any assignable cause and they are sometimes cured without medicines in the usual course. They are usually attributed to the meteorological changes whose action upon the human system Therapeutic science is unable to determine.

See also அதிருட்டி பூதனை.

அந்த மந்தம், உறுப்புக் கேடு, the malformation of an organ in the body—Deformity ; 2. செரியாத் தன்மை, indigestion.

அந்த முள், குறிஞ்சா, a plant, common Indian Ipecacuanha—Tylophora asthmatica.

அந்த மூசிகம், ஓர் வகைப் புல், a kind of grass—Lepeocercis Serrata.

அந்த மூசை, ஒரு பக்கம் துளையிட்டு மூடிய ஓர் சிறிய மூசை, a small covered crucible with a hole in the side.

அந்தம், அவயவம், an organ of the body ; 2. கஸ்தூரி, musk; 3. சாவு, death; 4. குருடு blindness ; 5. எலும்பின் கடை, extremity of a bone ; 6. பாஷாணம், poison ; 7. பச்சைக் கற்பூரம், crude camphor ; 8. நீர், water ; 9. சோறு, food, boiled rice ; 10. பிண்டம், foetus; 11. தலைச்சன் குழந்தை மண்டையோட்டிலிருந்து செய்யப் படுமோர் விதை அண்டச் சுண்ணம், a calcined compound prepared from the skull of the first-born child.

அந்த யெரு, வைத்திய முப்பு, a kind of salt prepared out of 3 kinds of salts called '*Muppu*' by a secret process known only to Siddhars. It is used for curing all kinds of diseases and is primarily used in Tamil medicine.

NOTE.—This is distinguished from வாத முப்பு, which is an elixir sought for by the Alchemists for transmuting metals into gold and for prolonging life.

அந்தர காமி, ஆகாய மார்க்கத்திற் செல்வதிலேயே விருப்பமுடையோன், he who has always a mania for passing or travelling in the aerial regions.

அந்தர கும்பகம், பிராண வாயுவைக் குடலினுள்ளேயே தம்பிக்கச் செய்தல், the act of retaining the vital air in the intestines by suppression of breath.

அந்தர செந்தூன், சூத பாஷாணம், a kind of mercurial poison.

அந்தரக் கோன், புல்லுரி, a parasitic plant.

அந்தரங்கக்கரப்பன், கோசமலரின் தோலிற் கடியில் வட்டமாய்ச் சிவந்து, தினவு அல்லது எரிச்சலோடு கூடிய தழும்பு. இத்தழும்பில் சிறிய கொப்புளங்கள் பல காணப்படும், இது பெண்களிலும் புழக்கையில் காணும், an intense itching on the innerside of the foreskin of the penis marked by crops of papules with inflammation, and burning sensation—Pruritus. In females it is found in the vestibule of the vulva —Pruritus vulvae.

அந்தரங்கக் கரு, see உட்கரு.

அந்தரங்கச் சொறி, மேகச் சூட்டினால் ஆண் பெண் இவர்களுக்கு இந்திரிய ஸ்தானங்களில் சகிக்க முடியாத கமைச்சலோடு சிறியவிய்க்குருக்கள் போற்காணும் ஓர்வகைச்சொறி சிரங்கு, a chronic skin disease marked by the development of small pale papules and intense itching of the genitals in both the male and the female. It is due to the venereal heat—Prurigo.

அந்த ரங்கத் தானம், பெண் குறி, the private part of a female ; 2. இரகசியமான விடம், a secret place ; 3. மனம், mind.

NOTE.—It is so called because it is in the invisible part between the anus and the navel.

ந்தரங்கத் தியானி, ஆமை, tortoise.

அந்த ரங்கம், (அந்தர் + அங்கம்) உள்ளாகவிருக்கும் உறுப்பு, அதாவது மனம், mind.

அந்தர சமி, செரியாமை, indigestion; 2. வாயுவினால் வயிறு உப்பல், inflation of the bowels due to wind—Tympanites.

அந்தர சாரி, ஆகாய மார்க்கத்தில் உலாவுவோன், he who travels in the aerial regions. Siddhars alone can do this.

அந்தர சிந்தூ, சற் பாஷாணம், one of the 32 kinds of native arsenic.

அந்தரஞ் சனம், கொடி மாதுளை, lemon citron —Citrus (*lemoni medica*).

அந்த ரட்சி, உடம்பின் துவாரங்களின் வழி மாகவிட்டுப் பரிசோதிக்கு மோர்மிதக் கருவி, an instrument for the examination of a body-cavity through its natural outlet —Endoscope.

அந்தரதம், குடற் புழு, a worm in the intestines.

அந்தர தாகம், சாகுங்காலை ஏற்படும் ஓபாதயிடாம், intense thirst in a dying person; 2. மேக வெட்டையின் சம்பந்தத்தினால் ஏற்பட்டி அதிகமான தாகத்தை யுண்டாக்கு மோர் நோய், intense thirst arising from the parched condition of the tongue, etc. due to urinary disorders as diabetes etc.

அந்தரத் தாமரை, ஆகாயத் தாமரை. இது கீர்ச்சருக்கு மூலம், சீதபேதி, பொடியருமல் இவைகளுக் குபயோகப்படும், a kind of lotus, the root of which floats on water —Pistia stratiotes. It is useful in stranguary, piles (*prolapsus anus*), dysentery, cough etc.

அந்தரத் தேசரி, சிறு பசலை, small Indian purslane,—Portulaca qudrifida.

NOTE.—This is a small species of பசலை. The names of the other varieties best known in Tamil are the following :—

1. கொடிப் பசலை.

   (a) வெண் கொடிப் பசலை, Field Basella — Basella Alba.

   (b) செங் கொடிப் பசலை, Red Basella or Spinach—Basella rubra.

2. கொத்து அல்லது குத்துப் பசலை அல்லது பெரும் பசலை, a larger variety called Cluster Basella or Heart-leaved Malabar Night shade — Basella lucida or Basella cordifolia.

3. பேய்ப் பசலை அல்லது கசப்புப் பசலை, a bitter variety from its unwholesome and stupefying nature—Portulaca Meridiana.

4. தலுக்குப் பசலை அல்லது கோழிக் கீரை, common variety called Indian spinach —Portulaca oleracea.

5. வழுக்கைப் பசலை, another variety of Indian spinach containing more of mucilagenous substances.

6. கரும் பசலை அல்லது நீலப் பசலை, a black or blue variety. This is unknown in Botany and great virtues are attributed to this kind by Siddhars.

For full particulars see under பசலை.

அந்தர பவனி, ஆகாய மார்க்கத்தில் உலாவி வருதல், wandering in the aerial regions. This is one of the secret art amongst Siddhars and it can only be performed through success in Yoga practice and with the aid of certain Mercurial pills (*animated.*)

அந்தர புட்பம், பலாசு, tisso flower—Butea frondosa.

அந்தர புருஷன், ஆத்துமா, the soul.

அந்தரப் பிசாசு, துர்மரணத்தா லேற்படும் பேயுருவம், a disembodied spirit of one who died of suicide, violence or accident —Evil spirit.

NOTE.—According to Hindu Philosophy, the spirits of persons meeting with accidental or other unnatural deaths, cannot enter into the evolutionary process of re birth until such time as the Karma responsible for bringing about such happenings is completely worked out.

The said spirit in the meantime is supposed to exist or occupy the region between the earth and the next world.

அந்தர மாழலி, see ஆகாயத் தாமரை.

அந்தர மூலி, see அந்தரத் தாமரை.

அந்தரம், மோகம், desire; 2. ஆகாயம், sky; etheric region; 3. புருவத்தினடி, space between the eye-brows; 4. இடுப்பு, waist; 5. இருள், darkness; உள்வெளி, interior open space; 6. அளவு, measure; 7. தனிமை, loneliness; 8. பேதம், difference; 9. நடு, intermediate space; 10. முடிவு, end, taken distributively—end of each.

அந்தர வருணி, சிறு நெருஞ்சில், a thorny shrub—Tribulus terrestris.

அந்தர வல்லி, கொல்லன் கோவை, air-living bryony, Demon root — Carollocarpus epigaea.

NOTE.—It is an antidote to snake-bites. Internally it is prescribed in later stages of dysentery and old venerial complaints.

அந்தர வனசம், கொடிப் பாசி, green creeping moss upon the surface of water—Green moss.

அந்தர வாசம், கொட்டைப் பாசி, an epiphytic medicinal plant; 2. ஆகாயத்தில், சஞ்சரித்தல் moving in the aerial regions.

அந்தர வாசி, ஆகாயத்திற் சஞ்சரிப்போன், a superhuman being moving in the aerial regions.

அந்தர வாயு, குடல் வாயு, gas or air in the intestines; flatulence; 2. வாயுவினால் குடலிறக்கம், the descent of the bowels from its normal position, as a result of the deranged condition of *Vayu* in the system—Rupture 3. (அந்தரம் + வாயு) ஆகாசத்தினிடமாகவுள்ள காற்று, atmospheric air; 4. இடுப்பி லேற்பட்ட வாயு நோய், hip-pain due to wind in the system.

அந்தர வாயுக் கிரகணி, (அந்தரம் + வாயு + கிரகணி = bowels + air + chronic diarrhoea.) குடலிற் சுற்றிய வாயுவினால் உண்டாவுடன் வயிறிரைத்து பேதியாகிற நோய். தளர்ச்சி, விலாவிலி, விக்கல் முதலிய குணங்களையுண்டாக்கு மோர் வகைக் கிரகணி, a form of chronic diarrhoea characterised by rumbling noise in the stomach and purging, thirst, fatigue, spasmodic pain on the sides, hiccough, etc. It is due to gas or air in the intestines (*flatus*) and occurs soon after meals—Flatulent diarrhoea.

அந்தர விருத்தி, (அந்தரம் + விருத்தி) குடல் பருத்தல், enlargement or distension of the bowels; 2. குடல் தன்னிடத்தை விட்டு நழுவி அண்டத்திற் குன்னிறங்காமல் ஆண் குறிக்கு மேற் பருத்துக் காணல், the displacement of bowels with protrusion or swelling appearance above the penis when they have not passed quite through the inguinal canal—Imperfect hernia; 3. (அந்தரம் = உள் + விருத்தி = பருமன்) உடம்பின் உட்புறத்தி விருந்து பருமனாதல், swelling remaining internally; 4. இடுப்புப் பருத்தல், enlargement of the waist and buttocks; 5. குடலண்ட விருத்தி. இந்நோய் வாயுவானது பல காரணங்களினாற் பிரகோபமடைவதனு லேற்படுவதாகச் சொல்லப்படும். முதில் நெருடல் தடை யிடுகின் உட்புறமாய் விதைக் குன்னிறங்கிப் பிடுக்கைப் பந்தைபோல் பருக்கச் செய்வதுடன், அதை அமுக்கக் களகள வென்ற சத்தத்துடன் மேலெழும்பும். விட்டு விடப் பழயபடி பருத்துக் காணும். இந்நோய் சாதாரணமாக அதிக பாரத்தைத் தூக்குவதாலும், மிருதியாக முக்குவதாலும், குதித்தல், விழுதல், பார மிழுத்தல், முதலிய உழைப்பு களினாலும். குடல்தாக்கப்பட்டு அது சுவட்டியின் கீழ் இறங்கும், a rupture caused by the muscles over the bowels, giving way and letting some portion of the intestines escape outwards beneath the skin. It arises from the aggravated condition of Vayu in the iliac region.

The intestines eventually make their way through the opening in the groin and descend into the scrotum which becomes swollen like an inflated air-bladder.

They ascend upwards under pressure making a peculiar gurgling sound and when let go they come down again and swell the scrotum as before—Inguinal hernia.

It is caused generally by lifting a heavy load, violent physical strain, jumping, falling, dragging or pulling heavy weights and such like physical labour causing pressure to the bowels which eventually descend through the groin.

அந்தர விகூசனம், வயிற்றிரைச்சல், rumbling of the bowels.

அந்தர விட்ட, குடலிலிறங்கி நிற்கும் மலம், fecal matter in the intestines as opposed to வெளி தள்ளு மலம், discharged feces.

அந்தர விதனம், ஓர் கண்நோய், an eye-disease.

அந்தர விதீரதி, உடம்பினுள் ளுறுப்புக்களிற் காணும் கழலையைப் போன்றகட்டி. இது உடம்பினுட் புறத்தில் புற்றுமாதிரி காணப்படும். இது சாதாரணமாய் மூத்திரப்பை, ஈரல், தாமரைக்காய், மண்ணீரல், மலப்பை முதலிய விடங்களிற் காணும். உள்ளே புறப்படும் சுன்மக் கட்டி அல்லது சாதாரணக் கழலைக் கட்டியை விதீரதிக் கட்டியெனத் தவறுதலாக் கொள்ளப்படாது. இக்கட்டிகள் புறப்படும் உறுப்புகளின் தானங்களுக்குத் தக்கவாறு குணங்கள் ஏற்பட்டுக் குறிகளும் காட்டிவைக்கும். a tumour-like raised abscess in the interior organs of the body. It is often felt to be shaped like an ant-hill. These abscesses are generally found in the bladder, the liver, the heart, the spleen, the rectum etc. and they should not be

confused with the enlargement of the spleen or other ordinary internal tumours.

The nature and symptoms of the internal abscesses vary according to their seats in the different regions of the body.

அந்த வேஷண சவ்வு, peritoneum.

அந்த ராந்சம், புசத்திற்கும் மார்பிற்கும் இடையேயுள்ள பாகம், that part of the body between the shoulder and the breast.

அந்தரா பதியை, சூல் கொண்ட பெண், a pregnant woman.

அந்தரா பத்தம், சாப்பாட்டிற் இடையே கொள்ளு மருந்து, a medicine taken between two meals.

அந்தராபவச் சத்துவம், இறந்த பின்னும் மறுபடியும் பிறப்பதற்கு முன்னும் ஆத்துமாவிற் கேற்பட்ட நிலைமை, the soul in its existence between death and rebirth.

அந்தராயாம தனுத்தம்ப வாதம், ஓர் வாதரோம், இது உடம்பி லுள்ளவாயு பிரகோப மடைந்து, மிரற்கள், புறங்கால்கள், வயிறு, மார்பு, இருதயம், தொண்டை, ஆகிய இவைகளே அனுசரிக்குங்கால், உடம்பிலுள்ள என்புக்கட்டுகள் உள்ளுக் கிழுக்க உடம்பு சருங்கி முன்னம் குனிந்து உள்ளாக வளைந்து குதுகுவதனு லேற்படும். இதனால், விழி பிரளாதிருத்தம்பித்தல், தாள்மரத்து, யிலா முறித்தல், வாயொழுகிக் காணும், a disease due to the accumulation of the extremely enraged Vayu (*nerve force*) in the regions of the fingers, insteps, abdomen, chest, heart and throat. It forcibly draws in the local ligaments, when the body becomes contracted and bends forward bringing about a curvature of the inner trunk.

In this disease the movements of the eyes becomes impossible, being fixed in their sockets; the jaw bones are paralysed, the rib bones are fractured and the patient ejects slimy mucous.

அந்தரா யாமம், see அந்தரா யாம வாதம்.

அந்தராயாம வாதம், இது தனுஸ்தம்ப வாத மிருவகைகளி லொன்று. இதில் உடம்பினுட் புறத்தி ரம்புகளில் வாதம் சேர்ந்து, அதனுல் முதுகும், நெசும் இழுத்துப் பிடிக்கப் பட்டு, வயிற்றுப் பக்கமாய் வில்லைப்போல் வளைந்து, வியர்வை, கண்நிலை குத்திடல், தான் பிடிப்பு, விழுங்க முடியாமை, வாயில் கோழை, வாந்தி, சுரம் ஆகிய விசுகுணங்கள் உண்டாகும்.

இந்நோய் மருந்திற்கு வசப்படாது. சில சமயம் அபூர்வமாக வசப்படினும் மிகவும் கஷ்டத்தோடு குணப்படும். தமிழில் இதற்கு முன்னிசுவு என்று பெயர், one of the two distinct types of a disease in which the enraged Vayu, which is accumulated in the nervous system, bends the body of the patient inwards and forwards like a bow and renders it tense. It is characterised by perspiration, fixation of eyes, paralysis of the jaw- bones which makes deglutition extremely difficult, slimy secretion from the mouth, vomiting, fever etc—Emprosthotomos.

The disease rarely yields to medicine and in rare instances only with the greatest difficulty. In Tamil, it is known as (*Munnisivu*) which means a curve extended inwardly and forwardly.

See also ஆகர்ஷண தம்ப வாதம்.

அந்த ரிந்திரியம், அக்கக் காரணம், which see.

அந்தரி யாசம், மானச பூசை, mental worship.

அந்த ரிலயம், துரியாதீதம் அதாவது உலகத்தின் பாசபந்தங்களினின்றும் அல்லது மாயாவிகாரத்தி னின்றும் விடுபட்ட உன்னதமான ஆன்ம நிலை, the highest state of the soul which is freed from all corporeal entanglements or Maya.

அந்தர்கத சுரம், உட்சுரம், internal fever.

அந்தர்குத வலயம், ஆசனவாயிற் குள்ளாக விருக்கும் வளையம், (*in Anatomy*) the inner ring of the sphincter muscle in the anus.

அந்தர்ச் சடரம், இரைக் குடல், the stomach.

அந்தர்ச் சரீரம், உள்ளுடம்பு, body interior, inner body—Astral body; 2. உள்ளிந்திரியம், internal organ.

அந்தர்ச் சீவி, ஓர் உயிர்ப் பிராணி மற்றொரு பிராணிக்குள் தொத்திக் கொண்டிருத்தல், an animal-parasite living within the body of another animal—Entozoon.

அந்தர் திருஷ்டி, அகலோக்கம், looking into one's own soul—Introspection.

அந்தர்த் தகனம், மது நீர் வடித்தல், distillation of spirit or liquor.

அந்தர்த் தானம், மறை விடம், a concealed or covered place; 2. உள்ளிடம், private part; 3. பெண் குறி, the genital of a female.

அந்தர்ப் பாகம், உட்பாகம், internal portion; 2. மறைவான பாகம், private part i.e. the genital portion.

அந்தர் மலக்கிருமி, உடம்பினுள் ஞண்டாகும், கபம், இரத்தம், மலம், மூத்திரம் ஆகிய வினைகளில் பிறக்கும் நீரிப் பூச்சி, இது சர்க்கரை, பால் முதலிய திரிப்புப் பண்டங்களே யுணவிற் சேர்த்து மிகுதியாக உட்கொள் ஞவதனாலும், மலபந்தத்தினாலும் உண்டாகும். Micro-organisms found in the phlegm, blood, feces, urine etc.

அந்தர் மிருதம், பிறக்கும் போதிறந்தது, dead at the birth—Still-born.

அந்தர் முகம், உள்ளே நோக்கிய முகம், (*in anatomy*) the condition of facing inward; 2. யோக நிலையில் ஒன்று, (*in yoga philosophy*) a posture in the Yoga practice.

அந்தர் முகி, அடங்கிய மனத்தான், one who has controlled his mind, and said of a yogi; 2. உள்நோக்கிய முக முடையவன், one who is always engaged in looking inwards, a state in yoga.

அந்தர்முகி யோனி, பெண்கள் வயிறுநிரம்ப வுண்டு, கடினப் புணர்ச்சி செய்வதனால் வாயு வதிகரித்து, உள்நோக்கிய முகமாக வெழும் பி, யோனியை விரிக்க முடியாதபடி வலியையும், பூவொதுங்குவதால். அங்குள்ள எலும்பு, மாமிசம், நரம்பு முதலியவைகளுக்கு வலியையு முண்டாக்கி அடிவயிற்றில் சூலையையு முண்டாக்குமோர் நோய், a vaginal disease characterised by pain in every part of the genital, bone, muscles, nerves etc., inability to stretch the part and darting pain in the abdomen and in the lower region just above the pubis.

It is due to the deranged condition of Vayu arising from violent or rude intercourse when the stomach is full after meals.

அந்தர் யோகம், சுழுத்தி நிலை, a state of deep thought or abstraction—Reverie.

அந்தர் யோனி, பெண்குறியி னுட்புறம், the internal portion of the genital of a female.

அந்தர்வதி, கருப்பிணி, a pregnant woman.

அந்தர்வமி, வாயு, flatulence; 2. செரியாமை, indigestion.

அந்தர் வித்திரதி, பெண்களுக் குண்டாகும் மாத விடாய் தடைபட்டு, அதனால் இரத்தம் கோளாறடைந்து, கருப்பையில் திரண்டு கறுத்த கொப்புளங்களாற் சூழப் பட்டு, அழற்சி, வலி, சுரம் ஆகியவைகளே யுண்டாக்கு மோர் சூதக நோய், a menstrual disease in women arising from the altered condition of blood in the womb due to the suppression of menstrual flow.

It is marked by fever, dark ulcers in the womb, inflammation and pain in the vagina—A kind of Amenorrhea.

அந்தர் வேகசுரம், (அந்தர் + வேகம் + சுரம்) அதாவது எலும்பிற் குள்ளிருக்கும் மச்சதாதுவைப் பற்றி ஏற்படும் ஓர்வகைச் சுரம்.

இதனால் உடம்பெரிச்சல், தாகம், பொருந்தா வார்த்தை, பெருமூச்சு, தலை சுழற்றல், அன்னி சூலை, மலபந்தம் முதலிய குணங்களுண்டாகும். சுசுருத சம்மிதைப்படி இதற்கு கமபீர சுரம் என்று பெயர், (internal + force + fever) i.e., a fever due to the affection of the marrow in the bone.

It is attended with a burning sensation in the body, thirst, incoherent expressions, sighing, recline of the head, darting pain in the bones, (*Osteomyelitic*) constipation, etc.—Osteomyelitic fever.

It is called by a different name according to Susruta Samhita as mentioned above.

அந்தளம், புல்லுருவி, a parasitic plant.

அந்தனம், கடுக்காய், ink-nut—Terminalia chebula.

அந்தனஞதி, பழம் புளி, old tamarind.

அந்தன், கடுக்காய், see அந்தனம்; 2. குருடன், a blind man.

அந்தாசி, விஷமில்லாப் பாம்பு, a non-poisonous snake; 2. ஓர் மீன், a kind fish.

அந்தாரப் பனை, தொட்டிப் பனை, a species of palmyra.

அந்தாலசி, முகம் விடாக் கட்டி, a boil or abscess which does not point; a blind boil or abscess.

அந்தி, இரவு, night; 2. தில்லை மரம், blinding tree, Tiger's milk-spurge—Excoecaria Agallocha; 3. மாலைப் பொழுது, evening

twilight; 4. அந்தி மந்தாரை, which see; 5. மணி பூரகம், one of the six psychic centres of the body, situated in the navel region and corresponding to epigastric centre; 6. குருடு, blindness; 7. குருடாக்கல், causing blindness; 8. முச்சந்தி, junction of three streets.

அந்திகா, ஓர் கண்ணோய், a disease of the eye. See அந்திசை.

அந்தி காசம், (அந்தி + காசம்) சாயுங் காலத்தில் கண்ணொளி மழுங்கு மோர் கண்ணோய், a black catarrh of the eye causing imperfect vision in the evening time or in a dim light; night blindness—Nyctalopia.

அந்தி கால், சுரப்புன்னை, a tree, Soora poon —Octrocarpus longifolius.

அந்தி காவலன், மாலைப் பொழுதில் தெருக்களில் காவலாகத் திரியு மோர் தேவதை, the guardian deity moving about in the streets in the evening twilght.

அந்தி குணம், பெருங்காயம், asafoetida.

அந்திகை, கண்ணோய், a disease of the eye; 2. குருடு, blindness; 3. இரவு, night time.

அந்திக் காப்பு, குழந்தைகளின் தோஷங்களைப் போக்குவதற்காக வேண்டி மாலைப் பொழுதில் செய்யுங் கிரியை, a mystic ceremony performed in the evening twilight for purposes of curing the evil influences affecting children.

அந்தி சந்தி, காலை மாலை, both morning and evening; 2. எப்பொழுதும், always.

அந்திசந்து வாதம், (அந்தி + சந்து + வாதம்). மிக்க வலியை யுண்டாக்கி மூட்டுகளைத் தாக்கு மோர் வாத நோய். இது சாதாரணமாய் இராத்திரியில் கண்டு, விடிந்த வுடன் மாறும், (evening + arthritis) a disease the bones affecting the joints. The attack usually comes on suddenly in the night and tends to disappear in the morning. It is marked by severe pain —Gout.

அந்தி தோஷம், see அந்திப் புள் தோஷம்.

அந்தித்தல், பொருமுதல், rumbling of the stomach; 2. அந்தி பகல், night and day.

அந்தி பார்த்தி, கும்பகம், suppression of breath,

அந்தி பூதம், குருடாதல், becoming blind.

அந்திப் பீலை, சிறு பீலை, woolly caper—Achyranthes lanata.

அந்திப்புள் தோஷம், குழந்தைகளை மாலைப் பொழுதில் வெளியிற்கொண்டு போவதனால் தாக்கும் பட்சி தோஷம், an evil influence brought about in children by taking them outside in the streets just when birds are crossing.

அந்திப்பூ, அந்தி மந்தாரை, a flowering plant which blossoms just after sunset in the evening twilight—Mirabilis jalapa.

அந்திப் பொழுது, மாலைப் பொழுது, கையெழுத்து மறையும் பொழுது, evening twilight, dusk of the evening i.e. about the time when characters are not distinctly visible.

அந்திம காலம், சாகுந் தருவாய், the last moments of life.

அந்தி மந்தாரம், அந்தி மந்தாரை, } சாயுங்காலத்திற் பூர்க்கும்பூ. இதுவே அந்தி மல்லிகை அல்லது அந்திப்பூ. இது நமது நாட்டுச் செடியல்ல. யுனானி வைத்தியர்களிதைக் சுகபேதி மருந்தெனக் சொல்வார்கள். ஐரோப்பிய வைத்தியத்தில் இது சேர்ந்த தல்ல, a flower which blossoms in the evening twilight—Mirabilis jalappa. It is a foreign plant, but naturalised in India. It is used by Unani doctors as a mild purgative and is a non-officinal drug.

அந்தி மரித்தான், சிறு பேய்க் கொம்மட்டி, bitter-apple—Citrullus colocynthis.

அந்தி மலரி, அந்தி மலரகிகம், } see அந்தி மந்தாரை.

அந்தி மலர்ந்தான், பத்திராட்சை, see அந்தி மந்தாரை.

அந்தி மல்லி, அந்தி மல்லிகை, } see அந்தி மந்தாரை.

அந்தி மாலை, மாலைப் பொழுதில் கண்ணொளியை மறைக்கு மோர் கண்ணோய், a degeneration of the retina in which the vision fails at twilight or sunset; See அந்திகாசம்; 2. பகற் பொழுதின் னிறுதியில் வரும் மாலைப் பொழுது, the faint light at the end of the day-light—Twilight; 3. ஓர் கண்ணோய், இது கண்களுக்கு யாதொரு கெடுதியு மில்லாமலே, கண்ணினரம்பு, தரிச நரம்பு, இவைகளினி மித்தமாகப் பார்வையை மந்தமாக்கும், a sudden transitory blindness occurring without apparent lesion of

the eye, but from the disease of the optic nerve, retina etc.—Amaurosis partialis fugax.

NOTE.—In Western medicine this term 'amaurosis' from its vagueness is becoming disused. It implies partial or total loss of vision.

அந்தி மிரியன், ஓர் மரம், a tree, Common Inland Tree Mangrove—Carallia integrifolia.

அந்திய கமனம், இறத்தல், dying, going to the end of life.

அந்திய காபிம், முடிவு காலம், the last period of life; 2. சாகுங் காலம்,—the last moments preceding death.

அந்தியத்தக சுரம், சாகுங் காலத்துக் காணு மோர் அகோரக் காய்ச்சல், a severe type of fever that precedes death.

அந்தி யந்த பித்தன், இச்சி, a tree—Chinese bunyan—Ficus retusa.

அந்திய பரணி, ஓர் ஆயுள் வேத மூலிகை, a plant of the terminalia genus used in Ayur Veda.

அந்திய மட்டும், சாகும் வரை, till the time of death.

அந்தியம், மரணம், death; 2. மரண காலம், the last period preceding death, the moment of death; 3. ஓர் பூடி, a plant Cyperus (genus)—Hexastachyus communis.

அந்திய வோடாலிகா கிரகம், எட்டாம் நாளில், எட்டாம் மாதத்தில், அல்லது எட்டாம் வருஷத்தில் தாயை அல்லது குழந்தையைத் தாக்கு மோர் வகைக் கிரக தோஷம் a morbific diathesis in a child or the mother in the 8th year or the 8th month or the 8th day after delivery. It is due to the influence of an evil planet called '*Aryaka*'.

For details see கிரகதோஷம்.

அந்திர காசம், ஆகாயத்தில் சந்திர னுதிக்கும் போது கண் புகைச்சல் நீங்கியும், மற்றக் காலத்தில் கண் சிவந்து பார்ப்பதற்குப் பயமாயும், நாட் பட்டால் அதிக இருளையுங் கொடுக்கு மோர்வகைக் கண்ணோய், a disease of the eye in which the vision is clear before moonlight but dark at other times. It is a condition in which the patient sees better in an obscure light than in bright sun-light—Hemeralopia.

அந்திர கிராணி, குடற் கோளாறினு லேற் படும் இராணிக் சழிச்சல், a chronic diarrhoea due to intestinal disorders.

அந்திரக் கண் மணி, நீலக்கல், a blue stone, a precious stone of various shades of blue—Saphhire.

அந்திரக் கொடிச்சி, கந்தகம், sulphur.

அந்திர சுரம், குடலுக்குத் தாபிதங் கண்டு அதனிமித்த முண்டாகு மோர்வகைக் கடின மான காய்ச்சல், a severe type of fever characterised by morbid changes of peculiar intestinal lesions—Typhoid or Enteric fever.

அந்திர தாபிதம், குடலின் அழற்சி, inflammation of the intestines—Enteritis.

அந்திர பூரீதரம், சிறு குடலுக்கும் பெருங்குடலுக்கும் காணுந்தாபிதம், inflammation of the small intestines and of the colon—Entero-colitis.

அந்திர மயம், குடலாகவுள்ள, consisting of entrails.

அந்திர முட்டி வாயு, குடல் முட்டி வாயு, an intestinal complaint due to the deranged condition of Vayu in the system.

அந்திரம், குடல், intestines; bowels; 2. வயிற்றினுள் இரைப்பை பொழிந்த மற்றக் குடல் முதலானவைகள், the bowels and the other abdominal viscera excepting the stomach; 3. சிறுகுடல், small intestines.

அந்திரருகம், குடல்வாதம், a hernia containing a loop of the intestine—Enterocele.

அந்திர லோகிதம், சிறு பொடுதலை, a small creeper of the species of பொடுதலை,—Verbena nodiflora.

அந்திர வசனம், பச்சையாகக் காயவைத்த கொட்டைப் பாக்கு, areca-nut which is dried without boiling.

அந்திர வர்த்தமன், அந்திர விருத்தி, } குடல் விருத்தி, hernia commonly known as rupture.

அந்திர வனசம், see கொட்டைப் பாசி.

அந்திர வாதம், குடல் வாதம். அதாவது பெருங் குடலில் பற்பல வாயுக்கள் சேர்ந்து வயிறு கனத்து வலி யுண்டாகி, உப்பல், மல மூத்திரக் கட்டு, வாந்தி, மார்பு வலி முதலிய குணங்களை யுண்டாக்கும் வியாதி, a disease of the colon marked by heaviness of bowels,

pain, distension of the abdomen, retention of feces and urine, vomiting, chest pain etc. It is due to the accumulation of gases in the intestines. ; 2. குடல் சுரம் பிற் சேர்ப்படும் வலி, neuralgia of the intestine—Enteralgia.

அந்திர வாயு, குடல் வாயு, the flatulent nature of the intestines—Flatulency.

அந்திர வாயு சூலை, குடலில் வாயு சேருவதனு லேற்படும் குத்தல் நோய், இதில் சுரமுங் காணும், an acute abdominal pain due to the accumulation of gas. It is marked by fever etc.—Intestinal colic.

அந்திர விரணம், தெ குடலிற் காணு மோர் விரண நோய், an inflammation of the duodenum — Duodenitis; 2. தெ குடற்புண், ulcer of the duodenum—Peptic ulcer ; 3. குடற் புண், ulceration of the intestines—Entercicosis.

அந்திர விருத்தி, இது இருவகைத்து—1. குடல் வஸ்திப்பையின் வழியால் பிடுக்கிற்குள் இறங்காமலே ஆண் குறித் தண்டிற்கு மேற் பாகமாகக் காணும் வீக்கம் அல்லது புடைப்பு, protrusion of the bowels with an appearance of swelling just above the penis, without descending through the groin into the scrotum; hernia which has not passed quite through the orifice—Incomplete hernia. See அந்தர விருத்தி,

2. வாதத்தினால் தெ குடல் பல வீனப்பட்டுக் வஸ்திப்பையின் வழியாய்க் கிழிறங்கிக் காற்றுப்பை போற் பருத்துக் காணும் நோய், a disease in which a portion of the small intestines which is pressed down through the groin (*inguinal canal*) descends into the scrotum and becomes swollen like an inflated air bladder—Inguinal hernia (*direct*).

அந்தில், வெண் கடுகு, white mustard—Brassica alba.

அந்தி விருட்சம், தில்லை மரம், a tree, Mountain Slender Tiger's milk—Excoecaria crenulata.

அந்தி வீரகம், தெ முள்ளங்கி, wall radish—Bluemea aurita.

அந்தீ கிருதன், குருடாக்கப் பட்டவன், one who is rendered blind.

அந்தீ பூதன், குருடானவன், one who has become blind.

அந்த, கெற் பூச்சி, a small insect generally found injurious to stored paddy or other grains—Weevil.

அந்தக் கண்ணி, பினிச்சற் கண்களையுடைய பெண், a woman having ulcerative eyelids ; blear-eyed woman.

அந்தகம், வாகை மரம், a tree—Acacia sirissa.

அந்தே சாதிகம், அந்தே சாதிம், } தெற்ரு, water clearing nut tree—Strychnos potatorium.

அந்தே சோலிகம், தெ எழுத்தாணிப் பூடி, a plant with flowers like a style or style-plant—Prenanthes Sarmentosa.

அந்தை, பழய காலத்து நிறை, a standard weight used in olden days.

அந்தை மந்தை, மந்தக் குணம், sluggishness; dull-nature.

அந்தோட்டம், உதட்டி லுண்டாகு மோர் விரண நோய், a sore on the lip due to a disease, as in thrush—Labiomycosis; 2. உதடு வெடிப்பு, a crack or fissure in the lip. See கண்டோஷ்டம்.

அந்தோர், நெல்லி, Indian gooseberry tree—Phyllanthes emblica.

அந்ரகத்தி, வயிற்றுளைவு, a flux in which the stools consist chiefly of blood and mucus, accompanied with griping of the bowels—Dysentery.

அந்ரகரி, see அன்னகரி.

அந்ர கோடகன், சூரியன் the sun.

அந்ர சலம், see அன்னசலம்.

அந்ர பேதி, see அன்ன பேதி.

அந் நாட்டு வெலும்பு, மாரெலும்பு, breast plate—Sternum.

அந்நிய புட்டம், குயில், a well known bird with a melodius voice—Indian cuckoo. It is so called from its habit of depositing its eggs almost exclusively in the nests of other birds viz—the common crow, the carrion crow etc.

அந்நியம், see அந்நிய புட்டம்.

அந்நியேத்துக வாதம், உணவின் குற்றத்தினாற் பிறந்து, தோள், முதுகு, கழுத்து, கை, விலா ஆகிய இவ்விடங்களில் பரவிப் பித்தத்துடன் கூடி ஒருகாள் விட்டு மறுகாளில் வேதனையுண்டாக்கிப் பிரமை, சரம், மூர்ச்சை,

தாகம் முதலிய குணங்களையு முண்டாக்கு மோர் வாத நோய், a disease of the nervous system marked by perplexity, fever, swoon, thirst etc. It occurs every alternate day and is due to the deranged condition of Vayu, which extends through the neck, the head or the ribs. It arises from incompatible articles of diet.

அங்நீர், நாரி சுக்கிலம், a fluid discharge from the vagina; 2. பழுத் தண்ணீர், stagnant water or water spoiled from long keeping.

அப, ஓர் உபசர்க்கம், (*literally*) a particle prefixed to Sanskrit words implying inferiority, seperation, contrariety, privation etc; 2. ஏதாவது ஒரு வஸ்துவுக் கேற் பதும் சுவ்டம் அல்லது அழிவு, the privation of any object or its attribute; 3. உடம்பி னெப்பகுதியிலாவது அல்லது உறுப்பு முதலிய அதைச் சார்ந்த இனத்திற் காவது இயல்பாக உண்டான தன்மையை அழித்தல், (*In pathology*) privation of any organ or part of the body or depriving them of the nature of their attributes.

அபத வியாதியை, நோயினின் றெழுந்தவன், one who has recovered from an illness or a disease—Convalescent

அப கமம், மரணம், death.

அப கனம், அவயவம், organ.

அப காதம், கொல்லல், killing.

அப கோலம், அழிஞ்சில், sage-leaved alangium—Alangium lamarckii.

அபக்குவ புத்தி, பக்குவப் படாத அறிவு, immature understanding.

அபக்குவ போஜனம், சரியாய் சமைக்காத பண் டங்களைப் புசித்தல், eating food improperly cooked

அபக்குவம், பக்குவ மின்மை, immaturity; 2. பழுக்காமை, unripeness; 3. சீரியாமை, indigestion.

அபங்கம், கோளக பாஷாணம், a kind of arsenic.

அபசகம், சிற்றிலந்தை, small jujube tree—Scutia indica.

அப சஞ்சாரம், தொற்றத்தை மாற்றல், purifying the contagion—Disinfection.

அப சஞ்சாரி, வியாதியின் தொற்றங்களை மாற் றும் வஸ்து, a substance that changes the attributes of a disease.

அபசவ்வியம், இடது பக்கம், left side.

அபசாரம், மரணம், death; 2. அவபத்தியம், (*in medicine*) unwholesome or improper regimen.

அபசி, அக்குள், குன்குரி, இடுப்பு ஆகிய இவ் விடங்களில் உண்டாகும் ஓர் புற்று நோய், a cancer about the regions of the arm-pit, root of the penis, and the waist; 2. சண்ட மாலை, ஆதாவது சதினமும், மினு மினுப்பும் கூடி வலியற்றதாயு முள்ள முடிச் சுகளைப் போன்ற கட்டிகளைத் தாடைப் புறத் திலும், தொண்டையிலும், கழுத்தைச் சுற்றி யும், மாலைபோல் ஒன்றின் ஒன்றாக எழுப்பும் ஓர் இரண நோய், a string or a large crop of hard, glossy, painless, glandular knots gradually growing about the joints of the jaw-bones, the tendons of the neck and about the throat—Scrofula.

NOTE.—Some of these knotty formations spontaneously burst, exuding secretions; while others vanish and reappear in succession.

அபசி தும்பர், கருப்பு நிறமான அம்பர். வேறு இரண்டு வகைகளாவன;—வெள்ளம்பர், கச கசா அம்பர், black amber. The other two kinds are:—Poppy seeds amber, and white amber.

For further details see அம்பர்.

அபசு மாரச் சிரகம், குழந்தைகளைத் தாக்கு மோர்வகைக் சிரகதோஷம். இது அறிவின் மை, மிக்க அழுகை, வாயில் நுரை தள்ளல், உடம்பு நாற்றம், முதலிய குணங்களை உண் டாக்கும், a morbific diathesis common in children, arising from the evil influence of planets. It is marked by senselessness, excessive weeping, frothy saliva from the mouth, fetid smell of the body etc.

அபசு மாரம், புத்தியின் தெளிவு நீங்குதல், loss of senses or sensual feelings; 2. உடம் பி னுறுப்புக் கேற்படும் அழிவு, privation of any organ.

அபசுமார ரோகம், பித்தம் அதிகரித்து உடல் முழுவதும் பரவுவதால் நரம்பைப் பற்றிக் கொண்டு புத்தியைக் கலக்குமோர் நோய். இதனுல் பிரக்ஞையற்று, மயங்கி, பூர்வவிஷ யங்கள் மறந்து, விழி, மூக்கு, உதடு, புருவம், முதலியவைகள் சேர்ந்திறுகி, வலி யுண் டாகி, வாயில் வெண்ணுரை தள்ளி, மேற் சுவாசங் காணும்.

அன்றியும், கண்களில் இருள் கம்மியது போல் தோற்றத்தை உண்டாக்கி, விகார

மாய் உருட்டி முழிக்கச்செய்து கை கால்களே உதறத்தக் கொண்டால் முதலிய குணங்களேயும் காட்டிடும். இது தான் தமிழில் காக்கைவலி எனப்படும்.

இது சாதாரணமாய்ச், சதா சிந்தனை, துக்கம், பயம் இவைகளாலும், உடம்பிற் கொவ்வாப் பண்டங்களைப் புசித்தல், இயற்கையான வேகத்தை யடக்குதல், மாத விடாய் காலத்தில் பெண்களைப் புணருதல், இடையிடாச் சிற்றின்ப துகர்ச்சி, உடம்பை யறித்த தோஷங்கள், முதலியவைகளால் ஏற்படும், a nervous affection arising from the deranged condition of bile in the system. It directly affects the mind.

It is characterised by sudden loss of consciousness and transient loss of intelligence and the faculty of past recognitions.

The other symptoms are;—eyes, nose, lips and eye-brows are held fast, pain is felt in the muscles, froth issues from the mouth, with hazy appearance to the eyes that are fixed and staring, followed by a succession of tetanic convulsions of the limbs etc.—Epilepsy

It is due to mental strain such as, constant thinking, worry or grief, fright etc. It is also caused from extraneous circumstances such as, partaking of uncongenial articles of food and violation of regimen of conduct, repression of any natural urging of the body, intercourse with a woman in her menses, indulgence in amorous fancies etc. leading to an aggravation of the bodily humours tending to attack the brain directly. It is a disease of idiopathic origin.

See காக்கை வலி.

அபசுவாசம், ஜக்குவித வாயுக்களில் ஒன்று, one of the five vital airs. See அபானன்.

அபச் சாயை, ஆள் நிழலில் ஏற்படும் விகாரங்கள். இது ஓர் மரணக்குறி, changes appearing in one's shadow, which is a sign of approaching death ; 2. நிழலற்ற தன்மை. இது யோகிகளுக் கியலுமே யன்றிச் சாதாரணமாக மனிதர்களுக்கு ஏற்படாதது. a condition in which one does not cast a shadow of himself. This can be done only by a Yogi by making or rendering his body transparent to light, but not ordinarily by men.

அபத்தி, கண்டமாலை, scrofula, See அபஸ்.

அபச்சு மாரம், காக்கைவலி, epilepsy, 2. பைத்தியம், lunacy. See அபசுமாரம்

அபடங்கி, பத்மினி சாதிப்பெண், one of the four classes of women divided according to lust.

அபடு கரணம், புலன் குறைவு, weakness of perception by the five senses.

அபட்கை, பாம்பின் கீழ்வாய் கச்சுப் பற்களிலொன்று, one of the lower poisonous fangs of a snake.

அபட்சியம், புசிக்கத் தகாதது, that which is unfit for consumption or is unwholesome.

அப தந்திரகம், வாதா திக்கத்தினுல் மூளை தாக்கப்பட்டு அதனுலேற்படும் இழுப்புவலி, convulsions as a result of the affection of brain due to the aggravated condition of Vayu in the system—Apoplectic convulsions.

அபதந்திரக வாதம், வாயுவானது கிளர்ந்தத் தன்னிடத்தை விட்டு மூழுக்கப தத்தோடு கலப்பதனுல் மேலெழும்பி, மார்பு, தலை, நெற்றி ஆகியவைகளின் நரம்புகளைப் பற்றி, அங்கு வாதரோகையு மூண்டாக்கி, அத்துடன் கை கால் இழுப்பையும் மிகையித்து வலியவும் செய்யும். அன்றியும் இது உடம்பையும் வில்லைப்போல் வளைத்து நெட்டியிர்ப்பையும், நெஞ்சில் சுத்தத்தையு மூண்டாக்கும்.

மார்பையிட்டுக் கிழிதங்கும்போது புத்திச் தெளிவையும் அடையச் செய்யும், அப்படி கிழிதங்காவிடில் அசாத்தியமாகும்.

இது பெண்களுக்குக் கருப்பங் கலிந்த காலத்திலும், மாதக்தருதுகாலத்திலும், உண்டாகில் மரணம் ஏற்படும். இது மந்த வஸ்துக்களையும் அவபத்தியமான உணவுகளையும் உட்கொள்வதனுல் பிறந்து, நரம்புகளிற் பரவி, உடம்பின் சில பாகங்களே மரத்தல் அடையச் செய்து, ஞாபக மறதி, பிரமை முதலிய குணங்களையு மூண்டாக்கும், a nervous disease ascribed to the action of the enraged Vayu, subcharged with the deranged kapam.

This Vayu is dislodged from its natural seat or other receptacle in the body and in consequence thereof courses upwards and finds lodgment in the regions of the heart, head and the temples. It causes pressure upon those parts and gives rise to pain and convul-

அபக்ரியை, அசுத்தம், want of cleanliness; 2. கலப்பு, admixture.

அபகயம், பிணி தீர்த்தல், to cure a disease; 2. மரணம், death.

அபநாசி, மூக்கின்மை, lack of nose, congenital absence of a nose.

அபநித்திரை, தூக்க மின்மை, sleeplessness; inability to sleep—Insomnia.

அபங்கலம், கெங்கத்தாரி, false peacock's foot tree—Niebuhria linearis.

அபப் பிரசாதை, வயிற்றிற் கருவை யழித்த பெண், a female who has had a miscarriage; an aborted woman.

அப மட்டர், வட்டத்திருப்பி, velvet leaf—Cissampelos pareira. See அம்மட்டம்.

அப மரணம், அகால மரணம், which see; 2. தன்மரணம், unnatural death.

அப மார்க்கம், அபாமார்க்கம், காயிருவிச் சமூலம், the plant as a whole, Indian burr—Achyranthes aspera, 2. ஆன்ம தடைத்தேறும் வழி, the path of emancipation.

அப மார்க்கி, கெங்காயுருவி, a red species of the plant—Achyranthes. See அபாமார்க்கம்.

அப மிருத்தியு, தன்மரணம், unnatural death, as from accident, fire etc; 2. சடுதி மரணம், sudden death; 3. நோய் முதலிய காரணங்களால் ஏற்படாதமரணம், death for which no causes, such as a disease etc. could be assigned; 3. ஆபத்து, a great danger; 4. நோய், illness (*from which a person recovers*).

அப மிருத்து, see அபமிருத்தியு.

அபயம், செவ்வியம், common or black pepper —Piper nigrum; 2. ஓர் வாசனைப்புல், a kind of scented grass, see அபயலை.

அபயலை, விஷமிச்சம் வேர், khus khus grass —Andropogon Muricatus.

அபயன், உடம்பில் எலும்புகளைப் பற்றிய நோய் களைப் போக்கும் கருப்பு நிறமான வேர் வகைக் கடுக்காய். இது பொதிகை மலையி லுற்பத்தி யாகும், a species of black Indian myrobalan capable of curing diseases affecting the bones in the system. This is said to be found on Pothigai Hills (*Tinnevelly*)—Chebulic Myrobalan.

See அபையன்.

அபயாதி கல்கம், சுவாசம், விக்கல் ஆகிய இவை களுக்குச் சுக்கும் கடுக்காயும் சேர்த்துத் தயாரித்த ஓர்வகைப் பிசபிசுப்பான மருந்து, a paste of dry ginger, and country gall-nut prescribed for hard-breathing and hiccough.

அபயாரிட்டம், சுரக்கட்டி, அசீரணம், இராணி, மார்வலி, காமாலை, நீர்கலிசை, குடற் பூச்சி, முதலிய நோய்களுக்குக் கொடுக்கு மோர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic preparation given in cases of enlarged spleen, impaired digestion, chronic diarrhoea, heart-disease, jaundice, ascites, worms in the intestines etc.

அபர காத்திரம், கால், leg; 2. பின் கால், hind leg (*in qudrupeds*)

அபரக் கிரியை, பிரேதச் சடங்கு, funeral rites—Obsequies.

அபரங்கப் பருப்பு, உளுந்து, black gram—Phaseolus radiatus.

அபர ஞானம், knowledge obtained from study but not practical or divine wisdom; 2. வால ஞானம், superficial knowledge.

அபரஞ்சி, ஒடவைத்த பொன், virgin or pure gold of 24 carats; 2. தங்க ரேக்கு, gold leaf used in setting precious stones; 3. கம்மாறு வெற்றிலை, a species of dark green, and pungent thick betel-leaf.

அபரஞ்சித் தூள், தங்கப் பொடி, gold dust; 2. பொன் மணல், gold ore.

அபரதன், வெடியுப்பு, nitre — Potassium nitrate.

அபர மார்க்கம், see அபா மார்க்கம்.

அபரம், முதுகு, back or the region of the spine; 2. பின், back; 3. பின் பக்கம், back portion; 4. யானையின் பின்கால், the hind leg of an elephant; 5. பின், latter.

அபர ராத்திரம், see அபரார்த்திரம்.

அபர வங்கம், பின்னிசை, அதாவது உடம்பை வில்லைப்போல் பின்புறமாக வளைக்குமோர் வாத நோய், a tetanic condition of the muscles, especially of the back, whereby there is an arching backward of the trunk which thus rests upon head and heels—Opisthotonos.

NOEE.—This condition is generally seen in tetanus, hysteria, hydrophobia, strychnine poisoning, rheumatism etc. See also தனுஸ்தம்ப வாதம்.

அபர வயசு, முதிர்ந்த வயது, advanced age.

அபர வலி, முதுகு வலி, pain in the back—Notalgia.

அபரா, நஞ்சுக் கொடி, navel string—Umbilical cord.

அபராங்கம், உடம்பின் பின்பக்கம், the posterior or back portion of the body in man.

அபராசிதம், விஷ்ணுக் கிராந்தி, Vishnu plant,—Clitoria ternatia alias Evolvulus alsinoides.

அப ராணம், பிறபகல், that part of the day which follows the noon; 2. அந்திப் பொழுது, the fourth part of the day, calculated from 3-12. P. M. to 6 P. M.

அப ராத்திரம், கடைச் சாமம், the last part of the night.

அப ரான்னம், மத்தியானத்தை யடுத்து வரும் ஆறு நாழிகை கொண்ட நேரம், that period of the day which follows noon up to 2-24 p. m.

அபரிச குட்டம், இரத்தியைப் போல் உடம்பு முழுவதும் வீங்கி வெடித்து அதினின்றும் கறுப்பு இரத்தம் வடிந்து, தொடக்கூடாத வலியை யுண்டாக்கு மோர்வகைக்குட்டம், a kind of leprosy analogous to sypbilis, attended with swelling, ulceration and a discharge of venous blood. The prodromal symptoms are associated with hyperesthesia of the skin.

அபரிச் சடம், கருப்பம் பூரணமாகுமுன் பிறத்தல், not born fully developed; 2. அகாலப் பிறப்பு, premature birth.

அபரிச் சதம், திருவாணம், nakedness—Nudity.

அபரிதை, சம்போக மறியாத பெண், a woman who has had no carnal knowledge of man—A virgin or an unmarried woman.

அபரி பூதம், முதிராதது, that which is not matured; 2. திமிங்கிலம், whale.

அபரி மிதம், அளவின்மை, immeasurableness; 2. எல்லை யின்மை, unlimitedness.

அப ரூபம், அவலட்சணம், gross deviation from beauty; disfigurement; deformity.

அபரை, see அபரா.

அபல நாடி, குறை நாடி, feeble pulse—Arachnoid pulse.

அபலந் தரு, பழங்கொடாத மரம், a tree not bearing fruit.

அபலம், பலனின்மை, barrenness; 2. பல வீனம், want of validity — Weakness; 3. மலடி, unfruitfulness, unproductiveness; 4. திமிங்கிலம், whale; 5. ஆற்றலரி, a plant—Tamarix indica; 6. சோற்றுக் கற்றாழை, aloe (*Aloe perfoliate*); 7. ஓர் பூடு, a plant—Tapia crataeva.

அபலன், பலவீனன், aweak man, an invalid.

அபலை, பெண், woman.

அபல் முசுக்கு, (*Hind*) கஸ்தூரி வெண்டை, musk bendy—Hibiscus abelmoschus.

அபல்லியம், நோய், sickness.

அபவம், see அபலம்.

அபவரம், நோயை யுண்டாக்கும் பேய், a demon causing illness.

அப வருக்கம், முத்தி, final emancipation of the soul from bodily existence; final beatitude; 2. பிறப்பற்றல், exemption from further transmigration.

அபவனம், காற்றில்லா விடம், an ill-ventilated place; 2. நந்த வனம், flower-garden.

அப வாரணம், மரணம், death.

அப வித்திரம், அசுத்தம், uncleanliness.

அப வித்திரன், சுத்த மில்லான், one who is not clean.

அபனுதி, நிலத் தூளி, which see.

அபாக சாகம், இஞ்சி, ginger—Zingiber officinale.

அபாகம், முதிராமை, immaturity; 2. சமியாக் குணம், incapability of digesting food; the state of indigestion.

அபாகி ரோகம், உடம்பில் பல விடங்களில் கருகி யுலர்ந்த கொப்புளங்களைப் போலெழும்பி, வெகுநாள் வரைக்கும் இறக்கங் கொள்ளாமல் துன்பத்தை விளைவிக்கு மோர் அம்மை நோய், an abortive form of variola in which the vesicles which spread over several parts of the body dry before reaching the pustular stage and give them a blackish appearence. It takes a long time for the falling off of the scabs or crusts and thus puts the patient to a great deal of suffering—Variola vaccina atrophica. See also கல்லம்மை.

அபாங்கம், அவயவக் குறைவு, absence of limbs; organic defect; 2. கடைக் கண், the outer corner of the eye.

அபாங்க மர்மம், அபாங்க ரகசியம் அதாவது மேல் வாய், கண், மூக்கு இவைகளின் நாடிகளுக்கு ஏற்படும் அதீத சம்பந்தம், a pathologic formation of a passage between the arteries of the upper mouth, eyes and the nose — Anastomosis of the infra-orbital artery.

அபாங்கம், கடைக்கண், outer corner of the eye; 2. கடைக்கண் பார்வை, looking askance.

அபாடவம், நோய், disease; 2. அசுந்தக்கேடு, deviation from beauty, ugliness.

அபாதரன், வெடி யுப்பு, nitre — Potassic nitrate.

அபாநம், see அபானம்.

அபாபம், மரணம், death.

அபா மாருத மூலி, வெண்ணுயுருவி, a white species of நாயுருவி, a plant, Indian burr —Achyranthes aspera.

அபாமார்க்க சாரம், நாயுருவிச் சத்து அல்லது சாம்பல், the essence or ashes obtained from the plant, Indian burr.

அபா மார்க்கம், see அபாமாருத மூலி.

அபா மார்க்க ஸ்நானம், உடம்பில் நாயுருவியைத் தடவிக் கொண்டு செய்யுமோர் குளியல், a kind of scientific bath after smearing the body with the juice of the plant, Indian burr—Achyranthes aspera.

அபாரணக் காலம், உண்ணத் தகாத வேளை, time not intended for taking food; untimely.

அபாரணை, உண்ணுமை, abstinence from food.

அபா லங்கம், கொன்றை, a plant—Cassia fistula.

அபாவம், கடுக்காய், gall-nut — Chebulic Myrobalan—Terminalia chebula.

அபாவ யோகம், காரணங்களுக் கெட்டாத பிரமத்தில் மனேலய மாவதற்காகச் செய்யும் ஐவகை யோகநிலைகளி லொன்று, one of the 5 stages of Yoga intended for bringing about the union of the mind with the Divine spirit.

NOTE.—The mind will have to be raised step by step from the gross state to the subtle and then to the casual state and finally to Samadhi (highest illumination.)

அபானக் கடுப்பு, மலவாய் கடுத்தல், irritation of the rectum.

அபானக் காந்தல், மல வாயிலின் எரிச்சல், inflammation of the anus or the rectum—Proctitis.

அபான சுத்தி, வஸ்திச் சிகிச்சை, treatment by enema; 2. மல வாயிலைச் சுத்தி செய்தல், the cleaning of the rectum.

அபானத் தான வித்திரிதிக் கட்டி, see அபான வித்திரிதி.

அபானத் துவாரம், மல வாயில், the opening through which the excrement is expelled—Anus.

அபானப் பிரயோக நீர், மலசுத்தியாக வேண்டி ஆசன வாயுள் புகட்டும் நீர், a liquid substance injected into the lower intestines, to cleanse the bowels—Clyster enema.

அபானப் பிரயோக மருந்து, ஆசன வாயின் வழியாய் உள்ளே புகட்டும் மருந்து நீர், a liquid form of medicine syringed or injected into the rectum—Enema.

அபான மால், அபானவாயு, which see.

அபானம், கடுக்காய், gall-nut or Chebulic myrobalan—Terminalia chebula; 2. குதம், anus; 3. மூலாதாரம், (*in yoga philosophy*) one of the six psychic centres of the human body i.e., the posteriors including the hip—Pelvic plexus. See அகண்ட ரசம்; 4. கீழ், down.

அபான ரோகம், பொதுவாகக் குதத்தில் உண்டாகும் நோய்கள், diseases of the rectum or the anus, in general.

அபான வாயு, தசவாயுக்களி லொன்றுகிய கீழ் நோக்கிச் செல்லும் வாயு, இது மலக்குகையிடமாகக் கொண்டு, உச்சத் தலத்தில் நின்று, இடுப்பின் பூட்டு, மர்மஸ்தானம், அடிவயிறு, அடித்தொடை ஆகிய இவ்விடங்களிற் பரவி, விந்து, நாதம், மலம், மூத்திரம், கருப்பம் ஆகிய இவைகளை வெளிப்படுத்தும். இது விகாரப்படின், கடுமையான மூத்திர நோய்களையும், குடல் நோய்களையு முண்டாக்கும். இவ்வாயு, வியானன் என்னும் வாயுவோடு கலக்கப் பிரமேகம் முதலிய விந்துவைப் பற்றிய ரோகங்களு மேற்படும், one of the ten vital airs, having a tendency to pass downwards. It emanates from the region of the pelvic plexus and extends over the genitals, abdomen, pelvic region etc—Ventris crepitus. It form

the active agent in the discharge of semen, menstrual blood, fecal matter, and urine and also in expelling the contents of the womb.

It is identical with the force of the Hypogastric plexus. An enraged condition of this Vayu tends to bring on serious diseases that are peculiar to the urinary bladder and the distal portion of the large intestines. Combining with Vyana, it may produce urinary disorders and disorders of the seminal fluid (*Prahmeha*)

அபான வாயுக் கடுப்பு, குட்டினலும், குதத்தி லுண்டாகும் இரணத்தினலும், எற்படு மெரிச் சல், a burning sensation due to excess of heat and ulceration of the anus—Rectitis or Proctitis

அபான வாயுக் கெரிச்சான், புகையிலை, tobacco as an agent for driving out wind through the anus.

அபான வித்திரிதி, குதத்தில் எழும்பி மிக்க வலியை யுண்டாக்கு மோர்கட்டி, an abscess of the anus causing intense pain —Marginal abscess.

அபான விப்புருதி, குதத்தி லெழும்பு மோர் வகைச் சிலந்தி, an ulcer inside the rectum or at its extremity. *c. f.* பவுத்திரம்.

அபான விரிவு, ஆசனவாய் விரிதல், dilatation of the rectum or of the anus—Proctectasia.

அபான விருத்தி, குடலில் அபானவாயு அதிக ரித்தல், a condition marked by the presence of excessive gas in the intestines—Flatulence.

அபான வேர், மூல முளை, an eversion of the rectal mucous membrane observed in cases of piles.

அபானன், தொப்புளின் கீழ், நேராகக் குய்யத் திற்கும் குதத்திற்கும் மத்தியே யுள்ள மூலா தாரப் பகுதியில் இருந்துகொண்டு தன் தொழில்க டடத்தும் அபான வாயு, the vital air that discharges its functions taking its seat in the sacral region just opposite to that part below the navel, and between the anus and the genitals. See also அபானவாயு.

அபானியம், குடிக்கத் தகாதது, that which is unfit to drink.

அபானேந்திரியம், see அபானவாயு.

அபி, ஓர் உபசர்க்கம் இது வினைச் சொற்களோ டு கூடுங்கால், அசைதல், போகுதல், இட்டு தல், ஆகிய வித் தொழில்களைக் காட்டும், as a prefix to verbs it expresses the notion of moving, going or approaching.

2. பெயர்ச் சொற்களோடு சேருங்கால், இது, மேன்மை, மிகுதி, ஆகிய விசேஷணங்களைக், காட்டும், as an intensive prefix to nouns, it expresses superiority, intensity or inferiority, etc. *e. g.* அபிவிருத்தி, அபிகா யம், அபிசாரம்.

அபி கரணம், செவி பாகம், the region of the ears.

அபி கருஷணம், தேய்த்தல், rubbing, anointing.

அபிகாத சேத்துமம், இருமல், இளைப்பு, சுரை, மூதலியவைக ளுண்டாகி வயிறு மந்தித்து, உடம்பு வற்றி, உரு வழிந்து, பசித்தைக் குறைக்கு மோர் கோய், a phlegmatic disease attended with cough, fatigue, phlegm etc. Its symptoms are :—loss of appetite, emaciation, loss of strength denutrition, change of features etc.

அபிகாத சுரம், கத்திக்காயம், இரணம் முதலிய காரணங்களினலும், நெருப்பண்டை யிருந் து வேலை செய்தல், பனியில் நிறுதல், அதிக கடை, உழைப்பு, மூதலியவைகளாலு மேற் படு மோர் காய்ச்சல், a fever arising from shock due to various causes such as, knife-injury, ulcers, working in close proximity to the fire-place, excessive walking, exertion or strain, etc.

அபிகாத சூலை, கல் மூதலியவைகளால் செவி யில் அடியுண்ட காலத்தில் அதனுள் சீழ், இரத்தம் முதலியன சேர்ந்து, குத்தலி யுண் டாக்கு மோர் வகைக் காது நோய், a disease of the ear marked by darting pain arising from the collection of pus and blood inside. It is due to traumatic causes—Otalgia or Otitis.

அபிகாத சோபை, இரசகந்த பாஷாணம், சே ராங் கொட்டை முதலிய மருந்துகளினு டம்பி லுண்டாகு மோர்வகைச் சோகை நோய், a form of anemia due to the action of certain poisons, such as Mercury, sulphur, arsenic, marking nut etc.—Toxic anemia ; 2. ஆயுதக் காயத்தினல் இரத்த வொழுக் கேற்பட்டி அதனல் உண் டாகும் சோகை, anemia due to, the loss

of blood from an injury or a wound—Traumatic anemia.

அபிகாதசம், அடி அல்லது காயத்தினு லேற் படும் அதிர்ச்சி, shock due to external injury or blow—Traumatic shock.

அபிசாதம், வேதனை, pain, suffering; 2. காய முண்டாக்கல், inflicting injury; giving a blow; 3. வெடிப்பு, பிளவு, fissure, crack; 4. வருத்தம், torture, affliction; 5. அதிக உழைப்பு, strain (*physical*); exertion; 6. கருப்பைச் சுருக்கம், uterine contraction; 7. பறவைகளுக் கேற்படும் சுரம், fever in birds.

அபிசார வாதம், அதிவேக நடை, வாகனங்க ளோரி மிசையிற் செல்லல், மல்புத்தம் செய் தல், நெடுந்தூரஞ் செல்லல், அதிக உழைப் பு, முதலிய செய்கைகளி ஞற்பம்பு ரோங்க முடியாத காம்புகளுக்கு அதி பேற்பட்டி, வலி, ஆயாசம், பதிக்கலாம்பர் இடைதல் இளைப்பு, முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் வாத நோய், a functional disorder of the nervous system not dependant on any discoverable lesion, but supposed to arise from excessively fast walking, riding, wrestling, long journey, and undue exertion. etc. It invades the whole system and is marked by pain, exhaustion, prostration fatigue, etc.

அபிகாமின், புணருதல், புணர்ச்சி, sexual intercouse, copulation.

அபிகாயம், ஓர் கொடிய காசநோய், asthma of a virulent type; 2. உள்ளழற்சி, internal inflammation, as of the lungs in consumption.

அபிகாரம், தூவல், scattering over; 2. தெளித் தல், sprinkling.

அபிசங்க சுரம். (அபிசங்கம்=தழுவுதல்) பூதா வேசம், ஒளடதம், விடம், கோபம், பயம், திக்கம், காமம் ஆகிய இவ்வேழ வகைக் காரணங்களை முன்னிட்டுச் செயற்கையா யுண் டாகும் காய்ச்சல், a fever due to the excited condition of the body, arising from any of the following seven causes viz,—demoniac frenzy, virulent medicine, poison, anger, fear, distress and passion —Idiopathic fever.

NOTE.—In certain cases of fever of this type, a young beautiful girl is asked to take the patient into a firm embrace as a means of cure.

அபி சந்தம், see அபிசியக்கம்.

அபிசயந்தி போசனம், உடம்பைப் பருமனாக்கச் செய்யக் கூடிய தயிர் முதலிய உணவுப் பொருள்கள், articles of food such as, curd etc, likely to inflate the system.

அபி சார்ச்சனம், கொலை, murder.

அபிசலம், புளிப்பேறிய கஞ்சி, sour rice-water.

அபிசாங்கி, அதினி சாதிப் பெண், the last of the four classes of women divided according to lust.

அபிசாப சுரம், சித்தர்கள் யோகிகள் முதலிய பெரியோர்களின் கொடிய சாபத்தினால் ஏற்படும் காய்ச்சல், இது பூர்வ கருமத் தீர்குத் தக்கபடி வந்து சேரும், fever from severe curse of Siddhars, Yogis and such other great men. It comes on according to one's Karma.

அபிசார சுரம், ஆரிய கொள்கைப்படி, மந்திரம், தெபம், ஓமம், முதலியவைகளினால் எழும் சுரம். இது அதர்வண வேதத்திற் சொல்லி யுள்ள மாரண மந்திரங்களைக் கொண்டொரு வன் பேரைச் சொலலிச் செய்தலினால் பிறக்கு மெனச் சருதப்படும், according to the *Aryan science*, it is a kind of fever ushered in through the dynamic forces of deadly incantions or through the performance of magic, meditation, sacrificial rites etc. It is supposed to be caused by chanting the name of the intended party along with the magic spell contemplated in the Atharvana Veda with a view to strike a mortal blow at him.

2. சித்தர் நூல் கொள்கைப்படி, அஷ்ட கருமங்களிலொன்றுகிய மாரண மந்திரத்தைக் கிரமப்படிச் செபித்து, அதனால் ஒருவனுக்கு வினையிக்கும் சுரம். இதனால் உடம்பு முழு மையும் கொப்புளங்கள் தோன்றி, சன்னி பாத சுரத்திற்குரிய குணங்களைக் காட் டும், இது மணிமந்திர மருந்துகளினாற் குணப் படும், according to *Siddhar's Science*, it is a fever brought about by chanting one of the eight kinds of magic incantation contemplated in the Mantric science of Siddhars called "Attakaruma Siddhi". *Psychologically*, it is known as 'Black art'. It is said to develop boils all over the body followed by the symptoms of typhoid fever. It can only be

cured by a combined treatment of magic and medicine.

அபிசார மந்திரம், மாரண மந்திரம். ஒருவனுக்குத் தீங்கிழைக்க வேண்டி இதை ஓமத்தினாலும் யந்திர தாபித்தாலும் செய்து முடித்தல், இதனால் சித்தப் பிரமை, ஆசை, வெறுப்பு, மரணம் முதலியவைக ளேற்படும், a magic for a malevolent purpose. It is practised with sacrificial fire or with spells and magic diagrams and is supposed to bring on or produce mental aberration, love, hatred, paralysis, and death; 2. மோகன மந்திரம், one of the eight kinds of magical enchantments by which superhuman powers are attained—the power of bringing about libidinous fascination by magic.

அபிசாரம், மோகனம், see அபிசார மந்திரம், 2. மரணம், death; 3. மாரணம், black art for pu poses of invoking death; 4. சூனியம், அல்லது பில்லி, magic practised to bring about insanity, disease etc; employment of spells for a malevolent purpose.

அபிசாரி, மோகங் கொண்ட பெண், a woman inspired by lust or sexual appetite; 2. மோகன மித்தைக் காரன், a magician having the power of chanting mantrams to excite lustful feelings or desires in a person; 3. வியபிசாரி, a prostitute.

அபிசாரிகை, அயலானோடு சம்போகஞ் செய்த பெண், a woman who had had illicit intercourse.

அபி சாரிச்கை, பிறருக்குக் கொலை, காமம் பைத்தியம் முதலிய தீங்குகளை விளைப்பதற்காக வேண்டிச் செய்யும் மந்திர சாதனை, the practice of black art with the aid of magical enchantments for purposes of bringing about death, lust, lunacy or other evil effects in a person.

அபிசிந்தி, (*Hind*) மாசிப் பத்திரி. இது ஒரு யுளைப் பெயர், a Hindustani term for Santonin wood—Artemesia absinthium.

அபிசியந்தம், வாயுவினு லேற்படும் ஓர் கண் ணோய், ophthalmia due to the action of deranged Vayu and it is attended with pricking pain, horripilation of the eye lashes and irritation of the eyes—Conjunctivitis.

See அபிடியந்தம்.

அபிசுதம், கஞ்சி, rice-water.

அபிசூரம், ஏவலினை லுண்டாகுங் காய்ச்சல், a fever caused by magic spells.

See அபிசார சுரம்.

அபிடவம், see அபிசவம்.

அபிடி யந்தம், கண்ணின் பலக்குறைவு, weakness of the eye.

அபிட்டம், இரசம், quick silver.

அபிஷதம், அபிதம், } See அவடதம்.

அபிஷியந்தி, உடம்பினில் உள்ள நாளங்களில் பிசபிசப்பையும், அதனால் கை கால் கனமையு முண்டாக்கு மோர் சிலேட்டுமம், anything that produces a sliminess in the channels and a consequent heaviness of the limbs; 2. நீர் கசியச் செய்தல், causing defluxions or watery effusions.

அபிஷேகப் பால், பால், இரசம் முதலியவை களைக் கொண்டு கொங்கணவர் முறைப்படி தயாரித்த மருந்து. இதனால் காயசித்தி, வாதசித்தி, முதலியவைக ளுண்டாகும். சுழி முனை திறக்கும். இதை நவ லோகத்தில் தெளித்துக் காய்ச்சப் பொன்னாகும், a mercurial preparation obtained by boiling milk and mercury, with other ingredients for purposes of rejuvenation and transmutation of metals by a mystic process, as described in Konganava's work on Alchemy; 2. மதி யமிர்தம்,

"மேலான அபிஷேகப்பாலே யுண்டால்
விளைக்தேழு நாளிலே காயசித்தி."
(கொங். வாத. காண்.)

an ambrosial fluid supposed to be oozing in drops from the opening behind the uvula during the advanced stage in Yoga. It is said to promote longevity.

See அமுத நிலை.

அபி ஷோரா, பொட்டி யுப்பினால் சில்லிட்ட குடி நீர், water cooled by means of a solution of saltpetre.

அபிஷோலா, ஷர்பத்தினால் சில்லிட்ட குடிநீர், water cooled by syrup, a solution of sugar combinedwith other drugs.

அபிசுபம், மிகுந்த வெப்பம், extreme heat.

அபிதான சோசம், ஓர் வடமொழி யகராதி, a Sanskrit medical dictionary.

அபிதான சிந்தாமணி, ஏம சந்திரன் என்பவ ரால் செய்த வோர் வடமொழி அகராதி, a Sanskrit dictionary of synonyms by Hemachandran.

அபிதான சூடாமணி, காஸ்மீர தேசத்தில் வசித் தவந்த சுரஹரி யென்னும் பண்டிதரால்

மூலிகைகளின் உபயோகங்களைப் பற்றி சிறப் பாக வடமொழியில் எழுதப்பட்ட ஓர் பெரிய வைத்திய நூல். இந்நூல் மேற்படி தேசத்து அரசன் ஆசரயினால் 700-கி. பி. யில் எழு தப்பட்டதால் இதற்கு இராஜ நிகண்டு என் னும் பெயர், an excellant work on Materia Medica compiled by Narahari of Cashmere. It is a glossary of medicinal substances with specifications of their virtues. It is also known as Raja Nigandu for, it was composed under the patronage of the king of Cashmere in 700 A. D.

அபிதானம், அபிதான கோசம், which see; 2. நிகண்டு, a vocabulary of synonyms; a dictionary; 3. சலாகை, a surgeon's probe.

அபிநய நூல், காமக் குறிப்பைப் பற்றிய வேர் நூல், a treatise on gestures of lust or of passion.

அபிநயம், காமக் குறிப்பு, indication of sexual passion by gestures viz. movements of the eyes, attitude of the breast etc,

அபி நாகனம், கண்கட்டு, bandage over the eyes.

அபி நாகிதம், தேத்தான் கொட்டை, water-cleaning nut—Strychnos potatorum.

அபிநாச சன்னி, see அபிநியாச சன்னி.

அபிநாசி, see அபீனசம்.

அபிநித மாது, பத்மினி சாதிப் பெண், the first of the four classes of women divided according to lust, chastity etc.

அபிநியாச சன்னி, அகோரமாய்ச் சுரங்காய்ந் து, பசியின்மை, முக பளபளப்பு, உடம்பு

வலி, மேற்சுவாசம், பலவீனம், பஞ்சேந்திரி யத் தன்மைக் குறைவு, மயங்கிய நித்திரை, அறிவின்மை, முதலிய குணங்களைக் காட்டு மோர் வகைச் சன்னிபாத சுரம்.

இது வாத பித்த சிலேட்டுமம் சமமாக அதிகரிப்பதனை யுண்டாகி, 15-நாளைக்குள் மர ணத்தை யுண்டாக்கும், a kind of typhoid fever characterised by high temperature, loss of appetite, glossiness of face, pain all over the body, hard-breathing, weakness, depression of vital powers of the five sensory organs, somnolence, loss of consciousness etc.

It is said to be due to a disordered state or abnormal condition of the 3 fluids (*humours*) † prevailing in the system.

The incubation period varies from one to fifteen days.

NOTE.—A case of சன்னிபாத சுரம் attended with somnolence is known as அபிநியாச சன்னி.

அபிநியாச சுரம், உட்காங்கை, நிறல் குன்றல், பசி நீங்கல், முக பளபளப்பு, பேச்சின் மை, பஞ்சேந்திரியத் தன்மைக் குறைவு, மயங்கிய நித்திரை, மற்றும் சன்னி பாதத் திற்குரிய குணங்கள், முதலியவைகளுடன் கூடிய சுரம், a fever accompanied by a slight or imperceptible rise of the bodily heat or a slightly sub-normal temperature, dulness of complexion, loss of appetite, glossiness of face, loss of voice, loss of vital powers of the sensory organs, somnolence or subcomatose state

† According to the physiological doctrine of Indian medical science, the air (*wind*), bile and phlegm are the three supports of the human system and that without those three humours (as they are termed) and the blood, an individual could not exist, and if they get deranged, disease or death would be the result. In pathology also it is explained by the Hindus that the principles are similar to those furnished in Physiology.

The harmony of the said humours of the body is also considered liable to derangement and it is also believed that diseases at one time arise from a relative increase of one or more of the principal humours and at another time from the dimunition of them.

This doctrine of Humoural Pathology was in vogue at one time over a great part of the globe and among Hindus also. It is still universally believed and followed especially by the Indian Hakeems and Vaidyans of the present day.

Even in Europe, this doctrine was believed in by all sects and all theorists until the commencement of the eighteenth century and it was also very zealously defended by the Greecian doctors viz. Hippocrates and Galen.

The fall of the Galenic School paved the way for the growth of the Western Medicine which began with the establishment of the Medical School at Salerno and has been gaining ground until the present day.

For fuller details see under நிதோசம்.

and other concomitant symptoms of typhus fever—Ardent fever.

See அபினிபாத சன்னிபாத சுரம்.

அபிநியாச வாதம், பிராண அபான வாயுக்கள் வாத பித்த சிலேட்டுமங்களை அதிகரிக்கச் செய்வதனால் அதிக சுரங்காய்ந்து, காதடியில் வீக்கத்தை யுண்டுபண்ணும் ஓர் வாதநோய், a rheumatism marked by high fever and swelling below the lobes of the ears.

It arises from an abnormal increase of the three humours as a consequence of the vital airs Prana and Apana prevailing upon the region of the ear.

அபி நீலம், மிகக் கருப்பு, very black or dark.

அபிந் நியாசம், see அபிநியாசம்.

அபி பிங்கலம், மிகச் சிவப்பு, very red or reddish brown.

அபி மந்தம், கண்ணோய், a disease of the eye.

அபிமந்தி ரணம், மந்திரித்தல், to treat by magical enchantments.

அபி மந்திரம், செபித்தற் குரிய மந்திர பீசம், a formula or prayer for working a charm.

அபிமானம், தத்துவ நூலின்படி இது, அகங்காரத்தினுடைய தொழிலே அதாவது தனக்கே ஏற்படும் மமதையைக் குறிக்கும், *In philosophy* it refers to Egotism or self conviction i. e belief in self.

அபிமான விருத்தி, அகங்காரம், egoism.

அபிமானித்தம், புணர்ச்சி, copulation; sexual intercourse.

அபி யங்கம், தைலந் தேய்த்தல், rubbing over the body with oil—Unction; ancinting or applying an oil or ointment with friction—Inunction.

அபி யந்தரம், உள், inside.

அபிரங்கி, கரு நெல்லி, black-berried feather-foil — Phyllanthus reticulatus; 2. கீழ்ப் பூலா, a species of Phyllanthus reticulatus.

அபிராமஞ்சி, சடா மாஞ்சில், a plant—Valeriana jatamansi,

அபிராமி மூலி, சார்வரை, a plant—Trianthema decandra.

அபிருத்தம், மேக நோயினால் ஆண் குறியின் முன்தோலில் ஏற்படும் சுருக்கம், the retraction of the prepuce behind the glans penis—Paraphymosis.

See also திருத்தப் பிரகாசம் and திருத்தமணி.

அபிரேகம், அபிரேக்கு, } See அப்பிரகம்.

அபிவாக தாலம், நிணநீர்த் தாரை முடிவு, the terminal ducts of the lymphatic gland; 2. சோனத்தினின்று வெளிவரும் நிணநீர்த்தாரை, the efferent vessels of the lymphatic gland—Vasa efferentia (*Lymphatica*).

அபி வியாதம், விழுங்குவதற்காக வாயைத் திறத்தல், opening one's mouth for swallowing.

அபிற் சாந்து, பூஞ்சாந்து, a tree bark sold in the bazaars.

அபிற் சீரம், சிற்றீந்து, the dwarf date palm—Phoenix humilis.

அபினி, கசகசாப் பால். இது கசகசாச் செடியின் முதிராத காயைப் பிறி அதினின்று வந்து உறைந்த பால். இந்தியாவில் உற்பத்தியாகும் அபினி இரண்டு வகைப்படும். 1. மால்வா அபினி அல்லது பால் அபினி 2. பாடலிபுரத்தபினி. மாளவ தேசத்து அபினியைப் போல், ஊதா நிறமா யிராமல் பாடலிபுரத்தபினி மிருதுவாயும் சிறிது கசப்பாயும், புகை வாசனை யுள்ளதாயு மிருக்கும்.

இது நமது தேசத்திற்குப் பூர்வத்தில்அரேபியர்களாற் கொண்டுவரப் பட்டதெனக் கருதப் படுகிறது. அபினியின் சத்தை ஆங்கிலேயர்கள் மார்பைன் என்று சொல்லுவார்கள். உயர்தரமான அபினியில் நூற்றுக்கு எட்டு அல்லது ஒன்பது வீதம் மார்பைன் என்னும் போதை வஸ்து அடங்கி யுள்ளது. இதைச் சீனத்தார்கள் விசேஷமாய் உபயோகிக்கிறார்கள்.

இம் மருந்து சாதாரணமாய்ப் போதையை உண்டாக்குவ தற்காகவே உபயோகப் படுத்தப் படுகிறது. இதை வழக்கமாகச் சாப்பிட்டால் வயிறு சுருங்கு மெனக் கருதப் படும். இதை வைத்தியத்தில் பல விதமாக உபயோகப் படுத்துவ துண்டு. சிறிய அளவில் உத்தீபன மருந்தாகவும், மயக்கத்தை உண்டாக்கவும், நோய்களை ஆற்றுவதற்கும், உபயோகப்படும். கருப்பையி லிருந்து வரும் இரத்தப் பெருக்கை இது அதிகப்படுத்தும். சிறிது அதிகமாகக் கொடுக்க, மேற்சொண்ட பெருக்கை முற்றிலும் நிறுத்தும். அன்றியும், இதைத் தூக்கத்தை யுண்டு பண்ணுவதற்கும், தானியிருத்தும் காய்ச்சலுக்கும், சன்னி, வலிப்பு இவைகளைச் சாந்தப் படுத்

தலும், நிதமேறிக்கும், கொடிப்ப தண்டி. இதற்குச் சுரப்பு நீர்களே வற்றச் செய்யும் குணமு முண்டி. ஆகவே இதைப் பேதி, வாந்திபேதி, வயிற்று வலி, அதி மூத்திரம், மத மூத்திரம், காது வலி, நீரடைப்பு, நீரொழிச்சல், பல்வலி முதலியவைகளுக்கும் கொடுப்ப துண்டி. வாத நோய்களிலும், இதைச் சாராயத்திற் கலந்து பூச்சு மருந்தாகவும் உபயோகிப்ப துண்டி. சமத காட்டு வைத்தியர்கள் இதைப் பூரணி முதலிய லேகியங்களில் தாராளமாய் உபயோகிப்பார்கள். குறைந்த வளவில் இதை மனக் கொள்ச் செய்யும், காடி நடைக்கும் கொடுப்ப துண்டி. புளித்த தயிர், சுண்ணும்புநீர், முதலான வஸ்துக்கள் இதற்கு மாருகக் கொள்ளப்படும்.

நோயின் வலியைச் சாந்தப் படித்தும் குணத்திலும், உடம்பு இளக்கச் செய்யும் நோய்களிலும், இது மிகச் நெருங்கிய மருந்தாகக் கொள்ளப்படும். இது ஆயுளை வீடிக்கச் செய்வதிலும், உடம்பை வலுவடையச் செய்வதிலும் மிக்க மேன்மை வாய்ந்ததெனச் சொல்லப்படுகிறது.

இது உடற் கூற்றின் மாறுபாட்டை மதத்தைத் தெழுத்தனத்தைத் தடுப்பதில் நெருங்கிய மருந்தென நம்பப் படுகிறது. மிக்க வளவில் இது கொடிய நஞ்சுத் தன்மையது. மரணத்தை யுண்டாக்கும், the milky sap of poppy seed—Affium. It is the concrete inspissated juice of the plant obtained by scratching immature poppy capsules and not the foliage.

The opium obtained in our country (*India*) consists of two varieties. The first variety is known as Malwa opium. The second variety is called the milk opium or the Dhooth opium which is very soft, bitter and darker in colour.

The use of the drug opium is considered to have been introduced into India by the Arabs. The active principle in opium is known in English as Morphine. The best opium contains eight to nine per cent of morphine. It is commonly used in China.

It is generally used as an intoxicating drug and it is believed that it contracts the walls of the stomach if taken as an addicted drug.

It is used in medicine in various ways. In small doses it is a stimulant, narcotic and antispasmodic and it increases bleeding from the womb, but given a little in excess, arrests the hemorrhage completely.

Moreover, it is prescribed to induce sleep, to shorten cold fit of an intermittent fever, in lock-jaw, dysentery and other bowel affections.

It is commonly believed to be a prophylactic agent and as such is used in cases of diarrhœa, cholera, colic, diabetes insipidus, diabetes mellitus, earache, stricture of urine, inflamed or high-coloured urine, tooth-ache etc.

As an external application, when mixed with arrack, it is valuable in various rheumatic and neuralgic affections.

Veidyans in India use opium freely in medicine and especially in the preparation of electuaries such as, *pooranathi* etc.

In small doses, it increases the energy of the mind and the frequency of the pulse. Acetic acid being a perfect counter-poison for opium, substances such as curd, lime water etc. are freely used as antidotes, as also permanganate of potassium.

The belief in its use in the mitigation of suffering and in painful and wasting diseases is but universal. Great virtue is attributed to it as it tends to promote longevity, and much of the invigoration produced by it, is mainly artificial. It is believed to have the desired effect in old age of arresting or retarding the molecular changes.

NOTE.—The other kinds derive their names from the places where they are grown, as given under.

1. Turkey or Smyrna.
2. East India or Bengal.
3. Egypt.
4. Europe.

அபினிச் சத்து, அபினியினின்று இறக்கும் சத்து. இதை ஆங்கிலேயர்கள் மார்பைன் என்று சொல்லுவார்கள். இது வெண்மைப் பற்பமாயும் சுவைப்பாய் பிருக்கும். இதின் நிய அளவு 1/10 கிரேய்ன், முழு அளவு ½ கிரேய்ன்; அதிக அளவிற் கொடுத்தால் மரணத்திற் கிடமாகும். இதை மயக்கத்திற்காக

வும் உணர்ச்சி அறியாம லிருக்கவு முபயோகிப்பதுண்டு. சீனத்தார்கள் இதை விசேஷமாய் உட் கொள்ளுவார்கள், extract of opium—Morphine or Cocaine. It is a white amorphous powder with a bitter taste. 1/10 grain of this is a small dose and ½ grain is a full dose. If given in over doses it may cause death. It is used to induce intoxication, unconcious ness or insensibility. It is largely consumed by the Chinese.

அபினிச் சாராயம், பங்கி என்று சொல்லப்பட்ட வோர்வகை மதபானம். இது கசகசாவினின்று தயாரிக்கப்படும். இது பச்சிரிகளாலும் இன்னும் சிலராலும் பண்டிகைக் காலங்களில் உட்கொள்ளப்படும், an intoxicating liquor which is formed by macerating or infusing the poppy heads in water and sweetening the same with molasses. It is drunk by fakirs and by some others on festival occasions — Bhang.

2. அபினிச் சத்தி லிருந்து வடிக்கும் ஓர் வகை மேலூட்டுச் சாராயம். இது அபினிச் சத்துடன் இலவங்கப் பட்டை, இலவங்கம், முதலிய சரக்குகளைக் கலந்து தயாரிக்கப்படும். இது கண்வலி முதலிய கண் ரோகங்களுக்கு உபயோகப்படும், wine of opium—Vinum opii. It is prepared from the extract of opium with cinnamon bark, cloves and other ingredients as per British pharmacoepia. It is employed as a local application in ophthalmia and other affections of the eyes.

அபிச் செடி, கசகசாச் செடி. இது 2—3 அடி உயரம் வளரும். இதைகள் சிறியவை களாகவும், வெண்மை நிறமுள்ளவைகளாகவும், பூக்கள் ஏராளமாகவும், வெண்மையாகவும் இருக்கும். முதிர்ந்த காய்களி லிருந்து தான் கசகசா உண்டாக்கப் படும். அவைகள் வாசனை யற்றவைகளாயும் சிறிது கசப்பாகவு மிருக்கும். அக் காய்களினின்று வந்து உறைந்த பால் தான் அபினி. அபினி செடி முழுமையும் பால் உள்ள தாதலின் அதைக் கஷாயமாகக் காய்ச்சிச் சத்தெடுப்பதுண்டு. அது இந்தியாவிற்குக் கொண்டு வந்து பயிராக்கப் பட்ட செடி, poppy plant — Papaver somniferum. It is 2–3 ft in height. Its seeds are small and white, and the numerous flowers are generally white. The matured capsules are called poppy heads and they are devoid of odour, but are of a slightly bitter taste. Milky inspissated juice of the plant is opium. All parts of the poppy plant abound in a milky juice which is extracted partially from its decoction. It is naturalised by cultivation in India.

அபினிச் செம்பு, அபினி, கந்தகம், துருசு, முதலான சரக்குகளைக் கொண்டு, போகர் நூலிற் சொல்லிய முறைப்படி மெழுக் காக்கிச் செம்புருகையில் இராகங் கொடுத்துச் சுத்தி செய்த களிம்பற்ற ஓர் உயர்தரமான செம்பு, இது வேதைக் குதவும், a purified superior copper free from verdigris, prepared according to the process laid down in a Bogar's work, using opium, sulphur, blue stone etc. as chief ingredients. This is useful in Alchemy.

அபினித் தைலம், அபினிச் சத்தினின்று தயாரிக்குந் தைலம். இது மேற்பூச்சு மருந்தாக, வாத நோய், வாதப்பிடிப்பு முதலான வலியுள்ள நோய்களுக் குபயோகப்படும், an oily liquid preparation from the extract of opium used as an external application in cases of rheumatism, gout and other painful affections.

அபினிப் பாகு, கசகசாத் தோல், சாராயம், சர்க்கரை ஆகிய இவைகளை வெண்ணீரிற் கலக்கிக் கொதிக்க வைத்துப் பாகுபதமாய் இறக்கிய வோர் மருந்துப்பாகு. இதற்குத் தற்காலத்தில் 'ஷர்பத்' என்று யுனானி முறையில் பெயர் வழங்கும், the syrup of poppies—Syrupus papavaris. It is a syrup prepared from poppy capsules, rectified spirit and refined sugar by boiling them sufficiently until the mass is reduced to a concentrated solution of sugar.

அபினி யுப்பு, அபினியி னின்று எடுக்கப்படும் உப்புச் சத்துக்கள், alkaloids obtained from opium. Some of them are hydrochlorate, sulphate, and acetate of opium.

அபினி ரஞ்சம், அபினியைச் சாரயத்திற் கரைத்துப் புளிக்க வைத்து வடித்த ஓர் திரவச் சத்து. இதை ஆங்கில முறைப்படியும் ஆயுள் வேத முறைப்படியும் செய்யலாம். இதற்கு அரிஷ்ட மென்று பெயர், a preparation obtained by fermenting the solution of opium and alchohol according to either the English system or the Ayurvedic system. It is known as *Arishtam*—Tincture of opium.

அபினி லேகியம், சவாட லேகிபம், மலக்கதைக் கட்டக் குழந்தைகளுக்குத் தயாரித்துக் கொடுக்கும் ஓர்வகை லேகியம், an electuary prepared with opium as a chief ingredient and given to children for arresting motions.

அபினி வைப்பு, கடுகு, கசகசா, கஞ்சா, மாரட்டிமொக்கு, முதலான சரக்குகளைக் கொண்டு தயாரித்து, அபினிக்குப் பதிலாக மோசடியாகவிற்கும் போலி அபினி, இதன் முறை போகர் (7000)ல் கூறப்பட்டுள்ளது, a faked opium prepared from a mixture of the following drugs as ingredients viz. mustard, poppy seeds, gunjah and buds of dhatura and sold as a subtitute for the genuine drug. The process is described in Bogar (7000). and the drug was used formerly by mendicants.

அபின், see அபினி.

அபின் சாரம், பலவகை அபினிச் சத்துக்களி லொன்று, one of the several alkaloids of opium—Laudanum.

NOTE.—The other kinds are :—Morphine, Codeine, Narcotine, Cocaine etc. The medicinal value of opium depends upon the presence of these alkaloids and their proportion varies greatly in different forms of the drug.

அபிசனம், நோயற்ற நிலைமை, the state of being free from disease; absence of disease; freedom from disease.

அபிசு, கையிரல்கள், fingers.

அபிடனம், see அபிசனம்.

அபிரு, தண்ணீர் மிட்டான், a plant, water root —Asparagus racemosus.

அபிர் (*Hind*), சந்தனத் தூள், ரோஜா, கஸ்தூரி, கற்பூரம் முதலியவைகளைக் கொண்டு தயாரிக்கும் ஓர் வாசனைப் பொடி. இது முகத்திலும், உடம்பிலும் தேய்த்துக் கொள்வதற்கும், துணிகளில் தூவி வைப்பதற்கும், மகம்மதியர்களால் உபயோகிக்கப் படும் ஓர் வாசனைத் தூள், a perfumed powder made up of sandal wood powder, Zedoary, Rose musk, camphor etc. It is rubbed on the face and over the body and is also sprinkled on clothes to scent them.

அபினசம், நீரை மின்மை, absence of catarrh; 2. மூக்கின் வரட்சி அதாவது சளியின்றி நாசி வறண்டி ருத்தல், dryness of the nasal passages owing to the absence of mucous fluid; 3. மூக்கடைப்பு, இதனால் மூச்சுவிட முடியாமை, நாசி எரிச்சல், வரட்சி, நாற்றமான சிராய்போன்ற சளி, வாசனை, ருசி, இவைகளில் உணர்ச்சி யின்மை, முதலிய குணங்கள் ஏற்படும், obstruction in the nostrils. The following are the specific indications of it—Chokedness, burning sensation in the nostrils attended with dryness and a deposit of filthy slimy and hardened mucous in the passages and deadening of the faculty of smell and taste.

அபினச ரோகம், சிலேட்டுமத்தினால் மூக்கின் நரம்புகள் அடைபட்டு, மூக்கினின்று சளி வராது வரண்டு, மூச்சுவிடும் போது 'குரு குரு' என்ற சத்தத்தையுண்டாக்கி, எக்கேரமும் வியர்வையை யுண்டுபண்ணுமோர் நாசி நோய், a disease of the nose arising from the phlegmatic condition of the body in which the mucous is prevented from being discharged owing to the obstruction in the nasal passages and the adjacent sinuses. It is due to the catarrh of the mucous membrane and is characterised by constant perspiration and a peculiar sound in the nostrils.

அபுட்ப பலம், பூவாது காய்த்தல், bearing fruits without flowering; 2. பலாமரம், the jack tree—Artocarpus integrifolia; 3. அத்திமரம், fig-tree—Ficus glomerata.

அபுட்பம், பூக்காதது அதாவது மொக்கு, that which has not blossomed, a bud.

அபுத்திரகன், பிள்ளை யில்லாதவன், one who is without a son.

அபூபம், அப்பவர்க்கம், cakes made of flour, 2. கோதுமை மாவினால் செய்யப்பட்ட பல காரம், a cake prepared with wheat flour.

அபூரண காலசம், முதிராமற் பிறந்தது, that which has come out before maturity; 2. காலம் முடிவதற்கு முன் பிறந்தது, that which has taken birth before the due time or the prescribed period.

அபூரணம், முற்றுதது, that which is undeveloped.

அபூரணி, பட்டுப் பருத்தி, silk cotton—Bombax malabaricum alias B. peptaphyllum.

அபூர்ண காலம், முழுவதற்குப் போதாது அல்லது குறைவான காலம், the period wanting for maturity.

அபேபி வாதம், முடியார் கூந்தல், a plant—Poederia foetida.

அபோஜ்ய பானம், குடிக்கத் தகாதது, that which is unfit to drink.

அபேனம், அபினிச் செடி, poppy plant—Papaver somniferum.

அபேன ரசம், see அபின் சாரம்.

அபையன், 7-வித கடுக்காய்களி லொன்று. இது கருப்பு வர்ணமா யிருக்கும். இது சிறந்தது. அபூர்வமாய் மலைகளி னுச்சிகளிற் கிடைக்கும். இதைப் பொடி செய்து அழுரியில் கலந்து, 40-நாள் இருவேளை கொள்ள, மும் மலக் கனிம்பும் போம். நாடி யெல்லாம் முறுக்கேறும். அநேக நாள் உடம்பை நிலை பெறச் செய்யும், மிகப் புத்தி வீர்த்தியை உண்டாக்கும். சகல பூதப்பிரேத சங்கைகளை யும் தீர்க்கும். எலும்பைப் பற்றிய நோய்களைப் போக்கும். இது பொதிகை மலையில் உற் பத்தியாகும்.

"அபயனுங் கடுக்காயுங் கோ யெல்லாம்
அபயமிட் டோட வடிக்கும்—அபையற்
சதிசீறற் கறுப்பதாகும் வீரே பூமி
பொதிசை மலையாம் புகல்"

(பதார். குணா. சிந்.)

one of the seven kinds of the Indian gall-nuts. It is black in colour and is found on the tops of hills and that too rarely. A powder of this mixed with purified urine and taken twice a day for forty days is said to cure all defects in the body and strengthen the nervous system. It promotes longevity and increases the power of intellect. It is also said to eliminate all complaints or disorders arising from the morbid fears due to evil influences of demons. It is of great use in the affection of bones The above stanza goes to show that this drug is available in Pothigai hills in the Tinnevelly District.

அபோகம், போக மின்மை, absence of sexual enjoyment.

அபோசம், பருத்தி, cotton—Gossypium herbaceum.

அபோசனம், பட்டினி, starvation ; 2. விரதம், fasting.

அபோச்சியம், தின்னத் தகாதது, that which is unfit for consumption.

அபோஷம், உடம்பை உருக்கிப் பலவீனப் படுத்தும் நோய், a wasting disease resulting in weakness and loss of weight, size and function of an organ or organs—Atrophy.

அபோதகம், கொத்துப் பசலை, cluster basella—Basella cordifolia alias B. lucida.

அப் சந்தீன் (*Hind*), யுனானி முறையில் வழங்கு மோர் மூலிகை. இது தினிப்பை, சரல், துரை யீரல், இவைகளுக்கு வலிவை யுண்டாக்கும். வ்திரீகளின் உதிரச் சிக்கல், சுரம் இவைகளைப் போக்கும், a drug used in the Unani Medicine. It strengthens the stomach, the liver and the lungs and cures menstrual disorders and fever.

அப்தி பேனம், கடல்நுரை, sea-froth ; 2. மீனெலும்பு, cuttle-fish bone.

அப்தி மண்டூகி, முத்துச் சிப்பி, pearl-oyster.

அப்திமூன் (*Hind*), யுனானி வைத்தியத்தில் வழங்கும் ஓர் கடைச் சரக்கு, இது ஓர் வகைக் கொடி. இதன் இலைகள் மெல்லிய சயிறுகளைப் போலும் அல்லது தூல்களைப் போலு மிருக்கும். மரங்களிலும் அவைக ளின் பக்கங்களிலும் படரும். மிகக் கோடை யிலும் கர்யாது. இது உலர்ந்ததற்கு முன் சிகப்பாகவும், உலர்ந்தால் மஞ்சளாகவு மிருக்கும். கசப்பும் வாசனையு முள்ளது. இது உடம்பின் தோஷத்தைக் சபம், பேதி, முதலியவைகளால் வெளிப்படுத்தும். ரம்பு வலி, ஒற்றைத் தலை வலி, இசிவு, காக்கைவலி, வீண் கவலை, பைத்தியம், முக வாதம், கீல்வாயு, பிளவை, முதலியவைக ளுக்கும் கருங் குட்டம், வெண் குட்டம், படை, பெருநோய் முதலிய கருமநோய்களுக் கும் இதை உபயோகிக்கலாம், a bazaar drug used in the Unani system. It is a kind of creeper resembling a rope or a string and creeping over plants or on their sides. It never dries up even in the Summer. It is red when afresh and yellow when dried, bitter and fragrant.

It removes impurities from the system through phlegm and purgation. It is a very useful remedy in cases of nervous affections, hemicrania, spasms, epileptic fits, undue agitation of the mind, lunacy, facial paralysis, hemiplegia, rheumatism, cancer, carbuncle etc.

It is also used with great advantage in black and white leprosy, eczema, leprosy attended with mutilation of fingers or toes, and other skin affections,

அப்பகம், வட்டத் திருப்பி, Indian Pareira—Cissampelos pareira.

அப்ப காசம், சீமைச் சோம்பு, Foreign anisee or Armenian cumin—Carum carui.

அப்பக் கொடி, see அப்பைக் கொடி ; 2. ஓர் வகைக் கொடி, a common weed—Ageratum conyzoides.

அப்பச்சி, சிற்றுண்டி, a sweet cake ; luncheon.

அப்பட்டப் பால், தண்ணீர் கலக்காமல் கறந்த படியிருக்கும் சுயப்பால், undiluted milk.

அப்பட்டம், சுயம், that which is pure ; 2. கலப்பற்றது, that which is not mixed with anything.

அப்பட்டர், அப்பட்டா, } See, அப்பகம்.

அப்பம், அடை, rice cake ; 2. சிற்றுண்டி, pastry, lunch ; 3. புட்டு, boiled rice cake ;

NOTE.—In Tamil, it is the name of the unleavened cakes of rice flour and cocoanut milk, resembling the wheaten chooppatties of upper India.

4. புட்டுத் திருப்பி, a plant—Sida acuta ; 5. வட்டத் திருப்பி, Indian pareira—Cissampelos pareira.

அப்பயத் தடராகம், எட்டிமரம், nux vomica-tree—Strychnos nux vomica.

அப் பரியந்தம், ஓஜியமரம், Indian ash tree—Odina Wodier, see also அப்பிரியா.

அப்பர், ஆண் குரங்கு, male monkey ; 2. ஆடு, he-goat.

அப்ப வருக்கம், சிற்றுண்டி வகை, different kinds of cakes, such as rice cakes, pastry, etc.

அப்பளக் காரம், see அப்பளாகாரம்.

அப்பளம், உளுந்திலும், அரிசி மாவிலும், செய்த ஓர் வகைப் பணிகாரம், a preparation from flours of black gram and rice —Pappadams.

NOTE.—The name is derived from Appu which means to clap on with the hand. It is a light thin cake made either of the flour of Phaseolus Mungo or black gram or other flours and flavoured with salt and asafoetida. Whenever required, it is fried in ghee or oil, and eaten with rice or other articles of food.

அப்பளா காரம், அப்பளத்திற்காக வுபயோகிக்கும் உவர்ப்பும் உறைப்பு முள்ள ஓர் கடைச் சரக்கு. இது பூரீரிலிருந்து தயாரிக்கப் படும். இது வாத குன்மம் வயிற்றுப்பிசம் கீல் வீக்கம் முதலிய நோய்களுக்கு உபயோகப்படும், subcarbonate of soda (சவுடி) or soda earth as it is commonly termed. It is used in the manufacture of thin wafer-like biscuits called Pappadams or Appalams. It is saltish and pungeant. It is obtained from a particular kind of பூரீர் (*Pooneer*) containing saltness or acidity mixed with much sharpness. It produces a burning sensation on the tongue. It is used in dyspepsia, flatulency, rheumatism etc ; 2. சவுக்காரம், fuller's earth.

அப்பளா சிட்டி, அப்பளம் வெண்மை யாவதற்குபயோகிக்கும் சாறுள்ள ஓர் பூடி, a herbaceous plant, the juice of which is used in making *applams* look white.

See also பேப்பா சிட்டி.

அப்பளாம், see அப்பளம்.

அப்பறுத் தூணி, சரகண்ட பாஷாணம், a kind of native arsenic.

அப்பாசம், வாலுளுவை, intellect tree—Celastrus paniculata.

அப் பாரகம், புளிமா, sour mango—Mangifera indica.

அப் பாரிசம், அந்தப் பக்கம், the other side.

அப்பாலுக் கப்பால், மனத்திற்கு எட்டாத தூரம்,

"அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்"
(விகா. அகவல்.)

distance beyond imagination.

அப்பி யங்க நானம், எண்ணெய் முழுக்கு, oil-bath. Anointing the body with oil preparatory to bathing.

அப்பி யங்கம், சிரசிலும் உடம்பிலும் எண்ணெய் அல்லது தைலத்தைப் பூசிக்கொண்டு ஒரே சுடிகை யுள்ள தண்ணீரிற் தலைமுழுகல். எண்ணெய் தேய்த்துத் தலை முழுகல், anointing the head and the body with sesamum oil preparatory to bathing ; 2. உடம்பில் வாசனை பூட்டல், to perfume the body ; 3, கண்ணுக்கு மை தீட்டல், painting the eye-lids with collyrium. See அபியங்கம்.

அப்பியங் கனம், see அப்பியங்கம்.

அப்பிய சித்தல், பழகுதல், to practise.

அப்பி யஞ்சனம், எண்ணெய், oil ; 2. எண்ணெய் பூசுதல், smearing the body with

oil; 3. மை தீட்டல், applying collyrium to the eye-lids. See அப்பியங்கம்.

அப்பிய மதன், நோயினால் பீடிக்கப் பட்டவன், a sick person.

அப்பிய மேகம், மூத்திரம் யானையின் மதசலத்தைப்போல் ஆறுமணி சமாருக் கொருதரம் ஒவ்வொரு வேளைக்கும் ஒருபடி யளவாக யிறங்குவதும், காய்ச்சினால் உவர் மண்ணைப் போலடியில் வண்டல் படிவதுமான ஓர் வகை மூத்திர நோய், a disease characterised by excessive secretion of urine as much as even one measure for every 6 hours. It leaves a sediment when heated—Diabetes insipidus.

See also அத்திமேகம்.

அப்பியாசம், பழக்கம், practice.

அப்பியாச யோகம், தியானம், இது மனவொருமை எற்படும்படித் தொடர்ச்சி யாகச் செய்யும் சிந்தனை. இதனால் அலையைப் போல் ஓயாது எழும்பும் நினைவுகள் அல்லது சம்ஸ்காரங்களை அடக்கி [illegible]வதற்கு ஓர் ஏது வுண்டாகும். தியானம் சித்தியானால், இயற்கையாக வுள்ள சித்துவங்களைச் செயிக்க ஆத்துமத்துக்குச் சக்தி தானாகவே ஏற்படும். சதா செய்யும் தியானத்தால் உலகத்தை மறக்கவும் ஏதுவாகும். இவ்விதமாக ஒருவாறு செய்து முடிப்பின், அதிசயிக்கத்தக்க சித்திகளெல்லாம், இதை அப்பியாசிக்கும் யோகிக்குக் கைவல்லியமாகும்.

ஆகவே மனிதரை ஆட்டுவிக்கும் சக்திக்கெல்லாம் இவன் ஓர் சூத்திரதாரி போலாவது மன்றி, உலகத்திலுள்ள பஞ்சபூதச் செயல்க ளெல்லாம் இவனது ஆற்றலுக்கு இணங்கி வணங்கும். இதனால் ஆகாயத்திலும் தண்ணீர் மேலும் உலாவலாம். தியானத்தால் தன்னைத் தானறியலாம். அன்றியும் தன்னை அறியும் அறிவைத் தன்னுள் அறியலாம். ஆழ்ந்த தியானமே சுழித்தி நிலை. இதனால் பஞ்சேந்திரியங்களின் செயல்கள் இயக்க மடைந்து மனதின் அலைவு நீங்கி அதனால் தான் கோரிய சித்தி இவனுக்குத் தானாகவே அமையும். ஏகாந்த நிலையில் இருக்கச் செய்தலால் மனது பரிசுத்த மடைந்து உலகப் பற்றற்றுச் சீவன் மூர்த்தி நிலையை அடையச் செய்யும், meditation which is practised for a long time for the purification of the mind.

It is the extension of concentration. It is one of the means of controlling the rising waves of the mind from thoughts and recollections (*samskaras*). By the success in meditation, the soul attains all the powers of nature. By continued meditation upon things Divine, the student forgets the world and once he can do this, he will be able to obtain wonderful powers and become the master of all that masters the ordinary man. The realms of psychic force bow down before him and he can walk upon air and water.

By meditation, the Yogin beholds the Self, the Inner Intelligence in the Self by the Self. In deep meditation, all the functions of the senses are inhibited and there comes a dead stop to the outward flow of the mind. It brings out the real nature of the object in view and infuses it into the soul of the meditator. Meditation in solitude for sometime will make one live in the world unattached. (*Sircar*).

அப்பியாச வைத்தியம், பழக்கத்தைக் கொண்டு செய்யும் வைத்தியம், the practices of a quack—Quackery.

அப்பி யிடல், பூசுதல், smearing.

அப்பிரக அரிதகி, அப்பிரக பற்பம், கடுக்காய்த் தோல் முதலியவைகள் சேர்ந்த ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine comprising calcined mica and gall-nut powder as chief ingredients.

அப்பிரக கற்பம், அப்பிரகத்தைச் செந்தூரம், பற்பம் முதலிய மருந்துகளாகச் செய்து உபயோகப் படுத்தும் விதத்தை விவரமாய்க் குறிக்கு மோர் ஆயுள் வேத நூல், an Ayurvedic treatise dealing with the method and use of several compounds of mica and their preparations in detail.

அப்பிரகக் கிண்ணி, அப்பிரகத்தை உருகும் படிச் செய்து மெழுகு கட்டி அதை வார்த்தெடுக்கு மோர் வகைப் பாத்திரம். இதைச் சித்தர்கள் காய சித்திக்காக, உண்கலமாகவும், இரசத்தைக் கட்டவும் உபயோகிப் பார்கள், a basin made of melted mica cast into a mould. It is used by Siddhars as a vessel for taking food from and for consolidating mercury.

NOTE.—This process of melting mica or consolidating mercury, for alchemical purposes, is unknown to Western science

It is very much doubted if this is dealt with, even in the other systems of Indian medicine or in any alchemical science.

அப்பிரகக் குகை, வாத முறையில் உபயோகிப் பதற்காக, அப்பிரக பற்பத்தினாற் செய்த குகை, a crucible made of calcined mica for the purpose of using it in Alchemy.

அப்பிரக செந்தூரம், அப்பிரகத்தை முறையாகச் சுத்தி செய்து, பிறகு அதைப் புடத்திலிட் டெடுக்கும் ஓர் வகைச் செந்தூரம், a red oxide of mica obtained after cleaning mica as per process laid down in the Tamil medical science for cleansing minerals and then subjecting it to calcination. It is a powder of brick-dust colour and a saline earthy taste. Chemically, it is a silicate of magnesia with iron in excess.

NOTE.—Veidyans use it in certain cases of flux, diabetes and venereal diseases, in different mediums with great success on account of its extraordinary virtues.

அப்பிரகச் சத்து, அப்பிரகத்தினின்று தயாரித்த வோர்வகைச் சத்து. இது இரசத்தைக் கட்டிம், essence prepared from mica. It consolidates mercury.

அப்பிரகத் தகடு, அப்பிரகச் செதில், a loose, filmy mass of talc separated in layers —Talc flakes; 2. அப்பிரகத்தை யுருக்கி அதனின்று தயாரிக்கு மோர் தகடு, a plate obtained by melting mica.

அப்பிரக நவநீதம், அப்பிரக வெண்ணெய், அதாவது, அப்பிரகத்தை மற்றச் சரக்கு களோடு சேர்த்து, வெண்ணெயைப் போற் செய்யப்படு மோர் யித மருந்து, an ointment prepared out of mica treated with other drugs; 2. அப்பிரகத்தைச் சுத்தி செய்யும் போது அடியில் நிற்கும் வெண்ணெயைப் போன்ற தூள், the white powder left as a residue in the process of cleaning it.

அப்பிரக பற்பம், அப்பிரகத்தைப் புடத்தி லிட்டுத் தயார் செய்து நீரிழிவு முதலிய நோய் களுக்குக் கொடுக்கும் மருந்து, an oxide of mica obtained by calcination as per process of Indian Medical science. It is used for diabetes etc.

அப்பிரக பாஷாணம், விஷவுப் பாஷாணம் முப் பத்தி ரெண்டி லொன்று. ஆயுள் வேதப்படி இதற்கு இரசப் பிரீதி, இரசமாதா வென்னும் பெயர்கள், according to Siddhar's science, it is one of the thirty-two kinds of mineral poisons containing mica. It is known as '*Rasaprecthi* or *Rasamatha*' in Ayurveda.

அப்பிரக மணல், பூமியினின்று வெட்டி யெடுக் கப்படும் அப்பிரகமும் மணலுங் கூடிய வோர் தாது, a mineral ore consisting of sand and talc—Talc ore; 2. கருமணல், black sand mixed with mica.

அப்பிரகம், கண்ணுடியைப் போன்ற ஓர் தாதுப் பொருள். இது சாதாரணமாய் மற்ற உலோகங்களைப் போலவே, நெல்லூர், மத்திய மாகாணம் முதலிய யிடங்களில், சுரங்கங்களி னின்றும் அதிகமாய் வெட்டி யெடுக்கப்படும். இது தமிழ் வைத்தியப் படி, நூற்றிருபது உபரசச் சரக்குகளில் ஒன்று. இதற்குப் பூ யிந்து நாதம், மலைஞ் மணி நாதம், மகா யிந்து, மகாப் பிரகாச சத்தி, கேசரம், அம்பரை நாதம், என்ற பல பெயர்களு முண்டு.

தமிழ் நாட்டு வைத்தியர்கள் இதைக் கொண்டு பற்பம், செந்தூரம், சுண்ணம், சத்து, வெண்ணெய் முதலிய மருந்துகள் செய்து முடித்து, நீரிழிவு, குடலண்ட யிருத்தி, எலும்புருக்கி, மகோதரம், வெட்டைச் சூடு, உடம்பு வறட்சி, மேகம் முதலிய நோய் களுக்கும், உடம்பிற்கு வலிவு, தேகக் காந்தி, தாது புஷ்டி, முதலியவைகள் ஏற்படுவ தற்கும் உபயோகிப்பார்கள்.

ஆஞல், ஆயுள் வேத பண்டிதர்களும், யுனானி வைத்தியர்களும், இதைத் தண்ணீரி லூறப் போட்டு அத்தண்ணீரைக் குடிப்பதற் கும், மருந்துகளில் சேர்த்தும், உபயோகிப் பார்கள். இது ஐந்து வகைப்படும். அவை யாவன :—கிருஷ்ண அல்லது கருப்பு அப் பிரகம், வெள்ளி யப்பிரகம், பொன் னப்பிர கம், கெந்த காப்பிரகம், தேனப்பிரகம்.

தமிழ் சித்த நூற்படி, தாது வகைகளில் இது ஐந்து வகைகளாகக் வகுக்கப் பட்டிருப்பினும், ஆயுள் வேதப்படி நான்கு யிதங்களாகவே கொள்ளப்படும். அவை யாவன :—நாகம், பேகம், பிராகம், வச்சிரம். ஆஞல் கடையாகக் கண்ட வச்சிரம் என் பதே வைத்தியத்தி லுபயோகப்படும், the term (*literally*) means அப்பு + பிரகம், which means water-bearer. It is a trade name for Indian mica, transparent like glass. It is a mineral called hydrous silicate of magnesia and like several other metals, it is usually dug out from the mica mines of Nellore, Central Pro-

vinces and other places in India. It splits up into thin elastic plates—Talcum.

It is called by several names and is regarded as the menstruum of the Godess of the Universe called Sakthi. The Tamil Veidyans prepare different medicines by calcining it, such as oxide, red oxide, calcium compound of mica and so on and prescribe them for various diseases viz, Diabetes, Hernia, Tuberculosis of the bone, Dropsy or Ascites, Venereal heat, Urinary disorders etc. They also use them as tonics for invigorating the system and for improving the secretion of semen and giving lustre to the body. Unani and Ayurvedic doctors soak it in water and prescribe the water as a drink. The ointment prepared from it, is called 'Navaneetham'. The drug consists of five varieties according to the nature of the colour such as.—

1. Black-coloured — Adamant mica. Calcined, it is given by Veidyan for fluxes.
2. Silver or gray-coloured — White mica. Granulated silver sand. It is a common kind prescribed for diabetes.
3. Gold-coloured—Yellow mica looking like yellow orpiment. Calcined, it is a pectoral medicine.
4. Sulphur-coloured — Sulphur mica.
5. Honey-coloured — Teenah according to the Tamil Siddhar's science. Although it consists of 5 varieties, yet as per Ayurveda, it is divided into only four classes as mentioned above, according to their virtues. The last mentioned *vajram* alone is fit to be used in Medicine.

NOTE.—Although this mica is sometimes called talc it is not the talc of the Europeon Geologists, which is a silicate of magnesium, a white unctuous neutral powder.

The Hindus and the Mahomadans of Southern India, confound talc and mica togather and Mr. Murray has classed the first under the Magnesium earth and the the latter u der the Silicious. Talc can be distinguished by its unctuous touch and by its plates being flexible, but not elastic. Indian mica is rarely found in large flakes and it consists of thin, glossy, transparent scales, composed of aluminium silicate.

All the different kinds of talcs and micas are to be found in Hindustan and Southern India, but the gray variety is the most common. Yellow-talc (மஞ்சள் அப்பிரகம்) is generally mistaken for the golden -coloured orpiment (தாளகம்). European talc is sometimes used in insufflating powders and as a remedy for diarrhoea.

அப்பிர கிருட்டம், காக்கை, crow.

அப்பிரசம், மலடி, barrenness.

அப்பிரசன், சந்ததி யில்லாதவன், one who is without issue.

அப்பிர சூதை, மலடி, a barren woman.

அப்பிரசை, சந்ததி யற்றவள், a woman deprived of issue.

அப்பிரதிப் பழம், பேரீச்சு, date fruit or date tree—Phoenix dactylifera.

அப்பிரபஞ்சம், எலிப் பயறு, a wild grain wild horse-gram.

அப்பிர புட்பம், மழை, rain; 2. மழை நீர், rain water.

அப்பிரம், ஆகாசம், sky; 2. பொன், gold; 3. மேகம், cloud; 4. அப்பிரகம், mica; talc.

அப்பிராகிருத சரீரம், கற்ப வுடம்பு, body strengthened by drugs, so as to live long; 2. மானச தீட்சை பெற்ற வுடம்பு, a body with divine illumination; 3. மேலான வுடம்பு, divine subtle body as opposed to the gross; 4. அழியா வுடம்பு, immortal body; 5. நித்திய வுடம்பு, permanent body.

அப்பிரா கிருதம், பிரகிருதி சம்பந்த மில்லாதது, that which surpasses matter.

அப்பிராணம், பிராண னின்மை, absence of life; 2. மரணம், death.

அப்பிரிய தரு, வெறுக்கத் தக்க மரம், contemptible tree; a tree not useful for any purpose; 2. ஓதிய மரம், Indian ash-tree — Odina wodier.

அப்பிரியம், அப்பிரியா, } See, அப்பிரிய தரு,

அப்திகு பேதசாலே, one of the 120 kinds of natural substances described in Tamil medical science.

அப்பிருதம், அப்பிரக பாஷாணம், which see.

அப்பிரேகம், see அப்பிரகம்.

அப்பிரகம், புனிமா, Indian hog-plum — Spondias mangnifera.

அப்பிரா, சேமையத்தி, foreign fig tree ; European edible fig — Ficus carica.

NOTE.—It is also called தேனதி, Teenah of the Hebrews.

அப்பு, பாதிரி மரம், or பூம் பாதிரி, trumpet tree with purple-rose flowers — Stereospermum suaveolens ; 2. வங்கம், lead ; 3. நீர், அதாவது பஞ்ச பூதங்களி லொன்று,

"உப்பாலே அப்பாக்க அப்பு வப்பாக்க"

water, one of the five elements ; 4. கடல், sea, 5. பனிக் குடத்து நீர், liquid of the amniotic sac — Liquor amnii ; 6. தொடை, thigh.

அப்புக் காய், ஓர் வித்தக் காய், a kind of unripe fruit ?

அப்புக் குட்டி, ஓர்வகைக் கடல் மீன், sucker fish—Remora.

அப்புக் கோவை, கற் கோவை, see அப்பைக் கோவை.

அப்புதல், பூசுதல், to clap with the hand as we do with clay on a pot ; 2. ஒற்றுதல், to apply anything repeatedly to the body ; to foment ; 3. வாயில் நிணித்தல், to thrust into the mouth.

அப்புத் திரட்டி, கட்டுக் கொடி, a creeper which is capable of solidifying water—Smilax pseudo-china.

அப்புநீர், சமுத்திரத்து நீர், sea-water.

அப்புநீறு, கடலுப்பு, sea salt.

அப்புப்பு, சோற் றுப்பு, common salt generally extracted from the sea-water and used with food.

அப்புரா, பாதிரி, trumpet-flower tree — Bignonia chelonoides.

அப்புருவம், உப்பு, salt; 2. சலாக்காரம், sal-ammoniac—Ammonium hydrochlorate.

அப்பு லோகிதம், சேம யிலந்தை, foreign jujube—Zizyphus jujuba.

அப்புலின் கூறு, உடம்பி லிருக்கும் நீர்ப் பாகங்கள் அதாவது நீர், இரத்தம், சுக்கிலம் முதலியன, the liquid portion of the body viz. urine, blood, semen etc.

அப்புலின் கோபம், லேட்டுமம், phlegm.

அப்புலின் ரசம், உப்பு, essence of water i. e., salt.

அப்பு வுப்பு செயநீர், பிண்ட உப்பு செயநீர், a liquid obtained from the salt extracted from the foetus.

அப்பு ளண்டம், தகரைச் செடி, ring-worm plant—Cassia Tora.

அப்பு ளாகாசம், வேரில்லாக் கொத்தான், princess hair; Moss creeper—Cassytha filiformis.

அப்புறத்தை யோட்டி வைத்தான், காசுக்கட்டி, a brown red colouring matter obtained from areca-nut ; Areca red—Arecin.

அப்புருத் தூணி, see அப்பருத் தூணி.

அப்பை, அப்பைக் கோவை, a climbing plant called 'beaked bryony saffron' Indian caper—Bryonia rostrata ; 2. கொன்றை, common Cassia—Cassia Fistula ; 3. ஓர் தொடல் மீன், a small marine fish about a foot long—Monocanthus monoceros ; 4. சரக் கொன்றை, Indian Laburnam ; 5. கற் கோவை, a plant—Bryonia epigea.

அப்பைக் காய், கொவ்வைக் காய், the unripe fruit of a climbing plant—Bryonia.

அப்பைக் கிழங்கு, அப்பைக் கோவைக் கிழங்கு, the root of a climber—Bryonia rostrata.

அப்பைக் கொடி, see அப்பைக் கொவ்வை.

அப்பைக் கொவ்வை, see அப்பைக் கோவை

அப்பைக் கோவை, ஓர் வகைக் கோவைக் கொடி, இது படற்கொடி. இதன் அடித் தண்டு நண்னிய தாகவும், மொசுமொசுப் பாகவும், இலைகள் இருதய வடிவமாகவும் நீண்ட காம்புகளுடன் கூடியும், காய் ஒன்றுக்கு 2—6 விதைகளு ளனதாகவும் இருக்கும். விதைகள் கருப்பாயும் தட்டையாயு மிருக்கும். பூக்கள் இரண்டு ஒன்று சேர்ந்தும், இருக்கும், இதன் சூரணம் அழற்சியைப் போக்கிச் சாந்தப் படுத்தும். இது தரங்கம் பாடியில் விசேஷம். இதன் இலை தட்சணத்தில் சிலசமாக உபயோகப்படும், a kind of creeper ; Saffron Indian caper—Rhynchocarpa foetida alias Aschmandra rost-

rata. It is a spreading plant; the stem is slender and hairy; the leaves with long peduncles are heart-shaped; the legume has 2–6 seeds, and they are dark and flat. The seed is compressed and the flowers are usually two together. The powder of the seed is medicinally demulcent. It is common in Tranquebar. The leaves are used in Deccan as a vegetable green to make curries.

See அப்பைக் கொவ்கை.

அப்பைக் கோவைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு, இது நிறமுதாயும், சாம்பல் வர்ண முள்ளதாயும், தித்திப்பாயு மிருக்கும். பிசுபிசுப்புள்ளது. இதன் சூரணம் உள்ளுக்குச் சாப்பிடக் காசம், மூலம், உள்ளழற்சி முதலிய வைகளைப் போக்கும், the root of the climber bryony—Bryonia rostrata. The root is small and of a light gray colour. It is sweet to the taste and mucilaginous. The powder is medicinally a demulcent.

அப்பைச் சுருக்கி, சிறுகீரை, a kind of vegetable green—Amaranthus campestris.

அப்பைச் சேவகம், சீமை யாமணக்கு, foreign castor or golden pareira — Baliospermum montanum. The seed is used as an ingredient in curry powders to flavour curry.

அப்பைத் திரட்டி, see அப்புத் திரட்டி.

அப்பை மாரிசம், செங்கத்திரி, orbicular-leaved caper shrub — Capparis pedunculosa.

அப்ரகம், see அப்பிரகம்.

அமங்கலம், ஆமணக்கு, castor plant — Ricinus communis.

அமசம், நோய், disease.

அமட்டம், வட்டத் திருப்பி, see அப்பகம்.

அமணம், see அம்மணம்.

அமண்டம், அமண்டலம், } ஆமணக்கு, castor plant — Ricinus communis. See அமங்கலம்.

அமண்டலாதி, செங்கடம்பு, a red species of Kadambu tree—Barringtonia acutangula.

அமதம், நோய், disease; 2. சாவு, death; 3. காலம், time, period.

அமந்தம், (அ + மந்தம் = இன்மை + வெறி) வெறியின்மை, absence of lunacy; sanity; soundness of mind.

அமத்திரம், பாத்திரம், a vessel; 2. வெண்கலம், bell-metal which is a mixture or an alloy of copper and pewter.

அமநஸ்கம், இராஜ யோகத்தி லோர் நிலைமை, அதாவது மனமிறத்து நிற்பது, that stage of Raja yoga in which the mind is raised from the gross to the subtle state to remain there in equilibrium.

NOTE.—He who controls the mind controls matter. Raja yoga propounds the method of gaining control over the inner nature which is more difficult than the external. It helps one to acquire a perfect control over the various activities of the mind which is called the Raja or the 'king of the senses' and thus renders it completely inactive as if it were dead.

அமந்தம், காட்டு வாதுமை மரம், wild almond myrobalan — Terminalia catappa; 2. மந்த மின்மை, the state of being free from indigestion or dulness of appetite.

அமந்தலம், செங்கத்தாரி, false peacock's foot tree — Niebuhria linearis.

அமந்தா சிகம், சருள் பட்டை, red creeper — Ventilago madraspatana.

அமந்தி, see அமந்தம்.

அமம், நோய், disease.

அமர கண்டம், ஓர்வகை வலிப்பு நோய் அதாவது குதிரை வலி, a severe type of convulsion or spasm so called from its similarity to the attack in horses.

அமர கண்டவலி, உடம்பு வலி, மூர்ச்சை, அசைவறக் கிடத்தல், வியர்த்தல், பல்லை இளித்தல், முதலிய குணங்களைக் காட்டு மோர் வலிப்பு நோய். இதற்குக் குதிரை வலி என்று தமிழில் பெயர் வழங்கும், a kind of convulsion characterised by bodily pain, swoon, prostration, perspiration and grinning. It is known in Tamil as 'Horse-fit'.

அமர கிச்சிலி, மஞ்சட் கிச்சிலி, a gold-coloured orange.

அமர குணர், கடுக்காய்ப் பூ, galls of chebulic myrobalan.

அமர கோசம், அமர சிம்மனால் வடமொழியிற் செய்யப் பட்ட வோர் நிகண்டு, a Sanscrit vocabulary compiled by Amarasimhan.

அமரசயம், இரைக் குடல், the stomach and the intestines where the food is digested.

அமர சிங்கம், see அமரசோசம்.

அமர சிம்மன், அமரகோச மென்னும் வடமொழி நிகண்டை இயற்றியவன், the author of a vocabulary in Sanskrit.

NOTE.—Amarasimhan was a Jain poet and he was one of the 7 poets who adorned the court of king Vikramaditya in Ujjain (Central Provinces.)

அமர சிலை, ஓர்வகைக் கெந்தகம், a variety of sulphur; 2. ஓர்வகை வைப்புப் பாஷாணம், a kind of prepared arsenic.

அமரசிலைக் கெர்தகம், அமரசிலைக் கெந்தம், } வைப்புப் பாஷாணம் முப்பத்திரண்டி லொன்று, one of the 32 kinds of prepared arsenic described in the Tamil Siddhar's medicine.

See அமரசிலை.

அமர தாரு, தேவதாரு, deccany deodar — Erythroxylon monogynum 2. தேட் கொடிக்கி, scorpion plant — Heliotropium indicum.

அமர பில்லம், கண்ணிமையில் இரத்தம் போற் சிவந்து தசை தடித்துப் பீளை தள்ளிக் கீழிமையை மொட்டிக் கொண்டு, கண் ணெரி மயங்கி நீர் வடியும் ஓர் கண்ணோய், an eye disease characterised by inflammation of the eye lids, hyperemia of the conjunctiva with a catarrhal or muco-purulent discharge, sticking of the eye-lids, defective vision etc. — Catarrhal ophthalmia.

அமரபுட்பி, ஒருவித்தச் செடி, a plant — Andropogon acicularis.

அமர புட்பிகம், ஓர்வகைப் பெருஞ்சீரகம், a kind of anise — Anetheum sowa.

அமரப் புகைச்சல், see அமரம் புகைச்சல்,

அமர மாலை, ஓர் வடமொழி அகராதி, அமர கோசத்தைச் செய்த தூலாசிரியரே, இதையும் செய்ததாகச் சருதப்படும், the title of a dictionary considered to have been compiled by the same author as of the book known as '*amarakosam*'.

அமரம், இரசம், mercury; 2. பொன், gold; 3. ஓர் சிறந்த நிகண்டு, a thesaurus in Sanskrit. see அமரகோசம்; 4. வெண்மை, whiteness; 5. இறப்பின்மை, immortality; 6. கண்ணின் இரப்பைத் தோலில் சருக்கரைப் போலெழுப்பி அப் பாகத்தை உருவழியச் செய்யும் ஓர் கண்ணோய், a disease of the conjunctiva attended with the formation of small elevations on the conjuctiva of the lids which results in the deformity of the lids—Granular conjunctivitis or Trachoma; 7. ஓர் பூடி, a plant—Tiaridium indicum; 8. ஓர் மரம், a species of pine; 9. தூங்குகொடி, umbilical cord; 10. பலவித்தப் பூண்டி களின் பெயர், the name of several plants such as, Panicum Dactylon, Cocculus Cordifolia etc; 11. ஓர் செடி, a plant—Sanseviera roxburghiana.

அமரம் பால், சுத்தமான பால் அதாவது பனங்கள், palmyra toddy.

அமரம் பிரிதற்கண், ஓர்வகைக் கண்ணோய், an eye-disease,

அமரர் வணங்குங் கன்னி, இந்திர பாஷாணம். இது, காக பாஷாணத்தை, வைப்பு முறைப்படி வைத்துத் தயாரிக்கும் போது மேற் சவசத்தில் பதங்கித்து நிற்கும் சரக்கு. அதற்குத் தானிப் பெயர் வழங்கும், it is the name of a poisonous compound deposited on the inner surface of the covering of the vessel which was used for preparing the poisonous arsenical compound of zinc.

அமர வல்லரி, அமர வல்லி, } கொத்தான், a plant—Cassytha filiformis.

அமரா சயம், கருப்பை, the uterus of a female; the womb; 2. வயிறு, the stomach.

See அமரசயம்.

அமராஞ்சனம், சந்தனம், sandal paste.

அமரி, கற்றுழை, aloe; 2. மூத்திரம், urine; 3. அமிழ்தம், the fabled food of the ancients which was supposed to confer immortality upon those who partook of it — Ambrosia; 4. விஷம், poison, 5. பேய்ப்புல், a kind of poisonous grass; 6. காயகற்பம், a medicine which promotes health and bestows longevity. See அமுரி.

அமரிதம், கடுக்காய், Indian gall-nut — Terminalia chebula.

அலச குட்டம், இரத்த நிறமாக, ஆற்றிற் கிடக் குஞ் சிறு கூழாங் கற்களைப்போன்ற கொப்பு ளங்களை யுண்டாக்கி, அவைகள் உடைந்தும் விரணமாகி நமைச்சலை யுண்டாக்கு மோர்வ மைக் குட்டம், a kind of leprosy marked by ulcers of the size of small pebbles which suppurate causing an itching sensation.

அலசத்துவம், சோம்பல், laziness.

அலசப் புண், சேற்றுப் புண், an affection caused by the contact of poisonous mire and appearing between the toes—Ground itch. See அலச விரண நோய்.

அலசம், அலிமுகப் பாண்டு, which see; 2. ஓதம், moisture; 3. ஓர் மரம், a tree; 4. மந்தம், dullness; sluggishness; want of appetite; inactivity of digestive organs.

அலச ரோகம், மந்தத்தினுற் குழந்தைகளுக்கு ரண மேற்படு மோர் கொடிய நோய், a disease in children arising from indigestion due to the inactivity of the digestive organs.

அலசல், கழுவுதல், to clean; 2. சோம்பல், laziness.

அலச விரண நோய், அழுகற் பண்டம், புழுதி, சேறு, முதலியவைகளைப் பல தடவைகளி லும் மிதிப்பதனாற் பாதங்களி லேறைத்தினும், விரற் சந்துகளினும் சதையைத் தின்று வெ ளுத்துத் தினவையும் எரிச்சலையு முண் டாக்கு மோர்வித விரண நோய். இதனை விரற்புண் அல்லது சேற்றுப்புண் என்பர், an affection caused by rotten substances, poisonous mire etc, coming into contact with the feet. It appears between the toes and it is characterised by pain, burning, itching and exudation—Ground itch.

அலசி, ஓர்வித நத்தை. இது பாறைகளி லொட் டிக் கொண்டிருக்கும். இது, உணவாகவும், தூண்டி விரையாகவு முபயோகப்படும், a genus of bivalvular shell-fish which sticks to rocks. It is largely used as food and also as a bait—Mussel; 2. பேய்ச் சுரைக்கட் டையென்னு மோர்வகை மேகக் கட்டி. இது வெண்மையும் சிவப்புமான பல பருக்களாகக் கிளம்பி மிக்க வலியை யுண்டாக்கும், (*In Prameha*) a dreadful syphilitic abscess which is of red and white colour studded over with blisters or exuding vesicles. It is marked by excessive pain. See also அலசை; 3. வீக்கத்தை யுண்டாக்குமோர் மேக விரணம், a venereal sore causing swelling but (*literally*) the term means that which causes swelling.

அலசி ரோகம், இலிங்க விரணம். இது நோய் கொண்ட பெண்களைப் புணருவதால் அல் குலுக் குள்ளிருக்கும் விஷ நீர், ஆண் குறியில் பட்டு, இலிங்கத்தின் மேலாவது, மலரை மூடிக் கொண்டிருக்கும் இலிங்க கவசத்தின் மேலாவது புண்ணுண்டாக்கிப் பிறகு உடம் பிலேறி வியாபித்து, மேகச் சொறி, மேக ஊறல் முதலிய பலவித சருமநோய்களையும், எலும்பு நோய்களையு முண்டாக்கும், a syphilitic sore on the genital (*penis*). Chancre. It is caused by infection in sexual intercourse with a woman suffering from venereal complaints. In its primary local seat, it is a hard or true chancre, wherefrom it extends through the lymphatics to the skin and to nearly all the tissues of the body, and even to the bones giving rise to various skin eruptions and diseases such as, Condyloma, Eczema etc.

NOTE.—(In Sukaidosha) an eruption or abscess formed on the penis due to the injudicious application of Sukai on it. It exhibits symptoms which are identical with those manifested in a case of அலசி in பிரமேகம்.

2. ஓர்வகை அற்ப விரணம். இதுஉடம்பில் வட்டவடிவாய்த் தடித்தும் உயர்ந்தும் இரு க்கின்ற சிறு சிறு கட்டிகளே நெருக்கமாகப் பிறப்பிக்கும். அக்கட்டிகளின் மூனையானது உள்ளழுந்தி நடுவில் பள்ளம் விழுந்திருப்ப தோடன், அங்கிருந்து கொஞ்சம் நீரும் வடி யும், a simple ulcer covered with fungous granulations projecting above the level of the skin with a depression in the centre and discharging pus—Fungous ulcer.

3. மேக சம்பந்தத்தினுல் கருவிழிக்கு வெளியில் வீக்கத்தை புண்டாக்கி அங்கு நோவையும், கடைவிழியில் நமைச்சலையும், இமைகளில் வெடிப்பையுமுண்டாக்கு மோர் விதக் கண்ணேய், an eye-disease with swelling in the cornea, irritation at the edge of the cornea and fissure on the eye-lids due to syphilitic causes—**A kind of keratitis.**

அலசி வர்த்தம ரோகம், கண்ணிமைகளிற் கடினமான கட்டிகளே யுண்டாக்கி ஓயாமற் பீளையைத் தள்ளு மோர்வகைக் கண்ணேய், an eye-disease with abscess on the eyelids giving rise to frequent muco-purulent discharges—Blepharo-adenoma.

அலசி விதை, ஆழி விரை, linseed; 2. அகத்திவிரை, seed of Sesbania.

அலசுதல், தண்ணீராற் கழுவுதல், to wash or clean with water; to wash lightly.

அலசை, ஆற்றுத் தும்மட்டி, Citrullus colocynthes 2. மேகத்தினு லுண்டான பேய்ச் சுரைக்காய்க் கட்டி. இது முதல் முதல் எவ்விடத்தி லுண்டாகிறதோ அவ்விடத்துச் சருமத்தின் மேல் நெருப்பாற் சுட்டதுபோலெரிச்சலே யுண்டாக்கிக் கொண்டெழும்பிப் பிறகு கருப்பு நிகப்பு நிறங்களையுடைய கொப்பு எங்களாக வடம்பெங்கும்வியாபித்துப் பார்வைக்குப் பேய்ச் சுரைப் பிஞ்சைப் போலிருக்கும். இதனுல் அதிக பேதி, தாகம், சோர்வு, சுரம், வலி, வேதனை முதலிய குணங்கள் ஏற்படும். இது 10 வகை மேகக்கட்டிகளி லொன்று, an abscess of the size of a young gourd fruit, arising from syphilis. Its primary local seat is attended with burning sensation, whence it extends all over the body through the lymphatics, developing dark and copper-hued ulcers.

It is marked by diarrhoea, thirst, languor, fever, pain and trouble. It is one of the 10 kinds of syphilitic abscesses described in the Ayurvedic science. See அலசி; 3. சேற்றுப் புண், a sore or ulcer between the toes due to poisonous mire; 4, வயிற்றுப்பிசம், tympanites; 5. ஓர் விஷப் பிராணி, a poisonous animal; 6. ஓர் கொடி, காட்டுப் பிரண்டை, a climbing plant—Vitis dedata.

அலஞ்சரம், மண்சாடி, an earthen vessel of various shapes and dimensions generally with a handle — A jar; 2. தண்ணீர்க் குடம், an earthen pot for holding water —Water-jar.

அலட்டு, அலைக் கழிப்பு, troubling one by causing him to move about restlessly.

அலட்டு சன்னி, உடம்பு அலண்டு போவதாலேற்படும் சன்னி, delirium caused through physical strain; 2. மிக்கக் கர்ய்ச்சலினுலேற்படும் சன்னி, temporary disordered state of the mental faculties occurring in excessive fever — Febrile delirium; 3. வலிப்போடு கூடிய சன்னி, delirium accompanied with convulsions; 4. பிதற்று சன்னி, delirium accompanied by the utterance of meaningless words and sentences — Lingual delirium. See also பிரலாப சன்னி; 5. காயத்தினு லுடம்புக்கு அதிர்ச்சி கண்டு அதனுலேற்படும் சன்னி, the dulrium due to severe injuries and shock—Traumatic delirium.

அலட்டுதல், அலைக் கழித்தல், to trouble by causing one to move about restlessly; 2. பிதற்றுதல், to talk incoherently.

அலத்தகம், செம்பஞ்சுப் பூடி, red-cotton shrub or West Indian cotton—Gossypium barbadense (*acuminatum*); 2. செம்பருத்தி, Bengal cotton — Gossypium arboreum; 3. செம்பஞ்சுக் குழம்பு, red lac used by ladies for dyeing the feet.

அலத்தம், செம்பருத்தி, see அலத்தகம்.

அலத்தல், துன்பம், distress; 2. துன்பப்படல், to suffer.

அலத்தி, மின்மினிப் பூச்சி, a winged insect which emits a brilliant light at night—Fire-fly.

அலத்திடு சன்னி, அதிகத் துன்பத்தை யுண்டாக்குமோர் வகைச் சன்னி, a kind of delirium giving rise to much trouble to the patient.

அலத்து, உமரி, a kind of herb with a saline taste, growing on the sandy soils. It is called Glass-wort — Salicornia herbaco.

அலத்துருஞ் சூலி, பெருஞ் சூலி, bridal conch-plant—Hymenodictyon excelsum.

அலந்தம், கடுக்காய், ink-nut — Terminalia chebula.

அலந்தலை, மயக்கம், giddiness.

அலந்தல், மயிலடிக் குருந்து, false-peacock foot tree—Neburia linearis.

அலந்தாரி, எழுத்தாணிப் பூண்டு, style-plant or sarment lettuce—Launea pinnatifida.

அலபனதி, யகாரம், the last letter of the five sacred letters forming the mantram Panchaksharam (பஞ்சாட்சரம்).

அலப்பம், அங்கப்பிச்சு, which see.

அலப்புகா, சிவப்பம்மான் பச்சரிசி. a species of red raw rice plant—Euphorbia hypericifolia (*rosea*).

அலப்புதல், பிதற்றுதல், talking incoherently.

அலமரல், அச்சம், fear; 2. வருந்தல், agitation or suffering; 3. துக்கம், sorrow.

அலமான், திப்பிலி, long pepper — Piper longum.

அல மிளகு, திப்பிலி, see அலமான்.

அலமோசனதி, see அலபஞ்சி.

அலம், தண்ணீர், water; 2. தேள், scorpion; 3. அலமரல், agitation of the mind; 4. பொன்னரிதாரம், yellow orpiment or sulphuret of arsenic; 5. இஞ்சி, ginger; 6. துயர் நோய், disease causing much distress; 7, சோற்றுப்பு, table salt; 8. கறும் பிசின், a kind of incense—Olibanum; 9. தேள் கொடுக்கு, scorpion's sting.

அலம்பல், கழுவல், washing.

அலம்பல் மரம், வெடங் குறுணி. இது வாசனை பொருந்திய வெள்ளைப் பூக்களையுடைய மரம், இது மலையாளத்தில் உற்பத்தியாகும். இதன் இலைகள் உதிர்ந்து தளிர்க்கும். பார்வைக்கு அழகாயிருக்கும். இதனின்று எடுக்கும் எண்ணெய்ச் சத்தைக் குருக்க ளெழும்பும் சரும நோய்க்கு மருந்தாக உபயோகிப்பார்கள், a sharp toothed tree called also Savathi tree (சவதி மரம்); collar-bone tree; walking stick bignonia — Stercospermum Xylocarpum.

It is a tree with white fragrant flowers. It is a native of Malabar and its leaves are deciduous and ornamental. A thick fluid is extracted from the wood and it is of the colour and consistence of Stockholm tar, which the natives use as a remedy for scaly eruptions on the skin.

அலம்பி, தசநாடிகளி லொன்றுகிய, நாவிலோடு மோர் நாடி, one of the ten arteries existing or operating in the tongue—Lingual artery.

அலம்புசம், வாந்திசெய்தல், to vomit.

அலம்புசா, see அலம்பு.

அலம்புசை, see அலம்புருடை.

அலம்புடம், வாந்தி பெடித்தல், vomiting.

அலம்புடை, அலப்புருடன், அலம்புருடை, } தசநாடிகளி லொன்று, இது மூலாதாரந் தொட்டுக் காதளவாய் நிற்பது, one of the ten tuberous vessels of the human body. It extends from the anal region up to the level of the ears.

அலரி, அழகு, beauty; 2. கண் வரி, streaks or lines on the white of the eye; 3. கோமாரி, a cattle disease — Rinderpest; 4. பூப் பொது, flower in general; 5. தேனீ, honey-bee; 6. கோதுமை, wheat, 7. நீராவி, steam or vapour.

அலரி, ஓர் பூமரம், இது 6 அல்லது 8 அடி உயரமுள்ளது. வெளுத்த சிகப்புப் பூக்கள் பூக்கும். இதைச் சாதாரணமாய்த் தோட்டங்களிலும், ஆற்றங் கரைகளிலும் பார்க்கலாம். இதன் இலையைக் கஷாயமிட்டு வீக்கங்களுக்கு ஒத்தடங் கொடுக்கலாம். உலர்ந்த இலைகளின் று ஓர்விதக், களிம்பு செய்து மூட்டுப் பூச்சிக் கடிக்குப் பூசலாம், இதன் பூ, பூசைக் குரியது, இதில் அடியிற் கண்டபடி பலவகைகள் உண்டு, a flowering tree; Indian oleander—Nerium odorum alias N. indicum. It is a large spreading shrub 6 to 8 ft. high with pale-red fragrant flowers. It is common in gardens and near the banks of rivers and its flowers are offered to gods. A decoction of the leaves is used for fomenting in cases of swelling. A paste is prepared from the dried leaves and used externally for bug-bites. The following are the different varieties:—

1. ஆற்றலரி, (*River*), Common Tamarisk—Polygonum barbatum alias Tamarix gallica.
2. சீதத்தலரி, (*Ceylon*), Pagoda tree or Jasmine sponge — Plumeria acutifolia.
3. குங்கும வலரி, same as செவ்வலரி.
4. செவ்வலரி, (*Red*), oleander rosebay —Nerium odorum (*roseum*).
5. நீரலரி, (*water*), water gannair, Red shanks—Polygonum genus.
6. வெள்ளலரி, (*White*), Indian oleander — Nerium odorum (*alba*).
7. காட்டலரி, (*Wild*) Willow leaved water croton — Homonoya riparia.

8. பச்சையலரி, சீமை யலரி அல்லது மஞ்சளலரி, (*Yellow*). Exile oleandar or Foreign oleander or Yellow oleander—Theretia nereifolia.

9. கொத்தலரி, (*Cluster*), Cluster gannair—Kopsia fruiticosa .

10. இரட்டை வெள்ளலரி (*Double*) Nerium odorum (*flore pleno-carneo*).

11. இரட்டைச் சிவப்பலரி, (*Double*) Nerium odorum (*flore pleno-rubro*)

NOTE.—There are different varieties of this both single and double ,bearing flowers pink, deep-red, white and yellow. It is also pronounced as அலி or அளி.

அலரிக் கண்ணுடி, உடும்பின் நகம், the nail of a guana.

அலரிச போதகம், உடும்பு, double-tongued lizard otherwise known as guana — Lacerta iguana.

அலரிப் பட்டை, அலரிமரத்தின் பட்டை. இது கனதியாயும், வெளிப்பக்கம் சாம்பல் நிறமும் உட்புறம் மஞ்சள் நிறமும் வாய்ந்திருக்கும். இதை வெட்டினால், மஞ்சள் நிறமான, வாசனையும் மிருதுப்பு முள்ள வோர் பிசின் ஒழுகும். படைகளுக்கு அதை அரைத்துக் குழைத்துப் போடுவ துண்டு. இப்பட்டையை எண்ணெயில் சேர்த்துத் தைலமிறக்கி உடம்பில் செதில் செதிலாக உண்டாகும் குஷ்டத்திற் குபயோகிக்கலாம், the bark of the tree, Indian oleander—Nerium odorum.It is thick and its external surface is grey and the internal surface is yellow. The bark when cut, exudes a pale yellow, resinous sticky matter with a peculiar odour and a somewhat acrid and bitter taste. It is used externally as a repellant and made into a paste and applied in cases of ringworm. The oil extracted from the root is used in exfoliation of the skin in leprosy.

அலரி விழுந்தலை யழுவாள், குண்டு பனை, a kind of male palmyra — Borrassus flebellifer (*male plant*).

அலரி வேர், அலரி மரத்தின் நஞ்சுத் தன்மை யுள்ள வேர்.இது சாதாரணமாகக் கோணலாயிருக்கும். இதில் ஓர்வகைப் புளிப்பும், விஷமுள்ள மஞ்சட் பசையும், மெழுகும், சர்க்கரையும், பொருந்தி யிருக்கும். இதே மாதிரியான விஷம், பட்டையிலும் பூக்களிலு முண்டு. இதைக் குட்டம், உடம்பிற் கா

ணும், குரு, கொப்புளம், கட்டி. முதலிய வைகளுக்கு உபயோகிப்ப துண்டு. இதன் வேர் மிக்க விஷத்தன்மை யுள்ளது. நமது நாட்டில் இதை நல்லெண்ணெயிற் கலந்து உட்கொண்டு தற்கொலை புரிந்து கொள்வார்கள். இதைத் தண்ணீரில் அரைத்து ஆண் குறிச் சிலந்திக்குத் தடவலாம், the poisonous root of the tree called Indian Willow. It is generally crooked and contains tannic acid, a kind of yellow poisonous resin, and also wax and sugar. Similar poison exists in the bark and the flowers. It is used in leprosy, eruptions on the skin, and boils. The root taken internally acts as a poison and it is sometimes taken with gingelly oil to commit suicide. It is also useful as an external application for ulcers or sores on the penis.

அலருடன் மாது, பெருந் துளசி, large basil —Ocimum gratissimum.

அலருதல், மலருதல், blossoming ; 2. விரிதல் expanding or opening even as a flower does.

அலர், மஞ்சள், turmeric ; 2. மலர்ந்த பூ, blown flower ; 3. நீர், water ; 4. மிளகுக் கொடி, black-pepper creeper.

அலர்க்கம், வெள்ளெருக்கு, white madar—Calotropis gigantea (*albiflora*); 2. ஓர் வகைக் கிருமி, a kind of germ ; 3. பேய் நாய், rabid dog.

அலர்தல் ; அலருதல், which see; 2. விரிதல், expanding.

அலர்ந்த பூ, மலர்ந்த பூ, full-blown flower ; 2. கொத்தான் செடி, a twiggy plant; green thread creeper — Cassytha filiformis.

அலர்ந்தல், கொத்தான், see அலர்ந்த பூ.

அலர்ப்பகம், விலா மிச்சை, see அலகு மூலம்.

அலர் முலை, விம்மிய முலை, distended breast of a woman, especially through lust.

அலவன், ஆண் நண்டு, a male crab ; 2. பூனை, cat, 3. சந்திரன், moon; 4. இஞ்சி ரசம், ginger juice.

அலவை, வியபிசாரம், adultery.

அலவைப் பெண்டிர், சோரப் பெண், வியபிசாரி, a woman who exposes her person or offers herself publicly for lewd purposes or for hire—A prostitute.

அலறி, நகம், nail.

அலறு சன்னி, படுத்திருக்கும்போது அடிக்கடித் திடீரென அலறியலறி யெழுந் துட்காரச் செய்யு மோர்வித சன்னி பாதசுரம், a kind of fever such as enteric in which the patient does not or will not take to his or her bed; 2. சுரமல்லாது வேறு நோயின் காரணத்தால் அலறி யெழுந்துட் காரச் செய்யுமோர் வகைச் சன்னி, a delirium not attended with fever nor occurring in the course of it; it is characterised by a sudden uprise followed by an uproar.

அலறுதல், உரத்தழுதல், weeping aloud, making an uproar.

அலறுபித்தம், கூச்சலிடு மோர் பித்த நோய், a bilious disease accompanied by an uproar.

அலற்கம், நாய்களுக் கேற்படும் சுரம், a fever in dogs.

அலன்றல், சாதல், dying.

அலாகம், எருக்கு, madar plant--Calotropis gigantea.

அலாசம், நாக்குப்புற்று, அதாவது நாக்கில் வருமோர் வீரண நோய். இதனால் நாக்கின் அடியும், மூலமும் வெந்து, குருக்க ளெழும்பிச் சீழ்பிடித்துச் சிலநாள் கழிந்ததும் நாவு மந்தத்துப் பிரள வொட்டாமல் போகும்படி நேரிடும். இது இரத்தக் கெடுதியினாலும் கபக்கோளாறினாலு மேற்படும், a severe inflammatory swelling and abscess about the under surface or root of the tongue, which if allowed to grow on unchecked, gives rise to numbness and immobility of the organ and also to rapid suppuration at its base. It is caused by deranged blood and Kapam—Cancer of the tongue.

அலாடம், கஞ்சா, Indian hemp — Cannabis sativa.

அலாதிகழ், வகாரம், one of the five sacred letters 'Va'.

அலாந்து, ஓர் விஷப் பிராணி, a poisonous animal.

அலாபதம், விலாமிச்சை, cuscus grass, see also அலகு மூலம்.

அலா பாதிகம், அம்மான் பச்சரிசி, raw rice plant —Euphorbia hypericifolia.

அலாபு, சுரைக் கொடி, bottle-gourd creeper —Lagenaria vulgaris; 2. சுரைக் குடுக்கை, the shell of calabash.

அலாபுகம், சுரைக்காய், the fruit of the bottle-gourd creeper —Calabash.

அலாபுக ரோகம் கழுத்தினுட் புறத்திற் சுரைப் பிஞ்சைப்போற் சதை வளர்ந்து, சுவாசக் குழலே யடைத்து மூச்சு விடுவதற்கு முடியாமல் வருத்து மோர் நோய், a tumour of the laryngeal region obstructing the respiratory passage and thereby rendering breath almost impossible.

அலா பொருகம், பெருங் கடுக்காய், a large species of chebulic myrobalan.

அலாரம், ஓர்வித கற்றழை, a kind of Aloe plant.

அலாரி, அலாரிதா, } see அலரி.

அலாருகம், பெருங்களா, large corandah — Carissa carandas (typica).

அலாவு, see அலாபு.

அலி, கொடுக் குள்ளது, in possession of a sting for example by a bee or a scorpion; 2. வானம்பாடி, Indian cuckoo; 3. மது, சாராயம், spirituous liquor; 4. நுணவி, common sebesten — Cordia obliqua; 5. வைர மில்லாத மரம், a tree which is free from hardness in the central part of it—Pithy tree; 6. நெருப்பு, fire; 7. காக்கை, crow, 8. குயில், a singing bird, Indian cuckoo — Cuculus orientalis; 9. வண்டு, beetle; 10. தேள், scorpion; 11. கள், toddy; 12. சோறு, boiled rice; 13. பேடி, an impotent man; 14. விதையில்லாத மனிதன், a man deprived of testes—Eunuch.

15. பெண்ணிலும் ஆணிலும் சேராத உறுப்பை யுடையவன். இது ஆணலி, பெண்ணலி யென விருவகைப் படும். ஆணுருவமிருந்திருந்தால் ஆணலி யென்றும், பெண்ணுருவ மிருந்திருந்தால் பெண்ணலி யென்றும் சொல்வ தண்டு, an individual in whom will be found the co-existence of the incomplete development of the organs of both sexes i.e., ovaries and testicles or of at least one of each of the glands—Hermaphrodite. Hermaphroditism are of two kinds according to the structural formation and development in the repro-

ductive or sexual organs. If the male organ is more developed the individual is called the male hermaphrodite (ஆணலி) and if the female organ is developed more, the individual is called the she-hermaphrodite (பெண்ணலி).

NOTE.—This condition is usually due to some congenital formation of the genital organs, that makes the determination of the sex doubtful.

அலிகம், நெற்றி, forehead; 2. நறுவலி, a plant. See அருவி.

அலிகலவம், ஓர்வித காக்கை, a kind of carrion bird of the crow species.

அலிகை, நாணல், club grass, Bull rush — Scirpus dubius.

அலிசி, ஆளிவிதைச் செடி, a plant — Linum usitatissimum.

அலிசிக் குவிகம், உண்ணூ, the uvula or the soft palate.

அலிசி விதை, ஆளி விதை, linseed.

அலிசிவிதை யெண்ணெய், ஆளி விதையி னின் றெடுக்கு மோர்வித யெண்ணெய்,

அலிச் சர்ப்பம், ஓர்வகைப் பாம்பு, a kind of snake; 2. நீண்ட உருவத்தையும் வெளுத்த படத்தையு முடையதும், அதன் விஷத்தி னுல் பேதி, கடுக்கல், பயம், சுரம், காம விச்சை முதலிய குணங்களையு முண்டாக்கு மோர் வகைப் பாம்பு, a kind of snake with a long body and a white hood. Its poisonous bite is followed by purging, tremor, fear, lust etc.

அலிஞ்சரம், மண்சாடி, an earthen vessel with a handle—A jar.

அலித் தன்மை, ஆண்மை யின்மை, lack of manly power; impotency; 2. ஆணிலும் பெண்ணிலும் சேராத தன்மை, the co-existence in a single individual of undeveloped organsof both the sexes or in whom the true sex is doubtful.

அலித் தன்மை யுள்ள, ஆண்தன்மை யற்ற, hermaphroditic.

அலித்தூர்வம், ஓர் பூடி, the name of a plant (*unidentified*).

அலிபகம், நாய், dog; 2. கருவண்டு, black beetle; 3. தேள், scorpion; 4. வானம் பாடி, Indian cukkoo.

அலி பத்திரிகம், ஓர் பூடி, a plant (*unidentified*).

அலிபரணி, காய்ஞ்சொறி, climbing nettle plant—Tragia involucrata.

அலிப்பட்சி தோஷம், குழந்தையின் தோள், மூதகு, கண்டம் முழங்கை ஆகிய இவ்வி டங்களிற் குழி விழுதலையும், வாந்தி, பேதி, தாகம் ஆகிய குணங்களையு முண்டாக்குவது மான ஓர் நோய், a disease in children affecting chiefly the shoulders, the back, the neck and the elbows. It is marked by vomiting, purging, thirst etc.

அலிப்பான், வெடியுப்பு, saltpetre—Potassium nitrate.

அலிப் பிரியம், செங்கழு நீர், red lotus — Nymphae rubra; 2. பாதிரி, trumpet flower—Bignonia suaveolens.

அலிப் புண், நாறு ரணம், a foul sore or wound—Gangrene.

அலிமகம், தேனீ, bee; 2. வானம்பாடி, Indian cuckoo; 3. தவளை, frog; 4. இலுப்பை, a tree — Bassia latifolia, 5. தாமரைப் பூந்தாது, the filaments of lotus; 6. பெண் கனைத் தாக்கும் ஓர் வகை சோகை நோய், anemia accompanied by nervous disturbance Chlorosis.

அலிமரம், உள் வெளிப் பக்கங்களில் வைரம் பாயாத மரம், a variety of trees free from core either inside or outside; 2. பாலும் நாருமுள்ள மரம், a tree with sap or milky juice and fibres.

அலிமுகப் பாண்டு ரோகம், முதலிற் சோகை யுண்டாகிப் பிறகு வாதபித்த மதிகரித்து, உடம்பு மஞ்சள் அல்லது நீலநிற மடைந்து, வீக்கங் காணு மோர்வகைப் பாண்டு நோய். இது, நீலநிறத்தைத் தருதலா லிப்பெயர் வாய்ந்தது, a disease in which the blood is contaminated and a general swelling of the body is then followed with a deep yellow or blue tint to the skin. It is marked by an excessive preponderance of the deranged Vayu and Pittam. It is so called from the blue colour which it imparts.

அலி மோதை, முன்னை, Indian headache tree—Premna spinosa.

அலியர், பேடிகள், impotent men; 2. ஆணிலும் அல்லது பெண்ணிலும் சேராதவர் hermaphrodites.

அலியன், செங் கடுக்காய், a red variety of chebulic myrobalan — Terminalia chebula.

அலியன் குறிஞ்சி, செங் தொட்டி, climbing nettle—Tragia involucrata.
See அலிபரணி.

அலியூன், யுனானி முறையில் வழங்கு மோர் மூலிகை. இதனால், ஈரல் நோய், மார்பு வலி, வயிற்றுவலி, கண் புகைச்சல், கல்லடைப்பு, உதிரச் சிக்கல் முதலியன போம். கஷாய மிட்டுக் கொப்பளிக்கப் பல் நோய் நீங்கும். எலும்பை மண்ணில் புதைத்துத், தினப்படி நீர் விட்டுவர இப்பூண்டு தானுப்ப் பிறக்கும், a drug used in Unani medicines. It is prescribed for the affection of the liver and the chest, colic, dullness of eyesight, stone in the bladder, menstrual disorders etc. An infusion of this is used as a gargle in tooth-ache.

It is said that the plant can be grown in a soil containing bones, by watering it daily.

அலீகம், நெற்றி, forehead.

அலீகன், தலை, head.

அலீ மகம், காமாலை ரோக பேதம், different kinds of jaundice. See அலிமகம்.

அலுத்தல், சலித்தல், being exhausted; 2. களைத்தல், being fatigued; 3. சோர்தல், becoming tired.

அலுப்பு, இளைப்பு, weariness.

அலுப்பு நித்திரை, உடம்புச் சோர்வினு லேற் பட்ட தூக்கம், sleep through fatigue; 2. ஆழ்ந்த தூக்கம், deep sleep.

அலுமம், புளிப்பு, sourness.

அலுவா, ஓர்வகைத் தித்திப்புப் பலகாரம், a kind of sweet cake or preserve.

அலுவீகம், வில்வம், sacred Lingam tree or Holy garlic pear — Crataeva religiosa alias Aegle marmelos.

அலு வேகிகம், பெருங்காய நாறி, that which has the smell of asafoetida.

அலூகம், see அலுவீகம்.

அலேகம், பஞ்சலோக மணல், a mixture of five kinds of metallic ores; 2. லோக மணல், iron sand or iron ore.

அலை, கடலின் அலையடித்து ஒதுக்கிய கரு மணல், black sand washed ashore by the waves; 2. மது, sweet liquor; 3. பூமி earth; 4. கடல், sea; 5. நீர், water; 6. கொலை, murder.

அலை கங்கணம், வெண் காரவள்ளி, a white pungent onion.

அலைகுதல், see அலைதல்.

அலைக் கழித்தல், அலைத்து வருத்துதல், to put one to trouble, said of a child.

அலைசடி, சோர்வு, fatigue.

அலைசல், சோம்பல், laziness.

அலைசுதல், கழுவுதல், to wash.

அலைச்சல், திரிவதனு லுண்டான தொந்தரவு, trouble from walking up and down.

அலைதல், தள்ளாடுதல், tottering.

அலைதாடி, ஆடு அல்லது மாட்டின் கழுத்திற் புடைத்து, ஆரம்போற் தொங்குந் தசை மடிப்பு, இதைக் களகம்பள மென்றும் சொல்வர், the fold of the skin that hangs from the throat of sheep, cows and other animals—Dewlap.

அலைதாரை, நீர்ப்பெருக்கினளவு காட்டுங்குறி, a mark indicating the rise and fall of water—Water-mark.

அலைத்தல், அடித்தல், to beat, 2. கையாலடித்தல், to strike with the open hand; 3. உருட்டுதல், to roll down.

அலைத்திசம், தினை, Italian millet — Setaria Italica.

அலை மணைதயகி, மாணிக்கம், a bright ruby supposed to be found on the heads of certain very old cobras.

அலையிற் றிரண்ட தீபம், கடல்துரை, sea-froth.

அலைவன், பூனை, cat.

அலைவாய்க் கரை, அலைகளுடைய கடற் கரை, sea-shore washed by waves.

அலைவு, ஓயா அசைவு, unceasing motion, as in the rising waves or in the rising mind.

அலைவுற்ற நாடி, அலையைப்போல் நிலையில் லாம லசையும் நாடி, an unsteady pulse like the waves of the sea.

அலோகம், லோக மல்லாதது, non-metal—Metalloid.

அலோகி, அலோசி, } பசலைக் கொடி, spinach; Indian purslane—Portulaca oleracea.

அலோசகம், கண்ணிற்குள் பார்வைக்கு ஆதாரமாக வுள்ளது, that which has its seat in the eyes and supports the power of vision.

அலோதகம், பெருங் கொத்தவரை, a large variety of cluster bean — Cyamopsis psoralioides.

அலோமி, பொற்றலைக் கையாந்த கரை, marygold verbesina or Ceylon verbesina — Wedelia calendulacea.

அலோமுகம், பெருங் காளான், a big species of mushroom—Agaricus campestris.

அல், விறகு, fuel; 2. சுக்கு, dried ginger; 3. மயக்கம், delusion; 4. அதிசாரம், diarrhoea or dysentery; 5. இரவு, night; 6. இருட்டு, darkness; 7. அந்திப் பொழுது, evening time; 8. அல்லாதது, that which is not or that which negatives the attributes of a thing; 9. எதிர்மறை, no or not —A verbal prefix.

அல் கந்தி, அந்திப் பொழுது, twilight, evening time.

அல்கலும், நாடோறும், daily.

அல்கல், இரவு, night; 2. குறைதல், diminution; 3. நாள், day; 4. சுருங்கல், reduction.

அல்கு, பிற்பகல், after-noon.

அல்கு கழி, உப்புக் கழி, a recess on the shore of the sea.

அல்குதல், சுருக்குதல், to diminish or reduce in quantity.

அல்குப்பை, பொற்றலைக் கையாந்த கரை, see அலோமி.

அல்கு லழற்சி, பெண்குறி வெளி யுறுப்புகளின் வேக்காடு, inflammation of the external organs of generation—Vulvitis.

அல்குல், பெண்குறியின் மேற்பக்கம் அதாவது அடி வயிற்றின் கீழ், மேகனப் பொருத்து வாயின் மேல், சாதாரணமாய்ச் சுவ்வுகளினுலாகிய மிருதுவான நிணமேடு, பருவ காலத்தில் இது மயிரால் மூடப்பட் டிருக்கும், that portion in a woman extending from the lower part of the abdoman and covering the symphsis pubis, formed from the common skin which is elevated by fat. It is covered with hair at the age of puberty *c. f.* அகல்.

2. அடியிற்கண்டபடிப் பெண்களின் வெளி சனன வுறுப்புகள் முழுவதையும் குறிக்கு மோர் பொதுப் பெயர், as mentioned below, it is a common term for all the external organs of generation in a female.

1. அடிவயிற்றின் கீழ், எலும்பின் மேற்படிந்து பிருதுவா யுள்ள நிணமேடு, a rounded prominence at the symphysis pubis of a woman—Mons veneris.

2. நிதம்பங்கள் அவையாவன.—the lip-shaped organs viz.—

(*a*) பேரிதழ், அல்குலின் தோல் மடிந்து ரீண்டு இருபக்கமும் அமைந்துள்ள உதட்டைப் போன்ற உறுப்பு, the hairy fold of the skin like the lip on either side of the slit of the vulva—Labium majus.

(*b*) சிற்றிதழ், பேரிதழின் உட்பாகத்தில் அமைந்துள்ள சளிச் சவ்வினுல் ஆக்கப்பட்ட சிறிய உதடுகள், the small folds of the mucous membrane within No. 2—Labium minus alias Nympha.

3. சுமரி, கடிதடத்திற்கு அடியில் நரம் புணர்ச்சியுள்ள சிறிய ரீண்ட கூர்மையான உறுப்பு, a small, elongated, erectile body situated at the anterior angle of the vulva, just below No. 2.

4. புழுக்கை, சுமரிக்குக் கீழ், உள்ள உதடுகளின் மத்தியிலிருக்கும் பிளப்பு, the space below the clitoris and between labium minus or nympha in No. 2.(b)—Vestibule of the vulva.

5. வடிசம் அல்லது அல்குற் கலவை, அதாவது பெண் குறியின் பேரிதழ் பிற் பாகத்தில் மடிந்துள்ள சளி சவ்வு, the fold of the mucous membrane at the posterior junction of the labium majus in No. 2. (a)—Fourchette.

6. சந்திர காடி, யோனி வாயிலின் வெளிப் புறத்தில் உதடுகளின் உட்பக்கம் படிந்து மூடிக் கொண்டிருக்கும்

சவ்வு. இதற்கு, கன்னி முத்திரை என்னும் பெயர். the membranous fold which closes tightly the external orifice of the vagina—Hymen.

7. பகம், மல வாயிலுக்கும் அல்குல் கவைக்கும் மத்தியிலுள்ள பாகம், the space or the area between the anus and the genital organs—Perineum.

8. நீர்த் துவாரம், யோனி வாயிலுக்கும் சுமரிக்கும் இடையே யுள்ள மூத்திரத் துவாரம், urethral orifice.

9. பூப்பக வாயில், நீர்த் துவாரத்துக்குக் கீழாக அகண்டாகாரமா யிருக்கும் துவாரம், the external vaginal opening just below the urethral orifice—Os externum.

அல்குற் கட்டு, ஒருவன், தன்னேத்தவிர மற்றொரு புருஷனே ஒரு பெண் அடைந்தால் அவளுக்குக் கருவழிவு, யோனிப் புற்று, யோனிப் புண், பெரும்பாடு, முதலிய நோய்களே யுண்டாக்கித் துன்புறச் செய்வது மல்லாமல் மறுபடியும் அவள் கலவிக்குத் தகுதியில்லாதவளாகச்செய்யும் ஓர் மாந்திரீக வித்தை, a kind of black art practised on a woman who is made to suffer from diseases peculiar to the genital organs such as, abortion, chancre, condyloma, menorrhagia etc., thus rendering her unfit for sexual intercourse.

This is done purely out of malice with a view to wreak vengeance, on finding her in love with another.

அல்குற் கண்ட தாபனம், பெண் குறியின் கடிதடத்திற்கு அடியிலுள்ள நீண்ட கூர்மையான உறுப்பாகிய சுமரிக்கு ஏற்படும் அழற்சி, inflammation of the erectile organ known as clitoris—Clitoriditis.

அல்குற் கண்டம், பெண்குறி யினுள்ள சிறிய நீண்ட கூர்மையான உறுப்பு, இதற்குச் சுமரி என்னும் பெயர், the small, elongated, erectile body in the vulva—Clitoris.

அல்குற் கந்தம், see அல்குற் புற்று.

அல்குற் கவை, வடிசம், இது பெண் குறியின் பேரிதழின் பிற்பாகத்தில் மடிந்துள்ள வோர்சளி சவ்வு, a fold of mucous membrane at the posterior junction of the labia majora—Fourchette.

அல்குற் கழலை, பெண் குறியின் உதட்டின் இருபக்கங்களிலும் உற்பத்தியாகி ஆழமாக வெடித்துப் புண்ணுகி காற்றத்துடன் நீ சொழுகப் பெற்ற ஓர்விதப் பெருங் கழலைக் கட்டி. இது அபூர்வமாக உண்டாகும், a rare disease in the genital of a female consisting of large tumours on both sides of the lips (*labia majora*) divided with deep fissures and discharging a large quantity of offensive fluid—Oozing tumour.

அல்குற் சிலந்தி, பெண்களின் வெளி யுறுப்புகளிற் காணும் விரணத்தோடு கூடிய புண், ulceration of the external genital parts in a female—Cancrum pudendi.

அல்குற் சிவு, கிழிந்த அல்குலைத் தைத்தல், the sewing up of a lacerated perineum; 2. அல்குலின் பேரிதழுக்குப் போடும்தையல், the suturing of the labia majora—Episiorrhaphy.

அல்குற் சுமரி, see அல்குற் கண்டம்.

அல்குற் சூலை, பெண் குறியில் சூதகத் தாரையில் ஏற்படும் வலி, pain in the vagina—Vaginodynia or Colpodynia; 2. சூதகத் தாரைக்கு ஏற்பட்ட அழற்சியினு லுண்டாகும் குத்தல் நோய், acute pain due to vaginal inflammation.

அல்குற் தாபம், பொதுவாகப் பெண் குறியின் வெளி யுறுப்புகளுக்குக் காணும் அழற்சி, inflammation of the external part of the organs of generation in the female, (*vulva*) — Vulvitis; 2. பெண் குறியின் சூதகத் தாரையில் ஏற்படும் அழற்சி, inflammation of the vagina—Vaginitis.

அல்குற் தாரை, see அல்குற் துவாரம்.

அல்குற் திரவித்தல், பெண் குறியினின்று நீர் முதலியவை பொசியப் பண்ணல். இது சாதாரணமாய்ச் சூல் கொண்ட காலத்தில் வெளிப்படும், a discharge of thin mucous from the uterus of the pregnant woman, due to the excessive secretion of uterine glands—Hydrorrhea gravidarum.

அல்குற் தின்வு, பெண் குறியின் வெளி யுறுப்புகளிற் காணும் அபரிமிதமான நமைச்சல், a disease consisting of an intense itching of the external genitals of the female—Pruritus vulvae.

அல்குற் துவாரம், பூப்பகம் அல்லது நீட்டுத் தாரையின் வாயில், the external vaginal opening; 2. பூப்பகம் அதாவது பெண்களுக்குக் கருப்பையினின்று மாதவிடாய் ஒழுகப்பெற்ற தாரை. இதுவே கர்ப்பத்தினின்று குழந்தை வெளிவரும் வழி.

புணர்ச்சிக்கு காரணமான விடம், the membraneous canal through which the menstrual blood is discharged. This is the passage intended for the expulsion of the child from the womb and for receiving the penis in copulation.

அல்குற் பவுத்திரம், பெண் குறியின் பூப்பகம் அல்லது மூத்திரத்தாரை, பேரிதழ், ஆசனவாய் முதலியவைகளுக்குள் ஏற்படும் பல விதப் பவுத்திர நோய்கள் the several kinds of fistula in a female pertaining to the vagina, the rectum, the bladder, the urethra and the perineum viz;—

1. Genito-urinary fistula.
2. Perino-vaginal fistula.
3. Recto-labial fistula.
4. Recto-vaginal fistula.
5. Vesico-vaginal fistula.

அல்குற் பிளவு, பெண் குறியி னிருபக்கங்களினு முள்ள வுதடுகளின் நடுவே யுள்ள பிளப்பு. இதற்குப் புழுக்கை யென்னும் பெயர், the hollow space below the clitoris and between the two lips (*labium*) in a female —Vestibule of the vulva.

அல்குற் பிறை, பெண் குறியின் நீட்டித்தாரையின் வாயிலண்டை இருக்கும் சதைப்பாகங்களுக்குக் காணும் மிக்க வுணர்ச்சியால் ஏற்படும் பிடிப்பு வலி, the painful spasm of the vagina due to the extreme sensitiveness of the skin at its entrance or thereabout—Vaginismus.

அல்குற் புகல், யோனிக்குட் புகட்டுதல், vulval penetration.

அல்குற் புரை, யோனித் துவாரத்தி னருகேயுள்ள நான்கு மடிப்புகளாலாகிய சுருங்கிய தசைப் பாகம், the four rings or folds surrounding the vagina at its orifice, resembling myrtle leaves—Caruncula myrtiformis.

NOTE.—They are supposed to be the relics or remains of the ruptured hymen, but they are not so.

அல்குற் புழுக்கை, சுமரிக்குக் கீழ், உதடுகளின் மத்தியி லிருக்கும் பிளப்பு, the space below the clitoris and between the labium minor—Vestibule. See அல்குற் பிளவு.

அல்குற் றபம், பெண்குறியி லுண்டாகு மழற்சி, inflammation of the vulva—Vulvitis.

அல்சி, ஆழிவிதைச் செடி, linseed plant — Linum usitatissimum.

அல்சி விதை, ஆழி விதை, the seeds of linum —Linseed.

அல் நார், கல் நார், earth-flax or mountain flax called asbestos — Amianthus. It has the peculiar property of resisting fire.

For further details see under கல் நார்.

அல்பானந்தம், see அற்பானந்தம்.

அல்லகம், செந்தாமரை, red lotus — Nelumbium speciosum; 2. செங் கழுநீர், red indian water lily — Nymhae odorata; 3. கோவணம், a piece-cloth worn on the loins by males to cover the genitals. This is a customary covering among the poor Indians.

அல்ல சங்கம், வெள்ளி, silver—Argentum.

அல்ல மாகிகம், இஞ்சி, ginger—Zingiber officinalis.

அல்லம், see அல்லமாகிகம்.

அல்லல், சேறு, mire.

அல்லாசி, பெருங் கொடி முந்திரிகை, a big species of grapes—Vitis vinifera.

அல்லாரி, அல்லி, which see; 2. வெள்ளல்லி white water-lily — Nymphae edulis alias N. stellata; 3. வெள்ளாம்பல், white-lily or white aumbal or Lutchumis lily —Nymphae lotus.

அல்லாருகம், பெருந்தாளி, a large species of convolvulus.

அல்லி, இது இராத்திரியில் பூர்ப்பதாலிப் பெயர். இதற்கு ஆம்பலென்றும் அல்லித்தாமரை என்றும் வெவ்வேறு பெயர்கள் உண்டு. இது நீர்ப் பாங்குள்ள குளம், குட்டை, வாய்க்கால், நீரோடை முதலியவிடங்களில் தண்ணீரின் மேல் மூடித்திருக்கும். இதன் வேர்த்தண்டு, சிறிய வேர்களை மண்ணில் படியும்படி விடும். வட்டமான இலைகளும், பூக்களும் தண்ணீரின்மேல் மிதக்கும். இது பீனிசம், மலபந்தம், உடம்புச்சூடு, இவைகளைப் போக்கும். இருதயம், மூளை, இவைகளைப் பலப்படுத்தும், இதுஅடியிற் கண்டபடி பலவகைப்படும். ஆயினும் பொதுவாக அல்லியெனின் வெள்ளல்லியையே குறிக்கும், it is so called from its flowering at night and it is otherwise called Aumbal; Lily lotus genus—Nymphae edulis. It is a water-plant found in lakes, ponds, canals, rivers etc. The fleshy or tuberous root-stock will be sending down rootlets into mud and

the leaves are usually circular; the flowers are large and expanded, and will be seen floating on water.

It is used for curing constipation, catarrh of the nose and bodily heat. It also strengthens the brain and cools the heat in the system. The following are the different varieties, but the word அல்லி generally applies to white water-lily.

1. வெள்ளல்லி, white Indian water-lily —Nymphae lotus (*pubescens*).
2. சிகப்பல்லி, red Indian water-lily — Nymphae rubra alias Nymphae edulis.
3. செவ்வல்லி, see சிகப்பல்லி.
4. நீலவல்லி, Blue Indian water-lily— Nymphae stellata.
5. சிற்றல்லி, star water-lily—Nymphae cyanea.
6. செங்கழுநீர், purple Indian water-lily—Nymphae odorata.
7. வெள்ளாம்பல், அல்லது நெய்தல், white Indian water-lily—Nymphae lotus alias Custalia pubescens.

NOTE. 1.—Compare also the other varieties such as:—

Crinum asiaticum, keel-leaved african lily, poison lily, polianthes tuberosa, Fourcroya gigantea, giant mexican lily, Methonica superba, Malabar glory lily, superb lily, flax lily, and tuberose white lily.

NOTE. 2.—In Tamil, கொட்டி, ஆம்பல் and நெய்தல், are differently classified which is evident from the following stanza.—

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு ''

but they are all named in English by a common term viz. Indian water-lily and classified under the same Botanical group viz. Nymphaeaceae.

அல்லி, பூந்தாது, filaments of a stamen; 2. தாமரை, lotus; 3. காயா, iron-wood tree — Memecylon tinctorium; 4. இளவேர், tender root; 5. இரவு, night; 6. அகவிதழ், inner petals of flowers; 7. அல்லியரிசி, Lily-seeds.

அல்லிகம், பேய்க் கொம்மட்டி, wild bitter-apple—Cucumis colocynthis.

அல்லிக் கிழங்கு, அல்லிக் கொடியின் கிழங்கு, இதைச் சாதாரணமாய்த் தின்பதுண்டு. இதினின்று ஓர்மாவு தயாரிக்கப் படும். ஏழை சனங்களுக்கு அது உணவாக உபயோகப்படும், the root of the plant — Nymphea lotus. It is eatable and a kind of flour like the arrowroot is also prepared from it. It forms an article of food for the poor.

அல்லிக் கொடி மூல செயநீர், சாகா வுப்பு செயநீர், (*in alchemy*) a secret term used for a strong liquid preparation by a special process known only to Siddhars. It is used in Alchemy and for rejuvenation.

அல்லிக்கொடி மூலம், சாகா வுப்பு, a kind of salt prepared by a secret process for strengthening the body and also for longevity; 2. அல்லிக் கிழங்கு, which see.

அல்லிக் கோணி, பேய்க் கற்றுழை, இதனால் பெரு மேகம்போம், wild aloe;Demon aloe — Agave Americana. It is capable of curing urinary diseases, like the diabetes etc.

அல்லித் தண்டு, ஆம்பற்றூள், the stalk of the water-lily.

அல்லித் தாமரை, வெள்ளாம்பல், white indian water-lily—Nymphaea lotus.

அல்லித் தாள், see அல்லித்தண்டு.

அல்லிப் பிஞ்சு, பூவிழாத பிஞ்சு, இளம்பிஞ்சு, very tender unripe fruit just formed from the blossom.

அல்லி முகை, பூந்தாது, (*in Botany*) anther.

அல்லி மூக்கு, இரத்த மொழுகும் மூக்கு, see சில்லி மூக்கு.

அல்லி மூலகம், see அல்லிக் கிழங்கு.

அல்லியக் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, the root of a water plant — Aponogeton monostochyon.

அல்லியரிசி, see அல்லியிதை.

அல்லியோ ரங்கை, கீரிப் பிள்ளை, mungoose —Herpestes mungo.

அல்லிரி, see அல்லி.

அல்லிவஞ்சி, பட்டாணி, pea—Pisum sativum.

அல்லி வாதாளி, அமுக்குரா, which see.

அல்லுகம், பெருங் கொய்யா, a big variety of guava—Psidium guyava.

அல்லும் பகலும், இரவும் பகலும், எப்பொழுதும், night and day.

அல்லூரம், வில்வ மரம், holy garlic pear—Crataeva religiosa.

அல்வலி, வள்ளிக் கொடி, a creeper the root of which forms an article of food—Convolvulus repens; 2. அல்லி, which see.

அல்வலக் கிழங்கு, see அல்லிக் கிழங்கு.

அல்லோன், சந்திரன், moon; 2. ஓர் மரம், the oak-tree.

அல்வா, ஓர்வகைத் தித்திப்புப் பண்டம், a sweet-meat made of wheat flour, ghee and sugar—A sweet confection, a favourite dish of the Mahomadans.

அவகண்டம், முகப்பரு, boil or pimple on the face.

அவகத வாய், கீழா நெல்லி, featherfoil plant—Phyllanthus polyphyllus.

அவகத்தம், புறங்கை, the back of the hand.

அவகத்தலா, see அவகதவாய்.

அவ கர்த்தம், குழி, any cavity in the system.

அவகர்த்த விரணம், புறங்கையில் குழி விழுமோர்வகை விரணம்—குழிப்புண், a deep wound on the back of the hand.

அவகாகம், நீராடுதல், to bathe; 2. நீராடுமிடம், bathing ghat; 3. ஏந்த ஏந்த அவயவத்திற்கு நோய் ஏற்படுகின்றதோ, அந்தந்த அவயவத்தை, அந்நோய்க்குரிய மூலிகைகளைக் கஷாயமாகக் காய்ச்சி அதில மிழ்த்தி வைத்திருத்தல், a process of treatment in Ayurveda by which the parts affected by a particular disease are dipped in a decoction prepared from the drugs capable of curing such a disease.

அவ காதம், சடுதி மரணம், a violent and instantaneous death; 2. அடித்தல், giving a fatal blow; 3. கொல்லல், causing death by violence, as in a murder; 4. குத்தல், stabbing.

அவகாரம், யானை மீன், a large sea-fish named from the proboscis (like an elephant's trunk) on its nose; elephant-fish—Chimaera callorhynchus; 2. யானைச் சுரு, elephant-shark.

அவகார்த்த விரணம், see அவகர்த்த விரணம்.

அவகாலம், கெடிகாலம், epidemic period; 2. கேடு காலம், (*in Astrology*) a period in one's life attended with misfortunes due to the influences of evil planets.

அவ கிரித்தியம், கெட்ட செய்கை, wicked actions.

அவகீனம், தேன், scorpion.

அவகுணம், கெட்ட குணம், bad quality; bad disposition; 2. கெட்ட குறி, bad symptom.

அவகேசி, அவகோசி, பூத்துங் காயாத மரம், a tree which yields flowers but does not bear fruits—Barren tree.

அவ கோலம், அழிஞ்சில், ancola-fruit plant—Alangium lamarckii.

அவக் காட்சிதம், பெருஞ் செமிட்டி, a plant (*unidentified*)

அவக் கிரசம், காடி, vinegar; 2. புளிப்பு, that which is sour.

அவக் கிரந்தனம், உரத் தழுதல், crying loudly.

அவக்கு வாதம், செரியாமை, indigestion; 2. முறைப் பிசகான கஷாயம், a decoction imperfectly or improperly prepared.

அவக் குறி, மரணக் குறி, the symptom of death; 2. கெட்ட குறி, bad symptom.

அவக்கை சுரம், see அவகத வாய்.

அவக் கொலை, தன் மரணம், unnatural death from accident, suicide, murder etc.

அவசதம், கல்லூரி, blistering ammannia—Ammannia baccifera alias A. vesicatoria.

அவசம், மயக்கம், (*In pathology*) stupor; 2. சன்னியால் உணர் வழிதல், loss of feeling in delirium; 3. மூர்ச்சை, swoon; 4. பரவசம், (*in religious philosophy*) bewilderment of the senses through devotion (*Bakthi*)—Ecstasy; 5. மூச் சொடுக்கம், (*in psychology*) suspension of the senses voluntarily, as is done in Yoga—Trance. See அதிசுழுத்தி.

அவசர்க்கம், உடம்பின் கழிவு, that which is cast off or discharged from the body—Excretion.

அவசர்ப் பிணி, உலகம், வாழ் நாள், போகம், முதலியவை, தேய் பிறைபோற் சுருங்குங்

காலம், a waning period or the declining condition in a man's life during or at which the worldly affairs, life, enjoyments and pleasures are gradually reduced; a period leading on to the culmination of a process of gradual decrease.

அவசா, உணவு, food.

அவசாதகம், அவசாதம், } இளைப்பு, fatigue; 2. களைப்பு, exhaustion.

அவசாதம், காம ஆசையிற் சித்தி பெருமையா லுண்டாகு முடம்பின் மெலிவு, weakness of the body due to unsatisfied lust; 2. இளைப்பு, emaciation.

அவசாதனம், சிலந்தி முதலிய புண்களின் சதை வளர்த்தி கரைதல், gradual destruction or wasting a way of the soft malignant growths or supergrowths of an ulcer; 2. உடம்பிற் றேன்றிய சதை வளர்த்தியைச் சூடுகாட்டித் தீய்த்து அகற்றல், removing the proud flesh by corrossive or caustic applications—Eschar.

அவசாரம், வேசித்தனம், prostitution; 2. உள்வெளிக் கசிவு, the passage of liquids through membranes or porous media, from within outward—Exosmosis. The reverse process is called *Endosmosis*.

அவசாரி, வேசி, prostitute.

அவசான காலம், மரண காலம், the time of death.

அவசானம், முடிவு, the end of anything; 2. மரணம், death.

அவசி, கழுதைப் பாலை அல்லது நஞ்சறுப் பான், a plant, common Indian ipecacuanha—Tylaphora asthmatica.

அவசி கத்தம், கடனுரை, sea froth—one of the 120 kinds of natural substances contemplated in the Tamil Medical science.

அவசீனம், தேள், a scorpion, see அவகீனம்.

அவசு தப்தம், குளிரினால் விறைத்தல், stiffening with cold; getting benumbed with cold.

அவசுரம், உணர்வு கெட்டு மயங்கி, வியர்த்து, கழிச்சல், நித்திரை, சுரம், முதலியவைகளை யுண்டாக்கு மோர்வகைச் சுரம் (பராச சேகரம்), fever characterised by giddiness, unconsciousness, perspiration, purging, sleep etc.

அவசுனரி, காட்டு முருங்கை, wild drum-stick tree—Moringa concanensis.

அவசேந்திரிய சித்தம், சுயேச்சை, that state in which one's mind and senses are not held in subjection.

அவ சோதி, வெட்சாரம் அல்லது வெடியுப்பு, nitre—Potassium nitrate ($K NO_3$)

அவச்சா, see அவக் கொலி.

அவச்சாவு, பிராய மின்றி மேற்படுஞ் சாவு, premature death; 2. தன் மரணம், unnatural death.

அவஞ்சம், ஆண் குறி, the penis.

அவடம், முருங்கை, Moringa tree — Anona moringa.

அவடம் பாதி, வசம்பு, sweet flag — Acorus calamus.

அவடு, கழுத்தின் பிற்பக்கம், the back of the neck; 2. பிடரி, nape.

அவட்டம், நாய் வேளை, dog-mustard plant—Cleome Viscosa; 2. வால் மிளகு, tail pepper—Piper cubeba.

அவட் டம்பம், பாரிச வாயு, paralysis of one side of the body—Hemiplegia.

அவணம், அம்மணம், nakedness; 2. இலவணம், salt.

அவதஞ்சம், காரமான வுணவு, any pungent food; 2. செழுமலர்க் கொன்றை a flowering plant (*unidentified*).

அவதம், பற் குழி, a hole or depression in a tooth; 2. உடம்பிற் குழிவிழுந்த பாகம், any depressed part in the body.

அவதர்ப் பணம், சாந்தப் படுத்தும் மருந்து, a soothing remedy—A palliative.

அவதாதம், மஞ்சள் நிறம், yellow colour; 2. வெண்மை, whiteness.

அவதான முதிர்ச்சி, விலாமிச்சை வேர், roots of cuscus grass — Andropogon muricatus.

அவதானம், நினைப்பு, memory; 2. கவனம், attention; 3. ஞாபக சத்தி, retention of memory.

அவதி, அளவு, measure; 2. see அவதி ஞானம், 3. துன்பம், suffering.

அவதி கத்தம், கடல் நுரை, sea-froth; 2. கடற் சிப்பி, a sea-shell worn out by age.

2. போகம்—creation, production.

3. அதிகாரம்—domination.

VI. பஞ்சாவத்தை, அதாவது நிலையிருக்கேற்பட்ட ஜந்துவித உயிர்நிலை உபாதிகள் அவையாவன:—(*in Yoga Philosophy*) the five stages of consciousness of the soul when passing from the physical into the intellectual state viz:—

1. சாக்கிரம்—wakefulness.

2. சொற்பனம்—dream.

3. சுழுத்தி—deep sleep or trance.

4. துரியம் — quietness or repose through abstraction of mind.

5. துரியாதீதம்—insensibility to surroundings.

VII. தசாவத்தை அதாவது மரண முன்டாவதற்கு முன்னம் மனிதர்களுக்கு இயல்பிலே உண்டாகும் பத்துவித வேதனைகள், அவையாவன:—(*in Pathology*) the ten symptoms which are naturally experienced before death viz:—

1. பிண நாற்றம்—fetid smell.

2. வேற்றுமைக் கூறல், incoherency.

3. தெளிவு நாற்றம், clearness of intellect and mature knowledge.

4. இளைப்பு—fatigue.

5. முகம் வேர்த்தல்—perspiration of the face.

6. உடம்பு குளிரல்—chillness of the body.

7. அன்னத்தை நாடல்—craving for food.

8. கண் பஞ்சாடல்—dimness of vision —Scoloma.

9. உடம்பு வியர்த்தல்—perspiration of the body.

10. மரணம்—death.

VIII. ஊழ்வினையின் பயனால் நேரும் சுகதுக்கங்கள், (*in Karmic Philosophy*), the sufferings and enjoyments from actions of previous births.

அவத்தை பத்து, தசாவத்தை see அவத்தை.

அவத்தைப் பிரயோகம், மரணவேதனையை யுண்டாக்கல் அல்லது உண்டாகும்படிச்செய்தல், inducing or causing to be induced the agony of death in an individual; 2. சூனியம் வைத்துக் கொல்லுதல், causing the death of one by sorcery.

அவஸ்தா, பெண் குறி, the female organ of generation.

அவஸ்தா திரயம், மூன்றுவித நிலைமை, அதாவது சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, the three states or stations of the soul viz:—wakefulness, dream and sound sleep.

அவந்தாதிகம், பெருஞ் சிறும்பான், a plant (*unidentified*)

அவந்தி, திப்பிலி, long-pepper — Piper longum; 2. காடித் தண்ணீர், a fermented fluid, like the vinegar, malt etc; 3. கிளி, parrot; 4. அரிசியைப் புளிக்க வைத்த தண்ணீர், fermented rice-water.

அவந்திகை, கிளி, parrot—Taccocua; 2. மஞ்சளவரை, yellow bean.

அவந்திக் கண்ணி, வெருகஞ் செடி, a plant with bulbous roots—Arum macrorhizon.

அவந்தி சோமம், புளித்த கஞ்சி, fermented rice-water; 2. காடி, any, fermented liquid such as vinegar etc.

அவந்தி நாதம், பெருஞ் சின்னி, large-leaved acalypha—Acalypha fruticosa.

அவ பத்தியம், பத்தியக் தவறல், பத்தியக்கேடு, failure in keeping up the diet or the regimen; 2. மருந்திற்கு விரோதமான பண்டங்களைச் சாப்பிடுதல் அதாவது புறப் பத்தியம், eating substances likely to counteract the effect of medicines; 3. இச்சா பத்தியம், partial or simple diet; 4. விடு பத்தியம், abstinence from regular food.

அவ பாகுகம், கைகளைச் சூம்பச் செய்தல், atrophy of the arms—Brachial atrophy. See அவபாகுக வாதம்.

அவ பாகுக வாதம், தோள்களையும், கைகளையும் சூம்பச் செய்யு மோர்வித வாதநோய். இது அவபத்தியமான பண்டங்களைப் புசித்தலாலும், பனிக்காற்றுள்ள விடங்களில் சதா பெண்ணைப் போகித்தலாலும், தோள்களிலிருக்கும் ரத்த நரம்புகளைத் தாக்கி அவைகளை மெலியச் செய்யும். இதற்குப் 'பாகு தோஷம்' என்னும் பெயர், a progressive muscular atrophy affecting the shoulders, forearms and the hand. It is brought about by various constitutional diseases arising from causes like irregular diet, excess of sexual intercourse in places exposed to chill weather, dew etc, and so on—Arthritic atrophy.

அவபாசினி, உடம்பின் சருமத்தின் முதற் பாகம், the first fold or layer of the skin,

which is the seat of some of the skin diseases.—Epidermis.

அவ பாதனம், வெட்டுதல், cutting.

அவ பாதிகம், பூப்படையாப் பெண்களோடு புணரெத்தனித்தல், கைமுஷ்டி, விந்து வைத் தடுத்தல், ஆகிய பல காரணங்களை முன்னிட்டு, ஆண் குறியின் தோலானது மேலுக்கேறிச் சுருங்கி வீங்கிக் கீழுக் கிறங்காமல் வேதனையை யுண்டுபண்ணுதல், retraction and constriction of the prepuce behind the glans penis. In this, the integument of the prepuce is abnormally and forciby turned back by various causes such as, coition under excitement with a girl (*not matured*) or masturbation or a blow on the penis or voluntary retention of the flow of semen or forcible opening of the prepuce—Paraphymosis.

அவ பீடம், பச்சிலை முதலியவைகளின்சாற்றைக் கொண்டு செய்யப்படும் நசியம், a medicated snuff prepared out of the juice of green herbs 2. மூக்கிற்கசக்கிப் பிழியும் ரசம், the juice of any plant or herb put into the nostrils in drops by pressing it with the palms then and there—A kind of errhine; 3. தும்ம ஹண்டாகும்படிச் செய்வதற் குபயோகிக்கும் ஐந்துவித நசியங்களுள் ஒன்று, one of the five sternutatories or drugs producing sneezing.

அவ பீடனம், see அவபீடம்.

அவ பீடிதம், பீதுக்கல், pressing out (*as is done to the matter in a wound*); 2. ஆண் குறித் தோலைப் பிதுக்கல், drawing back the prepuce from the end of the penis.

அவ பேதகம், பிளக்குதற் போன்ற வலி, piercing pain or ache (*as in hemiplegia*).

அவபேதக வாதம், முகத்திற் பல விடங்களில் வாயு பரவி, நெற்றி பிளந்து போவதுபோல் பொறுக்க முடியாத வலியை யுண்டாக்கு மோர்வகை வாதநோய். இது சிலேட்டுமத்தினுல் பிறந்து, முக்கியமாய்க் கண், புருவம், நெற்றி இவைகளைத் தாக்கும், a disease affecting the facial nerves and causing an unbearable piercing pain. It is due to deranged Vayu. It chiefly affects the eyes, eyebrows and the forehead—Histrionic paralysis.

அவப் பித்தாண்டி, see அகத்தி.

அவப் பிரசவம், ஆறு மாதத்திற்கு மேலேற்படும் பிண்ட வழிவு, premature labour taking place after the sixth month of pregnancy—Fetal abortion.

அவ மதாங்குசம், மதயானை, an elephant in rut.

அவமந்த ரோகம், ஆண் குறியில் அனேக கொப்புளங்க ளுண்டாக்கி அவைகளி னின்றும் இரத்தமும் சீழுமேற்படச் செய்து வலியை யுண்டாக்கு மோர் விரண நோய், a disease marked by the formation of ulcers in the penis followed by a discharge of blood and pus. It is marked by hair standing on end through pain and shivering; a form of verruca attended with moist papules on or near the genitals, mostly of a venereal origin — Verruca acuminata.

2. சூகைப் பிரயோகத்தினுல் ஆண் குறியின்மேற் கொப்புளங்க ளெழும்பி விரணத்தை யுண்டாக்கு மோர் நோய், a diseasc marked by an inflammation of the penis attended with a large number of papules in it (incidental to an application of Sukai (சூகை) to the part). These papules burst causing much pain and shivering to the patient.

NOTE.—It is a soft, non-syphilitic venereal sore due not to any constitutional disease, but to inflammation resulting from external applications or other causes.

அவ மரணம், தன் மரணம், untimely or unnatural death such as from suicide, accident, etc.

அவ மிருத்தி யோகம், கெட்ட நட்சத்திரங்களுடன் மிருத்தை கிரகமும் கூடியநாள். இத்தினத்தில் நோய் கொள்ளில் மரணம் வருமென்பது திண்ணமென்று கருதப்படும், a day considered inauspicious on account of the constellation of bad stars and the planet of death. It is said that falling ill on such a day is a sure sign of death.

அவ மிருத்து, see அவமரணம்.

அவ மிருத்துச் செந்தூரம், மரணத்தைத் தடுக்க வேண்டித் தங்கம், இரசம், அப்பிரகம் முதலியவைகளின் சத்துக்கள் வாங்கி இரசியமாகத் தயாரிக்கும் சத்துச் செந்தூர மாகிய கற்ப வகைகளி லொன்று, a compound of red oxides prepared out of the active principles of gold, mercury and tale by a secret process. It forms one of the restoratives which arrest the innate morbific

tendencies and decay. See also *சத்துச் செந்தூரம்*.

அவ மீதம், பொற்றலைக் கையாந்தகரை, marygold verbesina — Wedelia calendulacea.

அவ மோசனம், கக்குதல், ejecting or throwing out the contents of the stomach forcibly by the involuntary action of the muscles—A form of vomiting.

அவம், ஆகாயத் தாமரை, floating lotus or sky lotus—Pistia stratiotes alias Tala indica. It is also called "The rootless nelumbo" since its roots only float on water; 2. *கேடு*, evil; 3. *பயனின்மை*, uselessness.

அவ, வெண்கடுகு, white mustard — Brassica alba.

அவயகம், யிலாமிச்சை, see *அவதானமுயற்சி*.

அவயக் குரல், அழு குரல், crying voice; 2. *கழுதையிடும் சத்தம்*, the harsh sound or grating cry of an ass—Ass's bray.

அவயக் கோழி, முட்டை யிடுவதற்காக அடை கார்க்குங் கோழி, a hen brooding or sitting on the eggs for hatching.

அவயங் காத்தல், அடை கார்த்தல், brooding or sitting on the eggs for hatching them; to incubate.

அவய சேதனம், உடம்பி னுறுப்பை வெட்டுகை, cutting off a limb or any part of the body—Amputation.

அவயம், அடை கிடக்கை, the act of brooding upon or sitting over eggs for hatching them; incubation; 2. *யிலாமிச்சை*, see *அவதானமுயற்சி*; 3. *அழுதல்*, crying as in *அவயக் குரல்*.

அவயவத் தடை, உடம்பி னுறுப்புகளின் மறிப்பு; உறுப்புகளுக் கேற்படும் தடை, organic obstruction.

அவயவ பின்னம், உடற் குறைவு, defects in the organs of the body whether congenital or acquired—Deformity; 2. *வாதத்தினு லுடம்பி னுறுப்புகள் செயலற்றுப் பழுது படல்*, defects arising from inactivity of certain organs in the body due to deranged Vayu or Wind—Atrophy; 2. *நரம்புக் கோளாறுகளினுல் உறுப்புகளுக்கு ஏற்படும் குற்றம்*, a diseased state of certain nerves by which the power of voluntary or involuntary action of the muscles is lost in any part of the body; paralysis originating in the nerves — Newral paralysis.

NOTE.—This is generally due to paralysis, ataxia, atrophy etc. or to any accident or injury or congenital causes.

அவயவம், உடம்பி னுறுப்பு, an organ of the body; a limb; 2. *உடல்*, body.

அவயவி, உடல், body.

அவயோகம், கற்ப சாதனையின்றி அதாவது காய கற்பம் சாப்பிட்டு உடம்பை வலுக்கச் செய்து கொள்ளாமல், சாதாரணமாய் உடம்பில் அனேக நோய்கள் உண்டாகும் நிலைமையில் செய்யும் யோகம், yoga performed without establishing health by strengthening the system through restoratives and thereby giving room to ailments detri mental to the practice.

அவரகம், பெரு மூங்கில், a variety of large bamboo—Bambusa arundinacea.

அவர காத்திரம், கால், a limb or leg; 2. *கீழுறுப்பு*, an organ in the lower part of the body.

அவரங்காவணை, கிராம்பு, the clove tree—Eugenia caryophyllata.

அவரஞ்சக் காரம், வெடிகாரம், nitre—Potassium nitrate.

அவரதி மாது, வட்டக் கிலுகிலுப்பை, rattle nail dye—Crotolaria verrucosa.

அவராவ பதனம், கருவழிதல், miscarriage; 2. *நஞ்சு விழுதல்*, dropping of or ejecting the secundines.

அவரி, அவுரி, Indigo plant — Indigofera tinctoria.

அவரிகம், இருதயம் அல்லது தாமரைக் காய் தன்னிடத்தை விட்டு நழுவி யிருத்தல், displacement or abnormal position or congenital malposition, of the heart—Ectopia cordis or Ectocardia.

அவருகம், பெரும் பிரமி, a variety of *பிரமி*, a plant—Gratiola monieri.

அவர்ப சாங்கம், ஆரூதாரத்தி லொன்றுகிய அனுகதம். இது 12 இதழ்களுடன் இருதயத்தி லுள்ளது. இதனுல் திரிகால வுணர்ச்சி யுண்டாகும், (*in Siddha Philosophy*) one of the 6 psychic centres or lotuses with 12 petals situated in the region of the heart. Development or rousing of this, will enable one to foretell the present, the past and the future. See *அனுகதம்*.

அவரை, அவரைக்கொடி. இதைச்சாதாரணமாய் நமது தேசத்தில் எல்லாத் தோட்டங்களி

ளும், கொல்லை, வயற்காடு, படுகை முதலான விடங்களிலும் பார்க்கலாம். இதைப்பற்றி விவரமாக எழுதவேண்டிவ தில்லை. இதன் காய் கறிக் குதவும். பத்தியக் கறியாகவும் கொள்ளலாம். இது அடியிற் கண்டபடிப் பொதுப் பெயராக மொச்சை முதலிய செடிகளைக் குறித்தாலும், அவரைக் கொடிக்குச் சிறப்புப் பெயராகக் கொள்ளப்படும், country bean creeper — Dolichos albus. It is a garden variety found in all the gardens of our country, fields, backyards river-banks, tank-beds etc. It is a well known plant and so further description of it is unnecessary. It is used in curries and Veidyans prescribe it in invalids' diet. Although it is used to denote several varieties of this group as mentioned below, it always refers particularly to the Avarai creeper. The different varieties are:—

1. கோழி யவரை, cock-bean—Canavalia obtusifolia.
2. சப்பரத் தவரை, shed-bean — Cyamopsis psorolioides.
3. கொத் தவரை, cluster-bean — Cyamopsis psorolioides.
4. சீனி யவரை, china-bean—Cyamopsis psorolioides.
5. காட் டவரை, Jungle-bean—Glycina javanica.
6. பூனைக்கா லவரை, cat-footed bean—Dolichos pruriens.
7. சீமை யவரை, foreign bean—Phaseolus trilobus.
8. முருக் கவரை, curling bean—Psophocarpus tetrugonolobus.
9. வா ளவரை, sword-bean — Vigna catiang.
10. பே யவரை, horse-bean—Canavalia ensiformis.
11. ஆட்டுக்கொம் பவரை, another variety of bean resembling the sheep's horn.
12. வெள் ளவரை, white bean—Dolichos lablab.

NOTE.—Though the above varieties end in the same terminations they are of different botanical groups.

அவரை மொச்சை, மொச்சை, country bean —Dolichos lablab.

அவரோகணம், இறங்குகை, descending; 2. அவரோகம், which see.

அவ ரோகம், சடுதியிற் கொல்லும் நோய், a disease bringing about sudden death; 2. ஆலம் விழுது, the descending root of the banyan tree; 3. மரத்தைச் சுற்றிக் கொடி படருகை, encircling of the creeper round a tree—trailing and entwining; 4. அமுக்கிரா, a plant—Physalis flexuosa.

அவ ரோகி, ஆல மரம், banyan tree which sends its roots down—Ficus bengalensis; 2. கொடுங் துன்பத்தினுற் பீடிக்கப்பட்ட நோயாளி, a patient suffering from a tormenting disease.

அவரோ பணம், வேரோடு பிடுங்கல், to tear up by the roots; to uproot.

அவரோ லாவலயம், அணிற் பிள்ளை, squirrel—Sciurus palmarum alias S. rodentia.

அவ லட்சணம், அந்தக் கேடு, ugliness or any anamoly of formation; 2. கோர ரூபம், deformity resulting from accident or disease—Acquired teratism; 3. பிறவி யிலேற்பட்ட அகோர ரூபம், great congenital deformity—Monstrosity.

அவலம், நோய், disease; 2. பல வீனம், weakness; 3. மனக் கவலை, anxiety; 4. அவுபல பாஷாணம், a kind of arsenic; 5. வருத்தம், pain, sorrow; 6. அழுகை, weeping; 7. சேங் கொட்டை, marking nut—Semicarpus anacardium.

அவலம்பக சிலேட்டுமம், இருதயத் தானத்திலும் தோள்கள் பொருத்துகளிலு மிருக்கு மோர்வகைச் சிலேட்டுமம், the phlegm that exists in the region of the chest, and the shoulder joints.

அவலம் பனம், see அவலம்பக சிலேட்டுமம்.

அவ லரக்கு, அவலைப்போல் தட்டையாக விருக்கு மோர்வகை யரக்கு. சாதாரண அரக்கை யுருக்கி இலேசாக வார்ப்பதனால் இது உண்டாகும். இத்தினுசு எங்குங் கிடைக்கும். இதை தல வகைகளில் மிகுதியாக உபயோகப்படுவ தாண்டு, flattened rice-lac, so called from its appearance. Seed-lac is melted, strained and run into thin layers to form this kind. This is the most common form in which lac is generally known. A decoction of this is usedin the preparation of several medicinal oils.

அவலன், உடற்குற்ற முடையவன், one with defects in his body ; 2. நோயாளி, a patient.

அவலாவி, பெரும் பீனை, javanese wool-plant —Aerua jaranica.

அவலி, பூனைக்காலி, cowhage plant—Mucana pruriens.

அவலித்தல், அழுதல், weeping ; 2. வருந்துதல், to be distressed in mind.

அவலுஞ்சனம், see அவரோபணம்.

அவலுப்பு, அவுரியிலிருந் தெடுக்கு மோர்வகை யுப்பு, aniline salts extracted from the indigo plant.

அவலேகம், இளகியம், (லேகியம்) a soft or pasty confection—Lambative ; 2. கஷாயம், water in which drugs have been boiled for extracting their essences—Decoction; 3. நாவினாற் பருகு மருந்து, a medicine which is taken in by licking.

அவலேபம், பூசுதல், smearing.

அவலேபனம், நாவினாற் பருகல், licking ; 2. தைலம், medicated oil ; 3. பூசுதல், anointing.

அவலை, கடுப்பு, irritation.

அவல், நெல்லை ஊறவைத்துக் காய்ந்தபின் வறுத்திடித்த வோருணவுப் பண்டம், paddy steeped in water and then partially dried and flattened—Flaked rice.

NOTE.—Paddy is well soaked in water and partially dried in the sun. It is then toasted in an earthen pot till one or two grains begin to burst. It is thereafter pounded quickly in a wooden mortar (உரல்) till it is flattened and then winnowed.

அவல்குசம், ஓர் செடி, a plant — Vernonia anthelmintica.

அவல்குலி, ஓர் விஷப்பூச்சி, a poisonous insect.

அவளிகை, குடல்களின் மேற் பக்கம் நான்கு பட்டைக ளுள்ளதாய்க் கவர்ந்து தொங்கு மோர்வகைச் சவ்வு, a fold of the peritoneum connecting the abdominal viscera —Omentum or Epiploon.

அவஹ துவஹ, கதம்ப உணவு அதாவது புலவு, curry and rice. It is a mixture of boiled rice, meat and ghee with spices —a favourite dish among the Mahomadans; 2. இச்சடிச் சாதம், a rich-food prepared on ceremonial occasions by the Hindus from the boiled rice mixed with spices and other fragrant powders. It is a purely a vegetable preparation.

அவற்கம், அரிசிக் கஞ்சி, a thick liquid prepared from crushed rice ; 2. கஞ்சி, any thick liquid prepared out of crushed grains.

அவற் காளான், தட்டையாயுள்ள ஓர்வகைக் காளான், a kind of flat mushroom.

அவற் சாதி, இலவங்கப் பட்டை, cinnamon bark—Cinnamomum Zeylanicum.

அவற் பதம், அவலிடிக்கும்படியான பதம், a term denoting the limit to which any given substance is reduced by pounding like the flattened rice.

அவற் பாஷாணம், see அவுபல பாஷாணம்.

அவனம், கொல்லல், killing ; 2. கொடி யத்தி, creeper fig—Ficus heterophylla.

அவனசிகம், இச்சிலி, orange—Citrus aurantium.

அவாகடம், வாகட முறையிற் சேராதது, that which is not used in the preparation of recognised formularies ; not authorised by pharmacopeias—Non officinal.

அவாகு, கஞ்சி, see அவற்கம்.

அவாகேச வுப்பி, பெருந் தும்பைச் செடி, large tumbai—Leucas ceppalotes alias L. Capitata.

அவாக்கி ரசம், காடிநீர், see அவக்கி சோமம்.

அவாசிய தேசம், சொல்லக் கூடாத விடம், unmentionable region i. e. the vulva.

அவாஞ்சிதம், கீழ் நோக்கிய முகம், face turned downwards.

அவாதீசரம், சிற்றரத்தை, galangal (*lesser*)—Alpinia nutens.

அவாத்தம், புறங்கை, the back of the palm. See also அவகத்தம்.

அவாநிதி, சுவாசித்தல், to breathe; to inhale.

அவாந்தரம், சூனியம், nothingness ; non-existence, nihility; 2. வெறுவெளி, vacuum; etheric space.

அவா புள்ப்பி, அவா புளிப்பி, } பிரமிப் பூடு, a kind of herb useful in many medicinal preparations —Gratiola moneiri.

அவா முகம், கீழ் நோக்கிய முகம், face turned downwards. See அவாஞ்சிதம்.

அவ்வர முகி, பிரம தண்டி, yellow thistle—Argemone mexicana.

அவாரணீயம், தீராத, incurable; 2. அசாத்திய நோய்ச் சிகிச்சை, treatment of incurable sickness.

அவாரி சிறுநீர், மூத்திரம், urine.

அவாரிகா, கொத்தமல்லி, தனியா, coriander plant—Coriandum sativum.

அவா வறுத்தல், ஆசையை முற்றிலும் ஒழித்தல், complete giving up of worldly desires—Renunciation.

அவா விசை, பெருந் தெள்ளு, பெரிய தெள்ளுக்காய்ச் செடி, (*big + flea + fruit + plant*) cowhage plant—Mucana monoperma alias Carpopogon monospermum.

அவா வின்மை, இன்ப துகர்ச்சி, suppression of passions and other sensual appetites; 2. உடம்பின் மேல் வெறுப்பு, contempt for the body; 3. பற்றற்ற தன்மை, not remaining bound by any tie or bond; desirelessness.

அவாழாயம், மூன்றெழுத்தி லோன்முகிய 'இலி' (*in Mantric sciecnce*) one of the three mystic compound letters (*Sounds*), the three letters being ஐயும், இலியும், சவ்வும்.

அவி, வேக வைத்தல், to boil; 2. சோறு, boiled rice; 3. நெய், ghee; 4. ஆடு, sheep, 5. எலி, rat; 6. காற்று, wind, air; 7. சூரியன், the sun; 8. நீர், water; 9. மலை, mountain; 10. நீராகாரம், cold-rice water; 11. புழுக்கு, to boil slightly; to seethe; 12. உணவு, food; 13. வீட்டு விலக்கான பெண், a woman in her course.

அவி கசம், அதிகம், excess; 2. மலராதது, (*in Botany*) that which is not fully opened—Bud; 3. குவிந்திருப்பது, that which remains closed or shut; 4. குவிவு, (*in anatomy*) contraction; a bud-like growth in certain animals such as the polypus; a germ; what resembles a bud.

அவி கசிதம், குவிந்தது, that which has become conical. See அவிகசம்.

அவி கண், ஓர்வகைக் கண்ணோய், a kind of opthalmia; 2. அவிந்த கண், an eye in which the cornea is destroyed; 3. குருட்டுக் கண், the blind eye.

அவி கந்திகம், குழி மீட்டான், a plant, rough basil—Ocimum Villosum.

அவிகம், பாலாடை, cream; 2. வைரம், the richest and the best part of a thing; 3. வைரம், diamond; 4. ஆடு, sheep.

அவி காயம், எரிச்சல், burning sensation; 2. தரை யீரல் வெந்து வீரணமாகு மோர்வகை கூய நோய், consumption attended with inflammation of the lungs—Pulmonary tuberculosis; 3. தோல் வெந்ததலு லேற்பட்ட தழும்பு, a scar left by a scald; 4. அழற்சி, inflammation.

அவிகாய வீரணம், காது, வாய், கண், மூக்கு முதலியவைகளில் அரிப் புண்டாகிச் சிவந்து, கண் கனத்துப் பீளை சேர்தல், தூங்க முடியாமை, விழியின் நடுவில் குத்தல், முதலிய குணங்களோடு கூடிய வோர் கண் நோய், இதில் கண் அடிக்கடி மூடித் திறக்கும், a form of conjunctivitis characterised by the itching of the ears, mouth, eyes, nose etc. in the facial region and marked by muco-purulent discharge, sleeplessness, piercing pain in the cornea, frequent winking of the eye etc.

அவிக்கிரி தாங்கம், உருப்படாத அவயவங்கள், undeveloped limbs, as in an embryo.

அவிக்கினம், ஓர் மரம், a tree—Carion carandas.

அவிக்கை, அவிக்தல், which see.

அவிசலி, சீந்தில், moon creeper—Tinosphora cordifolia.

அவிசல், அவிந்து போனது, that which is decayed.

அவிசல் நாற்றம், அவிந்த வாசனை, fetid smell;

அவிசற் கினம், விடாச் சுரம், unintermittent fever.

அவிசற் பல், சொத்தைப் பல், decayed tooth.

அவிச நாற்றம், அழுகிய நாற்றம், rotten smell.

அவிசாடா, மலடி, a woman who has not brought forth any child; barren woman.

அவிசாரி, see அபிசாரி.

அவிசு, உப்பின்றிச் சமைத்த பச்சரிசிச் சோறு, raw rice without salt boiled in milk; 2. வெறுஞ் சோறு, ordinary boiled rice; 3. வெண்ணெய், butter; 4. நீர், water.

அவிசுப்பம், சொடரிப்பூடு, see அருப்பம்.

அவிட்டம், கோரைக் கிழங்கு, koray root—Cyperus rotundus.

அவிஷ்டம், கஸ்தூரி மஞ்சள், a plant, musk turmeric—Curcuma Zedoaria.

அவிதல், மிகுதியாக வேகல், boiling to excess; 2. சூடு பிடித்து வெதும்பல் அல்லது தீய்தல் being scorched by heat; 3. தர்ீர் கழலும்படிப் புண்செய்யப்படல், (*in surgery*), to be inflamed by cauterisation to get rid of bad accumulation of fluid; 4. வர்த்துப் புழுங்கல், to glow by perspiration—Swelter; 5. கெடல், to get destroyed as in கண்ணவிதல்; 6. காய் கனி, வெப்பத்தால் வெதும்பல் being softened and decayed from heat as do fruits.

அவிதாசம், ஆட்டுப் பால், sheeps' milk.

அவித்தல், வேக வைத்தல், to boil; 2. தர்ீர் கழலும்படி வெப்பூட்டல், the application of heat to eliminate the accumulation of bad fluids from the system; 3. யாதேனு மொரு பண்டத்தை ரீரி னுன் னிட்டு அல்லது ஒரு பாத்திரத்தை வேடு கட்டி அதன்மேல் வைத்து ஆவி யெழும்பும் படி யெருப்பு மூட்டிப் பாகம் பண்ணுதல், the process of boiling any substance by immersing it in water or by exposing it to steam keeping it over a cloth tied round the mouth of a vessel containing water.

அவித்தனுசி, குத்தாத மூக்கு, the nose not perforated or bored;

அவித்தியசம், பாதரசம், mercury.

அவித்தியம், அறியாமை, ignorance.

அவித்தியமான, இராத, non-existing.

அவித்தியா, அவித்தியை, } அஞ்ஞானம், ignorance; spiritual ignorance or illusion personified as Maya.

NOTE.—Maya or ignorance is the cause of all the universal phenomena. It makes men so utterly blind that they could not get out of Samsara even when the way lies straight open and such is the snare of Maya's charm set over humanity.

அவித் திருமம், இலுப்பை, honey tree, or flower dropping tree—Bassia longifolia.

அவித் தலர்த்தல், வேகவைத்துக் காயவைத்தல், to dry a thing after boiling it.

அவித் தலைய்யல், பச்சடி, a boiled vegetable savoury.

அவித் தூசம், ஆட்டுப் பால், the milk of the sheep. See அவிதாசம்.

அவித் தூற்றல், வேகவைத்துத் தெளிவிறுத்தல், the operation of boiling a substance and then filtering it, as is done in the case of castor oil.

அவித்தூற்று மெண்ணெய், ஊற்றிய விளக் கெண்ணெய், castor oil (*Hot-drawn*). See ஏரண்டத் தெண்ணெய்.

அவித்தை, அஞ்ஞானம், spiritual ignorance; 2. ஆன்மாவின் மலம், the evil passion or inherent principle of the soul.

அவி நீதம், கெட்ட பழக்கம், bad habit.

அவிநீதை, சோரப் பெண், a female given to indiscriminate lewdness—A prostitute.

அவி நீர், வெண்ணீர், boiled water; 2. மூலிகை களைக் குறுக அரிந்தும் அல்லது வேர்களை இடித்தும் வேடுகட்டிப் பிட்டவியலாக அவித்துப் பிழிந்து கொண்டு அத்துடன் தேன் கூட்டிக் கொள்ளும் நீர், an essence expressed from sliced green herbs or pounded roots boiled sufficiently in steam. It is taken internally with an adjunct of honey.

அவி பாகம், (அ + விபாகம்) அசீரணம், indigestion; 2. (அவி + பாகம்) அவிக்கும் படியான பதம், the operation or process of boiling to a particular limit.

அவிபாடித ரோகம், வாத பித்த ஒலேட்டுமத் திரு லாண்குறியின் தோல் தடித்துப் பிறகு வெடித்துப் புண்ணுரு மோர் நோய், a disease affecting the prepuce or fore-skin of the penis, which becomes thickened and then cracked owing to the derangement of the three humours in the system.

அவிப் பிரியம், ஓர்வகைப் புல், a kind of grass—Panicum frumentaceum.

அவிப் புடமிடுதல், மருந்திற் கேற்றவாறு குழி வெட்டி மணல் கொட்டிப் பரப்பி மருந்தை நடுவில் வைத்து எருவடுக்கிப் புடம் போடுதல், the process of calcining medicines in which a pit is dug out for the purpose and the prepared medicine is placed inside a heap of sand at its bottom and over this are piled up cowdung cakes and burnt.

அவியங்கம், பூணைக்காலி, a plant, catbean—Carpopogon pruriens.

அவியதம், கடுக்காய், the plant Citrine Myrobalan—Terminalia citrina; 2. செம்பரத்தை, the plant Chinese hibiscus—Hibiscus Mutabilis.

அவிய தத்துவம், மரத்துப்போகுதல், feelinglessness; numbness.

அவியந்திரம், பிட்டவிக்குஞ் சட்டி, a pot used for steam-baking.

அவியம், கடுகு, mustard.

அவியரிசி, பிட்டரிசி, a confection prepared out of boiled rice.

அவியல், புழுக்கம், sultriness; 2. வெப்பம், heat (burning and oppressive); 3. அவிக்கப்பட்ட உணவு, வெந்த பண்டம், any food or preparation derived by boiling it in steam; 4. வெந்தபுண், (*In medicine*) a burn or injury caused by a hot liquid—Scald; 5. வாய்ப்புண், inflammation of the mouth—Stomatitis.

"தேச மருவும் பாலகர்க்குச்
சேரு மவியல் பலவகையும்"
(பாரத சேகரம்)

6. மலையாளத்திற் சமைக்கு மோர்விதக் கறி, a kind of boiled vegetable preparation and a favourite dish in Malabar. 7. புட்டவியலாகச் சமைத்த பண்டம், any thing prepared or baked in steam.

அவியற் கறி, வெந்த யிறைச்சி, boiled meat.

அவியற் சரக்கு, முடக்குச் சரக்கு, any drug from which its virulence or the poisonous principle is eliminated; 2. வேகவைத்த சரக்கு, any drug boiled or baked for purposes of purification; 3. அழிந்த சரக்கு, any putrified drug.

அவியற் பல், சொத்தைப் பல், a decayed tooth.

அவியாப்பியம், முழுவதும் வியாபியாமை, partial infection.

அவியாயாமம், மெலுக்கு, non-exertion; want of bodily exercise.

அவிரணம், இரண மாகாதது, non-ulcerated.

அவிரண சுக்கிரன், வானத்தை மேகம் சுற்றி மூற்போல், கருவிழியி லோர் வெண்ணிற மான சுவ்வு படர்ந்து, நீர் வடிந்து, வலி கொள்ளு மோர் கண்ணோய். இது சாத்தியம், (*lit, non-ulcerated film*), a whitish film appearing on the region of the choroid including the iris just like a speck of transparent cloud in the sky and attended with lachrymation and slight pain due to the eye-disease known as Abhishiyandam (*Ophalmia*). It is easily curable.

அவிராச்சம், பெருந் தேள்கொடுக்குப் பூடு, a big species of the plant — Helotropium indicum.

அவிரி, see அவுரி.

அவிரிரா, பெரும் புள்ளடி, which see.

அவிருகம், அதிவிடயம், Indian attee, which see.

அவி ரேசனம், மல வரட்சி, that state of the bowels in which the stools are hardened and expelled with great difficulty — Costiveness; 2. பேதியாகாமை, absence of purgation.

அவிர், புல், grass; 2. பினசப் புல், (*in Botany*) a species of grass of the order of Graminaceae.

அவிர்தல், பீறல், laceration; 2. கிழிதல், tearing.

அவிழ், சோறு, food; boiled rice.

அவிழ்தம், மருந்து, medicine: 2. நோயைக் குணப்படுத்தும் வஸ்து, any substance capable of curing diseases.

அவிழ்தல், மலர்தல், (*in Botany*) opening as a flower; 2. இளகுதல், to melt; 3. சொட்டுதல், to drip; to fall in drops.

அவினாபூதம், சுபாவ சம்பந்தம், (*in Chemistry*) natural affinity.

அவினி, see அபினி.

அவினி ரஞ்சம், அபினியைக் கொண்டு தயாரித்த ஓர்வகைக் குடிநீர், a tincture of opium—Laudanum. See அபினி ரஞ்சம்.

அவுசுப்பம், தொடர்ப் பூண்டு, see அவிசுப்பம்.

அவுசுமாபக வாதம், சடராக்கினியின் மிகுதியாலுண்டாகித்-தலை, நெற்றி, மார்பு, முதுகு, முதலிய விடங்களிற் சஞ்சரித்து வலி, வியர்வை, வாந்தி, பிரமை முதலிய குணங்களைக் காட்டு மோர்வகை வாத நோய், a nervous disease affecting the head, forehead, chest, back etc, supposed to be due to the generation of heat in the gastric region. It is marked by pain, perspiration, vomiting, vertigo etc.

அவுசுகிகம், see அவுசுப்பம்.

அவுடத கந்த சுரம், இரசகந்த பாஷாணம், சேங் கொட்டை முதலியவைகள் சேர்ந்த மருந் துகளின் வேகத்தால் மூர்ச்சை, தலைவலி, உடம்பு வீக்கம் முதலிய குணங்களைக் காட் டு மோர்வகைச் சுரம், இது விஷப்பிரதி விஷ சிகிச்சையாற் குணப்படும், a fever marked by fatigue, thirst, headache, swelling of the body, etc. It is said to arise from the virulency of medicines consisting of mercury, sulphur, arsenic, nux-vomica and other ingredients—A kind of toxic fever.

அவுடதத் தேயம், மருந்தி னளவு, medicinal dosage.

அவுடதம், ஔஷதம், மருந்து, medicine; 2. மாற்று மருந்து, an antidote.

அவுடாஞ்சி, நெல்லிக் காய், gooseberry tree —Phyllanthus emblica alias Emblica officinalis.

அவுஷ்மாபக வாதம், உணவின் குற்றத்தினலும், சடராக்கினியின் மிகுதியினலு முண்டாகி உ டம்பின் நடுவில் தங்கி, மார்பில் எரிச்சலையும், தலையில் வலியையும், தவிர நடுக்கல், வாந்தி, பிரமை முதலிய குணங்களையு முண்டாக்கு மோர்வித நோய், a disease of the nervous system characterised by burning sensation in the chest, headache, tremor, vomiting, perplexity of mind etc. It is due to errors in diet and the aggravated condition of the gastric fire in the system.

See அவுசுமாபக வாதம்.

அவுதசியம், பசுவின் பால், cows' milk.

அவுதும்பர குட்டம், அத்திக் காயைப்போ லு டம்பெங்கு மெழும்பிக் கறுகித் திமிர், மயக்க முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் வகைக் குட்டம், a type of leprosy characterised by livid blotches or ulcers of the size and colour of a fig fruit rising all over the body. It is followed by insensibility to the touch, giddiness, etc. —Anesthetic leprosy. It has its origin in the deranged Pittam.

See அவுதும்பர குட்டம்.

அவுபசர்க்கிக ரோகம், உடம்பு மெலிந்திருக்கும் போது மிகவு முற்றுப் பார்ப்பதனற் கண் ணெளி குறைந்து கண்ணிற் கேற்படு மோர் நோய், an eye-disease arising from straining the eyes while in a debilated condition.

அவுபல பாஷாணம், ஓர்வகைப் பிறவி அதர் வது வினவு பாஷாணம், a kind of native arsenic.

அவுரம், கௌரி பாஷாணம், a kind of prepared arsenic—Yellow oxide of arsenic.

அவுரி, நீலிப் பூடு, இதற்கு வடமொழியில், 'வச் சிரநீலி' யென்ற பெயர். இது 2 அல்லது 3 அடி உயரம் வளரும், பூக்கள் சிறியவைகளா கவும் வாசனை யற்றவைகளாகவும், பச்சை யும், சிவப்புங் கலந்த நிறமுள்ளவைகளாகவு மிருக்கும். இது நமது இராஜதானியிற் சாதா ரணமாய்க் கிடைக்கும். இது 1660 வுத்தில் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகி அவ்விடங்க ளில் வினையும் நீலச் சரக்குகளுக்கு விரோத மாகக் கொள்ளப்பட்டது.

இதன் வேரை நமது நாட்டு வைத்தியர் கள் இரசத்திற்கும், விஷத்திற்கும், முறிவா கக் கொடுப்பார்கள். இது அடியிற் கண்ட படிப் பலவகைப் படும்.

இதன் இலையைப் பக்க சூலைக்கும், சாற் றைத் தேனுடன் கலந்து குழந்தைகளது வாய் விரணத்திற்குங் கொடுப்ப துண்டு, நீலி மருந்தை உடம்பின் வீக்கத்திற்குப் பொடி மருந்தாக உபயோகிக்கலாம். தவிர, வயிற்று வலி, மூர்ச்சை, காக்கைவலி, அக்கினி விசர்ப்பி, முதலிய ரோகங்களுக்கும், காற்றப் புண் களுக்குத் தூவிக் கழுவவும் உபயோகப் படுத்தலாம், dog-bite shrub; dyers' indigo—Indigofera tinctoria alias I. emarginata. In Sanskrit it is called 'Vajra neeli'. It is a shrub 2 to 3 ft. high and the flowers are small, scentless and of a greenish rosy colour.

It is very common in this Presidency and it is also called the 'devils' eye' on account of its interference in British indigo. It was imported into Europe in 1660.

The root of the plant is reckoned by Veidyans as an antidote for mercurial and other mineral pcisons; the leaf is considered an alterative and is prescribed in Pakkasulai (பக்க சூலை) or hepatitis. The juice of the young branches mixed with honey is used for aphthae of the mouth in children. Manufactured indigo itself is applied to reduce the swellings of the body and pounded indigo is employed in colic, swoon, epilepsy and erysipelas. It is also sprinkled on foul ulcers to cleanse them.

1. வச்சிர நீலி—கருப்பு நிறமான நீலி, Black Aviry.

2. நீலி அவுரி — காட்டவுரி, Common Indigo—Indigofera tinctoria.

3. இருப்பு முறி அவுரி — வெண்மையும் நீலமும் கலந்த அவுரி, Arabian Indigo—Indigofera argentia.

4. மேஞட்டவுரி — அமெரிக்கா தேசத்திய அவுரி, Indigo from Brazil and Mexico—Babtisia tinctoria.

5. மணில்லா அவுரி — மணில்லா நீலம், Manilla Indigo — Anona reticulata.

6. பெரு அவுரி—ஓரினம், a large variety of the plant.

7. கள்ளவுரி — நீலப்பூ அவுரி, Bastard Indigo—Amorpha fruticosa.

8. சீமை யவுரி — ஆங்கிலேய தேசத்து அவுரி, British Indigo — Isatis tinctoria.

9. சீன அவுரி—சீன தேசத்து அவுரி, China Indigo—Isatis indigotica.

10. காட்டவுரி—மஞ்சட்பூ அவுரி, False Indigo—Baptisia tinctoria.

11. சீமை நீலி—ஓரினம், West Indian Indigo—Indigofera anil.

அவுரி நெய், அவுரி வேரினின்று இறக்கு மோர் வித நெய், an oil extracted from the root of the Indigo plant.

அவுரிப் பச்சை, பச்சைக் கற்பூரம், crude camphor.

அவுழதம், அவுழ்தம், } see அவுடதம்.

அவுறுதம், இரந்தி, syphilitic skin affections; 2. பித்தாதிக்கம், biliousness; aggravated condition of the bile; 3. மேக நோய், venereal disease.

அவுளியா, வெளவால் மீன், a sea-fish—Stromatens.

அவுன்சு, ஓர் அளவு, an ounce.

அவுஷதம், see அவுடதம்.

அவெளி, ஈரி யிளா, a plant which see.

அவேத் தியம், பசுங் கன்று, cow-calf.

அவைதிக, இயல்பற்ற, abnormal ; 2. வைதீக மற்ற, irreligious; ungodly.

அவைத்தல், தானியங்களைக் குத்தல், pounding grains; 2. நெரித்தல், bruising, crushing ; 3. அவித்தல், boiling.

அவைப்பு, குத்தின அரிசி அல்லது தானியம், bruised rice or grain ; 2. வைப் பில்லாதது, that which is not prepared or is not artificial i.e., natural.

அவையம், விலாமிச்சு, khus khus root — Andropogan aromaticus.

அவையல், குத்தின அரிசி, husked or bruised rice ; 2. அவல், flattened rice ; 3. திரட்சி, collection.

அவைரு, தண்ணீர் சேராத, that which does not contain water in its composition—Anhydrous.

அவைரு துருசு, நீரில்லாத் துருசு, copper sulphate which is free from water—Anhydrous sulphate of copper.

அவ்வமை, இந்துப்பு, rock salt which is but common sodium chloride dug out from the earth.

அவ்வரேதயம், எலி, rat.

அவ்வித, நேர்வாளம், croton seed—Croton tiglium.

அவ்வி யஞ்சனம், கொம்பில்லா மிருகம், hornless animal.

அவ்வியதி, குதிரை, horse.

அவ்விய திதி, இரவு, night ; 2. பூமி, earth.

அவ்வி யாத்தம், ஆன்மா, the soul; 2. பரமான்மா, the universal soul as contrasted with the human soul 3. மூலப் பிரகிருதி, the passive cause of the world ; 4. பிரமம், the Omnipotent being.

அவ்வியத்து, பிரகிருதி, see அவ்வியத்தம்.

அவ்வியம், நெய், ghee.

அவ்வியா கிருதம், பிரமத்தோடு பிரிவற்றது, that which does not exist or act independently of Brahmam (*the Supreme being*)—Maya.

NOTE.—Maya is called the mother of the Universe which is created out of illusion. It gives the name to the form which the Brahman or God gives to matter. It is the real cause of all the universal phenomena—the Absolute, the Unchangeable, being taken as this manifested universe.

அவ்வையன், கடுக்காய்ப் பிஞ்சு, the tender fruit of chebulic myrobalan — Terminalia chebula.

அழகர், வெள்ளெருக்கு, white flowered giant swallow wort — Calctropis gigantea (*albiflora*).

அழக வேதம், அதிவிடய வேர், the root of Indian attees--Aconitum heterophyllum.

அழகான கருப்பி, நீலஞ் சோதி, the root of the milky shrub—Euphorbia tirucalli.

அழகிய வாணன், ஓர்வகை மட்டை நெல், a variety of paddy yielding coarse rice.

அழகியாள், செவ்வகத்தி, scarlet flowered pea tree—Sesbania punicea alias Coronilla grandiflora (*coccinea*).

அழகு, சர்க்கரை, sugar; 2. வெல்லம், jaggery; 3. யௌவனம், youth; 4. எழில், beauty; 5, கண்ட சருக்கரை, sugar candy; rock candy.

அழகு காட்டல், உடம்பின் சைகைகளால் பரிகாசம் செய்தல், to mimic, often for sport or ridicule.

அழகு காமாலை, உடம்பு மினுமினுத்து, கை, கால் அசதியையும், புருவம், கண், மூத்திரம் முதலிய வைகளில் மஞ்சள் நிறத்தையும், ஆண் குறியிலெரிச்சலையும், அசீரணம், உப்பிசம் முதலிய குணங்களையு முண்டாக்கு மோர்வகைக் காமாலை, a form of jaundice characterised by glossy skin, languor, yellow eyes, yellow urine, burning sensation in the urinary passage, indigestion and distension of the stomach etc.

NOTE.—The term is so called because of its lending a peculiar beauty and loveliness to the body.

அழகு சப்பாணி, நடக்கவொட்டாது குழந்தைகளை முடக்கு மோர் வாயு, a paralytic affection manifested in the legs of children rendering them unable to walk --Poliomyelitis.

அழகு சம்பங்கி, கொடிச் சம்பங்கி, the creeper champak; Indian cowslip creeper — Pergularia minor.

அழகு சிவப்பி, செவ்வகத்தி, see அழகியாள்.

அழகு துரைச்சி, இந்திர பாஷாணம், a kind of prepared arsenic.

அழகு துரைப் பெண், see அழகு துரைச்சி.

அழகு தேம்பல், உடம்பிற் சில பாகங்களில் மேற்றோல், மஞ்சள் நிறமடைந்து தழும்பு தழும்பாகத் தோன்றிப் பார்ப்பதற்கு ஓர்விதமழகை யுண்டாக்கு மோர்வித சருமநோய். இது சாதாரணமாக முகம், கழுத்து, மார்பு, முதுகு, கை முதலிய வவுப்புகளிற் காணும், a skin disease marked by a yellowish colour on the skin in certain parts of the body. It is particularly found on the face, neck, back, hands etc. and is supposed to lend beauty to the body —Macula. See படர் சுணங்கு.

அழகு பூச்சூடி, நீரறளி, water gannair or knot grass—Polygonum genus.

அழகு முல்லை, ஓர்வகை மலையாளத்து முல்லைப் பூ, malabar jasmine — Jasminum malabaricum.

அழகு யேக்கியம், நரி முருக்கு, a species of Moringa—Erythrina (*genus.*)

அழகு வண்ணத்தி, மருதாணி, fragrant nail dye—Lawsonia alba.

அழகு வர்ணன், சூதம், mercury.

அழக்கு, ஆழாக்கு, an ollock (*a measure*)

அழக் கொடி, எப்பொழுதும் அழுது கொண்டே யிருக்கும் பேய் பிடித்த பெண், a weeping woman under the influence of a demoness.

அழகிசம், எருக்கு, lightning leaf—Calotropis gigantea.

அழசி திப்பிலி, பெருந் திப்பிலி, elephant pepper—Piper longum scindapsus.

அழத்தியம், சோமனூரி பெருங்காயம், asafoetida formerly exported from Somnad in Guzerat.

அழத்தியன், see அழத்தியம்.

அழப் பண்ணல், அழும்படிச் செய்தல், to make one weep.

அழம், பிணம், corpse, carcase.

அழலம் பூ, தீன் பூ, a kind of tree (*unidentified*); 2. சங்கங் குப்பிச் செடி, small-leaved glory tree—Cleodendron inerme.

அழலல், see அழலுதல்.

அழலான, கார்ப்பான, biting to the taste—Acrid.

அழலி, நெருப்பு, fire. See also அழல்.

அழலிக்கை, வயிற்றெரிச்சல், a peculiar burning sensation in the stomach through jealousy.

அழலி ஓழலல், வெப்பத்தாற் தாக்கப்படுதல், being oppressed by heat.

அழலுதல், எரிதல், burning; 2. வெம்மை செய்தல், வெப்பங் கொள்ளல், to get inflamed; becoming hot; 3. உறைப் பாதல், to be acrid.

அழலை, உடம்பின் காந்தல், internal heat of the body; 2. தொண்டைக் கரகரப்பு, irritation of the throat; 3. களைப்பு, fatigue.

அழலைக் கிராணி, உடம்பின் வெப்பத்தா லேற் படுங் கழிச்சல், a kind of chronic diarrhoea arising from the irritation of the tissues or through excessive heat in the body—Inflammatory or Irritative diarrhoea.

அழலைச் சுரம், உடம்பு அதிக வெப்பங்கொண்டு அதனு லுண்டாகு மோர்வகைக் காய்ச்சல், a fever arising from excessive heat in the body; 2. கணச் சூட்டினல் குழந்தைகளுக் கு ஏற்படும் சுரம், a fever in children arising from a wasting disease such as, *tabes mesenterica.*

அழலை நோய், குழந்தைகட்குக் கணச்சூட்டினு லுள் ளுறுப்புகள் வெந்து அதனு லேற்படு மோர்வகைக் கண நோய், tuberculosis in children, characterised by inflammation of the internal organs of the body such as *Tabes etc.*

அழலோன், சூரியன், the sun; 2. நெருப்பு, fire.

அழல், எருக்கு, madar plant — Calotropis gigantea; 2. உறைப்பு, pungency; 3. கள்ளி, a milky shrub of Euphorbia genus; 4. சூடு, heat; 5. எரிவு, burning sensation felt owing to the presence of medicine in the system; 6. சுரச் சூடு, temperature in fever; 7. கொடி வேலி, Ceylon leadwort—Plumbago zeylanica; 8. தீ, fire; 9, நஞ்சு, poison.

அழல் கெங்கை, பெண்கள் கருக்குழியி லுண் டாகும் பனிக்குடத்து நீர், the fluid collected in the womb of the female during her pregnancy—Liquor amnii; 2. அழல் நீர், a thin watery acrid humour or discharge—Ichor.

அழல் சொரிந்த வுப்பி, கல்லுப்பு, a kind of common salt obtained in the natural state. It is so called from the heat it contains because it remained buried under the earth.

அழல்தல், உறைப் பாதல், to be acrid; 2. காத்தல், charring; burning.

அழல் தாரன், மகாரம், the sacred mystic letter 'Ma'. It is so called because it represents one of the 5 psychic centres situated in the navel region containing gastric fire.

அழல் நீர், தென்னங்கள், cocoa-nut toddy.

அழல் பித்தம், see அழற் பித்தம்.

அழல் மண், மிதித்தா லெரிச்சலே யுண்டாக்கு மண், உவர் மண், fuller's earth.

அழல் மண் வெதுப்புங் கோபி, குழல் ஆதொண் டைச் செடி, common caper — Capparis aphylla.

அழல் விதை, நேர் வாளம், croton seed or king's seed—Croton tigilium.

NOTE.—These seeds which were formerly known in Europe under the name of Grana Molucca, are of a convex shape on one side and bluntly angular on the other. They are reckoned by Veidyans amongst their drastic purgtives and are frequently prescribed by them when powerful cathartics are required.

For further particulars see under its proper head. நேர்வாளம்.

அழல் விரியன், கடித்தாற் தாங்க முடியாத எரிச்சலேயும் வலியையு முண்டாக்கு மோர் வகை விரியன் பாம்பு—எரி விரியன், a kind of venomous viper, the bite of which is followed by unbearable burning sensation and pain.

அழ வணம், மருதோன்றி, fragrant nail dye —Lawsonia alba alias L. spinosa. It is used by women for dying their nails red. See also அழகு வண்ணத்தி.

அழவண, see அழவணம்.

அழற் கண், see அழற்சி விழி.

அழற் காடு, உழமண் வெளி, soil of fuller's earth.

அழற் காமாலை, பித்தத்தா லுடம்பி லெரிச் சலே யுண்டாக்கு மோர்வகைக் காமாலை, jaundice accompanied by a burning sensation of the body due to the action of deranged bile.

அழற் காய், மிளகு, black pepper; 2. மிள காய், chilly.

அழற் குத்தல், கொடிய நாற்றம் வீசல், to emit a strong offensive smell, like the smell of putrifaction—to stink.

அழற்சி, கொதிப்பு, internal heat of the body 2. உள்ளழற்சி, inflammation of any internal organ of the body ; 3. உறைப்பு, pungency; 4. எரிவு, burning sensation ; 5. கால் நடைகளுக்கு வரும் நோய், a disease in cattle causing inflammation.

அழற்சி நஞ்சு, உடம்பின் உள்ளுறுப்பை வெந்து போகச் செய்யும் விஷம் அல்லது விஷங்கூடிய மருந்து, any poison or poisonous compound causing inflammation of the internal organs—Irritant poison or acrid poison.

NOTE.—Mineral acids, the caustic alkalies, antimony, arsenic, the salts of copper, silver nitrate, phosphorous etc. come under this head.

அழற்சியிலா நஞ்சு, உள்ளுக்குக் கொள்வதனு லழற்சியை யுண்டாக்காத விஷம், non-irritant poison.

அழற்சி விழி, அழற்சியை யுண்டாக்கு மோர் வகைக் கண்ணோய், an eye-disease accompanied by inflammation of the eyes; inflamed eyes—Ophthalmia.

அழற் சூடி, கொடுவேலி, see அழல்.

அழற் பால், உடம்பிற் பட்ட விடத்தில் வேகச் செய்யும் பால், அதாவது எருக்கம் பால், தில்லைப்பால், the milky juice of plants like Madar, and Spurge-wort, causing inflammation or blister on coming in contact with the skin.

அழற் பிணி, அழற்சியை யுண்டாக்கும் நோய், any disease causing inflammation of the internal organ or organs of the body, such as Phthisis, Stomatitis, Hepatitis etc.

அழற் பித்தம், உடம்பில் பித்தக் கொதிப்பினால் மயிர் இளமையில் நரைத்து, உடம்பு வெளுத்துக் கடைக் கண் சிவந்து, ஞானம் பேசு மோர் வகைப் பித்தநோய், a disease peculiar to young people, characterised by premature greyness of the hair, anaemia, inflammation of the corner of the eyes etc., due to excessive heat in the body arising from the deranged condition of the bile. Such persons are inclined to philosophical discussions—A kind of Mania.

அழற் புண், சிவந்த இரத்தம் வடியும் புண், an inflamed bleeding sore or ulcer.

அழற் புற்று, வெள் விழியி லெரிச்சலையும் வீம மலான தசையைய முண்டுபண்ணு மோர்வித கண்ணோய், இது அசாத்தியம், an eye-disease marked by burning sensation in the eye and a morbid growth of flesh on the sclerotic portion of the eye. It is said to be incurable.

அழற்றல், see அழற்றுதல்.

அழற்றி, அழற்சி, inflammation ; 2. எரிவு burning sensation; 3. கண்ணைச் சுற்றிலும், குறி போட்டதுபோல் கருப்புண்டாகி, வலியேற்பட்டுக் கடைக் கண்களில் வீக்கங்கண்டு, இளஞ் சிவப்பாகிப் பீளை கட்டியும், நெற்றி, கன்னம், இவ்விடங்களி லதிக வலியையு முண்டாக்கு மோர் கண்ணோய், a mucopurulent inflammation of the conjunctiva marked by a dark ring round the eyes, with pain and swelling on the corners of the eye ; 4. எரியச் செய்வது, that which causes a burning sensation.

அழற்றின கண்ணோய், கண்ணழற்சி, see அழற்றி.

அழற்றுதல், சுடல், to burn to bring about a sore ; 2. வெம்மையுறல், to cauterise or to cause smarting pain by the use of a cane ; 3. வெம்மை செய்தல், to irritate ; 4. வாதனைப்படல் அல்லது அலற்றுதல், to be in anguish as in violent fever.

அழனம், பிணம், corpse; carcase; 2. தீ, fire.

அழனாகம், நாவினுல் நக்குவதனு லெரிச்சலை யுண்டாக்கு மோர்வித நாகப்பாம்பு, a poisonous cobra causing a burning sensation by its mere licking.

அழன், see அழனம்.

தழாக்கு, see ஆழாக்கு, ollock ($\frac{1}{8}$ *of a measure*).

அழால், அழுகை, weeping; crying.

அழி, சோறு, boiled rice , 2. நெய், ghee.

அழிகட்டு, ஒன்றை அழித்தற்காகச் செய்யும் எதிர்ச் செய்கை, an action in opposition to another action; counteraction ; 2. விஷத்தை முறிப்பதற்கு மாற்று, that which counteracts poisons—Antidote; 3. தடை, resistance; 4. மந்திர சக்தியால் விஷத் தன்மையைப் போக்கும் மாற்று, magic power

by which the effects of poisons are counteracted.

அழிகண் பிரித்தல், கண் மிகவும் வலித்து, நொந்து விழியின் மேல் சதை மூடிக் கண்ணைச் சுற்றிப் புண்ணுக்கிப் பீளைகட்டு மோர்வகைக் கண்ணோய், a form of ophthalmia marked by severe inflammation all round the eye and a muco-purulent discharge with swelling and excessive pain.

அழிகண், பார்வையைக் கெடுக்கு மோர்வகைக் கண்ணோய், an eye-disease causing blindness; a disease that deprives one of the eye-sight; 2. குருட்டுக் கண், blind eye.

அழிகரு, அழிந்த சினை, an undeveloped ovum; 2. செத்துப் பிறந்த பிண்டம், still-born foetus.

அழி கருப்பம், சினையழிதல், அதாவது சினை கருப்பைக்குள் வந்து சேராமுன்னமே அதனுடைய தன்மை யழிந்து, கருத் திரளாமை, a variety of tubal abortion occurring from the ampulla of the oviduct—Ampullar abortion; 2. கருப்பையி னுறுப்புகள் திரளாமுன்னம் இளங்கருவா யிருக்கும் போதே கருப்பங் கரைந்து வெளிப்படுங் கருப்பம், the ovum or the foetus which is expelled in the shape of a reddish-white ball. This occurs before the 4th month of pregnancy—Embryonic abortion,

3. இது சில பெண்களுக்குக் கருப்ப மடைந்த மாத முதல் 7 மாதம் வரையிலும் வளர்கின்ற இளங் கருவானது வாதாதி தோஷங்களினாலும், தகாத நடத்தைகளினாலும், ஒருவேளை கரைந்தும், அப்படிக் கரையாமலும் விழும், an abortion which occurs in women before the 7th month from a constitutional disease or from one brought about in an unnatural way.

4. சில பெண்களுக்குக் கருப்ப முண்டாகாமலே கருப்பையில் கட்டுப்பட்ட இரத்தமானது காரசார உஷ்ணமுள்ள வஸ்துக்களினால் கரைந்துவிடும். இதைப் பிண்டமென நினைத்துப் பிசாசு அறைந்ததனால் பிண்டம் கரைந்து விழுந்ததென அறிவீனத்தால் வீண் தாறு செய்வார்கள், hemorrhage from the uterus resulting from false pregnancy. It is sometimes confounded with the real one. It is generally believed to be an abortion the cause of which is attributed to the influence of evil spirits.

அழி கிரந்தி, பாதம் அல்லது காலில்சதை சிவந்து விரணமாகி அழுகிப் பரவு மோர்வகைக் கிரந்தி. இதை அரிகிரந்தி யென்றும் அழிபுண் என்றும், அழி விரண மென்றும் சொல்வ துண்டு, an inflammation starting from a small abrasion of the skin generally on the foot or the leg with sloughing of the inflamed skin and producing a sharp-cut ulcer which spreads rapidly and destructively eating away the tissues—Sloughing ulcer.

2. உடம்பில் மேக சம்பந்தத்தினாற் சிறு சிரங்கைப்போல் தோன்றிப் படர்ந்து மாறுதினவை யுண்டாக்கு மோர்வகைப் புண், a syphilitic sore characterised by eruptions on the skin all over the body with great itching sensation.

3. ஆறுதபுண், an ulcer which does not tend to progress to a cure—Unhealthy ulcer.

அழி குட்டம், உடம்பு முழுவதினு மிரணங்களேற்பட்டுச் சதை அழுகித் தின் புழுத்து மோர்வகைக் குட்டநோய், a kind of severe leprosy marked by sloughing ulcers and gangrene all over the body.

அழி குட்டி, வயிற்றில் மரித்த சிசுப் பிண்டம், the lifeless foetus expelled as a result of abortion; 2. கருப்ப மழிந்த பிண்டம், an aborted dead child (*colloq*)

அழிகைக் குட்டி, see அழி குட்டி.

அழி செய்தல், கற்பழித்தல், to bring about the surrender of chastity.

அழிஞ்சகி, பெருஞ் செருப்படை அல்லது செருப்படை, a plant—Coldenia procumbens.

அழிஞ்சியேறி, see ஏறழிஞ்சில்.

அழிஞ்சில், இது வெகு சுலபமாய் அழிந்து விடக்கூடியதா லிதற் கிப்பெயர் வாய்ந்தது. இம்மரம் பார்வைக்கு வெகு அழகாக விருக்கும். இது தென்னிந்தியக் காடுகளில் அதிகமாயும், தோப்புத் தறவு, கால்வாய் முதலிய விடங்களி லபூர்வமாயும் சொற்ப மாயும் பயிராகும்.

மலையாளம், குறுகாடு, ஆசாம் (*Assam*), முதலிய இடங்களினும், மற்றும் பாறை நிலங்களினும் இது முக்கியமாய் விளையும். கடைகளிற் கிடைக்காது, இதன் கொட்டைகளி னிலைகள் 3 முதல் 5 அங்குல நீளம் வரைக்கும் கூட வளர்ந்திருக்கும். அவை மாறிமாறிக் குறுகலா

அழிஞ்

யும், வீளமாயும், இலைகள்மீது பட்டைகள் வாய்ந்தும், பூக்கள் தனித்தும் சேர்ந்தும், இலைக் காம்புகளின் பக்கங்களிலும் இருக்கும். அன்றியும் அவை வெளிர் மஞ்சளாயும், வாசனை யுள்ளதாய் மிருக்கும். சித்திரை வைகாசி மாதங்களில் பூக்கும். காய்கள் ஒரே விதையுள்ளன.

பூவந்திக் கொட்டை அல்லது கொட்டைப் பாக் களவுள்ளதாகவும் சிகப்பாகவும் கொஞ் சம் தித்திப்பாகவு மிருக்கும். விதை கபில நிறம் வாய்ந்திருக்கும். இதன் பழத்தின்மே கொட்டையும் சதைப்பற்று தங்குமாதிரியும் இருக்கும். உருசிக்கத் துவர்ப்பாயிருக்கும்.

இதை ஏழைச் சனங்கள் தின்பார்கள். பார் வைக்குப் பழுத்த களாக்காய் அல்லது நா கப்பழத்தைப் போலிருக்கும்.

இதுதான் ஏறழிஞ்சில்.இதற்கு அங்கோல மெனவும் பெயர். இலை சீதாச் செடியின் இலை யைப் போலவும், செடி பார்வைக்குச் சணல் செடியைப் போலவு மிருக்கும். இதன் கசப் பான வேர்ப் பட்டையைச் சூரணித்து மேக நோய், சரும நோய், நீர்க்கோர்வை, குட்டம் முதலியவைகளுக் குபயோகிக்கலாம்.

இதன் வேரின் சாறு கிருமி நாசினி, ஜீரே சனி; இது சுமட்ட லுடையதாயினும், உடம் பிற்குப் பலத்தைத் தரும். பாம்புக் கடிக் கும், நாய்க் கடிக்கு முபயோகிக்கலாம். பாண்டு நோய்க்கும் கொடுக்கலாம்.

இலைகளை எண்ணெயிற் கலந்து காய்ச்சிப் பூச விரணத்தை யாற்றும். இதன் புஸ்து ருவியினுற் பைத்தியம் பிடிக்கும். It is so called from its being liable to destruction very soon. Title otherwise is Ancola-fruit plant ; Hill sack tree ; Red-wood; Sage-leaved Alangium; stone mango — Alangium Lamarckii alias A. acuminatum alias A. delapitalum.

The tree has an ornamental appearance. It is very common in the forests of S. India and is rarely found grown in gardens, canals, ponds etc. It is abundantly grown in Malabar, Kornad (*Coromandal coast*). Assam etc. and also in other rocky places.

Leaves from 3" to 5 long and from 1 to 1½ inches broad, alternate; they are narrow and oblong shaped; branches have bark and the filaments are hairy at the base. The flowers are solitary or aggregate in the axils of the leaves.

அழிஞ்

They are whitish yellow and fragrant. The tree flowers in April–May. The fruit has only one seed and it resembles the soap-nut or the areca-nut in size and it is red in colour and is eatable, though somewhat astringent. It is eaten by the poor. It looks like a ripe Bengal currant or a jambo fruit.

This is also called 'Eralinjil' or Ancola fruit plant. The leaves resemble those of the custard-apple tree and the shrub that of the hemp plant. The root-bark which is very bitter, is pulverised and is used for venereal complaints, cutaneous affections, cold, leprosy etc, and it appears to be valuable in this respect. It is medicinally an emetic, nauseant, alterative, tonic and antiphyretic. It is also an antidote to snake-bites and a remedy for bites of mad-dogs. It is also used in dropsy. The leaves boiled in oil are used as a vulnerary ointment. The parasite of this tree will bring about madness and it is invariably used in black magic. The root is a laxative,and is useful in worms, colic, inflammations and poisonous bites. The nutritive fruit is said to be cooling, a tonic, and a useful article in consumption and haemorrhage.

அழிஞ்சில் தைலம், அழிஞ்சிற்பட்டை யினின்று வடிக்குந் தைலம், இது உடம்பை மறைத்துக் கொள்வதற்கும் மறைப்புமை செய்வதற் கும், வசியத்திற்கு முபயோகப்படும். இது வாத நோய்கட்கு மேற்பூச்சு மருந்தாக உப யோகப்படும், an oil is prepared from the seeds of Alangium by a peculiar process known to Siddhars. It is used for preparing magic paint for the purpose of rendering one invisible to others and for attracting one to his side. It is also said to be a useful application in acute rheumatism.

அழிஞ்சில் விரை, கிராணிக் கழிச்சலில் உப யோகிக்குங் கிராணித் திரவியங்களி லொன் று, one of the several ingredients prescribed for chronic dysentery.

அழிஞ்சிற் பட்டை, அழிஞ்சில் மரத்தின் பட் டை, இது வாதநோய், பெருநோய் முதலிய வைகளுக்குக் கஷாயமிட்டுக் கொடுக்க உத வும். இதன் வேர்ப்பட்டை மேகக் கிரந்தி

யைப் போக்கவும், வாந்தி மருந்தாகவும் உபயோகப்படும். தெரிய வளவில் கொடுக்க வாந்தியை யுண்டாக்கிச் சுரத்தைத் தணிக்கும், the bark of Alangium tree. It is used for preparing a decoction for curing diseases like rheumatism, leprosy etc. The root-bark has a reputation in syphilitic and other skin diseases. It is an efficient and safe emetic in large doses; in smaller doses it is a nauseant and a febrifuge.

அழிஞ்சு, அழஞ்சில் வேர், the root of Alangium.

அழிஞ்சுக் காடு, பாலை நிலம், a desert; barren soil.

அழிதலை, இறந்தவரின் தலை யோடு, the skull of the dead.

அழிதூ, பேடி, an impotent man; 2. அலி, hermaphrodite.

அழித்திடும் பிரித்தல், see அழிகண் பிரித்தல்.

அழிபசி, கொடிய பசி, abnormal increase in the sensation of hunger—Hyperorexia; 2. கொல்லக் கூடிய பசி, killing hunger.

அழி புண், ஆறாத புண், a chronic ulcer; 2. அழுகிய புண், a sloughing ulcer, 3. நாற்றப் புண், a foul ulcer.

அழிப் பிண்டம், கருவழிந்த பிண்டம், an aborted foetus—Ambloma.

அழி மருந்து, கருவைக் கரைக்கும் மருந்து, an abortive drug—Abortifacient.

அழிய மாறுதல், நோயாற் பீடிக்கப்பட்டு அடையாளந் தெரியாதபடி உருவம் மாறுதல், to be reduced by disease and thereby rendered difficult for identification.

அழிவாயு, இதுதான் நவாச்சார வாயு. கந்தக வாசனை கலந்ததாய்க் கெட்ட நாற்றத்தை வீசும் ஓர் காற்று. செடி கொடிகள் அழுகுவதனாலும், பிராணிகள் இறந்து அவைகளின் உடல்கள் அழுகுவதனாலும், சாக்கடைக் கால்வாய்களி லிருந்தும் இக் காற்று உற்பத்தியாகும். இது மனிதருக்குத் தீங்கை விளைவிக்கும். குதிரை லாயம், மாட்டுத் தொழுவம், சுடுகாடு, நீலிச்சாலை, காருரிக்குஞ் சாலை, தோற்கிடங்கு முதலிய விடங்களில் இவ்வாயு வியாபித் திருக்கும், sulphuretted hydrogen or hydrogen sulphide or hydrosulphuric acid H_2S. It is a gas having an offensive odour of sulphur formed by the decay of plants, and decomposition of dead animal bodies. The gas exists abundantly in drains and gutters and does great harm to people who are near it and who inhale it. It is also very common in places like the cattle-sheds, stables, burial grounds, Indigo or jute factories, tannaries etc.

அழி விரணம், see அழி புண்.

அழு, அழுதல், to cry; to weep.

அழுகண், சதா கண்ணினின்று நீர் வடிந்து கொண்டிருக்கும் மோர்வித கண்ணோய், a disease marked by constant watering from the eye; running eye—Moist eye; 2. கண்ணீர்த்தாரையின் சுருக்கத்தினு லேற் படும் கண்ணீரொழுக்கு, abnormal overflow of tears due to the stricture of the lachrimal passage—Epiphora.

அழுகண்ணி, எக்காலத்துந் தண்ணீர் கசிந்து ஒழுகிக் கொண்டிருக்கு மோர்வித மர்ம். இதன் பச்சிலைக்கு நான்கு வர்ணங்களுண்டு, இலைக்கிலை நீர் கசியும், இலை சணப்பி னிலை போற் றோன்றும். இது ஓர் கற்ப மூலிகை. இதனுல் நரைதிரை மாறும். இச்சாற்றினு லிரசத்தை மத்திக்க அது திரளும், குகைக்குள் வைத்துச் சீலை மண்செய்து புடமிடச் சூதங் கட்டும். வடமொழியில் இது 'ருதந்தி' யெனப்படும். இது நாகத்தைச் சென்தூரமாக்கும். a tree from which water is continuously oozing and dripping — Indian Weeping tree. The leaves have a combination of four colours and they correspond to those of the hemp plants. It is a rejuvenating drug and mercury, when rubbed with the juice of the leaves is converted into globules. These globules are rendered hard by subjecting to fire after luting the crucible containing them with clay.

2. சதா புண்ணி னின்று நீர் கசிந்து கொண்டிருக்கு மோர்வகைக் குட்டம், a leprosy attended with constant or unceasing discharge from sores; 3. வைத்திய முப்பு, a name for the universal salt used as a basis in the preparation of all Tamil medicines especially metals and metallic compounds. It forms an *active principle* in all preparations with curative powers; 4. சதா இரத்தம் சீழ் ஒழுகிக் கொண்டிருக்கு மோர் விரணநோய், a running sore; 5. தேவாங்கு, sloth.

அழகண்ணி சித்தன், வாத வைத்திய ஞானத்தில் வல்லோனுகிய ஓர் சித்தன், one of the Siddhars School, proficient in Medicine Alchemy, Philosophy etc.

அழகண்ணிப் பால், சுயமான மூலிப்பால், unadulterated breast milk.

அழகண்ணி மார்க்கம், வாத முறைப்படி அழகண்ணியைக் கொண்டு, பொன்னே மாற்று யர்வாகச் செய்யுமோர் வாதமுறை, an alchemical process of refining gold to a higher standard with the aid of the leaves of the weeping tree.

அழகல், அழுகின பண்டம், putrefied matter; 2. பதனழிதல், rottenness; 3. ரணச் செதிள், (*in medicine*) a scar or the crust on a wound occasioned by burns or caustic applications; 3. கெடுதல், rotting; putrefying.

அழகற் சரக்கு, அழுகிய மருந்துச் சரக்கு, a rotten or decomposed drug.

அழகற் சிரங்கு, நீர் கசிந்து கொண்டிருக்கும் புண், a form of eczema on the surface of the skin marked by a fluid exudation —Weeping eczema.

அழகற் பீனசம், நாய்ப் பீனசம், inflammation of the mucous membrane of the nose with a caseous, gelatinous and fetid discharge—Rhinitis caseosa.

அழகற் புண், அழுகிய காற்ற ரணம், a foul ulcer, said of a gangrene which emits an offensive odour by the mortification of the part affected.

அழக ஊதல், கூகை அழியும்படி நெருப்பிலிட்டு ஊதல், heating a crucible containing a solid, to perfection. This is a term generally used, to indicate the highest degree to which a particular solid can be heated or to denote the melting point.

அழகிரந்தி, சதை யழுகிய புண், a gangrenous sore—Carious ulcer.

அழகு சப்பாணி, அழுகு சர்ப்பம் நக்குவதால் உடம்பில் சதை அழுகி ரணத்தை புண்டாக்கு மோர் நோய், a sore said to be caused by the lick of a poisonous reptile causing the flesh to putrefy. *c, f.* அழகு சப்பாணி; 2. அழகு சர்ப்பம், which see.

அழகு சர்ப்பம், ஓர் விஷசெந்து, a reptile whose lick is said to be poisonous.

அழகு சிறை, காற்றுப் புழக்க மில்லாத காவலறை, an ill-ventilated prison-cell purposely intended to cause suffocation to criminals as a punishment.

அழகுணி, காதில் வரு மோர்வகைக் கரப்பான், an eruption chiefly about the ears — Otitis externa; 2. சதா அழுது கொண்டேயிருக்குந் தன்மை யுள்ளவன், a person who has always a tendency to weep or cry; 3. அழு பிள்ளை, a weeping child or a child in arm.

அழுகுதல், அழுகல், the state of putrefying or decomposing; rottenness — Putrefaction; 2. அழுதல், the death of a part of an animal body while the rest is alive—Mortification.

அழகு புண், சதையைத் தின்று கொண்டே போகு மோர்வகை நாற்றப் புண், a disease marked by the eating away of the flesh —Gangrene, 2. உடம்பினுள் வியாபித்துச் சதையை அரித்துத் துணுக்குகளாக வெளிப்படுத்தும் நிரந்திப்புண், an ulcer which spreads rapidly eating away the tissues and is marked by sloughing particles in the discharge—Phagedenic ulcer.

அழுகுரற் பறவை, புலம்புங் குரலுடைய பட்சி, a bird making a weeping noise.

அழுகை, see அழுதல்; 2. அழுகுதல் அதாவது பதனழுகுதல், putredity; partial or complete rottenness—Putrescence.

அழுகை மாது, கவிழ் தும்பை, stooping toombay—Nepeta indica.

அழுகைவாடி மூலி, அழுகண்ணி, which see.

அழக் ககற்றி, வண்ணன் கார நீர், lye used for washing purposes; 2. சாம்பற் சாரநீர்; water impregnated with alkaline salt imbibed from the ashes of wood—Lye. It is an alkaline solution used for various purposes.

அழக் ககற்றுங் கல், சுக்கான் கல், lime-stone from its power of removing dirt.

அழக் ககற்றும் பூ, பூ நீறு, fuller's earth; 2. ஓர் களிமண் a clay used as a dressing for sores.

அழக் ககற்றும் வண்ணன், அழக் ககற்றும் வண்ணத்தி, } சவர்க் காரம், a soft, friable clay, which absorbs grease and is much used in fulling cloth—Dhoby's earth. See அழுக்ககற்றி.

அழக் கணவன், இலை தின்னும் புழு, a small worm or insect living upon leaves; 2. புழுக் கூடு, the nest of a worm.

அழக் காமை, ஓர்விதக் கடலாமை, a species of tortoise living in the sea — Caretta squamata; 2. மாசு, dirt; 3. அழுக்கு, filth.

அழக்கு, மாசு, filth; 2. உடம்பி னின்று வெளி வரும் அழுக்கு, bodily impurities; 3. ஓர் ஆமை, see அழுங்கு; 4. மனத்தின் மாசு, impurities of the mind; 5. குழந்தை பிறந் தவுடன் பெண்களுக்குக் கருப்பையி லிருந்து வெளிப்படும் உதிரம் அல்லது ஊனீர், the vaginal discharge which is expelled from the uterus after child-birth. It is called popularly the 'cleansings' by nurses. It continues to flow from the passages from 5 to 30 days even, after delivery — Lochia; 6. சுரம், முதலிய நோய்களுற்ற காலத்தில் உதடு பல் இவைகளிற் படியும் ஊத்தை, the drak-brown foul matter which collects on the lips and the teeth in low fevers.—Sordes.

அழக் குடம்பு, அழுக் கடைந்த வுடம்பு, filthy body.

அழக்குத் தங்கல், பிரசவமான பிறகு கருப் பையி னின்று வழக்கமாக வரக்கூடிய இரத்த முதலானவை வெளிவராமல் தடைப்படல், sudden interruption of the usual lochial discharges after child-birth.

அழக்குத் தேமல், உடம்பிற் சில பாகங்களில் தழும்புகளேற்பட்டு அவைகளின்மேல் கருப் பாக அழுக்கு நிறைந்து தேய்க்கத் தோலுரிய மோர்வகைத் தேமல், a disease of the skin marked by patches, dark with dirt and the exfoliation of the scarf-skin or epidermis in several parts of the body.

அழக்கு நீர், சூதக நீர், menstrual blood; 2. அசுத்த மான நீர், dirty water 3. குழந் தை பிறந்தபின் பெண்களுக்கு அல்குல் தாரையினின்று ஒழுகப் பெற்ற இரத்தம் அல்லது ஊனீர், the lochial discharge after child birth, which is thin and watery in the beginning and becomes like soiled water in the end.

அழக்குப் பற்கள், ஊத்தை யடைந்த பற்கள், dirty tooth; the incrustation that forms on the neglected teeth—Tartar; 2. காவி படிந்த பற்கள், teeth with fiimy matter; the brownish secretions or calcareous matter seen on the roots of the teeth in cases of pyorrhea—Scrumal tartar.

அழக்கு விழுதல், பிரசவித்தவுடன் கருப்பையி னின்று மாசு வெளிப்படுதல், the discharge from the uterus immediately after child-birth; 2. நஞ்சு விழல், casting off of the after-birth.

அழங்கல், நோய், disease; 2. வருத்தம், affliction; 3. மலை, mountain; 4. கைகால் கறுப் பேறல், darkening of the limbs through disease; 5. கண் சலங்கல், congestion of the eyes; 6. அழுங்குதல், which see; 7. அழுதல், crying, weeping.

அழங் காலை, ஓர்வகைக் கடலாமை, hawk's bill — Caretta squamata; 2. அழுங்கு, pangolin.

அழங்கு, அழுங்காமை, which see; 2. இரவில் கரையான்களைத் தின்று பூமியின்கீழ் வளை யுள் வசிக்குமோர் பிராணி, jungle carp; Indian scaly ant-eater — Manis pentadactyla alias M. brachyura. It is an animal which feeds on white-ants at night. It burrows into the ground to a depth of from 8 to 12 feet and lives there.

NOTE.—It is most common in hilly districts. It is so called on account of its arched back while walking and from its nocturnal habits.

அழங்குதல், உருவழிதல், to be disfigured; becoming impaired in beauty, symmetry, perfection and excellence.

அழங்கோடு, அழுங்கின் மேற் செதில்கள், scales on the pangolin.

அழஞ்சி, ஐங்கோலம், see under அழுஞ்சில்.

அழத கண் சிந்திய மூக்கு, சதா விசனத்தால், அழுதுகொண்டே யிருத்தல், to be always weeping through distress.

அழதல், கத்தல், crying; 2. புலம்பல், weeping.

அழத்தமில்லா வுடம்பு, பழக்கத்தில் அடிபடாத தேகம், body not hardened by habit — Relaxed habit.

அழந்தல், அமிழ்தல், depression as in pulsation (நாடி யழுந்தல்) indicating collapse or death; 2. வருந்தல், suffering from a disease, pain etc.

அழுத்தி நிற்றல், see அழுந்தல்.

அழுப்பு, சோறு, boiled rice.

அழவம், அப்ப வருக்கம், different kinds of rice-cakes ; 2. காடு, forest ; 3. ஆழமான கடல், deep sea; 3. நடுக்கம், fear; 4. நாடு, country.

அழை, அழுகை, which see.

அழைப்பு மூலிகை, மாந்திரீகத்தில் வசியத்திற் காக உபயோகிக்கும் தொடரி வேர், ஒரியா ணவ்கை, அழிகண்ணி முதலியன, the drug or drugs used in magic such as the root of Rhamnus circumcissus, Polygala glabra, Indian weeping plant etc.

அளகபேதம், அதிஷ்டியம், which see.

அளகமம், புல்லுருவி, parasite plant.

அளகம், வெள்ளெருக்கு, a milky shrub known as white madar — Calotropis gigantea (*albiflora*) ; 2. பெண் மயிர், a woman's hair ; 3. பன்றி முள், porcupine's quill ; 4. நீர், water ; 5. மழைச் சலம், rain-water ; 6. காட்டகத்தி, unifoliate caper—Cadaba indica.

அளகன், சோர பாஷாணம், a kind of arsenic.

அளகு, சேவல், a cock 2. கோழி, fowl; 3. கூகை, a large species of owl ; 4. பறவைப்பேடு, the females of birds in common.

அளக்கர், உப்பளவர், salt-manufacturers.

அளக்கர், கடல், sea ; 2. பூமி, earth ; 3. உப்பளம்; salt-works ; salt pans ; salt-marsh.

அளக் காய், வெள்ளெருக்கு, white madar plant—Calotropis gigantea (*albiflora*).

அளக் கூறுபாடு, அளவின் பிரிவு, quantitative analysis.

அளஞ்சி, அளஞ்சை, } see அழிஞ்சில்.

அளத்தி, நெய்தனிலப் பெண், the woman of a marine tract.

அளத்தியம், சவர்க்காரம், fuller's earth ; 2. நீல பாஷாணம், a kind of prepared arsenic.

அளத்தியர், உப்பமைப்பவர்களின் பெண்கள். women belonging to the salt-manufacturing class.

அளத்துப் பச்சை, உவர் நிலத்தி லுண்டாகு மருக்கொழுந்துச் சக்களத்தி, a plant akin to Mail's love, found growing in the brackish soil or near the sea-side—Sea-blite.

அளத்துப் பாசிதம், பெரு முன்னை, dusky-blite.

அளத்துப் புல், முயிற்றுப் புல், maritime grass or ant-grass because it is found grown near ant-hills—Pommeruella cornucopia. A small rare grass growing under the bushes on dry uncultivated soils.

அளத்துப் பூசினி, பெரும் பூசினி, ash-coloured pumpkin—Cucurbita maxima.

அளத்துப் பூவை, ஓர்வகைப் பூஞைப்பூச் செடி, a species of wool-plant—Aerua bracteatum.

அளப்பம், அங்கப்பிச்சு, bile-duct.

அளப்புக்கு, முடக் கொத்தான், palsy curer—Cardiospermum halicacabum.

அளமம், பொன், gold.

அளம், உப்பளம், salt-marsh ; 2. உப்புமண் பூமி, saline soil; 3. நெய்த னிலம், marine tract.

அளம்பல், மான் கொம்புப் பூச் செடி, stag's horn trumpet flower — Stereospermum Xylocarpum. See also அடப்ப மரம்.

அளம் பற்றுதல், உப்புப் பூர்த்தல், a deposit of salt on the surface of anything.

அளம்பல் மரம், வெடங் குறுணி. மலையாளத்தில் சாதாரணமாய் உற்பத்தியாகு மோர் மரம். இதன் பூக்கள் வெண்மையாயும் இலைகள் அடர்த்தியாயும் பார்வைக்கு அழகாயு மிருக்கும். குளிர் காலத்தில் இலை உதிரும். இதன் பழம் மிருதுவாயிருக்கும், சாப்பிட வுகவும். இம்மரத்தினின்று வோர்கித எண்ணெய்ச் சுத்து எடுத்துச் சரும நோய்க் குபயோகிப் பார்கள், a tree ; walking-stick bignonia —Stereospermum Xylocarpum. It is a native of Malabar; its flowers are white, and the leaves deciduous in cold weather and also ornamental; the tender fruit is edible. A thick fluid of the colour and consistence of Stockholm tar is obtained from this tree and it is used by Veidyans as a remedy for scaly eruptions on the skin.

அளருகம், அளர்க்கம், } தூதுளை, three lobed night shade—Solanum trilobatum.

அளர், நீர். water ; 2. உவர் மண், fuller's earth ; 3. மஞ்சள், turmeric ; 4. களிமண், soft clay 2. சேறு, mire.

அளர்க் காடு, உவர் மண் வெளி, extensive soil of fuller's earth.

அளர்ப் பூமி, உவர்மண் பூமி, the soil of fuller's earth.

அளவஞ்சி மூலி, தேட் கொடுக்கி, scorpion-sting plant—Haliotropicum indicum.

அளவர், உப்பமைப் போர், salt manufacturers.

அளவன், சோர பாஷாணம், a kind of prepared arsenic; 2. உப்புக் காய்ச்சுவோன், salt-manufacturer.

அளவா யுண்ணல், குறித்த வளவு சாப்பிடல், (*in medicine*)to take in the prescribed quantity; 2. மிதமா யுண்ணல், to eat moderately.

அளவிஞர், கேர்வாளம், see அழல் விரை.

அளவுக் கூறுபாடு, அளவின் பிரிவினைப் பாட்டை நிர்ணயித்தல், determination of the proportionate parts of various elements of a compound—Quantitative analysis.

அளவுதடி, ஆண் குறி, penis.

அளவை, அளவு, measure; 2. நாள், day.

அளறு, காவிக் கல், brownish red earth—Red ochre; 2. நீர், water; 3. குழம்பு, a liquid of thick consistency.

அளறுதல், நெரிதல், to be fractured by a fall or a blow.

அளாவல், அளாவுதல், } தூளாவி யாற்றல், cooling by stirring up, as with a spoon.

அளாவன், கலப்பு, mixture.

அளி, கள், toddy; 2. காய், unripe fruit; 3. மது, sweet liquor; 4. தேன், honey; 5. கருந் தேனீ, a black bee; 6. காகம், crow; 7. வண்டு, beetle; 8. மரவுரி, tree bark — Antiaris toxicaria; 9. மதுரம், sweetness.

அளிகம், நெற்றி, forehead.

அளிக்குலம், தேனீக் கூட்டம், a collection of bees.

அளிஞ்சி, see அழிஞ்சில்; 2. ஓர் செடி, (பிளி) an evergreen plant—Rhododendron arboreum.

அளிதல், உருகுதல், becoming melted; 2. கனிதல், becoming soft with ripeness; 3. குழைதல், being over boiled as in the case of rice etc; 4. கலத்தல், to mix; to mingle; 5. கரையும்படி அவித்தல், boiling to a melting or dissolving point 6. குழையும்படி அவித்தல், boiling to excess.

அளி தோஷம், கருவழிந்ததா லேற்பட்ட குற்றங்கள், the after-effects or other complications arising from abortion; 2. குழந்தைகளுக்குக் குடித்த பால் தங்காது நெஞ்சடைப்பு, உடம்பு நாற்றம், கை கால் வலி முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் நோய், a morbific diathesis in children marked by inability to retain the milk taken in, obstruction in the respiratory tract, fetid smell, pain in the limbs etc.

அளிந்த சோறு, குழைந்த சோறு, over-boiled rice.

அளிந்த பழம், மிகவுங் கனிந்த பழம், over-ripe fruit.

அளிந்த விரணம், அழுகிய புண், a sore with decayed flesh—Gangrene.

அளிய வதக்கல், முழுதும் வாடும்படி நெருப்பிலிட்டு வறுத்தல், to fry a thing to get rid of its moisture.

அளிகம், நெற்றி, forehead.

அளுங்கு, see அழுங்கு; 2. ஓரவகைக் கிளிஞ்சில், a kind of shell.

அளுங் கோடு, அழுங்கின் கொம்பு, the horn of a Pangolin.

அளேசு விடயம், அளேசு வெப்பம், அளேசு வெப்பு, } அதிவிடய வேர், the root of Indian atee—Aconitum heterophyllum.

அளேரியம், பெருவெங்காயம், a big species of onion.

அளோறுகம், தூதுவளை, see அளருகம்.

அவா, தயிர், curd; 2. மோர், butter milk; 3. வெண்ணெய், butter; 4. மலைக் குகை, a cave in a mountain.

அவாதுதல், கலத்தல், to mix up.

அவாதல், கலத்தல், mixing up,

அவா யெடுத்தல், புரை யோடல், to grow hollow as in ulcers; 2. துவார மிடல், to form a sinus.

அவாவு, கலப்பு, a mixture.

அவா வைத்தல், see அவா யெடுத்தல்.

அள், கன்னம், cheek; 2. காது, ear; 3. நீர் முள்ளி, a species of thorny shrub—Hy-

grophila spinosa ; 4. அள்ளுமாந்தம், infantile bronchitis—Broncho-pneumonia; 5. வரண் முள்ளி, a speciesof thorny Nail dye—Barleria prionitis.

அள் வழப்பு, காது குறும்பி, a thick viscous substance secreted by the glands of the ear—Ear-wax or cerumen.

அள்ள தள்ள போதல், சடுதி மரணம், a sudden mishap which hastens death, as in cholera, accident or other unnatural death.

அள்ளத்தி, ஓர் மீன், a kind of fish. See அள்ளாத்தி.

அள்ள நோய், அள்ளு மாந்தம்,a disease in children, arising from over-feeding—Broncho-pneumonia.

அள்ளாத்தி, கண் பெருத்த ஓர் வகை மீன், a big-eyed fish—Elops saurus.

அள்ளி, வெண்ணெய், butter.

அள்ளிக் கொட்டுதல், உடம்பு முழுதும் பரவுதல், (*Metaphorically*) to spread over the whole body as it happens in small-pox.

அள்ளிக் கொண்டு போதல், நோயினல் பெருவாரியாகக் கொண்டு போதல் அதாவது கொள்ளை கொள்ளுதல், to carry off lives in epidemic diseases, such as cholera, plague etc., in great numbers.

அள்ளி நிரப்பல், See அள்ளிக் கொட்டுதல்.

அள்ளு, அள்ளு நோய், குழந்தைகளுக் கேற்படு மோர் சுவாச நோய், a disease in children arising from defects in nursing them such as over-feeding etc. Infantile bronchitis—Broncho-pneumonia; 2. வலி, cramp.

அள்ளு மாந்தம், குழந்தைகட்கு நாமுள் தோஷத்தினல் விலாப்பக்கம் இரண்டு முயர வெழும்பித் துன்பமும் வலியு முண்டாக்கு மோர் நோய், இதைத் தெற்கித்திக் கணம் எனவும் சொல்லுவ துண்டு, a disease in children attended with fits affecting the intercostal muscles. It is due to eruptions on the tongue arising from congenital causes.

அள்ளுரல், அறணை அல்லது காட்டுக் கருணை, wild elephant yam — Dracontium polyphyllum.

அள்ளுறல், வாயூறல், secretion from the mouth—Saliva.

அள் ளெடுக்குதல், நோயினல் விலாத் தூக்கல், an involuntary rising of the intercostal muscles from a disease.

அள்ளெடுக்கு மாந்தம், see அள்ளு மாந்தம்.

அள் ளெடுத்தல், இறக்குங்கால் மூச்சுவிட முடியாமல் விலாப் பக்கத்தைத் தூக்கி விடுதலான வோர் மரணச்சுறி, respiration performed by the intercostal and other thoracic muscles—Thoracic respiration alias T. breathing. It is observed in persons gasping for breath just before death and so it is considered a symptom of death.

அள் ளெலும்பு, கன்னப்பொறி யெலும்பு அதாவது காதண்டை யிருக்கு மெலும்பு, a bone on the side of the head between the fore-head and the ear—Temporal bone.

அள்வை, பைசாசம், the devil.

அற, முழுதும், entirely.

அறகண்ணி, எருக்கன் கிழங்கு, the root of the Madar plant.

அறக் கட்டல், பிருவாகக் கட்டல், binding very tight, as a tight bandage applied to the abdomen of a woman immediately after delivery.

அறக் கண்டித்தல், முழுதுங் குணப்படுத்தல், to effect a radical cure, as in a disease.

அறக்க தாருகம், பெருஞ் சண்பகம், a large variety of champaca — Michelia champaka.

அறக்க பறக்க, விரைவாக, in great haste, as in taking food.

அறக்கமா, புளிமா, sour mango — Spondias mangifera.

அறக்கம், சுக்கு, dried ginger ; 2. திருகாமப் பாலை, see அற்கப் பிளப்பி.

அறச்காடு, சுடுகாடு, cremation ground.

அறச்குளா மீன், சூரை மீன், a kind of fish. See அர்க்குரை.

அறங்கை, உள்ளங்கை, the palm of the hand.

அறசோ கணக்கு, கருணைக் கிழங்கு, white yam—Dracontium polyphyllum.

அறச்சந்த காரன், சாரைப் பாம்பு, the rat-snake of the male species ; Male cobra.

அறஞ்சயறு சாதி, பத்மினி சாதிப் பெண், the first of the 4 classes of women as characterised by lust.

அறவண; காட்டுக் கருணை, see அள்ளரல்.

அறவணயம், see அறணை.

அறதனம், மிருத பாஷாணம், a kind of arsenic; 2. நவமணிப் பொது, a common term for the nine gems.

அறத் துறத்தல், உலகப்பற்றை முழுதும் விட்டொழித்தல், to renounce the world completely.

அற நெறி, ஊசலாங் கொடி, a creeper (*unidentified*).

அறப் பார்த்தல், சூனியம் வைத்தல், to ruin a man by the evil influence of spirits, as by sorcery.

அறமறை, வாழை, plantain tree — Musa paradisiaca,

அறமிள கரவண, ஓர்வகை மிளகரணை, prickly scopolia—Scopolia bilocularis.

அறம், நோய் மருந்தீதல், free distribution of medicine to the sick.

அறம் புறம், உட்புறம், inner side; 2. தடுமாற்றம், confusion of mind.

அறல், கரு மணல், black sand found on the sea-shore; 2. இரும்பு மணல், sand mixed with iron dust; 3. தண்ணீர், water; 4. நீர்க் கடுப்பு, a disease attended with pain in passing urine drops by drops; slow and painful discharge of the urine —Stranguary.

அறவச் சுன்னம், புடமிட்ட சுன்னம், a metallic calx.

அறவாடி, சர்வத்திராவகம், a universal solvent which is useful for all metallic preparations in medicine.

அறவுளி, நோயாளிக்கு மந்திரித்தல், a psychic or magnetic cure effected in a sick person.

அறவூதல், முழுமையும் சாம்பலாகும்படி ஆதிதல், to blow heat to reduce a substance to ashes; 2. புடமிடல், to sublimate or calcinate, as is done to chemicals.

See அறவைத்தல்.

அறவைச் சோறு, அனாதைக் கன்னமளித்தல், feeding the destitute.

அறவைத்தல், புடமிடுதல், to calcine.

அறவை

அறவைப் பிணஞ் சுடுதல், அனாதைப் பிணங் களைப் புதைத்தல் அல்லது சுடுதல், disposing of unclaimed dead bodies; burying or burning the corpses of the destitute.

அறவா, ஓர் நோய், a kind of disease.

அறவாயம், see அறணையம்.

அறுமதி, நாரை, a water-bird—A crane.

அறுமவல்லி, சக்கினி யாகிய மூன்றுஞ் சாதிப் பெண், the third of the four classes of women divided according to their lust or lewdness.

அறுமை, கவிழ் தும்பை, stooping leucas plant—Phlomis biflora.

அறும்பை, தும்பை, bitter leucas—Leucas aspera alias Phlomis aspera.

அறிகருவி, உடம்பி னுணர்ச்சியைப் புலப்படுத்து முறுப்பு, the sensory organ.

அறிசா, பெருவரை மீன், a big variety of fish.

அறி துயில், அறிவு குன்றுது தூங்குந் தூக்கம், a semi-conscious sleep; 2. யோக நித்திரை அதாவது தூங்காமற் தூங்கல், a sleep in which the person is conscious of his surroundings; the sleep of devotion or abstraction—an attribute supposed to belong to the sages; 3, விழிப்பில் நித்திரை கொள்ளு மோர் நோய், wakeful lethargy—Agryphnocoma.

அறிப்பலம், திப்பிலி, long-pepper — Piper longum.

அறியகம், நோயை யுண்டாக்கு மோர் பைசாசம், a demon causing diseases.

அறிய பலம், see அறிப் பலம்.

அறியல், மூங்கில் மரம், bamboo tree — Bambusa arundinacea.

அறிவழி, கள், toddy or any liquor destroying the reason and the sense; 2. புத்தி கெடல், the loss of the senses; 3. பைசாசம், a devil causing senselessness.

அறிவழிதல், மதி மயங்கல், அதாவது புத்தி கெடல், ஓர் மரணக்குறி, losing sense and consciousness—A symptom of approaching death.

அறிவறை, அஞ்ஞானம், destitution of spiritual knowledge; 2. அறிவழிகை, loss of sense 3. பொய்க் காட்சி, illusion; 4. ஞான

மில்லான், one destitute of spiritual knowledge.

அறிவாணி, சித்தினிசாதிப் பெண், the second of the 4 classes of women as characterised by lust.

அறிவானந்தர், அகத்தியர் கூட்டத்திற் சேர்ந்த வோர் சித்தர். இவர் தமிழில், அனேகவித வைத்திய நூற்களே யியற்றி யுள்ளவர், one of the Siddhars of the Agastya school. He is the author of several treatises on Alchemy and Medicine.

அறிவிலாப் பிரமை, மந்தபித்தம், பித்தரோய் 40-ல் ஒன்று, a bilious disease causing insensibility. It is one of the 40 kinds of bilious disorders in the system.

அறிவி ஞ்ஞி, கற்பூர சிலாசத்தின் சாரம், the active principle of the crystallised gypsum.

அறிவு, இகத்தைப்பற்றிய நல்லுணர்ச்சி, worldly intelligence; worldly knowledge; 2. பரதைப் பற்றிய நல்லுணர்ச்சி அதாவது ஞானம், wordly wisdom; divine knowledge.

"அறிவெனும் ஞானக் தன்னே ஆனந்த மயமாயுச்சி குறியிலே குறித்த பேர்க்கு, கோதிலா ஜோதி ஒன்று அறிவிலே அறிவைப்பற்றி ஆனந்த மாகிலிலே"

3. உணர்வு, feeling or perception by the senses; 4. ஆன்மா, the soul.

அறிவு பிறத்தல், மூர்ச்சை தெளிதல், to recover consciousness as from a swoon, giddiness etc; 2. ஞான முண்டாதல், to acquire wisdom.

அறிவு பைத்தியம், அறிவு மயக்கம், a kind of lunacy attended with loss of sense.

அறிவு மயக்கம், புத்தி தடுமாற்றம், the puzzled state of the mind—Perplexity.

அறிவு மயங்கல், பிரமித்தல், to be stunned or bewildered.

அறிவு மயங்குதல், உணர்ச்சி தவறுதல், losing consciousness through several causes, such as, disease, fits, sleep, delirium etc; 2. பிரமித்தல், to be stunned.

அறி வுறுதல், உணர்ச்சி கொள்ளல், to regain consciousness; 2. தெரிந்து கொள்ளல், to know; 3. தூக்கத்தினின் றெழுதல், to wake up from sleep.

அறிவை, ஞானம், wisdom.

அறுகங் கட்டை, அறுகம்புல்லி னடி வேர், the bottom root of the grass அறுகு—Agrostis linearis.

அறுகங் கிழங்கு, அறுகம் புல்லி னடியிற் காணப்படும் வாசனைக் கிழங்கு, the bulbous root at the bottom of the grass—Agrostis linearis.

அறுகம் புல், பூசைக் குகந்த புல், a species of sacred grass; Harialli grass—Agrostis linearis. See அறுகு.

அறுகம் வேர், அறுகம் புல்லின் வேர். இது கஷாயத்திற்கும், தைலத்திற்கும் உதவும், the root of the sacred grass—Agrostis linearis alias Cynodon dactylon. Decoction and oil are prepared from this root.

See under அறுகு.

அறுகம்வேர்த் தைலம், அறுகன் வேருடன் மற்றக் கடைச் சரக்குகளையுஞ் சேர்த்து வடிக்கும் தைலம். இது கபாலச் சூட்டைத் தணிக்கும், a medicated oil prepared from the root of the cynodon grass mixed with other bazaar drugs. It cools the over-heated brain.

அறுகம் வேர் நெய், அறுகன் வேரினின்று தயாரித்த மருந்து நெய், a ghee prepared medically from the root of the grass.

அறுகன் கட்டை, see அறுகங் கட்டை.

அறுகாலன், see அறுகால்.

அறு கால், வண்டு, a beetle with 6 legs; 2. தேனீ, a bee; 3. ஆறு கால், 6 legs; Hexapod animals or animals with 6 legs.

அறுகால் வண்டு, கருவண்டு, a black beetle.

அறு கீரை, அறைக் கீரை, a kind of vegetable greens. See அறைக் கீரை.

அறுகு, அறுகம்புல், நோய்களை அறுப்பதனாலிப் பெயர். இது முயலுக்குணவாகும். ஆதலினிதற்கு முயற்புல் லெனவும் ஓர் பெயர் வழங்கும். இது 6 முதல் 12 அங்குலம் வரைக்கும் வளரும், மிருதுவாயும், சிறிய இலைகள் கூடியதாயும், பலத்தைக் கொடுக்கக் கூடியதாயு மிருக்கும். எல்லாயிதப் பயிர்களினு மிதைப் பார்க்கலாம். இது வினாயகருக்கு உரித்தான ஒரு பத்திரம்.

இதன் சாறு போஷிக்கக் கூடியதும், இரத்தக் கழிச்சலைப் போக்கக் கூடியதுமான சக்திகள் வாய்ந்தது. இதன் வேரையும், தளிரையும் சுரத்திற்குக் கஷாயம் போட்டுக்கொடுப்பதுண்டு, இதன் வேரை மிளகுடன் சேர்த்துக் காய்ச்சி மூத்தண்டக் கஷாயமாகக் கொள்ளலாம். இதனின்று காய்ச்சி யெடுக்குந் தைலத்தை மேலுக் குபயோகிக்கலாம்,

இது பலவகைப் படும். bent grass; Couch grass; Panic grass—Cynoden dactylon. It is so called from its curing virtue. It is also called 'The hare grass' since it forms a food for the hares. It is generally from 6 to 12 inches high and is also smooth; the leaves are small and very nutritious.

It spreads and constitutes roughly ¾ of the pasture lands and is sacred to God Ganesa. The juice of the grass is very nutritious and is a remedy for dysentery. The decoction of the roots and the young leaves is taken internally for fever and the decoction mixed with pepper is an antiseptic against poisons caused by drugs. The oil extracted from the roots is used as an external application.

NOTE.—The different kinds of this plant are:—

1. சிற்றறுகு—Agrostis linearis.
2. புல்லறுகு the same as அறுகு
3. போறுகு அல்லது பானையறுகு—Panicum Ischoemoides,
4. உப்பறுகு—Agrostis trenula.
5. கூக்கலறுகு—Agrostis.
6. வெள்ளறுகு — Exacum hyssoppifolium.
7. ஆற்றறுகு—River variety.
8. யானை அறுகு—Elephant grass.
9. கொடி அறுகு—Creeper grass.

The other common species are:—Gracilis and Virgatus.

அறுகு, ஆண் புலி, the male tiger; 2. சிங்கம், lion; 3. யாளி, a fabulous beast said to attack even lions; 4. யானை, elephant, 5. ஆளிவிதையை யரைத்துப் பிழிந்த ரசம்; the juice of the linseed.

அறுகு தராசு, சிறுதராசு, a small scale used for weighing medicine.

அறுகு மூலி, வெள்ளறுகு, இது மருந்திற் குதவும், மலத்தைப் போக்கிப் பசி தீபனத்தை யுண்டாக்கும். குன்மம், பல்வீனம் முதலிய நோய்களுக்கு உபயோகப்படும், white doob grass—Enicostema littorule alias Adenema hyssopifolium.

The whole plant is medicinal, a tonic a stomachic and a laxative. It is useful in dyspepsia and general debility. It is a substitute for British Gentian on account of its bitterness.

அறு தலை, மூண்டம், the headless body; the trunk.

அறுகை, அறுகம்புல், which see; 2. அறுத்தல், cutting; 3. அறுப்புண்ட கை, amputated hand.

அறுகோண பதி, விசுத்தி வீட்டிற்கு அதிபதி, the power in the psychic centre of the cervical region.

அறுகோணம், விசுத்தி வீடு, one of the psychic centres situated in the cervical region; 2. ஆறுமூலையுள்ள சக்கரம், a diagram of six angles.

அறுக்கிளா மீன், ஓர் கடல் மீன், saw fish.

அறுக்கை, அறுத்தல், the act of cutting.

அறுசங்கம், புணர்ச்சி, copulation.

அறு சரக்கு, கல்லுப்பு, சாரம், வெடி யுப்பு, படிக்காரம், தூரசி, வெண்காரம், முதலிய 6 வகைச் சரக்குகள், a group of 6 ingredients consisting of common salt, sal-ammoniac, nitre, alum, blue vitriol, and borax.

அறுசுவை, ஆறுவித ருசி அவையாவன:—உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, இத்திப்பு, துவர்ப்பு, புளிப்பு, the six kinds of tastes viz.—saltness, pungency, bitterness, sweetness, astringency and sourness.

அறுசுவை கழற்றல், ஆறுவித ருசியையும் நீத்தல் அதாவது நாக்கு ருசியையும், தீனியாசையையும் முற்றிலுமே ஒழித்தல். இது தவத்தினோர் கற்பம் சாப்பிட்டு உடம்பை பலப் படுத்துவதற்கு முன்னதாகச் செய்து கொள்ளும் பழக்கம், to leave off all tastes and pleasures in eating. This is generally done by Yogis and Siddhars preparatory to taking medicines for rejuvenation.

அறுசுவைக் காதி, கல்லுப்பு, common salt forming a basis for all kinds of tastes.

அறுசுவை யாதாரம், அறுசுவை யுப்பு, } see அறுசுவைக் காதி.

அறு சோகம், கெந்தி, sulphur.

அறுதம், ஓர்வகைச் சீமைப்பூடு, an acrid ill-smelling foreign plant with greenish-yellow flower—Rue.

அறுதி, சாவு, death.

அறுத்தல், சீரணித்தல், to digest; 2. கத்தியாலறுத்தல், cutting with a knife; 3. ஊடறுத்தல், to cut into two; 4. நோயில்லா

மற் செய்தல், to root out disease from the system.

அறுத்துக் கட்டுதல், to make an incision of a wound and bandage it.

அறுநீர், see அறுவகை செயநீர்.

அறுபதம், கையாந்தகரை, a plant with bright yellow flowers. Mary gold verbesena—Wedelia calendulacea; 2. அறுகால் வண்டு, a beetle having 6 legs.

அறுபதாங் குருவை, அறுபது நாளைக் குள்ளறுக்கக் கூடிய குருவை நெல். இரசாயனம் கொள்ளுங்கால், இதன் அரிசி சமைத்த அன்னத்தைப் பத்திய வுணவாகக் கொள்ளும் படி ஆயுள்வேத நூலில் கூறப்பட்டிருக்கிறது, a kind of paddy which could be reaped in 60 days. It forms the chief article of diet in the course of taking restoratives for purposes of rejuvenation according to Ayurvedic science.

அறுபதாங் கொட்டை, ஆமணக்குக் கொட்டை, castor seed.

அறுபதாங் கோடை, see அறுபதாங் குருவை.

அறுபதாங் கோழி, 60 நாளைக் கொருமுறை முட்டையிடுங் கோழி, a hen laying eggs once in 60 days i. e., every 2 months.

அறுபத்துநாலு பாஷாணம், தமிழ் வைத்தியத்திற் சொல்லியுள்ள 32 பிறவிப் பாஷாணம், 32 வைப்புப் பாஷாணம், ஆக 64 பாஷாண வகைகள், the sixty-four kinds of poisons dealt with in the Tamil Medical Science viz.—32 kinds of natural or mineral poisons and 32 kinds of artificial or prepared poisons or arsenics.

அறு பத்தை, see அறுபதம்.

அறுபது ஞன்கு அறுபத்து ஞன்கு, the number consisting of sixty and four.

அறுபுள்ளி வண்டு, ஆறு புள்ளிகளையுடைய ஓர் வகை வண்டு. இது கடித்தால் சிலநாட்கழித்து தும் உடம்பு முழுவதிலும் வட்டம் வட்டமாகத் தடிப்புகளை யுண்டாக்கும், a six-spotted poisonous beetle the bite of which after sometime develops circular patches of swelling in different parts of the body.

அறுப்பன் பூச்சி, தானியப் பூச்சி, அந்து, an insect feeding on grains; Grain-insect; grain moth.

அறுப்பு, அறுத்தல், cutting.

அறு மவண, ஊத்தைநாறிப் பூடு, a plant with a fetid smell; 2. அழகற்றவள், an ugly woman.

அறுமுக வாகனம், மயிலிறகு, peacock's feather.

அறுமுகன் விசிறி, மயூரச்சிகை, (மயூரம் + சிகை = peacock + crest) *literally* it means peacock's crest plant (*unidentified*).

அறுவகை செயநீர், வெடியுப்பு உருகும்போது, துருசு, சீனம், வெண்காரம், பூநீர், நவாச்சாரம், கழுதை மண்டை யோடு முதலியவைகளைப் பொடித்துப் போட்டுக் கிண்டிப் பனியில் வைத்து இறக்கு மோர்வகை செயநீர். இதை அண்டநீர் அல்லது சிறு நீரென்றும் பரிபாஷையாகக் கூறப்படும். இது வாதத்திற்கு மிக்க உபயோகப்படும். (உரோம. 500), a solvent medium used in Alchemy. It is known by different mystic names.

It is obtained first by melting nitre in a pot and adding to it powders of 6 drugs viz. blue vitriol, borax, Pooneer (*saline efflorescence*) sal ammoniac, and asses' skull and then exposing the whole mixture to the night's dew; 2. அமுரி அல்லது மூத்திரம், urine (புலஸ்தியர்கற்பம். 300).

அறுவகை ச்சரக்கு, நந்தி யுப்பு, அரப் பொடி, அப்புப் பொடி, தாளகம், காசுக்கட்டி, ரசம் முதலியன, a group of 6 drugs:—viz, Nandi salt, iron filings, Appu powder, orpiment, catechu and zinco—mercury.

அறுவகை பேதி, ஆறு வகையான பேதிக்குங் கற்கள்.—According to Tamil Siddhar's Science the six kinds of mineral solvents as enumerated below:—

1. அன்ன பேதி, copper sulphate, the solvent of rice food.
2. மாமிச பேதி, a mineral-solvent of flesh or meat.
3. சொர்ண பேதி, that which dissolves gold in it.
4. அஸ்தி பேதி, a mineral which is capable of dissolving bones.
5. சகஸ்ர பேதி, another solvent of a similar nature that could dissolve several substances.

அறுவகை மூத்திரம், the six kinds of urine viz:—the urine of human beings and 5 other animals such as, sheep, cow, ass etc.

அறு வாய், வெட்டு வாய், the incised part of the wound ; 2. குறை, deficiency ; 3. அறு பட்டவிடம், the opening in a cut wound.

அறுவித ரேகை, see அறுமுகன் விரி.

அறுவிரல், கை அல்லது பாதத்தில் ஏற்படும் ஆறு விரல்கள், the occurrence of six fingers on a hand or six toes on a foot—Hexadactylism.

அறுவை, அறுத்தபின் புகட்டு மருந்து, a medicine applied to the wound after operation ; 2. சத்திரம் வைக்கும் முறை, the operative branch of surgery.

அறுவை நூல், கத்தியா லறுத்துக் குணப்படுத்தும் முறையைப் பற்றிய நூல், a book on operative procedures—Surgery.

அறை, கற் பாறை, rock ; 2. மலைக் குகை, cave in a mountain ; 3. பிரசவ வீடு, lying-in room ; 4. மலையி னுச்சி, the top of a mountain ; 5. சுரங்கம், a subterranean passage ; 6. அம்மி, grinding or pulverising stone ; 7. கண்ணறை, cell ; 8. தேன்கூட்டின் அறை, the cell in a beehive ; 9. வெட்டுக்க, cutting ; 10. துண்டம், piece.

அறைக் கீரை, சாதாரணமாய்ச் சாப்பாட்டி லுபயோகிக்கு மோர்வகைப் பத்தியக் கீரை. கீரையைமட்டும் பறிப்பதா லிதற்குப் பெயா, இது, வாதம், கபம், சீதளம், முதலியவை களைப் போக்கும், a vegetable green used generally in food and also in diet. Round-headed amaranth ; Garden spinach—Amaranthus tristis alias A. gangeticus.

It is so called from its leaves only being plucked for use in curry. It is useful in rheumatic complaints and phlegmatic diseases and it also removes chillness from the system.

See அறுகீரை.

அறைக்கீரைக் காய், வெள்ளரிக் காய், cucumber—Cucumis sativus.

அறைக்கீரை விதை, அறைக்கீரையி னின்றெடுக்கு மோர் சிறிய கருப்பு விதை. இதிலி ருந்து தைலம் வடித்துத் தலை மண்டைக்குக் குளிர்ச்சி யுண்டாக்கவும், தலைமயிர் வளரவு முபயோகிப்பதுண்டு, the seeds of the garden spinach—Amaranthus gangeticus. The seeds obtained from this plant is dark and very small and the oil extracted from it facilitates the growth of hair.

அறைக் குழந்தை, பிரசவித்த அறையினின்று வெளிவராக் குழந்தை, a new-born baby in the lying-in-room.

அறை செய்தல், அறுத்துத் துண்ட மாக்கல், to cut into thin slices—to slice.

அறைதல், see அறை செய்தல்.

அறைத்தி, கடுக்காய், chebulic myrobalan.

அறை நீலி, கொத்தமல்லி, coriander—Coriandrum sativum.

அறைப் வளுதி, வெண்கார வள்ளி, garlic—Allium sativum.

அறை மாறி, பண்டைக்காலத்தில் மருந்துக்குப் பிகள் வைப்பதற்காகச் சுவரில் மாட்டிவைக்கக் செய்யப்பட்ட மர அறை. இது அலமாறி என மருவியது போலும், a wocden structure to be hung on the wall for preserving medicines in olden days—Almirah.

அறைவாழிக் கிளி, பொன்னங் காய், soapnut—Sapindus emarginatus.

அறை வீடு, பிரசவ அறை, lying-in room; the place for delivery ; 2. உள்ளறை, inner room; secure room.

அறை வீட்டுக்காரி, பிரசவித்த பெண், a woman in confinement.

அறை வீட்டுக் குழந்தை, பிரசவித்த அறையினின்று வெளிவராத குழந்தை அல்லது பாலகன், a baby not shifted from the lying-in room ; 2. பத்துப் பதினேந்து நாள் வரைக்கும் வளர்ந்துள்ள குழந்தை, a child from 10 to 15 days old.

See அறைக் குழந்தை.

அறைவீட்டு நோய், பிரசவித்த அறையினின்று வெளிவரா முன்னமே தோன்றும் நோய்கள், அதாவது, சன்னி, சுரம், கிராணி வலி முதலியன, diseases cropping up during the period or state of confinement, such as puerperal sepsis, fever, chronic eclampsia etc.

அழே தகம், வாழை, plantain tree — Musa paradisiaca.

அழே தயம், சிறு கீரை, a vegetable green, pig green—Amaranthus campestris.

அற் கண்ணி, எருக்கன் கிழங்கு, madar root.

அற்கப் பிளப்பு, திருநாமப் பாலை, oval-leaved China root—Smilax macrophylla.

அற்கம், தும்பைச் செடி, bitter leucas—Leucas aspera ; 2. வெண்டுளசி, white

basil—Ocimum alba ; 3, அலரி, sweet scented oleander — Nerium odorum ; 4. குன்றி, Indian or country liquorice — Abrus precatorius ; 5. கந்தியாவட்டம், broad-leaved rosebay ; Ceylon Jasmine — Tabernaemontana coronaria alias Nerium coronarium ; 6. முருக்கு, moringa tree; Indian coral tree—Erythrina Indica ; 7. வன்னி மரம், suma tree —Prosopis spicigera ; 8. வெள்ளெருக்கு, white madar plant — Calotropis gigantea (*albiflora*) ; 9. வேம்பு, margosa — Azadirachta indica.

அற்கரா, பேயிலுப்பை, wild mohwah — Bassia latifolia.

அற்கி, ஒரிலைத் தாமரை, one leaf lotus—Viola suffruticosum alias Ionidium suffruticosum. It is a pasture weed.

அற்சகன், வீடப் பாலை, a creeper(*unidentified*)

அற்சவன யாதி, வில்வம், Indian bael; Holy fruit tree—Aegle marmelos.

அற்சிரம், முன்பனிக் காலம், the first part of the dew season between December and January. It is opposed to பின் பனிக் காலம், which see.

அற்பக டன்னம், குழந்தை சோறு, rice suitably boiled for babies to eat.

அற்ப கதம், வாழை, plantain tree — Musa paradisiaca.

அற்ப கந்தம், செந் தாமரை, red lotus—Nelumbium speciosum.

அற்பகம், குழந்தைப் பருவம், the period of childhood—Infancy ; 2. தராலப்பை என் னுமோர் சிறு பூண்டு, a small plant—Hedysarum Alegi; 3. முன்னை, a tree—Premna herbacea.

அற்பகன், குழந்தை, child; infant.

அற்ப காந்தம், பேயெள்ளு. இது தரையோடு தரையாய்ப் படர்ந்திருக்கும்; பூப் பெரியது; மிகச் சிகப்பு. இது சாதாரணமாய்க் கடற் கரை யோரங்களில் மணற்குன்று அல்லது மணல் மேடுகளின் மேல் விளையும், wild gingelly—Sesamum prostratum. It is a prostrate-growing plant bearing large, and deep rose-coloured flowers. It is common on the sand hills near the sea-coasts and hence it is called also 'Sand-binder'.

அற்பகால சுரம், சொற்ப நேரம் அடிக்கும் சுரம், fever lasting for a short duration.

அற்ப கெந்தம், see அற்ப கந்தம்.

அற்ப கேசி, வசம்பு, sweet flag — Acorus calamus.

அற்ப கேசு, see அற்ப கேசி.

அற்ப கேதமம், சந்தனம், sandal—Santalum album.

அற்பகை, பேயகத்தி, bitter Agastya's plant —A kind of Sesbania.

அற்ப சங்கை, மூத்திரம் பெய்தல், to make water or to pass urine.

அற்ப சீடி, சிறுத்தலையர், மாங்காய்த் தலையர், persons having very small skulls — Microcephalous.

அற்ப சுரம், பெண்கள் பிரசவித்த பிறகு அதிர்ச்சியாலும் பலவீனத்தாலும் சில நாள் வரையிலிருந்து பிறகு நீங்கும் சுரம், a fever that exists only for some time after labour in consequence of debility or shock. 2. ஒத்துணர்ச்சியினு லுண்டாகும் சுரம், sympathetic fever—3. ஒன்று அல்லது இரண்டு நாளைக்கு அடிக்கும் சொற்ப சுரம், a slight fever lasting only for a day or two—Ephemeral fever.

See அதுதாபகம்.

அற் பதமம், செந்தாமரை, see அற்ப கந்தம்.

அற்ப பத்திரர், சிருநீற்றுப் பச்சை, sweet basil, Royal basil—Ocimum basilicum.

அற்ப பத்திரை, சிறிய இலைகள் பொருந்தியது, having small leaves; 2. ஓர்வகைத் தனசி, a kind of basil; 3. நிலப் பனை, a plant, ground palm—Curculigo orchioides ; 4. சோம்பு, aniseed—Anethum sowa.

அற்ப பலப் பிராணம், மெலிந்த, of little strength and of little breath or vitality i.e , weak and without any power of endurance.

அற்ப பிரமாணகம், வெள்ளரி, common cucumber—Cucumis sativus.

அற்ப பிராணன், சிறு மூச்சு, a low or weak breath.

அற்ப புட்பகம், திலக மரம், the Tilak tree 2. சிறு வாழை, the small banana —Musa sapientum.

அற்ப மலபந்தம், சிறிது மலச்சிக்கல், a slight constipation.

அற்ப மாரி, அற்ப மாரிசம், அற்ப மாரிடம், } காட்டுச் சிறு கீரை, pig's greens—Amaranthus campestris; 2. சிறு கீரை, field spinch—Amaranthus polygamus. This is used in curry.

அற்ப மூரினி, பேயவரை, bitter bean or wild bean—Glycine javanica.

அற்ப மூர்த்தி, அற்ப வடம்புள்ளவன், a weakman; 2. அற்பத் தோற்றம், poor appearance.

அற்பம், நாய், dog; 2. பஞ்சு, cotton; 3. பனி, dew; 4. புகை, smoke.

அற்பருத்தம், வாழை, plantain tree — Musa paradisiaca.

அற்ப விஷப் பாம்பு, சொற்ப நஞ்சு வாய்ந்த பாம்பு, அவைகளாவன—snakes of weak poisons as mentioned below:—

1. பசி, தாகம், நோய், கீறிக் கடி, சீதளம், நெருப்பு, காற்று, தோலுரிதல், விஷங் கக்கல் முதலியவைகளாற் பீடிக்கப் பட்ட பாம்பு, those affected by hunger, thirst, disease mungoose-bite, cold, fire, wind, and those expelling poisons.

2. குளம், தருப்பை வனம், முள்ளுப் புதர், மலையுச்சி முதலிய இடங்களால் இயற்கைத் தன்மைமாறும் பாம்பு, those affected by the climatic conditions and other nature of the locality in which they live such as tanks, grass (*sacred*) farms bushes or thistles, mountain tops etc. மேற்கண்ட பாம்புகளாற் கடியுண்டால் அக் கடிவிஷம் எளிதில் தீரக் கூடியது The bite of any of these kinds is easily curable.

அற்பாசமனம், சிறு நீர் விடுதல், to discharge urine—Urinate. See அற்ப சங்கை.

அற்பாயு, வெள்ளாடு, goat; 2. சொற்ப வயது, short-life.

அற்பாயுசு, see அற்பாயு.

அற்பானந்தம், சிலேட்டும தோஷத்தினுல் நேர்ந்த ஓர்வகை யோனி ரோகம், இதில் புருஷனுக்கு சம்போகத்தினுல் உண்டாகும் ஆனந்தம் பெண்களுக் குண்டாகாது, a diseae of the organ of generation of a female arising from phlegmatic causes. In this, a man is said to derive more pleasure than a woman during coition.

அற்பியக்கம், சிறிய யோனி யுடைமை, the state of having a very small vulva.

அற்புதசயா, சூரத்துக் கடுக்காய், Indian gallnut exported from Surat.

அற்புதக் கிரந்தி, உடம்பிற் சொற்ப விரண மிருந்தாலும் அல்லது இல்லா விட்டாலும், சிலநாளைக்குள் கண்டு கண்டாக விரணத்தையெழுப்புவ துடன் பருத்துயர்ந்து எரிச்சலும் தினவும் அதிகரித்துக் காணு மோர் வகை விரணக் கிரந்தி, a syphilitic sore in which nodules appear all over the body and ulcerate, giving rise to itching and burning sensation, irrespective of other lesions.

See இரத்தாற்புதக் கிரந்தி.

அற்புத சிந்தாமணி, சிவபெருமான் உமாதேவியாருக்குத் தன் திருவாக்கினுற் சொல்லியதை தமிழாசிரியராகிய பொதிகை மலை அகத்திய முனி தமிழில் இயற்றிய ஓவ்வொரு மருந்தினற்புதங்களையும் பெருத்துக் கூறும் சிந்தாமணி வைத்திய மெனப் பொதுப்பட வழங்குமோர் சிறந்த வைத்திய நூல்.

இது வடமொழியில் சுலோகமாக விருக்கும், 'தேவி திரவிய ரத்னகரம்' என்னும் நூலின் தமிழ் மொழிப் பெயர்ப்பெனச் சிலர் கூறுவர். இது தவறு. இதற்குத் தருந்த அத்தாட்சி காண்கிலோம், a Tamil work on Medicine compiled by Agastya Muni, the founder of the Tamil language.

It is so called from its dealing with the peculiar properties of each drug in all its details. It is said to be the translation of the original Sanskrit work called 'Devi Dravya Rathnakaram' composed in verses as dictated by Iswara to His wife Umadevi. There is no proof in support of this version and it is highly improbable.

அற்புதப் புண், அதிக வலியும் வீக்கமும் உடைய புண், a sore or wound attended with great pain and swelling.

அற் புதம், உள்ளில் மிகுந்த வலியோடு கூடிய வீக்கம், a swelling attended with excessive internal pain; 2. விலாவின் குருத்தெலும்பு, the cartilage of a rib.

அற்புத ரோகம், புரைக் குழல், a morbid enlargement of the thyroid gland, forming a mass, sometimes of an extraordinary size on the front part of the neck —Goitre.

அற்புத வதி, மிளிறை, see அரிவாள் மூக்கன்.

அற்புத வர்த்தமம், கண் இரப்பைகளின் உட்பக்கத்தில் மந்தமான வேதனையையும், சிவப்பு நிறம் வாய்ந்து சீக்கிரம் விருத்தியை யடையும் தன்மையையு முடைய வீக்கத்தையு மெழுப்பு மோர்வகைக் கண்ணேய். இவ்வீக்கம், சில சமயங்களில் கண்ணுக்கு வெளிப் புறத்தில் பிதுங்கித் தொங்கும், a red and knotty swelling of an uneven size and shape growing rapidly on the inner-side of the eye-lid and attended with a little pain. It is sometimes found protruding from the eye.

அற்புத வாதம், முகத்தில் வாயு பரவிச் சயித்தியத்தினுல் முகத்தினரம்பிழுத்துப் பித்த மதிகமாகிப் பலவடி வுண்டாகி வாயுங்கோணி, ஒருபுறங் கண்ணுஞ் சாய்த்து காணு மோர் நோய், a kind of facial paralysis due to the affection of nerves arising from the enraged bile and deranged Vayu spreading over the face. It is marked by contortion of the mouth and deviation of the eyes to one side.

அற்புத வேணி, கருப்பு மந்தாரை, purple mountain ebony—Bauhinea purpurea.

அற்புதாக் கிரகம், குழந்தை பிறந்த 12ம் நாள், 12ம் மாதம் அல்லது 12ம் வருடத்திற் குழந்தைக்காவது தாய்க்காவது உண்டாகும் தோஷத்தினு லேற்படு மோர் நோய், a morbific diathesis affecting either the mother or the child within a period of 12 days, or 12 months, or 12 years from the date of delivery. It is supposed to be due to the influence of evil planets at the time of the child's birth.

அற்பு தோட்ட ரோகம், (அற்புதம் + ஓஷ்டம், வலியோடு கூடிய வீக்கம் + உதடு.) உதடுகளிற் சிறிய பேரீச்சங்காயை யொத்த வீக்கத்தையும் சிவந்த நிறத்தையு முண்டாக்கு மோர் நோய், a disease of the lips of the mouth accompanied by inflammation and a swelling about the size of a small date fruit; a fungus growth on the lips —Labiomycosis.

அற்ற செப்பு, களிம்பற்ற செம்பு, copper free from verdigris—Refined copper.

அற்ற நோய், தீர்ந்த நோய், a disease completely removed from the system i, e cured.

அற்றம். அச்சம், fear; 2. சோர்வு, distraction, stupor; 3. மெலிவு, leanness; 4. வருத்தம், suffering.

அற்றரு வாயு, வயிற்றில் முழுவதும் நீங்காத வாயுவால் அசீரணம் ஏற்பட்டுத் தினம் புளித்தேப்பமும் அத்துடன் பலவீனம், உடம்புக் கொதிப்பு முதலிய குணங்களும் உண்டாகு மோர் குன்ம வாயு, dyspepsia arising from indigestion due to the retention of gas in the stomach. It is marked by sour belch, weakness, a feeling of glowing heat in the system, etc—Flatulent dyspepsia.

அற்றர், இறந்தவர், dead persons.

அற்றிப்பூர சாதனி, அவரி, indigo plant — Indigofera tinctorious.

See அத்திபுர சாதனி.

அற்றுப்போதல், முழுவதும் நீங்குதல், to cease completely, as a disease from the system; 2. பூரணமாய்க் குணப்படுத்தல், to be cured radically, as of a disease.

அற்று விடல், கழலுதல், getting removed entirely; 2, நோயில்லாமற் போதல், getting rid of the disease completely.

அற்றூரம், மர மஞ்சள், tree-turmeric — Coscinium fenestratum.

அற்றை நிலை, நோயாளிக்குத் தினப்படிக்குரிய உடம்பின் தன்மை, the daily condition of the body in a patient.

அற்றை மருந்து, நோயாளிக்குத் தினப்படித் கொடுக்கும் மருந்து, the daily prescription intended for a patient.

அனகம், புல்லுருவி, a parasitic plant — Loranthus.

அனகாமிதம், பேயெலுமிச்சை, indian wild lime—Atlantia monophylla.

அனக் கிராந்தம், கண்டங் கத்திரி, prickly night shade—Solanum jacquini.

அனக்கினி, தீபன மற்ற, having no fire in the stomach—Dyspeptic.

அனங்க மாதா, செம் பஞ்சு, red cotton — Gossypium barbadense (*acuminatum*); 2. அரக்கு, lac or sealing wax.

அனங்கம், இருவாட்சி, tuscan jasmine — Jasminum sambac (*flore manorae pleno*) 2. மல்லிகை, Arabian jasmine — Jasminum sambuc; 3. வாய்வு, flatulency; 4. ஆகாயம், sky; 5. உடம் பில்லாதது, that which is bodiless; incorporeal.

அனங்கன், (அன் + அங்கன்) உடம் பில்லாதவன், he who is incorporeal; 2. காமன், Indian cupid.

அனங்காகினி, பேய்க் கொள்ளு, wild gram —Rynchosia (*genus*).

அனங்குரி, விரலற்ற, destitute of finger.

அனசு, ஓர் அளவு, an ounce.

அன சூயம், எரிச்ச லின்மை, absence of burning sensation.

அனஞ்சனம், ஆகாயம், sky.

அனட்சம், குருடு blindness; 2. முட்டையிற் பிறப்பன. இது உள், வெளியென இரண்டு விதம், producing young one's from eggs that are brought out from the body and then hatched (*outside as in the case of birds*)—Oviparous. This is in contradistinction to ovoviviparous-producing eggs which are hatched *within the body* (*as is the case of vipers*).

அனதச் சீவன், ஓர் பூடி, a plant—Elephantopus scaber.

அனத்தல், காய்தல், exhibiting great heat in the body, as in fever. See அனற்றல்.

அனந்தகம், மயிற்சிகை, a plant, peacocks' crest; 2. குப்பை மேனி, rubbish plant—Acalypha indica.

அனந்த சுகம், பெண் கலவியிலு லேற்படும் அளவு கடந்த இன்பம், (*in Erotic science*) an abnormal sexual feeling experienced during coition.

அனந்த ஞானி, சூரியன், the sun.

அனந்த பீதம், மருக் கொழுந்து, maid's love —Artemisia abrotanum.

அனந்த மூலம், கிருட்டிண வல்லி, a plant — Hemidesmus indicus.

அனந்த மூலி, அலரி, indian oleander—Nerium odorum.

அனந்தம், குப்பை மேனி, see அனந்தகம்; 2. சிறு குறிஞ்சா, small indian ipecacuanha—Periploca sylvestris alias Gymnema sylvestris; 3. சிறு காஞ்சொறி, small climbing nettle—Tragia involucrata (*cannabina*); 4. பெரு நன்னாரி, which see; 5. அறுகு, cynodon grass—Agrostis linearis; 6. கோளக பாஷாணம், a kind of arsenic; 7. பொன், gold; 8. ஆகாயம், sky; 9. பிருத பாஷாணம், a kind of arsenic; 10. நன்னாரி, indian sarasaparilla — Hemidesmus indicus; 11. மயிற்சிகை, peacocks' crest; 12. வேலிப் பருத்தி, hedge cotton — Daemia extensa; 13. சிந்துவாரம், a plant — Vitex trifolia; அப்பிரகம், talc; 15. சழுதைப் பாலை, the plant—Periploca indica alias Asclepias pseudosarsa alias A. asthmatica. The root of this plant supplies a valuable medicine.

அனந்தரகம், பேய்ச் சிந்தில், a black species of the moon creeper—Tinosphora cordifolia alias Menispermum cordifolium.

அனந்தரம், வேலிப் பருத்தி, see அனந்தம்; 2. அறுகம்புல், cynodon grass—Agrostis linearis.

அனந்தர், பருத்தி, cotton—Gossypium arboreum; 2. பித்து, bile; 3. தூக்கம், sleep; 4. மயக்கம், stupor, delirium; 5. உணர்ச்சி, sensation; 6. மனத்தடு மாற்றம், perplexity of the mind.

அனந்த லாவிசம், பேய்ச் சீரகம், wild cumin —Vernonica anthelmintica.

அனந்தல், நித்திரை, sleep; 2. அற்பத் தூக்கம், a soft or gentle sleep especially in the morning; 3. மதம், an extravagant sexual passion too strong to be controlled—Infatuation; 4. மயக்கம், stupor.

அனந்த வங்கம், பூனைக் காலி, cat-bean—Mucana pruriens.

அனந்த வாத சிரோ ரோகம், see அனந்த வாதம்.

அனந்த வாதம், தலையிற்காணு மோர்நோய், a disease of the head (*like tetanus*); 2. புற வீச்சு. இது பிடரி நரம்பைப் பற்றித் தலையில் வலியையும், கண் புருவம், கன்னப்பொறி, தாடை முதலிய விடங்களில் பரவி அங்கங்கு சுவரணையறச் செய்யும். இது திரிதோஷத்தி லுலேற்படும், a disease of the head in which a violent pain is felt at the two nerves on the back of the neck, which ultimately affects the region of the eye,

the eye-brow and the temples. It especially produces a throbbing pain in the cheek and paralysis in the region of the jaw and the eye. It is due to the concerted action of the three doshas.

அனந்த வோபயம், கரு நாய், a black dog.

அனந்தன், வெடி யுப்பு, salt petre — Potassium nitrate (K No $_3$); 2. காய்ச்சற் பாஷாணம், a kind of prepared arsenic; arsenic.

3. சோர பாஷாணம், a kind of prepared

4. படத்தில் வெண்டாமரைப் பூவைப் போற் புள்ளிகளே யுடையதாய் மூச்சினால் உலகத்தைச் சாம்பலாகப் பண்ணுந் திறமை வாய்ந்த பாம்பு. இது தியானங்களுக்கு யோக்கிய முள்ளதாய்த் தென் திழக்கில் வாசமாயுள்ள எண்வகைப் பாம்புகளாகிய கடவுட் பாம்புகளி லொன்று—அட்டநாகத் தொன்று, one of the eight divine serpents said to possess dots resembling the white lotus flowers on their hoods and to be capable of reducing the world to ashes by their mere poisonous breath. It is fit to be worshipped and is said to reside in the south east corner and support one of the eight cardinal points of the globe.

அனந்தி, தான்றிக்காய், devil's tree—Terminalia belerica; 2. கொற்றான், a creeper —Cassytha filiformis.

அனந்தடை யோன், ஈ, fly.

அனந்தை, கொற்றான், see அனந்தி.

அன பத்தியம், மலட்டுத் தன்மை, childlessness; barrenness.

அனமாருதம், இந்திர கோபம், lady's fly — Mutella occidentalis.

அனம், அன்னம், boiled rice; 2. அன்னப் பறவை, a bird not in existence now. It is said to be capable of separating milk from water.

அனம்பு, சாதகப் பறவை, வானம்பாடி, the lark; 2. நீரில்லாதது, that which is deprived of water,

அனயகம், இருவாட்சி, மல்லிகை, jasmine — Jasminium sambuc.

அனரசம், அன்ன ரசம், the sap or essence of rice; 2. ஓர் சிற்றுண்டி, a sweet confection.

அனரவன், வெங் தோன்றி, a creeper— Bryonia epigea.

அனலசம், பேய்க் கொம்மட்டி, bitter apple —Cucumis colocynthus.

அனலடுப்பு, கூண்டடுப்பு, a covered brick-oven.

அனல தீபனம், பசியை யுண்டாக்குவது, that which excites digestion—Stomachic.

அனல பித்தம், சூட்டினல் உடம்பு முழுவதுஞ் தடிப்புண்டாகித் தூக்கம் வாராமை, தலை வலி, வயிற்றுச் சூலை, நாவில் திமிர், படல மெழும்பல், விக்கல், இளைத்தல், மூர்ச்சை, தாகம், கால் நோய், முதலிய குணங்களைக் காட்டி மோர் வகைப் பித்த நோய், a disease caused by the deranged Pittham and attended with the following symptoms viz:—raised patches all over the body, sleeplessness, headache, piercing pain in the stomach, loss of sensation in the tongue, eruptions, hiccough, emaciation, fatigue, thirst, pain in the legs etc.

அனலப் பிரபம், முடக் கற்றான், a plant, palsy curer—Cordiaspermum helicacabum.

அனலமுரி, அமுரி யுப்பு, uric salt.

அனலம், சித்திர மூலம், Ceylon lead-wort— Plumbago Zeylanica; 2. நெருப்பு, fire; 3. உஷ்ணம், heat; 4. செரிக்கும் தன்மை, digestive power; 5. பாசக நீர், gastric juice; 6. பித்தம், bile; 7. சேராங் கொட்டை, dhoby nut — Semicarpus anacardium.

அனலல், வெப்பங் கொள்ளல், becoming hot; 2. எரிதல், burning.

அனலாசனப் பட்சி, (அனல் + அசனம் + பட்சி) நெருப்பை விழுங்கும் கோழி, a bird that swallows fire—Ostrich.

அனலாற்றி, வெப்பத்தைத் தணிக்கக் கூடியது, that which can subside the heat in the system; 2. சுரத்தைத் தணிக்கக் கூடியது, a remedy that allays fever — Febrifuge.

அனலி, சூரியன், the sun; 2. தீ, fire; 3. செந்திராய், a plant (*unidentified*) 4. அகத்தி, a plant—Sesbania glandiflora.

அனலி முசம், சூரிய புடம், exposing a thing to the sun's heat.

அனலுக் குளசையா சூதகத்தி, சுணங்கன் விருட்சம். இது 21 மகா மூலிகைகளுள் ஒன்று, an unknown or unidentified tree supposed to be a fire-proof. This forms one of the 21 invaluable drugs used by Siddhars for purposes of rejuvenation.

அனலேறு, இடி, thunderbolt.

அனலோடு வேந்தன், கார்முகிற் பாஷாணம், a kind of arsenic (*native*); a mineral poison.

அனல், நெருப்பு, fire, 2. உட்டிணம், heat; 3. வன்னியிலை, the leaf of the Vanni tree; Suma tree—Prosopis spicigera; 4. பித்தம், bile; 5. இடி, thunder-bolt; 6. கொடி வேலி, Ceylon lead-wort — Plumbago Zeylanica; 7, உயிர்வேதனையி லொன்று one of the several troubles attributed to life.

அனல் காலி, சூரியகாந்தக் கல், the sun-stone; 2. விஷங்கொண்ட சிவந்த பாதங்களை யுடைய சிலந்திப் பூச்சி. இது உடம்பில்பட்ட விடங்களில் கொப்புளிக்கச் செய்யும், a spider with poisonous principle in its legs which cause blisters when coming into contact with the human body. — See அக்கினிபாதச் சிலந்தி.

அனல் பாலி, தில்லை மரம், blinding tree — Excoecaria agallocha. It is so called from the blistering nature of the milky juice of the tree.

NOTE—The juice is supposed to be taken as a beverage by the Siddhars for promoting longevity.

அனல் வாதம், உடம்பின் வெப்பத்தினு லுண்டாகு மோர்வகை வாத நோய், a kind of nervous affection arising from too much of heat in the system; 2 மிக்க எரிச்சலை, யுண்டாக்கு மோர் வாத நோய், a condition marked by a senstion of intense burning pain—Thermalgia.

அனல்வாதை, பசி, hunger; 2 உஷ்ணத்தினு லேற்படும் நோய் அல்லது தன்பம், disease or suffering from heat; 3. a condition in which the application of heat produces pain—Thermalgesia.

அனல் விந்தை, அனல் விரை, } நேர் வாளம், kings' seed, Chinese castor — Croton tiglium alias C. jamalgota or Tiglium officinalis. The seeds form a drastic purgative and they are compared to fire on account of their virulent potency.

அனல் வெண்றி, தங்கம், refined gold.

அனல் வேகம், நெருப்பின் தீவிரம், the intensity of fire.

அனல்வேகி யிலை, எருக்கிலை, the leaf of the madar plant.

அனவதி யங்கம், மாசற்ற வுடம்பு, body having no stains or scars; 2. குற்ற மற்ற கை கால் முதலிய உறுப்புக்கள் இருப்பது, body with no defects in the limbs or other organs.

அனவ லோபனம், கருவழியா திருக்க வேண்டிக் கருப்பிணிகள் கைக்கொள்ளும் விரதம், a ceremony observed by the pregnant women to prevent miscarriage.

அனவுயிர், சாக்கிரம், (*in philosophy*) one of the five states of the soul.

அனற் கண்டர், துரிசி, blue vitriol—Copper acetate.

அனற்கண் பார்வை, நடை மீறுவதனால் உடம்பில் கனலேறி அதனு லுண்டாகு மோர்வகைக் கண்ணோய், a disease of the eye accompanied by inflammation due to heat in the system caused by excessive walking; 2. கோபப் பார்வை, fiery look.

அனற் கண், சிவந்த கண், the red or blood-shot eye; 2. கோபக் கண், fiery eye indicating anger; 3. அழற்சியினுற் சிவந்த கண், inflamed eye.

அனற் கல், சக்கி முக்கிக் கல், a very hard siliceous stone (*a species of quartz*) which strikes fire with steel. It was formerly used to strike a fire—Flint.

அனற் காலி, see அனல் காலி.

அனற் கோபம், அழற்சியா லேற்பட்ட ஓர் வகைக் கண்ணோய், a severe inflammation of the eye—Ophthalmia.

அனற் சுக்கிரன், கருவிழியில் நோவையும் உள்ளில் நெருப்பைப்போல் காந்தலையு முண்டாக்குமோர் கண்ணோய், an inflammation of the cornea of the eye attended with a burning sensation—Keratitis.

அனற் சுரம், உடம்பில் நெருப்பைப்போல் சூட்டை யுண்டாக்கும் சுரம், burning fever—Hyperpyrexia.

அனற் சூரணம், பிரண்டைத் தூள், சதுரக் கள்ளிப் பட்டை, உப்பு, முதலான சரக்குக

னீச் சேர்த்துப் பொடிசெய்து, மேனேக்கும் வாய்வு, காமாலே முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் சூரணம், a powder made of adamant creeper, bark of square spurge, common salt etc. and prescribed for dyspeptic complaints,or gastric troubles, jaundice etc.

அனற் பாலி, see அனங் காலி.

அனற் பொறி, தீப் பொறி,a small particle of a fire; spark.

அனற்றல், see அனந்தல்.

அனற் முகம், அனலினு லேற்பட்ட தாகம், thirst arising from intense heat of the surroundings or of the body.

அனற் நிராவகம், அக்கினித் திராவகம், nitrous acid.

அனற்றுதல், எரித்தல், to burn; 2. சூடாக்கல், to heat; to make hot; 3. சூட்டினுல் காய்தல், to glow with warmth as in fever; 4. வயிறுனேதல், to be affected with colic pain; 5. கோபித்தல், to be angry with; 6. முணங்குதல், to groan with pain.

அனுகத மயம், ஆக்கினே. அறிவிற்கு எட்டாத விடமாகிய அனுகதமே தனக்குள் முழுவது மே கொண்டுள்ள இடமாதலால் அதற்கிப் பெயர், one of the six nerve-centres, situated between the eyebrows. It is a spot for regulating the respiration.

It is so called because it possesses in itself all the powers of the other nerve-centre Anagatham (*situated in the heart*). It corresponds to Medulla oblongata.

ஆகந்துக மசூரிகை, உடம்பில், நெற்றி, முகம், முதலிய ஏதாவது ஒருறுப்பில் முதல் முதல் அம்மை கண்டு பிறகு உடம்பு முழுவதும் பரவும் சின்ன அம்மை, small pox in which the pustules which arose in a particular part namely the forehead or the face spreads subsequently over the whole body.

ஆகந்துகம், நடுவில் ஏற்பட்டது, (*literally*) a secondary effect; 2. தீடீரெனச் சம்பவித்தது, that which happened incidentally; 3. அருந்துகின்ற அறுசுவை உணவுகளின் காரண மில்லாமல் வெளிக்காரணங்களினால் ஏற்படுவது, (*in Pathology*) that which does not arise constitutionally or through errors in diet, but is acquired through other external causes.

ஆகந்துக ரோகம், பைசாசம், நெருப்பு, விஷப் பண்டம், கெட்ட காற்று, முதலியவைகளாலும். உடம்பி னுறுப்புகள் ஒடிவதினாலும், நோய் வெட்டு, குத்து, காயம், காமம், கோபம், அச்சம், முதலியவைகளாலும், தீடீரென உண்டாகும் நோய்கள், diseases arising from the following external causes viz:—

1. The malignant influence of evil spirits or demons.

2. fire, poisonous substances etc.

3. fracture of organs in the body.

4. Contaminated air or atmosphere,

5. Blow, cut or other injuries.

6. Incidental to an ungratified lust, fever, fit of anger, fear or other distracted state of the mind *c. f.* ஆகந்துக சுரம்.

ஆகந்துக விரணம், நெருப்பினாலும், அடி, வெட்டு, குத்து, முதலியவைகளினாலு மேற்பட்ட புண், wound caused by secondary causes such as fire, blows, cut, injury etc., to the body. See சத்தியோ விரணம்.

ஆகமந்தம், உடற்சோர்வு, lassitude of the body

ஆகமம், மரப் பொது, tree in common; 2. ஞானம், spiritual wisdom; 3. சத்தி சிவன் பூசைகளைப் பற்றியும் அவைகளின் இரகசியங்களைப்பற்றியும் சொல்லியுள்ள 28 சைவ நூற்கள், இச்சிவாகம நூற்களைப்படுவ தரிது. அப்படி னு மவைகளை எளிதிற் தெரிந்துகொள்ளுவது முடியாத விஷயம். நிகாம மென்பது வேறு. அது வேத விஷயங்களைப் பற்றிக் கூறுவது, the 28 sacred books inculcating the mystical worship of Siva and Sakthy. These Augamams are rare and little is known about them. They are distinguished from Nigamams (நிகாமம்) or vedic texts that are different from them.

ஆகமன காலம், பிரசவ காலம், அதாவது பெண்கள் பிள்ளை பெறும் நாள், the time of delivery or labour.

ஆகமனம், வந்து இறங்குதல், வருகை, arrival.

ஆகம், உடல், body; 2. மார்பு, breast; 3. சுரை, bottle-gourd — Cucurbita lagenaria; 4. மனம், mind; 5. குப்பை மேனி, a plant commonly found grown on the rubbish soils and is used as an antidote to poisonous bites and also in food—Acalypha Indica.

ஆகம்பனம், நடுக்கம், tremor, shivering.

ஆகம்பிதம், தலை யாட்டல், (*literally*) movement of the head expressive of approbation or disapprobation; 2. நடுக்கம், trembling; shivering.

ஆகய மாஞ்சில், கௌரி பாஷாணம், one of the 32 kinds of arsenics.

ஆகரம், சாலாங்க பாஷாணம், one of the 64 kinds of mineral poisons described in the Tamil medical science; 2. உட்கொள்ளும் வாயு, inhaled air, 3. உட்கொள்ளும் மூச்சு, inspiration.

ஆகரி, திப்பிலி, long-pepper—Piper longum; 2. தாதுப் பொருள், mineral; Metallic ore; 3. ஈறு கட்டுக் கொடி, a creeper—Smilax pseudo-china.

ஆகரி திராவகம், தாதுப் பொருளி னின்று இறக்கி வடிகட்டிய திராவகம், an acid extracted from mineral substances and then filtered, such as, sulphuric acid, nitric acid etc.

ஆகரி நஞ்சு, தாது விஷம், mineral poison.

ஆகரி விவரணம், தாது வர்க்கத்தின் விவரத்தைச் சொல்லும் நூல், that branch of science dealing with the properties of minerals—Mineralogy.

ஆகருஷண சக்தி, எதொன்றையும் தன்னிடத்திற்குக் கவரும் சக்தி, the power of attracting or drawing everything to oneself — Force of gravitation. It is also said of Magnetic attraction.

ஆகருஷண தம்பனம், உடம்பை வில்லைப்போல் முன் பக்கமாக இழுத்து வளையச் செய்து நிமிர முடியாமல் பிரமையை யுண்டாக்கு மோர் நிலைமை, a condition in which the outraged Vayu bends the body forward like a bow, thereby rendering the patient unable to sit or stand erect—Emprosthotonos.

See அந்தராயாம வாதம்.

ஆகருஷணம், அட்ட கருமங்களி லொன்று, one of the eight kinds of magical enchantments for invoking a spirit or adjuring a demon. It is a magic art for summoning or drawing near an absentee to one's presence; 2. இழுக்கை, pulling or drawing near; 3. அழைப்பு, invoking or calling by means of magic; 4. காந்த சக்தி, magnetic attraction.

ஆகருஷ ணித்தல், இழுத்தல், drawing or pulling to oneself; 2. வர வழைத்தல், invoking a demon or a spirit.

ஆகர்ப்பம், வயிற்றுள் னிருக்கும் குழந்தை யுள் பட, down to the child in the womb,

ஆகமம், மிருகத்தின் காற் குளம்பு, the horny substance that covers the feet or the toes of certain animals; the hoof.

ஆகஷ ரசம், அபினி, opium.

ஆகற்பம், நோய், disease; 2. அதிகப் படுத்தல், to increase.

ஆகனம், இருப் புலக்கை, a crow-bar; an iron pestle used in pulverising drugs etc.

ஆகனிகம், எலி, rat; 2. பன்றி, pig.

ஆகன்னம், காதுவரை, as far as the ear.

ஆகா, பத்தியத்திற் குதவாத, unsuitable for diet; 2. ஆகாத, unsuitable; 3. உதவாத, unfit.

ஆகாக் கடுக்காய், மருந்திற் சேர்க்க உதவாத கடுக்காய், அவையாவன.—இரட்டைக் காயுடையது, உடைத்தது, நீரில் வெந்தது, சுக்கான்கல் நிலத்தில் கிடந்தது, சேற்றில் விழுந்தது, நெருப்பிற் சுட்டது, முறடாயிருப்பது, முதலியன, gall-nut considered unfit for use in medicines i.e. rejected gall-nuts. They are—Double-seeded galls, broken ones, boiled galls, those found on the limestone soil or fallen in the mire, the scorched and the hard ones, and so on See ஆகாத கடிக்காய்.

ஆகாக் களங்கு, மிருதாரு சிங்கி, இது 32 பாஷாணங்களி லொன்று, a poison prepared from lead; Litharge — Plumbi oxidum. This is one of the 32 kinds of prepared arsenics.

ஆகாச கங்கை, வெடியுப்புத் திராவகம், nitric acid; 2. பனி நீர், dew, snow-water—Aqua Nivalis; 3. அமுரி நீர், urine.

ஆகாச கத்திரி, வெண்டை, a plant yielding an edible green fruit; rose-mallow — Hibiscus esculents.

ஆகாச கபாலம், தலையி னுச்சி, the crown of the head; 2. உச்சிக் குழி, the depression on the top of an infant's head—Fontanelle.

ஆகாச கமனம், ஆகாயத்திற் பறத்தல். இது 64 சித்தியானங்களி லொன்று, இது மாஞ்சி

நீக சக்தியால் செய்வதாகக் கருதப்படும், flying in the aeriel region, one of 64 arts and sciences. It is suppossed to be acquired by the power of incantations and magical medicaments; 2. இரச குளிகையினால் அந்தர மார்க்கத்தில் பறத்தல், flying in the etheric regions with the aid of animated mercurial pills.

NOTE.—This is only possible for Siddhars endowed with supernatural powers. Now a days, it is performed with the aid of the ballon, the aeroplane etc.

ஆகாச கமனி, ஆகாய மார்க்கத்தில் இரச குளிகை பூண்டு பறக்கும் சித்தன், it is a name formerly referring to a Siddha capable of flying in the aerial regions or travelling in the etheric regions from one planet to another planet with the aid of animated Mercurial pills ; 2. ஆகாய மார்க்கத்தில் விமானத்திற் செல்பவன், one who floats in the air through balloon or sails in the atmospheric region in an aeroplane—Aeronaut.

ஆகாச கம்பி, கம்பி யுப்பு, அதாவது ஆருங் காய்ச்சல் வெடி யுப்பு, a prepared salt. Nitre boiled and cleaned 6 times and then obtained in long crystals.

ஆகாச கரடம், புகை யூறல், deposit of soot ; Lamp black ; 2. ஓட்டடை, house-soot.

ஆகாச கருடக் கீரிகம், பேய்ப் பாலை, a twining plant; asthmatic swallow-wort — Tylophora asthmatica alias Asclepias asthmatica.

ஆகாச கருடன், கொல்லன் கோவை. இது வோர் கொடி. அடிக்கொடி வழவழப்பா யிருக்கும். கணுக்களில் வேரூன்றுதன்மை யுண்டு, இலைகள் கொஞ்சம் சதைப் பற்றுள்ள வைகளாயும், காம்புகள் நீளமான்வைகளா யும், மூன்று வகுப்பிலை யுடையவைகளாயும், இருபக்கமும் சொர சொரப்பும் அரும்புகள் வாய்ந்தவைகளாயு மிருக்கும். பூக்கள் மஞ்ச ளாயும், விதைகள் கொஞ்சமாயும், வெண் மையாயும், தட்டையாயு மிருக்கும், a climbing shrub with yellow flowers. It is so called from its root living in air. Snake caper — Bryonia epigaea alias Geruda Bryonia epigaea.

It is a climbing shrub; leaves somewhat fleshy and three-lobed, long petioles with short bristly hairs ; slightly toothed; flowers yellow; few seeded; seeds white and compressed ; 2. சிந்தில், a medicinal creeper; Bile-killer; Moon-creeper—Menispermum cordifolium ; 3. பேயத்தி, devils-fig, wild – fig — Ficus oppositifolia.

ஆகாச கருடன் கிழங்கு, கொல்லன் கோவைக் கிழங்கு. இக்கிழங்கு தண்ணீ ரில்லாமலே காற்றி னுதவியால் வளரும். ஆகவே யிதற் கிப்பெயர். இது வடிவத்தில் இங்கிலீஷ் 'டர் னிப்'பைப் போன்றது, மூன்னே கூராக வுள் ளது, காய்ந்த கிழங்கோ கொலம்பாக் கிழங் கைப்போ லிருக்கும். இது கசப்பா யிருக் கும், இதைச் சீரகத்தோடு சேர்த்துப் பூச்சு மருந்தாகவும், வெங்காயத்தோடு வினை க் கெண்ணெயிற் குழைத்துச் சூலைப் பிடிப்புக் கும். தீரா வாதநோய்க்கும், உபயோகப் படுத்தலாம். இது உள்ளுக்குக் கொடுக்கப் புழுக்களைக் கொல்லும். உடம்பைப் போஷிக் கும். சிறிது பேதியாகும். பாம்புகடிக் குப யோகிக்க விஷம் நீங்கும்.

இதைச் சூரணமாகச் செய்து சர்க்கரை யுடன் கலந்து, சீத பேதி, குடல்வலி, வாத சூலை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். அன்றியும் இதனால் கிரந்திப் புண்ணும் நாட்சென்ற மேகமும் போகும், demon root; sky-root — Corallocarpus epigea. The root lives in the air without water and hence the name 'airy living bryony' and "sky root"; it is but like the English turnip in shape, more pointed at the top; when dried it resembles Columba root. It is bitter and is chiefly used as an external application with cummin seed, onions and castor oil forming a liniment for chronic rheumatism and contracted joints. Internally it is an anthelmintic, alterative and gently aperient. It is an antidote for snake-poison. It is usually administered in powder of a very pale colour. It is of special value as an alterative tonic.

Powdered root mixed with sugar is an effective remedy in cases of dysentery, colic pain and rheumatic arthritis. It is also useful in syphilitic cases, and old venereal complaints.

See கொல்லன் கோவைக் கிழங்கு.

ஆகாச கருடாசலம், பேருடை அல்லது பெரிய வுடை மரம், a species of big acacia tree.

ஆகாச கருடாதி, பேயத்தி, devils' fig — Ficus oppositifolia.

ஆகாச காமி, ஆகாயத்திற் பாயுங் குதிரை, one of the three kinds of horses having the power of leaping in and going through the air.

See ஆகாயப் புரவி.

ஆகாச காமினி, ஆகாய மார்க்கத்தில் செல்வ தற்காக உச்சரிக்கும் மந்திரம், a magic spell which enables one to fly in the aerial region.

ஆகாச கூறு, காமம், குரோதம் முதலிய ஐவ கைக் குணங்கள், the five moral defilements in man as desire, anger etc.

ஆகாச கெவுனி, சூதம், அதாவது ஆகாசத்திற் செல்வதற்குக் காரணமாக உள்ளது, mercury, which enables one to pass in the aerial region.

ஆகாசக் கல், ஆகாயத்திற் பறக்கு மணு, an atom in the aerial regions which is supposed to strike or dazzle the eye so that one does not recover from its effect till the same hour on the next day; a meteoric stone —Aerolite.

ஆகாசக் கொடி, ஆகாச கருடன் கொடி, see ஆகாச கருடன்.

ஆகாச சிவனார் விந்து, ஆகாச சிவனார் வுப்பு, } வெடி யுப்பு, nitre or saltpetre — Potassium nitrate (KNO_3)

ஆகாச தந்தம், உடலின் ஈகம், nail in the body.

ஆகாச தரன், ஒட்டடை, house-soot.

ஆகாச தானம், கொட்டைப் பாசி அல்லது குளத்துப் பாசி, the green moss found deposited on the surface of the water in tanks, lakes or stagnant water.

ஆகாசத் தங்குசம், பேய்ப் பாகல், buffalo carolah—Momordica hispida.

ஆகாசத் தாமரை, நீரில் மிதக்கு மோர் பூடு; இதற்கு அத்தரத் தாமரை யென்றும் பெயர். இது குளம், குட்டை முதலிய விடங்களில் மிகுதியாக வுண்டு, தண்டு கிடையாது, வேர் பல நார்களின் சேர்க்கையைப் போன்றது. இதன் பூ வெள்ளைப் பூ அல்லது வெளிர் மஞ்சட் பூ, சித்திரையில் பூர்க்கும், இப்பூடி அழற் சியைப் போக்கிக் குளிர்ச்சியைத் தரும், மூத்திர மெரிச்சலை நீக்கும், இலையை வதக்கி

ஆகாச ஆகாச

மூலத்திற்குக்கட்ட உதவும். இலையுடன் சோறும், தேங்காய்ப் பாலுங் கலந்து சீத பேதிக்கும், பன்னீரும் சர்க்கரையுங் கலந்து இரு மல், காச மிவைகட்குங் கொடுக்கலாம்.

இதன் வேர் மலத்தை இளக்குந் தன்மை யுடையது. அன்றியு மழற்சியையும் போக்கும். குட்டம், கரப்பான் முதலியவைகளுக்கு முதவும், இது குளத்து நீரைச் சுத்தப் படுத்தும், a plant floating on water. Sky lotus. It is also known as floating lotus, Antargunga, Tropical duck-weed, water soldier, water spogel, West Indian water lettuce etc.—Pistia stratiotes alias Plantago aquatica or Tala indica alias Vellarasia indica. It is stemless; roots numerous; fibrous; flowers solitary white or pale yellow. It is common everywhere in tanks and ditches. It is cooling and a demulcent and is given in dysuria. The leaves are made into poultice and applied to hemorrhoids and boils. The juice of the leaves mixed with rice and cocoanut milk is given in dysentery, and with rose-water and sugar in coughs and asthma.

The root is a laxative and an emollient. It is also useful in leprosy and carpaung. In moderate quantity, the living plant in wells, tanks etc. helps to purify the water.

NOTE.—The ash of the plant known as *pana* salt is an application for ringworm and it is said to consist chiefly of potassium chloride and potassium sulphate.

See அத்தரத் தாமரை.

ஆகாசத் தீரன், வீரம், corossive sublimate or Perchloride of Mercury.

ஆகாசத் தூள், see ஆகாசதரன்.

ஆகாச பட்சி, சாதகப் புள், the sky-lark; the shepherd koel.

ஆகாச பருதி, பூ நீறு, an efflorescent salt found on the fuller's soil.

ஆகாச பலம், விண்வீழ் கொள்ளி, a meteor; a body falling from the air or the aerial regions; a shooting star,

ஆகாச பறவை, நாரை, crane.

ஆகாச பாவனம், கொடியார் கூந்தல், இதன் விதையைக் கஷாயமிட்டுக் குடலிலுள்ள வாயு வையும் மற்றுமுள்ள அழுக்குகளையும் போக்க உபயோகப் படுத்தலாம். இதன் வேர்

மற்றும்புணமைக்கு உபயோகப்படுவது மன்றி இதனுல் இலட்சுமி கடாட்சமும் உண்டாகும். (*literally*) the term means sky purifier. Sita's thread; air plant—Cuscuta reflexa alias C. verrucosa.

The seed is a carminative and the infusion prepared is given as a depurative. The root of this plant is supposed to have the power of bringing about invisiblity. It is also considered that he who finds the root of this plant will become possessed of boundless wealth.

ஆகாச மண்டலம், வான மண்டலம், etheric region.

ஆகாச மயம், சூனியம், ether.

ஆகாச மாஞ்சில், சிறு சடாமாஞ்சில், a small species of சடாமாஞ்சில், a medicinal grass; Indian spikenard—Valeriana Jatamansae alias Cyperus stoloniferus.

ஆகாச மார்க்கன், see ஆகாச கமனி.

ஆகாச மூலி, ஆகாசத் தாமரை, sky lotus plant—Pistia stratiotes.

ஆகாச மெழுகு, பூசினினின்று, தயாரிக்கு மோர் வித மெழுகு, a wax-like substance prepared out of fuller's earth.

ஆகாச மையம், சூனிய விடம், etheric region; 2. ஆகாய கதி, the middle of the sky.

ஆகாசம், வானம், the sky; 2. ஐம்பூதத் தொன்று, one of the 5 elements, i. e., ether pervading all space; 3. திறந்த வெளி, open space; 4. வாயு மண்டலம், aerial region (*up to forty miles*); 5. கற் பாஷாணம், one of the 32 kinds of arsenics as per Siddha system of medicine; 6. சத்தம், sound; 7. கருவினங்காய், dark wood apple.

ஆகாச வழுர்த்தம், தென்னங்கள், cocoa-nut toddy.

ஆகாச வர்ணன், அலரிப்பூ, sweet-scented oleander—Nerium odorum.

ஆகாச வல்லி, [ஆகாச + வல்லி]= (sky + creeper), கொத்தான், air-plant, air-creeper—Cassytha aphylla alias C. filiformis; 2. சீந்திற் கொடி, Moon-creeper—Menispermum cordifolium; 3. ஓர் படர், கொடி, a running plant — Menyanthes cristata.

ஆகாச வாசி, ஆகாயத்தில் சஞ்சரிப்போன் அதாவது, சித்தன், Siddhars moving about in the aerial regions; 2. ஆகாசத்தில் வசிப்பவர்களாகிய தெய்வ கணத்தோர், the demi-gods living in the ethereal regions; 3. ஆகாய விமானத்தி லேறி, உலவுவோர், those moving about in the aerial regions with the aid of aerial car like the aeroplane of the present day.

ஆகாச விஞ்சினி, கழுதை மான் புள்ளி, a rare plant said to consolidate mercury (*unidentified*).

ஆகாச வுருவி, புல்லுருவி, a parasitic plant.

ஆகாச வெளி, வைத்தியருலப் பின்டம், (*in Alchemy*) the foetus of a third class woman classified according to her age; 2. இரண்டு மூன்று மாதத்திற்கு மேல் ஐந்து மாதத்திற்குட்பட்ட பின்டம், the foetus between the third and the fifth month. See also வைத்தியருலக் கரு.

ஆகாச வெளி யுப்பு, சவுக்காரம், dhoby's earth; washing soda.

ஆகாச வெள்ளரி, முள் வெள்ளரி, wine plant —Cucumis hardwickii.

ஆகாச வேணி, பேய்ப் பீர்க்கு, a wild bitter gourd—Luffa amara.

ஆகாசி, சீந்தில், a medicinal plant; Moon creeper — Menispermum cordifolium alias Tinospora cordifolia.

ஆகாடம், காயுருவி, a sacrificial plant; Indian burr—Achyranthes aspera; 2. செங்காயுருவி, அல்லது வெண்ணுயுருவி, a common term applied to both the species, namely the red and the white Indian burr.

ஆகாத கடுக்காய், இரட்டைக் காயுள்ள கடுக்காய், இது மருந்திற்குவாதது, gall-nut consisting of two seeds. This is considered unfit to be used in medicines. See ஆகாக் கடுக்காய்.

ஆகாத விஷத்திரணச் சோதி, கச்சுப் புல், a red species of a poisonous grass.

ஆகாதிலை, எலிக் காதிலை, rat-ear plant — Ipomaea reniformis. It is so called from its leaves resembling the ears of a mouse.

ஆகாப் பசு, குடிப்பதற் குதவாத பாலையுடைய பசு. இது ஐந்துவகைப் படும், அவையவன; cow yielding milk unfit for con

sumption and it consists of 5 kinds namely:—

1. அரணை நோய்ப் பசு, cow suffering from a disease.
2. தாரா நோய்ப் பசு, cow suffering from 'Tara' disease.
3. வெண் புள்ளிப் பசு, white spotted or white patched cow.
4. மல மருந்தும் பசு, filth-eating cow.
5. இடுகாட்டெலும்பு உண்ணும் பசு, cow taken to bones found in the grave yard.

ஆகாப்பழ மாக்கிய சத்தி, வேம்பு, the margosa tree or the neem tree—Azadirachta indica.

ஆகாப் பாத்திரம், குடிநீர், தைலம், முதலிய மருந்தினங்களைக் காய்ச்சு வதற்கோ அல்லது வைத்துப் பழகுவதற்கோ வுபயோகப் படாத நவலோகத்தினாற் செய்த பாத்திரம். metallic vessels unfit to be used in the manufacture or preparation of medicines such as lotions, ointments etc., or for keeping them in. See ஆகும் பாத்திரம்.

ஆகாமிகம், வருவதைக் குறிச்சும் செயல்கள், actions relating to the future. See also ஆகாமியம்.

ஆகாமியம், மூன்றுவித கருமங்களி லொன்று, அதாவது இப்பிறப்பில் செய்யும் புண்ணிய பாவங்கள், good and bad actions which one does in the present life wifh reference to their effects in future births; 2. வருங் கன்மம், future actions.

NOTE—The law of Karma or causation is one of the essentials of the Hindu philosophy. According to it, man is made fully responsible for his actions. Our present conditions in life are the results of our past actions and our future will be moulded by our present efforts. So also luck or ill-luck is the result of one's past thoughts and actions.

ஆகா மூலிகை, கடற்காற்று வாடையி லிருக்கும் மூலிகைகளும் அதாவது சாதாரணமாகக் கடற்கரைக்கு 40 மையில் தூரத்தி லுள்ள விடங்களில் முளைக்கும் பூண்டுகளும், சுடு காடு முதலிய விடங்களி லுண்டாகும் பச் சிலைகளும், மருந்திற் குதவாவெனக் கருதப் படும், medicinal plants exposed to sea breeze i.e, those herbs that are grown within 40 miles from the seashore and those grown in prohibited places such as, the burial ground etc., are generally considered unfit for use in the preparation of medicines; 2. சாதாரணமாக மருந்திற் குதவாத பச்சிலைகள், (*literally*) herbs that are unfit for medicinal purposes.

ஆகாய கக்கரி, ஓர் வகைக் கக்கரிக்காய், ஆகாய முள்வெள்ளரி, இது மருந்தின் வேசத்தைப் போக்கும், a kind of cucumber—Cucumis utilissimus. This is an inert substance likely to mitigate the effect of virulent medicines.

ஆகாய கத்தரி, see ஆகாச கத்திரி.

ஆகாய கமனம், ஆகாயத்திற் சஞ்சரித்தல், இது 64 கலைக் கியானங்களி லொன்று, moving through or walking in mid-air—One of the 64 arts and sciences. See also ஆகாச கமனம், and கலைக்கியானம்.

ஆகாயகமனன், see ஆகாச கமனி.

ஆகாயகரிக்காய், see ஆகாய கக்கரி,

ஆகாய கருடன், see ஆகாசகருடன்; 2. ஆகாயத்திற் பறக்கும் கருடப்பறவை, the Brahminy kite flying high up in the sky.

ஆகாயக்கல், see ஆகாசக்கல்,

ஆகாய சூலை, குதிரைகளுக்குக் காணுமோர் நோய், a disease in horses.

ஆகாய தந்தம், see ஆகாச தந்தம்.

ஆகாய நுண் ணணு, பரமாணு, ether; electron.

ஆகாய பாணம், மேகம், clouds.

ஆகாயப் பாசி, உசிலம்பாசி, ஓர் பூடி, a plant *(unidentified)*

ஆகாயப் பிரவேசம், ஆகாயத்தி லுயரப் பறந்து மறையுமோர் வித்தை, இது அறுபத்து நாலு கலைக் கியானங்களுள் ஒன்று, the art of rising high up in the aerial region and then disappearing. This is classed under one of the 64 arts and sciences; 2. பஞ்ச பூதப் பிரிவுகளி லொன்றிய ஆகாயத்திற் புகுந்து மறையுந் தன்மை, இது தூலவுடம் பைக் கொண்டும், சூட்சும வுடம்பைக் கொண் டும் செய்யு மோர் வகைச் சித்து. இது சித் தர்கள் முதலிய மகான்க ளாலே செய்ய முடியுமே யொழிய சாதாரணமான மனித ரால் நடை பெறுது, the art of rising higher up in the region of ether for above the aerial region and then disappearing

i.e. becoming invisible. This can be effected in two ways;—

1. With the physical body in either of the two regions viz:—the etheric and the aerial.

2. By converting the physical into a subtle body i, e. dematerialising it and then passing into those regions.

It is not in the power of the ordinary man to do such miraculous feats, but it is said that Siddhars and others with superhuman faculties alone could do it.

NOTE—It is also said that Siddhars could travel from one planet to another planet at a tremendous velocity assuming an etheric (subtle) body since it will be impossible for them to do so with the gross physical body.

ஆகாயப் புரவி, see ஆகாச காமி, மந்திரசக்தியி னல் ஆகாயத்திற் தாவிச் செல்லக்கூடிய குதிரை. இத்தகைய குதிரைகள் நளனிடத்திலிருந்ததாகச் சொல்லப்படும், fabled horse capable of rising high up in the atmosphere and flying through the air by the power of magic.

It is said that king Nala had with him such kinds of horses.

ஆகாயப் பூரிதம், பேய்முசுட்டை, a trailing shrub; Malabar convolvulus—Argyreia Malabarica alias Convolvulus malabarica.

ஆகாய மாஞ்சி } சிறுசடா மாஞ்சில், a small
ஆகாய மாஞ்சில், } species of the Indian spikenard—Patrinia jatamansi alias Valeriana jatamansi.

ஆகாய மார்க்கம், வாயுமண்டலம், the aerial region.

ஆகாய முள்வெள்ளரி, see ஆகாய கக்கரி.

ஆகாய முள்ளி, see ஆகாய கக்கரி.

ஆகாய மூலி, see ஆகாசத் தாமரை; 2. பூமியி னுதவியில்லாமலே, காற்றின் சத்தைக் கொண்டு மூலத்தியிர் வாழும் பச்சிலைகள், plants or herbs growing in the air without the help of the soil.

NOTE—This is a common name given to all plants the roots of which are floating in the air or on water aud also to all parasitic plants.

ஆகாயம், வானம், sky; 2. பஞ்சபூதப் பிரிவுகளி லொன்று; ஆகாசம் one of the five elements, namely the ether—the inane of Lucretius; 3. ஆகாயவெளி, the wide etheric space; 4. ஆதாரமற்ற வேர்களை யுடைய பூண்டுகளையும் புல்லுருவிப் பூண்டுகளையும் குறிப்பதற்கு முதன் மொழியாக வரும் சொல், a name prefixed to plants to indicate that their roots float in the air or water or that they are parasitic plants like the ஆகாசத் தாமரை, ஆகாயவழுத்தலை etc.

ஆகாயம் நிவந்தவன், சாயா விருட்சம், இது வேர் அபூர்வமான மரம். ஒருவரும் பார்த்ததில்லை, இது மலைகளின் உச்சிகளி லிருப்பதாகச் சொல்லப்படும், இது நிழல் சாயாது. இது சித்தர் முனிவர்கள் முதலிய மகான்களுக்கு மாத்திரமே புலப்படுமெனக் கொள்ளப்படும், it is a rare tree said to be found on hill-tops. No one appears to have seen it. It does not cast a shadow owing to its transparent nature. It is invisible to human beings ordinarily, but it is believed to be visible to Siddhars, Munis and others with supernatural powers.

ஆகாய வல்லி, see ஆகாச வல்லி.

ஆகாய வழுதலை, see ஆகாய கத்தரி.

ஆகாய வெளி, மூளையின்வெளி, the space in or above the brain ; 2. மூளை, brain.

ஆகாய வெள்ளரி, ஓர்வகை முள்வெள்ளரி, a kind of cucumber. See ஆகாய கக்கரி.

ஆகார சம்பவம், நிணநீர், நாம் உட்கொள்ளுமுணவே நிணமாக மாறுதலை யடைவதாலிப் பெயர், lymph. It is so called from the transformation of food which we take; 2. அன்ன ரசம், chyle; 3. இரத்த நீர், serum.

ஆகார சுத்தி, நெய், ghee.

ஆகாரச் சத்து, உணவின் சத்து, the essence of food; 2. அன்ன சாரம், the milky fluid separated from the digested food.

ஆகாரத்துக் குரிய, உணவுக்குரிய, fit to be eaten as food—Edible.

ஆகார நிசரண மார்க்கம், உண்ட வுணவு வெளிப் படும் வழி, the place of exit of the food; 2. மலவாயில், the posterior part of the body; the anus.

ஆகாரம், உருவம், figure ; 2. உடம்பு, body ; 3. உணவு, food; 4. வடிவு, the state or structure ; 5. நெய், ghee or clarified butter ; 6. இரை, pabulum or food.

ஆகார் வேசி, வசம்பு, sweet-flag—Acorus calamus.

ஆகாரி, பூனை, cat ; 2. உயிர், life.

ஆகாரிகம், ஜெயினர்களது நூலின்படி ஆத்தும தத்துவம் ஐந்தினுள் ஒன்று. இது, கோரிய சங்கதிகளைத் தூரத்தினின்றும் தெரிந்து கொண்டு திரும்பி வரும் ஆற்றலுடையது, (*in Jain philosophy*) one of the 5 faculties of the soul, which is a minute form swung from the head of a meditating sage to consult another omniscient saint and return with the desired information. (Colebrooke); 2. தூரதிருஷ்டி, (*in Occult Science*) a power attributed to a person in the mesmeric state, by which he discerns objects concealed from sight, and tells what is happening at a distance — Clairvoyance.

ஆகாரியம், ஓர் விதக்கட்டு, a kind of bandage; 2. சத்திர சிகிச் சையினுல் உடம்பினின்று வெளிப்படுத்தற் குரிய நோய்கள், any disease to be treated by an operation performed.

ஆகிய, உண்டான, formed ; 2. செய்யப்பட்ட, made into.

ஆகிய பத்திரம், தாமரை, lotus—Nelumbium speciosum.

ஆகிரந்தம், புன்குமரம், a tree; Indian beech; —Dalbergia arborea.

ஆகிருதி, உருவம், figure ; 2. உடல், body.

ஆகிரு ந்தம், see ஆகிரந்தம்

ஆகு, எலி, rat ; 2. பெருச்சாளி, bandicoot ; 3. கொப்பூழ், அல்லது தொப்புள், navel ; 4. பன்றி, pig ; 5. புனுகுபூனை, civet-cat from which civet is taken ; 6. கவரி, the tail hair of the yak.

ஆகு கர்ணி, எலிச் செவி, a herb the leaves of which resemble the rats' ears—Evolvulus emarginatus alias Branchiramphus souchifolius.

ஆகுஞ் சனம், சுருக்குகை, constriction.

ஆகுண்டிதம், கோழை, phlegm.

ஆகுதம், உயிர்க்குறுதி செய்தல், to strengthen life.

ஆகுதி, ஓமாக்கினியில் நெய் விடல், to offer ghee or clarified butter in fire as is done in an oblation.

ஆகு பர்ணி, ஓர் பூடு, a plant — Salvinia caculiata.

ஆகு பாஷாணம், எலிப் பாஷாணம், அல்லது வெள்ளைப் பாஷாணம், white arsenic ; 2. காந்தக்கல், loadstone.

ஆகுபுகு, எலியைக் கொல்வது அல்லது சாப் பிடுவது அதாவது பூனை, rat-destroyer or rat eater i.e. the cat.

ஆகு புக்கு see ஆகு புகு.

ஆகும் பாத்திரம், குடி நீர், மருந்தெண்ணெய், கிருதம், முதலியவைகளைக் காய்ச்சுவதற் காக உபயோகிக்கும் மண்பாண்டம். வெண் கலம், பொன், வெள்ளி, செம்பு, முதலியவை களிலுளான பாத்திரங்களையும் ஒருவாறு உப யோகிப்பதுண்டு, ஆயினும் அவைகள் அவ் வளவு சிறந்தவைகள் அல்ல, an earthen vessel used for preparing lotions, medicated oils, ghee etc. Besides this pot, bronze, gold, silver and copper vessels may also be used but they are not considered so very desirable; 2. காந்தக் கிண்ணி, a bowl made of magnet;

ஆகுலம், மனக் கலக்கம், agitation of the mind ; 2. வருத்தம், sorrow, grief.

ஆகுலி, சிற் றரத்தை, a bazaar drug called smaller or lesser Galangal—Alpinia galangal (minor); 2. ஆவிரைப் பொது, senna shrub in general.

ஆகுலித்தல், வருந்துதல், being distressed ; 2. அழுதல், weeping.

ஆகுவாகனன், பெருச்சாளி வாகனராகிய விநாயகர், the god Ganesh who rides on a bandicoot.

ஆகு வாகனன் மெச்சுஞ் சாறு, வில்வச்சாறு, the juice of the leaves of the tree Indian Bael 2. கையான் சாறு, the juice of the Eclipse plant.

ஆகுவாகனன் மெச்சு மிலை, வில்வ யிலை, the leaf of the tree called the Indian Bael or the Holy fruit tree—Aegle Marmelos.

ஆகுனி வாதம், உடம்பெங்கும் குத்தலையும், வீக்கத்தையு மூண்டாக்கு மோர்வாத நோய், a rheumatic affection accompanied by

swelling and pricking pain all over the body.

ஆகேவக முள்ளி, பேய்முள்ளி, a wild species of solanum—Solanum Indicum.

ஆகேறு, சரக்கொன்னை, Indian laburnum—Cassia fistula; 2. கொன்றை, Cassia (genus).

ஆக்கணங் கெளிறு, ஓர்வகைக் கெளிற்று மீன், a brown estuary fish—Plotosus canins.

ஆக்கதம், முதலை, crocodile; alligator.

ஆக்கம், செல்வம், wealth; 2. பொன் gold; 3. சிருஷ்டி, creation.

ஆக்கரிவாள், கையரி வாள், a bill-hook for hacking at thorns etc in a bush.

ஆக்கல், சமைத்தல், to cook.

ஆக்காட்டுதல், ஆவெனல் அதாவது வாயைத் திறத்தல், to open the mouth and prolong the back vowel-sound.

ஆக்காதாரி மூலி, பொற்றலைக் கையாந்த கரை, Mary-gold verbesinia—Wedelia calundulacea.

ஆக்கி நேயம், see ஆக்கினேயம்.

ஆக்கி யரிவாள், வெற்றிலைக் கொடிக்காலில் காம் பரிவதற்காக உபயோகிக்கும் கத்தி, a knife specially manufactured for cutting the pedicle of the betel leaf.

ஆக்கிரகம், மிக்க கோபம், great anger; 2. வல்லமை, power, ability.

ஆக்கிரமம், நோயின் வேகம், the severe fit of a disease; the virulency of a disease—Paroxysm.

ஆக்கிராணம், மூக்குப் பொடி, snuff; 2. மூக்கு, the nose; 3. மோந்து பார்த்தல், the act of smelling; 4. மூக்கிற்கிடு மோர் மருந்துப், பொடி, a medicinal snuff for dispelling humours from the head and to clear the brain—Errhine 5. பஞ்சகாடியி லொன்று, one of the five nerves of the system; 6. நவாச்சார வுப்பு, இது சளிப்பு, மார்க்கோழை, கபவாத சுரம் முதலான நோய்களுக்கு மூக்கிற்கிடு மோர் காரமானவுப்பு, a white smelling salt used as a valuable stimulant and expectorant in cold, bronchitis, pneumonia etc.—Ammonium carbonate or Ammonii carbonas. $NH_4 H CO_3$. $NH_4 NH_2 CO_2$.

ஆக்கிராண விந்திரியம், மூக்கு, the nose as the organ of smelling.

ஆக்கிராண வுப்பு, முகரும் உப்பு அதாவது நவச்சாரவுப்பு, smelling-salt — Ammonium carbonate. See ஆக்கிராணம்.

ஆக்கிராணித்தல், முகர்ந்து பார்த்தல், to draw in through the nose; to smell; 2. மூக்கிற் தூளிடுதல், மூக்குத் தூள் போடல், to snuff; 3. மூக்கினுல் இழுத்தல், to sniff up.

ஆக்கிரிஷம், கோபம், anger.

ஆக்கினீயம், ஆனி மாதம், the Tamil month corresponding to June.

ஆக்கினேயம், இரத்தம், blood; 2. நெய், ghee; clarified butter; 3. பொன், gold; 4. விபூதி, sacred ashes.

ஆக்கினேயனு, காட்டுத்தீ, wild fire.

ஆக்கிஞை, கடவுற் செயல், god's command; 2. ஆறுதாரத் தொன்று அதாவது ஆக்ஞை, இதை வடமொழியில் 'லலாடத்தானம்' என்சொல்வ துண்டு. இது நெற்றிக்கு நேராக உட் பக்கத்தில் புருவத்திற்கு மத்தியிலுள்ள மூளையின் பகுதி, வாசியை வசப்படுத்த இவ்விடத்தைத் தான் தியானிப்பது, இவ்விடத்தில் தான் சோதி பிரகாசமாகும். இதைத் தெரிசிப்பதனுல் தூரதிருஷ்டி முதலிய அனேக சித்திக ளுண்டாகும். அன்றியும், மனதை இவ்விடத்தே நாட்டு வதால் யோகிகள் தங்கள் பூர்வ கர்மங்களி னின்றும் விடுபடுவார்கள். பஞ்ச பூதங்களும் அவர்கள் வசமாகும்,

இவ்வீட்டில் மனேன் மணி பாகராய், சதாசிவன் வீற்றிருப்பதால், இங்கு 'யகாரத்தை' தியானம் செய்து சித்தியடைய வேண்டுமென்று கருதப்படும்

"இந்நால் வரைமே லிருந்திடும் ஆக்கினை
சுந்தர வீட்டினில் தோகை மனேன்மணி
சந்தத மதிசெய் சதாசிவ மூர்த்தியை"

(ஆரு—விலா.)

one of the six psychic centres or chakrams in the human body situated between the eyebrows. It corresponds to the Medulla oblongata. It is the spot for contemplation to acquire the power of regulation of breath. It is the last stage of consciousness wherein is found the Great Light, the contemplation of which marvellous sight, gives psychic powers to one such as, clairvoyance etc.

When the mind reaches this centre, the Yogi gets rid of all past Karma and all the Elements come to serve him.

ஆக்குகை, குணமாக்குதல், to effect a cure.

ஆக்குதல், செய்தல், to make ; 2. சமைத்தல், to cook ; 3. மாற்றுதல், to convert.

ஆக்குரோசம், கடுங் கோபம், violent temper; great anger. See ஆக்கிரோஷம்,

ஆக்குரோடம், மார்பு, the breast.

ஆக்குலாதி, பேரரத்தை, greater galangal—Alpinia galangal (major).

ஆக்கெளுத்தி, see ஆக்கணங் கெளிறு; 2. ஓர் வகைக் கடற் கெளிற்று மீன், a sea-fish—Plotosus arab.

ஆக்கை, உடம்பு, body; 2. நார், fibre ; 3. நார் முடி, a bundle of strips of fibres ; 4. மனித வுடம்பு, the human body.

ஆக்கை பேதி, கலப்புரு வன்னி அதாவது நவ லோகத்தையும், பாஷாணத்தையும், பேதிக்கும் மூலிகை, an unknown drug said to act chemically on poisons and minerals, (the nine metals) and bring about marvellous changes in them.

ஆக்கை ரவி, கெம்பு, the ruby.

ஆக் கொத்தமம், see ஆகேது.

ஆக் கொல்லி, ஓர்புழு, a kind of worm ; 2. நில்லி மரம், Blinding tree, tiger's milk spurge — Excoecaria agallocha. The milk of this tree blisters the skin and causes blindness when coming in contact with the eye.

ஆக்கோது, கொன்றை மரம், cassia tree.

ஆங்கார சத்தி, கொடிவேலி, lead-wort plant —Plumbago Zeylanica.

ஆங்காரம், பிரியம், kindness, affection ; 2. அகங்காரம், pride, egoism; 3. செருக்கு, haughtiness.

ஆங்கார வாளி, பெருங்குறிஞ்சான், which see.

ஆங்காரி, அகங்கார முள்ளவன், an egoist ; 2. செருக்குள்ளவன், a haughty man.

ஆங்காரித்தல், செருக்குக் கொள்ளுதல், to be arrogant, to be proud.

ஆங்காரி மூலி, வெள்ளைக்குன்றிமணி, a plant —white wild-licorice—Abrus precatorius.

ஆங்காலம், எல்லாம் கைகூடும் படியான நற் காலம், good time attended with unfailing and triumphant successes. It is opposed to அழியுங்காலம், the time of ruin or போங்காலம் when everything goes hard or fails. It is a contraction of ஆகும் + காலம் or ஆகுங்காலம்.

ஆங்கிபம், உடம்பின் நிலையம், the position of the body.

ஆங்கிரசன், ஆயுள் வேத மாகிய வடமொழி வைத்தியத்தில் பாண்டித்தியமும் பிரசித்தியும் பெற்ற ஓர் இருடி, a renowned Rishi (saint) skilled in Ayurvedic science.

ஆங்கிரிவு, விந்து, semen.

ஆங்கிலம், இங்கிலீஷ் பாஷை, English language.

ஆங்குதல், போது மளவாதல், to be sufficient having reached the required stage, as in thirst.

ஆசங்க மூலி, சங்கங் குப்பி, a plant with a bad smell; smooth Volkameria—Clerodendron inerme.

ஆசட்சு, கண், eye.

ஆசந்தி, பிணத்தைக் கொண்டு போகும் பாடை, a palanquin for conveying the dead to the grave—Bier.

ஆசம குலம், செழு மலர்க் கொன்றை, a red variety of Cassia tree. (*unidentified*)

ஆச மனகம், எச்சல் படிக்கம், spittoon.

ஆசமனம், உட் கொள்ளல், (*lit*) taking in as of water ; 2. வெட்டி வேர், khus khus root — Andropogon aromaticus ; 3. சிறுகச் சிறுக நீர் உட்கொள்ளல், sipping water little by little.

ஆசமனி, நீர் வாங்கி, syphon.

ஆசமனீயத் திரவியம், நீரிலிட்டு உட்கொள்ளுவ தற்குத் தகுந்த ஆறுவகைச் சரக்குகள் அவையாவன் — ஏலம், கிராம்பு, சாதிக்காய், சண்பக மொட்டு, பச்சைக் கர்ப்பூரம், பூலாங் கிழங்கு, the six aromatic drugs which are soaked in drinking water to be taken now and then and they are.—cardomum, clove, nutmeg, champaka bud, crude camphor and root of Honey shrub.

ஆசமனீயம், கொப்புளிக்கு மருந்து நீர், gargle.

ஆச மித்தல், குடித்தல், drinking; 2. விழுங்கல், swallowing; 3. நீர் சிறுக வுட் கொள்ளல் அல்லது ஆசமனம், water taken in small quantities.

ஆசம், நெய், ghee, clarified butter; 2. கற் பாஷாணம், a kind of native arsenic; 3. சிரிப்பு, laughter; 4. உரைகல், touchstone.

ஆசயம், உறை விடம், resting place; 2. உடம் பினுட் பை, internal receptacle or vessels of the body such as இரத்தாசயம், the receptacle for blood; 3. கபம் முதலியவை உண்டாவதற்கும் தங்குவதற்கு மாதாரமா யுள்ள பாகம், internal cavities forming an abode for phlegm etc. 4. இரைப்பை,குடல், மூத்திரப்பை முதலிய உள்ளுறுப்புகள், internal viscera such as, the stomach, the intestines, the bladder, the kidney etc. 5. குணம், quality; 6. சுபாவம், nature; 7. மனம், mind; 8. மனோசுபாவம், disposition of the mind or the mode of thinking; 9. உணர்வு, எண்ணம், மனம், இருதயம், ஆன்மா முதலிய வைகளின் இடம், the seat of feelings, thought, mind, heart, and the soul; 10. பலா, jack-tree—Artocarpus integrifolia; 11. ஒருவன் வாழ் நாளில் நேரும் சுகத் துக்கங்களுக்குக் காரணமான சஞ்சித கருமங்கள் அதாவது சென்ற சன்மங்களிற் செய்யப் பட்டுப் பலன் அனுபவிக்காமல் நின்ற கட்டுப் பட்ட வினைகள், (*In Philosophy*) 'Asaya' means the stock or the balance of the fruits of previous acts, which lie stored up in the mind in the form of mental deposits of merit or demerit, until they ripen in the individual soul's own experience into rank, years, enjoyments and sorrow.

ஆசயித்திரி, அன்ன மிடுவோன், one who feeds; 2. காப்பாற்று வோன், protector.

ஆசலடம், வெள்ளைக் குன்றி மணி, white rosary pea—Abrus precatorius (*alba*) See ஆங்காரி மூலி.

ஆசவை, ஆடா தோடை, a small shrub; winter-cherry — Adhatoda vasica alias A. pubescens.

ஆசவத்திரு, பனைமரம், palmyra tree—Borassus flebellifer.

ஆசவத்தரு, See ஆசவத்திரு.

ஆசவம், கள், toddy; 2. சாராயம் முதலியவை fermented or spirituous liquor in general; 3. பூவின் சாறு, the juice of a flower; 4. வெல்லம், சருக்கரை இவைகளி னின்றுவடிக்கு மோர் மது, a spirit distilled from sugar or molasses; 5. அதராமிர்தம், the nectar or juice of the lips of a woman; 6. பனை மரம், a palmyra tree—Borasses flabelliformis (its juice on fermenting affords a spirituous liquor); 6. மருந்துகளை யிடித்துச் சூரணித்துத் தண்ணீர், நெய், முதலியவைகளைச் சேர்த்துக் காய்ச்சாமலே குழிப்புடம் தானியபுட முதலியவைகளினால் இறக்கப்படு மோர்வகை மது வர்க்கம், any spirituous liquor obtained by burying or seasoning the prepared mixture of powdered drugs and water or the clarified butter and the powdered drugs within a heap of grain for a certain period.

NOTE.—It should not be confounded with அரிஷ்டம், which is quite a different preparation. See under its proper head.

ஆசவாடம், உருசி, taste.

ஆசவாடியம், நற்சுவை, good taste; 2. இன் சுவை, sweet taste.

ஆசவா ரிட்டம், ஆசவமும் அரிஷ்டமும், அதாவது காய்ச்சாமலே யிறக்கப்படும் மது வர்க்கம், any spirituous or fermented liquor obtained without boiling or otherwise applying heat.

ஆசளி வாஞ்சி, முயல், rabit.

ஆசற, குறை வின்றி, entirely; fully.

ஆசறுதி, கடைசி, extremity.

ஆசறுதிப் பல், கடைவாய்ப் பல், wisdom-tooth.

ஆசனக் கடுப்பு, மலவாயிலி லுண்டாகு மெரிச்சல், irritation of the anus.

ஆசனக் கட்டி, மலவாயிலி லுண்டாகுங் கட்டி, an abscess of the anus—Marginal abscess.

ஆசனக் கணு, உட்காருவதற்கு ஆதரவாகவிருக்கும் இருபக்கத்துப் பிட்டத்திற்குள் ளமையப் பெற்ற சகனவெலும்பின் கீழ்க்குமிழ்கள், the two knobs projecting downward from the ischium—Tuber Ischia.

ஆசனக் கண், மலவாயிலைச் சுற்றிக் கண்டு கண்டாக எழும்பிப் புண்க ளுண்டாக்கி அம்பு போற்குத்தலும், தினவும், எரிச்சலுங் காணு

மோர்வகைக் குத நோய், wart-like excrescences formed within 1 or 2 finger's length from the rectum by the vitiation of flesh and blood. It is marked by pricking and piercing pain and is covered with a number of small ulcers — Condylomata acuminatum alias Verruca acuminatum.

ஆசனக் கவர், (ஆசனம் + கவர்) உட்காருவதற்கு இசைந்தபடி அமைக்கப்பட்ட இடுப்பெலும்பின் கீழ்ப்பகுதியில் பிட்டத்திற்கு நேராகவுள்ள இரண்டு பக்கத்து எலும்புகள், the lower dorsal part of the innominate bone i. e. the two bones forming the greater part of the pelvis—Ischium.

ஆசனக் கவ்வு, ஆசன வெலும்பின் பொகுட்டுக்குச் சற்று மேற்புறத்தில் இருக்கும் எலும்புப் பகுதி, the bone just above the spinous process of the hip-bone—Ischiatic notch.

ஆசனக் கிருமி, ஓர்வகை மலப் புழு, இது சாதாரணமாய்க் குழந்தைகளின் மலவாயிலில் கண்டு, நமைச்சலையும், துன்பங்களையும் உண்டாக்கும். It is generally found in the rectum of children causing itching and reflex disturbances; a kind of worm breeding in the lower part of the large intestines; thread-worm—Oxyuris vermicularis.

ஆசனக் குடல், மலச்குடல், the rectum.

ஆசனக் குத்தல், மலவாயிலி லேற்படும் குத்தல் வலி, pin-prick pain in the anus.

ஆசனக் குடைச்சல், குதத்திற்குள் துளைத்தற் போன்ற வலி, boring pain in the rectum; neuralgia of the lower rectum — Proctalgia.

ஆசனக் குளிகை, மல வாயிலின் வழியாய் உள்ளுக்குச் செலுத்தும் மாத்திரை, a pill introduced into the rectum—Suppository.

ஆசனக் கொதிப்பு, மூலச் சூடு, heat in the anus.

ஆசனங் குளிர்தல், இருப்பிடம் குளிர்ந்து காணுமாகிய ஓர் மரணக் குறி, a feeling of chillness under one's seat, a symptom of death.

ஆசனச் சந்தென்பு, கூபகத்தின் முகப்பிலும் பக்கங்களிலு மிருக்கின்ற வெலும்புகள், the bones forming the front and sides of the pelvis—Os innominata.

ஆசனச் சிலந்திக் கட்டு, குதத்திலுள், சளிசவ்வின் பாகத்தி லேற்படும் மிருதுவான சதை வளர்த்தி, a smooth growth on the rectum; polypus of the rectum — Proctopolypus.

ஆசனச் சுருக்கம், மலவாயில் சுருங்குதல், the contraction of the sphincter muscles of the rectum; 2. மலத்துவாரம் சிறிதாகச் சுருங்குதல், இதனல் மலபந்த முண்டாகும், the constriction of the passage of the rectum and the consequent difficulty of defecation caused by the repression of a natural urging towards defecation stuffs; Stricture of the rectum—Archostenosis.

ஆசனத் தடை, ஆசனத்தி லேற்படும் மறிப்பு, obstruction in the rectum.

ஆசனத் தாபன ரோகம், உடம்பின் சூட்டினல் மலவாயிலி லுண்டாகும் எரிச்சல், the burning sensation or inflammation of the rectum owing to excessive heat in the system—Proctitis.

ஆசனத் திமிர் வாதம், குதத்தி னுள்ளும் மலவாயிலும் உற்பத்தியாகி அவ்விடத்துச் சதைப்பாகத்தை உணர்ச்சியறச் செய்யுமோர் திமிர்வாதம், a paralysis of the muscles of the anus and the rectum—Procto-paralysis alias Proctoplegia.

ஆசனத் திரி, மலவாயிலினுட்செலுத்து மோர் வித்தக் காரச் சீலை, a caustic gauze introduced into the rectum to create or cause inflammation.

ஆசனத் திருத்தல், உட்கார்ந்தபடியே யிருத்தல் அதாவது யோகம் செய்தல், to confine oneself to a posture for practising Yoga.

ஆசனத் தினவு, மலவாயிலி லுண்டாகு மோர் வித நமைச்சல், a persistent itching of the anal orifice—Pruritus ani.

ஆசனத் துவாரம், மலவாயில், anal orifice—Vent.

ஆசனத் தோயம், இடுப்பின் பாகத்தைத் தண்ணீரி லமிழ்த்தலாகிய ஓர்வகைச் சிகிச்சை, a treatment in which the patient's hip is made to remain under water. It is a bath in which the patient sits in a tub, bathing only the hips and the buttocks—Hip-bath or Sitz bath.

ஆசன நமைச்சல், see ஆசனத் தினவு.

ஆசன நரம்பு, பிட்டத்தைச் சுற்றி வோடும் நரம்பு, sciatic nerve.

ஆசனப் பரு, அத்திக்காயைப் போல் மலவாயி லில் அல்லது அதனருகில் காணுங் கிரந்தி, fig-wart of a venereal origin appearing on or near the anus — Verruca acuminata.

ஆசனப் பவுத்திரம், வாதாதிக ளதிகரித்துக் குதத்தில் துவாரங்களே யுண்டாக்கி அதன் வழியாய் மல மூத்திராதிகளே வெளிப்படச் செய்யு மோர்வித விரண நோய், a sinus or fistulous ulcer opening from the rectum into the connective tissue about the rectum and discharging fecal and urine matter; Fistula in ano—Archosyrinx.

ஆசனப் பிடுங்கல், மலவாயிலி னழற்சி, inflammation of the anus — Proctitis or Architis.

ஆசனப் பிணி, குதத்தி லுண்டாகும் நோய், any disease in general, of the rectum.

ஆசனப் பிதுக்கம், உறுப்புத் தள்ளல், protrusion of the rectum or its mucous membrane; Prolapse of the anus—Archoptosis. 2. வாதத்தினுல் குதத்தின் ஒருபகுதி வெளிப் பிதுங்கிக் காணல், hernial protrusion of a part of the rectum—Proctocele.

ஆசனப் பிரயோகம், உணவு, நீர், மருந்து, முதலானவைகளே மல வாயிலின் வழியாய் உடம் பினுட் புகும்படி உள்ளே செலுத்தல், anything syringed or introduced into the system through the rectum by way of treatment, such as food, water, medicine etc.—Clyster.

NOTE,—Such a method is also adopted in the administration of food when regular feeding through the mouth becomes impossible.

ஆசனப் பிளப்பு, மல வாயிலின் சதையில் காணும் வெடிப்பு, a painful linear ulcer at the margin of the anus; fissure of the anus—Anal fissure.

ஆசனப் புண், குதத்தி லேற்படும் விரணம், any ulcer or sore appearing in the anus; 2. மூல நோய், piles; 3. பௌத்திரம், fistula; 4. குழந்தைகளுக்குக் குதத்தி லேற்படும் புண், a sort of itch-like eruptions appearing about the anus of a child owing to a deposit of urine, perspiration, feces etc., consequent on the neglect in cleansing that part. See அதிபூதனம்.

ஆசனப் புரை, மலவாயிலி லுண்டாகும் புண் புரை, a sinus formed in the anus.

ஆசனப் புற்று, குத வாயிலில் மேக சம்பந்தத் தினுற் அத்திக் காயைப்போல் கட்டி எழும்பி விரணமாகிப் பிசு பிசுப்பான நீ ரொழுக்கை யுண்டாக்கு மோர் நோய், fig-warts in the form of condyloma on or near the anus mostly of venereal origin. It is also called cauliflower excrescence—Verruca acuminata.

ஆசனப் பௌத்திரம், see ஆசனப் பவுத்திரம்.

ஆசன மெழுகு, குதத்தி லுண்டாகும் புண், புரைக்கட்டி முதலியவைகளுக்குப் பூசு மருந்து, an ointment applied to the rectum for curing ulcers, sores, sinuses, abscesses etc.

ஆசனம், குதம், the rectum—Archos; 2. மல வாயில், the distal end or the outlet of the rectum—Anus.

NOTE.—The term if strictly used refers only to the anus, but in Medicine it is invariably used without distinction to include also the rectum which means மலக் குடல்.

2. இருக்கை நிலே, இவ்விதநிலேயில் பல விதங்களுண்டு. எதைக்கருதி அப்பியாசிக்கப்படுகிறதோ அதற்குத் தக்கவாறு உட்காரும் நிலேகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

இவ்வித நிலேகள் யோகாப் பியாசத்திற் காக 84 விதமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் 9 நிலேகள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப் பட்டன. அவையாவன:—(1) பதுமாசனம், (2) சுவாஷ்டிகாசனம், (3) சித்தாசனம், (4) கோமுகாசனம், (5) வீராசனம், (6) மயூராசனம், (7) கேசரியாசனம், (8) பத்திராசனம், (9) முத்தாசனம்.

இவைகள் சாதாரணமாக மனது இலயப்படும் படிக்குச் செய்யும்படியான பயிற்சிகள், இவைகளினுல் உடம்பு பரிசுத்த மடைந்து, வாசி வசப்பட்டு, உடம்பில் நோயணுகாமல் மனது ஒரு வழிப்பட்டு, அனேக சித்திகளே யடைய ஏது வாகும், the sitting posture. There are different kinds of postures and they are classified according to the purpose for which a practice is made.

For purposes of Yoga practise of these postures are divided into 84 kinds, of which the 9 above enumerated are more essential than others.

These methods are generally resorted to, for the purpose of securing concentration of mind. Their chief aim is to destroy all diseases in the system, to keep the body free from all impurities, to establish a well-regulated breath and finally to acquire all psychic powers.

ஆசனம் வெளியுறல், மலவாயில் விரிந்து மலர்தல், prolapse ani or prolapse of the anus—Proctoptoma alias Proctoptosis. 2. குதத்தின் ஊட்பாகம் விரிவதனால் அதன் தசைப்பாகம் வெளிப் பிதுங்கிக் காணல், a prolapsed portion of the rectum—Archoptoma. See ஆசனப் பிதுக்கம்.

ஆசன ரோகம், குதத்தில் பொதுவாக வுண்டாகும் நோய்கள், அவை—மூலம், பவுத்திரம், உருப்புத் தள்ளல், முதலியன, a disease of the rectum in general such as, piles, fistula, prolapse of the anus etc.

ஆசன வடைப்பு, மலவாயில் அடைபடல் அல்லது தூர்ந்து போதல், rectal stricture—Archostegnosis or Archostinosis; 2. ஆசன வாயில் ஏற்படாத வோர் பிறவிக் குற்றம், absence of the anus, the natural opening being closed by areolar tissue or a membraneous septum—Imperforate anus.

ஆசன ரூடி, மலபந்தத்தினால் மெத்தவும் முக்குதல் முதலிய பல காரணங்களினால் ஆசனம் வெளிப்படல். இதைத் தமிழில் 'உறுப் புத்தள்ளல்' எனச் சொல்வ துண்டு, prolapse of the rectal muscles — Prolapsis recti.

ஆசன வஸ்தி, குதத்திற் செலுத்து மோர்வித்தக் கருவி. இது சுரம், சீதபேதி, வயிற்றுப்பிசம், வாந்திபேதி முதலிய நோய்கள் கொண்ட காலத்தில் மிக்க உபயோகப்படும், an apparatus consisting of a knob and a tube introduced into the rectum in a treatment—Enema. It is highly efficacious in cases of fever, dysentery tympanites, cholera, etc.

ஆசன வஸ்தி செய்தல், மலவாயிலின் வழியாக வுட்புகும்படிச் செய்தல், forcing through the rectum; giving an enema.

ஆசன வர்த்தி, மருந்தைத் தணியில் தடவி வர்த்தியாகத் திரித்துக் குதத்திற்குள் ஓர் அங்குலம் வரை செலுத்தும் திரி, a caustic lint introduced into the rectum up to an inch. See ஆசனத்திரி.

ஆசன வலி, சாதாரணமாக மலவாயிலிலாவது அல்லது அதன் சமீபத்திலாவது ஏற்படும் வலி, pain in or about the anus—Proctodynia.

ஆசன வவாயம், மலத் துவாரத்தைச் சுற்றிலு முள்ள வவாயம் போன்ற சதைப் பற்று. இத்தகைய வவாயங்கள் மூன்றுண்டு, அவைகள் ஒவ்வொன்றும் ஒன்றரை விரற்கடை இடையே புள்ளன. ஆகவே இம் மூன்றும் சேர்ந்து 4 விரற்கடை விசால முள்ளதாய் மலத்தை வெளிப்படுத்தவும், தவிர இவைகள் ஆசன வாயிலைச் சுருக்கவும் ஏதுவாக வுள்ளன. முதல் வவாயம் ஆசன வாயிலண்டை புள்ளது, the spiral grooves inside the rectum. Each of these grooves or ring-like muscles lie a finger and a half apart. They are known as the grooves of out-flow defecation and closure of the anus covering a space of 4 fingers.

The first groove is situated about a finger's width apart from the orifice of the anus—Sphincter muscle.

ஆசன வாயில், மல வாயில், anus.

ஆசன வாய்ச் சுருக்கம், மலத் துவாரத்தின் தோல் சுருங்குதல், puckering of the anal aperture.

ஆசனவாய்த் திறத்தல், அங்கத் திறத்தல், relaxation of the sphincter muscles.

ஆசன விரணம், மலவாயிலி லுண்டாகும் புண், crack-like sore or ulcer at the margin of the anus—Anal fissure.

ஆசன விரத்தம், குதத்தின் வழியாய்க் காணும் இரத்தம், blood passing through or discharged from the rectum, as in bleeding piles, dysentery etc.

ஆசன விரத்த வொழுக்கு, குதத்தின் வழியாய் இரத்தம் வெளிப்படல், rectal hemorrhage —Archorrhagia.

ஆசன விரிவு, குதத்தின் வாயில் அகலல், dilatation of the anus. This should not be confounded with அங்கத் திறத்தல், which see.

ஆசன விருத்தி, see ஆசன ரூடி.

ஆசன வெடிப்பு, குதத்தின் சதை வெடித்துண்டாகும் புண், a rupture of the skin at the side of the anus due to the pas-

sage of hardened stool (*faeces*)—Fissure of anus. See ஆசனம்.

ஆசன் வெலும்பு, ஆசனச் சங்தெலும்பின் கீழப் பகுதியா யுள்ள வெலும்பு, the hip bone forming the inferior part of the os innominatum—Ischium.

ஆசன வைத்தியம், மலவாயிலி லேற்படும் நோய் களின் சிகிச்சையைப் பற்றிக்கூறும் நூல், the branch of medicine treating of the rectum and its diseases—Proctology.

ஆசன வொழுக்கு, ஊன்கலக்த நீர் ஆசனத்தி லிருந்து ஒழுகல், a discharge of any pathologic fluid from the rectum — Archorrhea; 2. குதத்தி லிருந்து உண்டாகும் இரத்த வொழுக்கு, hemorrhage from the rectum—Archorrhagia; 3. மலவாயி லிருந்து ஏற்படும் சீத வொழுக்கு, a mucous discharge from the anus—Proctorrhoea.

ஆசனன காலம், மரணப் போழ்து, hour or time of death; the moment of death.

ஆசனனப் பிரசவம், குழந்தை பெற்ற பிறகு நஞ்சுக் கொடி வெளிப்படல், the discharge of secundines after child-birth — Afterbirth; 2. கருப்பம் நிறைந்தபின் அதாவது போதுகாலம் நெருங்கிய பின்னும், பிரசவத் திற்கு முந்தியும் ஆக விதற்கிடையில் வயிறு தளர்ந்து பனிக்குட முடைந்து இன்னும் பலவித வேதனைகள் ஏற்படும் நிலைமை, that period of labour which occurs after the full-term of pregnancy and before delivery, and which is attended with the following symptoms, namely a sinking forward of the abdomen, presentation of liquor ammi, mucous discharge sometimes streaked with blood, known as 'the show' etc. See தருணப்பிரசவம்.

NOTE.—The term is also applied to a female of an animal which is about to bring forth its young one.

ஆசனனம், பிற்பகல், that part of the day which follows noon; afternoon.

ஆசனி, பெருங்காயம், asafoetida — Ferula narthax; 2. பலா மரம், jack-fruit tree—Atrocarpus integrifolia.

ஆசாசி, சீந்தில், moon-creeper — Menispermum cordifolium.

ஆசாடம், பொதிய மலை, pothigay hills near Courtallum in Tinnevelly District; Malaya Mountain; 2. ஆடி மாதம், the Tamil month corresponding to July; 3. முருக்கு, Indian coral tree — Erythrina Indica.

ஆசாடி வேர், கலியாண முருக்கன் வேர், the root of the Indian coral tree.

ஆசாட்டம், அழுகை, cry.

ஆசா ணங்கை, see ஆசாநங்கை.

ஆசாணி மூலி, செவ்வா மணக்கு, red castor plant—Ricinus communis.

ஆசாதி கரம், காசாங்கம், which see.

ஆசா நங்கை, ஆதனை (காட்டாமணக்கு) Adul oil-plant—Jatropha glandulifera.

ஆசார போசன், பருத்த வுடம் புடையோன், a man large and strong in frame—Stalwart.

ஆசாரம், சாலாங்க பாஷாணம், a kind of arsenic; 2. பெரு மழை, heavy rain; 3. சுத்தம், cleanliness.

ஆசாரிப் புளி, ஓர்வகைச் சீனத்து மரம். இது சாம்பல் நிறமும் வழவழப்புமான பட்டை யுமுள்ள ஓர் சிறிய மரம். இலைகள் 5" × 1" அளவு இருக்கும். பூக்கள் சிறியவை, இலை புளிப்பு. இது தலையலுக் குபயோகப் படும், thin leaved chinese laurel — Antidesmadiandrum. It is a small tree with smooth and grey back. Leaves 5" by 2"; flowers minute; leaves are acid and they are made into chutney.

ஆசானவணுயிர், முயல், hare.

ஆசாணு பாகு, ஆசாணு வாகு, } முழங்கால்வரை நீண்ட கை யுடையோன், one with arms extending to his knees; 2. உத்தம புருடன்; சாமுத் திரிகா லட்சணப்படி, இவன் உத்தம புருட னெனக் கருதப்படுவன். சாதாரணமாய், அரசர் முதலியோருக்குத்தான் இந்த லட்சணம் அமையுமெனக் கருதப்படும், a man of eminance and virtue; according to Physiognomy, one who is endowed with such feature will be considered an eminent person. Generally, kings and great men are usually born with such well-marked features, forms and lineaments of the body.

ஆசான், குரு, preceptor.

ஆசிகம், ஆட்டுப் பிழுக்கை, the excreta of the sheep.

ஆசிக ரோகம், கண்ணின் கருவிழியில் ஆட்டுப் பிழுக்கையைப் போல் கொப்புளங் கண்டு பிதுங்கி அதைச் சுற்றிலும் சிறுசிறு குருக்கள் நிறைந்து, அதிக வலியையும், செந்நீர் ரொழுக்கையு முண்டாக்கு மோர்வகைக் கண் ணோய், an eye disease attended with protrusion of the cornea about the shape of the sheep's excreta and small ulcers round it with much pain and accompanied by a discharge of red water from the eyes—Stephiloma corneae.

See also அசகா.

ஆசிக் கல், காந்தக் கல், loadstone ; 2. காகச் சிகை, இது உபரசச் சரக்குகளி லொன்று, a black variety of loadstone: this is one of the 112 kinds of natural substances described in Tamil Medicine.

ஆசித குருக்கன், காக பாஷாணம், இது வைப் புப் பாஷாணம் 32ல் ஒன்று, one of the 32 kinds of prepared arsenics.

ஆசித்தீரி, சாப்பாட்டு ராமன், a glutton.

ஆந்தைக் கண், *ஆந்தைக் கண் போன்ற பெரிய கண்*, big eyes like those of an owl; 2. *ஆந்தைப் பார்வை போன்ற வெறும் பார்வை*, a blank stare like that of an owl.

ஆந்தைக் கண்ணன், *ஆந்தைக் கண்ணைப்போல் கண்களை யுடையவன்*, owl-eyed man.

ஆந்தைக் காதல், *ஆந்தை நூல்*, the science dealing about the screeching of the owl from which prediction is drawn; 2. *ஆந்தை கூவும் இரட்டைச் சத்தம்*, the screeching of owls with a double note in it.

ஆந்தை மீடன், *பேரா முட்டி*, fragrant sticky mallow—Pavonia odorata.

ஆபகசார யூதகம், *நீர்த்தடிப்பை நிர்ணயித்தல்*, the determination of the specific gravity by means of hydrometer — Hydatic hydrometra.

ஆபகம், *நீர்த்துளி*, a drop of water—Hydatid.

ஆபடிகம், *இந்திர நீலம்*, sapphire.

ஆபணியம், ஆபணீயம், } *கடைச் சரக்கு*, drugs sold commonly in bazaars; bazaar drug.

ஆபதம், see *ஆபத்து*.

ஆபத்து, *மிக வருத்தம்*, great distress; 2. *விபத்து*, calamity.

ஆபத்து காலம், *தன்பம் நேரிடும் சமயம்*, the hour of danger; time of distress.

ஆபத்து சன்னியாசம், *இறக்கும் பொழுது பெறும் சன்னியாசம்*, inculcating the principles of Asceticism in death-bed.

NOTE.—This is generally done among Brahmans fearing death.

ஆப ஸ்தம்பம், *ஆபஸ்தம்ப சூத்திரம்*, a Smrithi written by Apasthamban; 2. *தரும நூல் பதினெட்டி லொன்று*, one of the 18 works on Morality.

ஆபஸ் தம்பன், *வடமொழி வைத்திய நூலில் பேர் பெற்ற ஓர் பண்டிதன்*, a celebrated physician well versed in Ayurvedic medicine. He is the founder of a Sutra-school of the Taittriya sakha.

ஆபனம், *மிளகுக் கொடி*, a pepper creeper 2. *மிளகு*, pepper.

ஆபாசம், *அசுத்தம்*, that which is filthy or morally impure.

ஆபாத சூடம், *உச்சி முதல் உள்ளங்கால் வரை*, from head to foot; 2. *முழு உடம்பு*, the whole body.

ஆபாத மத்தகம், ஆபாத மத்தம், } see *ஆபாத சூடம்*.

ஆபானம், *மதுக் கடை*, liquor shop.

ஆபிசாரம், see *அபிசாரம்*.

ஆபீடம், தாமரைத் தாது, filaments of the lotus; 2. ஓர்வகை நிமினேச் சத்து, a pyritic mineral.

ஆபீனம், பசுவின் மடி, the udder of a cow; 2. கொழுப்பு, fat.

ஆபூஷம், ஆபூடம், } துத்த நாகம், zinc.

ஆபூபீகம், மாப் பண்டம், cakes prepared out of flour.

ஆபூப் பியம், மா, flour; 2. நஞ்சுக் கொடி, the navel cord.

ஆபோசனம், விழுங்குதல், swallowing up; 2. போசனம், food.

ஆப்தி, புணர்ச்சி, sexual intercourse.

ஆப்பம், see அப்பம்.

ஆப்பால், பசுவின் பால், cow's milk.

ஆப்பி, பசுவின் சாணி, cow-dung.

ஆப்பி நீர், பசுவின் மூத்திரமும் சாணமும், cow-dung and cow's urine; 2. சாணிப் பால், a solution of cow-dung.

ஆப்பி யந்திரம், உள்ளாக விருப்பது, that which is internal; 2. மனதுக் குரியது, that which is mental.

ஆப்பி யந்திர வாயு, உடம்பிலுள்ள ஞானேந்திரியங்களை நடப்பிக்கச் செய்யும் பிராணன் முதலிய வாயுக்கள், the vital airs, such as, oxygen etc. inciting into action the sensory organs in the human system.

ஆப்பி யானம், உடம்பின் கொழுப்பு, fat in the body.

ஆப்பில், (*Eng*) சீமை இலந்தை. இது இத் தேசதலிற்குரிய மரமல்ல. மேலுட்டி லிருந்து கொண்டுவந்து பயிராக்கப் பட்டது. இம் மரம் 20 அடி உயர மூள்ளது; வருஷந்தோறும் இலை யுதிர்ந்து சித்திரை, வைகாசி மாதங்களிற் பூத்துக் காய்க்கும்; பூக்கள் வெளிர் சிகப்பா யிருக்கும். இப்பழம் உடம்பிற்கு ஆரோக்கியத்தைத் தருவது மன்றிப் பல் நோய்க்கும் உபயோகப்படும், apple — Pyrus malus alias Malus communis. The tree is brought from Western countries and naturalised in India. It is about 20 feet high; a deciduous fruit tree, the leaves of which fall off in autumn. Its flowers are reddish white, flowering in April and May. The fruit is wholesome to the body and it is believed to be useful in tooth-ache.

ஆப்பு, எட்டி மரம், nux vomica tree—Strychnos nux vomica; 2. கொய், broken rice; 3. உணவு, food; 4. கட்டு, bandage, tie; 5. உடம்பு, body.

ஆப்புராகி, வெள்ளைக் குன்றிமணி, Indian liquorice plant—Abrus precatorus (*albiflora*).

ஆப்புரி, see ஆப்பு.

ஆப்பு வேணிகம், வெண் கண்டங் கத்திரி, a white-flowered prickly night shade — Solanum Xanthocarpum (*albiflora*).

ஆப்பு ளண்டம், கையாந்த கரை, a medicinal herb. Bee plant—Eclypta prostata.

ஆப்புளாகி, வெண் கீரைத் தண்டு, இது கறிக்குதவும், a garden green — Amaranthus blitum alias Euxolus oleraceous. It is a common culinary vegetable and is opposed to செங்கீரைத் தண்டு, which see.

ஆப் பெலும்பு, ஆப் பென்பு, } ஆப்பைப் போன்ற ஓர்வகை எலும்பு, a very irregular cuneiform or wedgeshaped bone at the base of the skull—Sphenoid bone; 2. மணிக் கட்டின் எட்டு எலும்புகளி லொன்று, one of the eight wrist bones, or cuneiform carpal bone—Carpus; 3. பாதத்தி லிருக்கும் ஆப்பைப் போன்ற மூன்று எலும்புகள், the three cuneiform bones in the foot—Tarsus.

ஆப்பை, see அகப்பை.

ஆமக, சமைக்காத, uncooked; 2. பச்சை யான, raw.

ஆமகம், துவரை, red-gram—Cajanus indicus.

ஆம கற்பம், இளஞ் சூல், the foetus before the fourth month of pregnancy — Embryo.

ஆம கோகிலம், வெண் குன்றி மணி, a white bead of the Indian liquorice.

See ஆப்புராகி.

ஆம கோளம், ஆம கோளா, } see ஆமர கோளா, which is the correct spelling.

ஆமக் கடுப்பு, சீதம் விழுவதனல் ஆசன வாயிலுண்டாகும் எரிச்சலோடு கூடியவலி, irritation of the anus arising from mucous discharge.

ஆமக் கட்டு, சீதக் கட்டு, masses of mucous from the bowels.

ஆமக் கணம், குழந்தைகட்குச் சீதவழும்பு வியூ மோர்வகைக் கண நோய். இதனுல் உட் காய்ச்சல், நெஞ்சு துடித்தல், சிறுநீர் மஞ்ச ளாக விறங்கல், உட லினைத்தல், கை கால் குளிரல், முதலிய குணங்கள் ஏற்படும், a nutritional disease *in children* due to dietetic errors. It is attended with mucous in the stools and is marked by internal fever, palpitation of the heart, high-coloured urine, emaciation and coldness of the extremities — Infantile dysentery; 2. வாதநாடி மற்ற நாடிகளிற் பின்னிக் கொண்டு நடத்தலால், உணவு வெறுப்பு, நாபிவலி, உட்காய்ச்சல், தாது நஷ்டம், நெஞ்சுத் துடிப்பு, சிறுநீர் மஞ் சன் நிறம், சர்வாங்க வெதும்பல், வயிற் றிரைச்சல், தாகம், உடம்பு வறட்சி, முதலிய குணங்களே யுண்டாக்கு மோர்வ கைக் கண நோய், a disease *in adults* arising from the intertwining of the deranged Vayu with the other humours in the system. It is followed by aversion to food, pain at the navel region, internal fever, loss of vital power etc., palpitation of the heart, high-coloured urine, pain throughout the body, rumbling noise in the stomach, thirst, emaciation etc.

ஆமக் கழிச்சல், குழந்தைகளுக் குண்டாகு மோர்வகைச் சீதபேதி. இதனுல் பால் எதி ரெடுத்துச் சுரங்காயும், dysentery in children attended with eructation, and internal fever—Infantile dysentery; 2. சிறு குடலில் நிண நீர்த்தாரை அழிவுற்று அதனுல், ஆமம்பெருகி யேற்படுங் கழிச்சல், chylous diarrhoea, due to the rupture of the lymphatics in the small intestines —Chlyorrhoea.

ஆமக் காய்ச்சல், see ஆம சுரம்.

ஆமக்கினி, கடுகு ரோகணி, a purgative drug used generally for children—Helleborus niger.

ஆமக் கூறு, ஆமப் போக்கு, the process of conversion of food into chyle and of absorption of the latter into the tissues —Chylosis.

ஆம சன்னி, அசீரணத்தால் குழந்தைகள் மூலை யுண்ணுது மயங்கி, முகம் வேறுபட்டு, வலிப்பு, குரற் கம்மல், சுரம் முதலிய குணங் களைக் காட்டு மோர்வகை சன்னி, a delirium in children arising from fever due to the intestinal disorder as a result of indigestion. It is marked by convulsion, affection of the throat, giddiness, change of features etc.

ஆம சுரம், அசீரணத்தினுல் குழந்தை கட்கு மாந்த மதிகரித்து அதனுல் மார்புவலி, வயிற் றுக் கனதி, அரோசகம், மல வரட்சி, ரீண்ட சுரம் முதலிய குணங்களைக் காட்டு மோர் வகை நோய். சுரம் உண்டானது முதல் 7 நாள் வரை இதற்கு இப்பெயர். இதற்கு மேற்பட்டால் 'நிராம சுரம்' எனப் பெயர், a fever from indigestion, common in children due to intestinal disorder. It is characterised by pain in the region of the heart, sense of heaviness in the abdomen, aversion to food, constipation and a long-continued fever.

The duration of the disease is about a week and if it exceeds this limit, it is called 'Niramajuram' a different kind of fever.

ஆம சூலம், see ஆம சூலை.

ஆம சூலை, அசீரணத்தால் உண்டாகும் வயிற் றுவலி, acute abdominal pain arising from intestinal indgestion—Sabbural colic.

ஆம சூலை ரோகம், எளிதில் சொரிக்காத பண் டங்களைச் சாப்பிடுவதாலும், அகால உண வினுலும், ஆமாசயத்தில் அதாவது இரைக் குடலில் சீதஞ் சேர்ந்து வயிறு, மார்பு, விலாப் பக்கம் முதலிய விடங்களில் சூலத்தினுற் குத்துவதைப்போல் வலி காணும் ஓர்வகைச் சூலை நோய். இது, சீதக்கட்டு விருத்தியி னுண்டாவதா லிப்பெயர், an excruciating pain in the abdomen, chest and in the region of the sides etc, as if being pierced with a trident inside the body. It is caused by incompatible articles of fare, untimely meals and other extraneous circumstances. It is aggravated by the accumulation of mucous in the intestines—Intestinal colic.

See also பரிணாம சூலை.

ஆமடி, எட்டி, strychnine tree — Strychnos nux vomica.

ஆமடிக நவ்வல், வெண்ணவல், a white species of Jamboo tree said to be very rare—Eugenia Alba.

ஆமடிகம், எட்டி, see ஆமடி.

ஆமணக்க நெய், ஆமணக்குக் கொட்டையி னின் னு காய்ச்சி அல்லது காய்ச்சாமலே எடுக் கும் நெய். இது சுவையற்றதும், பேதிக்குந்

தன்மையுடையதும், குடலைச் சுத்தப்படுத்தி, மிந்துவைத் தூய்மையாக்கக் கூடியதும், கருப்பையின் கோளாறுகளைப் போக்கக் கூடியதும், புத்தித் தெளிவையும், ஞாபக சக்தியையு முண்டாக்கக் கூடியதுமான ஓர் நெய், அல்லது எண்ணெய், an oil extracted either by way of boiling or by cold drawn process from the castor seeds. It is tasteless, irritating and appetising. It acts as a cleansing agent of the internal channel of the body and is wholesome to the skin. It purifies the semen and removes the vaginal and uterine disorders. It also improves memory, complexion and intellect.

NOTE.—It is the Palmae oleum of the old Pharmacologists and is soluble in pure sulphuric ether and alchol. Castor oil obtained by cold-drawn process is said to be the purest oil.

ஆமணக்க முத்து, see ஆமணக்குக் கொட்டை.

ஆமணக் கிலை, ஆமணக்குச் செடியிலை. இவ்விலையை நெருப்பில் வாட்டிக் கட்டப் பெண்களுக்குப் பால் சுரக்கும், the green leaves of the castor-oil plant. An application of the heated leaves aids in the secretion of milk in women.

ஆமணக்கு, இச் செடி 8 முதல் 10 அடி உயரம் வரைக்கும் வளரும், இலைகள் 7 பிரிவுகளாகவும், கந்தருவன் கைகளைப் போன்றவைகளாகவும், கொட்டைகள் பள பளப்பாயும், கருப்பும் வெண்மையுங் கலந்த நிறமுள்ளவைகளாயும் இருக்கும். இது சிற்றாமணக்கு, பேராமணக்கென இருவகைப்படும்.

இது எல்லா இடங்களிலும் பயிராக்கப் படும். இதில் அடியிற் கண்டபடிப் பலவித க்களுண்டு, the castor seed plant — Ricinus communis. The plant is 8 to 10 ft. high; the leaves are deeply divided into seven sections at the margin and they are said to resemble a Ghandharva's hand. The seeds are oval, shining, and black, dotted with grey. The plant is cultivated in all parts and is divided into two varieties namely–the small and the large, as distinguished from the size of the seeds. The different kinds, though end in the same termination in Tamil, apparently belong to different botanical groups and they are as follows :—

1. சிற்றாமணக்கு, castor oil plant — Ricinus communis (*fructibus minoribus*)
2. பேராமணக்கு, castor oil plant — Ricinus communis (*fructibus majoribus*).
3. சீமை யாமணக்கு, palm-tree—Palma Christi. Called also Rosalind tree; wild castor plant—Jatropha montana.
4. காட்டாமணக்கு, (forest + castor oil plant)—Jatropha curcas.
5. புல்லாமணக்கு, pillamanak—Sebastiana chamaelea, almost resembling சிற்றாமணக்கு.
6. வெள்ளை யாமணக்கு, white castor-oil plant.
7. உரலாமணக்கு, another kind.
8. கடலாமணக்கு, (Sea + castor-oil plant). Sea-Castor. Same as காட்டாமணக்கு in No, 4.
9. சூரிய காந்தாமணக்கு, another variety.
10. சல்லாமணக்கு, same as புல்லாமணக்கு in No. 5.
11. கொடியாமணக்கு, creeping aumanak—Tragia chamaelea.
12. பறங்கியாமணக்கு, Foreign aumanak; Same as Papaw. It is so called from its leaf.
13. எலியாமணக்கு, (Rat + aumanak) Adul oil plant—Jatropha glandulifera.
14. ஏரிக்கரைக் காட்டாமணக்கு, (Tank bund + jatropha curcas) Adul oil plant. See எலி யாமணக்கு.
15. செவ்வாமணக்கு, red castor plant.
16. மலை யாமணக்கு, mountain castor plant.

NOTE.—The regular Aumanakku plant is known by several names, such as, Castor oil plant, Lamp oil plant, Pearl-seed plant, Palma Christi (of the early Christians); Palm tree (of Rosalind in Shakespeare), Joanah's gourd; Ghandarva's hand, Kroton of the Greeks; Kiki of the Greeks and so on.

ஆமணக்குக் கொட்டை, கொட்டை முத்து, the castor seed.

NOTE.—There are two varieties of these seeds, the large and the small. The skin

of the seeds consists of 3 coverings and the active principle is found more or less throughout the entire seed.

ஆமணக்கு முத்து, கொட்டை முத்து, the seeds of the castor-oil plant — Ricinus communis alias R. vulgaris. See ஆமணக்குக் கொட்டை.

ஆமணக் கெண்ணெய், கொட்டை முத்தெண்ணெய். அதாவது ஆமணக்கு விதையினின்று வடிக்கு மெண்ணெய், இது சிற்றாமணக்கெண்ணெய், பேராமணக்கெண்ணெய் என இருவகைப்படும், அதிலும் பச்சை யெண்ணெய் ஊற்றின யெண்ணெய் என்ற வித்தியாசமும் உண்டு, இது விளக்கெரிக்க உபயோகப் படுவதுடன் மருந்திலும் மிக்க உபயோகப்படும். இதில் சிற்றாமணக் கெண்ணெய் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் கொடுக்கப் பேதியாகும்.

இது சிறிது கசப்பும் வெகுட்டலு மூடையதா யிருந்தாலும், நீர்ச் சுருக்கு, மருந்து வேகம், மலச் சிக்கல், முக வாதம், பக்க வாதம், குன்மம், பாண்டு, கீல்வாயு, உதிரச் சிக்கல், முதலியவைகளைக் குணப்படுத்தும், குழந்தைகளைத் தாயைப் போல் வளர்க்கும், கருப்பிணி, பிரசவித்த பெண், இவர்களுக்குப் பேதிக்கு கொடுக்கலாம், மற்றும் இரணங்களிலும், எரிபுண்களிலும், Tincture of iodine க்குப் பதிலாக உபயோகிக்கச் சீழ் பிடிக்காது, the oil extracted from the castor oil seeds. It consists of two varieties viz.—large-seed oil and small-seed oil and these can be prepared in two ways i.e. cold drawn or boiled.

The small-seed oil is more useful in medicine and the large-seed oil is generally useful to provide lamp-oil. It is a well known laxative used for children as well as for adults. It is a little bitter and has an acrid and a very disagreeable nauseous taste and odour.

It is used with advantage in cases of dysuria, virulency of medicines, constipation, facial paralysis, hemiplegia, dyspepsia, dropsy, rheumatism, amenorrhea etc. It is considered a good nursing agent even like a mother in guarding the health of a child. It is a safe purgative to be taken by pregnant women and those after delivery. It is applied externally to wounds and blisters to prevent suppuration as a substitute for tincture of iodine.

ஆமணத்தி, கோரோசனை, a concretion found in the intestines of the cow; yellow orpiment extracted from the bile of cattle.

ஆமணத்திரம், see ஆமணத்தி.

ஆமண்டகம், ஆமண்டம், } ஆமணக்கு, castor-seed; 2. சிற்றாமணக்கு, small castor-seed—Ricinus communis (*fructibus minoribus.*)

ஆம தோஷம், இது புசித்த உணவு நன்கு சீரணமாகாக் குற்றத்தினாலும், அல்லது அசீரணத்தை யுண்டாக்கக் கூடிய பண்டங்களைப் புசிப்பதனாலும், அல்லது புசித்த வுணவு சீரணமாகா முன் மறுபடியும் புசிப்பதனாலும், ஏற்படும் தோஷம். இது சாதாரணமாய்க் குழந்தைகளுக் குண்டாகும், a morbific diathesis in children due to indigestion arising from the following causes—(1) Improper or weak digestion of food taken (2) taking food not easily digestible (3) food taken before digesting properly the previously taken food.

ஆம பாகம், வீக்கம் அல்லது கட்டியைப் பழுக்கச் செய்யு மோர் முறை, a method of ripening an abscess or swelling.

ஆம பித்தம், பித்த மதிகரித்து அதை ஆமத்திற் சேர்த்துப் பற்பல கோளாறுகளை யுண்டாக்கு மோர்வகைப் பித்த ரோகம். இதனால் உடம்பு கறுத்து, வியர்வை, மூர்ச்சை, தலைவலி, கோழை, வாந்தி, தாகம், வயிறு, மார்பு, கண்டம் முதலிய விடங்களில் எரிச்சல், முதலிய குணங்கள் ஏற்படும், a bilious disease due to the concerted action of aggravated Pittam (*bile*) and the mucous of the intestines, giving rise to various complaints such as, dark complexion, perspiraton, fatigue, heat, head-ache, vomiting, thirst and burning sensation in the regions of the stomach, chest etc; 2. ஆமத்தோடி கலந்த பித மிஞ்சிய பித்தவொழுக்கு an excessive flow of bile mixed with chyle—Chylorrhoea.

ஆம பேதி, சீத பேதி, dysentery; 2. ஆமம் கழலுதல், chylous diarrhoea—Chylorrhoea; 3. குடலின் அழற்சியினல் வலியுடன் ஆமம் கலந்துண்டாகும் பேதி a painful diarrhoea with the presence of albuminous matter in the evacuations due to the inflammation of the intestines; 4. சீதவழும்போடி கூடிய மல பேதி,

diarrhoea characterised by the presence of mucous in stools—Mucous diarrheoa.

ஆம மாமிசம், பச்சைக் கறி, raw flesh.

ஆம மூத்திரம், சிலேட்டும மூத்திரம், the existence or presence of fat in the urine giving it a milky appearance—Chyluria.

ஆம மேகம், மூத்திரத்தில் ஆமம் கலந்து வரும் ஓர்மேக நோய், a urinary disorder attended with mucous in the discharge of urine.

ஆமம், பழுக்காத நிலைமையி லுள்ளது, that which is immatured or unripened; 2. பாகம் செய்யப் படாதது, that which is uncooked or raw; 3. அசீரணம், indigestion; 4. கடலை, Bengal gram; 5. சீதம், mucous of the intestines; 6. துவரை, red gram; 7. பச்சை, that which is raw; 8. குடலின் சீதத்தைப் பற்றிய நோய், a disease connected with the mucous in the intestines — Dysentery; 9. சீதக் கட்டு அல்லது சீத வழும்பு, unassimilated chyle; 10. மல வரட்சி, the dry state of fecal matter in the intestines—Costiveness; 11. தண்ணீர் விட்டான், the water root—Asparagus racemosus; 12. காளான், fungus.

ஆமயம், பசுஞ் சாணி, cowdung; 2. நோய், disease or sickness; 3. ஓர் பூடி, a plant—Costus speciosus.

ஆமயன், நோயாளி, a sickly person; a patient.

ஆம யாவி, அசீரணத்தால் பீடிக்கப்பட்டவன், he who is suffering from indigestion; 2. குன்ம நோயாளி, a dyspeptic patient; 3. நோயாளி, patient in common.

ஆம யாவித்தவம், சௌியாத் தன்மை, the state of indigestion; 2. அசீரணம், indigestion.

ஆமர கோளம், ஆமர கோளா, } கடுக்காய்ப் பூ, chebulic Myrobalan galls; 2. காட்டுப் பசு, a wild cow. The term is incorrectly spelt for ஆமாகோளா.

ஆம ரசம், பக்குவப் படாத அன்ன ரசம், the imperfect chyle; unassimilated chyle.

ஆம ரட்சகி, சீதபேதி மருந்து, a particular remedy against dysentery.

ஆமாத்த பேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, a flux in which the stools consist chiefly of blood and mucous, accompanied with the griping of the bowels — Dysentery.

ஆமர பலம், எட்டிப் பழம், the ripe fruit of Strychnos nux-vomica; 2. நெல்லிக் கனி, the fruit of Indian gooseberry.

ஆமரம், எட்டி, nux vomica—Strychnos nux-vomica.

ஆமரிக பலம், நெல்லிக் கனி, the fruit of Indian gooseberry — Phyllanthus Emblica.

ஆமரிசம், நெல்லி மரம், Indian gooseberry tree—Phyllanthus emblica.

ஆமருகா, வெண்கொம்புப் பாகல், a white species of spiked bitter cucumber—Momordica charantia.

ஆமருப்பு, மாட்டுக் கொம்பு, cattle-horn; 2. பசுவின் கொம்பு, cow's horn,

ஆம ரோகம், சீதக் கட்டைப் பற்றிய நோய், a disease pertaining to the mucous of the intestines. See ஆமம்.

ஆமலகத் தைலம், நெல்லிக்காய்த் தைலம், இது தலை, மூளை, கண் முதலியவைகளுக்குக் குளிர்ச்சியைத் தருமெனக் கருதப்படும், a medicated oil prepared from the country gooseberry, considered cooling to the brain and the eyes.

ஆமலக பலம், நெல்லிக் காய், the fruit of country gooseberry.

NOTE.—This plays an important role in the Ayurvedic medicines and is one of the three Myrobalans (திரிபலை).

ஆமலக மலம், நெல்லி, see ஆமலக பலம்; 2. கொட்டைப் பாசி, the seedmoss — Sida humilis.

ஆமலகம், நெல்லி, country gooseberry—Phyllanthus emblica; 2. பளிங்கு, a crystal.

NOTE.—The other species of Phyllanthus are:—Pendulus (white nelly); polyphyllus (forest nelly); reticulatus (netted-nelly) and Urinaria (red niruri).

See நெல்லி.

ஆமலகி, நெல்லிக் காய், see ஆமலகம்.

ஆமலகை, நெல்லிக் கனி, see ஆமலக பலம்; 2. காய்ச்சலும், குளிருங் கூடிய வேளா விஷ நோய், a disease attended with fever and cold—Ague; 3. குளிர் சுரம், malarial fever.

ஆமலக்கி, see ஆமலகி.

ஆமலா காரம், வெண் கொய்யா, the white guava.

ஆமவல யரிசி, see ஆமலீ யரிசி.

ஆயல், மூங்கில், bamboo; 2. விஷ மூங்கில், the poison lily—Crinum asiaticum.

ஆம வடை, கடலைப் பருப்புடன், மசாலை வர்க்க மும் சேர்த்து எண்ணை அல்லது நெய்யிற் சுட்டுக் குழம்பிற் கொதிக்க வைத்துப் பக் குவப் படுத்திய வடை, the cake prepared out of Bengal gram mixed with other spices and fried in oil or ghee partially and then mixed in the sauce and boiled.

ஆம வாதம், அசீரணத்தினால் வாயு குடலில் சேர்ந்து மல பந்தமாகி வயிறுப்பு மோர் வகை வாத நோய், a disease arising from indigestion and marked by constipation, torpor of the bowels with flatulence and intumescence; 2. கீல்பிடிப்பு, arthritis; 3. கீல் வாதம், rheumatism.

ஆமவாத ரோகம், உணவு செரியாமையின் குற் றத்தினால், முழங்கால் கீல் முதலிய பெரிய கீல்களைச் சுற்றிக் கொண்டு தளமாயிருக்கும் சவ்விற்குத் தாபித மடைந்து காணு மோர் வகை வாத நோய். இது ரத்த தோஷத்தி னும் பல விடங்களிலும் வியாபிக்கும், இது தான் தமிழில் 'கீல்வாயு' எனப்படும், a constitutional disease marked by inflammation of the connective tissue or other structures of the body especially the muscles and the larger joints and pain. It is due to the deranged condition of blood in the system arising chiefly from indigestion.

2. மிதமீறிச் சாப்பிடுவதனாலும், மாமிசத் தை அதிகமாகப் புசித்தலினாலும், முழங்கால், முழங்கை, கணுக்கால் முதலிய பெரிய மூட் டுக்களில் வீக்கமும் வலியு மதிகரித்து, மூத்தி ரம் சிவந்து காணும். இது குளிர் சுரத் தோடு ஆரம்பிக்கும். சிலருக்கு மூட்டை விட்டு மற்றொரு மூட்டுக்கு மாறிமாறியு முண்டாகும்.

இதனால் இருதய கோசத்தின் தசை நார் கள் தாக்கப்படும். மேக சம்பந்தத்தினா லுண்டான தொண்டைப் புண்களி னின்று மிந்நோ யுண்டாகலாம். இது கர்ப்ப சம்பந்த மாகவு முண்டாகும், a form of rheumatism of uncertain causation attended with ague and fever, scanty and high-coloured urine containing a large amount of urea, and swelling of the joints, such as those of the knee, the elbow, the ankle etc. from exudation into their cavities and infiltration around them.

The symptoms pass from one joint to another, and recurrence is apt to take place. The inflammation may spread to other structures or organs, especially to the heart—Acute aricular rheumatism. This acute aricular rheumatism may also be associated with gonorrhoeal urethritis and ulceration of the throat —Gonorrhoeal rheumatism. It is also said to arise from congenital causes.

ஆமா, காட்டுப் பசு, wild ox or cow whose lick is supposed to cause death; 2. கடுக் காய்ப் பூ, chebulic myrobalan galls; 3. காட் டெருமை, wild buffalo — Bison; 4. நெல்லிக் காய், the fruit of Indian gooseberry; 5. பால் கொடுக்கும் தாய், a nurse engaged to suckle an infant—Wet-nurse.

ஆமா கோளா, கடுக்காய்ப் பூ, the excrescent galls of chebulic myrobalan.

See also ஆம கோளா, ஆமர கோளா.

ஆமாசயத் திரவம், இரைப்பையி லிருக்கும் உண வைக் கடைந்து குழம்பாகச் செய்யு மோர் வித காரமுள்ள நீர், cle ar fluid secreted in the stomach and the principal agent in digestion—Gastric juice.

ஆமாசயம், நாம் கொள்ளு முணவும் குடிக்கும் நீரும் போய்ச் சேருமிடமாகிய வறுப்பு, அ தாவது இரைப்பை, the membraneous sac or receptacle for food and drink immediately after deglutition *(swallowing)*—Stomach; 2. பீதக்கட்டுத் தங்கு மி டம், that portion of the intestines where the mucous is retained.

ஆமா சீரயம், செரியா வண்ணம் தங்கு மிடம் அதாவது வயிற்றின் மேற் பாகமுதல் தொப்புள் வரை, the receptacle for the undigested food i.e., the upper part of the belly as far as the navel.

ஆமா சீரணம், (ஆம + அசீரணம் mucous + indigestion) உணவு செரியாமையினால், முகத்தினும், உடம்பில், வயிறு முதலிய வி டங்களினும் வீக்க முண்டாகிச் சாப்பிடாத காலத்தும் சாப்பிட்டது போலேப்பம், வா யில் நீர்ப்பெருக்கு, வயிற்றில் குத்தல், வலி முதலிய வேதனைகளை யுண்டுபண்ணு மோர் வகைக் குன்ம நோய், a form of dyspepsia

arising chiefly from indigestion. It is accompanied with swelling of the face, stomach and other parts of the body and with pain in the abdomen. It is also marked by insalivation and belching even in empty stomach.

ஆமாதி, வெண் கொழுஞ்சி, a kind of white orange—Citrus auranteum (*nobilis*)

ஆமாதி சாரம், (ஆமம் + அதிசாரம், mucous + dysentery), செரியாமையினால் வயிற்றில் கோளாறு ஏற்பட்டுக் குடலி லிருக்கும் சீதக் கட்டு மலத்தோடு மிக்க வலியுடன் வெளி வரு மோர் வகைப் பேதி அதாவது சீதபேதி, இதைத்தான் தமிழில் 'வயிற் றுளைவு' என்று சொல்வதுண்டு, an acute dysentery brought about by the deranged Doshas in the abdomen coming in contact with the unassimilated chyle which is brought down into the bowels wherefrom it is ejected in combination with the undigested fecal matter in various ways and in various colours with acute pain; 2. மலத்தில் சீதங்கலந்து விழும் ஓர் வகைப் பேதி, diarrhoea marked by the presence of mucous in stools—Mucous diarrhoea. See ஆமபேதி.

NOTE —A case of diarrhoea is said to be in an acute state, if the stool is found to sink in water and to emit a very fetid smell and to pass in broken jets. When once it passes the acute stage it becomes chronic.

ஆமாத்தியர், ஆமாத்திரர், } வைத்தியர், physician, doctor.

ஆமாயம், see ஆமயம்.

ஆமா ரசம், உணவு செரிக்குங்கால் அதனின்று வரும் நீர்ச்சத்து, a liquid substance derived from food at the time of digestion.

ஆமா லசகம், வரம்பு கடந்து புசித்தலினால் உணவு செரியாமல் ஆமமாகிய சிலேட்டுமத்திற் சேர்ந்து வாந்தி, பேதி முதலிய தன் பங்கினை வினையிக்கு மோர் அசீரண நோய், the indigestion arising from excess of food which, by coming in contact with the lymph results in vomiting, purging etc.

ஆமாலச சோமாலை, மிக்க அயர்ச்சி, a drooping condition through fatigue.

ஆமான், காட்டுப்பசு, see ஆமா.

ஆமிசம், சாப்பாடு, உணவு, food; 2. மாமிசம், flesh, meat.

ஆமிர கந்தகம், ஓர் பூடு, a plant (*unidendified*).

ஆமிர க்ஷ்ல, கடல் நுரை, sea-froth.

ஆமிரகா, வெண் முள்ளி, prickly white nail-dye—Barleria buxifolia (*albiflora*) as opposed to செம்முள்ளி, red nail-dye —Barleria prionitis.

ஆமி ரசம், காரத்தை, the bitter orange — Citrus Aurantium-Bigaradia.

ஆமிரதம், see ஆமிரசம்; 2. ஆமிரம், which see.

ஆமிரம், மா மரம், the mango-tree—Mangifera indica; 2. புளிய மரம், the tamarind tree — Tamarindus indica; 3. புளிப்பு, sourness.

ஆமிர வர்த்தம், உறைந்த மாம்பழ ரசம், the inspissated mango juice.

ஆமிர வாடிகம், காட்டு மா, the hogplum — Spondias mangifera.

ஆமிலகா, இரும்பிலி, coromandel ebony — Ferriola buxifolia.

ஆமிலக் கபம், ஜீவாக்கினி சக்தி அதிகமாய்க் கப நீரில் சேர்வதனு லுண்டாகும் ஓர்வித புளிப்பும் கசப்புமான கபம், a phlegm sour and bitter to the taste, derived from the action of the animal heat on the bronchial mucous.

ஆமிலதி யுவித ரோகம், பித்த ரத்தம் முதலிய வாதாதி தோஷங்கள், அசீர்ண வஸ்துக்களோடு கூட்டிப் புசிக்கப்பட்ட அன்ன சாரங்களை வயிற்றுக்குள் புளிக்க வைத்து, அந்த நீரைக் கண்களுக்கு ஆதாரமா யிருக்கின்ற நரம்புகளின் துவாரங்களின் வழியாகக் கண்களிற் செலுத்தி நிரப்பும்போ தண்டாகு மோர்வகைக் கண்ணோய். இதனால் கண்கள் கறுத்து, சிவந்து, எரிச்சலுடன் மாறுதி நீரொழுகிக் கண் கலங்கிப் பார்வை கெடும், an eye disease arising from a collection of morbid fluid carried through the optic nerve into the eyes by the deranged condition of Doshas, as a result of acid reaction in the stomach due to the partaking of meals composed of an unduly large proportion of articles of food not easily digestible. It is marked by a bluish tint all round the eyes, burning sensation, congestion followed

by an abnormal overflow of tears (*epiphora*) and affection of the eye-sight etc.

ஆமிலத் தாதிகம், வெண் துத்தி, Indian marsh mallow—Sida Cordifolia.

ஆமில பித்தம், மஞ்சளைக் கரைத்தாற் போல் புளித்த வாந்தி, சூலை, அக்கினிமந்தம், கடுக்கம், இருமல், தாகம், பலவீனம், வியர்வை, தூக்க மின்மை முதலிய குணங்களைக் காட்டு மோர்வை-ப் பித்த நோய், a bilious disease characterised by yellow sour vomit, colicky pain, dullness of appetite, tremor, cough, thirst, weakness, perspiration, sleeplessness etc—Acidity of the stomach; 2. புளித்தேப்பம், sour-belching.

ஆமிலம், புளிப்பு, sourness, acidity; 2. புளிய மரம், tamarind tree — Tamarindus indicus.

ஆமில வனிதம், புளிப் பிண்டி, Brasiletto climber—Pterolobium indicum.

ஆமில விதத்தம், அதிகப் புளிப்புள்ள பண்டங்களை உண்பதனாற் கண்களில் தினவு, வீக்கம் முதலிய குணங்களைக் காட்டு மோர் வகைக் கண்ணோய், a disease of the eye attended with itching sensation and swelling of the eyes. It is due to taking of substances excessively sour.

ஆமிலிகா, புளியாரை, see ஆமிலை.

ஆமிலிகை, புளிப்பு, acidity, sourness; 2. புளியமரம், tamarind tree. See ஆமிலம்.

ஆமிலை, புளியாரை, Indian sorrel, yellow-wood-sorrel—Oxalis corniculata.

ஆமி லோசிதம், see ஆமிலதி யுஷித ரோகம்.

ஆமி வர்த்தம், உறைந்த மாம்பழ ரசம், inspissated mango juice.

ஆமுத்து, பசுவின் பல்லில் பிறப்பதாகச் சொல்லும் முத்து, a pearl-like substance said to be derived from the teeth of a cow.

NOTE.—It is said that pearl-like substances are also derived from bamboo, sugar-cane, elephant's tusks, etc.

ஆமூலாக் கிரம், வேர் முதல் இனை வரை, from the root up to the branch; 2. சமூலம், the entire plant or tree.

ஆமேற் புல்லூரி, கோரோசனை, bright yellow concretion obtained from the bile duct of cattle; 2. கடுக்காய்ப் பூ, the flower of

gall, which is an excrescence found on the leaf.

ஆமை, மேலே ஓடு பொருந்தியுள்ள வோர் வகை நீர் வாழ்ப் பிராணி. நீர் வற்றிய காலத்து இது மணலில் புதைந்து கிடக்கும். இது பலவிதம், அவையாவன, அடியில் வருமாறு, a kind of reptile covered with a spherical shell from which the head and legs protrude. Tortoise — Testudo gracca. When water dries up they bury themselves deep in the sand or mud.

The different kinds of this species are:—

1. நிலத்தாமை, land tortoise — Testudinidae.
2. நீராமை, water tortoise — Emididae.
3. கடலாமை, sea tortoise or marine turtle—Trionycidae.
4. பறையாமை, black tortoise—Batagur ellitti. It is a fresh water tortoise of the Coromandel coast.

ஆமை, வாசனை, smell; 2. ஓர் நோய், a disease.

ஆமைக் கட்டி, இதுவே ஆமக் கட்டி, சுரத்திற்குத் தகுந்தபடி சிகிச்சை செய்யாது அது அடிக்கடி வரும்படி ஏற்படுவதனால் மண்ணீரல் சுரந்து கட்டியைப் போலத் தோற்றுவிக்கு மோர்வகை வீக்கம். இதைக் 'காய்ச்சற் கட்டி' என்றும் சொல்வதுண்டு. இது நாளடைவில் யாதொரு வலியும் தோன்றுமலே பருத்தக், கடைசியாகக் கனத்தும், இடது பக்கம் மந்தமான வலியையும் உண்டாக்கும்.

இது குழந்தைகளுக்குச் சிலசமயம் வயிற்றின் பாதி பளவுக்குப் பருத்து, சூணம் வயிறு ஏற்படக் காரணமாகும், the enlargement of the spleen which is the result of repeated attacks of acute congestion—Chronic congestion; it is also known as 'Ague cake.'

It comes on so gradually and painlessly, that it is long left unattended to, until at length the enlarged organ excites fullness, weight and dull pain in the left side.

Sometimes it is so protuberant that if fills up half the cavity of the abdomen developing in children a condition known as 'pot-belly'.

ஆமைச் சுரம், சிறு பிள்ளைகளுக்கு ஆமைக் கட்டியினல் வரு மோர்வகைச் சுரம், a fever common in children due to the enlargement of the spleen—Recurrent fever; Relapsing fever. c. f, ஆம சுரம்.

ஆமைச் சூலை, அசீரணத்தால் நாபியை யுளைத்தூளைத்து நடு நரம்பு புண்போல் வலித்துப் புளித் தேப்பம், கா வரட்சி, உடம்பு வ.பி, உடம்பு வெளுப்பு முதலிய குணங்களோடு கூடிய வோர்வகைச் சூலை நோய், a disease arising from intestinal indigestion. It is marked by griping pain in the navel region, sour belch, dryness of the tongue, bodily pain and bloodlessness — Sabbural colic. See ஆமசூலை.

ஆமை நண்டு, ஆமையைப் போன்ற வோர் வகைக் கடல் நண்டு. இது அலை மோதும் கடற்கரை யோரத்தி லுள்ளது. இது மஞ்சளாயும், இதன் முட்கள் சிவப்பாயுமிருக்கும், a sea-crab resembling a turtle, found on the sea-shore frequented by waves. It is yellow in colour with red spikes.

ஆமை நெய், ஆமைக் கொழுப்பினின்று காய்ச்சி எடுக்கும் நெய், the oil extracted from the fat of turtles—Turtle fat.

ஆமை மடி, பால் நிரம்பச் சுரக்கும் சிறுமடி, the close udder yeilding much milk.

ஆமை முதுகோடு, see ஆமை யோடு.

ஆமை யடி, ஓர் வ்ரண நோய், an ulcer resembling the foot of a turtle.

ஆமை யடிச் சிலந்தி வாவல, ஓர்வகைச் சிலந்தி, a syphilitic ulcer resembling the impression left by a turtle foot.

ஆமை யோடு, ஆமை முதுகோடு, the shell of a tortoise. It is procured from the species of sea-tortoise called Caret – Testudo imbricata.

ஆமை யோட்டுக் கட்டி, குழி விழுந்து ஆருமல் ஆமை யோட்டைக் கவிழ்த்ததுபோ லிருக்கு மோர் பெரும் புண் கட்டி, a large chronic inflammatory swelling with a hollow or incurved sore; 2. உடம்பின் எப்பாகத்திலாவது ஐந்தாறு கட்டிகள் ஆமையோட்டைப் போலெழும்பிக் காணும், இது சிலேட்டும வாயுவினுல் பிறக்கும், a group of 5 or 6 elevated, nodular eruptions, arranged in the shape of tortoise shells. They may appear on the surface of any part of the body. They are due to the deranged Kapam and Vayu; 3. சீரழிவினும் காணுமோர் வித மினுமினுப்புள்ள ஆறுத கட்டி, a chronic abscess with glossy surface affecting weak and debilitated persons suffering from diabetes. It is so called from its leaving an irregular incurved cavity like a turtle-shell.

ஆமை யோட்டுச் சத்தி, ஆமை யோட்டி னின்று தயாரித்துச் சாலவித்தையி னுபயோகிக்கு மோர் பொடி மருந்து, a magic powder prepared out of turtle-shell.

ஆமை யோட்டு பற்பம், ஆமை யோட்டினுல் தயாரித்த பற்பம், a white calcined powder prepared out of turtle shell.

ஆமை வயிறு ஆமை யோட்டைப் போன்ற வயிறு, belly resembling a turtle-shell in shape indicative of some disease; 2. ஓர் நோய், a disease.

ஆமோதம், மகிழ்ச்சி, joy, pleasure; 2. மிகுந்த வாசனை, good or strong fragrance, or perfume.

ஆமோற் பத்தி, அன்னரச முண்டாகும் வழி, the formation of chyle—Chylification or Chylifaction.

ஆம், சாரம், moisture; 2. நீர், water; 3. அழகு, beauty; 4. கடுகு mustard; 5. வெக்நீர், hot water; 6. சிறு கீரை, a kind of greens, which see; 7. வெள்ளரி, cucumber; 8. ஓர் மந்திர வெழுத்து, a mystic letter.

"ஆமெனவே அகண்டவெளி யிருளாய்த் தோன்றி
அணுஅணுவாய் அப்பாலுக் கப்பாலாகி"
(திருவள்ளு நாதாந்த சாரம். 1000)

ஆம்பரீய காந்தகம், மின்சாரக் காந்தகம், magnetism produced by an Electric current—Electro magnetism.

ஆம்பரீயக் கவர்ச்சி, மின்சாரக் கவர்ச்சி, the electrical attraction, electric-affinity.

ஆம்பரீய பௌத்திகம், மின்சார பௌதிகம், the study of chemical changes produced by electric action—Electro-chemistry.

ஆம்பரீயம், மின்சாரம், electricity.

ஆம்பர், அம்பர் மரத்தி லிருந்து எடுக்கு மோர் மஞ்சட் குங்கிலியம், a yellow resin from a tree; amber. See also அம்பர்; 2. ஆம்பல், which see.

ஆம்பலரி, முதலை, crocodile.

ஆம்பலா, புளியாரை, yellow wood-sorrel — Oxalis corniculata ; 2. தாமரை, lotus.

ஆம்பலாம், புளிய மரம், the tarmarind tree —Tamarindus indica.

ஆம்பலி, வெண் பச்சைக் கடலை, the greenish-white Bengal gram—Cicer arietinum.

ஆம்பல், அல்லி, water-lily — Nymphaea lotus 2. சந்திரன், the moon; 3. மூங்கில், bamboo; 4. யானை, elephant; 5. துன்பம், affliction ; 6. நெல்லி, Indian gooseberry — Phyllanthus emblica ; 7. புளியாரை, yellow wood-sorrel — Oxalis corniculata ; 8. கள், toddy.

ஆம்பல் சக்களத்தி, ஆம்பலைப் போன்ற வோர் பூடு, a plant resembling Nymphae lotus.

ஆம்பவம், வெள்ளீண்டு, soap-bark tree — Acacia intsia.

ஆம்பழம், see ஆம்பலம்.

ஆம்பற் கிழங்கு, அல்லிக் கிழங்கு, which see.

ஆம்பற் குழாய், மூங்கிற் குழாய், a bamboo pipe.

ஆம்பாரிகம், வெண் வாடாமல்லிகை, a white variety of Amaranthus — Gomphrena globosa.

ஆம்பாரை, புளியாரை, see ஆம்பலா.

ஆம்பி, காளான், mushroom—Fungus; 2. குடைக் காளான், the common mushroom resembling an umbrella — Dog-umbrella.

ஆம்பியம், இரசம், mercury.

ஆம்பிரகம், வெள்ளைத் தூதுவளை, the white-flowered climbing prickly nightshade—Solanum trilobatum (*albiflora*).

ஆம்பிர மூலகம், வெட்டி வேர்; a fragrant root commonly called khus khus; Indian spikenard—Andropogon aromaticus alias A. muricatus.

ஆம்பிரம், புளிப்பு, sourness; 2. புளிமா, Indian hog-plum—Spondias mangifera; 3. மா மரம், mango tree—Mangifera indica; 4. காளான், mushroom.

ஆம்பிலங் கனி, புளியம் பழம், the tarmarind fruit.

ஆம்பிலம், கள், toddy; 2. சூரைச் செடி, a shrub—Zizyphus napeca alias Z. glabrata. See ஆம்பிரம்.

ஆம்பிலா வாரை, புளியாரை, see ஆம்பலா.

ஆம்பிலி, புளி, tamarind.

ஆம்பில் வடை, see ஆமை வடை.

ஆம்பு, காஞ்சொறி, climbing nettle—Tragia involucrata.

ஆம்புகு, சூரை, see ஆம்பிலம்.

ஆம்புயம், இரசம், mercury.

ஆம்புலம், சூரை, oblique-leaved jujube — Zizyphus napeca ; 2. குதிரை, horse.

ஆம்புலி, காஞ்சொறி, see ஆம்பு.

ஆம்பு லோசிதம், வெள்ளை உகா, tooth brush tree of the white species — Salvadora persica (*alba*).

ஆம்பூசி, ஆலில் புங்கு, which see.

ஆம்பூறு, சூரை, see ஆம்புலம்.

ஆம்மிரம், ஒரு பலம், the standard weight of one palam.

ஆம்மிலம், see ஆமிலம்.

ஆம்மிலை, புளியாரை, see ஆம்பலா.

ஆம்ராதகப் பட்டை, ஆயுள் வேதத்திற் சொல்லியுள்ள ஓர் மூலிகை, a herb described in Ayurveda.

ஆம்ல பித்தம், உண்ணும் பண்டங்கள் சரியாமல் புளித்துக் கெடுதி யடைந்து அதனால் வாயு மேல் கோக்கி வரும் ஏப்பம், sour-belching arising from the acidity of the stomach due to indigestion. See ஆமில பித்தம்.

ஆய, ஆச்சா மரம், the ebony tree — Diospyros ebenaster.

ஆயக்க சுரம், முறை சுரம், alternative fever.

ஆயக் கல், காரக் கல், a kind of caustic stone or mineral.

ஆயசம், இரும்பு, iron—Ferrus.

ஆயசூரி, கடுகு, mustard — Sinapis niger.

ஆயத்துக் கருத்தன், அஞ்சன பாஷாணம், a kind of arsenic.

ஆயப் பாலை, கொடிப் பாலை, a green wax-flower—Dregea volubilis, 2. கால்வகைப் பாலை யுள்ளொன்று, one of the 4 classes of பாலை, which see.

ஆய மலர், தாமரை, the lotus.

ஆய மானம், உயிர் நிலை, the vital part.

ஆயம், வருத்தம், suffering, affliction ; 2. 34 அங்குல முள்ள குழி, a pit, 34 inches deep; 3. மேகம், cloud.

ஆயனம், ஓர்வகை நெல், a kind of paddy ; 2. வருடம், year,

ஆயா, காஞ்சி. இது இலைகள் அடர்த்தியா யுள்ள ஒரு பெரிய மரம். இவ்விலைகளை வதக்கிக் கட்டிக்கு வைத்துக் கட்ட உபயோகப்படும். இதன் விதையினின்று எண்ணெய் எடுக்கப் படும், South Indian Jungle cork-tree—Holoptelea integrifolia alias Elmus integrifolia. It is a large tree with dense dark-green foliage. Bruised leaves are applied to boils and an oil is expressed from the seeds; 2. நோயாளித் துணைவர், a person attending on patients—Nurse.

ஆயாச மூர்ச்சை, களைப்பினு லேற்படும் அறிவு மயக்கம், delusion arising from fatigue.

ஆயாசம், களைப்பு, fatigue; weariness; 2. மனவருத்தம், mental worry; 3. துக்கம், distress.

ஆயாச வர்த்தம், களைப்பை யுண்டாக்கிச் சுழலும் படிச் செய்தல், causing one to reel through distress of mind.

ஆயாச வர்த்த வாதம், அளவு கடந்து புரித்தலால் பித்தமும் கபம் கோளாறடைந்து, சுத்த தாதுக்களிலும் சேர்ந்து, ஆயாசம், பிரமை, உடம்பு வலி முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் வாத நோய், rheumatism characterised by fatigue, perplexity, bodily pain etc. It is due to the deranged bile and phlegm spreading through the seven constituents of the body.

NOTE.—The seven constituents are:—Serum, blood, semen, brains or marrow flesh or muscles, bone and skin (including nerves.)

ஆயாமம், மூச்சு அடக்குதல், suppressing the breath, as in Yoga practice; scientific breathing.

ஆயானம், இயற்கைக் குணம், the natural disposition.

ஆயி, ஆத்தாள், mother; 2. சத்தி, the godess of the Universal energy; 3. காஞ்சி, see ஆயா.

ஆயி நாதம், செப்பு செந்தி, the red sulphide.

ஆயிரக் காலி, துடைப்பம், broom-stick; 2. மரவட்டை, millepede; 3. செவ் வட்டை, a red variety of myriapod.

ஆயிரக் குண்டலி, செவ் வட்டை, the wood-louse.

ஆயிரங் கச்சி, அடிக் கனி நீர், a variety of cocoanut.

ஆயிரங் கண்ணி, பலாப் பழம், jack-fruit.

ஆயிரங் கதிரோன், சூரியன், the sun.

ஆயிரங் காய்ச்சி, அதிகமாகக் காய்க்குந் தென்னை, பலா, முதலிய மரங்கள், fruitful trees, said of a cocoanut tree, jack tree etc.

ஆயிரப் பணைமுடி, நாகமலை, the mountain containing zinc ore.

ஆயிரவருட மண்டூரம், ஆயிர வருடம் சென்ற யிரும்புக் கிட்டம், the hydrated oxide of iron of 1000 years old.

ஆயிர வாண்டு வேம்பு, 1000 வருடஞ் சென்ற வேப்ப மரம், இதன் பட்டை இனிக்கும், margosa tree of 1000 years old. The bark of this tree is said to be sweet.

ஆயிலாகியம், வெண் மிளகு, white pepper—Piper nigrum.

ஆயிலி, see ஆயா.

ஆயிலி யங்கு, மூஞ்சுறு, shrew-mouse—Crocidura caerubescens.

ஆயிலியப் பட்டை, நாகமரத்துப் பட்டை, the bark of jambolin tree.

See ஆயிலிய மரம்.

ஆயிலிய மரம், நாக மரம், common black plum; jambolin—Eugenia Jambolana.

ஆயிலியம், see ஆயிலிய மரம்.

ஆயில், மதகரி வேம்பு, Chittagong wood — Chukrassia tabularis; 2. செவ்வகில், red cedar or Indian Mahogany — Cedrela toona; 3. காஞ்சி, jungle cork-tree—Holopetela integrifolia.

ஆயினி, ஈரப்பலா, bread-fruit tree — Artocarpus incisa alias A. lakoocha; 2. காட்டுப் பலா, jungle jack—Artocarpus hirsuta alias A. pubescens.

ஆயினிட நாதம், பொன்னிமினை, the iron pyrites occurring in dark yellow nodules with a golden lustre.

ஆயினிமேற் புல்லுருவி, ஈரப் பலாவின் மேல் முளைத்திருக்கும் புல்லுருவி, a parasite plant found grown on bread-fruit tree.

ஆயினி மேனி, ஆயின் மேனி, } பச்சைக் கல், a sort of green sapphire, altogether different from occidental emerald.

ஆயு, ஆயுள், lifetime; natural span of life 2. ஜைன தூலின்படி எட்டுவகைக் குற்றங்களுள் ஒன்று அதாவது கர்மானு சாரத்தின் படி வரை யறுக்கப்பட்ட வாழ் நாள், (*In Jain philosophy*) the duration or period, as determined by Karma worked out

by one in a particular form endowed by another of his Karma.

ஆயுகம், see ஆயுசு.

ஆயுசு, வாழ் நாள், சரீரம், மனம், ஆத்துமா, இந்திரியம், முதலிய வகைகளுக்கே 'ஆயுசு' என்ற சொல் உபயோகப்படும் என்பது சரகர் கொள்கை, அதாவது உயிர் பெற்ற உடம்பின் தோற்றத்திற்கு யாதொரு விகற்பமு மேற்படாமலே, அவ்வுடம்பின் அணுப்பிரதிருதி மாத்திரம் தோன்றியும் அழிந்தும் மாறுதலையடையப் பெற்ற காலத்தின் தொடர்ச்சி, the natural span of life. It is the continuous adjustment of molecules, their successive breaking down and building up of an organised living body, without destroying its identity.

According to Charaka, it is a period of time representing the whole or part of the duration of ones life-time, body, mind, soul and the senses taken collectively.

ஆயுசு கிண்ணி, 16 பலம் நிறையுள்ள செம்புக் கிண்ணியில் பசுவின் நெய்யிட்டு அதனின்று மனிதருடைய ஆயுளைச் சோதித்து நிர்ணயிக்கும் ஓர்வகைப் பாத்திரம், a basin-like vessel specially constructed or made of 16 palams of copper and used for determining the age of a particular person by examining his reflection or image seen in the cow's ghee contained in that vessel.

ஆயுசு விருத்தி, உலோக மணல், iron ore; 2. நீண்டகாலம் உயிர்பிழைத் திருத்தல், long life; longevity.

ஆயுஷ்யம், வாழ்நாள், the duration of life.

ஆயுதச் சிகிச்சை, கத்தி முதலிய கருவிகளினால் அறுத்துக் குணப்படுத்தல், a surgical operation to which the human body is subjected, for curing diseases; surgical treatment.

ஆயுதப் பயிற்சி, கத்தி முதலிய கருவிகளைக் கொண்டு அறுப்பதற் குண்டான பழக்கம், a practice in surgery.

ஆயுதப் பரிட்சை, ஆயுதப் பிரயோகத்தினால் புண் புரையைப் பரிசோதித்தல், examination of a wound cavity by a probe.

ஆயுதப் பிரசவம், யோனிக்குள் ஆயுதப் பிரயோகம் செய்து குழந்தையை வெளிப்படுத்தல், child-birth facilitated by the use of instruments such as, forceps etc.

ஆயுதப் பிரயோகம், கத்தி முதலிய கருவிகளை உடம்பிற்குள் செலுத்தல், the operative branch of medical practice—Surgery.

ஆயுத மிழக்கு மலை, இரும்பு மலை, mountain containing iron ore.

ஆயுதம், சத்திரம் செய்யும் கருவி. இது மயிரையும் இரு பிளப்பாகச் செய்யத் தகுந்த படிக் கூர்மையாகவும், பிடி சரிவர அமைந்ததாகவு மிருக்க வேண்டும், the surgical instrument well-shaped, well-ground and fitted with a convenient handle. It should be capable of cutting or splitting a hair into two laterally; 2. வேலமரம், a tree of the acacia genus — Acacia arabica.

ஆயுத விஷம், ஆயுதப் பிரயோகத்தினால் உடம்பிலேற்பட்ட விஷம், a poison set in the system by operation.

ஆயுரு, பரிகார வித்தை, the art of healing.

ஆயுரு வேதம், see ஆயுள் வேதம்.

ஆயுரு வேதர், ஆயுரு வேதியர், } வடதேசத்து ஆரிய வைத்தியர், an Aryan physician of the North; 2. வடமொழியிற் சொல்லியுள்ள ஆயுள்வேத வைத்திய முறையிற் பழக்கப் பட்ட வைத்தியன், a physician who is well versed in the practice of Ayurvedic medicine written in Sanscrit; 3. நோய் தீர்ப்போன், he who cures diseases.

ஆயுரு வேதாக்கினி, மருந்து செய்வதற்குத் தக்கபடி ஆயுள்வேதத்திற் சொல்லிய மூன்று விதநெருப்பு, the three kinds of fire, according to Ayurveda, used in preparing medicines. See மந்தி and அக்கினி.

ஆயுர் வர்த்தனை, வாழ்நாள் விருத்தி, longevity; 2. தீர்க்காயுசு, long life.

ஆயுர் வேதம், ஆயுள் வேதம், the Aryan system of medicine and it is so called because it enables a man to attain longevity.

ஆயுர் வேதாக்கினி, மருந்து செய்யும் பொழுதுண்டாக்கும் நீ. இது ஒவ்வொரு முறையினும், போடும் நெருப்பிற்குத் தக்கபடி, வேறுபடும், the heat evolved during the preparation of Ayurvedic medicines. This varies according to the application of heat in each process.

ஆயுர் வேதிகம், வைத்தியப் பழக்கம், being acquainted or familiar with medical sciences; practice in Ayurveda.

See ஆயுரு வேதாக்கினி.

ஆயுர் வேதியர், see ஆயுரு வேதியர்.

ஆயுள், நோய் தீர்ப்போன், one who cures diseases ; 2. வாழ் நாள், lifetime or duration of life; 3. ஆ + உள் அதாவது பசுவாகிய உயிரிருந்து வாழும் வீடாகிய உடம்பு, referring to the body, the abode of the soul.

ஆயுள் கிரமம், வாதபித்த சிலேட்டு மத்தைக் கருதி வாழ்நாளைப் பிரித்த முறைமை, the order in which the age is classified according to the three humours (*Doshas*) in the system. It is enumerated in detail in the following stanza:—

" தானவனும் அமைத்தபடி வயது நூறு
சகலருக்கும் இளமையிலே சிலேத்துமமாகும்
ஆனகடு வயதபித்தம் அப்பால் வாதம்
ஆதரஞ்சி மூவாண்டு மாதம் நாள்கு
ஈனமற மூவருமே மூன்று பங்காய்
இப்படியே கடந்தகொன்வார் இறையோன்முன்னுன்
எனமுற வமைத்தவன்னம் ஆண்டு மாதம்
இயைவான நான்கன்தப்பி மதிப்பதாமே "

(வைத்திய. சதகம்.)

ஆயுள் நூல், உயிரிருந்து வாழும் உடம்பு என்னும் பொருள் கொண்டு அவ் வுடம்பைக் காப்பாற்றி உயிரை நிலைபெறச் செய்யும் மருந்துகளைக் கூறுகின்ற நூல் எனப் பொருந்தும், that branch of science dealing with medicines as are useful for the preservation of life; 2. வாழ்நாளைப் பற்றிக் கூறும் நூல், a treatise on age, the duration of life and death of human beings.

ஆயுள் விருத்தி, வயது நீடித்தல், the prolongation of life—Longevity.

ஆயுள் வேத சம்மிதை, அக்கினிவேசரால் இயற்றப்பட்ட ஓர் வடமொழி வைத்திய நூல், an Ayurvedic science written in Sanskrit by Agnivesa.

ஆயுள் வேத நூல், நோயணுகா வண்ணம் வாழும் முறையும், நோய் ஏற்படின் குணப்படுத்தும் வித்தமும், உடம்பின்கண் ணுயிரை நிலைப் பெறச்செய்து, ஆயுளைக் காப்பாற்றும் முறையும் கூறுமோர் வடமொழி வைத்திய நூல். இது அதர்வண வேதத்தி னேர் பகுதியாகக் கூறப்படும், the Ayurveda. It contains instructions how to live so as to prevent the occurrence of sickness and how to cure it, if illness arose. It forms a part of Adarvana Veda written in Sanskrit; 2. (*literally*) வாழ் நாளை நிர்ணயிக்கும் நூல், that branch of science which deals about the life-history of man and determines his age — Anthropobiology.

NOTES--Strictly speaking the term denotes either a science in the knowledge of which the life exists, or which helps a man to enjoy a longer duration of life.

ஆயுள் வேதம், இது ஆதிகாலத்திய வோர் வைத்தியக் நிரந்தம் பிரமாவானவர் தட்சப் பிரமாவுக் குபதேசித்ததாகச் சொல்லு மோர் வைத்திய நூல். இதில் சாரீரம், நிதானம், ஓஷதி, ஔபாகம், ஔஷத கல்பம், சிகிச்சா ஔதி, யெனப் பல வகுப்புக ளடங்கி யுள்ளன, an ancient inspired Sanskrit medical work. The authorship of the Ayurveda is ascribed to Brahma who is said to have imparted this knowledge to Daksha, one of the progenitors of mankind. It consists of several parts, such as, Physiology, Pathology, Materia Medica, Pharmacy etc.

NOTE.—From the writings of Charaka aud Susruta and their commentators, it is learnt that the Ayur Veda originally consisted of 100 sections, each a 1000, stanzas making up a lakh (100,000,) of verses arranged into 8 books viz.—

1. சல்லியம், the art of extracting extraneous substances forced into the human frame.
2. சாலாக்கியம், the art of curing external organic affections, such as, diseases of the ears, eyes, etc.
3. காயா சிகிச்சை, the art of application of healing to body in general.
4. பூத வைத்தியம், the art of restoration of faculties from a deranged state, due to demonaical possession.
5. கௌமார பிரித்தியம், care of infants, and treatment of puerperal disorders in mothers and nurses.
6. அகதம், the art of administering antidotes to poisons.
7. இரசாயனம், chemistry or alchemy.
8. வாஜீ காரணம், increase of the human race.

All the recent medical works on Ayur-Veda are based on the works of Charaka and Susruta.

Susruta re-arranged the said books of Ayur Veda into six chapters, viz— Surgery, Nosology, Anatomy, Therapeutics Toxicology and local diseases.

ஆயுள்வே தாராய்ச்சி, ஆயுள்வேதத்திற் சொல்லியுள்ள விஷயங்களைப் பரிசோதித்தல், the research of Ayurvedic science.

ஆயுள் வேதியர், வைத்தியர், physician ; medical practitioner.

ஆய், ஆச்சா மரம், a tree—Diospyros ebenaster ; 2. சய ரோகம், consumption 3. மலம், excrement ; 4. அழகு, beauty; 5. வருத்தம், pain, suffering ; 6. கொய்தல், to pluck ; 7. காம்பு கிள்ளுதல், to nip off pedicles, as is done in herbs ; 8. நுண்மை, fineness.

ஆய்க்கல், ஓர் விஷக்கல், a kind of caustic stone.

ஆய்ச் சாலிகம், வெண் மிளகாய், the white chilly — Capsicum frutescens alias C. minimum.

ஆய்ச் சூரி, வெண் கடுகு, the white mustard —Brassica alba.

ஆய்ச் சூரிகம், see ஆய்ச் சூரி.

ஆய்ச் சேவகம், வெள்ளெருக்கு, the white-flowered Giant Swallow-wort — Calotropis gigantea, (*albiflora*).

ஆய்ந்த கீரை, காம்பு கிள்ளிந்த கீரை, the leaves from which the stems or the pedicles are nipped off.

ஆய்ந்தயர் காஞ்சி, ஆய்ந்தயர் காவி, } கற்காவி, (stone + ochre) red ochre which contains much oxide of iron.

ஆய் மலர், அழகிய மலர் அதாவது தாமரை, the lotus flower — Nelumbium speciosum ; 2. காம்பு கிள்ளிந்த மலர், the flower from which the pedicle is nipped off.

ஆய்மா, சாரப் பருப்பு, Piyar, which see ; 2. ஆவிமா, Carey's myrtle bloom — Careya arborea.

ஆய் மாலிகம், வெண் கடுக்காய், a white species of gall-nut or white Myrobalan of Cudappah—Terminalia pallida.

ஆய்வு, ஆராய்ச்சி, research ; 2. வருத்தம், distress, suffering ; 3. நுட்பம், minuteness; 4. அழகு, beauty.

ஆய்வை, தூங்கு மிடம், the sleeping place.

ஆர, மிக, fully, as in வயிறார, bellyful.

ஆரகந்தி, திப்பிலி, the long-pepper — Piper longum.

ஆரகம், இரத்தம், blood ; 2. சந்தனம், sandalwood.

ஆர குவதம், கொன்றை, common cassia — Cassia fistula.

ஆர கூடம், ஆர கூலம், } பித்தளை, brass; 2. செம்பு, copper.

ஆரகே, see ஆர கந்தி.

ஆர கேயூரம், வெள்ளை முண் முருங்கை, the white-flowered coral tree — Erythrina albiflora.

ஆர கோதம், சரக் கொன்றை, the purging cassia—Cassia fistula.

ஆர கோரம், கொன்றை, common cassia — Cassia fistula.

ஆரக்க மாதிகம், வெண் டாமரை, the white lotus—Nelumbium speciosum.

ஆரக்கம், அகில், which see ; 2. சந்தனக் கட்டை, sandalwood — Santalum album ; 3. செஞ் சந்தனம், the red sandal—Pterocarpus santalinus ; 4. பித்தளை, brass.

ஆரக் குவதம், கொன்றை, see ஆரகுவதம் and ஆரகோதம்.

ஆரக் கூவகம், வெள்ளை நீர் முள்ளி, white long-flowered nail dye—Barleria longiflora.

ஆரங்கம் பாக்கு, துண்டு துண்டாக வெட்டி வேகவைத்த பாக்கு, areca-nut sliced and boiled. It is rendered superior by being kept in godowns.

ஆரசகம், அகில், which see.

ஆரஞ்சாகி, வெண் பசளை, a white species of Portulaca or Indian spinach.

ஆரஞ்சு, கிச்சிலி, orange.

ஆரணம், ஆயுள் வேதம், which see.

ஆரணி கஞ்சா, வறட் கஞ்சா. இது பூர்வத்தில் ஆரணியில் பயிராகி வந்ததா லிதற் கிப் பெயர். இதைப் பிடிப்பதனல் உடம்பிற்குக் கெடுதி யுண்டாகு மென்று கருதி யோகிகளால் நீக்கப்பட்டது, a kind of Gunjah grown originally in Arani and as it was considered injurious to the health of the smokers, it was condemned by the Yogis.

ஆரணிய சதா மூலி, மூக்கத்தாரி, which see.

ஆரதக் கறி, மரக் கறி, the vegetable curry.

ஆரதம், மாமிச மல்லாத சுத்த போசனம். இதை 'சைவச் சாப்பாடு' என்று சொல்வது உண்டு, the pure vegetarian meal without meat ; 2. சுத்தசைவம், vegetarianism.

ஆரதி கர்ப்பூரம், கோவிலில் கொளுத்தும் ஓர் வகைக் கர்ப்பூரம், a kind of camphor used as a burning incense in temples.

ஆரத்தம், அத்தி, fig tree — Ficus racemosa alias F. glomerata.

ஆரத்திக் கருப்பூரம், சாதாரண கருப்பூரம், ordinary camphor. See ஆரதிக் கர்ப்பூரம்.

ஆரத் திரகம், இஞ்சி, ginger—Zingiber officinale.

ஆரத்திரா சகம், see ஆரத்திரகம்.

ஆரத் தோதிகம், வெண் ணடுக்கலரி அதாவது வெள்ளை இரட்டை யலரி, a species of white double-flowered oleander—Nerium (*flore pleno alba*).

ஆர நாலகம், காடி. இது மதுரமான பழம், அரிசி, சர்க்கரை, முதலியவைகளி னின் றெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் எதினின்று எடுக்கப் பட்டதோ வப்பெயரிட்டே அழைக்கப்படும். (உ.ம். திராட்சரசக் காடி, அரிசிக்காடி முதலியன), vinegar. It is an impure acetic acid made by the acetuous fermentation of sweet fruits, rice, sugar, etc and each kind of vinegar is named after the substance from which it is derived. See காடி.

ஆர நாலரம், see ஆர நாலகம்.

ஆரநாளத் தைலம், காடிச் சலம், the fermented liquid; vinegar made from sour gruel.

இராச சயம், அதிவிரைவாகப் பற்றும் சயநோய், a kind of phthisis which runs an exceptionally rapid course—Galloping consumption.

இராச சாரம், மயில், peacock—Pavo cristatus.

இராச சாரசம், see இராச சாரம்.

இராச சுயம், தாமரை, lotus — Nelumbium speciosum; 2. மலை, mountain.

இராச தந்தம், முன்வாய்ப் பல், royal teeth. It is a name applied to the two front canine teeth; 2. முன்வாய் மேற்பல், the two upper canine teeth called the eye-teeth.

இராச தரு, குரு, bottle-flower — Webera corymbosa.

இராச தாலம், இராச தாலி, } பாக்கு மரம், areca-nut tree—Areca catechu.

இராசதானிப் பாலை, கணுப்பாலை, Indian mimusops—Mimusops hexandra.

இராசத் தேள், நால்வகைத் தேள்களி லொன்று திய சிகப்புத் தேள். இது மற்றத் தேள் களின் மேல் ஏறிச்செல்லும், ஆகையா லிது கடித்தால் அசாத்திய மெனக் கருதப்படும், one of the 4 kinds of scorpions. It is red in colour and is known as 'king scorpion.' It is so called from its being carried by the other scorpions. It is said to be of a virulent type for, its sting invariably results in death.

இராச நாகம், நால்வகைச் சாதிகளி லொன்று திய சத்திரிய சாதிப் பாம்பு, one of the 4 classes of cobras, i. e., the Kshatriya cobra. It is large and superior of its kind.

இராச நீர், வெடி யுப்பு திராவகம் சேர்ந்த ஓர் வகைக் கலவைத் தீநீர். இது உலோகங்க ளுக்கு அரசனைப் போன்ற பொன்னைப் பேதிப் பதால் இதற்கு இப்பெயர் வாய்ந்தது போ லும், நீர் என்பது திராவகத்தைக் குறிக்கும். இது பண்டைக் காலத்துப்பெயர், an alchemical preparation acting on gold. (*In Chemistry*) a mixture of concentrated nitric and hydrochloric acids; nitro-hydrochloric acid—Aqua regia. It is an excellent solvent and is so called because it dissolves gold the king ofmetals. In olden times all liquids were regarded as kinds of water just like all gases were treated as kinds of air; 2. பூ நீர், a liquid said to originate from the soil of fuller's earth. It is so called from its solvent qualities.

இராச நோக்காடு, பிரசவ வேதனை, இடுப்பு வலி, pangs of childbirth—Labour pains; 2. கடையாகப் பிள்ளை வெளி வரும்போது படு மவத்தை, the final stage of labour, just before the child is born.

இராச பதி, ஆன்மாவானது இராசனைப் போன்ற உன்னத நிலைமையை யடைவது அதாவது தேகப்பற்றை விட்டு மேன்மை பொருந்திய பரிசுத்த நிலைமையை யடைதல், the highest stage in which the soul is completely free from all corporeal entanglements—Emancipation of the soul.

NOTE.—The soul itself has got mingled up with nature, with the mind and with the body and it is through ignorance that the soul has been joined to nature and when once it comes to know that it is entirely separate from nature and realises that it depends on nothing in the Universe from the gods to the lowest atom, then nature has no more attractions for it and the realisation or perfection is said to be attained.

If the soul is thus perfectly purified, it becomes free in its movements and recognises the Divine light.

இராச பரிணி, பாலை, silvery-leaved ape flower —Mimusops Kanki.

இராச பர்ணி, ஓர் பூடு, a plant having shining leaves, see இராச பலை.

இராச பலம், இராச பலை, } முதியார் கூந்தல், see இராச பாலா 2. பேய்ப் புடல், devils' gourd — Trichosanthes cucumerina.

இராச பலா, முதியார் கூந்தல், king's tonic—Paederia foetida ; 2. ஓர் பூடு, Chinese fever plant. Stinking opal berry—Apocymum foetidum.

இராச பிளவை, கடி முதுகின் முள்ளந் தண்டின் பேரில் மாங்காய் அல்லது தாமரைக் காயைப் போல் வீங்கி முக்கண் ணுண்டாகிப் புரையோடி வலி அதிகரித்து, இடையிடாத குத்தல், குளிர்சுரம், நாவரட்சி, சோபதாபம் முதலிய குணங்களை யுண்டாக்கு மோர்வகை விரணநோய், a kind of carbuncle called 'Raja boil' generally appearing on or about the spinal colum, with a large swelling covered by a reddened skin, which later on becomes thin and perforated by a number of openings, discharging pus. This mass finally sloughs away, leaving an ulcerated excavation. It is accompanied by marked constitutional symptoms such as, constant pricking pain, fever, thirst, fatigue etc.

NOTE.—It is also said to be due to witchcraft and sorcery practised on a patient.

இராச புடல், ஓர்வகைப் புடல். இதன் விதை உருண்டையா யிருக்கும், a kind of gourd with round seeds.

இராச புட்பி, கக்கரி, a kind of cucumber—Cucumis utilitissimus.

இராச புன், see இராச பிளவை.

இராச புத்திரி, சிறு சண்பகம், cananga flower tree — Canangium odoratum ; 2. பேய்ச் சுரை, a bitter variety of gourd; Bitter gourd—Lagenaria vulgaris.

இராச புள் எட்டுக்காற் பூச்சி, an insect with eight legs—the Spider; 2. இராச பறவை, கருடன், the king of birds; the Brahminy kite.

இராசப் பிரதிட்டை யுள்ளோன், ஆமை, turtle.

இராசப் புறு, ஓர் உயர்தரமான புறு, imperial pigeon—Carpophaga sylvatica.

இராச மண்டூரம், பிரதான தவளை, the chief of frogs.

இராச மந்த சர்ப்பம், மந்த கடையும் மினு மினுப்பு முள்ள வோர்வகைப் பாம்பு (அதாவது மலைப் பாம்பு, தாசரிப் பாம்பு, கட்டு விரியன் முதலியன), snakes in general with slow movements and shining bodies, such as the mountain snakes known as the Boa constrictor, Python, etc.

இராச மாடம், பெரும் பயறு, a big variety of grain—Vigna catiang.

இராசமா நாகம், கருவழலைப் பாம்பு, a black variety of grand-snakes ; 2. கருநாகம், a Kshatriya cobra with a black hood.

இராச மாலா, பாலைக் கொடி, Rajmahal hemp of Madras — Marsdenia brunoniana.

இராச மான், பல்லி, lizard.

இராச மிருகாங்கம், இராச ரோகம் என்ற சய ரோகத்தை விலக்கு மோர் ஆயுள்வேத மாத்திரை, an Ayurvedic pill for curing consumption which is known as the king of diseases.

இராச யட்சமா ரோகம், see இராச சயரோகம்.

இராச யுகமை, இராச யுகம், } பாலை, see இராச பரிணி.

இராச யோகம், ஞானிகளுக் குரிய நான்கு வகை யோகங்களி லொன்று. இது எல்லா விதயோகங்களிலும் மேன்மை யானதாகவும் சிறந்ததாகவும் கொள்ளப்படும். ஏனெனில், இது இயல்பிலே யமைந்த மலத்தை போக்கி நேராக மோட்ச சாதனத்திற் குரிய வழிகளைக் கைக்கொள்வதற்குச் சிறந்த வழியாகக் கருதப்படும். இதனால் மனதை எளிதாக லயப்படுத்தி, அந்தக் கரணங்களை சயித்து ஆன்மாவி லொடுங்கச் செய்து, எல்லா வஸ்துவிலும் கடவுள் ரூபத்தைக் காணக் கைவல்யமாகும். மேலும் ஞான விளக்கத்தினால் மேன்மேலும் மனோசக்தி விருத்தி யடைந்து கடைசியாகத் தன்னை தான் மறந்து சமாதி நிலையடைய ஏதுவா யிருக்கும்.

இப்படி பட்ட நிராகார நிலையில் சகல சங்கல்பங்களும் லயித்துத் தன் மயமாய் இருப்

பதஞ்சலி பிரம சொரூபத்தில் ஐக்கிய மடைவார்கள். ஞானிகளும், சித்தர்களும் தங்களுடைய வடம்பைத் தவத்தின் வல்லமையிலும் மாற்றி இலிங்கவடிவமாக நிற்பார்கள். இவ்விதம் இலிங்கத்தைச் சாதாரணமாகத் தெற்கேயுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் தோறும் காணலாம். இக்கோயில்களெல்லாம் சித்தர்கள் சமாதியே ஒழிய வேறல்ல.

குறிப்பு.—தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கும்பகோணம் திருநெல் வேலி, முதலிய ஸ்தலங்களில் நிற்கும் இலிங்கங்கள் சித்தர்களுடைய சொரூபங்களே. It is one of the 4 Yogas practised by a Yogi and is counted as one of the highest forms of development, for, its aim is directly spiritual and it teaches the disciple to overcome his inner nature and to be master of the same. It seeks the realisation of the Divine life in all things.

It aids the growth of the mind, the evolution of the lower mental faculties, the rising on to the higher intellectual planes and the passing into states of consciousness far beyond the reach of ordinary humanity. It also helps the subject towards the attainment of Samadhi, when, he becomes unconscious of his existence as a man and remains with the full consciousness of Divinity with all its attributes.

It is in this condition of absorption in the Infinite that Siddhars metamorphose their bodies into Lingams (the phallic emblem of God Siva) many of which are seen at the present day in all the principal eulogised temples of Southern India.

NOTE.—The lingams of the S. Indian temples viz. those in Tanjore, Trichinopoly, Madura, Kumbakonam, Tinnevelly etc. are all metamorphosed bodies of Siddhars and Yogies.

For details see சித்தர் சமாதி.

இராசராச பலம், வலம்புரிக் கொடி, twisted horn—Helicteres Isora.

இராச ராசேசுர ரசம், ஓர் உயர் தரமான ஆயுள் வேத மருந்து, an excellent preparation in Ayurveda.

இராச ரோகம், சய ரோகம், the king of diseases; consumption.

இராசர் கவசரோப்பியம், வெள்ளெருக்கு, white, madar—Calotropis gigantea (*albiflora*)

இரா சலம், தாமரைப் பூ, lotus flower.

இராச வசியம், கஸ்தூரி, musk—Moschus, It is so called from its magnetic virtues.

இராச வர்க்கம், வெண்மையுங் கருப்புங் கலந்த நிறம், a mixed colour of white and black.

இராச வர்ணம், பேய்ப் புடல், wild snake gourd or devil's gourd — Trichosanthes lacinosa.

இராச வர்த்திக் கல், நடுவில் பொன்னிறமான புள்ளிகளை யுடைய வைரத்தைப் போன்ற கல், one of the two inferior varieties of diamonds with yellow specks. It is sometimes used as a substitute for pure diamonds—Lapis lazuli.

இராச வல்லபை, (kings + beloved) இலந்தைப் பழம், jujuba fruit.

இராச வல்லி, ஓர்வகைக் கசப்புக் கொடிப் பாகல், a creeper of bitter gourd; pig-gourd —Mimordica charantia.

இராச வள்ளிக் கிழங்கு, ஓர் பருத்த சிவப்பு வள்ளிக் கிழங்கு, a large red species of yam.

இராச வாகனம், கோவேறு கழுதை, the off-spring of a horse and an ass—Mule.

இராச வாதங்கி, கற்றுழை, aloe—Alce vera.

இராச வாழை, செவ்வாழை, see இராசகுல வாழை.

இராச விருதம், கொன்றை, common cassia —Cassia fistula.

இராச விரணம், இராச பிளவை, carbuncle; 2. பக்கப் பிளவை, another variety of carbuncle.

இராச விரணம், ஓர்வகைக் கட்டி. இது காரிரத்த நிறமாகவும், கழலையைப் போன்ற சதையி லமைந்ததாகவு மிருக்கும். கட்டி முழுவது மழுகி நாற்றத்துடன் சீழும் இரத்தமும் வடியும், a painful dark-coloured tumour of the cellular tissue, ending in mortification of the part and the discharge of a fetid bloody pus—Melanotic sarcoma.

இராச விருட்சம், கொன்றை மரம், common cassia tree—Cassia fistula.

இராச வுறுப்பு, see இராச கருவி.

இராச வைத்தியம், பத்திய மில்லாத வைத்தியம், a medical treatment without a

prescribed diet. It is a method appreciated by kings, for the simple reason that it did not affect or interfere with their bodily comforts.

இராசனம், இராசவை, } வெள்ளைப் பூண்டு, garlic—Allium sativum.

இராசாகி, இருதலைப் பாம்பு, a snake with heads on either ends.

இராசாங்க நாடி, சூதமுனி செய்த வோர் தமிழ் நாடி நூல், an easy guide on pulsation campiled by Soothamuni in Tamil.

இராசாததம், முளளுஞ் செடி, a plant (*unidentified*) 2. பழமுண்ணிப் பாலை, also a plant (*unidentified*)?

இராசா வர்த்தம், see இராசவர்த்திக் கல்.

இராசா வேறுங் கழுதை, கோவேறு கழுதை, see இராச வாகனம்.

இராசாளி, (இராச + ஆளி=King+eagle), வெண் புள்ளிகளே யுடைய வோர் சிகப்புப் பருந்தினம், Royal falcon, with reddish body and white spots about the head and the back of the neck—Nisaetus bonelli alias Aquila intermeria.

இரா சான்னம், மூக்குங் காலும் சிவந்து உடம்பு வெண்மையாயு முள்ள வோர் உத்தம சாதி அன்னப் பட்சி, a superior breed of swan with red beak and legs and white body; 2. ஓர்வகை யுயர்ந்த செந் நெல், a superior kind of red paddy.

இராசி, சோதியத்திற் கண்ட 12 இராசிகள், (*In Astrology*) the signs of the Zodiac, 12 in number; 2. காந்தசி, magnetic power of healing, naturally possessed by one.

இரா சிகம், நரம்பு வரி, the line of the nerves; 2. கரும்பு, sugar-cane—Saccharum officinarum; 3. கேழ்வரகு, raggy.

இராசிகா ரோகம், வேனிற் காலத்தில் வெயிலின் புழுக்கத்தினுல் மியர்வை மிகுதியாகக் காணுவதா லுண்டாகும் மியர்க்குரு, an acute inflammation of the sweat-glands, characterised by the formation of patches of small red papules and vesicles, with intense itching and burning sensation. The disease is due to excessive sweating, and occurs in hot weather. It is called prickly-heat — Miliaria rubra alias Lichen tropicus.

இரா சிதகம், கலுவம், மருந்தரைக்குங் கல், an oval-shaped shallow vessel made of hard granite stone in which drugs are beaten, crushed. pulverised or ground with a pestle—Stone Mortar.

இரா சிதம், செஞ்சந்தனம், red sandal — Pterocarpus santalinus.

இராசியத் தானம், see இராசியம்.

இராசியம், தாமரை, lotus; 2. மறைவு, secrecy; 3. மறைவிடம் அதாவது பெண்குறி, the female genital—Pudendum muliebre.

இராசிலம், சாரைப் பாம்பு, rat-snake—Male-cobra; 2. நீர்ப் பாம்பு, water snake — Ampeisbaena.

இராசில், மகிழம் பூ, pointed-leaved Ape-flower—Mimusops elengi.

இராசி வங்கம், வெள்ளீயம், white lead, tin.

இராசினி, அரத்தை, a drug, galangal — Alpinia galanga.

இரா சீவம், தாமரை, lotus flower—Nelumbium speciosum.

இராசுவை, சிற்றரத்தை, lesser galangal — Alpinia galangal (*minor*).

இராச் சொல்லான், வசம்பு, இதைப் 'பேர் சொல்லான்' எனச் சொல்வது முண்டு, sweet flag—Acorus calamus.

இராடசுத்தாளி, வேங்கைப் புலி, Royal tiger—Felis tigris.

இராடம், பெருங்காயம், asafoetida — Ferula asafoetida; 2. வெண்காயம், onion; 3. கழுதை, ass; 4. குஜராத் தேசம், the ancient Guzarat.

இராட்சச சிகிச்சை, காரச்சீலை, காரம், அக்கினி, கத்தி முதலியவைகளைக் கொண்டு செய்யு மோர்வித்தக் கொடிய வைத்தியம், that branch of medicine which deals with the treatment of diseases wholly or in part with the aid of acid blisters, caustics or cautery, surgery or other mannual appliances. This was formerly considered a crude, painful and low method of treating diseases and much credit was not given then to this kind of treatment.

இராட்சசி, துளசி, holy basil — Ocimum sanctum; 2. சதுரக் கள்ளி, square-spurge —Euphorbia antiquorum; 3. கற்றுழை, aloe—Aloe vera (*officinalis*).

இராட்சத கண சிகிச்சை, see இராட்சச சிகிச்சை.

இராட்சத வைத்தியம், இராட்சச சிகிச்சை which see; 2. அறுத்தல், காரம் வைத்தல், சூடு போடல் முதலிய மூர்க்கமும் முரட்டித் தனமான வைத்தியம், a crude and painful treatment, as by operation, blistering, cauterisation etc., as distinguished from தேவ சிகிச்சை, which is done purely by administration of drugs or other medicines. See இராட்சச சிகிச்சை.

இராட்டின வாழை, கிளைகள் நெருங்க வீருக்கு மோர்வகை வாழை மரம், a plantain tree, with branches having no intermediate blank spaces.

இராட்டு, தேன் கூடு, honey-comb.

இராணம், இலை, leaf; 2. மயிற்றோகை, peacock's tail or feather.

இராதை, மின்னல், lightning.

இராத்தல், 40 ரூபாய் எடை, 40 tolas weight; 2. பதின்மூன்று பல மிடை, thirteen rupees (or 1 lb weight.)

இராத்தி, வெண் காரவுள்ளி, a kind of white pungent onion.

இராத்திரம், இராத்திரி, } இரவு, night; 2. இராக் காலம், night time.

இராத்திரி, மஞ்சள், turmeric — Curcuma longa.

இராத்திரி காசம், வெள்ளாம்பல், Indian white water-lily—Nymphaea pubescence; 2. வெண்டாமரை, white lotus—Nelumbium speciosum.

இராத்திரி வேதன், சேவல், cock, called from its crowing in the night time.

இராத் தூக்கம், இராத்திரித் தூக்கம், night sleep as opposed to day sleep.

இராந்து, இடுப்பு, loin; 2. தொடைச் சந்து, groins.

இராந்து கடுக்கல், பிரசவ வலி, pangs of childbirth; 2. இடுப்பு வலி, lumbago.

இராந் துண்டு, இலந்தைப் பழம், Indian plum —Zizyphus jujuba.

இராந் துண்டுகம், see இராந்துண்டு.

இராந் தூளிதம், துளசி, holy basil—Ocimum sanctum.

இராப் சருக்கரை, இளகிய சருக்கரை, Raub sugar. It is an unrefined moist sugar and is used for preparing syrups.

இராப் பகல், இரவும் பகலும், night and day; 2. எப்பொழுதும், always, constantly.

இராப் பசும் பால், பகலிற் சுரந்து இரவிற் கறக்கும் பால், cow's milk which accumulates during the day and is drawn in the night. It is opposed to பகற் பசும்பால், which see.

இராப் பத்தியம், பெண்கலவியை நீக்கல், abstinence from sexual intercourse.

இராப் பனி, இரவில் பெய்யும் பனி, night's dew.

இராப்பாடி, இரவிற் பாடுங் குருவி, a small bird that sings at night; nightingale, common bulbul (*in Eng*)—Pycnonotus haemorrhous.

NOTE.—According to Greek mythology, it is called Philomel from Philomela who was changed into a nightingale.

இராப்பாடிக் குருவி, வால் கொண்டலாத்தி என்னும், இரவிற்பாடு மோர்வகைக் குருவி, Madras boolbool or paradise fly catcher —Tchitrea paradise alias Muscipeta indica. Short-legged thrushes are of different kinds such as,—green babools, blue-birds, oriolinae etc.

இராப் பாலை, ஓர்வகைப் பாலை, a garden tree with smooth bark; Arcuate trumpet flower — Dolichandrone arcuata. It is so called from its flowering in the evening.

இராப் பால், see இராப் பசும்பால்.

இராப் பூ, இரவில் பூர்க்கும் ஆம்பல் முதலியன, flowers blossoming at night such as, waterlily etc.

இராப் போசனம், இரவில் உண்ணு முணவு, night food.

இராமகல், see இராமக்கம்.

இராமக்கம், ஓர் அம்மை நோய். இதனுடம் பிற் கொப்புளங்கள் ஏற்பட்டுப் பிறகு பால் உள்ளுக்கு வாங்கிக் கொள்ளும், a kind of small-pox in which the contents of the vesicles become absorbed leaving the surface empty — Variola siliquosa; 2. ஓர்வகைக் சிச்சிலுப்பை அல்லது சிச்சிலுப் பான். இது குழந்தைகளுக்குக் காணுமோர்

வகை அம்மை. இதனால் சுரம் காய்ந்து, இருமல், சலேவலி, முதலியன கண்டு, முகம், கழுத்து, உடம்பு முதலிய விடங்களில் குருக்கள் எழும்பி, ஒருவாரம் அல்லது பத்து நாளைக்குள் இறங்கும். இதனால் குழந்தைகளுக்குக் கபவாதசுரம், மார்சளி, சயரோகம் முதலிய கடுமையான ரோகங்களுமேற்படும், a form of measles in children characterised by eruptive fever with catarrhal symptoms. The disease begins with cough head-ache and subsequently with erup, tions on the face, back of the neck and on the body. The eruptions begin to fade after a week or 10 days. It is prone to lead to complications, such as, bronchitis, pneumonia, phthisis etc. See அம்மை; 3. வாசனைப் புல், lemon grass — Andropogon aromaticus.

இராமக் கருணி, ஆல்லி, which see.

இராமக் கரும்பு, வெள்ளையும் சிகப்புச் சேர்டுங் கலந்த கரும்பு, sugar-cane with white and red stripes—Saccharum officinarum; 2. பேய்க் கரும்பு, a wild and useless sugar-cane—Saccharum arundinaceum.

இரா மக்கன், ஓர் அம்மை நோய், see இரா மக்கம்.

இராமக் குமிட்டி, பேய்க் கொம்மட்டி, bitter apple—Cucumis colocynthis.

இராமக் குறண்டி, முட் குறண்டி, a thorny shrub grown in barren island—Lepaidgathis (*genus*).

இராமக் கோவை, கார்க் கோவை, இச்செடி கருப்பா யிருக்கும். காய்கள் புரு முட்டை யைப் போலும், பூக்கள் சிறியவைகளாயும் மஞ்சளாயு மிருக்கும். வேலிகளருகில் சாதாரணமாய் முளைப்பதுண்டு. இதன் காய், பழம், வேகவைத்த வேர் இவைகள் தின்பதற் குபயோகப்படும், Rama's caper—Zehneria umbellata alias Bryonia amplexicaulis. It is a black plant with berry about the size of a pigeon's egg, and small yellowish flower. It is common in hedges. The ripe and unripe fruits as well as the boiled roots are eaten.

இராம சீத்தா, அணிதுணை, இராம சீத்தாப் பழம். இதன் பூ பெரிதாகவும், மஞ்சன் கலந்த பச்சை நிறமுள்ளதாயும், காய்கள் எருதின் இருதயத்தைப் போலும், கனியின் சதைப்பற்று வெளிர் மஞ்சளாகவும், மேல்தோல் சாதாரண சீத்தாப் பழத்தைப் போலில்லாமல் சமமாகவும் மெதுவாகவு மிருக்கும். காயினின்று கருப்புச் சாய மிறக்குவார்கள், இதற்கு மலையாளத்தில் பறங்கிச் சக்கை யெனப் பெயர், Rama's fruit; Bullock's heart., Manilla custard apple—Anona reticulata. Flower large and yellowish green; fruit like a bullock's heart; pulp yellowish white. It differs from custard-apple in having a perfectly smooth rind. Dry unripe fruit yields a black dye. Fresh leaves give some indigo. n Malayalam, it is called 'Parangi chakkai' which means Portuguese jack fruit.

இராமச் சுரத் தீநீர், கொத்தின மாமிசத்தில் வெல்லமும் தண்ணீரு மிட்டு மற்றக் கடைச் சரக்குகளுடன் சேர்த்து வாலையி லிட்டுத் திராவகமாக வடித்த ஓர்வகைத் தீநீர், a fluid extract obtained by distillation from a mixture of minced meat, water, jaggery and other bazaar drugs.

இராமடம், இராமடை, } பெருங்காயம், asafoetida — Ferula asafoetida.

இராம தாசன், சமுத்திரக் காக்கை, sea-crow —Laridae vagatores.

இராம துளசி, துளசி, common holy basil — Ocimum sanctum.

இராம தேவர், இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவர், நீண்ட காலங்களுக்கு முன் இருந்தவர், வைத்திய வாத யோகஞானங்களில்மகா வல்லவர். இவர் ஒரு காலத்தில் மெக்காவுக்குச் சென்று இஸ்லாம் மதத்தைத் தழுவி 'யாகோப்' எனப் பெயர் வகித்து ஆங்குள்ள நபிகளால் புகழைப் பெற்று அனேக வைத்திய வாத நூற்களை அவர்களுக்கும் போதித்துப் பிறகு அனேக சித்துக்களையும் ஆடினவர்.

இவர் தமிழிலும் அனேக நூற்களை இயற்றியவர், கடைசியாக அழகர்மலையில் சமாதி புகுந்ததாகச் சொல்லப்படும், he is one of the 18 of the Siddhar's school of thought and is said to have been an expert in olden days in Medicine, Alchemy, Yoga and Philosophy. At one time it is stated that he visited Mecca, where after embracing the Muslim faith, he assumed a different name 'Yacoob'. While there. he expounded the truths and technicalities underlying the Siddhar's science, played many miracles, and won the appreciation of the Islamic Nabhies,

He is one of those Siddhars who contributed much to the study of Tamil Siddha Medicine. He is said to have finally attained Samadhi in Alagar Hills in Madura Dist.

NOTE.—The writings of Ramathevar alias Yacoob and Bogar clearly go to show that they lived in Arabia, Asiatic Turkey and China, for sometime and taught the people there the Siddha System of Medicine. So, it is clea r that that system of medicine which was formerly in vogue among the Arabs and the Chinese should have been more or less the same as that of Tamil Medicine. It is for this reason that we are led to believe that in olden days, it must have been thought expedient to use the imported Chinese drugs as substitutes in Tamil Medicine when indigenous products were not available in bazaars when required or were not in sufficient quantities.

இராம பத்திரி, ஓர்மருந்து, a kind of medicine.

இராம பத்தினி, சீதா செங்கழுநீர், sweet smelling water-lily—Nymphaea odorata.

இராம பலை, see இராம சீத்தா.

இராம பாணம், புத்தகம் அல்லது ஏடுகளை ஊடுருவித் துளைத்திடு மோர் வகைப் புழு, a worm that makes holes by piercing through books or cudgeon leaves extending to several pages just like Rama's arrow; 2. ஓர்வகை மருந்துக் குளிகை a medicinal pill supposed to act powerfully; 3. ஓர் வகைப் பாச்சை, a house-hold pest named silver fish—Lepisma domestica; 4. ஓர் வகை மல்லிகைப்பூ, a kind of jasmine with a strong odour; 5. கெவுரி, வெள்ளைப் பாஷாணம் முதலியவைகளாற் செய்து, சுரம், சன்னி, மயக்கம், இவைகளுக்குக் கொடுக்கு மோர் மாத்திரை, a kind of pill prepared from a mixture of yellow oxide of arsenic, and white arsenic with other ingredients. It is used for fever, delirium, giddiness etc.

இராமப் பாரை, காமப்பாரை மீன். இதன் மேற் புறம் வரிக ளமைந்து வெள்ளியைப் போல் பளபளப்பாயும், மற்றப் பாகம் மஞ்ச ளாயும், கருப்புப் புள்ளிக ளமைந்து மிருக்கும், 6¾" நீளம், a kind of sea-fish – Caranx leptolepis alias C. bidii. It is about 6¾" long; silvery in colour and striped from above the eye to the upper edge of the tail with black spots on the shoulder.

இராமப் பிரியம், see இராமாப் பிரியம்.

இராம மரம், இராமசீத்தா மரம், which see, 2. மரா மரம், the white species of a flower tree —Eugenia racemosa.

இராம முழியன், ஓர்வகைக் கடல் மீன், a silvery sea-fish—Triacanthus strigilifer.

இராமம், அழகு, beauty.

இராம ரசம், வெல்லத்தையும், சுக்கா முதலிய சில சரக்குகளையும் சேர்த்துக் காய்ச்சிய போதை வஸ்து, an intoxicating drink. It is considered highly conducive to health and has the same effect as opium; but a more agreable drink is prepared by boiling a mixture of jaggery, hemp leaves, spices and other drugs—Bhang.

இராமர் காசு, எட்டு மாற்றுப் பொன்னினால் அடித்த இராமர் உருவ மமைந்த பழய காலத்து நாணயம், a gold coin made of 22 carat gold with a profile of Rama on one side.

இராம னுதிகம், குரங்கு, monkey.

இராமன் சம்பா, ஓர்வகைச் சம்பா நெல், a kind of paddy.

இராமன் தேவி, அரிதாரம், orpiment—Arsenic trisulphide (AS_2S_3.)

இராமாப் பிரியம், தாமரை, lotus.

இரா மாறு, இராத்தோறும், by night.

இராமேசுவரச் சுண்டை, இராமேசுவரத்தில் மினேயு மோர்வகைச் சுண்டைக்காய், unarmed night shade usually found grown in Rameswaram — Solanum pubescens. It is a stimulant in medicine.

இராமேசுவர வேர், see இம்புரா வேர்.

இராமல், see இருல்.

இரா வங்கம், கொன்றை, common cassia — Cassia fistula.

இரா வச்சம், இருட்டைக் கண்டா லுண்டாகும் பயம், morbid dread of night and its darkness and silence—Noctiphobia.

இராவடம், அசோகு, Asoka tree—Polyalthia longifolia alias Guatteria longifolia.

இரா வடி, see இராவடிகம்.

இராவடிகம், பேரேலம், large cardamon — Eletaria cardamomum.

இரா வட்டம், உருத்திராட்சம், sacred bead tree — Eleocarpus tuberculatus.

இராவடிதரம், ஊசிக் கோரை, needle-shaped grass of the Cyperus genus.

இராவடுப்பு, இராத்திரியில் நோயாளிகளுக்காக வெண்ணீர்க் கஷாயம், பால், முதலியவைகளைச் சொற்பச் சூடுகாட்ட வேண்டி உபயோகிக்கு மோர் சிறிய கரி அடுப்பு, an auxiliary oven used for lending gentle heat during nights to water, decoction, milk, etc intended for patients.

இராவண மோதம், குரங்கு, monkey.

இராவணம், விளக்கு, lamp; 2. கீச்சென‌க் கத்தல், screaming.

இராவணன் புல், கடற்கரையில் வீளையு மோர் வகைப் புல், a kind of grass found grown near the sea-shore; water-pink, a sea-shore grass—Spinifex squarrosus. It is also called Ravana's whiskers.

இராவணன் மீசை, see இராவணன்புல்.

இராவதி, ஓர்படர் கொடி, அதாவது பன்றிப் புடல், a kind of spreading creeper; a kind of snake gourd.

இராவம், நோயிலுல் குறட்டைவிடல், a deep snoring which accompanies some diseases; 2. சாதாரணமாய்க் குறட்டைவிடல், stertorous or sonorous breathing—Snoring; 3. தொண்டையிலுண்டாகு மோர் சத்தம், rattling in the throat—Rhoncus.

இரா வறிவான், சேவல், cock which is capable of measuring night.

இராவுதல், அரத்தினுற் தேய்த்தல், to cut or rub with a file.

இராவெரி மரம், இரவில் நீப்பற்றி எரிவது போற் காணும் ஓர் மரம், அதாவது சோதி விருட்சம், a tree which, probably on account of its phosphoric quality, appears to be burning in the night time. See இர வெரிமரம்.

இரிகக் கத்தை, இருதய சடரக் குழியில் நீட்டிக் கொண்டிருக்கும் தசைநார், muscular projections (fleshy columns) inside the ventricles of the heart—Columna carneae.

இரிக நாடி, இருதயத்தின் நாடி, cardiac artery.

இரிகம், இரத்தாசயம், which see; 2. இருதயம், heart; 3. வடமொழியில் ஓர் மரம் அல்லது பூண்டின் பெயர், the name of a tree or a plant in Sanskrit.

இரிகரம், இருதயத்திற் குண்டான தாபிதம் அல்லது அழற்சி, inflammation of the heart—Carditis.

இரிக்கி, ஓர்வகைப் பெருங் கொடி, அதாவது தெலுங. இது அளவுகடந்து தாவிப் படரும். இதன் காய்கள் பலவடிகள் நீளமாயிருக்கும். விதைகள் தட்டையாயும் இருதய வடிவாயு மிருக்கும். இதில் இலேசாக வொரு பகுதியை அறுத்து அதிலொரு துளி நீர்விட அத்துளி பால்போல் மாறி அப்பகுதியின் இருள் நிறங் குறையும்; விதைகள் வாந்தியுண்டாக்கும். இவைகளைப் பிஞ்சுபட வரைத்துக் கோளத்தின் வீக்கங்களுக்குப் பற்று போடுவ துண்டு, creeping babool, scimitar-pod—Eutadu scandens. It is a gigantic climbing shrub remarkable for its legumes which are several feet long. The seeds are more or less heart-shaped and flattened and when a thin section is cut and a drop of water is placed upon it, the water immediately becomes milky, and the opacity is much diminished. The seed is an emetic, and a paste prepared from it, is applied medicinally to glandular swellings.

இரிங்கணம், ஓர் பறவை, a kind of bird?

இரிசியா, பூனைக்காலி, cowhage plant, Cat bean—Mucana pruriens.

இரிஞ்சகம், ஊசிமல்லிகை, needle-shaped jasmine; Harlot jasmine.—Jasminum auriculatum alias J. ogalifolium.

இரிஞ்சி, மகிழமரம், a tree; pointed-leaved ape—flower—Mimusops elengi.

இரிஞ்சிகம், see இரிஞ்சி.

இரிஷபகம், சிவகம் அல்லது இலக்தை, Indian plum—Zizyphus jujuba.

இரிஷபதார கிருதம், பசு நெய், (bull+wife+ghee) cow's ghee, clarified butter from the cow's milk.

இரிஷப தாரம், பசு, the female of a bull i.e. the cow.

இரிஷி, வேதமுனி, sage versed in the Vedas.

இரிணம், உவர் நிலம், saline soil.

இரிதல், அச்சம், fear; 2. அஞ்சுதல், to fear; 3. வடிதல், to drop, as perspiration does.

இரித்தை, நாழிகை, a period of 24 minutes.

இரி பேரம், வெட்டி வேர், cuscus grass Indian spikenard — Andropogon aromaticus.

இரி மான், ஓர்வகை எலி, a kind of rat,

இரியல், இலவங்கப் பட்டை, cinnamon; 2. அழுகை, weeping.

இரிவி கஞ்சம், காஞ்சாக்கள் சட்டை, a coat from fibres obtained from the substance between the bark and the wood of a certain tree. In olden days, it was used by Siddhars and other Sanyasis as a coat to protect themselves from cold. See also மரவுரி.

இரீதி, பித்தளை, brass; 2. கிட்டம், scoria or dross; 3. இரும்புக் கிட்டம், scoria of iron; 4. தூள், dust.

இரு, இரண்டு, two; 2. இரட்டை, double; 3. காட்டு மல்லிகை, wild jasmine; 4. பெரிய, great; 5, கரிய, black.

இருகண், இரண்டு விதக்கண், உட்கண், வெளிக் கண், அதாவது, (1) மனக் கண் அல்லது ஞானக் கண். இதை ஊனக் கண்ணென்றும் சொல்வர், internal eye i.e., the eye of the mind or wisdom and (2) உடம்பின் கண், external eye in our body.

இரு கரந்தை, இரண்டுவித கரந்தை அதாவது (1) சிவகரந்தை, (2) விஷ்ணு கரந்தை, the two kinds of plants of sweet basil i.e., the two species of Sphoeranthus—(1) Sphoeranthus Zeylanicus. (2) Sphoeranthus Indicus.

இரு கரையன், இருவித நினைப்புக் கூடிய மனத்தை யுடையோன், double-minded person; one who entertains always two ways of thinking.

இரு கழஞ்சி, இரண்டரை வராகனிடை, two and a half pagodas.

இருகழத்துக் குப்பி, இரண்டு கழுத் தமைந்த ஓர் விதக்குப்பி, a two necked bottle used in medicinal preparation — Woulfe's bottle.

இருகா லாட்டல், இரண்டு தடவை மருந்தைக் கல்வத்திட்டு அரைத்தல், grinding a medicine twice in a stone mortar.

இருகால், இரண்டு முறை, twice; 2. அரை, half; 3. இரண்டு கால்கள், both the legs.

இருகாழி, பனங்காயைப் போல், இரண்டு கொட்டை யுள்ள காய், a fruit bearing double seed, as in palmyra fruit — Double-seeded fruit.

இருகுகாற் பிரண்டை, களிப் பிரண்டை, a species of the Vitis (*genus*).

இரு குமிழி, இரண்டுவகைக் குமிழ மரம் அதாவது பெருங் குமிழ், சிறு குமிழ், the two species of trees viz. Big Cashmere tree —Gmelina arborea and small Cashmere tree—Gmelina asiatica; 2. நீர்க் குமிழ், நிலக்குமிழ், என இருவகைக் குமிழ், the two kinds of Gmelina, water-borne and earth borne

இருகுரங்கின் கை, முக முகக்கை, bristly bryonia—Mukia scabrella alias Bryonia scabra.

இரு குரங்கு, see இருகுரங்கின் கை.

இரு கோபி, கன்னரி, Indian sarasaparilla—Periploca Indica.

இரு கோவை, இருவகைக் கோவை அதாவது பெரிய கோவை, சிறு கோவை, the two kinds of Indian caper, big and small; 2. அப்பைக் கோவை, கொல்லன் கோவை, demon root—Bryonia rostrata alias B. epigea.

இருக் கால், see இருகால்.

இருக் காழி, see இருகாழி.

இருக்கு, சாதிலிங்கம், vermilion or red pigment—Mercuric sulphide.

இருக்குப் பாஷ, கரும்பு, sugar-cane — Saccharum officinarum; 2. நீர்ப் பூனை, a plant (*unidentified*).

இருங் கரம், பதக்கு, a measure equivalent to 4 measures.

இருங்கு, சிகப்புச் சோளம், a kind of red millet—Holcus saccharatus.

இரு சகம், மாதுளை, pomegranate — Punica granatum.

இரு சங்கன், இரு வகைச் சங்கன் செடி, அதாவது (1) நற்சங்கு (2) பீச்சங்கு, the two varieties of the plant—(1) Mistletoe Berry Thorn—Azima tetracantha (2) Smooth volkameria—Cleodendron inerme.

இருசடை, வெட்டிவேர், cuscus root—Andropogon aromatica.

இருசண்பகம், இருவகைச் சண்பகம், அவையாவன—the two varieties of champaca 1. சிறு சண்பகம், Indian Magnolia—Michelia champaca; 2. பெருஞ்சண்பகம் 2. Cananga flower tree—Canangium odoratum.

இருசந்தனம், இரண்டுவிதச் சந்தனம், the two kinds of sandals—1. வெண் சந்தனம், white sandal wood—Santalum album; 2. செஞ்சந்தனம், red sandalwood—Pterocarpus santalinus.

இரு சாரணை, இரண்டு வகைச்சாரணை, the two species of Shauranay—1. வெள்ளைச் சாரணை, white shauranay—Trianthema monogyna; 2. சிகப்புச் சாரணை, red shauranay, so called from the colour of its flowers—Orygia decumbens.

இருசாண் புடம், இருசாண் உயரம் போடும் புடம், fire of a pile extending to two span in height.

இருசி, இருதுவாகுந் தன்மையற்ற பெண், a woman devoid of menstruation; 2. ஓர் பெண் பேய், a female devil.

இருசி தாரி, கருஞ்சீரகம், black cumin—Nigella sativa.

இருசிய கெந்தா, சிற்றமுட்டி, Ceylon pavonia —Pavonia Zeylanica.

இருசிய சிம்மக குட்டம், ஓர்வகைக் குட்டரோகம். அது முட்களைப் போல் மெல்லியதாய் நீண்டு பிசபிசத்துச் சுரசுரத்து, உள்ளிற் கறுத்து துனியிற் சிவந்து நெருக்கமாகக் கொப்புளங்களே ஏழுப்பும். அவைகளிற் புழுக்கள் நிறைந்து நோவையும், எரிச்சலையு முண்டாக்கும், a form of leprosy marked by thorn-like soft and elevated close ulcers which are red at the edges and dark inside. It is also attended with formation of maggots, burning sensation and pain.

இருசியம், ஓர் மிருகம், a kind of animal?

இருசி யோனி, மாதவிடாய்த் தாரையில்லாத யோனி, சனனதாரை யற்ற யோனி, a uterus in which the vaginal portion is absent —Uterus acolis.

இரு சிறியார், see இரு சீரகம்.

இரு சீக்கியம், கருஞ் செந்தொட்டி, black climbing nettle plant—Tragia involucrata (*cannabina*)

இருசீரகம், இருசீரம், } நற்சீரகம், கருஞ்சீரகமென வி ரண்டுவகைச் சீரகம், the two varieties of Cumin,—1. ordinary Cumin—Cuminum cyminum; 2. Black cumin-Nigella sativa.

இருசு, மூங்கில், bamboo—Bambusa arundinacea; 2. திருநாமப்பாலி, wild sarasaparilla—Smilax macrophylla.

இருசுகம், மாதுளை, pomegranate—Punica granatum.

இருசுடர், சூரிய சந்திரர், the sun and the moon.

இருசு பகந்தர விரணம், ஓர்வகை விரணநோய். இது வாத பித்தத்திலுற் பிறந்து குத வலி யத்தை யொட்டி ஒழுங்கான துவாரங்களே யுண்டாக்கிச் சீழை யொழுகச் செய்யும் ஓர் வகைப் பவுத்திரம். a form of fistula marked by a regular perforated ulcers near the rectum with a discharge of pus therefrom. It is said to be due to the deranged condition of Vatha and bile.

இருசுப் பாலி, திருநாமப் பாலி, see இருசு.

இருசுவ சற்பாட்சி, இருமி தோஷத்தைப் போக்குவிக்கு மோர் மூலிகை, a plant said to be used in complaints arising from germs (*unidentified*); 2. ஓர்வகை நாணற் புல், see அண்ட மயிலை.

இரு சுவம், மலை யிலுப்பை, wild Mohwah — Bassia latifolia.

இருஞ்சாடு வாமைப் பூடு, பொன்னுங் காணி, an edible plant bearing yellow flowers —Illecebrum sessile.

இருடி, முனிவன், a sage; 2. ஆந்தை, a species of owl; 3. ருதுவாகாப் பெண், a woman not matured for life.

See also இருஷி,

இருடி நங்கை, கற்பூர யிலை, thick-leaved lavender or Camphor creeper — Amisochilus Carnosus alias Lavendula carnosus.

இருடி பட்சி, பழந்தின்னி வெளவால், Sage bird; flying fox — Pteropus edwardsi. It hangs itself upon trees by the feet with its head and body downwards.

இருடி மூலம், வசம்பு, sweet flag — Acorus calamus,

இருட் கண், இருண்ட பார்வை, அல்லது இருள் சூழ்ந்த கண், dim-sight; 2. ஓர்வகைக் கண் ரோகம். இதற்கு 'மணி வளர்த்தி' யென்றும் பெயர், இதனால் கருவிழியின் ஓரங்களில் வீக்கமுண்டாகிக் கண்ணில் சிவப்பு, வலி, நீர்வடிதல், கூச்சம் முதலிய குணங்களைக் காட்டும். அன்றியும் பார்வை மழுங்கி, கருவிழியி னடுவிலுள்ள இருஷ்ண மணியை (lens) தாக்கிக் கண்ணைக் கெடுத்து

விடும். இது மேகநோய், புற்று, கண்காயம், சூலை வாயு முதலியவைகளாலும், பெண் போகத்தின் சம்பந்தமான வெள்ளை, வெட்டைகளின் தோஷத்தினாலும்கண்ணைத் தாக்கும். உடம்பி லுள்ள நோய் குணமாக இக் கண்ணையும் மாறும், inflammation of the iris. It is a condition marked by swelling, redness, pain, congestion, contraction of the pupil, discoloration of the iris, affection of sight, etc.

It is caused by gonorrhoea, syphilis, chancre or other venereal affections, injury, rheumatism, etc—Iritis.

இருட் கம்மல், மச்சதாது குறைவதனால் கண்ணிற் புகை சூழ்ந்தது போற் காணு மோர் வகைக் கண்ணோய், an eye-disease marked by smoky appearance, due to want of marrow in the system.

இருட்ச கந்தம், ஓர் பூடு, a plant — Argyreia speciosa.

இருட்சி, மயக்கம், giddiness.

இருட்டி சிங்கம், புகையிலை, tobacco.

இருட்டு, இருள், darkness ; 2. அறியாமை, innocence ; 3. மயக்கம், giddiness.

இருட் பகைவன், சூரியன், the sun.

இருட் பூ, மலையாளத்தில் விளையும் ஓர்வகை மரம், Malabar-tree.—Cynometra ramiflora.

இருஷிகன், பிறர், பெண்களுடன் புணருவதைப் பார்த்தா லொழியத் தான் ஒரு பெண்ணைப் புணருவதற்கு முடியாத தன்மை, a man who cannot copulate with a woman without previously seeing the sexual intercourse of another couple.

இருண, எதிர்மறை யான (உ-ம்) இருண மின்சாரம், இதற்கு எதிர்மறை 'தன' (உ-ம்) தன மின்சாரம், negative, as in negative electricity, as opposed to positive, in positive electricity.

இருண மின்சாரம், எதிர் மின்சார சக்தி, negative electricity.

இருணம், உவர்த் தரை, brackish soil; 2. உப்பளம், salt-field ; salt pan; 3. எதிர்மறை, negative.

இருண்ட விழி, see இருட்கண்.

இருண்டி, சிறுசண்பகம், cananga flower tree —Canangium odoratum.

இருண்ட மதி, தேயுஞ் சந்திரன், waning moon.

இருண்ட மலம், see ஆணவமலம்.

இருண்ட முகா, காவி, aconite—Aconitum ferox.

இருதம், நீர், water.

இருதய அடைப்பு, மாரடைப்பு, அதாவது மூச்சுவிட முடியாமல் இணருதலையும், மயக்கம், வலி, சுவாச மின்மை முதலிய குணங்களையும் காட்டி மோர் வகை நோய், a disease marked by pain in the chest with suffocation and swooning, due to the spasm of the systemic arteries—disease of the heart—Angina pectoris.

இருதய கந்தம், கொத்தமல்லி, coriander—Coriandrum sativam.

இருதய கபாட தாபிதம், உடம்பினுள் தாமரைக் காயின் சவ்வு மூடிகளுக் கேற்படு மழற்சி, inflammation of the heart valves—Cardi-valvulitis.

இருதய கபாடம், உடம்பினுள் தாமரைக் காயினுட் பக்கத்தி லமைக்துள்ள விரண்டு ஜதைக் கதவுகள், the two sets of valves inside the heart—1 சிரவச் சட்ர கபாடம்,auriculo-ventricular valves ; 2. நாடிக் கபாடம், அல்லது பிறைக் கபாடம், semilunar valves.

இருதய கமலம், உடம்பினுட் தாமரைக்காய், heart resembling the lotus, compared to the consecrated seat of the Deity.

இருதய க்வசம், see இருதய கோசம்.

இருதய கிரகம், நெஞ்சி லுண்டாகு மோர்வித்ப் பிடிப்பு வலி, a catching pain in the chest.

இருதய கோசம், இருதயத்தின் மேல், போர்வையைப் போற் சுற்றிக் கொண்டிருக்கு மோர் விதச் சவ்வுப்பை, the membraneous sac enclosing the heart—Pericardium.

இருதயக் கட்டி, இருதயத்தினுள் ளுண்டாகும் கட்டி, an abscess of the heart.

இருதயக் கண்டரை, இருதயத்தினிடது பக்கத்துள்ள பெரிய சுத்தரத்தக் குழாய், the great artery that springs from the left side of the heart—Aorta.

இருதயக் கழலை, உடம்பினுட் தாமரைக் காயினுண்டாகுங் கழலைக்கட்டி. இதனுள் நீர் அல்லது இரத்தம் உறைத்து இதற்கும் தாமரைக் காய்க்கும் சம்பந்த மேற்படும், a tumour or swelling containing any fluid or solid blood in direct communication

with the cavity of the heart--Cardiac aneurysm.

இருதயக் குவிப்பு, இருதயச் சுருக்கம், the contraction of the heart--Systole.

இருதயச் கூச்சு, இருதய முனை, the apex of the heart.

இருதய சனிப்பு, இருதயத்தி லுற்பத்தி யாதல், originating in the heart itself--Cardiogenic.

இருதய சிகிச்சை, தாமரைக்காய்க் கேற் படும் நோய்களுக் கெல்லாம் செய்யும் வைத் தியம், treatment for all diseases of the heart--Cardiotherapy.

இருதய சூலை, மார்பு வலி அதாவது வாயு அதிகரித்து மூச்சு விடமுடியாது மார்பில் வலியை யுண்டாக்கு மோர்வித்தக் குத்தல் நோய், an uneasy and painful sensation with difficulty of respiration due to the deranged condition of the bodily Vayu, which is aggravated by the vitiated chyle and incarcerated in the region of the heart through the action of the deranged bile and phlegm--Cardialgia; 2, மார்சூலை, gout of the heart-Cardiagra.

இருதய தாபிதம், நெஞ்சினுள் ளுண்டாகு மழற் சி, the inflammation of the actual muscular fibres of the heart itself—Myocarditis.

இருதயத் தவறு, மார்புத் தடிப்பு நிற்றல், arrest of the heart's action--Heart failure.

இருதயத் திமிர்ப்பு, இருதயத்தின் உணர்ச்சி யின்மை, absence of sensation in the heart--Cordianesthesia.

இருதயத் திமிர் வாதம், இருதய நரம்பிற் கேற் படும் வுணர்ச்சி யின்மையாகிய வோர் வகை வாத நோய், paralysis of the heart --Cardioplegia.

இருதயத் தடி தடிப்பு, இருதயப் பதை பதைப் பு அதாவது அதிவேகமாய்த் தடித்தல், excessive rapidity in the action of the heart—Tachycardia. It is also called Auricular flutter.

இருதயத் தடிப்பு, நோயினாலும் பயம், மனக் கவலை, கோபம், முதலியவைகளாலும் மார் பின் இடதுபக்கத்தி லிருக்கு மிருதயம் அள வுகடந்து வேகமாய்த் தடித்தல், extreme and unusual rapid action of the heart through disease or emotion, fear, anger exercise, drugs etc.—Palpitation; 2. இரு தயம் அடித்தல், beating of the heart; throb or pulsation of the heart; 3. இரு

தயத்தில் விட்டு விட்டு அடிப்பதனா லுண் டாகு மசைவு, the complete cardiac movement or heart-beat--Cardiac cycle.

இருதய நார்க்கடிமை, இருதயத்தின் தசை நார மைப்புக் கேற்படும் வன்மை, the process of hardening the fibrous structure of the heart: the fibroid induration of the heart--Cardiosclerosis.

இருதய நாளம், இருதயச்தி லோடும் நாளங் கள், veins of the walls of the heart—Venacordis coronary veins.

இருதய நோய், இருதயத்தி லுண்டாகும் நோய் கள், diseasesof the heart; in general, heart affections.

இருதயப் படபடப்பு, see இருதயத் தடிப்பு,

இருதயப் பிடிப்பு, இருதய கமலத்தி லேற்படும் பிடிப்பு, spasm of the heart.

இருதயப் பிதுக்கம், இருதயமான து தரையீரற் தாங்கியில் ஏற்படும் வெடிப்பு மூலமாய் வெளிப் பிதுங்கல், protrusion of the heart through a fissure produced in the diaphragm—Cardiocele.

இருதயப் பிளவு, இருதய வெடிப்பு, rupture of the heart--Cardiorrhexis.

இருதயப் புற்று, இருதயத்திற் புரையோடிய புண், cancer of the heart.

இருதயப் போக்கு, இருதய வசைவு, movement of the heart—Cardiomobility.

இருதய முனை, see இருதயக் கூச்சு.

இருதயம், தாமரைக்காய் அதாவது நெஞ்சறைக் குள்ளிருக்கும் உறுப்பு, இது சைதன்ய மென் கிற உணர்ச்சிக் குறையிடமாயும் 'ஓஜஸ்' யென் னுங் தாதுவிற்கு ஆதாரமாயு முள்ளதும், இரத்தத்திற் கிருப்பிடமாயு முள்ளதுமான வுறுப்பு. ஆங்கிலேய நூற்படி இது தாமரை மொக்கைப் போல் நெஞ்சறைக்குள் தரை யீரலுக்கு மத்தியில் மேற்புறத்தில் துவாரத் தினுள் ஆதாரமுகமாய் மார்பின் இடது பக் கத்திற் தொங்கும். இது நான்கு அறைகளா கப் பிரியினியடைந்து, அதற் கேற்றவாறு இரத்தத்தை ஒரறையில் வாங்கவும், மற்றோ ரறையின் வழியாக வெளியிடவும் அமைக்கப் பெற்ற, பேசிகளாகிய வோர் சுரைக்கருவி. உடம்பிலுள்ள எல்லா வுறுப்புகளிலும் இது சிறந்தது. இதன் மூலமாகத்தான் பெரும் பான்மையாகத் தாதுக்கள் போஷிக்கப்பட வேண்டும். இதுவே உடம்பு சுகநிலையிலிருப் பதற்கும் இல்லாமைக்கும் காரணம். இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த் தும், Heart. According to the Indian

science, it is an organ resembling the lotus situated in the region of the chest. It is supposed to be the primary seat of 'Chaitanya' (*the knowing principle*) and the Dhatu known as 'Ojas' diffused in the human system. It was formerly believed to be the blood-fountain and as such, was regarded as the most important of all the other organs in the system. It is from this organ that most of the tissues are fed and so it forms the fundamental basis for the preservation of health. The changes in the function of this organ are very well indicated by the pulse. According to English Science, it is an organ placed in the thoracic region between the two lungs, and on the left side of the body. It is like a lotus flower in shape hanging reversely. It is divided into 4 cavities—the two auricles and the two ventricles intended for receiving and propelling blood for purposes of purification and circulation.

இருதயம், மனம், mind—the seat of faculties and thought; 2. நடு, centre: 3. உயிர்நிலை, the seat of life; 4. உள்ளம், heart as the seat of passions or emotions, the primary seat of conciousness.

இருதய ரோகம், பல காரணங்களைக் கொண்டு நிண நீர் கெடுதி யடைந்து இருதயத்திற் தங்குவதா லுண்டாகு மோர் வலி. இதை மார்புவலி யென்றும் சொல்லுவார். இதை வடமொழியில் இருத்து ரோகம் என்றும், சித்தர்கள், உருத்திர ரோகம் என்றும் சொல்வர்—இதுவே தமரக வாயு, a characteristic pain in the heart due to the lymph chyle finding lodgment in the heart. This lymph chyle is contaminated by several causes owing to the deranged humours in the system—Heart disease; 2. பொதுவாக இருதயத்தி லுண்டாகும் நோய்கள், diseases in common of the heart—Cardiopathy.

இருதய லயம், இரத் தாசயம் மாறிமாறிச் சுருங்குவதும் விரிவதுமா யுள்ள காலக் கிரமம், the rhythm of the heart beat due to its contraction and dilation.

இருதய வலி, சூலைநோவு, pain in the heart—Cardiodynia; 2. நெஞ்செரிவு, heartburn —Pyrosis.

இருதய வழற்சி, இருதயத்திற் கேற்படு மோர் வித வேக்காடு, inflammation of the heart—Carditis.

இருதய வழவு, இருதயத்திற் குண்டான அவகேடு, deformity or malformation of the heart.—Cardiamorphia.

இருதய வாதம், உடம்பின் வாதம் இருதயத்திற்குப் பரவி வலியை யுண்டாக்கு மோர் நோய், rheumatism affecting the heart, due to the spread of inflammation arising from acute aricular rheumatism and producing valvular disease—Rheumatism of the heart.

இருதய வாயு, இருதயத்தின் நரம்புகளி லேற்பட்ட ஓர்வலி. இதனால் தான் மாரடைப்புண்டாகும், neuralgia of the heart leading to a disease of the heart known as Angina pectoris.

இருதய விரிவு, இரத்தாசய வறுப்புகள் விரியுந்தன்மை யடைதல், the stage of dilatation of the heart—Diastole; 2. இரத்தாசய வறுப்பு நீண்டு விகாரப்படல், dilatation of the heart—Cardiectasis.

இருதய வீக்கம், இரத் தாசயத்தின் வீக்கம், swelling of the heart.

இருதய வுட் கவசம், இரத்தாசயத்தி னுட் புறத்திற் கவர்ந் திருக்கு மோர் சவ்வு, the epithelial lining membrane of the heart —Endocardium.

இருதய வுப்பிசம், இருதயமானது நோயின் காரணமாய் வீக்கங் கொள்ளல், abnormal dilatation of the heart—Cardiac dilatation.

இருதய வெடிப்பு, இரத்தாசயக் கருவிகளி லுண்டாகிய வோர் பிளவு, cardiac rupture—Cardioclasis.

இருத யோற்பத்தி, see இருதய சனிப்பு.

இரு தரு, இரண்டுவகைத் தேவதாரு மரங்கள், the two kinds of Deodar trees.

இரு தவை, இரண்டு பக்கம் தலையும் நடுவி லுடம்பொன்று மானது, two heads on either sides of the body; 2. இரண்டு பக்கம், (*lit*) both ends; 3. இருதலைப் பிண்டம், a monster-fetus with one body and two heads—Dicephalus.

இருதலைக் கடடம், விலாங்கு மீன், a fish characterised by its slimy serpent-like body —Eel.

இருதலைக் குழவி, அம்மிக் குழவி, a pestle with grinding facility on both ends, as opposed

to the common pestle shaped on one side. See also ஒருதலைக் குழவி,

இருதலைக் கூபம், காட்டுச் சீரகம், wild cumin —Vernonia anthelmintica.

இருதலை நோய், வெயில் ஏற ஏற உண்டாகு மோர்வித்தத் தலைவலி, எழுகாயிது, a kind of headache with severe pain beginning with the rising of the sun; 2. தலையில் இரண்டு பக்கமும் ஏற்படும் நோய், headache with pain on both sides of the head — Amphicrania.

இருதலைப் பட்சி, இரண்டு தலைகளையுடையதாகச் சொல்லு மோர்வகைப் பறவை, a fabulous bird supposed to have two heads.

இருதலைப் பாம்பு, மண்ணுணிப் பாம்பு. இதற் கிரண்டு பக்கமும் தலையுண்டு. இது வைத்தியத்தி லுபயோகப்படும், an earth-worm having heads on both ends. It is used in medicine.

இருதலைப் புடையன், இரண்டு பக்கம் தலைகளையுடைய வோர் வகைப் பாம்பு; மண்ணுணிப் பாம்பு, (sand + to wear + snake) இதன் உடம்பிலும் வாலிலும் பளபளப்பான செதில்க ளுண்டு. இது பூமியின் கீழ் வசித்துக் கொண்டு, பூச்சிகளையும் புழுக்களையுந் தின்று வளரும், a species of small blind snake said to have heads on both ends—Typhlopidae ophidia. The body and tail are said to be covered with rounded, polished inbricate scales. It lives underground and feeds on worms and insects.

இருதலைப் பூச்சி, இரண்டு தலைகளையுடைய பூச்சி, an insect with two heads.

இருதலை மணியன், ஓர்வகைப் பாம்பு, இது சாதாரணமாய் மீனமா யிருக்கும், உடம்பு முழுவதிலும் சிறு செதில்க ளுண்டு; வால் சிறிது, பருத்து மீண்ட மூக்குள்ள முகமும் சிறிய கண்ணும், கேரோடிய கணமணியு முண்டு. இது செடி யடர்ந்த சதுப்பு நிலங்களில் வாசம் செய்யும். இதற்கு இருட்டில் கண் நன்முய் விளங்கும். பார்வைக்கு மலைப் பாம்பைப் போலிருக்கும், sand-snake—Gongylophis conicus alias Erycidae ophidii colubriformes. It has a body of moderate length, cylinderical, and covered with small short scales. Its tail is very short, with a single series of subcaudals; head with a broad snout of moderate length; eye rather small with vertical pupil. It will be seen frequenting marshy places with luxuriant vegetation. It is semi-nocturnal and is able to see in dark places as well as in the night. It resembles Pythons and Boas (rock snakes) but belongs to a different species.

இருதலை மாணிக்கம், இருபக்கத்தி னின்றும் வாசிக்கக் கூடிய 'சிவாயவாசி' யென்னுமோர் சிவ மந்திரம், a Saiva Mantram which reads the same when read from either end.

இருதலை விரியன், ஓர்வகை விரியன் பாம்பு, இதைச் சாதாரணமாய் மைதானங்களிற் காணலாம், கடிப்பதில்லை. இதன் உடம்பில் நீட்டுப் போக்கான செதில்க ளுண்டு. பாம் பாட்டிகளிடம் அடிக்கடி இதைப் பார்க்கலாம். அவர்கள் இதன் வாற் பக்கத்தையும் தலை மாதிரிக் காண் பிப்பார்கள் the, two headed viper—Eryx johnii. It is common in the plains and never bites. Its body is covered with longitudinal series of scales. It will be found frequently in possession of snake-charmers who mutilate the end of the thick and short tail in such a way as to make it resemble the head.

இருதவாயு, தமரக வாதம் அதாவது மாரடைப்பு. இதனல் நெஞ்சுவலி, மூச்சுத் திணர்தல், மயக்கம், முதலிய குணங்கள் காணும், breastpang—Angina pectoris. It is a disease marked by thoracic pain with suffocation and giddiness. See இருதயவாயு.

இருதாரைக் கத்தி, இரண்டு பக்கமும் கூர்மையுள்ள கத்தி, a blade sharpened on both edges.

இருதா விருதம், (இருத + ஆவிருதம்) see இருதாவிருத வாதம.

இருதாவிருத வாதம், (இருத் + ஆவிருத + வாதம்) மார்பு, விரை, முதுகு, முதலிய விடங்களிற் பரவு மோர்வித வாதநோய். இதனல் வாயு இருதயத்திற் தங்கி மார்பில் வாளால் அறுப்பதுபோல் வலியையும், உடம்பு கனத்தல் கீலைகளில் வலியையும், அரோசகத்தையும், இளைப்பையு முண்டாக்கும், a kind of angina extending to the chest, ribs and the back owing to the accumulation of gas in the thoracic region. It is marked by cutting or piercing pain in the chest, heaviness of body, pain in the joints, loss of appetite, fatigue, vomiting etc.

இருதி, வெண் பித்தளை, princes metal,

இருதி ராசம், வேனில், the summer season,

இருது, இரண்டு மாதப்பருவம், a period of two months; 2. மகளிர் சூதகம், the monthly course; catamenia; 3. மகளிர் முதற் பூப்பு. the first menstrual discharge; 4 இலந்தை, Indian plum-Zizyphus jujuba.

இருது, பெண்களுக்குக் கருப்பை வழியாக மாதந் தோறும் சாதாரணமாக வெளிப்படும் இரத்தம். அப்பொழுது கருப்பையில் இரத்தம் திரண்டும் உட் சவ்வுகள் வளர்ந்து மிருக்கும்.

சித்த நூலின்படி, இவ்விரத்தத்திற்கு அனேக சிறந்த குணங்கள் இயல்பிலேயே அமைந்துள்ள தென்று கருதி இதை அடியிற் கண்டபடி வாதம். வைத்தியம், மாந்திரீகம் முதலிய வித்தைகளுக்கு இரகசியமாக உபயோகித்து வந்ததாகத் தெரிகிறது.

1. இரசாயன நூலின்படி இவ்விரத்தத்திற்கு நீர்க்குந் தன்மை இயல்பிலே வாய்ந்த தெனக் கருதி வன்பொருள்களை நீராக்கும்படி உபயோகப் படுத்தி வரப்பட்டது.

2. வாத நூலின்படி, உலோகங்களி லுள்ள தாதுப் பொருள்களைக் கருப்பையி லிருக்கும் இவ் விரத்தத்தில் உள்ள வஸ்துக்களுக்கு மாற்றச் செய்விக்கும் சக்தி இயல்பிலே பொருந்தி யுள்ளதால் இழிந்த லோகங்களை பொன்னாக்கச் செய்வதற்கு இதை மற்றச் சரக்குகளோடு உபயோகப்படுத்தப்படும்.

3. மாந்திரீக நூலின்படி, இது சாலவித்தை, பில்லி, ஏவல், சூனியம், முதலியவைகளுக்கும், உருமாற்றம், மறைப்புமை, யந்திர தந்திரம் முதலிய வித்தைகளுக்கும் மிக்க உபயோகப்படும்.

The discharge of blood from the uterus, occurring normally at intervals of a lunar month. It is attended with congestion of the genital tract and the growth of the uterine mucous membrane — Menses.

According to Siddhars' science, great virtues and marvellous qualities are attributed to this menstrual blood and so, it was evidently used secretly in several arts, such as, Alchemy, Medicine Magic, etc as mentioned below.—

1. (*In Chemistry*) It was regarded as a solvent medium and as such, it was used for dissolving certain solid substances.

2. (*In Alchemy*) The base metal undergoing transmutation has been compared to the seed within the womb in relation to the menstrual blood and as such, it was used as an active principle for making gold.

3. (*In Mantric science*) It was freely used in magic, black art, sorcery, witchcraft, change of features in the body, in the art of one becoming invisible, psychic diagrams and for other occult purposes.

இருது உடையாதவள், எப்பொழுதுமே ருதுவாகாதவள், a woman who does not menstruate at all. See இருசி.

இருதுகாலச் சீவல, பெண்கள் மாத விடாய் காலத்தில் இரத்தம் வெளியிற் படாதபடி யோனிவாயிலே யடைத்து வைக்க வுபயோகிக்கும் பழஞ்சீலைத் துண்டு. இத்துண்டு, வைத்தியம், வசியம், மாந்திரீகம் முதலியவைகளுக் குபயோகப்படும். முதல் ருதுச்சீலை மிக்க சிரேஷ்டமான தெனக் கருதப் படும், a piece of old saree used by women to plug the vaginal orifice so as not to allow the menstrual blood to ooze out or escape during their menstrual period, and soil the cloth etc. This piece, especially the one used in the first menstrual discharge is considered to have great efficacy in medicine and magic such as, black art, sorcery, necromancy etc.

இருதுகாலம், மாத விடாய்க் காலம், the period of menses; 2. கருப்பந் தரிப்பதற் குரிய காலம், அது பூப்படைந்து 5 நாள் முதல் 16 நாள் மட்டும், the period for conception in women i.e., from the 5th to the 16th day after the menses, after which conception does not seem to arise.

இருதுக் கொடியோன், பவளம், கொடிப் பவளம், coral, coral creeper.

இருது சாந்தி, சாந்திகலியாணம், consummation of marriage.

இருது சூலை, பெண்களுக்கு மாதவிடாய் கோளாறடைவதால் கருப்பையி லேற்படு மோர் வகைக் குத்தல் நோய், a uterine disease in women due to irregular menstruation or other disorders in menstruation. It is marked by pin-prick pain in the womb —Dysmenorrhoea

இருதுச் சீலை, see இருது காலச்சீலை.

இரு தூத்தம், இருவகைத் தூத்தம் — வெண் தூத்தம், மயில் தூத்தம், the two kinds of

உக்கிரம், முருங்கை, drum-stick tree — Moringa pterygosperma; 2. கொடுமை, severity; heat of mind; 3. நோய் வேகம், the height or the zenith of a disease; 4. இலாமிச்சை, cuscus grass—Andropogon muricatum; 5. கரு நொச்சில், common chaste tree—Vitex trifolia; 6. கார முள்ளது, that which is pungent, in allusion to pepper; 7. கினத்தைக் குறிக்கும் கொடுமை, பயங்கரம், குரூரம் முதலியன, an angry mood expressive of cruelty, fierceness, ferocity etc; 8. அனேகம் பூண்டுகளைக் குறிக்கும் பெயர், the names of different plants viz. Artemesia sternutatoria; Pimpinella involucrata; the common caraway; Ligusticum Ajowan, etc; 9. பெருங்காயம், asafoetida; 10. வெப்பம், heat or temperature as in fever; 11. உறைப்பு, pungency.

உக்கிர ரோகம், கொடிய நோய், a vehement disease; 2. கண்ணிற் சக்கரம் போற் தடித்து, மூடுவதற்கு முடியாமல் வலி யுண்டாகி அரிப்பும் எரிச்சலும் மேற்பட்டுத் தண்ணீர் வடிந்து, கண் புகைச்சற் கம்மியது போற் றோன்று மோர்வகைக் கண்ணோய், an eye-disease marked by a circular growth of

flesh, inflammation, itching sensation, smoky vision and inability to close the eye-lids owing to excessive pain.

உக்கிர வாந்தி, கனத்த வாந்தி, excessive vomiting — Hyperemesis; 2. இரத்தங் கக்கும் வாந்தி, vomit containing blood—Bloody vomit.

உக்கிர வெயில், கடுமையான வெயில், intense heat of the sun.

உக்கிர வைப்பு, புதிதாக வளர்ந்து தானுகவே மறையும் சதை, a new growth which disappears spontaneously — Pseudoplasm.

உக்கிரா காந்தம், வசம்பு, sweet flag — Acorus calamus.

உக்கிரக் கிரக வாதம், ஓர்வகை வாதநோய், இது வணவின் பிசகினாலும், அகால போசனம், பகல் நித்திரை, மிகு சையோகம், சீத ளமான விடத்தில் படுக்கை முதலிய குற்றங் களினாலு மேற்பட்டு, மார்பு, தலை, கண்டம், கீழ்வயிறு, மர்மஸ்தானம் முதலிய விடங் களிற் பரவும். அப்பொழுது உடம்பு வலி, குத்தல், குடைச்சல், இளைப்பு, திமிர், கனம், எரிச்சல், முதலியவைகளே அடிக்கடி யுண் டாக்கும், a form of rheumatism characterised by pain in the body, darting pain radiating along the course of the nerves, fatigue, numbness, heaviness, burning sensation etc. It is said to arise from improper diet, irregular habits such as, untimely meals, day-sleep, excessive indulgence in sexual intercourse, sleeping in moist places etc. It chiefly affects the chest, the head, the neck, the abdomen and the genitals.

உக்கி ராசம், see உக்கிரச் சுரவார்.

உக்கிரா தகம், கரு நெல்லி, black-berried featherfoil; black honey shrub — Phyllanthus reticulatus.

NOTE.—This botanical name does not seem to apply to the black gooseberry contemplated in the Tamil Medicine.

For details see கரு நெல்லி.

உக்கி ராதிதம், கரு வேல், black Babool — Acacia arabica.

உக்கிராந்தி, உடலை விட்டு உயிர் போதல், departure of life or soul from the body —Death.

உக்கிரி, வசம்பு, sweet flag — Acorus calamus; 2. கரு வசம்பு, a black variety of sweet flag.

உக்கிரீகம், ஓம வல்லி, a variety of thick-leaved lavender with the fragrance of omum. This should not be confounded with கருப்பூர வல்லி.

உக்கிரை, கரு வசம்பு see உக்கிரி.

உக்கிறம், மணித் தக்காளி, fox-grape—Solanum nigrum.

உக்கின மரம், பட்டுப் போன மரம், decayed tree; 2. புழுத்த மரம், worm-eaten tree.

உக்கு, இலவங்கம், which see; 2. எஃகு steel.

உக்குதல், பட்டுப் போதல், to rot or decay; 2. மெலிதல், to pine or waste away.

உக்குளான், சருகு தின்னும் முயல், a hare which is said to live on dry leaves.

உக் கெலும்பு, மா ரெலும்பு, breast bone — Sternum.

உக்கை, எருது, bull.

உங்காரம், ஓர் ஒலி, the sound, hum! hum!!

உங்காரணை, அவுரி, indigo — Indigofera tinctoria.

உங்குணி, பெருங் கிளிஞ்சில், a sea-fish of a light blue colour—Caesio chrysozona.

உசகம், ஆமணக்குச் செடி, see ஆமணக்கு.

உசரி, முள்ளி, a thorny shrub in common.

உசரிதம், நெருஞ்சில், a thorny shrub; small caltrope—Tribulus terrestris.

உசரிபம், see உசரிதம்.

உசரு, உசர், } உயிர், life.

உசலம், உசல், } see உசில்.

உசலோற்கம், முயல், hare.

உசற் காலம், சூரியோதயம், sunrise.

உசிச் செடி, புல்லுரி, a parasitic plant—Loranthus genus. See உச்சிச் செடி.

உசிதம், பெருங்காயம், assafoetida—Ferula asafoetida; 2. கஸ்தூரி மஞ்சள், round zedoary—Curcuma amada.

உசித வசனம், சரியான சாப்பாடு, a good dinner or food; 2. மேம்பட்ட உணவு, rich meal.

உசிரம், இலாமிச்சை வேர், a fragrant root — Andropogon muricatus; 2. மிளகு, pepper; 3. செவ்வியம், black pepper plant—Piper nigrum.

உசிலத் தூள், உசிலம் பொடி, which see.

உசிலம், சீக்கிரி மரம், oil-cake tree; washing tree — Albizzia amara alias Mimosa amara. See உசிலை.

உசிலம் பட்டை, உசில மரத்தின் பட்டை, the bark of the oil-cake tree.

உசிலம் பாசி, see உசிலம் புல்லுருவி.

உசிலம் புல்லுருவி, 108 கற்ப மூலிகைகளுள் ஒன்று, a parasite on the oil-cake tree. It is one of the 108 drugs described in the Tamil Medical science for promoting longevity—It is a plant (*unidentified.*)

உசிலம் பொடி, சீக்கிரிப் பொடி, அதாவது சீக்கிர மரத்தின் இலையை உலர்த்தி இடித்துச் செய்த பொடி. இது தலை மயிரைக் கழுவ வுதவும். இதை விரணங்களுக் கிட்ட தைலப் பசையைப் போக்க வேண்டி வுபயோகப் படுத்தப்படும், a powder prepared out of the dried leaves of the black Sirissa tree. It is used for washing the hair and for cleaning sores or ulcers treated with oil.

உசிலம் போசிதம், உசில மரத்தி னிலை, the leaves of the dark Sirissa tree.
See உசில யிலை.

உசில யிலை, உடம்பு தேய்த்துக் குளிப்பதற் காகத் தற்கால சவுக்காரக் கட்டி (soap) யைப்போ லுபயோகிக்கும் உசில மரத்தின் இலை, the leaves of the black sirissa tree used in bathing just like the soap of the present day. See உசிலம் பொடி.

உசி லரைப்பு, see உசிலம் பொடி. இது எண்ணெய்ப் பசையைப் போக்கக் கூடியதா லிப் பெயர், it is so called from its virtue of removing the oil from any substance even as soap does.

உசிலின் மேற் புல்லுருவி, see உசிலம் புல்லுருவி.

உசிலை, உசில மரம். இதற்குப் பல பெயருண்டு —ஊஞ்ச மரம், உரிஞ்ச மரம், அரைப்பு மரம், துரிஞ்சில், சுரஞ்சி, சீக்கிரான் முதலியன.

இம் மரம் சுமார் 30 அடி உயரம். சிறிய மஞ்சட் பூக்கள். காய் வரிசைகள் தட்டை, மூன்று முதல் ஆறு காய்கள், விதை துவர்ப்பா யிருக்கும். இதனின்று எண்ணெய் எடுத்துக் குஷ்டத்திற்குக் கொடுக்கலாம்.

பூக்கள் சிறங்கு, வீக்கம், முதலியவைகளுக்கு வைத்துக் கட்ட வுபயோகப்படும். இலைகள் கண்ணேயைப் போக்கும், உடம்பு குளிக்க வுபயோகிக்கலாம், மயிரின் அழுக்கை வாங்கும், oosilay tree — Albizzia amara alias Acacia amara alias A. pennata alias Mimosa amara. It goes under different names as Black bair or black jujube, oonjal, absorbing tree, oil-cake tree, Washing tree, Chickrainy etc.

Tree 30 ft. high; unarmed; leaflets 20 to 30 pairs; flowers small and yellow in globular heads.

Seeds are medicinally astringent; oil from seeds given in leprosy; flowers externally applied to eruptions and swellings; leaves useful in ophthalmia and they are generally powered and used for washing the hair with.

உசி லோசிதம், கருப்புக் கடுக்காய், a black variety of gall-nut—Terminalia chebula.

உசில், see உசிலை.

உசீரம், இலாமிச்சை வேர், see உசிரம்.

உசு, உளு, wood-worm.

உசுக்கல், see உசுப்புதல்.

உசுப்பல், உசுப்புதல், } எழுப்புதல், to wake up; to rouse.

உசுவாச நிசுவாசம், மூச்சு; அதாவது உள்ளே போகும் வெளியே வரும் மூச்சுகள் இரண்டுக்கும் பொருத்தும், இரேசக பூரகம், respiration, applied to both inspiration and expiration; (*in Yoga philosophy*) the vital air inhaled through the right and exhaled through the left nostril and vice versa.

உசு வாசம், மூச்சை யுள்ளே யிழுத்தல், the act of drawing air into the lungs—Inhalation; 2. பிராண வாயுவை யுட்கொள்ளல், inhalation of prana (the vital air) through the right nostril—a practice in Pranayama.

உச்சங்க வர்த்தமம், ஓர்வகைக் கண்ணேய். இது சாதாரணமாய்ப் பாலர்களுக்குக் கண்ணிமைக்குள் சிவப்பு கறுப்பு நிறக் கொப்புளங்களே யுண்டாக்கி மறுபடியும் அவைகளின்

சுற்றி அனேக கொப்புளங்களைக் கிளைக்கச் செய்யும், a rolled up and indented boil or eruption appearing along the lower lid on its exterior side with its mouth or head directed inward. Numerous other eruptions will also arise around the original ones. It chiefly attacks youngsters and children.

உச் சங்கினி, see உச்சங்க வர்த்தமம்.

உச்சடம், ஓர் புல், a kind of Cyperus; 2. ஓர்வகை வெள்ளைப் பூண்டு, a kind of garlic; 3. குன்றி மணி, Indian liquorice — Abrus precatorius; 4. சரளங் காய், Indian plum—Flacourtia cataphrachta.

உச்சட்டை, ஒல்லி, thinness.

உச்ச தரு, எல்லா மரங்களையும் விட வுயரமாக வளர்ந் திருக்கும், தென்னை, அல்லது பனை மரம், palmyra or cocoanut tree, etc. which is taller than the other trees; 2. உயர்ந்த மரம், any lofty tree.

உச் சதிகை, ஏறு நெற்றி யுடைய பெண், a woman with a high or steep forehead.

உச்சத் தலம், உச்சி, the crown of the head.

உச்சந்த மாதல், தணிதல், to become mitigated as a disease does.

உச்சந் தலம், see உச்சந் தலை.

உச்சந் தலை, தலையி னுச்சி, the crown of the head—Vertex; 2. கபித் தலை, the top of the head; the point on the surface of the skull at the junction of the coronal and saggital sutures—Bregma.

உச்சந் தலைத் தோல், மூடி மாமிசம், that portion of the scalp situated on the top of the head; the outer covering of the skull at the crown of the head.

உச்ச பாஷாணம், பலக்கப் பேசுதல், talking loudly.

உச்சம், உயர்ச்சி, height; 2. உச்சந் தலை which see; 3. ஜாதக நிலையு ளொன்று, (*in astronomy*), the exalted position of a planet; 4. மத்தியானம் அல்லது உச்சிப் பொழுது, midday; 5. மிக்க வுயர்ந்த இடம், the top or the highest point — Acme.

உச்சம் போது, உச்சிப் பொழுது, noon; midday.

உச்சரிடம், மலம், excrement, dung.

உச்சரித்தல், மந்திரம் செபித்தல், to chant mantrams or magic incantations.

உச்சரிப்போன், மாந்திரீகன், one who chants mantrams; a magician; 2. வித்தைக் காரன், necromancer.

உச்சர், மலங் கழித்தல், to empty the bowels by evacuation; to evacuate the body by throwing out excretion; to discharge feces.

உச் சலம், அறிவு, knowledge; 2. மனம், mind.

உச்சற்கம், அபானம், the anus or the pelvic region in general.

உச்சன், நெட்டை யானவன், a tall man.

உச்சாகம், உள்ளத்தின் மிகுதி, fullness of mind. See உற்சாகம்.

உச்சாடனம், இருப்பிடத்தை விட்டு ஓட்டுந் தொழிலாகிய எட்டுவித்தக் கருமத்துள் ளொன்று, the art of driving away or causing a person to quit his place; causing a person to quit his occupation by magical incantations — Exorcism; 2. பேய் பிசாசு முதலியவற்றை யோட்டல், expelling an evil spirit or devil from a person or place by adjurations and ceremonies — Exorcism; 3. ஏவல் அல்லது சூனியம், incitement by magic or necromancy of an evil spirit or demon to cause injury or ruin to any one at will.

NOTE.—This is considered to be one of the 64 arts and sciences described in the Hindu Sastras called 'Kalaigyanum.'

உச்சாடனம், தைலத்தாலும், வாசனைச் சரக் குகளாலும் உடம்பைத் தேய்த்துச் சுத்தி செய் தல், cleaning or rubbing the body with oil or perfume; 2. புகையிட்டுச் சுத்தி செய்தல், cleaning by fumigating.

உச்சாணி, தலையி னுச்சியிற் காணு மோர் வகைக் கட்டி அல்லது விரண நோய், an ulcer on the crown of the head.

உச்சாதனம், சிலந்தி, பிளவை, முதலியவைக ளில் சதை வளர்ச்சிக்காக வுபயோகிக்கும் மருந்து அல்லது மூலிகை, drugs used in abscess or for the growth of flesh in an ulcer.

உச் சாரணம், உச் சாரணை, } உச்சரித்தல், chanting in a manner to give force and expressiveness to what is uttered; 2. உச்சாடனம் அதாவது ஏவுதல், one of the eight kinds of magic. See அட்ட கருமம்.

உச்சாரம், மலம், fecal matter; feces,; discharge; excrement.

உச்சாரிடன், மலங் கழித்தோன், one who has had evacuation of the bowels.

உச்சி, நடுப் பகல், mid-day ; 2. உச்சந் தலை, which see ; 3. தலை, the head ; 4. புல் ஆருஷி, Indian mistletoe — Loranthus longiflorus ; 5. ஆண் மயிர், males' hair ; 6. நாய், dog.

உச்சிக கந்தி, பதங்கித்த கந்தகம், sublimed sulphur.

உச்சிகம், மேலாகப் போய்ப் படிந்தது அதாவது பதங்கம், that which has deposited on the top by sublimation — Sublimate.

உச்சி குளிர்தல், உச்சி கொதிப்பி னின்றும் குளிர்ச்சி யடைதல், cooling of the head from excessive heat.

உச்சிக் கரண்டி, குழந்தைகளின் தலையில் எண்ணெய் விடுவதற்காக வுபயோகிக்கு மோர் சிறிய கரண்டி, a small spoon particularly used for pouring oil on the head of an infant while giving it a bath; 2.பொட்டுக் கரண்டி, a small spoon corresponding to a tea-spoon.

உச்சிக் கரண்டி யளவு, தேயிலைக் கரண்டி யளவு, tea-spoonful—Cochleare infantis.

உச்சிக் கலயம், சன்னி கொள்ளுங்கால் உச்சியில் செய்யும் சிகிச்சை, a treatment resorted to, while under delirium ; fomentation of the crown of the head with a hot substance to relieve one from delirium.

உச்சிக் காலம், நடுப் பகல், mid-day.

உச்சிக் குடுமி, உச்சந் தலைக் குடுமி, a lock of hair on the crown of the head.

உச்சிக் குழி, குழந்தைகளுக்கு நடுத் தலையிலிருக்கு மோர் மெதுவான சதையினால் மூடப் பட்ட பள்ளம். இது பித்திகை யென்புகளுக்கு மத்தியிலே நாற்கோணமான இடம், a membraneous space on the crown or the top of the child's head—Anterior fontanelle. It is a quadrangular space left on the head of an infant, where the frontal and the parietal bones meet.

உச்சிக் குழிகை, see உச்சி வீழுகை.

உச்சிக் கொடி, புல்லுருவி, a parasitic plant.

உச்சிக் கொண்டை, உச்சிக் குடுமி, a tuft of hair on the crown of the head; 2. சேவல் முதலியவற்றின் தலைச் சூட்டி, the tuft or the plume on the head of certain birds, like the cock etc—the Comb or the crest of birds.

உச்சிக் கொம்பன், காண்டா மிருகம், rhinoceros, from its having one or two straight and vertical horns on the nose; 2. நிமிர்ந்த கொம்புள்ள மாடு, a bull or cow having vertical horns ; 3. தலையுச்சியில் ஒரே கொம்புள்ள மிருகம், an animal with only one horn on the head —Unicorn.

உச்சிச் சமயம், மத்தியானம், noon.

உச்சிச் சிரசு, தலையுச்சி, the crown of the head.

உச்சிச் செடி, மரங்களின் உச்சியில் முளைக்கும் புல்லுருவி, a parasitic plant growing upon the top of trees ; Indian mistletoe—Loranthus longiflorus.

உச்சிடாதி, see உச்சிச் செடி.

உச்சிட்ட போசனம், ஒருவன் உண்டு மிகுந்த எச்சிலை அருந்தல், eating the leavings of another man.

உச்சிட்ட மோதனம், எச்சில் சோறு, leavings of food.

உச்சிட்டம், எச்சில், refuse ; remains.

உச்சிட் டாஞ்சி, செம் மரம், red wood—Soymida febrifuga.

உச்சித சங்கம், நற்சங்கிலை, the leaf of the four-spined Monetia — Azima tetracantha.

உச்சித பண்டம், தகுதியாகச் செய்த பண்டம், a delicious thing; a preparation highly pleasing to the taste.

உச்சிதம், தகுதி, suitability ; 2. மேன்மை, excellence, 3. நெருஞ்சில், small caltropes — Tribulus terrestris; 4. அழகு, beauty.

உச்சி தோஷம், குழந்தையி னுச்சி தாயின் மார்பில் படத் தாய்க் குண்டாகும் நோய், a kind of Dosha or morbid diathesis by which the mother is attacked with cold and fever. It is said to be caused by the infant's crown of the head coming in contact with the mother's breast or more properly with the epigastrium (pit of the stomach).

NOTE.— This is unknown to Western science.

உச்சித் திலகம், சிகப்புப் பூ வள்ள வோர் பூஞ் செடி, an unknown flowering plant with red flowers.

உச்சித் துவாரம், குழந்தைகட்கு வுச்சியி லுள்ள இரண் டிரண்டு ரந்திரம், a vacancy in the infant's cranium between certain bones i.e. at the junction of four bones viz. the frontal, the parietal, the temporal and the sphenoid bones. This will be closed up after a few months–Fontanelle. See also உச்சிக் குழி; 2. (*In Philosophy*) பிரம ரந்திரம், a subtle medium said to be diffused in the vacant space at the crown of the head in the human body.

உச்சித் திகம், செவ் விண்டு, a sensitive tree—Mimosa rubicaulis. See இண்டு.

உச்சிப் படுகை, see உச்சிப் படுதல்.

உச்சிப் படுதல், see உச்சி தோஷம்.

உச்சிப் பிளவை, உச்சந் தலையி லுண்டாகு மோர் வகைக் கிலந்தி. இது சாதாரணமாய் ஏவல் சூனியத்தால் ஏற்படு மென்று நம்பப் படுகிறது. அதுவு மன்றி இத்தகைய வ்ரண நோய்கள் உடம்பின் தன்மையைக் கருதிப் பல விதங்களாக வேற்படும், an ulcer breaking out on the top of the head. This is generally said to be caused by the art of Necromancy (சூனியம்) in which an evil spirit is incited through magical incantations. Several are the diseases said to arise from the said art, according to the nature of the constitution of the victim and his idiosyncrasy.

உச்சிப் பொழுது, நடுப் பகல், mid-day; noon.

உச்சி மயிர் குலுக்கல், உச்சி மயிரைப் பிடித்துத் தூக்கும்படிச் செய்தல், to give a shake or shock to the body by holding fast the tuft of hair on the crown of the head.

உச்சி மயிர் வாங்கல், மாந்திரீகத்தில் ஒருவ னுக்கு ஏவல் சூனியம் அல்லது கெடுதி வினைக்க வேண்டி அவனது உச்சி மயிர் வாங்குதல், (*In Mantric Science*) securing the hair on the crown of the head of an intended person, for using it in witchcraft with a view to injure him.

உச்சி மல்லிகை, ஊசி மல்லிகை, eared-jasmine — Jasminum auriculatum.

உச்சி முகறல், குழந்தையி னுச்சியை அன்பின் மேலீட்டினல் முகருதல், smelling the crown of the head of a child through affection.

உச்சி மூலம், see உச்சி மேடு,

"தா ளவனுடி னின்ற தலமது உச்சி மூலம்"
(திவெள்ளு. சற்பம்).

உச்சி மேடு, தலையின் நடு விடம், the central region of the head, which is supposed to be the seat of விந்து, one of the Tattwas.

உச்சி யிடிக்கை, குழந்தையி னுச்சந் தலை, தாயின் முலைக் காம்பிற் படுவதா லவளுக் குண்டாகும் நோய், a morbid diathesis in a nursing mother, said to be caused by her nipple coming in contact with the crown of the head of the suckling child. See உச்சி தோஷம்.

உச்சி யுள்ளங் கால், உச்சி முதல் உள்ளங் கால் வரை அதாவது உடம்பு முழுமையும், from head to foot, which means the entire body. See சர்வாங்கம்.

உச்சி யெண்ணெய், குழந்தைகளின் உச்சந் தலையில் காலையி லிடும் சிற்றுமணக் கெண் ணெய், castor-oil smeared in the mornings on the crown of the infant's head.

உச்சிர தந்தி, see உச்சிரதம்.

உச்சி ரதம், பிரண்டை, square-stalked vine — Vitis quadrangularis.

உச்சி ரந்திரம், see உச்சித் துவாரம்.

உச்சிலகம், உடம்பி னேர் பாகம், a particular part of the human body.

உச்சி லிங்கத் தேள், புவன கிரியி னுச்சியில் காணப் படுவதாகச் சொல்லப்படும் இறகு மூனைத்த வோர் வகைச் செந்தேள். இது செம்பைக் கொட்டினல் செம் புருகு மெனக் கருதப்படும். இது மனிதர்களைக் கொட்டி னல் வீக்கம், நரம்பு வலி, மயிர் சிலிர்த்தல், சீதளம் முதலிய குணங்களை யுண்டாக்குவ துடன் மரணத்திற் கேது வாக்கும், a kind of winged red scorpion supposed to be found on the top of Buvanagiri hills near Chidambaram in the S. Arcot Dt. It is said that copper melts when stung by it. Its sting will cause swelling, affection of nerves, erection of the hair, chillness etc., and sometimes death.

உச்சி லிந்தி, கரு நெல்லி, black-berried featherfoil — Phyllanthus reticulatus. See உக்கிராதகம்.

உச்சி வட்டம், உச்சிக் குழி, which see.

"ஆனந்தமாகி னின்ற அகாரமாம் உச்சி வட்டம்." (திருவள்ளு. சற்பம். 300.)

உச்சி விழுகை, குழந்தைகளைத் தாக்கி மரணத் திற் கேதுவாக்கு மோர் அபாயமான குறி, இந் நிலையில் குழந்தையின் தலையில் பள்ளம் விழும், a depression of the anterior fontanelle indicating the serious condition of infants due to dangerous diseases from which they may be suffering.

உச்சி வுதயம், குழந்தை பிரசவிக்கும் போது முதலாக உச்சி வெளிக் காணல், (*In midwifery*) the presentation of the upper part of the fetel head in labour—Vertex presentation.

உச்சி வுருமம், நடுப் பகல், midday.

உச்சி வெளி, தலையி னுச்சியி லுள்ள வெட்ட வெளி, the etheric space supposed to exist at the crown of the head; 2. பிரமரந்திரம், (*in Yoga philosophy*) a subtle medium of extreme tenuity and elasticity supposed to be diffused in the vacant space at the crown of the head. It is said to be the medium of transmission of light, heat, electricity etc, in the human system.

உச்சி வேர், பூமிக்குள் ஊடுருவிச் செல்லும் செடிகளின் ஆணி வேர் அல்லது மூல வேர், the main root of a plant, penetrating the earth downwards—Tap-root.

உச்சினி, இரண்டா மாதம், the second month.

உச்சீ கரணம், பதங்கம், the process by which a solid substance is brought into the state of vapour by application of heat, without melting it—Sublimation.

உச் சீவனம், உய்கை, revival of life.

உச் சீவித்தல், நோயி னின்று பிழைத்தல், regaining life, as from a disease; 2. மரணத் திற் கேதுவாக்கும் நிலைமையி னின்றும் தேறுதல், to pass off the crisis of a disease and become free from the jaws of death.

உச்சுவலம், பொன், gold.

உச் சுவாசம், see உசுவாசம்; 2. மேல் மூச்சு விடல், to breathe hard; 3. மூச் செறிதல், snorting; 4. நீண்ட மூச்சு உள்ளே வாங்கல், to take a deep breath.

உச்சு வாசனம், see உசுவாசம்.

உச்சு வாசிடம், மூச்சு, respiration; 2. மூச்சு விடல், exhalation; 3. பெரு மூச்சு விடல், sighing.

உச் சுவாவல, காமம், love or passion; 2. பொன், gold; 3. பிரகாசம், splendour or brightness.

உச் சூனம், கொழுப்பு, fat.

உச் சேதம், வெட்டி யெடுத்தல், cutting out or cutting off any part—Excision.

உஞ்சக் கால், மூட வாட்டின் கால், which see.

உஞ் சட்டை, ஒல்வி, see உச்சட்டை.

உஞ்சல், see உசில்.

உட காலம், விடியற் காலம், dawn.

உடக்கு, உடம்பு, body.

உடக் கெடுத்துப் போதல், உடம்பு மெலிந்து போதல், to grow thin and emaciated, as in tuberculosis; 2. சதை யற்றுத் தோலு மெலும்பு மாதல், to be reduced to skin and bone.

உடக்கை, உள்ளங் கை, as in

"ஒருனான உடக்கை யத தன்னில் தேய்க்க
உத்தமனே வெருதூ மோடெ் தானே." (கருஞ். குருநூல்.)

(*In Palmistry*) the palm of the hand.

உடசத் தோல், வெட்பாலைப் பட்டை, the bark of the ivory tree; 2. குடசப் பாலைப் பட்டை, the bark of a twining plant — Asclepias volublis.

உடசம், வெட் பாலை, dysentery rosebay—Nerium antidysentericum alias Holarhena antidysentericum; 2. பன்ன சாலை, அதாவது ஓலைக் குடிசை, the habitation of a hermit erected with palmyra or other leaves.

உடசிப்பி, சிப்பி முத்து, oyster pearl, as distinguished from pearls got from other sources.

உடணம், இஞ்சி, ginger; 2. மிளகு, pepper; 3. சுக்கு, dried ginger; 4. திப்பிலி மூலம், root of piper longum—Piper cubeba.

உட நடை யலங்கம், திகைப் பூச்சி, a peculiar insect inducing perplexity of mind. For details see under its proper head.

உடப்பு, துறட்டி முள் மரம், West Indian cock spur—Pisonia georgina alias P. aculeata.

உட முள், வேல மரத்தின் முள், the thorn of the Acacia tree.

உடம், வேல மரம், babool tree — Acacia (*genus.*)

உடம்படல், உடம்படுதல், } உயிருக்கும் உயிருக்கும் ஏற்பட்ட பொருத்தம், harmony of soul to soul.

உடம் படுத்த நோய், திரிதோஷக் கோளாறுகளினாலும் மனோ வியாகூலத்தினாலும் சுபாவமாகவே வுடம்பி லேற்படும் நோய், a disease of an idiopathic type due to the morbid diathesis of the body arising from the action of any of the three fundamental bodily humours or from the dynamical energies of the mind.

உடம் பறியாமற் போதல், மூர்ச்சித்துப் போதல், swooning; 2. உணர்ச்சி யற்றுப் போதல், becoming senseless; to be void of perception; 3. மெய் மறத்தல், becoming unconscious.

உடம் பறியாமை, தன்னை மறத்தல், literally, unconsciousness as in swoon etc; 2. சுழுத்தி நிலை, (*In Yoga Phliosophy*) a state of insensibility to one's own surroundings; 3. மருள், (*In religious philosophy*) a degree of delight that arrests the whole mind or in which the mind is carried away, as it were, from the body —Ecstasy.

உடம் பிலவ, நெடி நாரை, fragrant cherry nutmeg—Polyalthia fragrans.

உடம் பிறுகல், உடம் புறுதிப் படல், உடம்பு வலு வடைதல், the state of being invigorated.

உடம்பின் கூறு, see உடற் கூறு.

உடம்பு, உடல், body; 2. பொன், gold; 3. உயிருக் கிருப்பிடம், the abode of the life or the soul.

உடம்பு, சாதாரணமாகச் சட வஸ்துக்களாகிய எலும்பு, இரத்தம், தசை, நார் முதலியவைகளால் ஆக்கப்பட்டு, உயிருக் கிருப்பிடமாக விருந்து கொண்டு இவ்வுலகில் உயிர் வாழ்க்கைக்குக் காரணமாக வுள்ள மனிதர் அல்லது பிராணிகளின் கூடு, (*In Physiology*) the physical or the material frame together with its constituent parts, such as, bone, blood, flesh, tendons etc. of man or of any other animal. It forms the seat of life and means of our material existence in this world; 2. தசை, இரத்தம், கொழுப்பு, எலும்பு, நரம்பு முதலியவைகளி னுறுப்புக்களானவை, பிராணன் உதானன், சமானன் முதலிய தசவாயுக்களின் பேதங்களோடு ஒன்றுகக் கலப்பதால் உயி ருண்டாகி, ஆத்துமா, மனம், அறிவு, புத்தி முதலியவைகளுடன் கூடிப் பிண்டமாகத் திரண்ட வோர் கூடு, (*In Philosophy*) the trunk or animal frame with its organs and life, which are derived from the union of the seven component parts, namely flesh, blood, marrow, bone, nerve etc, with the ten vital airs. It maintains its existence in harmony with the mind, the intelligence, the soul, the sense, etc.; 3. பூர்வ கர்மப்படி, வந்து சேர்ந்த வுடம்பு, (*In Religious Philosophy*) any animated body assumed as a result of the deeds of former births; 4. ஆகமத்தின்படி வகுக்கப் பட்ட மூவகை உடம்பு, தூலம், சூக்குமம், காரணம், (*In Agama Philosophy*) the three-fold enumeration of the bodies viz.-the physical, the subtle or the astral and the causal; 5. வேதாந்தத்தின்படி வகுக்கப் பட்ட, யாதனை, பூதனை, பரிணாமா என்ற மூவகை உடம்புகள், (*In Vedantha Philosophy*) the three classifications of bodies viz.—

(*a*) யாதனை சரீரம், தண்டனையை யனுபவிக்கத் தக்க சரீரம், இதற்குப் புரியட்டக மென்றும் பெயர், the body capable of undergoing unending suffering in hell. It is also called the Astral body.

(*b*) பூதனை சரீரம், the body as it exists in its present state—the Physical body.

(*c*) பரிணாம சரீரம், திரிபடைந்து சேர்ந்த தேகம், அஃதாவது தூல தேகம் போன்றது, a body changed from the present state i.e., a modified form resembling the physical body.

உடம்பு கட்டு விடல், உடம்பு தளர்தல், infirmity through old age.

உடம்பு கறுத்தல், உதடு முதலியவை கறுத்தல், சுரத்தினாலேற்பட்ட வோர் வகைத் தோஷம், a kind of Dosha (defect) arising from fever—Asphixiated condition.

உடம் புகா, சடி தொரட்டி, painted-leaved tailed tick trefoil—Uraria picta.

உடம்பு காந்தல், உடம்பு வெப்பங் கொள்ளல், body becoming hot.

உடம்புக் கட்டு, உடம்பி னுறுப்புகள் தளராதிருத்தல், the firmness of the structure of the body.

உடம்புச் சத கதப்பு, சுரத்திற்கு முன்னதாக வெழும்பும் கொதிப்பு, the rising heat as felt just before fever.

உடம்புச் சன சனப்பு, சுரங் காய்வதா லான கொதிப்பு, heat as felt after the appearance of fever—Temperature.

உடம்புச் சனப்பு, see உடம்பு சன சனப்பு.

உடம்பு தேறுதல், நோயால் குன்றிய வுடம்பு வழு வடைதல், to be strengthened from a canvalascent state; picking up strength by a patient; 2. உடம்பு குணம் படல், to recover health.

உடம்பு நடுக்கம், நோய், பயம், கோபம், முதலியவைகளி னுடம்பில் ஏற்படும் சோர்வித அசைவு, trembling (tremor) arising from disease, fear, anger or excitement; 2. குளிரினு லுடம்பு உதறல், சாதாரணமாக உடம்பு நடுக்கம் அடியிற் கண்டகாரணங்களி னுண்டாதும், a shaking fit from cold. Tremor generally may occur from the following causes:—

(*a*) பாஷாணத்தி னேற்பட்ட நடுக்கம், a tremor resulting from arsenic poisoning—Arsenic tremor.

(*b*) உதறு வாதம், அல்லது நடுக்கு வாதத்தி னுண்டாவது, a persistent tremor from paralysis agitans—Continuous tremor.

(*c*) தசைச் சுறுக்கத்தா லேற்பட்ட முறை வரிசை யுள்ள நடுக்கம், the rhythmic trembling due to alternate contraction and expansion and stretching, as in old age, of muscles—Fibrillary tremor.

(*d*) சூதக வாயு சம்பந்தமான நடுக்கம், a tremor seen in hysterias—Hysteric tremor.

(*e*) இரச வேக சம்பந்தத்தி னாலும், மூளி னினாலு மேற்படும் நடுக்கு வாதம், a kind of tremor due to mercurial poisoning—Tremor mercurialis.

(*f*) அதிகக் குடி போதையி னேற்பட்ட நடுக்கம், trembling of drunkards; tremor of alcoholics (habitual drinkers of alcohol)—Delirium tremens.

(*g*) உலோக விஷ சம்பந்தத்தி னேற்பட்ட நடுக்கம், a tremor seen in various metallic poisonings—Metallic tremor.

(*h*) கை, கால், முடக்கமா யிருக்கும் போது அசைக்க முயன்றலுப்போ தண்டாகும் நடுக்கம், tremor of the limbs on attempting voluntary motoin—Intentional tremor.

(*i*) அபினி போதையா லேற்படும் நடுக்கம், the tremor of opium users—Tremor opiophagorum.

உடம்பு நன்று யிருத்தல், உடம்பு செளக்கியமா யிருத்தல், to be hale and hearty.

உடம்பு பிடித்தல், உடம்பிற் சதை பெருகுதல், picking up flesh; 2. உடம்பைக் கைகளாற் பிடித்து அமுக்குதல், the process of pressing the parts of a person's body—Shampooing.

உடம்பு பரட்டுதல், உடம்பி லின்று அழுக்கை நீக்கி விடுதல், to remove the dirt from the body.

உடம்புப் பொடி, அழுக்கைப் போக்கவும், மேனியை மிருதுவு முடையோரிக்கும் வாசனைப் பொடி, a powder for rubbing over the body, in place of soaps and cosmetics which are now used in bathing.

உடம்பு வறட்சி, உடம்பிற் மேற்றோ லுலர்ந்து காணல், abnormal dryness of the skin—Xerosis; 2. உடம்பிற் மேற்றோல் கொதகொதத்து வரண்டி யிருக்கும் நோய் கோய், a disease marked by roughness and dryness of the skin, especially in a disease like ichthyosis—Xeroderma.

உடம் பெடுத்தல், பிறத்தல், to take birth or to be born; 2. சதை பிடித்தல், to pick up flesh. See உடம்பு தேறுதல்.

உடம் பெரிப்பு, உடம் பெரிச்சல், burning sensation in the body. See உடம் பெரிவு.

உடம் பெரிவு, உடம்பின் எரிச்சல், இதி னிரத்தநடுக்கம், பித்தநடுக்கம், வரட்சி முதலிய காரணங்களி னேற்படும், burning sensation in the body. This is generally due to the aggravated condition of blood, and bile.

உடம்பை, கலங்கல் நீர், turbid water.

உடம்பைத் தேற்றல், நோயா லினைத்த வுடம்பை மருந்து கொடுத்துத் தேற்றுதல், toning

up the body with medicine; 2. இனைத்த வுடம்பிற்குத் தகுந்தபடி ஊட்டங் கொடுத்தல், strengthening the body by nourishment during convalescence; 3. உடம்பை வலு வடையச் செய்தல், invigorating the system.

உட லதிர்ச்சி, காயம் அல்லது மனோ வியாகூலத்தினுல் நரம்புக் குண்டாகு மதிர்ச்சி, a sudden vital depression, due to an injury or emotion acting on the nervous system—Shock.

உட லந்தம், உடம்பு பழிவு, disintegration of the body.

உடலம், உடம்பு, body common to man and brute.

உடலற் பனை, திப்பிலிப் பனை, elephant's palm—Caryota urens.

உட லனல், உடம்பில் நிற்கும் சூடு, animal heat.

உடலாதி யந்தம், உடல் முழுமை, the body as a whole.

உடலிம் பனை, கூந்தற் பனை, elephant's palm —Caryota urens. See உதளிப் பனை.

உட லிரண் டுயி ரொன்று, இளிஞ்சில், bi-valve; 2. இரண்டு உடம் புள்ள வோர் கோர ரூபமான பிண்டம், a monster fetus with two bodies. It is supposed to be a defect in the development of twins.

உட லிருந்த வீடு, உடலினின் றுயிர் நீங்குவதற்கு முன்னதாகவே தன்னுடைய செய்கைகளினுல் ஆசா பாசங்களை யறுத்து மாயையினின்று விலகி நிற்றல் அதாவது சீவன் முக்தி, a stage at which one is liberated from subjection, controlling power or influence and is freed from all bondage or restraint of any kind; emancipation of the soul *before the death* of the body.

NOTE.—Men of this type are mostly indifferent to all concerns of life and are hidden in the mood of the thought of Atman.

They are really lost to the world and centred in the bliss of awakening existence.

They have indeed a course of empirical existence, but in it they are mostly unconcerned. They are actuated by no selfish desire, but always by a cosmic sense to do good to others. They live for others until the occasion arises, when they enter the Deep and forsake the flesh and the acquired personality. Men of such liberated souls are called Jeevan Mukthas (ஜீவன் முக்தர்) in the language of Agama Philosophy.

உட லிறந்த வீடு, இறந்த பின் எல்லா விதபாசபந்தங்களினின்றும் விடுதலை யடையும் சீவாத்துமா, அல்லது விதேக முத்தி, liberation of the soul from all bondage and restraint *after death* — Emancipation of the soul. c.f. உட லிருந்த வீடு.

உட லுருக்கி, பொதுவாக வுடம்பை உலரச் செய்யும் நோய், generally it is a term for any disease which results in emaciation of the body; 2. குடலைச் சுற்றி யிருக்கும் சவ்வுக்குத் தாபிதங் கண்டு அதனுல் குழந்தைகளுக்கு நோயுண்டாகி வுடம்பை யினைக்கச் செய்யு மோர் வகை நோய். இதற்குக் கணைச்சூடு என்றும், உள்ளுருக்கி என்றும், தமிழ்ப் பெயர்களும் பாலசோஷணம் என்ற வடமொழிப் பெயரு முண்டு. இவ் வுடம்பின் மெலிவு அடியிற் கண்டபடி வேறுவிதக் காரணங்களினுலும் உண்டாகலாம், tuberculosis of the mesenteric glands in children, resulting in digestive derangement and wasting of the body—Tabes mesenterica or Tabes mesarica. The wasting or emaciation may also be caused in any of the following ways:—

1. நீரிழிவினுல் நரம்பு தளர்ந்து உடம்பு மெலிதல், a peripheral neuritis occurring in diabetic patients—Diabetic tabes.
2. கர்ப்பச் சூட்டினுல் நோயுற்று உடம்பு மெலிதல், muscular emaciation from congenital causes—Hereditary tabes.
3. முள்ளந் தண்டுக் கழிவு கண்டு அதனுடம்பை யினைக்கச் செய்தல், wasting away of the body due to the degeneration of the vertebral column; locomotor ataxia—Tabes dorsalis.

உட லுற்பத்தி, கருக் குழியில் பிண்டம் ஜனித்தல், the development of the products of conception in the womb.

உட லூதல், உடம்பு பருத்தல் அல்லது வீங்கல், இது அடியிற் கண்டபடிப் பல காரணங்களை முன்னிட்டு ஏற்படலாம். அவையாவன, swelling of the body—Edema. This may be caused through several causes as mentioned below viz;—

1. கர்ப்ப தொந்தத்தினு லுண்டாகும் உடம்பு வீக்கம், local swelling due to a peculiar inherited tendency —Hereditary edema.

2. வாயு தோஷத்தினுல் உடம்பு மெலிந்து காணும் வீக்கம், swelling marked by rapidly spreading wind with destruction of tissues —Malignant edema.

3. பிறந்த குழந்தைக்கு உடம்பு சில்லிட்டு நிறங் குலைந்து காணும் வீக்கம், spreading edema with cold and livid skin found in new-born children — Edema neonatorum.

4. இரத்தம் நீர்த்தலினுற் காணும் வீக்கம், swelling occurring from a watery condition of the blood — Non-inflammatory edema.

5. உப்பிலாப் பத்தியம் காக்கும் போது உப்பைச் சேர்த்தலினு லுடம்பூதல், swelling produced by addition of or by increase of salt in the diet of a patient—Salt edema.

6. உடம்பில் எப் பாகத்திலாவது வாதநீர் தங்குவதனு லேற்படும் வீக்கம், temporary swellings in any part of the body, due to effusion of fluid—Flying edema.

உட லெடுத்தல், see உடம் பெடுத்தல்; 2. உட்ற் கொழுத்தல், becoming fat; to put on flesh; 3. பிறத்தல், to be born; to take birth.

உட லெரிவு, see உடம் பெரிவு.

உடல், உடம்பு, body; 2. பொன், gold; 3. உப்பு, salt; 4. மூவகை வுடம்பு, தூலம், சூக்குமம், காரணம், the three-fold enumerations of the body viz; the physical, the subtle or the astral, and the causal. See உடம்பு.

உடல் கனத்தல், உடம்பு பருத்தல், to grow stout and heavy.

உடல் கனப்பு, உடம்பு காந்தல், growing hot.

உடல் காய்தல், சுர மடித்தல், to suffer from fever.

உடல் திடித்தல், உடல் பருத்தல், growing stout.

உடல் தளிர் காணல், மெலிந்த தேகம் மறு படியும் சதை பற்றல், putting on flesh.

உடல் தளிர்த்தல், see உடல் தளிர் காணல்.

உடல் நீர் முறித்தான், தேத்தான் கொட்டை, clearing nut—Strychnos potatorium.

உடல் நோய்க் கூறு, உடம்பை யடித்த நோய் களி னியல்பு, the nature of bodily diseases.

உடல் பாரிப்பு, உடற் பருமன், grossness or fleshiness of the body—Corpulency.

உடல் பூரித்தல், see உடல் பூரிப்பு.

உடல் வகை, தூலம், சூக்குமம், காரணம் என மூன்றும், the three kinds of bodies namely the physical, the astral, and the causal.

உடல் விடா வீடு, See உட விருந்த வீடு.

உடல் விடு வீடு, See உட விறந்த வீடு.

உடல் வெதுப்பு, உடம்பை யடித்த உஷ்ணம் அல்லது சூடு, bodily heat; animal heat.

உடல் வெள்வளா, உடம்பில் சில வுறுப்புகளில் மாத்திரம் காணும் மேற்றோல் வெளுப்பு, abnormal whiteness in patches on the skin or particular parts of the body, —Leucoderma.

உடல் வேதிச்சி, கொடி வேலி, leadwort—Plumbago Zeylanica.

உடற் கடுப்பு, உடம்பினி லேற்பட்ட யெரிவு, burning sensation in the body; 2. உடல் வெதுப்பு, which see; 3. உடம்பின் குத்தல், darting pain in the body, as in rheumatism.

உடற் கட்டு மந்திரம், மந்திரத்தினுல் பிறருக்குத் தீங்கு கினைவிக்க வேண்டித் தேவதைகளை ஏவி விடுவதற்கு முன்னதாகவே மாந்திரீகன் அத்தேவதைகள் திரும்பி வந்து தன்னைத் தாக்காத படிக்கும், அவைகளினுல் தனக்கு எவ்வித மான கெடுதியும் நேரிடாத படிக்கும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வுச்சரிக்கும் மந்திரம், a magical spell or ceremony resorted to, by a magician to safeguard himself from reflex action, before exciting a demon or raising spirits for purposes of injuring others.

உடற் கழிவு, உடம்பி னின்று கழியும் மல மூத்திராதிகள், discharged waste-matter from the body such as, urine, feces etc. — Effete matter.

உடற் கனப்பு, see உடல் கனப்பு.

உடற் காயம், உடம்பி லேற்பட்ட காயம், bodily or physical injury.

உடற் காய்ப்பு, உடற் தடிப்பு, thickness of the body and the limbs; 2. உடற் றழும்பு, scar or scars on the body.

உடற் குறை, தலை யற்ற வுடம்பு, the headless body; the trunk; 2. உடம்பி னுறுப்புக் குறைவு, want of part or parts in the body; 3. உடம்பி லேற்பட்ட எட்டு வித அவயவக் குறைவு, அவையாவன, the eight kinds of bodily defects in the human system viz:—

1. குள்ளம், dwarfishness.
2. செவிடு, deafness.
3. மூகை, dumbness.
4. கூன், crookedness or hunch-back.
5. குருடு, blindness.
6. மருள், insanity.
7. உறுப்பில்லாப் பிண்டம், trunk; destitute of limbs.
8. பேடு, impotency.

உடற் குறைவு, உடம்புக் குண்டான ஐந்து விதக் கேடுகள், அவையாவன:–the five kinds of defects in the body viz—

1. கொட்டாவி, yawn.
2. நெட்டை, stretching of limbs with a crackling noise.
3. குறு குறுப்பு, collection of phlegm in the throat.
4. கூன் நிமை, bending of the body.
5. கட்டு விழல், a turn of the body; turning head over heels.

உடற் குற்றம், மனித வுடம்புக்கு ஏற்பட்ட பதினெண் குற்றங்கள், the eighteen moral and physical imperfections or defects attributed to the human body viz.—

1. பசி, hunger.
2. நீர் வேட்டல், தாகம், thirst.
3. பயம், fear.
4. வெகுளி, கோபம், anger.
5. உவகை, சந்தோஷம், delight.
6. வேண்டல், ஆசை, desire.
7. நினைப்பு, thought.
8. உறக்கம், தூக்கம், sleep.
9. நரை, greyness.
10. நோய், disease.
11. மரணம், death.
12. பிறப்பு, birth.
13. மதம், self-conceit.
14. இன்பம், pleasure.
15. அதிசயம், suprise.

16. வியர்த்தல், perspiration.
17. சோதம், துக்கம், grief.
18. கை யறவு, inability.

உடற் கூறு, உடம்பின் கட்டுப் பாடு, (*in Anatomy*) the structure and constitution of the human body; 2. இயற்கையாக உடம்பிற்கு ஏற்பட்ட பிரிவுகள், the real nature of the several divisions or parts of the human body, their structure, frame work and quality; 3. உடம்பின் பாடு, a set or series of parts or organs which unite in a common function, as in circulatory system, nervous system, digestive system etc; 4. உடம்பின் சுபாவம், peculiarity of temperament or constitution of a particular individual — Idiosyncrasy. 5. உடம்பின் தன்மை, the nature of the human body in general.

உடற்கூற் றிலக்கணம், உடம்பி னுறுப்புகளின் தொழில்களையும், அவைகளின் தன்மையையும் பற்றிக் கூறு மோர் நூல், the science which treats of the real nature of the several divisions or parts of the human body, its structure, frame, quality and also the functions of the several organs and their phenomena—Physiology.

உடற் கூற்றுத் தத்துவம், உடம்பி னமைப்பையும் அதற் குரிய விவரங்களையும் கூறும் நூல், the science dealing with the description and the structure of the hun an body.—Anatomy; 2. உடம்பினுள் னமைந்த தத்துவங்களைப்பற்றிய உண்மை, the knowledge or study of the philosophic conceptions of the several organs in the human body. See அங்காதி பாதம்.

உடற் கூற்று வண்ணம், பட்டினத்தடிகள் செய்த வோர் நூல். இது உடம்பின் தத்துவங்களைப் பற்றிக் கூறும், a book on the philosophy of the structure of the human body by Pattinathar, a Saint.

உடற் கொழுப்பு, உடம்பினுள் பல வுறுப்புகளிற் காணும் கொழுப்பு, the fat or adipose tissue whitish or of yellow colour found in certain parts of animal bodies—Adipose tissue; 2. உடற் பருப்பு, corpulency or plumpness due to abundant food—Adiposis; 3. குடற் கொழுப்பு, fat of the intestines; 4. அரோசகத்தை யுண்டாக்கு மோர் நோய், a disease characterised by aversion to food.

உடற் கொள்ளுதல், உடம்பிற் றங்குதல், உடம்பி லேற்றுக் கொள்ளுதல், being absorbed in the system; being taken or received agreeably into the constitution.

உடற் சக்கரம், உடம்பினுள் ளமைந்துள்ள ஓர் தத்துவம், the existence of a peculiar faculty in a particular organ of the human body.

" உடற் சக்கரத்தி னுறுப்பையும் காட்டி "
(விகா. அகலல்.)

உடற்சி, கோபம், anger.

உடற் பரு, உடலிற் காணும் பரு, a wart on the body—Verruca.

உடற் பொருள், உடலுக்குள் ளுண்டாகும் கஸ்தூரி, கோரோசனை, புனுகு, அம்பர் முதலிய பொருள்கள், scented substances such as, musk, bezoar, amber etc. found inside the body of animals; 2. கோரோசனை, a concretion of various character from the stomachs and intestines of animals. —Bezoar. It is highly esteemed as a medicine by our Veidyans.

உடற் றத்துவம், உடம்பினியற்கை, the nature of the human body; 2. உடம்பினி லமைந்துள்ள தொண்ணூற் றாறு தத்துவங்கள், the ninety six bodily and mental organs, faculties, matter etc; 3. உடம்பினுக் குரிய மூவகைத் தத்துவங்கள் —ஆத்தும தத்துவம், சிவ தத்துவம், புத்தியா தத்துவம், the three classes of faculties or powers in the system.

உடற்றல், உடம்பி னுள்ளே பிரயோகித்தல், administering into the body; 2. வருத்துதல், causing affliction to the body: 3. வலி யுண்டாக்கல் causing pain to the body.

உடற் றழும்பு, உடலி லுண்டாகும் மச்சம், பரு, காயம் முதலியவைகளினு லேற்பட்ட அடையாளம், mark in the body such as, a mole, a wart, a scar, discolouration of the skin left by an injury on the human body etc.

உடற் றளிர், see உடல் துளிர்த்தல்.

உடற் றுளிர்ப்பு, நோயால் மெலிந்த வுடல் மறுபடியும் வளருதல், the picking up of flesh after emaciation due to illness.

உடற் றொழில், உடம்பினுள் ளுண்டாகும், இரத் தோட்டம், சீரணம், சுவாசம் முதலிய தொழில்கள், the different physiological functions, such as urination, digestion respiration etc., in the body of living animals.

உட னிகழ்ச்சி, ஒரே காலத்தில் நிகழ்வது அதாவது சிரவங்கள் இரண்டும் ஒரே காலத்தில் விரியும் போது சடரங்கள் இரண்டும் சுருக்க மடைதல், the occurrence at the same time—Synchronism e.g. the dilation of the two auricles synchronous with the contraction of the two ventricles.

உட னிகழ்தல், உட னிகழ்வு, } see உட னிகழ்ச்சி.

உட னுறவு, உட னுறைவு, } உடல் சம்பந்தம், புணர்ச்சி, sexual combination; the habitual coition or sexual intercourse of man and woman.

உடன் கட்டை யேறினவர், வயித்திய முப்பு, (*in Medicine*) a universal solvent prepared out of three kinds of salts as contemplated in Siddhar's science.

உடன் கட்டை யேறுதல், இறந்த கணவனுடன் மனையி முயிரோடு நெருப்பிற் குதித்தல், woman ascending the funeral pyre of her husband—Sati.

உடன் கூட்டு, ஒன்றுகச் சேர்த்தல், to unite or blend as is done with two or more ingredients in medicine.

உடன் கூட்டு சுண்ணம், அப்போது தாளித்த சுண்ணாம்பு, quick-lime reduced to powder afresh by mixing with water — Fresh slaked lime; 2. காரச் சுண்ணம், unslaked lime.

உடன் மறு, see உடற் றழும்பு.

உடு, ஆடு, sheep; 2. வெள்ளாடு, goat; 3. சீக்கிரி மரம், see உசில்.

உடு காட்டி, பொன்னாங் காணி, an edible plant with white or yellow flowers — Illecebrum sessile alias Alternanthera sessilis.

உடுக்கலாந் தண்ணீர், மேனாட்டு வாசனையுள்ள தண்ணீர். இது ஆங்கிலேய வார்த்தையினின்று மருவி வந்த பெயர், a solution of fragrant oils to which ether is also added — Eau de cologne or Cologne water.

உடுக்கலான், see உடுக்கலாந் தண்ணீர்.

உடுக்குச் சுருக்கம், உடம்பின் கடுவி லிருக்கும் உறுப்பினுடைய (அதாவது வயிறு அல்லது

உடும்பு நாக்கன், பொய்யன், a liar.

உடும்பு நாக்கு, இரு பிளப்பா யுள்ள நாக்கு, the tongue of guana which is cleft into two parts—Bifid tongue.

உடும்புப் பித்சு, உடும்பின் பித்துப் பை, the bile-duct of guana.

உடும்பு முத்து, உடும்பி னிடமாகப் பிறந்த முத்து, a pearl-like substance supposed to be derived from guana.

உடும்பு லேகியம், உடும்பி னிறைச்சியைக் கொண்டு தயாரிக்கும் லேகியம். இது உடம் பிற்கு வலிமையையும், தாது புஷ்டியையு முண்டாக்கும், an electuary prepared from the flesh of guana and prescribed by Veidyans for promoting strength and increasing semen.

உடும்பை, see உசில்.

உடு வேரகம், காட்டு சீரகம், wild cumin—Vernonia anthelmintica.

உடை, வேல மரம், acacia tree in general; 2. குடை வேல், umbrella thorn—Acacia tomentosa alias Mimosa ebernea; 3. சீருடை மரம், silver-thorned acacia—Acacia latronum; 4. உடை வேல், arrow thorn tree—Acacia planifrons; 5. கல் வேல், a variety of acacia; 6. கால், leg.

உடை கோல், குடை வேல், see உடை.

உடைக் கல், காவிக் கல், red ochre.

உடை சினை, காம இச்சையினல் அல்லது ஆசைப் பெருக்கத்தினல் உடையும் பெண் கள் கருப்பையி லிருக்கும் சினைகள், vesicles of De graaf—Vesiculae graafianae.

உடைச் சிட்டை, உடை உசில், silver thorn acacia—Acacia latronum.

உடைதல், தளர்தல், to be reduced in strength; to be debilitated; 2. பிளத் தல், to crack or split; 3. கட்டி யுடை தல், to burst open as an abscess or a boil does; 4. மலர்தல், to blossom as a flower does 5. சாதல், to die; 6. மனம் சோர்வுறல், relaxed or wearied state of the mind; to be broken hearted; 7. கெடுதல், the state of being broken; 8. தளர்வு, feebleness or debility of the body; 2. அழி தல் as in இந்திரிய முடைதல், becoming watery or vapid as semen does.

உடைதவப் புல், சோணைப் புல், guinea grass—Panicum maximum.

உடைத்தல், புண் அல்லது கட்டியை யுடைத் தல், to open a boil; 2. தகர்த்தல், to break into pieces; 3. பிளத்தல், to cause a fracture as of a skull.

உடைந்த வாய்ச் சிலந்தி, ஆழ்ந்த கீண்ட பிளப் புள்ள சிலந்தி, a deep and more or less linear form of ulcer — Fissured ulcer.

உடைந் தெழ காசம், கண் ணழிகமாய்ச் சிவந் து நீர் வடிந்து பீளை கட்டிவ துடன், கடைக் கண், நெற்றி, காது, உச்சி முதலிய விடங்களிற் குத்தல், வலியையு முண்டாக்கு மோர் வகைக் கண்ணோய், an eye disease characterised by inflammation of the eyes, muco-purulent discharge, shooting pain in the corner of the eye, forehead, ears, crown of the head etc.

உடைப்பு, தளர்வு, see உடைவு.

உடை மேற் புல்லுருவி, உடை வேலின் மேல் வளரும் புல்லுருவி, a parasitic plant found grown on arrow-thorn tree.

உடை மோகப் பச்சை, கதிர்ப் பச்சை, a plant with a fragrant smell.

உடையாக் கட்டி, முகங் காணுமலும், உடை யாமலு மிருக்குங் கட்டி, an abscess which remains without pointing or breaking.

உடை யாச் சிலந்தி, உடையாப் புண், } உடையாத சிலந்தி அல் லது புண், a sore or ulcer not opened—Indolent ulcer.

உடை யுசில், see உடைச் சிட்டை.

உடை வாலக் கீரை, தண்டங் கீரை, garden green—Amarantus blitum.

உடைவு, தளர்வு, weakness, debility.

உடை வேல், see உடை.

உட் கடுப்பு, உள் வலி, internal irritation, see அகக் கடுப்பு.

உட் கட்டு, உடம்பி னுள்ளுறுப்புக்களி னமைப்பு, the structure of the internal organs of the body.

உட் கணு, மரத்தி னுள் முளி, (*In botany*) the knobby or wart-like prominences on the inner side of any plant or tree — Internal tuberosity; 2. எலும்பி னுள்ளே யிருக்கு முளி, (*In anatomy*) an eminence on the inner side of a bone—Inner tuberosity.

It is opposed to புறக் கணு, external tuberosity. See also அகக் கணு.

உட் கண், ஞானக் கண், the eye of wisdom.

உட் கண்டம், கழுத்தி னுட் பாகம், the inner part of the throat.

உட் கரணம், see அந்தக் கரணம்.

உட் கரு, அந்தக் கரணத்தின் போக்கு. இவ் விரகசியத்தைக் குருவி னிடமாகத் தெரிந்து கொள்ளவும், (*In philosophy*) the ways of intellectual faculties of the mind. It is a secret which should be enlightened by a Spiritual Guru or teacher.

உட் கரு, பேய்ப் புடல், a wild snake-gourd — Trichosanthes laciniosa ; 2. முட்டை யின் மஞ்சட் கரு, the yellow part of an egg—Yolk ; 3. வித்து, semen, as opposed to வெளிக் கரு, menstrual blood; 4. கருப் பைக் குள் விருப்பது, அதாவது பிண்டம், (*in Mantric science*) that which is contained within the uterus, generally referring to a foetus three months old.

உட் கருவான, கருக்குள் ளமைந்த, situated within the uterus—Intra-uterine.

உட் கருவி, அந்தக் கரணம், which see.

உட் கல், அழுகல், to rot or decay; to putrify.

உட் கவிசு, வயிற்றைப் பற்றும் ஓர் பாண்டு, dropsy of the abdominal cavity—Ascites.

உட் கழுத்து, கழுத்தின் முன் பாகம், the front part of the neck ; 2. கழுத்தி னுட் பாகம், the inside of the throat. See உட் கண்டம்.

உட் கள்ளம், கட்டி அல்லது புண்ணி னுள்ளே யிருக்கும் வியர் வஸ்து, the hidden humour or matter in an abscess or boil.

உட் காங்கை, உட் சூடு, the latent caloric heat ; 2. உட் சுரம், internal fever.

உட் காந்தல், உட் சூடு, internal heat, as in fever of moderate intensity ; 2. உட் சுரம், fever not appreciable on the surface of the body—Calor internus.

உட் காய்ச்சல், உடம்பி னுள்ளே யடிக்குஞ் சுரம். ஓலேட்டுமமும் பித்தமும் தொந்தித் து நிற்கையில் வாத மானது வயிற்றிற்குள் ளடங்குவதால் இச்சுரம் பிறக்கும். இதற்கு வட மொழியில் 'சந்த சுரம்' என்று பெயர், internal fever. It is due to the concerted action of the phlegm and the bile, while Vatha finds its lodgment in the abdomen. It is called 'Santhajuram' in Sanskrit. See உட்சுரம் ; 2. அற்ப சுரம், slight fever.

உட் கிரந்தி, குடல், ஈரல், இருதயம் முதலிய வுள் ளுறுப்புகளி லுண்டாகு மோர்விதச் சீழ்க் கட்டி, a suppurating or festering tumour forming in any of the internal organs,such as intestines,liver, heart etc.

உட் கிராந்தல்,அம்மை, சயம் முதலியவைகளி னுடம்பினி லுண்டாகுங் கொதிப்பின் காரண மாய் கோரிடும் இளைப்பு, emaciation caused by intense heat in the system arising from small pox, tuberculosis, etc ; 2. வெளிக்காட்டாமல் உடம்பி னுள்ளே பதுங்கி நிற்கும் சூடு, latent heat ; 3. ஓர் வகை உட் சுரம், an internal fever—Febris leipyrias alias F. intestinalis ; 4. வேருன்றல், to become firmly rooted, as does a chronic disease. See உட் காந்தல்.

உட் குடைச்சல், உடம்பினுள் ளுண்டாகும் நரம்பைப் பற்றிய வோர் வலி, a neuralgic pain, affecting the nerves internally.

உட் குத்தல், கட்டி, பிளவை, சிலந்தி, முதலிய வைகளிற் காணும் ஊசியினல் குத்தினாற் போன்ற குத்தல் நோய், a deep-seated pricking pain in boil, carbuncle, ulcer etc; 2. உடம்பினில் ஊசியால் குத்தல், piercing through a part or organ of the body for purposes of injection.

உட் குத்து, உடம்பு காய்ந்து, வியர்த்து, பல் கிட்டி, நா வரண்டு, வாயு ஏழ் நோக்கி, அன் னந் தண்ணீர் செல்லாது வருத்து மோர் சூலையைப் பற்றிய நோய், a kind of tetanus from heart disease, marked by perspiration, lock-jaw, dryness of the tongue, passage of wind downwards, aversion to food and drink etc.—A kind of tetanus ; 2. உடம்பினில் ஊசியால் குத்தி மருந்தை யுட் புகட்டுதல், the act of passing a liquid medicine into a part of the body—Injection; 3. உள்ளு றுப்புக்களைத் தாக்கும்படிக் கொடுத்த குத்து, a blow dealt so as to affect the internal organs.

உட் குத்துப் புறவீச்சு, அடுத்தடுத்துக் குத்த லுண்டாகி வுடம்பையும், கழுத்தையும் பின் னுக்கு வளைத்துக் சூலையையும் பற்றித் துன் புறுத்து மோர் வகைச் சன்னி, a form of tetanus attended with lock-jaw, alternate pricking pain and contraction of the

muscle of the back in which the patient is bent back like a bow. This is said to be a complaint originating in a lover. 2. சரஇுக்குண்டாகும் ஓர் வகை இசிவு நோய், a kind of hepatic complaint attended with convulsions.

உட் குத்து வாதம், see உட் குத்து.

உட் குயிர், உள்ளுயிர், the Deity identified with the life or the soul of each individual; 2. பரமாத்துமா, (உயிரினுட் குயிராகிதாயு,) the universal soul supposed to be inside the human soul.

NOTE.—The soul is said to be of two kinds and is differently termed viz.—the one is the life and the other is the soul or rather the outer and the inner souls called respectively ஜீவாத்மா and பரமாத்மா. The one is supposed to be inside the other.

But Pythagoras and Plato both divided the soul into two representative parts, independent of each other—the rational soul or the logan and the irrational soul or the alogan.

உட் குழி, நாவாய்க் குழி அதாவது யோனியின் உட் குழி, the cavity behind the vaginal aperture—Fossa navicularis; 2. இடுப்பெலும்பினுட் புறம், the inner part of the ilium—Venter.

உட் குறி, உள் னிருந்து காட்டுங் குறி, the internal symptom.

உட் குற்றம், காமம் முதலிய குற்றம், the internal defects such as, the sexual passion etc.

உட் கூதல், வெளிக் காட்டாத குளிர் சுரம், a fever not appreciable on the surface of the body — Calor internes; 2. உடம்பினுள் னேற்படும் குளிர், internal cold; 3. அற்ப சுரம், slight fever.

உட்கை, உள்ளங்கை, the palm of the hand; 2. வலது அல்லது இடக்கைச் சுற்று, the inner side in the bending of the left or the right arm; 3. உட் கல், which see; 4. உட் பக்கம், the inner side of a thing; 5. உள்ளுளவு அதாவது உடம்பினுள் இருக்கியப் பொருள், (*In Philosophy*) the inner secret.

உட் கைச் சுற்று, வலது அல்லது இடக்கைச் சுற்று, see உட்கை.

உட் கொண்ட விரணம், உள்ளுக் குள் புடை கொண்ட கட்டி அல்லது இரணம், an abscess with an internal swelling; 2. மேலெ ழும்பாமல் உள்ளாகக் கரைந்த கட்டி, an abscess which disappears without pointing or breaking—Dry abscess.

உட் கொதிப்பு, உட் காய்ச்சல், a fever heat of moderate intensity and lower in degree than fervor and ardor—Calor.

See அகக் கொதிப்பு.

உட் கொள்ளல், புசித்தல், to take in, as of food or drink; 2. விழுங்கல், to swallow; 3. உள் னிழுத்தல், to draw in, as is done with the tongue; 4. உள்ளுக் னிழுத்தல், to absorb; to draw inwards as of the tongue in paralysis.

உட் கொள்ளிக் கிரந்தி, மேகத்தினுல் உடம்பினுள் காணும் கிரந்திப் புண், venereal or syphilitic ulcer on the internal organs of the body.

உட் கோடல், see உட் கொள்ளல்.

பொதுவாக வேதை பலவிதம் அவையாவன—நிடிகை வேதை அல்லது நொடி வேதை, இரச வேதை, மாற்றுயர்வு வேதை, இலவணம் அல்லது உப்பு வேதை, மாரண வேதை, பரிசன வேதை, மகா குரு வேதை, தொக்க வேதை, குளிகை வேதை முதலியன. முழு விவரத்திற்கும் வேதையின் கீழ்ப் பார்க்கவும், transmuting into gold metals in a state of fusion, by any of the processes such as, by animating or otherwise increasing their potent power by adding other chemicals to them, by consolidating them or by killing their retarding effects or by eliminating the impurities in them.

The processes of transmuting baser metals into refined gold consist of many kinds and those enumerated above are only general classifications.

For fuller details see under வேதை.

உருக் கோள்ளல், கரு வுரு வாதல், formation of organs in the fetus in the womb; development of the embryo in the womb; 2. ஆவேசங் கொள்ளல், to be possessed, as by a spirit or a devil.

உருங்குதல், உண்ணல், to eat.

உருச கதம், நாம் சுவாசிக்கும் காற்றின் நான்கு பங்கில் மூன்று பங்கர் யிருக்கும் உப்பு வாயு, Nitrogen which forms ¾ of the air inhaled by us; 2. உப்பு வாயு கலந்த வஸ்து, a compound containing nitrogen—Nitrogenous compound.

உருசக தேந்திரி யோபாதான பூதங்கள், (உருச கத + இந்திரிய + உபாதான + பூதங்கள் = Nitrogenous + organic + medium + compounds) உப்பு வாயு சேர்ந்த கூட்டு முறை,—Nitrogenous organic compounds.

உருசகம், உப்பு வாயு அடங்கிய உப்பு, salt containing nitrogen—Nitrogenous salt. 2. ஆமணக்கு, which see; 3. மாதளை, pomegranate — Punica granatum; 4. கொம்மட்டி மாதளை, melon lime—Citron medica; 5. இரணம், புண் முதலியவைகளுக் கிடும் காரம், caustic applied to wounds, sores etc.; caustic application.

உருசி, சுவை, taste; 2. மதுரம், sweetness; 3. சாரம், savour; 4. இனிமை, pleasantness; 5. இனிய சுவை, good taste.

உருசி கரம், இனிமையான தது, that which is delicious or savoury; 2. கொறுக்காய்ப் புளி, sweet babool—Pithecolobium dulce.

உருசி கறி, அரைக் கீரை, which see; 2. மதுரமான கறி, delicious curry.

உருசி காணுதல், சுவை யறிதல், to get a taste.

உருசிக்கப் பண்ணல், சுவை யுறும்படிச் செய்தல், to give a good flavour or an agreeable taste to; to season; to give a relish to.

உருசி தட்டுதல், சுவை தோன்றல், giving an agreeable taste.

உருசித்தல், சுவை பார்த்தல், to taste; to relish.

உருசி பார்த்தல், உருசித்தல், the act of tasting—Degustation.

உருசி மாந்தம், பேரீச்சம் பழம், date—Phoenix dactylifera.

உருசிய சிம்மக குட்டம், ஓர் வகைக் குட்ட நோய். இதனுல் உடம்பில் பல கொப்புளங்கள் (முட்கூப் போல் தீண்டும்) மெல்லியதாயும், பிசு பிசுத்தும், சுர சுரத்தும், உள்ளில் கறுத்தும், முனையிற் சிவந்தும், நெருக்க மாக்வும், எழும்பி, இரணங்களாக ஏற்பட்டு, அவைகளில் புழுக்கள் நெளிந்து, வலியையும் எரிச்சலையு முண்டாக்கும், leprosy characterised by large blisters or blebs closely scattered all over the body and followed by developement of masses of granular tissue. These blisters turn to be viscid and sometimes rough. They will be dark internally, red externally, full of germs and generally marked by pain and burning sensation—Nodular leprosy.

உருசியம், காட்டுப் பசு, a wild cow ; 2. மயிர்க ளடர்ந்த எருமையைப் போன்ற மான், a very large kind of deer resembling a buffalo with hair grown thick or bushy —A kind of Yawk ; 3. ஓர்வகைக் குட்டம், a kind of leprosy.

See உருசிய சிம்மக குட்டம்.

உருசி யற்ற, சுவை யற்ற, unsavoury.

உருசியான, சுவையான, palatable; pleasing or agreeable to the taste.

உருசி யுணவு, வாய்க் கினிமையான உணவு, highly-seasoned food ; delicious food.

உருசி வர்க்கம், இனிமையான உருசி யுள்ள பண்ட வகைகள், a class of food substances which are nice and exquisitely delicious to the taste—Dainties.

உருசு பகந்த வீரணம், வாத பித்தத்தினுல் பிறந்து குத வலியங்களே யொட்டி, ஒழுங் கான துவாரங்களே யுண்டாக்கி, சீழை யொழுகச் செய்யு மோர் வகை வீரண நோய், fistula marked by well-defined openings at the anus and discharge of pus therefrom. It is said to arise from the concerted action of wind and bile in the system.

உரு செபித்தல், மந்திரம் உச்சரித்தல், chanting Mantrams (sacred letters and words).

உருசை, see உருசி.

உருசை தரும் பூ, கறி யுப்பு, common salt. It is so called from its lending taste to food or other preparations.

உருச் சிலை, கருங் கல், granite stone with which images are made.

உரு டகம், கரு நாவி, black aconite.

உருட்டிக் காய், பெருந் தும்மட்டி, callous-leaved Bryonia.

உருட்டிப் பார்த்தல், விழியை உருட்டிப் பார்த்தல், staring, after rolling the eyes; 2. கண் சிமிட்டாது விழியை உருட்டி உற்றுப் பார்த்தலாகிய வோர் மரணக்குறி, a symptom of death in which the dying person rolls his eyes and stares at or looks intently; 3. கபால சன்னியில் விழியை யுருட்டிக் கீழாகச் சொருகி, மேற்புருவம் வளையமிட்டுக் காணுதல், a peculiar expression of the eyes in meningitis due to downward rolling of the eye-ball and retraction of the upper lid—Post basic stare.

உருட்டிப் போடல், see உருட்டி விடுதல் ; 2. உருண்டையாகத் திரட்டிப் போடல், to roll into a small ball, as pills are rolled.

உருட்டி மங்கலம், செங் கத்தாரி, false peacock's foot tree—Niebuhria linearis.

உருட்டி விடுதல், சாகச் செய்தல், to cause to die.

உருட்டி விழித்தல், see உருட்டிப் பார்த்தல்.

உருட்டுதல், மருந்தை உருண்டையாக அல்லது மாத்திரையாகச் செய்தல், rolling medicine into tiny balls or pills or globules ; 2. உருண்டையாகச் செய்தல், forming any substance into a ball by rolling.

உருண்டகம், அவுபல பாஷாணம், which see.

உருண்ட நிர்ப்புட்பி, மாதுளை, pomegranate—Punicum granatum.

உருண்ட விசிகை, உருண்டையான தசை நார், round ligament—Ligamenta rotunda.

உருண்டு போதல், இறத்தல், to die.

உருண்டை, திரட்டிய மருந்து, medicine made into globules ; 2. மாத்திரை, pill ; 3. அபினி யுருண்டை, a slang term specially signifying opium ball.

உருண்டை உடைசல், தைலம், குழம்பு, பாயசம் முதலியவைகளைக் காய்ச்சும்போது, பதம் தவறிச் சரியானபடிக் கரையாமல், கட்டியாகவும், கசடாகவும் திரளல், any sediment or precipitate coarsley formed in a thick solution as is sometimes found in the preparation of medicated oils and solutions, pastries etc, owing to some

defects in the process of heating or boiling.

உருண்டைக் கட்டி, see உண்டைக் கட்டி.

உருண்டை போடல், see உண்டை போடல்.

உருண்டைப் பிரண்டை, see உருணைப் பிரண்டை.

உருண்டை விசிகை, வாத்தின் இறகைப் போற் பருமனுடைய நார்ப் பந்தனம். இது கருப்பையையும், அல்குல் தசையையும் பக்கங்களில் அணுசரித்து நிற்கும், the band of round ligaments about the size of a goose-quill extending to the womb, the *mons veneris* and the other contiguous parts.

உருதந்தி, ருதந்தி, see அழு கண்ணி.

உருதும், மிருகம், பறவை முதலியவைகளின் சத்தம், the noise made by animals and birds in general.

உருதும் பண்ணுதல், உச்சரித்தல், chanting, as mantrams are done.

உரு திரிதல், உரு மாறல், to be metamorphosed; 2. உருவம் மாறுபடல், change of features; 3. உள்ளாக மாறல், internal change.

உருத்தகம், ஓர் வித சன்னி, a kind of apoplexy. See உருத்தாக சன்னிபாத சுரம்.

உருத்த குதம், ஓர்வகைக் குத நோய். இது நாள் தோறும் மலத்தை யடக்கி விடுதலால், அபான வாயு மிகுந்து, ஆசன வளையம் சுருங்கி, அதனால் மலம் மிக்கப் பிரயாசையோடு வெளிப்படும் போது ஆசன வாய் வெடித்து, புண்ணாகி வலியை யுண்டாக்கும், a disease of the anus marked by fissures or sores at its orifice and pain while passing stools, due to the unusual contraction of the sphincter muscles. It arises from the aggravated condition of the vital air '*Apana*' due to suppression of stools frequently; 2. ஆசன வாயிலேற் படும் வலியுள்ள ஓர்வித விரணம், a painful linear ulcer at the margin of the anus —Anal fissure. See இருத்த குதம்.

உருத்த மண், பூமி மண், earth.

உருத் தரித்தல், see உருக் கொள்ளல்.

உருத்தல், முளைத்தல், sprouting; 2. கன்மம் விளைதல், resulting in effects, as caused by deeds in former births.

உருத்தாக சன்னிபாத சுரம், ஓர்வகைச் சன்னி பாத சுரநோய், இது அவயவங்களில் மிக்க வலி, உடம் பெரிச்சல், காங்கை, கழுத்து வலி, பிரமை, சோர்வு, பிரலாபப் பேச்சு, தாகம், பேதி, முதலிய குணங்களைக் காட்டும், typhoid fever characterised by excessive pain in the bodily organ, burning sensation in the body, warmth, pain in the neck, stupor, fatigue, delirious talk, thirst, diarrhoea etc.

உருத்தாக சன்னி வாத சுரம், ஓர்வகைச் சுர நோய், இது இரைப்பு, இருமல், மயக்கம், கழுத்தின் நரம் பிழுத்தல், தாழ்வாய்க் கில் பிடித்தல், உடம்பு முழுவதும் குத்தல், நடுக்கம், கழுத்திலும், நெற்றியிலும் வியர்வை, பிதற்றல், தவித்தல், இடை பொருந்தாது புரளல், உதடு உலரல், முதலிய குணங்களைக் காட்டும், an acute rheumatic fever marked by the following symptoms:—Hard breathing, cough, giddiness, contraction of nerves in the neck, lock-jaw, acute pain all over the body, shivering or tremor, perspiration on the neck and the forehead, delirious utterence, restlessness, parched lips etc.—Cerebral rheumatism.

உருத்திர கிரந்தி, மூலாதாரமும் சுவாதிட்டானமும், a common term for the two mystic centres situated in the Pelvic region; 2. ஓர் கொடிய கிரந்திப் புண், a severe type of syphilitic or venereal ulcer.

உருத்திர கோபம், பெருங் கோபம், vehement anger; wrath; 2. மருதாணி, nail dye—Lawsonia alba.

உருத்திர சடை, திரு நீற்றுப் பச்சை, sweet basil—Ocimum basilicium.

உருத்திரசம், பாத ரசம், mercury; 2. மாரடைப்பு, a disease of the heart marked by suffocation and syncope — Angina pectoris.

உருத்திர சன்னி, கொடிய சன்னி, a virulent or fatal type of apoplexy.

உருத்திர சாரம், கூர்ச் சாரம், a caustic or corrosive salt; pungent salt; 2. ஏவ சாரம், a very strong and powerful salt used in Alchemy. It is opposed to சத்தி சாரம், which see.

உருத்திர சிங்கி, கொங்கணவர் சொல்லிய வாத முறைப்படித் தயாரித்த ஓர் வீரிய மருந்து. இதனால் சூதம் சாகும், பாஷாணங்கள் கட்டும், நவலோகங்கள் வேதிக்கும், a powerful alchemical compound prepared as per process laid down in Konganava's work on Alchemy. It is supposed to have an extraordinary virtue of killing or destroying the poisonous

principle in mercury, consolidating poisons especially arsenic and transmuting the nine kinds of metals into gold.

உருத்திர தாகம், கொடிய தாகம், intense thirst—Polydipsia.

உருத்திர நங்கை, கருப்புக் காய் அதாவது கருப்பு அகரம். இது அறுபத்து நாலு கடைச் சரக்குகளி லொன்று, one of the sixty-four kinds of bazaar drugs contemplated in Tamil Medical science.

உருத்திர நட்சத்திரம், வீரம், corrosive sublimate—Perchloride of Mercury ; 2. பூரம், see இரச கற்பூரம்.

உருத்திர பத்திரம், சிவப் பாமணக்கு, a red variety of castor plant. See ஆமணக்கு.

உருத்திர பலம், மிக்க பலம், exalted strength —Hyperasthenia.

உருத்திர புடம், செம் பரத்தை, shoe-flower—Hibiscus mutabilis.

உருத்திர புட்பம், செம்பரத்தை, shoe-flower —Hibiscus rosa-sinensis.

உருத்திர பூ, see உருத்திர பூமி.

உருத்திர பூஷணம், பாம்பு, snake, so called from its being worn by Rudra.

உருத்திர பூண்டு, பெரு மருந்து, Indian birthwort—Aristolochia indica.

உருத்திர பூமி, சுடு காடு, burning ground.

உருத்திரம், மஞ்சள், turmeric — Curcuma longa ; 2. பெருங் கோபம், violent anger; fury ; 3. சிவப்பு, redness.

உருத்திர ரசம், பாத ரசம், mercury. See உருத்தி ரசம்.

உருத்திர ரோகம், மார்பில் ஏற்படும் நோய். இது மூச்சு விட முடியாது துன்புறுத்தும், இது உருத்திரனுக்கு உறை விடமாகிய அனாகதம் அல்லது மார்பின் பாகத்தில் ஏற்படுவதா லிப்பெயர், a disease of the thoracic region characterised by spasmodic suffocative attacks—Angina. It is so called because it is a disease on the Anagatham (அனாகதம்) or Rudra-centre, one of the dynamic nerve-plexus in the human body ; 2. ஓர்வகைக் காச ரோகம், a disorder of respiration in asthma, characterised by difficulty in breathing, cough and expectoration; 3. பொதுவாக மார்பின் உள் ளுறுப்புகளில் உண்டாகும் நோய், any disease of the organs contained in the chest such as, the lungs, the heart etc.

உருத்திர வயிரவம், வாதம், வலிப்பு முதலான நோய்களுக்கு அகஸ்தியர் வைத்திய காவியம் 1500-ல் சொல்லியபடித் தாயாரித்த கடலைப் பிரமாண முள்ள மாத்திரைகள், pills of the size of Bengal grams prepared as per process laid down in Agastyar's medical works 1500 and prescribed for rheumatism, convulsions etc.

உருத்திர வாதம், இருதயத்தின் பலவீனத்தாலும், அதில் கொழுப்புப் படிவதாலும், அல்லது அதிரணத்தாலும், மார்பின் இடது பக்கத்தின் இருதய ஸ்தானத்தில் குத்தல், நோய், மூச்சு முட்டல், முதலிய குணங்களைக் காட்டு மோர் வகை வாதநோய். இதற்குத் தமர் வாதம் என்றும் பெயர், a disease of the heart, characterised by spasmodic suffocative attacks, and cardiac pain on the left side of the chest. It is due to weakness of the heart or accumulation of fat or to indigestion—Angina pectoris.

உருத்திர வாயு, தமரக வாயு, இது வாயு கோளாறடைவதால் மார்பு வலி, மூச்சுவிட முடியாமை, முதலிய குணங்கள் ஏற்பட்டுத் திடீரென நெடிக்குள் கொல்லும் இருதய சம்பந்தமான நோய், a disease of the heart due to the deranged condition of Vayu in the system arising from indigestion, flalulency etc.

It is marked by pain in the region of the sternum (breast bone), suffocation, swoon, inability to sit erect or breathe while in an upright position and so on ; at times it even ends in sudden death.

உருத்திர விஷக் கலிக்கம், குப்பை மேனித் தோல், வெந்த தலையோடு, செம்புத் தூள், தூரிசு, துத்தம், புளியிலைச் சாறு முதலிய வைகளை அரைத்து உருண்டை பண்ணி வைத்துக்கொண்டு, சன்னி, காமாலை, முயல் வலி முதலிய நோய்களுக்குக் கண்ணிலிடு மருந்து, an eye-salve applied in cases of apoplexy, jaundice, convulsions etc. It is prepared by grinding the following medicines: *viz.* bark of the rubbish plant (Acalypha indica), burnt human skull, copper filings, blue vitriol, white vitriol, juice of tamarind leaves etc.

உருத்திர வுப்பு, வெடி யுப்பு, nitre or saltpetre —Potassium nitrate.

உருத்திர வேங்கை, ஓர்வகை வேங்கை மரம், a kind of kino tree probably உதிர வேங்கை, which see.

உருத்திர வைரி, சருப்புச் சுடலை, black Bengal gram.

உருத்திரன், திரு மூர்த்திகளில் ஒருவர். இவர், வேதத்தின்படி யுக முடிவில் ஏற்படும் உகாந்த வாயுவுக்குக் கர்த்தா. புராணக் கொள்கைப்படி, அழித்தற்கு வல்லமை யுடைய கடவுள். ஏகாதச ருத்திரரில் ஒருவர். கிரீக் தேசத்திய கடவுளாகிய அபொல்லோவுக்குச் சமமாகச் சொல்லலாம், one of the three principal deities. *(In the Rig-Veda)* he is the god of tempests *i.e.*, the destructive wind that prevails at the end of the world. *(In Purana)* a name of shiva denoting the destroying power of the deity. *(According to South Indian books)* he is one of the eleven forms of manifestations of Rudran. There is some similarity in him to Apollo, the god of the Greeks, as both the gods bear the bow, have knowledge of medicine and are represented with the mouse sacred to both.

NOTE—The term 'Rudra' is derived by Sayana from the roots 'Rudran and vaidya' meaning 'he who drives away sorrow' and consistent with this derivation, he is called in the Rig-Veda itself 'as the bountiful and the 'Healer' possessed of various remedies (later vaidyanathan)'benign' and 'gracious.'

The ideal of the Highest God has, from the beginning been centred round the person of Rudra or Siva in the Rig-Veda and we find him described as the "Lord of Sacrifices and prayers" and we find this maintained, even in the days of Valmiki when beliefs in other deities were slowly gaining ground. (Studies in Saiva Siddhanta).

உருத்தி ராக்கம், see உருத்தி ராட்சம்.

உருத்தி ராங்க சன்னி, ஓர்வகை சன்னி, a kind of delirium.

உருத்தி ராங்க பீசம், காகோளி, a plant Tizyphus napeca.

உருத்தி ராட்சக் கிழங்கு, ஓர்வகைக் கிழங்கு, Rood-rauk yam—Dioscorea crispata. It is so called from its appearance of a tuber.

உருத்தி ராட்சந்தம், காய்ப் பாகல், buffalo carolah—Momordica hispida alias Bryonia mysorensis. It is a medicinal plant of the Senna species.

உருத்தி ராட்ச மரம், உருத்தி ராட்ச மணியின் மரம். இது மரமாகவும், பெரிய செடியாகவு முள்ளது, பூக்கள் நிறமுள்ளவை. இது சுமத்ரா நாட்டிலும், ஜாவா தேசத்திலு முண்டு. இதன் காய் கறிக் குதவும். வேறு காய்க்கும் தலையனுக்கும் உபயோகிக்கலாம். இதன் கொட்டை தான் உருத்தி ராட்ச மணி. இது கல்லைப் போல் கெட்டியாக விருக்கும், அதி தாகம், விக்கல் இவைகள் போம், bracelet tree—Eleocarpus ganitrus alias E. tuberculatus. It is a tree or a large shrub with simple leaves and small flowers. It is found in our country and also in Java and other tropical parts. Fruit contains a very hard nut with edible pulp surrounding it. It is used in curries and also in pickles (chutney). It is a useful remedy in cases of intense thirst and hiccough.

உருத்தி ராட்ச மரம், தப்பாக்கி மரம் அல்லது தேன் பச்சை மரம். இது 40 முதல் 60 அடி வரைக்கும் வளரும். இலை மாறி மாறியும், பூக்கள் நிறமுள்ளவைகளாயும், வாசனையாயும் இருக்கும்.

பட்டையின் மேல் செதில் களம்பி யிருக்கும், உட் பக்கம் சிகப்பும் சில நிறமும் கலந்தது. உருசியும், வாசனையும் இடையாது. உள்பட்டையைக் கஷாயம் வைத்து யானைக் காலுக்கும், முத்தின மாத்தின் பட்டையை யிரவைவை யுண்டாக்குவதற்கும், மற்றும் மார்பு வலி, சரும நோய், முதலியவைகளுக்கும் கொடுக்கலாம், கஷாயத்தில் சிரட்டைக்குப் பதிலாக வுபயோகிக்கலாம், musket tree or honey-fruit tree — Guazuma tomentosa. Tree grows 40 to 60 ft.; leaves alternate;petals five; many-seeded; flowers scented; bark very scaly and underneath, reddish brown. It is without any taste or smell.

Decoction of the inner bark is used in elephantiasis; the bark of old trees is used as a sudorific and is also given in diseases of the chest and cutaneous complaints. It is a substitute for calumba and gentian.

உருத்தி ராட்சம், உருத்தி ராட்ச மணி, the nut of a tree — Eleocarpus ganitrus; 2. உலக் காரை, wild olive — Eleocarpus serratus; 3. தப்பாக்கி மரம், the musket tree, see உருத்திராட்ச மரம்.

உருத்தி ராணி, சத்தி சாரணை, a species of Trianthema.

உருத் திரிச்சி, பூவழலை, an efflorescent salt grown in the saline soil impregnated with soda.

உருத் திரிதல், see உரு திரிதல்.

உரு பட்சா, பெருங்காயம், asafoetida.

உருபு, see உருவு.

உருபுகம்,
உருபூகம், } ஆமணக்கு, which see.

உரு பேதம், ஜ காரம், the mystic letter 'I'; 2. கரு பேதம், change effected in the embryo; 3. தோற்றம், நிறம் முதலியவை களின் பேதம், change in colour, appearance etc.

உருப் படுதல், மருந்தைப் புடமிட்டுப் பூர்த்தி செய்தல், giving a finishing touch or stroke to a medicine after its calcination; 2. உருவாதல் அதாவது உருவாகத் திரளுதல், formation of organs as in the development of a fetus in the womb; 3. சீர்ப் படுதல், attaining perfection. See உருக் கொள்ளல்.

உருப்படுத்தல், உருக் கொள்ளும்படிச் சீர் திருத்தல், உருவேறப் பண்ணுதல், causing to develop or bringing to perfection in shape and form; 2. மருந்தைப் புடமிட்டுப் பூர்த்தி செய்தல், completing the preparation of a medicine by calcining it.

உருப்பம், வெப்பம், heat, as of the sun; temperature as of the atmosphere; 2. கோபம், anger; 3. தினைமா, ground millet-flour, 4. மிகுதி, intenseness; abundance.

உருப் பிரமம், ஆட்டுக் கொம்பு, sheep's horn.

உருப்பு, see உருப்பம்.

உருப் போடல், மந்திரம் செபித்தல், chanting mantrams a number of times to bring about effect.

உரும காலம், கோடை காலம், summer season; 2. நடுப் பகல், mid-day.

உரு மணி, கரு விழி, the iris of the eye.

உருமம், மத்தியானம், noon; 2. நடுப் பகல், mid-day; 3. உஷ்ணம், heat as of the sun; sultriness.

உருமலை வாரி, உலோக மணல், metallic ore; sand containing iron or any metal.

உரும வேளை, உச்சிப் பொழுது, noon.

உரு மாம்பழம், மாதுளை, pomegranate—Punica granatum.

உரு மாறல், வேற் றுருவங் கொள்ளல், to be changed into or assume a different form; to transform; 2. உடம்பை மாற்றுதல், to assume a different body—Metamorphose. See உரு மாற்றம்; 3. சரீரம் வேது படல், change of features, as a result of some disease; to get changed in appearance as in bodily infirmity; 4. நிறம், தோற்றம் முதலியவை மாறுதல், change of colour, appearance etc.

உரு மாறுதல், see உரு மாறல்.

உரு மாறு மூலி, தொட்டாற் சிணுங்கி, humble plant; touch-me not—Mimosa pudica. It is so called from its leaves mimicking sensibility by folding themselves at the slightest touch.

உருமாற்றமை, See உருவ மாற்றுமை.

உரு மாற்றம், உருவம் வேறுபடல், (*literally*) change of shape or form; 2. மிருகங்கள் அல்லது பூண்டுகளிலாவது அவைகளின் பகுதிகளிலாவது ஏற்படும் வேறுபாடு, change of form in animals or plants or in their parts during life; 3. தத்துவங்கள் மாறி வேற்றுருக் கொள்ளல், (*In Biology* or *Morphology*) the modification of organs or structure in form and function; 4. மூலப் பிரகிருதி அதாவது இப் பிரபஞ்சத்தின் காரணமான மாயையின் வல்லமையால் ஒன்று மற்றொன்றுக மாறுதல், (*In Evolution*), the secular change from a simple or rudimentary condition to one that is more complex and of a higher order; 5. இரசாயன தூலின் படி ஒரு வஸ்துவின் ரூபம் வேறுபடுதல், (*In chemistry*) the change of a compound into a new form —Chemical change; 6. மனித உருவத்தை மாற்றி வேறுருவங் கொள்ளல். இவ்வித்தை தெட்சிணு மூர்த்தி பட்சணி 110 லும், அகஸ்தியர் தண்டகம் 100 லும் சொல்லியுள்ளது. (*In Psychology*) the change of human body into a quite different one as desired, by enchantment or other supernatural means — Metamorphosis. This is a secret art described in the Siddhar's work on magic *viz.*, Dakshinamurthi 110, and Agastya's magic 400.

NOTE—Metamorphoses are the changes which the body of an animal or a plant undergoes after its birth. They are the modifications in various degrees, of the organization, form and appearance from mode of life, condition, structure etc. Such changes are not peculiar to certain classes

only, but are common to all animals and plants without exception.

In human beings, this process of changing in form or substance is brought about by magic, witchcraft or other supernatural means. It also takes place naturally when man becomes after sometime a woman and vice versa.

உரு மித்தல், புழுக்க மாதல், to be sultry; 2. உட்டணித்தல், to become hot; 3. மன வெப்ப மடைதல், growing excited in mind.

உருமிப்பு, உஷ்ணம், heat; மன வெப்பம், heat of the mind; mental heat.

உருமியம், பெருச்சாளி, bandicoot—Mus giganteus.

உருமை, உப்பு கினையும் பூமி, a saline soil.

உரும், அச்சம், fear.

உரும் பரம், பெருங்காயம், asafoetida—Ferula asafoetida; 2. பாம்பு, snake; 3. செம்பு, copper; 4. செம்பு நிறமான பிசின், gum of copper colour.

உரு ரசம், சுத்த ரசம், refined mercury; 2. பாத ரசம், quick silver.

உருரு, கருப்புக் கலைமான், a black species of deer (Mammalian family).

உருவகம், see உருவம்; 2. உள் ளிருக்கும் கரு, the ovum in the uterus; 3. உள் ளுறுப்பு, internal organ.

உருவங் காட்டி, கண்ணாடி, mirror as forming images by reflection; looking glass.

உருவ சாஸ்திரம், உறுப்புகளின் அமைப்பினால் ஏற்படும் மனிதருடைய குணம், அதிர்ஷ்டம், முதலியவைகளைக் காட்டியும், முகத்தின் வடிவம், அமைப்பு, குறிகள் முதலானவைகளைப் பற்றிக் கூறியும், ஏற்பட்டுள்ள நூல். இது அறுபத்து நான்கு கலைக் கியானங்களுள் ஒன்று, the science relating to the art of discovering the temper, character and the fortune of a person, foreknowing them by the features of his countenance, structure etc. It is classified as one of the sixty-four arts and sciences.

NOTE.—It includes Physiognomy, Palmistry, Chiromancy etc. and so, it is considered a science indicating the moral and mental characteristics of an individual.

2. நோய்களைத் தீர்மானிக்க ஏதுவான முகக் குறிகளைப் பற்றிக் கூறும் நூல், (*In Medicine*) the science describing the facial expression and appearance as means of diagnosis.

உரு வசியம், ஓர் வகை நோய், an unknown disease; 2. கரு வசியம், a magic paint prepared from the fetus for alluring persons.

உருவ மாற்று மை, உருவத்தை மாற்றுமை, (*In Magic*) an unguent or black paint used in witchcraft or sorcery for transforming the body. See மாற்று மை.

உருவ மெடுத்தல், வடிவங் கொள்ளல், see உருக் கொள்ளல்.

உருவம், உடல், human body; 2. வடிவம், shape or figure; 3. அழகு, beauty; 4. உட லுறுப்பு, bodily organ; 5. நிறம், colour; 6. மந்திர வுரு, repetition of mantrams; 7. பிரதிமை, (*In Magic*) an image made of clay or flour for purposes of invoking evil spirits in it by chanting mantrams. See பாவை.

உருவர், பெருஞ் சீரகம், anise-seed — Illicium anisatum.

உருவலி, ஓர்வகைப் பூண்டு, இதனால் இரத்த மேகம் போம், an unknown plant said to cure Hematuria.

உரு வழிதல், மேனி வேறு படுதல், to be disfigured or deformed; 2. கரு வழிதல், abortion; 3. அழகு குலைதல், being impaired in beauty or excellence of symmetry.

NOTE.—This generally takes place in diseases through emaciation, as in Consumption, Tuberculosis, Diabetes, Fever, Small-pox, Cholera, etc.

உரு வாக்கல், உருக் கொள்ளும்படிச் செய்தல் to give a shape; to develop into a form.

உருவாசம், வெள்ளரி, see உருவாரம்.

உரு வாணி, கழுத்தி லுள்ள முதல் முளை யிய சேட னெலும்புக்கு அடியி லிருக்கும் இரண்டா மெலும்பு, the second vertebra of the cervical region in the vertebral column; 2. மெலிந்த வுடம்பு, a reduced or an emaciated body through diseases, like consumption etc.

உருவாணிப் பற்றுதல், மெலி வடைதல், to be emaciated; 2. இளைத்தல், growing lean.

உரு வாதல், see உருவ மெடுத்தல்; 2. உருவ மாகத் திரளுதல், assuming a shape as does a fetus in the womb.

உருவாரசம், கலப்பு, mixture; 2. வீழி, see உருவாரச் சம்மட்டி.

உருவாரச் சம்மட்டி, வீழிச் செடி, a straggling shrub with greenish flowers; Chilli-fruited caper—Cadaba indica.

உருவாரம், வெள்ளரி, mottled melon; cucumber—Cucumis utilissimus.

உருவாரி யுப்பு, காயுருவி யுப்பு, see உருவி யுப்பு.

உரு வாரு, வெள்ளரிச் செடி, the creeper of cucumber, see உருவாரம்.

உருவி, காயுருவி, Indian burr—Achyranthes aspera; 2. செம் முள்ளி, thorny nail-dye—Barleria prionites; 3. முள்ளி, Indian night shade—Solanum indicum; 4. புல்லுருவி, honey-suckle mistletoe—Loranthus longiflorus.

உருவிச் செல்லல், தூனத்துக் கொண்டு போதல், to pierce through gently.

உரு விடுதல், see உருப் போடுதல்.

உருவிப் பாய்தல், வேகமாகத் தூனத்துக் கொண்டு செல்லல், piercing through rapidly.

உருவி யழுதல், விம்மி யழுதல், செருமி யழுதல், to weep with convulsive catchings of the breath.

உருவி யுப்பு, காயுருவி யுப்பு, salt obtained from the ashes of the burnt plant known as Indian burr—Achyranthes aspera; 2. கார சார வுப்பு, an all-powerful salt used in Alchemy; one of those minerals in which there is saltness or acrimony.

உரு விரக்கம், கஸ்தூரி நாறி மரம், a tree which emits fragrance like musk.

உருவிலி, உருவில்லான், one who is destitute of physical body; 2. உருப்படாத கரு, an undeveloped fetus or one before organs are formed.

உருவிழிப் புடைத்தல், கண் வலித்து மிகப் புடைத்து, விழி மேலுக்கிச் சிவந்து, நீர் வடிந்து, பீளைகட்டி, வாய் குளறிச் சொல் தடுமாறி, உண்ட வுணவு வாந்தி செய்து, இடை கொடுக்காமற்படித் துன்புறுத்து மோர் வகைக் கண்ணோய், reflex ophthalmia arising from a constitutional disease. It is marked by pain, swelling, inflammation and muco-purulent discharge, incoherency of speech, vomiting, restlessness etc.

உருவின கோலம், ஆடையைக் களைந்த நிலைமை, அதாவது நிருவாணம், the state of not having a covering or a customary clothing on—Nakedness.

உருவு, உருவம், which see; 2. அச்சம், fear; 3. உரு வென்னேவல், pressing gently and drawing the hand down over the sprained portion of the body.

உருவுகை, சுளுக்குப் பாய்ந்த இடத்தை விரல் களினு லழுத்தி மெதுவாய் உருவுதல், a gentle movement of the affected part by some one else pressing with the fingers and drawing the hand down a number of times—Passive movement.

உரு வுடம்பு, தூல வுடம்பு, physicalbody. 2. பருமனான வுடம்பு, stout body; 3. அங்கலட்சண முடைய வுடம்பு, symmetrical body.

உருவுதல், சுளுக்கைப் போக்க அழுத்தித் தடவுதல், to massage gently any part of the body so as to remove sprain on that particular part; see உருவுகை; 2. தழை முதலியவைகளை யுருவுதல், stripping off branches of leaves; 3. கைகால்களை உருவுதல், drawing the hand with pressure down the limbs to remove or allay pain.

உருவு பற்றல், பெண் கருப்பையி லுள்ள பிண்டத்திற்கு அவயவங்க ளுண்டாதல், formation of organs in a foetus in the womb; the development of the product of conception—Gestation.

உருவுள்ளு, கொள், gram — Dolichos uniflours.

உரு வெடுத்தல், see உருவு பற்றல்.

உரு வெளி, உரு வெளிப்பாடு, an imaginary appearance of a person or other object; a visionary object chiefly applied to the supposed sight of an absent lover.

உருவெளிக் காட்சி, see உருவெளித் தோற்றம்.

உருவெளித் தோற்றம், நினைத்த வஸ்துவை உள்ளன போலக் காட்டும், போலித் தோற்றம், a hallucination in which the perception of an external object is experienced when no such object is really present; an illusion in which the sensual perception of an external object involves a false belief or conception, *c. f.* Delusion.

உருவெளிப் பாடு, see உருவெளித் தோற்றம்.

உருவெளி மயக்கம், உடம்பின் நரம்புகளின் பலவீனத்தால், பலவிதமான ரூபங்கள் புலனுக்குத் தோன்றல், a disease due to nervous weakness, in which a variety of strange images float before the mind.

NOTE.—This should not be confused with illusions created in Magic or with the spiritual visions actually experienced by a sitting Yogi during his practice.

உரு வேறல், see உருவு பறறல்; 2. ஆவேசம் அதிகப் படல், excessive enthusiasm in spiritual ecstasy.

உரு வேற்றல், மந்திரம் செபித்தல், chanting mantrams a number of times; 2. ஆவேச முண்டாக்கல், bringing about a condition of spiritual ecstasy.

உருவை, சூரைச் செடி, jackal jujube — Zizyphus oenoplia; 2. முள்ளி, see உருவி.

உருவைக் கார்த்த வீடு, நஞ்சுக் கொடி, navel-cord. It is so called because it sets up a medium of communication between the mother and the child.

உரு வொளி, ஊடுருவிச் செல்லத் தகுந்த வொளி, light enabling bodies to be seen through distinctly; 2. ஒளியின் பிரதி பிம்பம், the change of direction of light which is thrown back; an image produced by a reflecting surface — Reflection.

உரு ளரிசி, கொத்து மல்லி, coriander seed—Coriandrum sativum.

உருளல், இறத்தல், dying or to die; 2. புரளுதல், rolling.

உருளி, எலும்புப் பொருத்து, (*In Anatomy*) ball and socket joint i.e., a joint in which the globular head of one bone is received into a socket in another, such as in the hip-joint—Enarthrosis.

உருளி பாதம், கம்பம் புல், stalk grass—Panicum grossarum.

உருளி புரட்சி, மூட்டுப் பிசகல், displacement of a joint.

உருளி புரளுதல், மூட்டு நழுகல், to be dislocated as in the case of a joint.

உருளி பெயர்தல், பொருத்து விலகுதல் see, உருளி புரளுதல்.

உருளி யெடுத்தல், பொருத்துப் புரட்சியை எடுத்தல், to remove the dislocation of a joint.

உருளி வாதம், எலும்புப் பொருத்து அல்லது மூட்டுகளில் வரும் வாதப் பிடிப்பு, affection of the joints—Arthritis.

உருளுதல், சாதல், to die.

உருவள, வெள்ளைப் பாஷாணம், white arsenic —Arsenicum album; 2. முட்டை, egg; 3. வாலை, retort for distillation; a still.

உருவளக் கந்தகம், சுருள் கந்தகம், roll of sulphur.

உருவளக் கல், பரற் கல்; பருக்கைக் கல், small or tiny pebbles.

உருவளக் காந்தம், ஓர்வகைக் காந்தக் கல், a kind of loadstone.

உருவளக் கிழங்கு, இது உணவுச் சுரிய கிழங்கு களுள் சிறந்தது. உருவையா யிருத்தலைப் பற்றி யிதற் கிப்பெயர். இது வருடந்தோறும் தோண்டி யெடுப்பினும், வேர் மாத்திரம் இரண்டு வருடம் வரை பலன் தருவதற் குதவும். இதன் அடித் தண்டு 1 முதல் 3 அடி உயரம் வளரும், சுணையு முள்ளு மற்றது. பூக்கள் 1 அல்லது 1½ அங்குலம் சுற்றளவு, வெண்மை அல்லது ஊதா நிறம் வாய்க் தவை. கிழங்கு உருவையாயும், மண்ணிறமாயு மிருக்கும். அளவில் கிச்சிலி அல்லது எலுமிச்சை பருமன் இன்னளது. இலை, தழை, சிறிது மயக்கத்தைத் தரத் தக்கது. இது மீரு தேசத்துச் செடியா யிருந்து, இங்கியாவிற்குக் கொண்டு வந்து பயிராக்கப் பட்டது; காட்டினமோ கசப்பாயும், உறைப்பாயும் இருக்கும். இதன் தண்டின் கணுவைத் தண்ணீர் விட் டலம்பி, அதனின்று கூழ்ப்பசை போன்ற சத்தெடுத்துப் பிறகு அதைப் புளிக்க வைத்துக் காய்ச்சிச் சாராயமும், சர்க்கரையு மெடுப்பார்கள்.

பர்மா முதலிய பிரதேசங்களி விதைச் சாப்பிடுவதால் வாதரோகம், ஆமவாதம் என்கிற கீல்வாயு முதலியன நீருமெனக் கருதப் படுகிறது. இக் கிழங்கின் சாறு வாதத்தை கண்டிக்குமென்பது ஆங்கிலேயர் அபிப்பிராயம். ஆகவே பச்சைக் கிழங்கை இயந்திரத்தி லிட்டுப் பிழிந்து, அதிலிருக்கு மாப் பசையை நீக்கிப் பிறகு காய்ச்சி, அதினின்று மருந்து செய்து, முழங்காலி லுண்டாகும் நரித்தலை வாதத்திற்கும், கீல்வாயுவுக்கும் கொடுப்பார்கள். இதன் தைலத்தை வெந் நீரிற் கலந்து நசுக் குண்ட அல்லது வேறு விதமாகக் காய மடைந்த உறுப்புகளுக்கு ஒத்தடங் கொடுக்க அதிக குண முண்டாகும். வெந்நீரி லிக்கிழங்கை அரைத்தும் சார் பிழிந்தும் காயத்திற்கும், தீச்சுட்ட புண்ணிற்கும், மேற்பூச்சாகப் பூசலாம். இதில் கருச் சத்தும், கஞ்சிப் பசையு மதிக மிருந்

தலால், இது உடம்புக்கு பலத்தையும், கொழுப்பையும், கொடுப்பதுடன் சருக்கரையையு முண்டு பண்ணும். இதை விடாமற் பல நாட்கள் உபயோகப் படுத்த வுடம்பு வலிவும், புத்தி வன்மையும் மந்தப் படும்.

Common potato plant, Round root—Solanum tuberosum alias Lycopersicum alias L. tuberosum alias S. esculatum. It is superior to all edible roots used in food and is so called from its round shape. It is a perennial herbaceous plant; stem from 1 to 3 ft. high, without thorns or prickles; flowers 1 to 1½ inches in diametre, white or purple; the bulbous root globular, brownish, of the size of an orange or a lime. Herbage has a slightly narcotic smell. It is a native of Peru introduced into and naturalised in India; in wild state it is bitter and acrid. A pure starch is obtainable from the pulverised tubercles by washing with cold water. It is convertible into sugar and alcohol by fermentation.

In Burma and other foreign countries, it is considered that, by consuming this root, rheumatism and arthritis or other affections of the joints are cured. Raw root is pressed and from the juice is prepared a medicine after eliminating the starch. It is prescribed for rheumatic arthritis and other diseases of the joints. The oil from this root is mixed with tepid water and fomented to contused wounds and other injuries. The root is ground with hot water and used as a paste externally in cases of wounds, scalds and burns. It serves to add strength, sugar and fat to the system. Using this continuously in food, tends to decrease the bodily strength and intellectual faculties.

உருவா நீர், முட்டையின் வெண் கரு, the white of an egg—Albumen.

உருவாப் பிரண்டை, கோப் பிரண்டை, a long, round and smooth creeper of vitis (*genus*).

உருவா யடி, see உருளைக் கிழங்கு.

உருவா வாதம், see உருளி வாதம்.

உருள் வண்டு, பீ வண்டு, dung beetle—Geotrupes stercorarius.

உருட்சம், மொக்தன் வாழைக் கிழங்கு, tuber of Kuntéla plantain—Musa paradisiaca (troglodytaram)

உருட்சண சிகிக்சை, கபம், கோழை, முதலிய வைகளை அறுத்துத் தள்ளி, அந்தந்த வுறுப்புகளுக்கும், தாதுக்களுக்கும் போஷணையுண்டாக்கு முறை, a form of treatment with tonic, which braces up every organ and increases the tone of the nervous system by completely removing the phlegm and the watery mucous from the lungs—Tonic treatment.

உருட்சை, வாழைக் கிழங்கு, the root of the plantain tree—Musa paradisiaca.

உருதி, ஆயில் பட்டை, which see.

உருப சொரூபம், பார்வையின் உருவம், the object of sight.

உருப தன்மாத்திரை, பஞ்ச தன்மாத்திரையி லொன்று அதாவது பஞ்ச பூத மூலத்தி லொன்று, one of the rudimentary elements of the five senses i.e., the primitive element of sight.

உருபம், உருவம், form; shape; 2. அழகு, beauty; 3. பிரதிமை, image; 4. நிறம், colour; 5. நிலை, posture; 6. சாயல், features.

உருபிகரித்தல், கருவி லுருப்படல், see உருவு பற்றல்.

உருபிகை, வெள் ளெருக்கு, white madar—Calotropis gigantea (*albiflora*).

உருப்பியம், பொன், gold: 2. வெள்ளி, silver; 3. வெள்ளை, white; 4. ஊதின வெள்ளி, wrought silver.

உருமிச் சோம்பு, ஓர்வகைச் சோம்பு, a kind of sweet fennel seed.

உரை, பொன், gold; 2. இழைத்தல், rubbing; 3. தேய்வு, attrition; 4. மாற்று, fineness of gold or silver, as tested on the touchstone; 5. பொன் மாற் றறியு முறை, the process of finding out the fineness of gold or silver by rubbing it on the touchstone; 6. தமிழ் தேசத்தில் பிரேதத்தின் முன்னிலையில் இறந்தவரைக் குறித்துப் பெண்கள் கற்பனையாகப் புலம்பும் ஓர் பாட்டு, a funeral song in vogue especially in the Tamil country recited by the women folk in the presence of the dead.

உரை கட்டல், மந்திரத்தினால் நாவெழாதபடி, அதாவது பேசாதபடி செய்தல், restraining the action of the tongue and thereby rendering one unable to talk. This is generally done through black-art.

உரை கலங்கல், பேச்சுத் தடுமாறல், to get confused in speech.

உரை கல், கட்டளைக் கல் அதாவது மாற்று அறிவதற்காகப் பொன், வெள்ளி இவைகளை உரைக்குங் கல். இது கருப்பாயும் கனமாயு மிருக்கும், இக் கல்லை முலைப் பாலில் உரைத்துக் கண்ணிலிட கண்மாசு அறும்,a compact, dark-coloured siliceous stone used for rubbing gold and silver and comparing the mark left with that of the touch-needles and thereby ascertaining the purity and the exact quality of a particular gold or silver—Touch stone. It is smooth and somewhat glossy. The stone when rubbed with woman's breast-milk forms an application in eye diseases.

NOTE.—The stone is first well-rubbed with the metal to be tried and it is then pressed against a dark-coloured wax (mom). It leaves a small portion of the metal on the wax from which the quality is judged.

2. மருந்தரைக்கும் சிறு சந்தனக் கல், a small grindstone used for triturating or rubbing with milk or honey, pills and other forms of medicine into a fine paste.

உரைசுதல், தேய்த்தல், to wear away as does one's foot by walking.

உரை சொல்லல், பிரேதத்தின் முன்பு மார் அடித்துக் கொண்டு பெண்கள் புலம்பிக் கற் பனையாகப் பாட்டுச் சொல்லுதல், mournful singing by the females lamenting at the funeral with rhythmic breast-beating for the departed soul.

உரைத்தல், தேய்த்தல், rubbing; 2. மருந்தி ழைத்தல், to rub into a fine powder or paste; to levigate or triturate; 3. மாற் றறியத் தேய்த்தல், rubbing as on the touch-stone for finding out the purity of gold or silver; 4. பூசுதல், smearing; 5. மெரு கிடல், to polish.

உரை நூல், கவுபால சித்தர் செய்த ஆணிக் கோர்வை (நூல்), see ஆணிக்கோர்வை.

உரைப்பு, தேய்ப்பு, rubbing as is done with pills; 2. இழைப்பு, assaying or testing the fineness of gold or silver by rubbing it on a touch-stone.

உரை மருந்து, பெருங்காயம், சுக்கு, மாசிக்காய் முதலிய சரக்குகளை வெற்றிலைச் சாறு அல் லது முலைப் பாலில் இழைத்துக் குழந்தை களுக்கு மாந்த நோய் முதலியவைகளுக்குக் கொடுக்கு மருந்து, a home-remedy administered to children in cases of indigestion etc. It is prepared by our women by rubbing on a stone or macerating bazaar drugs such as asafoetida, dry ginger, mace etc., after steeping them in betel leaf juice or a woman's breast milk.

உரை மானம், தேய்ப்பு, rubbing. See உரைப்பு.

உரை மெழுகு, உரை கல்லில் தேய்த்த பொன் வெள்ளிப் பொடிகளை ஒற்றும் மெழுகு, a soft black wax intended for collecting the dust of the tested gold or silver on the touch-stone.

உரையறி கருவி, see உரைகல்; 2. மாற் றறியும் ஆணி, a small bar of gold or silver used on the touchstone to compare with and test the quality of gold or silver in question — Touch-needle.

See ஆணிக் கோர்வை.

உரை யாணி, மாற் றாணி, see உரை யறி கருவி.

உரையிசுழி, கொத்து மல்லி, see உரு ளரிசி.

உரை யிலக்கணம், see உரை நூல்.

உரொட்டி, கோதுமையாற் செய்த அடை, bread, an article of food prepared by baking wheat flour.

உரோக கக்கினம், நோய்களைத் தீர்க்கு மருந்து, medicine or any substance that cures diseases.

உரோக கரம், நோய்களைக் கண்டித்தல், the art of healing diseases—Therapeutics.

உரோக காரி, நோய்களைக் கண்டிக்கு மருந்து, therapeutic agent.

உரோக காரி, நோய்களைத் தீர்ப்பவன், one who cures diseases; 2. வைத்தியன், physician; doctor.

உரோ கக்கினம், see உரோக கக்கினம்.

உரோக சஞ்சீவி, மகா வாத நோய்கள், சன்னி பாத சுரம், கொடிய காசம் முதலிய நோய்களைத் தீர்த்து உயிர் தரும் ஓர்வகைத் தைலம், a medicated oil capable of restoring life by rooting out all grave diseases such as, rheumatism, typhoid fever, lung diseases etc., from the system.

NOTE—It is a term which may refer to any medicine in general capable of bringing about a radical cure of diseases.

உரோக சாந்தகன், நோயைச் சாந்தப் படுத்துபவன், one who alleviates pain and cures diseases; 2. வைத்தியன், a doctor.

உரோக சிரேட்டம், சுரம், fever, as *the* principal one of all diseases.

உரோகணி, ஓர்வகைக் கடுக்காய், a kind of chebulic myrobalan. See அரோகணிக் கடுக்காய்.

உரோகதம், மார் வலி, pain in the chest.

உரோகதி, நாய், dog.

உரோ கஸ்தன், நோயாளி, a sickly man; a patient.

உரோக நிதானம், நோயைச் சோதித்தல், diagnosis of diseases by their distinctive marks or symptoms; 2. நோயின் கூறுபாடுகளையும், அதன் காரணம், குறி முதலிய வைகளையும் கூறும் குண வாகடம், a science relating to the nature of diseases and the changes caused by them — Pathology.

உரோக நீ ருறை, பிணி நீர்ப் பை, a sac containing a liquid or a semi-solid—Cyst.

உரோகம், நோய், disease; 2. பூ வரும்பு, bud.

உரோக ராசம்
உரோக ராட்டு, } நோய்களுக் கரசன் அதாவது சய ரோகம், the king of diseases namely consumption.

உரோ காதம், நெஞ் சிடித்தல், மார் துடிப்பு, palpitation of the heart.

உரோகி, நோயாளி, a sickly person; patient; 2. செம் மரம், red wood.

உரோகிணி, ஒன்பது வயதுப் பெண், a girl nine years old; 2. கடுகு ரோகிணி, a purgative drug called Christmas rose—Helleborus niger; 3. பீத ரோகிணி, stinking hellebore—Himalayan hellebore. It is used in diseases of the eye; 4. கடுக்காய், Indian gall-nut or Chebulic myrobalan — Terminalia chebula; 5. ஓமை, mango tree—Mangifera indica; 6. சிறுகாஞ் சொறி, small climbing nettle —Tragia involucrata (cannabina).

உரோகிணிக் கடுக்காய், see உரோகிணி.

உரோகிதப் பட்டை, செம்மரப் பட்டை, இது துவர்ப்பா யிருத்தல் பற்றி மருந்துக் குதவும். இது வெளிப் புறம் சிறிது கருப்பாயும், உட் புறம் சிறிது சிகப்பாயு மிருப்பது, the bark of red wood. It is used as a medicinal astringent. It is of a black brownish colour externally and the substance inside is of a deep reddish brown colour.

உரோகி தம், செம்மரம், இதன் விதையினின்று வடிக்கு மெண்ணெய் வாத ரோகத்திற் குதவும், red wood — Amoora rohituka. The oil from the seeds is a stimulant in rheumatism; 2. சிறி முருக்கு, an inferior kind of Erythrina; 3. மஞ்சள், turmeric—Curcuma longa; 4. சிவப்பு, redness.

உரோகி தாசுவம், நெருப்பு, fire.

உரோகி தேவா, செம் மரம், see உரோகிதகம்.

உரோகி நேயம், கற் துளசி, stone-basil—Ocimum genus.

உரோ கிரகம், மார்புப் பிடிப்பு, chest seizure; inflammation of the pleura (a membrane; that invests the lungs)—Pleurisy.

உரோகீ, செம் மரம், see உரோகிதகம்.

உரோ கீஷம், கலை மான், the male red-deer—Stag.

உரோங்கல், உலக்கை, pestle.

உரோசல ரோகம், நெஞ் சறைக்குள் நீர் சேருவதா லுண்டாகு மோர்வகைக் குத்தல் நோய், the presence of an effused fluid in the pleural cavity due to venous obstruction. It is marked by pricking pain—Hydrothorax.

உரோசனகம், எலுமிச்சை, lime — Limonia acidissima.

உரோசனக் களிம்பு, உரோசனம் என்னும் ஓர் வகைப் பிசினைக் கொண்டு செய்பு மோர் களிம்பு, a medicated preparation with resin as an ingredient, applied externally.

உரோசன மூங்கில், கல் மூங்கில், hard bamboo—Bambusa arundinacea.

உரோசனம், முள் விலவு, thorny cotton tree —Bombax malabaricum; 2. கோ ரோசனை, see உரோசனை; 3. ஓர் பிசின், a resin.

உரோசனி, கோ ரோசனை, bezoar; 2. கடுகு, (கருப்பு) black mustard—Sinapis nigra; 3. செங் தாமரை, red-lotus — Nymphae rubra; 4. சிறு காஞ்சொறி, small climbing nettle—Tragia involucrata (cannabina); 5. கற் பாசி, இது மேற் பூச்சு மருந்தாக

உபயோகப்படும், lichen growing upon rocks—Lichen rotundus. This is used in medicine as a liniment.

உரோ சனியம், கடுகு, mustard — Sinapis nigra.

உரோசனை, கோ ரோசனை, a biliary calculus in a cow—Bezoar; 2. ஓர் வித பித்தம், bile, yellow in colour resembling bezoar; 3. கடுகு, see உரோசனியம்; 4. மூங்கி லுப்பு, bamboo salt; 5. மகிட ரோ சனை முதலிய ரோசனை, concretions in general found in the intestines of some animals especially ruminants like ox etc.; 6. செந்தா மரை, red lotus—Nymphae rubra.

உரோசி, சூரிய காந்தி, sun-flower—Helianthus annuns.

உரோசி காரம், பேய்ப் புல், a poisonous red grass—Cyperus genus.

உரோ சித்தல், see உரோஷப் படல்.

உரோசினி, சிறு காஞ்சொறி, small climbing nettle—Tragia involucrata (cannabina).

உரோஷப் படல், சுவரணை கொள்ளல், to be sensitive; to feel sensitiveness; to grow spirited.

உரோஷி, பேய்ப் புல், see உரோசி காரம். It is a grass full of little clots.

உரோணி, கடுகு ரோணி, see உரோகிணி; 2. ஓர்வகைத் தொண்டை நோய், inflammation of the throat.

உரோதகம், see உரோசல ரோகம்.

உரோதல், அழுதல், to cry; to weep.

உரோதனம், அழுகை crying; weeping; 2. கண்ணீர், tears.

உரோ தனி, see உரோகினி.

உரோதித்தல், அழுதல், see உரோதல்; 2. அழச் செய்தல், to cause to weep.

உரோத்த பத்திரம், விஷப் பாலை, a poisonous milky plant—A kind of Mimusops.

உரோ பந்தனம், மார்புக் கட்டு, a bandage round the chest.

உரோ பந்திகை, காசித் தும்பை, balsam flower, snapweed—Impatiens genus.

உரோமகரணம், மயிர்க் கூச்செடுத்தல், a sensation in which hairs stand on end.

உரோமகம், சாகம்பரி யென்னும் ஓர் உயர்தரமான வுப்பு. இது இராஜபுதனத்தில், சாம்பர் ஏரியில் விளையும், the best and the purest of evaporated salts, obtained from Sambhar lake in Rajputana. The name 'Romaka' is derived from the river 'Ruma'. See சாகம்பரி; 2. கால் வகைக் காந்தக் கற்களு ளொன்று. மற்ற மூன்று வகைகளுக்குப் பிராசிகம், சும்பகம், திராவகம், இவைகளைப் பார்க்கவும், one of the four kinds of loadstones. For other kinds mentioned above, see under those words.

உரோமகி, முடியார் கூந்தல், a plant (*un-identified*) *c. f.* Drowpady's hair—Prana racemosa.

உரோம குரு, see உரோம குரு பீடம்.

உரோமகுரு பீடம், பிண்டம், foetus in the womb.

உரோம கூபம், மயிர்ச் சிலிப்பு, the standing on end of the hair through emotion — Horripilation.

உரோமக் கட்டி, வயிற்றினில் மயிர்கள் போய்த் தங்குவதா லேற்படும் கட்டி. சூதகத்தாற் பைத்தியங் கொண்ட பெண்கள் மயிரை விழுங்குவதாலும் இது காணும், a concretion in the stomach due to the accumulation of hair—Trichobezoar. It is very common in hysterical women who swallow hairs.

NOTE.—This should not be confused with hair-ball (called also hair-cash or hair-mass) which is a concretion in the stomach composed of hair, vegetable fibre, etc.

உரோமக் கட்டு, நிறை மயிர், hairs thickest on the body—Hairy; fullness of hair.

உரோமக் கழலை, மயிர்க் கால்களுக் கேற்படும் கழலைக் கட்டி, a tumour of hair-follicles —Trichofibroma.

உரோமக் கால், மயிர்த் துவாரம், hair follicles.

உரோமக் கால் ரோகம், மயிர்க் கால்களுக் குண்டாகும் நோய், disease of the hair-follicles, see உரோம ரோகம்.

உரோமக் கிழங்கு, வசம்பு, sweet flag—Acorus calamus.

உரோமக் குணக்கு, உள் வளைந்த மயிர், a condition of ingrowing hairs about an orifice, or of ingrowing eye-lashes—Trichiasis.

உரோமக் குறடு, மயிரைப் பிடுங்குவதற்காக வுபயோகிக்கும் குறடு அல்லது சாமணம், tweezers for pulling out hairs—Tricholabis.

உரோமக் கூச்சம், உடம்பின் மயிரைத்தொட வுண்டாகும் கூச்சம், the sense which one perceives when the hairs of the skin are touched; hair sensibillty—Trichoesthesia.

உரோமக் கேடு, மயிர்க் கால்களுக்குக் கெடுதியேற்பட்டு மயிர் முறிதல், an atrophied condition, of the hair-bulbs, leading to brittleness of the hair—Trichatrophia.

உரோமக் கொட்டு, தலையின் மயிர் உதிர்தல், falling off of the hair through affections of the scalp or through some enfeebled condition of health; rapid loss of hair —Trichorrea.

உரோமங் கொள்ளல், மயிரைப் புசித்தல், the practice of eating hair; hair-eating — Trichophagy; 2. மயிர் வளர்தல், growing of hair.

உரோம சக்கிரி, சவுக்கு மரம், casuarina tree.

உரோம் சங்காரி, உடம்பில் அதிகமாக முளைத்திருக்கு மயிரைப் போக்குவதற்காக வுபயோகிக்கு மருந்து, any substance or preparation used in removing the superfluous hair on the body—Hair-destroyer.

உரோம சத்தி, கெந்த மாஞ்சள், round zedoary — Curcuma aromatica. It strengthens the hair; 2. அரைக் கீரை, which see.

உரோம சயரோகம், தலை வழுக்கை, lack or loss of hair; baldness—Alopecia.

உரோம சல்லடை, see உரோமத் துவாரம்,

உரோமசன், see உரோம ரிஷி.

உரோம சாலியான், கக்கரி, cucumber—Cucumis sativus.

உரோமச் சங்கு, முட் சங்கு, chank or conch-shell with thornlike points—Turbinella rapa.

உரோமச் சிலிர்ப்பு, மயிர்க் கூச்சு, a sensation in which hairs stand on end.

See உரோம கூபம்.

உரோமச் சுருளி, see உரோம விருட்சம்.

உரோமச் சுழி, மயிர்ச் சுழி. அதாவது மனிதர்களுக்கும், மிருகம், பறவை, முதலிய உயிர்ப் பிராணிகளுக்கும், உடம்பின் சில பாகங்களில், மயிர் வகையமிட் டிருத்தல், இதைச் சோதித்து, நன்மை, கெடுதி, அதிர்ஷ்டம், தர் அதிர்ஷ்டம் முதலியவைகளைக் குறிக்கலாம், a spiral growth of hair found at a particular spot on the surface of the body of both the human and the animal kingdoms and by examining it, good or evil, fortune or misfortune is said to be predicted.

உரோமச் செம்பு, மயிரி லிருந்து எடுக்கும் செம்பு, copper extracted from hair.

உராமஞ் சிலிர்த்தல், see உரோம கூபம்.

உரோம தரு, see உரோம விருட்சம்.

உரோமத்தி னிடை, மயிரி னிடைத் துவாரம், the opening or the cavity in the hair.

உரோமத் துவாரம், மயிர்க் கால், pores of the skin through which hairs shoot out — Hair-follicle.

NOTE.— According to Tamil Medical science, it is calculated that there are about 3½ crores of hair-follicles in the human body.

உரோமத் தைலம், மயிரி னின்று இறக்கிய தைலம், oil extracted from the hair; 2. மயிருக் கிடும் தைலம், hair-oil for the growth of hair.

உரோம நாக்கு, நாக்கில் முள் பாய்தல்; நாக்குச் சொர சொரப்பு, hairy state of the tongue due to a thickening of the papillae (small elevations on the tongue)—Trichoglossia.

உரோம நிவாரணி, மயிர்களை நீக்குந் தன்மையுள்ள வஸ்து, any application to remove the hair without injuring the skin and without smarting pain and irritation.

See உரோம சங்காரி.

உரோம நீர், வியர்வை நீர், perspired water; water secreted from the hair-follicles—Sweat; 2. அசுத்த சலம், dirty water.

உரோம பயம், மயிரைக் கண்டு திகிலடையுமோர் நோய், morbid dread of hair — Trichophobia.

உரோம புளகம், மயிர்ச் சிலிப்பு, see உரோம கூபம்.

உரோம புளகிதம், see உரோம கூபம்.

உரோம பூமி, உடம்பின் மேற்றோல், the skin on the surface of the body.

உரோமப் பரப்பு, மயிர் அடர்த்தி, thick or close hair.

உரோமப் பரிட்சை, மயிரைச் சோதித்தல், examination of the hair — Trichoscopy.

உரோமப் பிளப்பு, see உரோம வெடிப்பு.

உரோமப் பைத்தியம், பைத்தியம் அல்லது சன்னி கொண்ட காலத்தில் தன்மயிரைப் பிய்த்துக் கொள்ளுதல், the pulling out of the hair by delirious or insane persons—Trichomania.

உரோமப் பொடிப்பு, see உரோம கூபம்.

உரோமப் போஷணம், எண்ணெய், தைலம் முதலியவைகளைத் தடவி மயிரை வளர்த்தல், applying hair-oils to promote development and growth of hair; nutrition for the hair.

உரோம மது, சீமை சாராயம், foreign liquor formerly exported from Rome.

உரோம முட்டி, புறங்கை நாறி, which see.

உரோம முள்ளோன், உடம் பெல்லாம் மயிருள்ளவன், hairy man.

உரோம முறிவு, மயிரின் மிருதுத் தன்மையை இழந்து முறிதல், a condition in which hair becomes brittle and breaks off—Trichorexis.

உரோம முறைப்பு, மயிரின் கொய்மை, brittleness of the hair—Trichoclasis.

உரோம முனி, see உரோம ரிஷி, a Rishi or Prophet of immense age overgrown with hair.

உரோமம், புற மயிர், the down of birds; 2. தலை மயிர், hair on the head; 3. உடம்பின் மயிர், the hair on the body, 4. மயிர்ப் பரப்பு, thick or close hair; 5. வழலை, an euphemistic name for fuller's earth.

உரோமம் சிலும் பெறிதல், மயிர் சிலிர்த்தல் see உரோம கூபம்.

உரோம ரஞ்சம், மயிர் சிலிர்த்தல், see உரோம கூபம்.

உரோம ராசி, மயி ரொழுங்கு, the order in which the hair is grown, see உரோம ரேகை.

உரோம ரிஷி, பதினெண் சித்தர்களி லொருவர், இவர் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் முதலிய தமிழ் நூற்களைச் செய்தவர். இவருக்கு உடம் பெல்லாம் மயிர் நிறைந் துள்ள தா லிப்பெயர். இவர் இப்பொழுதும் உயிரோ டிருப்பதாகக் கருதப்படும், one of the eighteen Siddhars mentioned in the Tamil Medical science. He is the author of many works in Tamil, on Alchemy, Medicine and Yoga philosophy. He is a celebrated Rishi blessed with exuberant or excessive growth of hair all over the body and a long age and is reputed to be still living.

உரோம ரிஷி கற்பம், உரோம ரிஷி காய கற்பத்துக்காக வேண்டி யுண்ட மயி லெச்சம், the excreta of the peacock taken in by a Siddha named Roma for the purpose of longevity.

உரோம ரேகை, மயி ரொழுங்கு, the line of hair in females reaching up to the navel.

உரோம ரோகம், மயிர்க் கால்களுக் கேற்படும் நோய், disease of the hair-follicles — Trichocryptosis; 2. மயிருக் கேற்படும் நோய், disease of the hair—Trichopathy; 3. பொதுவாக மயிருக்கு உண்டாகும் நோய், any disease of the hair—Trichonosis.

உரோம ரோசனை, வயிறு அல்லது குடலுக்குள் ளுண்டாகும் மயிர் உருண்டை, இது சாதாரணமாக மருந் தீட்டினால் ஏற்படுமென்று கருதப் படும், a hair-ball or a similar concretion found within the stomach or the intestines—Trichobezoar. It is generally believed to be due to the introduction of love-philter by jealous wives or husbands.

உழன்று வருதல், களைப் புறல், to grow tired or fatigued.

உழிஞை, கொற்றான், balloon vine—Cordiospermum helicacabum; 2. சிறு பூனை, woolly caper — Illecebrum lanatum alias Achyranthes lanatum. It literally means strength-giving.

உழிஞ்சிலை வகை, see உழிஞ்சில்.

உழிஞ்சில், வகை, common sirissa—Albizzia lebbek ; 2. அழிஞ்சில், which see.

உழிதல், அலைதல், wandering about.

உழு, பின்னைப் பூச்சி, an insect known as mud gryllus, see உழுவான்.

உழுகு, எறும்பு, ant, see உழுவம்.

உழுந்து, உளுந்து, black gram — Phaseolus mungo.

உழுவம், எறும்பு, an ant; an emmet.

உழுவல், குணம், the disposition and the characteristic of a person or a thing ; 2. விடாது தொடர்ந்த அன்பு, affection or attachement continued through births.

உழுவான், பின்னைப் பூச்சி, an insect that undermines the garden-beds — Gryllus gryllotalpa.

உழுவுத் தண்ணீர், உழுமண் ணீர், water impregnated with soda ; 2. உழு மண், fuller's earth.

உழுவை, புலி, tiger ; 2. உளுவை, which see; 3. தும்பிலி, a sea-fish; 4. ஓர்வகைப் பச்சை நிறமான கடல் மீன், a green sea-fish —Gobius ornatus ; 5. குண்டல வுழுவை, a yellow fish found in fresh and back waters.

உழை, மான், deer ; 2. பசு, cow ; 3. பூ விதழ், the petal of a flower; 4. இடம், place ; 5. விடியற் காலம், dawn ; 6. பக்கம், side.

உழைச் செல்வான், நோயாளியைக் கவனித்து மருந் தூட்டுவோன், one attending on a sick person or a patient for administering medicine etc.—Nurse.

உழை மண், அழுக் கெடுக்கு மண், fuller's earth capable of removing dirt from clothes. See உழ மண்.

உழையன், பித்த நோயி, any person suffering from the effects of biliousness or other similar diseases due to the aggravated condition of bile in the system.

உழை வலி, பக்க வலி, pain on the sides.

உழை விழித்தான், நாகப் பாம்பு, cobra.

உளகுத்தம், பெருங்காயம், asafoetida.

உளப்பு, நடுக்கம், trembling; tremor.

உள மாந்தை, சூல நோகத்தின் பிரிவாகிய ஓர் வகை நோய், அது அதிக சம்போகத்தினாலும் மற்றக் காரணங்களினாலும் முண்டாகும், consumption arising from excessive sexual interccurse or other varied causes. See உள் மாந்தை.

உளம், மனம், mind ; 2. மார்பு, breast ; 3. இருதயம், heart.

உளறல், வாய்க் குழறல், incoherent speaking; to prattle like a child ; 2. தடுமாறிப் பேசல், talking incoherently ; 3. பிதற்றல், to talk insanely.

உளறு, தொடை, thigh.

உளறுதல், தடுமாறிப் பேசல், talking indiscreetly; 2. பிதற்றல், the insane repetition of meaningless words and sentences —Verbigeration; 3. தடுமாறிப் பேசு மோர் நோய், aphasia in which the patien-utters many words conveying no meaning—Gibberial aphasia.

உளறு வாயன், ஓயாது பேசுவோன், one who talks incessantly ; 2. பிதற்று வோன், an idle talker ; babbler.

உளி, ரசஞ் சீவி, a knife or instrument for removing superfluous nails or other growths.

உளிகை, ஐங்காய மென்னும் பஞ்ச மலம், the five evils attached to the soul.

உளிக் காரம், see அரி தாரம்.

உளிட்டிகம், களா வீழுதி, purple mountain ebony—Bauhinia purpurea.

உளித்தலைக் கோல், கடபாரை, crowbar.

உளிப் பாரை, see உளித்தலைக் கோல்.

உளியம், கரடி, bear.

உளு, மரத்தைத் துளைக்கு மோர்வகைப் புழு, wood-borer; wood-worm; wood-fretter; 2. உளுத்தது, that which is rotten.

உளுக் கல், காகச் சிலை, a black loadstone.

உளுக்கு, நரம்புச் சுளுக்கு, a violent strain of the muscles or the ligaments of a joint without dislocation — Sprain; 2. மூட்டுப் பிசகு, dislocation of a joint.

உளுக்குதல், சுளுக்குதல், to be sprained.

உளுத்த, புழு வரித்த, worm-eaten.

உளுத்த மா, உளுத்து மாவு, the flour of black gram; 2. உளுத்தலை லேற்பட்டமா, உளுப் பொடி, worm-meal or dust caused by the worm's gnawing the wood.

உளுத்தம் பயறு, see உளுந்து.

உளுத்த வெலும்பு, அரித்த வெலும்பு, the gangrenous eating of a bone—Caries.

உளுத்தல், அரிக்கப் பட்டுப் பழு தறல், to be eaten up as in bones by certain diseases such as tuberculosis etc.

உளுத்திரம், மஞ்சள், turmeric.

உளுத்துப் போதல், புழு வரித்தல், to be eaten up by worm; 2. வெடி யுப்பினால் உளுத்தல், to be corroded by salt-petre.

உளுந்து, இது ஓர் கருப்புப் பயறு, குளிர்காலத்தில் பயிராகும். பூக்கள் மஞ்சள்; அற்பிசி மாதத்தில் விதை தெளித்து தை மாதத்தில் பிடுங்குவார்கள். இதன் வேர் மயக்கத்தைக் கொடுக்கும்; பருப்பு உடம்புக்கு வலிவைக் கொடுக்கும்; இதன் மாவு மாசாற்றும், black-gram—Phaseolus mungo alias P. radiatus. The seed is black and smooth and flowers yellow. It is cultivated in the cold season. Seeds are sown in October and after 3½ months i.e., in January, the plants are uprooted and gathered for getting the seeds.

The root is somewhat narcotic and the seed a tonic. Flour is detergent and is used in making pappadams.

NOTE—The chemical composition of the gram is—water 10·1, albuminous 22·7, starch 55·8, oil 2·2, fibre 4·3, ash 3·3, phosphoric acid 1·1 per cent.

உளுந்துச் செடி, உளுந்து வினையும் செடி, plant of black gram—Phaseolus radiatus. See உளுந்து.

உளுப்பு, உளுத்த மரம், worm-eaten tree.

உளுப்புத் தாவல், புழுக்க ஆரம்பித்தல், to be attacked by destructive worms.

உளுவாய், வெந்தயம், fenugreek — Trigonella foenum-graecum.

உளுவை, ஆறுகளில், சேற்றின் அடியில் புதைந்து கிடக்கும் ஓர் வகை மீன். இது, கடல்களிலும், கழிகளிலு முண்டு. இதற்கு முள் கிடையாது. இது உடம்பிலுள்ள பல நோய்களையும், பழைய மலம் முதலியவைகளையும் போக்குவதால், இதைத் தமிழ் வைத்தியத்தில் பத்தியக் கறியாகக் கொள்ளப் படும். இதில் அனேக விதங்க ளுண்டு. அவையாவன:—mud fish—Gobius (genus). It is so called from its lying buried in the mire at the bottom of the river or the shallow sea. It is generally found in fresh-water (rivers) and back waters (sea). It is free from spines.

It is supposed to cure diseases in the system, and remove old fecal matter from the intestines and is therefore selected as a dietetic substance in the Tamil Medicine.

The different kinds are :—

1. நல்ல தண்ணீ ருளுவை அதாவது ஆற் றுளுவை, river-goby or Koke —Gobius giuris alias G. Kokius.
2. வெள் ளுளுவை, a river fish known as white caboose — Ophicephalus punctatus.
3. கல் லுளுவை, a river-fish generally found under the stone—Aulopus elongatus.

4. கோரை யுளுவை, a sea fish of brownish grey colour--Sanrida tumbil.

5. கட லுளுவை மீன், a green sea-fish with brown spots--Gobius ornatus.

6. மண் ணுளுவை, mud skate—Rynchobatus ancylostomus. It is so called from its frequenting shallow sea bottom.

7. குண்டல வுளுவை, ringed goby, a river-fish as well as a sea fish —Gobius striatus. It is found both in fresh-water and back water in Madras.

NOTE—It is also called a thornless fish and it forms one of the important dietetic substances in the fish-diet for patients on account of its medicinal virtues. It is said to be useful in eczema and other itchy eruptions.

உளா, புறமயிர், the hair on the body; 2. குதிரை, horse; 3. உளைதல், aching or suffering from pain; 4. சிலுக்கு வாதம், rheumatism through cold, marked by pain in the nerves; 5. சேறு, mud; mire; 6. அழுகை, weeping; 7. ஆண் மயிர், the hair on a man's head.

உளாக் கால், மயிர்க் கால், hair-follicles.

உளாக்குதல், மார்பு, கை, கால் முதலியன குடைச்ச லெடுத்தல், suffering from pain in the breast and the limbs.

உளாச்சல், see உளைவு.

உளாதல், பிரசவ வேதனைப் படல், to suffer the pangs of childbirth; 2. கை, கால், முதலியன குடைச்ச லெடுத்தல், neuralgic pain through cold, or weakness in the limbs; 3. வயி றுளைதல், suffering from colic or griping pain, as in dysentery; 4. மனம் வருந்தல், to suffer mentally; 5. நெஞ்சு அல்லது மார்பில் வலித்தல், suffering from pain in the breast; 6. இடுப் புளைதல், having pains in the loins.

உளாப்பு, கை, கால், நெஞ்சு, தோள் முதலிய விடங்களி லுண்டாகுங் குடைச்சல், aching pain in the limbs, breast and shoulders through cold etc.

உளா மயிர், பிடரி மயிர், mane.

உளா மாந்தம், குழந்தைகளுக் குண்டாகு மோர் விதமாந்த நோய். இதனால் மல சலங் கட்டிப் பால் குடியாமல் குழந்தை அலறி அழுவதுடன் பிரண்ட பார்வையையு முண்டாக்கும், disease in children arising chiefly from indigestion. It is marked by suppression of stools and urine, aversion to milk, screaming, ghastly look etc.

உளா மாந்தை, உடம்பி னுள்ளே மார்பு, குடல், வயிறு முதலிய விடங்களில் பருக்கள் புறப்பட்டுப் பழுத் துடைவதனால், உடம்பு கனத்து வலித்து, குத்தல், குடைச்சல், கை கா லெரிச்சல், இருமல், மயக்கம், சுரம், தலை வலி முதலிய குணங்க ளுண்டாகி, நெஞ்சு, விலாப் பருக்து, இருமலினால் தொக்து, குரல் கம்மி, நீர் வழிந்து, உணவு வெறுத்து, தூக்கம் பிடியாமல், உடம்பை யிளைக்கச் செய்யு மோர்வகைச் சிலேட்டும நோய், an incurable internal abscess attended with inflamation in the chest, bowels etc. with purulent matter. It is characterised by the following symptoms:--heaviness and pain all over the body, burning sensation in the limbs, cough, giddiness, fever, headache, and also swelling of the chest, weakness through cough, sore-throat, loss of memory, aversion to food, sleeplessness and general emaciation of the body — Tuberculosis; 2. உடம்பினுள் ஈரலில் குருக்கள் எழும்பி வெந்தழிந்து, சீழ்கொண்டு உள்ளாழ்ந்து, மார்புவலி, சுரம், மூச்சுவிட முடியாமை, இருமல், கோழை, சில சமயம் இரத்தங் கக்கல், முதலிய குணங்களைக் காட்டி மோர் தீராத நோய். இதுவே சய ரோகம், an incurable disease of the lungs characterised by the formation of tubercles, which break down, forming in the interior of the lungs cavities filled with purulent matter. It is marked by chest pain, fever, inability to breathe, cough, expectoration of the said matter and spitting of blood—Tuberculosis of the lungs or Pulmonary phthisis; 3. (உளா + மாந்தை = நொதி அல்லது சீழ்க் கட்டி + உள் எழிவு) உடம்பினுள் சீழ் கட்டி அழிதல், (*literally*) any tubercle degenerated and filled with purulent matter inside the body. See உள மாந்தை.

உள மாந்தை கொள்ளல், சய ரோகங் கொள்ளல், to become a consumptive.

உளைவு, சீதளத்தாற் காணும் உடம்புக் குடைச்சல், intense pain in the limbs from

cold or rheumatism; 2. வயிற் றுளைவு, griping pain in the stomach or the bowels; 3. உடம்பு நோய், extensive pain in the body; 4. பாதத்தை அணுசரித்த வாத நோயி லொன்று, rheumatism affecting the feet.

உஷாவுக் கண்ண, கண் மணியுள் உளைந்து வலிக்கு மோர்விதக் கண்ணேய், inflammation of the iris – Iritis.

உஷா வெடுத்தல், நோ யுண்டாதல், to be suffering from griping pain; 2. நரம்புக் குடைச்சல், having neuralgic pain.

உள், மனம், mind; 2. உட் புறம், inside as opposed to outside; 3. உள்ளான், which see; 4. வெங்காயம், onion; 5. இரகசிய மானது, that which is private or secret as in உள் ளங்கம், the genital; 6. உள்ளி டம், internal organ as opposed to external one.

உள் கடுப்பு, உள் வலி, internal pain; 2. உள் ளழற்சி, internal irritation or inflammation.

உள் கரு, see உட் கரு.

உள் கருவி, உடம்பினுள் ளிருக்கும் 96 தத்து வங்கள், the 96 constituting elements essential for the building up of the body both physically and mentally.

NOTE.—They are primordial and eternally existing essences. The Sankhyas reckon 25 Tatwams, or metaphysical entities, whereas, the Sheivites postulate 96 Tatwams or constituent principles in nature, including elements, bodily and mental organs, faculties, matter etc.

For further details see under தத்துவம்.

உள் கழலை, உள் ளுறுப்புகளுக் குண்டாகும் கழலை, tumour of internal organs.

உள் கொதிப்பு, உடம்பி னுட்காங்கை, internal heat; 2. உட் சுரம், internal fever.

உள் சுரம், சந்தத சுரம், a long-continued internal fever, see உட் சுரம்.

உள் சூடு, see உட் சூடு.

உள் தோல், see உட் டோல்.

உள் நோக்கம், உள்ளே நோக்கல், the act of looking inwardly; 2. தன்னைத்தா னறிதல், (*In Philosophy*) examination of one's own thoughts and feelings—Introspection. See உண் ணோக்கல்.

உள் புண், see உட் புண்.

உள் மரித்த குறி, குழந்தை கருப்பையி னுள் ளே இறந்ததைக் காட்டும் அடையாளங் கள், அதனுல் தாய்க்கு, குளிர், அசௌகரிய வுணர்ச்சி, அரோசகம், சுவாச நாற்றம், மார்த் தளர்ச்சி, அடிவயிறு கனத்தல், தேகம் சில் லிடல், இருபக்கமும் கனதி தோன்றல் முதலி யன ஏற்படும், symptoms of the death of the child in the womb — sudden rigor, uneasiness, bad taste, fetid breath, flaccidity of the breasts, sensation of heaviness and coldness in the abdomen, feeling of the rolling about of a heavy body from side to side as the patient moves etc.

உள் மரித்த சிசு, கருப்பையில் இறந்த குழந் தை, the child dead in the womb. See அகமரித்த கருப்பம்.

உள் மருந்து, உள்ளுக்குச் சாப்பிடு மருந்து, medicine taken internally, as opposed to (வெளி மருந்து) external application.

உள் மாந்தம், குழந்தைகளுக் குண்டாகு மோர் வகை மாந்த நோய், indigestion with fever and other complications in children due to disorders of internal organs.

உள் மாந்தை, see உள மாந்தை.

உள் மூலம், அபானத்துள் தசைபோல் வளர்ந் து மலத்தை யிறுகச் செய்து, வயிறு மந்தித் து, மலத்தில் இரத்தம் விழச்செய்யு மோர் அசாத்திய மூல நோய். இது ஆசனத்துள் மறைந்து நிற்கும், a polypus appearing about the innermost ring or groove of the rectum. It lies concealed within the sphincter ani — Internal hemorrhoids. It is opposed to வெளி மூலம், external hemorrhoids, which is situated outside the sphincter ani.

உள் ரோகம், பொதுவாக உடம்பினுள் ளிருக் கும் நோய், an internal disease in common; any disease of the organs within the body.

உள் வந்தை, உள் ளுறுப்புகளி லுண்டாகும் தூக் குணி, internal parasites.

உள் வயிரம், மரத்தி னுள் பாய்ந்த வயிரம், the solid portion in the heart of a tree or inside a timber; the core of a tree. See அகக் காழ்.

உள் வயிரிப்பு, புண்ணி னுட் புறத்தில் கா ணும் கடினமான பாசம், the hard portion

found internally in a boil or an abscess —Core.

உள் வரட்சி, உடம்பினுள் ளுறுப்புகள் தாக்கப்படுவதா லேற்படும் ஓர்வகை சன்னி, apoplexy arising from the affection of internal organs; 2. இருமலினாலும், வெட்டைச் சூட்டினாலு முண்டாகும் வரட்சி, dryness due to cough as experienced in asthma, consumption, venereal heat etc.

உள் வலி, புண் புரை முதலியவைகளி னுட் பக்கத்தில் காணும் வலி, inward pain as in an abscess etc; 2. உள் ளுறுப்பின் வலி, pain in the internal organ.

உள் வலிப்பு, அறிவழியாது உடம்பினுள் ளுண்டாகும் இழுப்பு, a slight involuntary spasmodic movement with no loss of consciousness — Internal convulsion. It is a kind of petit mal as opposed to grand mal (epilepsy).

உள் வளம், மூளைக்குள் விருக்கும் கட்டு, a pair of bands connected with the cerebrum—Crus cerebri.

உள் வளையல், see உள் வினை.

உள் வளைவு, உள்ளாக வளைந்திருத்தல், incurvation; concavity as opposed to புற வளைவு, convexity.

உள் வாங்கல், உள்ளுக் கிழுத்தல், drawing in as with the tongue in convulsions and paralysis and with the eyes in cases of death.

உள் வாய், வாயி னுட் புறம், the inner cavity of the mouth. 2. வாயி னுட்பக்கம், inside of the mouth.

உள் வித்திரிதி, உடம்பினுள் ளுண்டாகுங் கட்டி, an internal deep-seated abscess, such as psoas-abscess, brain-abscess, etc. It is opposed to வெளி வித்திரிதி, which see.

உள் விப்புருதி, உடம்பினுள் பற்பல வுறுப்புகளிற் காணும் கட்டி, a malignant tumour occurring in any part inside the body—Internal cancer; 2. வயிற்றின் இடது பக்கத்தில் கடினமாகக் காணுமோர் விப்புருதிக் கட்டி. இதனால் மிக்க வலி, கோழையுடன் இரத்தங் கக்கல், உடம் பிளைத்தல் முதலிய குணங்கள் ஏற்படும், cancer of the stomach which is usually felt to be a hard tumour on the left side below the ribs. It is marked by great pain, vomiting of bloody mucous, emaciation of the body etc. 3. வயது சென்ற பெண் களுக்குக் கருப் பையிற் காணும் கட்டி. இதனால் மிக்க வலி, சூதகமல்லாது காணும் இரத்தப் போக்கு, காற்றமான நீர் ஒழுக்கு, மிக்க பலவீனம், உடம் பிளைப்பு, முதலிய குணங்க ளுண்டாகும், cancer of the womb causing much pain. It is accompained by bleeding at non-menstrual times, a badly smelling watery discharge etc.

உள் விரணம், உடம்பி னுள் ளுறுப்புகளுக் கேற்பட்ட விரண நோய். இது மிக்க அபாயமானது. இதனால் கட்டி யேற்படும் inflammation of the internal organs such as, the lungs, the liver, the bladder, the intestines, the kidney, etc., which may subsequently be developed into tubercles, cancers etc.

உள் விழுதல், see உள் வாங்கல்.

உள் வினை, கட்டி, பிளவை முதலியவற்றிற் குள்ளாக விருந்து கொண்டு, வலி, தன்பம் முதலியவைகளை யுண்டாக்கும் வினை, the root cause like micro-organisms of syphilis, tubercle, abscesses, carbuncles, etc., which bring about all sorts of troubles such as pain, sufferings etc; 2. ஊழ் வினை, inherited fate.

உள் வீக்கம், உடம்பினுள் ளுண்டாகும் வீக்கம், internal swelling.

உள் வீச்சு சன்னி, உள் ளுறுப்புகளுக்குக் காணும் இசிவு சன்னி, convulsions of involuntary muscles such as in, those of the heart, the stomach, the intestines and the gullet. It is opposed to புற வீச்சு சன்னி, the one attacking voluntary muscles as in epilepsy, tetanus etc., and convulsions of cerebral hemorrhage.

உள் வெக்கை, பல காரணங்களை முன்னிட்டு உடம்பினுள் ளேற்படும் உஷ்ணாதிக்கம், இதனால் இரத்தக் கேடுண்டாகி நரம்பு பலவீனப்படும், internal heat in the system arising from all chronic diseases. By this heat, blood is deteriorated and the nervous system weakened; 2. உட் சுரம், fever without external symptoms.

உள் வெக்கை சுரம், நா வரண்டு, தலை வலித்து கண்களில் அனல் புகுந்து, அடிக்கடி தண்ணீர் கேழ்க்கு மோர் வகைச் சுரம், a low fever attended with parched tongue, headache, burning eyes, intense thirst etc., due to chronic inflammation.

உள் வெட்கை, see உள் வெக்கை.

உள் வெட்டு, பொன் மதிப்பிடும் ஓர் முறை, a process of testing gold ; 2. மாற் றுயர்ந்த பொன், superior or refined gold.

உள் வெதுப்பு, see உள் வெக்கை ; 2. மன வெறுப்பு, vexation of mind.

உள் ளக்கரம், see உள் ளட்சரம்.

உள்ளக் காட்சி, உள் நோக்கம், the inner sight; 2. மனிதற் தோன்றும் காட்சிகள், those that are seen by a Yogi through psychic powers, such as forms like snowfall, smoke, sun, wind, fire, firefly, and lightning; 3. உண்மையான தோற்றம், things seen by a Yogi as they are and not as they appear to be ; seeing things in their true colours.

உள் ளங்கம், உடம்பி னுள் ளவயவம், internal organ of the body ; 2. இரகசியமான உறுப்பு, the secret organ such as the genital in male or female.

உள்ளங்க விரத்த வொழுக்கு, hemorrhage of internal organs.

உள்ளங் கா லெரிவு, பித்தா திக்கத்தினலும் அல்லது வாத பித்தம் கோளாறடைந்து இரத்தத்தை அனுசரிப்பதனலும், உள்ளங் காலி லேற்படு மோர் வகை எரிச்சல், இது அதிகமான நடையினல் சாதாரணமாக வேற் படும், the burning sensation in the soles of the feet caused by excess of bile or by the deranged local Vayu and Pittam, extending to the blood in the system. It is generally seen to afflict persons of pedestrian habits.

உள்ளங் கால், பாதத்தி னுட் புறம், the sole of the foot—Vola pedis.

உள்ளங் காற் குத்து, வாதத்தை யடித்த வோர் வகை நோய். இதனல் உள்ளங் காலில் ஊசி யாற் குத்துவது போல் வலி யுண்டாகும்; a rheumatic disease marked by pin-prick pain on the soles of the feet. It is said to be due to disorder of Vatham in the system.

உள்ளங் காற் கை யெரிச்சல், விஷ சுரம், பித்தாதிக்கம், வாதநோய், குடற் கோளாறு முதலிய காரணங்களினல் உள்ளங் கையிலும் காலிலும் காணும் எரிச்சல். இதனல் தூக்கங் கெட்டு, உடம்புக்குக் கெடுதி ஏற்படுவ துடன், சில சமயங்களில் இது அதிகப்படில், உடம்பு மெலிந்து, நரம்பு பலவீன மடைந்து காணும், a very troublesome disease causing a most painful sensation of burning in the soles of the feet and the palms of the hands. It is due to malarial influences, bilious disorders, rheumatic affections, bowel complaints etc. It is usually marked by sleeplessness, affection of general health etc. and also sometimes by emaciation and debility which accompany the progress of the malady.

உள்ளங் காற் றிமிர், உடம்பில் வாயுவும், கபமும் கோளா றடைவதனல் உள்ளங்காலி லோர்வித வலியையும் உணர்ச்சி யின்மை யையு முண்டாக்கு மோர்வித வாயு நோய். இதற்கு வடமொழியில் 'பாத அரிஷம்' என்று பெயர், a disease of the soles of the feet marked at first by a peculiar pain and then by loss of sensation. It is due to the deranged condition of Vayu and Kapam.

உள்ளங் காற் றினவு, உள்ளங் கால் நரம்பில் சீதளந் தோன்றி அதனல் நமைச்சல் மிக வுண்டாகி, வலியையும், குத்தலையுங் கொடுக்கு மோர் நோய். இது உள்ளங் கையிலும் தோன்றும், a disease of the soles of the feet, characterised by intense itching and piercing pain. It is due to the affection by excess of cold. This may also arise in the palm of the hand.

உள்ளங் கை, அகங் கை, the palm of the hand—Vola manus.

உள்ளங் கை புறங் கை நக்கல், கஷ்ட சீவனம், living from hand to mouth.

உள்ளங் கையில் நென்பது கொண்டை முடிதல், பெண்ணின் வல்லமையைக் குறித்துக் சொல்லும் பழ மொழி, proverbially said of a woman's dexterity in trying to accomplish impossible or impracticable things.

உள்ளங் கை யெரிச்சல், பித்தத்தினு லேற்படும் உள்ளங்கை எரிவுத்தம், burning sensation of the palm due to bilious efiects *c. f.* உள்ளங் காலெரிவு.

உள்ளங்கை யோரம், சிறு விரலி லிருந்து மணிக் கட்டு வரையி லுள்ள கை யோரம்; உள்ளங் கை ரேகை நூலின்படி இதற்குச் சந்திர மேடு என்று பெயர், the border or the edge of the palm of the hand from the base of the little finger to the wrist — Antithenar eminence. In Chiromancy it is termed the 'Moon eminence'.

உள்ளங்கை ரேகை, உள்ளங்கையி லமைந்த வரிகள். இவைகளைக் கொண்டு, அதிர்ஷ்டம், முதலியவைகளைச் சொல்வ துண்டு, the lineaments on the palm of the hand from which is predicted fortune etc.

உள் ளடக்கம், யோகிகள் ஆன்மாவைப் பிரமத்தி லடங்கச் செய்தல், the art of bringing about the union of the universal soul with the Divine spirit; 2. மூச்சை யுள்ளே யடங்கச் செய்தல், suppression of breath by a Yogi.

உள் ளடக்கல், எழும்பும் மூச்சு, இருமல், முத லியவைகளை உடம்பி னுள்ளே ஒடுங்கச் செய்தல், to suppress as is done with breath, cough etc.

உள் ளடங்கல், வாசியுள் ளடங்கல் அதாவது மூச்சு வெளி யோடாது உடம்பினில் தரிக் குதல், (*In Yoga Philosophy*) a condition in which the respiration is rendered calm and composed within the system. In other words, the function of breathing is suppressed and is allowed to settle within the body; 2. சமாதி புகுதல், entering into Samadhi by a Yogi. See அகால வடக்கம்.

உள்ளடி, உள்ளங் கால், the sole of the feet.

உள்ளடி கனத்தல், பாதத்தைத் தூக்கும் போ தும் வைக்கும் போதும் களி மண் அப்பி யது போல் அல்லது செத்தை ஒட்டிக் கொண்டது போல் தோன்றிக் கால்கள் மரத் துக் காணு மோர் வாத நோய். இது அதி சீதளப் பிரதேசத்தில் வசிப்பதனாலும், கு ளிர் காற் று உள்ளங்காலைத் தாக்குவதனா லு மேற்படும். இதற்கு வடமொழியில் 'பா தலக வாதம்' என்று பெயர், a disease in which the patient feels as if the soles were coated with clay or some rubbish sticking to them while raising or planting the feet. It is an affection of the sole due to living in an extremely cold place or to chillness attacking the feet—Loco motor ataxy.

உள் ளட்சரம், குழந்தைகளுக்கு முகமும் நாக் கும் வெளுத்து, வாய் வெந்து, மூக்கில் நீர் வடிந்து, சுரத்துடன் தாகமுங் காணு மோர் வகை அச்சர நோய், a form of stomatitis in children due to disordered state of the stomach. It is characterised by inflammation of the mouth, paleness of the face and the tongue, fever and thirst.

உள்ளது, ஆன்மா, soul; spirit; 2. இருப்பது that which exists; 3. விதிக்கப் பட்டது that which is ordained or decreed.

உள்ள நாள், உயிரோ டிருக்கும் காலம், lifetime; period of existence.

உள்ள நோய், இருக்கும் நோய், existing disease; 2. அனுபவிக்கும் நோய், disease experienced or suffered.

"உள்ள நோய் பிணிகள் தீர்த்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்"

(விவே. சிந்தா.)

3. மனோ வியாதி, mental disease.

உள்ளந் தண்டு, கழுத் தெலும்புகள், bones of the neck—Cervical vertibrae.

உள்ளந் தரங்கம், (உள் + அந்தர் + அங்கம்) உடம்பினுள் ளிருக்கும் இரகசியமான உறுப் பு, (*In Psychology*) the secret organ inside the body *c. f.* அந்தக் கரணம்.

உள்ளந் தாள், see உள்ளங் கால்.

உள் ளபானம், ஆசனத்தி னுட் புறம், the interior of the anus—Rectum.

உள்ள பிள்ளை, கருப்பையி லிருக்கும் சிசு, the child in the womb; 2 மெய்யான பிள்ளை, true child in the womb as opposed to the one suspected in cases of Spurious pregnancy.

உள்ளப் புணர்ச்சி, பெண் ணுடன் புணருவதா கக் கருதுதல், imagining as having coition; mind prostitution; 2. ஆணும் பெண் ணும் மனதினாற் கூடும் புணர்ச்சி, the union of lovers in mind. It is opposed to (மெய்யுறு புணர்ச்சி), bodily intercourse.

உள்ள மட்டும், ஆயுள் வரை, till one's lifetime.

உள்ள மிகுதி, ஆனந்தப் பரவசம், ecstasy of mind, as if from divine or spiritual influence; 2. மன மகிழ்ச்சி, exalted state of the mind.

உள்ளம், மனம், mind; heart; 2. கருத்து, intention; 3. விஞ்ஞானம், consciousness; 4. அகச் சான்று, conscience; 5. ஆன்மா, soul; 6. ஓர்வகை மீன், see உல்லம்.

உள் ளம்மி, மருந் தரைக்க வுபயோகிக்கும் ஆழ மா யுள்ள குழி அம்மி, a vessel made of granite stone with an oval-shaped cavity, in which ingredients are pounded.

See also கலுவக் கல்.

உள்ளல், கருத்து, intention; 2. உள்ளான் குருவி, the common snipe—Scolopax.

உள் ளவயவக் கட்டு, உடம்பி னுள் ளிருக்கும் உறுப்புகளின் அமைப்பு, the structure of the internal organs.

உள் ளவயவம், உடம்பினுட் கருவி, the internal organ of the body.

உள் ளழலை, உடம்பினுட் கொதிப்பு, internal heat in the system; 2. உள் ளுறுப்பு களுக்குக் காணும் அழற்சி, inflammation of the internal organs.

உள் ளழல், உட் தீ, gastric fire.

உள் ளழற்சி, உடம்பினுள் ளேற்படும் வேக் காடு, inflammation of the internal organs of the body as in tuberculosis.

உள் ளழியு நோய், உள் ளுறுப்புகளை நாசம் செய் யும் சயம் முதலிய நோய்கள், wasting diseases that bring about disintegration or degeneration of internal organs such as tuberculosis, consumption, etc. See உள் ளுருக்கி.

உள் ளளவு, உயி ருள்ள வரை அதாவது உயி ரோடிருக்கும் வரை, till one's life time.

உள் ளறை, உடம்பினுள் ளிருக்கும் அறைகள், internal cavities of the body—Sinuses.

உள் ளனல், உட் காங்கை, internal heat.

உள்ளா, ஓர்வகைக் கடல் மீன், a carnivorous sea-fish of dark-blue colour—Sphyraena acutipinnis.

உள் ளாக்கல், உட்படச் செய்தல், நோய்க் குள் ளாக்கல், causing to be involved in, as in the case of one suffering from a disease.

உள் ளாடல், உடம்பினுள் ளாடிக் கொண்டிருத் தல், மூச்சு உள் ளாடல், அல்லது உயிர் உள் ளாடல், to be moving inside the body as does life or breath.

உள் ளாடை, உட் சீலை அதாவது ஆசன சிகிச்சை முதலிய இரண வைத்தியங்களில் உபயோகிக்கும் சல்லா உடை, (*In Surgery*) a muslin dressing for use mainly in rectal and vesical surgery—Chemise.

உள் ளாயுதம், உடம்பி னுட் சிகிச்சைக்காகப் பிரயோகிக்கும் கருவி, any instrument set apart for internal use in surgery.

உள் ளாலயம், இதயம், heart.

உள் ளாழம், (உள் + ஆழம்) புண் புரையினுள் ளோடும் ஆழம், the internal depth of the cavity (sinus) in any sore or abscess.

உள்ளான், உள்ளான் குருவி, இது பலவிதம், common snipe; Scolopax—Gallinago media. It is so called from its frequenting marshes. The different varieties are:—

1. கோரை யுள்ளான்—one which frequents sedges — Scolopax Madraspatana.
2. கீரி யுள்ளான்—one which resembles ichneumon.
3. சூத்தாட்டி யுள்ளான்—water wagtail which shakes its tail continually while walking.
4. தடி மூக் குள்ளான்—one with a thick bill or one whose bill resembles the knob of a stick.
5. தூடுப் புள்ளான்—one whose bill resembles a paddle.
6. மாரி யுள்ளான்—rain snipe or one which sucks in water. It is the common snipe—Gallinago scolopacinus.
7. பதுங்கை யுள்ளான்—one that hides —Scolopax burka.
8. கோழி யுள்ளான்—fowl or jack snipe or Judcock—Gallinago gallinula.
9. மயி லுள்ளான்—painted snipe (from variegated plumage)—Rynchaca bengalensis.
10. சிவப்பு மூக் குள்ளான்—snipe with a red bill, see மயி லுள்ளான்.
11. காட் டுள்ளான், wood snipe—Gallinago nemoricola alias Aemoricola nepalensis. It is a snipe found solitary in elevated regions and is uncommon.
12. சட்டித் தலை யுள்ளான்—one with a big head.
13. கொசு உள்ளான்— another kind of snipe.

NOTE—1, 6 and 13 are mostly used in South India for a favourite dish as their flesh has medicinal virtues. They are said to cure urinary disorders, digestive troubles, etc. No. 1 is specially useful for convalescents, as it tends to increase the appetite.

உள்ளி, வெங்காயம், onion — Allium cepa; 2. வெள்ளைப் பூண்டு, Garlic—Allium sativum.

"ஊட்டினும் பல் லிரை யுள்ளி கமழாதே"
(வெற்றி. வேற்.)

உள்ளிக் கோளம், கழுத்தின் கீழ் மார்பறையுள் இரண்டு காணுங் கோளம், a two-lobed body in the neck and the thorax of an infant—Thymus gland.

உள் ளிசிவு, see உள் வீச்சு சன்னி.

உள்ளிச் சுவேதம், வெள்ளை வெங்காயம், white onion; 2, வெள்ளைப் பூண்டு, garlic — Allium sativum.

உள் ளிடுதல், புண் புரைகளில் காரச் சீலை அல்லது மருந்துகளைப் புகட்டல், inserting into the sinuses of wounds any caustic gauzes or medicines.

உள் ளிடை, இடுப்பி னுட் பக்கம், pelvis inside the hip.

உள்ளித் திரி, வெள்ளைப் பூண்டின் உள் ளிருக்கும் பல், the clove of garlic; one of the several bulbs in a garlic.

உள் ளிந்திரியம், மனது, the internal sense; mind; 2. அந்த ரிந்திரியம், which see; 3. சுக்கிலம், semen.

உள்ளிப் பல், see உள்ளித் திரி.

உள்ளிப் பாஷாணம், a kind of arsenic.

உள்ளிப் பூடு, உள்ளிப் பூண்டு. } வெள்ளைப் பூண்டு, garlic—Allium sativum.

உள்ளி யாமணக்கு, ஓர்வகை யாமணக்கு, a variety of castor plant—Ricinus communis.

உள்ளி யெண்ணெய், உள்ளி யாமணக்கு எண்ணெய். இதை, வெப்புப் பாவை, வயிற்றிற் குத்து வாதம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். முறைக்கு அகத்திய வல்லாதி 600 ஐப் பார்க்கவும், oil extracted from a variety of castor seeds and prescribed for cancer of the stomach, acute abdominal pain (colic), etc. For details see Agastiyar Vallathi. (600); 2. வெள்ளைப் பூண்டுத் தைலம், oil obtained from garlic.

உள் ளிரத்த வொழுக்கு, உடம்பினுள் ளவய வங்களி னின்று இரத்தம் வடிதல். இது உடம்பினி னுள்ள இரத்தக் குழாய்களுக்குக் காயம் அல்லது நோயின் காரணங்களே முன்னிட்டுக் காணும். இதனல் சோர்வு, களைப்பு, சீதள வியர்வை, நாடித் தளர்ச்சி, முதலியவைகள் ஏற்படும், இதையே ஒடுக்கமெனக் கொள்ளப்படும். இத்தகைய வொழுக்கே தலைக்குட் காணுமாகில் சன்னிக்குக் காரணமாகும், internal hemorrhage. This occurs from an injury to or a disease of the internal blood-vessels. It is accompanied by great depression, faintness, cold perspiration, feeble pulse etc., and the condition is described as *Collapse*. The same bleeding if it takes place within the head, it is known as apoplexy.

See also இரத்த பித்தம்.

உள் ளிருப்பு, உள் ளிருக்குந் தன்மை, the internal nature or situation.

உள்ளில் ரோகம், உடம்பினுள் ளிருக்கும் நோய், internal disease.

உள்ளின் மாசு, see உப மலம்.

உள் ளீடு, உள் ளிருக்குஞ் சத்து, the inherent substance of a nut; 2. உள் ளிருக்கும் குழைவு, the tender substance inside of a fruit; 3. வெளி யுள்ளதற்குச் சரி யொத்தபடி உள்ளே யமைந்தது, that which corresponds inside to the one existing outside of anything; 4. பலகாரத்தி னுள்ளே வைக்கும் வஸ்து, the essentials inclosed in a cake.

உள் ளீரம், உடம்பினுள் ளிருக்கும் ஈரம், the moisture within the body.

உள்ளு, see உள்ளான்.

உள்ளுக்குக் கொடுத்தல், உண் ணும்படி மருந்து கொடுத்தல், to administer or to give medicine to be taken internally.

உள்ளுக்குச் சாப்பிடல், மருந் துண் ணுதல், taking medicine internally.

உள்ளுக்குச் செலுத்தல், உணவு அல்லது மருந்து, முதலியவைகளை யுடம்பி னுள்ளே பிரயோகித்தல் to give food by force or to administer medicine, etc., into the system by insertion, injection, etc.

உள்ளுக்குத் தடவல், உடம்பின் அவயவங்களுக்குள் பூசுதல், the local application into the rectum, the vagina etc.

உள்ளுக்குப் பிரயோகித்தல், see உள்ளுக்குச் செலுத்தல்.

உள்ளுக்கு மருந்து, உண்ணக்கொடுக்கு மருந்து, medicine intended to be taken internally.

உள்ளுக் கேற்றல், மருந்து முதலியவைகளைப் படிப் படியாக உடம்பினுட் செலுத்துதல்,

administering drugs or medicines by degrees.

உள்ளுங் கொண்டு புறமும் பூசல், உள்ளுங் கொண்டு மேலும் பூசல், } மருந் தெண்ணெய் அல்லது தைலத்தை உண்டு, அதே மருந்தை உடம்பின் மேலும் பூசிக் கொள்ளல், taking medicinal oil internally and also applying the same externally.

உள் ளுடன், see உள்ளீடு.

உள் ளுடை, see உள் ளாடை; 2. கோவணம், a piece of cloth used for covering the genital by a male.

உள் ளுடைதல், மன முறிதல், to be broken-hearted; 2. ஊக்க மழிதல், failing in energy.

உள் ளுதடு, இது பெண் குறியின் உட் புறத்திலிருக்கும் சிறிய உதடுகள், the internal lips of the vulva—Nymphae. See சிற் றுதடு.

உள்ளுப் புடை, உள்ளாகப் புடை கொள்ளல், an internal swelling as in boils, abscesses, etc.

உள்ளும் புகட்டி மேலும் பூசல், see உள்ளுங் கொண்டு மேலும் பூசல்.

உள்ளும் புறமும், உள்ளும் வெளியும், within and without; inwardly and outwardly; 2. மனமும் தொழிலும், (*fig*) mind and action.

உள் ளுயிர், சுத்தை, snail; 2. உடம்பி னுள்ளிருக்கும் உயிர், life within; 3. ஆன்மா, soul; 4. அந்தர் யாமி, god within.

உள் ளுயிர்க் குன்று, see உள் ளுயிர்.

உள் ளுருகுதல், மனங் கரைதல், to melt, said of the mind; 2. உள் ளுறுப்பு மெலிதல், wasting of the internal organs.

உள் ளுருக்கி, உடம்பை மெலியச் செய்யும் வஸ்து, (*lit*) that which tends to reduce or emaciate the system; said of medicines taken in or of diseases within; 2. சிலேஷ்ம உடம்பினளின் பாலைக் குழந்தைகள் குடிப்பதால், இரச தாது ஓடுகின்ற நரம்புகளின் மார்க்கம் அடைபட்டு அதனால் அன்ன ரசம் மேலுக்கு ஏறுமல், இருமல், இளைப்பு, முதலான குணங்க ளேற்பட்டு, உடம்பை இளைக்கச் செய்யு மோர்வகைக் கண நோய். இதற்கு வடமொழியில் 'பால தோஷம்' எனப் பெயர், affection of the mesenteric glands in children, resulting in digestive derangement and gradual wasting of the body.

It is said to be caused by sucking the milk of a woman suffering from phlegmatic diseases, as a result of which obstruction is caused in the lymphatic vessels. It is marked by cough, fatigue, etc.--Tabes mesenterica.

NOTE—It is a popular name for any morbid process by which the healthy tissues of the various organs are transformed into albuminous substances of waxy degeneration.

உள்ளு லத்தீதம், அகத்தி, which see,

உள்ளு லர்த்தி, கணைச் சூட்டினால் குழந்தைகளின் உள் ளுறுப்புகளே உலரும்படிச் செய்து உடம்பைப் பலவீனப் படுத்து மோர் கண நோய், an atrophy in children due to the wasting of the muscles of the internal organs of the body arising from defects or failure of nutrition -- Infantile atrophy.

உள்ளுலவு, சிற் றெருவுலவு, which see.

உள் ளுறுத்தல், உட் செலுத்தல், to thrust in. See உள் ளிடுதல்.

உள் ளுறுப்பு, உண்ட வுணவைச் சரிக்கச் செய்து, இரத்த முதலிய சீவ தாதுக்களே யுண்டாக்கி, உடம்பி னுள்ளே உயிரைத் தங்கியிருக்கச் செய்யும் தசை யீரல், இருதயம், வயிறு முதலிய உறுப்புகள், the internal organs of the body such as, the lungs the heart, the stomach etc., being the principal agents for digestive function and for generating or lending vitality to the system which tends to keep the soul and the body together.

உள் ளுறை, புண் புரைகளுக்கு உள்ளே புகட்டு மருந்து, any medicine which is thrust in or inserted into the cavities of sores, abscesses etc.; 2. உள்ளே கொள்ளும் படிக் கொடுக்கு மருந்து, any medicine given to be taken internally; 3. உடம்பி னுள்ளே தசை யீரல், இருதயம், வயிறு முதலியவைகளைச் சூழ்ந் திருக்கும் உறை அல்லது பை, the sac or bag-like membrane investing the lungs, the heart, the abdomen etc., *viz.* the pleura, the pericardium, the peritoneum, etc.; 4. உட்சருத்து, inward thought.

உள்ளூரி னூறு, உள்ளூரி லகப்படும் அறுவகைச் சரக்குகள் அவையாவன—சவுரி, தாதளை, பிரண்டை, கண்டங் கத்திரி, கோவை, இந்திர

கோபப் பூச்சி, முதலியன, the six indigenous drugs viz:—Bitter gourd, adamant creeper, yellow-berried night-shade, Indian caper and lady's fly.

உள் ஏநர்ச் சரக்கு, உள் காட்டு மருந்துச் சரக்கு, indigenous drugs; local drugs.

உள் ளெரிச்சல், உடம்பினுள் ளுண்டாகும் எரிவுக்குறி, burning sensation felt internally; 2. நெஞ் செரிவு, burning sensation in the heart through inflammation — Carditis.

உள் ளெரிவு, உள் னழற்சி, inflammation of the internal organs.

உள்ளே போடுதல், மருந்தை உட் பக்கமாகப் பூசுதல், applying medicine internally.

உள்ளே யிறக்கல், விழுங்கல், to swallow; 2. உள்ளே புகும்படிச் செய்தல், to let in.

உள் ளொடுக்கம், தன் னடக்கம், control exercised on one's self, as in passion, anger etc. — Self-control; 2. மன வொடுக்கம், control of mind as exercised by the Yogis.

NOTE.—In Psychology, it implies self-discipline which institutes good orders of mind in place of lawless tendencies exciting the lower nervous being. It indicates the gradual elimination of impulses and desires stimulating the animal instincts and sordid fleshly motives, if not a complete destruction of them, at least a complete surrender of them to the will of the self.

உள் ளொட்டி, பிசி ளெட்டி யிலை, இது சொறி யை அகற்றுவிக்கு மோர் ஆகருஷண மூலி கை, an unknown plant supposed to have viscous properties. It is used in medicine for curing itches and in magic for invoking spirits. It is opposed to புற வொட்டி which is another variety.

உள் ளொலி, see உள் ளோசை.

உள் ளொழுக்கு, see உள் னிரத்த வொழுக்கு.

உள் ளேக்காளம், குமட்டல், inclination to vomit—Nausea; 2. உடம்பினுள், புப்புசம், இதயம், இரத்த நாடி முதலியவைகளி லேற்படும் குறு குறுப்புச் சத்தம், murmur in several organs within the system such as the lungs, the heart, the arteries etc.

உள் ளோசை, உடம்பினுள் ளிருக்கும் ஒலி, the internal sound of the body, such as the one arising from the beating of the heart or the beating of the pulse not heard outside the body; 2. யோகப் பியா சத்தில் உடம்பினுள் ளுண்டாகும் ஒலியும் யோகிகள் காதிற் கேழ்க்கும் சங்க நாதம் முதலிய ஆரவாரங்களும், the peculiar sounds heard from within by Yogis during their Yoga practice.

NOTE—The voice within is merely another form of Reason. It is not an illusion or mere imagination, but a great voice within you from which you receive instructions. It is a part of your own natural make-up, a manifestation in Yoga.

உற குதல், see உறங் குதல்.

உறக் கமரி, பீ நாறி, fetid tree — Sterculia foetida.

உறக்கம், தூக்கம், sleep; 2. சாவு, death; 3. சொற்பத் தூக்கம், light sleep—Drowsiness; Somnolence; 3. சோர்வு, weariness.

உறக்கல், உறங்கச் செய்தல், to cause to sleep as is done to a child; inducing sleep as in mesmerism.

உறக் காய்ச்சல், உறக் காய்ச்சுதல், } மருந்தின் சத்து இறங் கும்படிக் காய்ச்சுதல், boiling a drug in water for extracting its essence.

உறக்கு, தூக்கம், sleep.

உறக்குதல், தூங்கும்படிச் செய்தல், to put to sleep; causing to sleep; 2. இமையை மூடச் செய்தல், to weigh down the eyelids, as in sleep.

உறங்கல், தூங்கல், to sleep; 2. தூக்க மயக்க மடைதல், to feel drowsy.

உறங்கி, புளிய மரம், tamarind tree—Tamarindus indica.

உறங்குதல், see உறங்கல்; 2. வாடல், to be withered as do leaves or flowers; 3. சோர் வடைதல், to be weary.

உறங் கொட்டாமை, தூக்கம் பிடியாமை, sleeplessness.

உறட்டலன், உடம்பு வற்றி மெலிந்தவன், an emaciated person; 2. ஒல்லி யானவன், a thin or slim person.

உறட்டி, அப்பம், cake.

உறட்டு, கெட்ட வாசனை, bad smell; stink; 2. வறட்சி, dryness.

உறட்டுக் கண், சாய்ந்த பார்வை யுடைய கண், eye with an oblique look; squint eye—Strabismus.

உறட்டுக் கை, இடக்கைப் பழக்கம், using the left hand with more dexterity than the right—Left-handed; 2. இடக்கை, left hand.

உறட்டை, பிண நாற்றம், awful stink as that from a rotting corpse; 2. கெட்ட நாற்றம், offensive smell, see உறட்டு.

உறட்டை யடித்தல், கெட்ட நாற்றம் வீசுதல், emitting a strong offensive smell or a smell of putrefaction.

உறட்டை வீசுதல், see உறட்டை யடித்தல்.

உறண்டல் மண், வறள் மண், dry clod.

உறண்டுதல், நோய், உண வின்மை, யாத்திரை, வருத்தம், முதலியவற்றுல் மெலிதல், to become emaciated through disease, starvation or journey, affliction of mind, etc; 2. சாப்பா டில்லாமல் இளைத்தல், to be reduced from want of sufficient food or nutrition.

உறண்டை, முறட்டுத் தனம், harshness of disposition; 2. கெட்ட வாசனை; அழுக நாற்றம், bad or offensive smell as of rotten fish, dead body etc; 3. ஊன நாற்றம், rancid smell as of stale butter or ghee.

உறண்டை யடித்தல், see உறட்டை யடித்தல்.

உறத்தல், பிழிதல், pressing out the juice as from leaves, flowers etc; 2. பிதுக்கல், pressing out the pulp from any grain as in shelling peas etc; 3. உறிஞ்சுதல், to suck in.

உறந்தி, see உறங்கி.

உறப் பாய்ச்சல், ஒன்று சேரும்படிச் செய்தல், causing to combine chemically as in

"உறப் பாய்ச்சில் பொன்னு மாமே"

2. யோனிக்குள் ளழுந்தும்படி வேகமாக சம்போகித்தல், thrusting the organ deeply with pressure during coition.

உறமான பந்து, see உச்சிலிங்கி.

உறல், அடைதல், (நோயுறல்), to be attacked with or suffering from, as in diseases; 2. பரிசம், sense of touch.

உறவாகிக் கலத்தல், சம்பந்தப் படல், combining chemically.

உற வாகுதல், see உற வாதல்.

உற வாக்கல், ஒன்றே டொன்று பொருத்தி மடைந்து கலக்கும்படிச் செய்தல், to reconcile drugs or medicines seemingly opposite, different, or inconsistent; 2. ஒருமைப் படுத்தல்; சம்பந்தப் படும்படிச் செய்தல், to set up a chemical combination; to make a consistent mixture.

உறவாக்கி, சம்பந்தப் படும்படிச் செய்யும் மருந்துச் சரக்குகள், drugs or medicines acting as chemical agents; 2. சம்பந்தப் படுத்தும் வஸ்து, that which induces chemical combination; 3. மருந்துகளைச் சம்பந்தப் படுத்துவோன், a pharmaceutical chemist; 4. உலோகங்களை வாத முறையின் படிக் கலக்கச் செய்து சம்பந்த மேற்படுத்தி மாற்ற மடையும்படிச் செய்வோன், (*In Alchemy*) one who practises the obsolete art which aims at the transmutation of metals—Alchemist.

உற வாக்குதல், see உற வாக்கல்.

உறவாதல், கலத்தல், dissolving; 2. ஒருமைப் படல், combining chemically.

உறவி, உயிர், life; 2. உலைக் களம், smith's forge; 3. மலை முருங்கை, wild drumstick tree — Moringa concanensis; 4. ஊற்று, spring; 5. எறும்பு, ant; 6. பிரியருத்தி, worldly attachment; 7. ஓர்வகைப் பூச்சி a moth—Varrata port.

உறவு, எறும்பு, ant; 2. விருப்பம், desire; 3. பிரியருத்தி, wordly attachment, as opposed to துறவு, wordly renouncement; renunciation; 4. சம்பந்தம், connection.

உறவு கலத்தல், மித்திரச் சரக்குகளைச் சேர்த்தல், adding or mixing relative drugs or medicines.

உறவு கூடுதல், மித்திரச் சரக்குகள் ஒன்றுய்ச் சேர்தல், union or combination of relative drugs.

உறவு முரிதல், கூட்டுறவி னின்று பிரிதல், (*In Chemistry*) becoming resolved into elementary particles.

உறவு முரித்தல், கூட்டுறவி னின்று பிரித்தல், to separate the constituent parts; to decompose.

உறவு முறை, உறவாக்கும் அல்லது சம்பந்த மேற்படுத்தும் வாத முறை, (*In Alchemy*)

harmony of parts taken in due proportions; 2. இரசாயனக் கூட்டு முறை, the process of setting up chemical combination; 3. கூட்டு முறை, the method of mixing or compounding crdinarily.

உறவே காய்ச்சல், மருந்து தண்ணீரில் சுவ ரும்படிக் காய்ச்சுதல், boiling down a drug to get an extract.

உறழ்வு, உணர்வு, perception; 2. காலம், time; 3. ஒப்பு, resemblance; 4. இடை யீடு, equilibrium.

உறன் முறை, see உறவு முறை.

உறுவதல், சோர் வடைதல், fainting; getting exhausted.

உறி, கொத்து மல்லி, coriander — Coriandrum sativum; 2. உறிஞ்சல், sucking; 3. இரண் டாழாக்குக் கொண்ட ஓர் அளவு, a measure consisting of two ollocks and it is approximately 8 cubic inches.

உறிஞ்சல், வாய் அல்லது மூக்கினு ளுள்ளே யிழுத்தல், to draw in by the mouth or the nose: to suck up or snuff up; 2. ஈரத்தை வாங்கிக் கொள்ளல், to absorb as of moisture.

உறிஞ்சி, உடம்பில் கெட்ட நீரை வாங்கு மருந் து, a medicine that promotes absorption of bad humors in the system; 2. அன்ன ரசத்தை உறிஞ்சும் கருவிகள், absorbing vessels in the system such as, lacteals, lymphatics etc.,—Absorbent.

உறிஞ்சுகை, உறிஞ்சுதல், the act of sucking in—Imbibition.

உறிஞ் சுப்பு, மூக்கால் முகரும் ஓர்வகை யுப்பு, volatile salt used as a stimulant — Smelling salt.

உறிதல், see உறிஞ்சல்.

உறு, மிக்க, much; abundant.

உறுகண், நோய், disease; 2. துன்பம், suffering; 3. அச்சம், fear.

உறு கண்ணுளர், நோயாளிகள், the diseased.

உறுகுங் கனலி, பிரண்டை, square-stalked vine—Vitis quadrangularis.

உறு சுவை, மிக்கத் தித்திப்பு, intense sweetness.

உறுஞ்சுதல், see உறிஞ்சல்; 2. வாயிலுல் உறிஞ் சல், to suck in small quantities—Sip.

உறுண்டுகம், அவுபல பாஷாணம், a mineral poison.

உறுதல், வருந்துதல், as in வலியுறல், நோயு றல், etc.; to suffer as from pain or disease; 2. அடைதல், coming in contact with; 3. அனுபவித்தல் as of மகிழ்ச்சி, experienc. ing or enjoying as of pleasures; 4. நினைத் தல், thinking; 5. பரிசித்தல், perceiving by touch.

உறுதி, பலம், strength; 2. மந்திரம், Mantram (magic) which is efficacious.

உறுதிப் பொருள், ஞானம், wisdom.

உறுத்தல், வலி யுண்டாதல், having exciting pain, as in கண் ணுறுத்தல், irritating pain from dust etc. in the eyes; 2. அதி கப் படுத்தல், increasing; 3. முள் ளுறுத் தல், to prick as does a thorn.

உறுத்திரம், see உருத்திரம்.

உறுத்தை, அணில், squirrel.

உறு நோய், உடம்பி லடைந்த அல்லது தங்கிய நோய், existing disease; 2. காட் சென்ற நோய், lingering or long-continued disease; chronic disease.

உறு பசி, அதிகப் பசி, voracious hunger.

உறுப் படக்கி, ஆமை, tortoise, which contracts or draws in its limbs within or under its shell.

உறுப் பறை, அங்க வீனன், man defective in any organ or organs; 2. அங்கக் குறைவு, defective of organ; 3. அங்கச் சேதம், mutilation of a limb.

உறுப் பற்றவன், அவயவக் குறையுள்ளான், a man defective of organ; 2. அங்கப் பழு துள்ளான், one with deformity of organ in the body; 3. உறுப் பில்லான், crippled or disabled man.

உறுப்பில் பிண்டம், கருவில் உறுப்புக ளமை யா முன்னம் திரைந்த தசைப் பிண்டம், the aborted embryo; 2. கருவில் உறுப்புகள் ஏற்படாத நிலைமையி லிருக்கும் பிண்டம், the fetus in its earlier stages, (especially before the end of the third month)—Embryo; 3. கால், கை இல்லாமலே உர லிலிருந்து பிறக்கும் பிண்டம், a child born without limbs; 4. கருவில் அங்கங்கள்

நிறைவில்லாப் பிண்டம், a fetus of incomplete or partially developed organs.

உறுப்பினங் கெட்டவன், see உறுப் பற்றவன்.

உறுப்பு, அவயவம், limb or organ of the body; 2 உடல், body; 3. ஈரம் ஏற்றுக் கொள்ளும் உணவு முதலியவைகளின் சத்துக்களால் உண்டாகி அவைகளையே கையாளும் கருவிகள், that which was developed into any part of the body with a special function to perform.

உறுப்புக் கழலை, a tumour arising in any of the organ or organs of the body.

உறுப்புக் குறை, ஞானேந்திரியக் குறைவு. இது எட்டு வகைப்படும் அவையாவன:-செவிடு, குருடு, முடம், ஊமை முதலியன, defective organs of senses; bodily defects. They are of eight kinds such as, in the deaf, in the blind, in the lame, in the dumb, etc.; 2. அவயவக் குறைவு, deformity of any organ in the body. See உறுப் பறை.

உறுப்புத் தளர்ச்சி, ஆண்குறி தளர்தல், want of erectile power as in penis.

உறுப்புத் தள்ளல், மெலிந்தவர்கள் அதிக பாரமான வஸ்துவை எடுப்பதனாலும், தீதபேதி காலத்தில் அதிகமாக முக்கி மலங் கழித்தலாலும், ஆசனவாய் வெளிப் பிதுங்கித் தோன்றல், a prolapse or falling out of the anus due to deranged Vayu in a weak and lean patient after exerting to the utmost in lifting heavy weights or through straining or urging the flow of stool as in dysentery—Prolapsus ani; 2. ஆசனப்பிதுக்கம், protrusion of the rectum or of its mucous membrane. See அண்டு தள்ளுகை.

உறுப்புத் தோல், மான் தோல், deer-skin. 2. ஆண்குறித் தோல், the fore-skin of the penis.

உறுப்பு நீண்டான், நீண்ட ஆண்குறி யுடையோன், one having a long penis.

உறுப்பு நூல், அவயங்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் நூல், a description of the organs of a living body—Organography.

உறுப்பு நோய், அவயவங்களில் ஏற்படும் நோய், any disease pertaining to an organ or organs.

உறுப்புப் பழுது, இந்திரிய ரோகம், organic disease; 2. அவயவச் சேதம், loss, damage or injury to an organ; 3. ஆண்குறி யெழுச்சி யின்மை, want of erectile power in the penis.

உறுப்பு மயக்கம், உறுப்புக் குறை எட்டினுள் ளொன்று, one of the eight bodily defects; 2. உறுப்புகள் விந்தியாசமாய் அமைந்த காரணத்தினால் மேதாவியாகப் பிறத்தல், the peculiar structureof the mind which is given by nature to an individual and by which he is endowed with uncommon intellectual faculties or mental powers—Genius; 3. விசேஷ அவயவங்களுடன் மாறுபாடாய் பிறத்தல், இது அடியிற் கண்ட படிப் பலவித மயக்கங்களோடு ஏற்படும், அவையாவன—a congenital deformity exhibiting very abnormal or unnatural structures—Teratism. It will be found in various forms as mentioned below:—

1. இரண்டுருவாய் இடுப் பண்டை ஒட்டிக் கொண்டு பிறத்தல், இதுவே ஒட்டுப் பிண்டம், union of two fetuses at or near the waists and hips—Catadidymous teratism.

2. சில வுறுப்புகள் இல்லாமலே பிறத்தல், congenital absence or defect of parts—Ectogenic teratism.

3. ஏதாவது உறுப்பு அளவு கடந்து பருத்தல், congenitally excessive sizes of particular organisms or parts—Hypergenetic teratism.

4. உடல் ஒன்றேயாயும் கீழங்கங்கள் இரட்டையாயும் அமைதல், fusion of two fetuses with parts, single above and double below — Anadidymous teratism.

உறுப்பு மூலம், ஒன்பது வகை மூலத்துள் ஒன்று. இது வெளி பிதுங்கிக் காணும், one of the nine kinds of piles i.e., hemorrhoids situated outside the sphincter ani—External hemorrhoids. It is an enlarged vein in the mucous lining of the rectum appearing at the verge ofthe anal orifice.

உறுப்பு வளர்த்தி, அவயவங்களின் புஷ்டி, developement or growth of an organ.

உறுப் புள்ளவன், அங்க லட்சண முடையவன், a man of well-shaped organs.

உறுப் பெழுச்சி, ஆண்குறி யெழுச்சி, erection of the penis.

உறுப்பைப் பற்று நோய், தோல், தசை, மூளை, எலும்பு, முதலியவைகளைத் தாக்கும் நோய், a disease affecting the skin, the muscle, the marrow and the bone.

உறுவது தெளிதல், பின்னிகழ்ச்சியை உணர்ந்து தேறுதல், knowing before hand what is to happen in the future.

உறுவலி, மிக்க வலிவை யுடையவன், able-bodied man or one with great strength.

உறுவல், துன்பம், suffering.

உறுவிழி புடைத்தல், அழற்சியினால் கரு விழி அல்லது வெள் விழி பிதுங்கிக் காணுமோர் கண்ணோய், protrusion of the cornea or sclera, resulting from inflammation — Staphyloma.

உறை, உவர் நீர், brackish water; 2. மருந்து, medicine; 3. வெண் கலம், bell-metal; bronze; 4. காரம், caustic; pungency 5. உவர் மண் நீர், washerman's lye i. e., water impregnated with an alkaline salt such as soda; 6. மழை, rain; 7. நோய் தீர்க்கு மருந்து, curatives; 8. உறை மோர், (as for பிரை குத்தல்), coagulant such as buttermilk; 9. பாம்பின் விஷப் பை, the poison-bag of a serpent; 10. உணவு, food; 11. பளிங்குக் கண்ணடி, crystalline lens; 12. வாணாள், life-time; 13. ஒழுகல், leak; 14. நீர்த் துளி, a drop of water; 15. மழைக் காலம், rainy season.

உறை கல், வெண் கலம், bell-metal.

உறை காலம், மழைக் காலம், rainy season; 2. வாழ் நாள், life-time.

உறைக் குத்தல், பாலுக்குப் பிரை குத்தல், the curdling of milk.

உறைக்கு மிலை, வெற் றிலை, betel-leaf. It is so called from its leaf being pungent.

உறைச் சாலை, மருந்துச் சாலை, dispensary; 2. வைத்திய சாலை, hospital.

உறைதல், இறுகுதல், freezing; 2. தோய்தல், coagulating.

உறைத்தல், காரமா யிருத்தல், to be pungent; 2. சூடு உறைத்தல், to affect painfully as the heat does; 3. வெயில் உறைத்தல், to affect with a burning sensation as the sun does.

உறை நீர், காரமான நீர், any alkaline liquid; 2. பனி நீர், dew-water; 3. உறைந்த நீர், frozen water such as ice; 4. மருந்து நீர், a solution of medicine.

உறைந்த கஞ்சி, ஏடு படர்ந்து இறுகிய கஞ்சி, congealed conjee with a film formed on the surface.

உறைந்த சீழ், இறுகிய சீழ், a solid or cheesy pus; concrete pus.

உறைந்த நோய், உடம்பில் ஊறியிருந்த நாட்பட்ட நோய், long-continued or chronic disease.

உறைந்த பால், தயிர், curdled milk; 2. கட்டிப் பால், condensed milk.

உறைந்த விரத்தம், இறுகிய விரத்தம், coagulated blood or clotted-blood—Gore.

உறை பனி, இறுகிய பனி, hoar-frost; frozen dew—Rime; 2. இறுகிய பனிக் கட்டி, snow; ice.

உறைப்பான, கார்ப்பான, acrid; caustic; 2. காரமான, pungent; 3. உப்பு, புளி, மிளகாய் முதலியன கூடிக் காரமான, strong and well-flavoured as with salt, tamarind and chilly—Racy.

உறைப்பு, கார்ப்புப் புளிப்பு, sourness combined with saltness; 2. வேதனை, painful sensation in the body or in the mind; 3. சுவை கூர்மை, sharpness of taste; 4. காரம், acrimony; pungency.

உறைப்புக் காட்டுதல், கார மாதல், to be pungent; 2. உறைப் புண்டாகச் செய்தல், to make acrid.

உறை மருந்து, குழந்தைகளுக்கு முழுக் காட்டியவுடன் தேன் அல்லது முலைப் பாலில் இழைத்து மாந்தம் அணுகாதபடிக் கொடுக்கு மோர்வகைக் காரமான மாத்திரை, a pungent pill administered to children by mothers as a home-remedy immediately after a bath as a preventive against indigestion etc.

உறை மழை, ஆலங் கட்டி, hail-stone.

உறை மோர், பாலுக்குப் பிரைகுத்தும் மோர், sour butter-milk intended or used for curdling milk.

உறை யாணி, பொன், வெள்ளி இவைகளைச் சோதிப்பதற்காக உபயோகிக்கும் பொன்,

வெள்ளிகளாற் செய்த ஆணிகள், touch-needles made of gold or silver. See ஆணி.

உறை யுதிரம், உறைக்த இரத்தம், blood-clot —Gore; 2. செவ் வுரத்தக் கட்டி, a blood-clot containing red-corpuscles—Cruor.

உறை யுள், படுக்கை யறை, a room to sleep in—Bed-room; 2. பலபேர் தூங்கு மிடம், a room in which a number of persons are accustomed to sleep — Dormitory; 3. உறை காலம், lifetime.

உறை யூர், கருப் பை, womb, being the dwelling for the infant.

உறை லிடம், ஆவி உறையும்படியான இடம், place of condensation.

ஊழ், வெயில், sun-shine ; 2. குணம், disposition ; temper ; 3. மலர்ச்சி, blossoming ; 4. முதிர்வு, maturity ; 5. முடிவு, termination ; 6. பகை, hatred ; 7. பழவினை, Karma or deeds in former or previous births ; 8. பழவினைப் பயன், the result of Karma ; 9. பதனழிவு, rottenness ; 10. பழமை, oldness.

ஊழ்தல், முதிர்தல், growing old; the passing off of life.

ஊழ்த்த, புழுத்த, புழு வரித்த, worm-eaten.

ஊழ்த்த கண்டகி, (ஊழ்த்த + கண்டகி=உரத்த + முள்ளெலும்பு) முதுகின் முள்ளந் தண்டு எலும்புகள் மெதுவாகி நொறுங்கி அழிவ தடன், கட்டி யுண்டாகிச் சுற்றிலு முள்ள சதையும் அழுகிப் புரையோடி, சதா இரத்தமும் சீழும் வடியு மோர் வகை நோய், a disease attended with decay or death of the vertebrae which become softened and subsequently crushed. It is marked by cold abscess which burrows into the surrounding tissues, forming a sinus, from which is discharged fetid pus and blood constantly — Spinal caries.

ஊழ்த் தசை, புலால், flesh; 2. தன் மாமிசம், proud flesh ; 3. அழுகிய தசை, decomposed flesh; 4. தீச்சுட்ட புண், இரத்தக் குறைவு முதலியனவால் உடம்பில் ஏற்படும் அழுகிய தசைப் பாகம், the mortification of flesh in a part of the body due to direct destruction by burns or to lack of sufficient blood supply etc.—Gangrene.

ஊழ்த்த நோய், ஆட்டின் ஈரலுக் கேற்படு மோர் நோய், a disease of the liver in sheep.

ஊழ்த்தல், ஊன், flesh of all kinds ; 2. பதனழிவு, decaying ; a slip of the proper time in cooking or preparing anything; 3. புலால், putrid meat or fish ; 4. முதிர்தல், to grow old or to pass the prime of life ; 5. முடை நாற்றம், stench ; 6. வாடுதல், withering ; 7. மடிதல், perishing; 8. பருவம், seasonable time.

ஊழ்த்த வக்கரம், குழந்தைகளுக்கு வாய், உதடு, கண் ணிமை முதலிய இடங்களி லுள்ள உட் சவ்வின் அழற்சியினல் கொப் புளங்கள் எழும்பி, நாற்றங் கண்டு தன புழுத்து மோர் கிரண நோய், a disease in children marked by the development of foul ulcers on the mucous membranes of the cheeks and of the lips. It sometimes affects the gum and spreads to the tongue—Gangrenous stomatitis or Cancrum otis or Noma.

ஊழ் முறை, முன் சன்மத்திற் செய்த வினைப் பயனின் முறை, the order of experiences resulting from the operations of Karma attributed to previous births ; 2. முன் வினைப் பயனின் கோட்பாடுகள், the theory of past Karma.

NOTE.— The theory of karma is that we are happy or that we suffer according to the good or bad deeds done in the past and the whole scope of philosophy is to reach the glory of men.

ஊழ் வலி, பழய வலி, a long standing or chronic pain ; 2. பூர்வ கர்மத்தின் வல்லமை. இதைத் தடுக்க ஒருவன் எத்தனை முயன்றாலும், அத்தடையை நீக்கி மேற் கொள்ள முடியாத காரியம், இது பற்றியே குறளில்,

"ஊழிற் பெருவலியாவுள.....தான் முற்று"

எனக் கூறப் பட்டது.

(In Philosophy) that which is not in the power of mortals to prevent or stand against i.e. the Karma or the result of actions in the previous births. This is

well defined in the verse quoted above from the sacred Kural in Tamil.

ஊழ் விதி, (ஊழ் + விதி = பழய நியமிப்பு) அதாவது, முற்பிறப்பிற் செய்த தொழில்களினூலேற்பட்ட நியமிப்பு அல்லது கட்டளை. இதனால் ஒவ்வொருவரும் அவரவரவர் செய்த கருமங்களுக்கு உத்தரவாதமெனக் கொள்ளப்படும். இப்பிறப்போ நம்முடைய பூர்வ கருமத்தின்பயனுக அமையப்பெற்றது. இனி வரும் பிறப்போ, இப்பொழுது செய்து வரும் கருமத்திற் கீடாக உண்டாகும். ஆகவே அதைத் தடுப்பது முடியாத காரியம், வருந்துவதில் பிரயோசன மில்லை, the law of Karma is as per actions done in the previous birth and the decree of fate or destiny. According to it, man is made fully responsible for his own actions. Our present condition is the result of our past actions and our future will be moulded by our present efforts or actions.

The law of Karma is as true as the Law of Gravity. It cannot be defied without reeping the consequences and the best and the only way is to reconcile ourselves to our lot instead of worrying over things that are beyond our control.

ஊழ் வினை, (ஊழ் + வினை) பழய அல்லது நாட்பட்ட தொழில், (*literally*) old or long-continued actions; 2. முன் பிறப்பிற் செய்த கருமம், the action or deed in the previous birth; 3. இப் பிறப்பிற்குக் காரணமாயுள்ள பழய அதாவது முன் பிறப்பிற் செய்த கருமங்கள், actions in the previous birth as the causes for the present life in all its aspects.

NOTE.—Human form is the Karmic body in which we decide our fate. Luck or ill-luck is the result of one's past actions and thoughts.

ஊழ் வினைப் பயன், முற் பிறப்பிற் செய்த கருமங்களினூல் சேர்ந்த பயன், that which is evolved out as the result of the previous birth or fruits of past Karma. It is the happiness or misery entailed upon a person according to his actions done before his soul transmigrated from the previous body to the present; 2. இப் பிறப்பில் அனுபவிக்கும் சுகதுக்கங்கள், the present experiences of pleasures and sorrows with reference to the deeds in the past.

NOTE.—There are different effects of Karma in life and they are the results of their own past. A man will have to live until such time as his Karma is fully worked out.

ஊளல், ஓர்வகை மீன், see உள்ளான்.

ஊளன், ஊளையிடும் நரி, நாய், முதலியன, those that howls such as, the wolf or the dog.

ஊளா, கருப்பும் நீலமும் கலந்த நிறமுள்ள நெடுவாய் மீன் என்னும் கடல் மீன், a dark-blue-coloured sea-fish—Sphyraena acutipinnies. It is a large fish and is also called Pescada or sea-pike.

ஊளான், சாம்பல் நிறமாயும் வெள்ளியைப் போன்ற பளபளப் புள்ளதாயு முள்ள ஓர் வகைக் கடல் மீன், a sea-fish of greyish silvery colour—Crenidens indicus.

ஊளி, see ஊளா; 2. பசி, hunger; 3. சத்தம், sound.

ஊளி சஞ்சம், மாத்திரைக் கோல், a rod used by conjurors or diviners—Magic wand.

ஊளை, நரி நாய் முதலியவை யிடுங் கூச்சல், the howl of a dog or of a jackal; 2. கெட்ட நாற்றம், offensive smell; 3. ஊத்தை, which see; 4. சளி, a viscid fluid excreted from the nose as in ஊளை மூக்கு—Snot.

ஊளைக் கள்வன், நண்டு, crab.

ஊளைக் காது, சீழ்வடியுங் காது, ear with a purulent discharge—Otorrhoea.

ஊளைச் சதை, see ஊழற் சதை.

ஊளைச் சரீரம், see ஊழற் சரீரம்.

ஊளை மூக்கன், சளி வடியும் மூக்கன், a snotty fellow (not in decent use). It is said of a person in a low term of abuse.

ஊளை மூக்கு, சதா சளி வடிந்து கொண்டிருக்கும் மூக்கு, nose constantly discharging mucous—Running nose.

ஊறப் போடல், மூலிகையி னின்று சத்தெடுக்க, முன் னூறும்படி நீரில் அமிழ்த்தி வைத்தல், the thorough soaking of a drug in a liquid before preparing an extract from it—Insuccation.

ஊறல், களிம்பு, rust of copper or acetate of copper—Verdigris; 2. உடம்பின் தினவு, itching sensation in the body; 3. பஞ்சலோகக் கலப்பு, an alloy of five metals

viz,—gold, silver, copper etc ; 6. நீரூற்று, spring-water ; 7. சாறு, juice extracted by squeezing as from leaves ; 8. கஷாயம் as in ஊரற் கஷாயம், tincture or infusion; 9. உலோகக் கலப்பு, an alloy; 10 பெண் குறியிலேற்படும் அதித நமைச்சல், intense itching of the external genitals of the female—Pruritus vulvae.

ஊறல், ஊறுதல், oozing as it does from a wound; the act of soaking, steeping or pickling ; 2. ஊறுகை, the act or process of oozing out—Exudation; 3. ஆறி வரும் புண்ணில் இரத்தம் பரவுதல், spreading of blood in a healing sore—A process in cure.

ஊறல் கஷாயம், மூலிகைகளை யிடித்துக் குளிர்ந்த நீர் அல்லது வெந்நீரி லூறவைத்து வடித்தெடுக்கும் கஷாயம், a dilute liquid-extract obtained from a drug or drugs by soaking it or them in water (cold or boiling); 2. சொறி சிரங்குக்குக் கொடுக்கும் கஷாயம், a decoction prescribed for itch or itching.

ஊறல் தெறித்தல், களிம் பற்றுப் போதல், being deprived of rust or verdigris ; 2. உடம்பின் தினவு அல்லது நமைச்சல் போதல், to be cured of itching sensation.

ஊற வைத்தல், மூலிகைகளை வெந்நீர், சாராய முதலிய இலாகிரி சரக்குகளில் மெதுவாகும் படி ஊற வைத்தல், keeping in or steeping herbs in water, spirit or other liquids for softening them till their essence is thoroughly absorbed in them—Maceration.

ஊறற் பதம், முழுதும் ஊறிய பதம், that stage or condition in which anything is completely soaked ; 2. பச்சைப் பதம், anything softened with moisture or by soaking.

ஊறற் பாக்கு, தண்ணீரி லூறவைத் தெடுத்த பாக்கு, areca-nut steeped in water to remove some of its defects and to render it fit for use ; 2. சம்போக காலத்தில் பெண்கள் புருஷர்களுக்குக் கொடுக்கும் எச்சற் பாக்கு, areca-nut soaked in the saliva and given by females to their lovers in sexual intercourse ; 3. வசியப் படுத்த எச்சில், யிந்து, நாதம், அமுரி, இவற்றில் ஊறவைத்துப் பெண்களுக்கு அல்லது புருஷர்களுக்குக் கொடுக்கும் பாக்கு, areca-nut soaked in saliva, semen, menstrual blood or urine. It is used by either men or women to their lovers for gaining or promoting their mutual affection.

ஊறற் புண், தின வெடுக்கும் புண், an itching sore; 2. ஆறி வரும் புண், a healing sore; 3. பச்சைப் புண், a sore with moisture and an opening for discharge—Raw sore.

ஊறுமை, கசியாமை, not oozing as blood from sores or ulcers.

ஊறி கணம், அரிதாரம், orpiment.

ஊறிலளக்கர், எருக்கிலை, the leaf of the plant Madar—Calotropis gigantea.

ஊறு, ஊறுதல், which see ; 2 உணர்ச்சி, sense of touch ; 3. கொலை, murder ; 4. உடம்பு, body ; 5. காயம், injury or wound ; 6. வல்லூறு, king of falcons.

ஊறு காசம், கண்ணி லடிபட்டது போலக் கடித்து, நொந்து, சிவந்து, எரிச்சல் கண்டு, இரவில் தூங்கும் பொழுது கண் மூழுவதும் சதை யிரிந்து மூடிக் கொள்வதுடன் கண் இடுங்கி, இமைகள் கனத்து, இருண்டு பலவிதமாய்த் தோன்றும் ஓர்வகைக் கண் நோய். இதில் கண்மணி சற்றுச் சிறுத்திருக்கும், a disease of the eye characterised by pain like the one of a traumatic nature, inflammation of the conjunctiva, burning sensation, swelling and adhesion of the eye-lids while sleeping due to the relaxation and thickening of the eye-lids, congestion of the ciliar region, and contraction of the pupil.

ஊறு காய், ஊற வைத்த காய், any unripe fruit soaked in salt water ; 2. காடி அல்லது உப்பிலிட்டு ஊறிய காய்கள், அவையாவன:—எலுமிச்சை, நாரத்தை, மா, நெல்லி, களா, இஞ்சி, முதலியன, unripe fruits such as lime, green bitter-orange, mango, gooseberry, Bengal currant (calah), ginger etc., which are preserved in salt or vinegar—Pickle; 3. அடை காய், preserved dry-fruit.

ஊறுகோள், காயம், wound or injury ; 2. கொலை, murder.

ஊறுதல், நீர்க் கசிவு, the oozing of water as from a boil or a wound ; 2. தண்ணீரில் போட்டு வைத்தல், to retain steeped in any fluid as is done to greens in pickles; 3. புண்ணில் தசை வளர்தல், formation of

a new layer of flesh over a healing wound; 4. மெலிந்த உடம்பி லிரத்தம் சேரு தல், increase of blood in a convalescent's body; 5. வாயூறுதல், insalivation; 6. சதை பிடித்தல், picking up or putting on flesh; 7. பெருகுதல், to be increased in weight or flesh.

ஊறு நீர், புண்ணி லிருந்து கசியும் நீர், a thin serous fluid from a sore or from a wound —Ichor. see ஊனீர்; 2. ஊற்று நீர், spring water; 3. வாய் நீர், saliva; 4. பெண்கள் உதட்டி லூறும் நீர், the fluid supposed to ooze from women's lips from love; 5. யோனியி லூறுங்காத நீர் a secretion from the vagina in females during coition.

ஊறு பாடு, விரணம், wound or lesion; 2. அன்பம், distress; 3. காய முண்டாக்குதல், inflicting injuries; 4. காயப் படுத்தும் விதம். இது நான்கு, அவையாவன:—the different ways in which a wound may be caused. They are of four kinds, viz.—1. அடித்தல், beating; 2. குத்தல், stabbing; 3. வெட்டல், cutting; 4. எய் தல், shooting.

ஊறுபுண், ஆறி வரும் புண், a healing sore; closing wound.

ஊறும் பில்லி, சூனியத்தினு லுடம்பி லேற்படும் பொறுக்க முடியாத் தினவு, an unbearable itching sensation due to the mischief of evil spirits in sorcery or witchcraft.

NOTE.—Sorcery and witchcraft are the manuals of Tantric science. They were the sole properties of the Dravadians. They were translated into Sanscrit by the Aryans after their migration into India.

ஊ றெண்ணெய், மண்டை குளிர்ச்சி யடை வதற்கும், கபால வறட்சியைப் போக்கு வதற்காகவும், உச்சியிற் காலையில் தடவு மெண்ணெய், oil whether gingelly or medicinal smeared in the mornings on the crown of the head for cooling the brain and for curing the heat or dryness in the head.

ஊறை, சவ் வரிசி, இது போர்னியூ தேசத்தி னின்று இறக்கு மதியாகும் வஸ்து, sago or sago-rice. The common sago sold in the bazaars is obtained from the pith of Borneo sago-palm—Metroxylon sago.

ஊற்றம், கெடுதி, injury; 2. பரிச வுணர்ச்சி, sensation of touch; 3. ஆற்றல், வல்லமை, strength or power; 4. மிகுதி, intensity; 5. பழக்கம், practice.

ஊற்றல், ஊற்றுதல், the act of pouring.

ஊற் றறிவு, பரிச வுணர்ச்சி, sense of touch.

ஊற்றும் பெட்டி, மூத்திரம் ஊறும் பை, the bladder for the collection of urine—Urinary bladder.

ஊற்றின, கசிந்த; oozed out; 2. வெளியாக்கிய, expressed.

ஊற்றின வெண்ணெய், வேக வைத்து வடி த்த கொட்டை முத்து எண்ணெய். இது செக்கில் ஆட்டி வடிக்கும் எண்ணெயை விட மேன்மையானது, castor oil obtained by boiling the crushed castor seeds —Hot drawn castor oil. It is a domestic preparation which is considered superior to that obtained from the oil-press or oil machine and is therefore much esteemed in medicine.

ஊற்று, நீ ருற்று, spring or spa; 2. கசிவு, moisture or water oozing from the ground.

ஊற்றுதல், எண்ணெய் வடித்தல், to extract oil from the seeds, like the castor seeds by boiling them.

ஊற்று நீர், ஊற்றுக் கண்ணி லிருந்து வடிந்த தண்ணீர், percolated water; spring water—Aqua fortana.

ஊற்றுப் பூ, தேங்காய்ப் பிண்ணாக்கு, the refuse of the kernel of cocoanut after the oil is expressed from it—Cocoanut oil-cake.

ஊற் றெண்ணெய், வடித்த எண்ணெய், see ஊற்றின எண்ணெய்.

ஊனக் கண், உடம்பின் கண், physical eye; 2. ஞானக் கண், eye of wisdom; 3. பொட்டைக் கண், defective eye.

ஊனக் கதண்டு, கரு வண்டு, கதண்டு, black beetle; 2. ஓர்வகை உபரசச் சரக்கு, one of the 120 kinds of natural bodies described in the Tamil Medical Science.

ஊனக் கால், குறைந்த கால், short leg; a short distorted limb; 2. பிறவி நொண்டி, disabled leg; a deformity of the foot generally of a congenital origin—Club-foot.

ஊனஞ் சவ்வு, ஊன் வழியும் சவ்வு, membrane secreting serum—Serous membrane.

ஊன மாதல், கொண்டி யாதல், to be crippled; 2. பழுதுறல், to be maimed; 3. அங்கம் பழுதாதல், to be defective of any organ in the body.

ஊனமுரி, மூத்திரத்தில் ஊன் கலந்து போகு மோர் மேக நோய், albumen in the urine —Albuminuria. See ஆச்சிய கந்தம்.

ஊனம், குறைவு, defect, as of bodily organs; 2. அழிவு, destruction; 3. பிணம், corpse or carcase; 4. ஊனீர், thin transparent part of the blood or any similar fluid —Serum; 5. கண்ணூனம், privation of the eye; 5. காலூனம், privation of a leg or a foot; 6. கொழுப்பு, fat; 7. தசை நீர், the thin liquid matter that drips from the flesh in roasting.

ஊனவன், மாமிச ரூபமா யுள்ள மனிதன், man in the shape of a mass of flesh.

ஊன வாளி, குறைவுபா டுள்ளோன், a maimed or lame person.

ஊனன், அங்கப் பழுதுடையவன், one who is defective of any part in the body; 2. கொண்டி, a cripple; 3. ஊஞ்ஞ் கொடி, see ஊஞ்ஞன்.

ஊஞ்ஞ் கொடி, see ஊஞ்ஞன்.

ஊஞும் பதி, கல் விருசு, a plant (*unidentified*)

ஊஞும்பல், see ஊதா வல்லி. இதனல் உறுப்பு மூலம் போம். It cures external Hemmorrhoids.

ஊஞ்ஞன், உன்ஞையங் கொடி, a creeper—Convolvulus racemosus; 2. பெரு முசுட்டை, many-flowered bindweed—Ipomaea staphylina.

ஊனி, அமுக்கிராக் கிழங்கு, horse-root—Withania somnifera; 2. மாமிச வுடம்புள் ளோன், one with a corporeal existence or with a physical body.

ஊனின் பூடு, சிறு பூனை, woolly caper — Achyranthes lanata.

ஊனீர், தசை யினின்று வடியும் நீர், water oozing out from flesh or meat; 2. இரத்தத்தின் மேற் படியும் நீர், a thin watery and transparent liquid separated from the blood — Serum; 3. பெண் காமக்கனீர, a fluid secreted in the vagina during the sexual intercourse.

ஊனுடம்பு, தசையினலான வுடம்பு, body composed of flesh.

ஊனுப்பு, மூன்று மாதத்திய பிண்டத்தினின்று எடுக்கும் சத்து, essence purely of salt extracted from a foetus three month's old as per process laid down in the Tamil Medical Science; 2. பூனீ ருப்பு, an efflorescent salt found on the surface of the soil of Fuller's earth in a particular season.

ஊனுப்பு செய நீர், பூனீ றுப்பு செய நீர், a strong smelling liquid collected from the preparation of Pooneer by placing or exposing it to the night's dew; 2. மூனேச் சத்தி னின்று தயாரிக்கும் செயநீர், a liquid prepared and collected from the essence of the human brain by the same process as mentioned above.

ஊனுருக்கி, இது சாதாரணமாய் உடம்பி லுள்ள தசை, நிணம், சுக்கிலம், கொழுப்பு, எலும்பு, முதலிய சத்துக்களைப் போக்கி, அதனல் அவைகளைச் சார்ந்த வுறுப்புகளை மடைவித்து மெலியச் செய்யும் நோய் களுக்கு ஏற்பட்ட ஓர் பொதுப்பெயர். இது அடியிற் கண்டபடி தரையீரல், குடல், குண்டிக்காய், எலும்பு, நிணநீர்க் கோளம் முதலிய உறுப்புகளைக் கருதிப் பல விதமாகக் கொள்ளப் படும், a disease marked by progressive wasting or emaciation of the body due to the degeneration of the various constituent parts of the body such as, the muscle, the lymph, the semen, the fat, the bone, etc.——Tuberculosis. It consists of several kinds according to the affection of the various organs in the body such as, the lungs, the intestines, the kidney, the bladder, the lymphatic glands etc., and they are :—

1. தரை யீரல் தாக்கப் படுவது தான் சய ரோகம், affection of the lungs—Phthisis or consumption.

2. குடல்களைத் தாக்குவது தான் குடலுருக்கி, affection of the intestines —Abdominal phthisis.

3. குண்டிக் காயைத் தாக்கினல், குண்டிக் காய் ரோகம், affection of the kidney—Renal phthisis.

4. எலும்பைத் தாக்கிஞல் அது எலும் புருக்கி, degeneration of the bones — Tuberculosis of the bone.

5. நிணநீர்க் கோளம் தாக்கப் படுவது தான் ஊ னுருக்கி,—affection of the lymphatic glands—Tuberculosis of the lymphatic glands. See சய ரோகம்.

ஊனேறி, கருப்பம், conception.

ஊ னெட்டி, உடம்பின் சதையோடு கலக்கும் உடும் பிறைச்சி, flesh of guana supposed to be absorbed by the muscles of the body; 2. உடும்பு, guana — Varnnuis bengalensis.

ஊன், தசை, flesh or muscle; 2. சுக்கிலம், sperm; 3. கொழுப்பு, fat; 4. மாமிசம், meat; 5. உடல், body as in "ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே" It is better not to develop the body by eating meat; 6. மூனைச் சத்து, marrow.

ஊன் கணர், ஊனக் கண்ணை யுடைய மானிடர், men ordinarily with physical eye as opposed to the eye of wisdom (ஞானக் கண்) in Yogis.

ஊன் செய் கோட்டம், மாமிசத்தினலான உடம்பு, body, as a structure formed of flesh marrow, fat, etc. See ஊனுடம்பு.

ஊன் தள்ளல், தன் மாமிசவளர்ச்சி, growth of flesh said, of proud flesh.

ஊன் பூச்சுத் தைலம், தன் மாமிசம், கட்டி, விரணம் முதலியவைகளைக் கத்தி கொண்டு அறுக்காமற்படித் தானுகவே கரைவதற்கும், விரணங்களே ஆற்றுவதற்கு முபயோகிக்கும் தேரையர் தாலிற் சொல்லியுள்ள ஓர்வகைத் தைலம், a medicated oil used as an external application for curing morbid growth of flesh, abscess, wounds etc., without operation. The preparation of this oil is fully described in Tamil in the works of Theraiyar on Medicine.

ஊன் மூத்திரம், see ஊனமூரி.

ஊன்றக் கட்டுதல், புண், காயம் முதலிய வற்றை உறுதியாய்க் கட்டுதல், to bandage firmly as is done to a wound, injury, fracture etc.,

ஊன்றல், சார்தல், the act of leaning as do the lame; 2. நடல், வேரூன்றல், the act of fixing as in நாற்று நடல், etc. to be rooted; 3. மெய்ப் பரிச மெட்டினுள் ளொன்று, one of the eight sensations of the body, i.e, the one caused by pressing.

ஊன் றள்ளல், உடம்பில் சதை பிடித்தல், the state of being corpulent—Corpulency; 2. புலாலைப் புசிக்கா திருத்தல், abstaining from eating meat; 3. தன்மாமிசம் வளர்தல், malignant growth of flesh—Proud flesh; 4. உடம்பி னின்று ஊனீர் வடிதல், oozing of fluid from the body such as, ichor from sore or wound.

ஊன்றி, ஓர்வகைப் பாம்பு, a kind of snake.

ஊன்றி நடத்தல், காலைப் பதிய வைத்து நடத்தல், to walk firmly so as not to slip.

ஊன்றிப் பார்த்தல், கட்டி வீக்கம் முதலிய வற்றைச் சோதிக்க விரல்களினல் அழுத்திப் பார்த்தல், to press with fingers in order to test a swelling or an abscess; 2. உற்றுப் பார்த்தல், looking fixedly.

ஊன்றிப் போடல், சம்போகத்தில் ஆண் குறியை அழுந்தப் புகட்டுதல், thrusting the penis with pressure during coition as in, "ஊன்றிப் போட உலக்கைய தாகுமே".

ஊன்று கால் செடி, சமுதைத் தும்பை, donkey toombay; Indian borage—Trichodesma indicum alias Borago indica.

ஊன்று கோல், கொண்டிகள் நடப்பதற்காக வுபயோகிக்கும் கோல், a staff or stick to support the lame in walking—Crutch.

ஊன்றுதல், அமுக்குதல், to bear down with pressure; 2. உறுத்துதல், to cause irritation.

எ

எகின

எஃகல், கொய் தாக்கல், to pulverize; 2. மேலே வாங்கல், to draw upwards.

எஃகாதல், உருக்காக மாதல், to turn into steel—Acierate.

எஃகு, உருக்கு, steel; 2. மன வொடுக்கம், restraint of the action of the mind—Suppression of the mind; 3. மதி நுட்பம், sharpness of intellect; mental acumen.

எஃகு சிந்தூரம், உருக்கி னின்று புடமிட்டுத் தயாரித்த ஓர்வகைச் சிகப்பு மருந்துத்தூள். இது குன்மம், இரத்தசுத்தி, முதலிய நோய் களுக்குக் கொடுக்க வுதவும், a red oxide prepared from steel treated with other ingredients and then calcined. It is used with advantage in dyspepsia, for the purification of blood etc.

எஃகு செந்தூரம், see எஃகு சிந்தூரம்.

எஃகு படுதல், இளகுதல், to melt; to soften; 2. எஃகாதல், which see.

எஃகு பற்பம், உடம்பு, வலி வடைய வேண்டி உருக்கைக் கொண்டு செய்யும் பற்பம், calcined steel given for strengthening the body.

எகடம், தென்னை, cocoanut tree — Cocos nucifera.

எகிடவாகம், அதி மதுரம், honey creeper—Glycirrhiza glabra.

எகிர்க் கொழுப்பு, பல்லீற்றின் வீக்கம், the swelling of the gum through inflammation—Gingivitis. The correct spelling seems to be எயிறுக் கொழுப்பு.

எகினத் திலை, புளி யிலை, the leaf of the tamarind tree.

எகின மதீதம், கழுதைக் குளம்படி, a creeping plant whose leaves resemble the impressions of asses' hoofs (*unidentified*).

எகினம், அழிஞ்சில், which see; 2. கவரி மான், a deer with long hairs inhabiting the Himalayas—Boogrunniem; 2. அன்னம், a bird said to be capable of separating milk from water. It is unknown in the present day; 4. செம் மரம், Indian red-wood tree; bastard cedar — Soynida febrifuga; 5. பெரிய ஆறுகளிலும் கடலிலும் காணப்படும் நீர் நாய், a rodent quadruped about 2 ft. in length resembling a dog, found in big streams and seas; Beaver otter—Castor fiber; 6. புளி மா, sour mango; 7. புளிய மரம், tamarind tree—Tamarindus indicus; 8. நாய், dog; 9. கழுதை, ass.

எகினன், நாய், dog; 2. நீர் நாய், otter.

எகின், ஆண் மரம், see அழிஞ்சில்; 2. புளி, tamarind; 3. சேங் கொட்டை, dhoby's nut; marking nut—Semicarpus anacardium; 4. அன்னம், an unknown bird of the present day; 5. புளி மா, sour mango; Indian hog-plum—Spondias mangifera; 6. கவரி மான், a kind of yak.

எகு, see எஃகு.

எகினத் தும்பை, கழுதைத் தும்பை, donkey toombay or Indian borage—Trichodesma indicum.

எகுத்து, வாயு, air; wind.

எகுன்று, குன்றிச் செடி, crab's eye—Abrus precatorious.

எக்கச் செக்கம், வயிறு, குடல் முதலியவைக ளின் குழப்பம், (*collq.*) a disorder, as in the stomach or in the intestines; 2. ஒவ்வா மை, not agreeable; 2. தாறுமாறு, exceeding the limit, quantity or measure.

எக் கண்டம், முழுவதும், anything as a whole; 2. ஒருமிக்க, in its entirety, as in எக்கண்ட வீக்கம், swelling all over the body.

எக்கண்ட வலி, உடம்பு முழுமையும் ஏற்படும் வலி, pain all over the body.

எக்கண்ட வீக்கம், உடம்பு முழுமையும் பரவிய வீக்கம், swelling extending all over the body.

எக்கத் தடந்தை, கண்டங் கத்திரி, the berry of the plant prickly-brinjal — Solanum xanthocarpum.

எக்கர், மேலுக் கேறச் செய்தல், allowing or causing to move or spread upwards; 2. தண் மணல், fine sand.

எக்கலா தேவி, செவ் வாமணக்கு, see under ஆமணக்கு.

எக்கல், வயிற்றை மேலுக் கிழுத்தல், drawing up of the stomach or of the belly; contracting the belly; 2. மேலுக் கேறச்

செய்தல், causing to rise up; see எக்கர்; 3. வற்றல், contracting.

எக்கி, பீச்சர்வ் குழல், syringe; 2. நீர் பீச்சுங் கருவி, an instrument for expelling fluid with force.

எக்கிய குமாரி, செம் மரம், இது ஓமத்திற்கு உதவுவதா லிதற் கிப்பெயர், red-wood, see எகினம். It is so called because its fuel is used for ceremonial fire (யாகம்).

எக்கிய சத்தான், தர்ப்பைப் புல், sacrificial grass—Egrostis cynosuroides.

எக்கியத் தாடி, வெள்ளாடு, இது மேஷ யாகத் திற்கு உதவுவதா லிதற்கிப் பெயர், goat, from its flesh being offered in the Vedic ceremonial fire. It is sacrificed in the performance of Yagam (யாகம்).

எக்கு, see எஃகு.

எக்குதல், வயிற்றை மேலுக் கிழுத்தல், the drawing in of the muscles of the abdomen by raising them upwards; 2. உள்ளுக் கிழுத்தல், to draw in, as some cows do with their milk; to refuse to give milk. See எக்கல்.

எக்குத் தாளி, பச்சிலை, a green leaf; 2. முள்ளங்கி, Indian radish or garden radish—Raphanus sativus.

எங்க ணேசனி, கழிழ் தும்பை, stooping plant—Phlomis biflora.

எங்கு மிருக்கும் புழு, ஈ, fly.

எங்கும், எல்லா விடத்திலும், in all places; all over.

எசம், நரம்பு, nerve; artery.

எசர், உலை நீர், water for boiling rice.

எசி, கிளி, parrot—Lorrinae.

எச்சம், எச்சில், refuse or remains of food; —Orts; 2. பறவை மலம், the dung of birds; 3. வாயெச்சில், the moist matter ejected from the mouth—Spittle; 4. ஓர்வாசணைப் பண்டம், an aromatic substance; 5. பிள்ளை, child; 6. உடற் குறைவு, இது எண் வகைத்து, defects in the body, consisting of eight kinds. See உடற் குறை.

எச்சரித்தல், விழிக்கச் செய்தல், to rouse from sleep.

எச்சல், see எச்சில்.

எச்ச வாய், குதம், the anus; 2. மல வாய், the sphincter of the anus.

எச்சற் கோளம், காதண்டை உட்புறத்திலிருக்கு மோர் பெரிய உமிழ் நீர்க் கோளம், a large salivary gland in front of the ear — Parotid gland.

See உமிழ்நீர் கோளம்.

எச்சிக் கவண, அமாவாசை பௌர்ணமி திதிகளில், குழந்தைகளின் மேல் வாய் அண்ணத்தின் பின், சேவல் கொண்டை அல்லது பூப் போல் சதை வளர்ந்து கிவக்து காணு மோர் வகை நோய், growth of flesh behind the uvula or the pendulum of the palate observed periodically in children. It is red and is like the cock's comb or crest —Adenoids; Pharyngeal Tonsil.

எச்சிலுக் குரிய, உமிழ் நீருக் குரிய, salivary.

எச்சி லூண்ண, உண்ட வணவின் மிச்சம், refuse or remains of food—Orts.

எச்சி லூறல், எச்சல் வாயிலூறுதல், secretion of saliva.

எச்சில், உச்சிட்டம், spittle; 2. எஞ்சிய வண்ணம், see எச்சி லூண்; 3. பறவை மலம், see எச்சல்; 4. உமிழ் நீர், saliva; 5. சளி, saliva mixed with nasal mucous, as in lung diseases — Sputum; 6. மல சலம், excretions from the body, both faeces and urine.

எச்சில் துப்பல், வாயி லூறும் எச்சிலை உமிழ்தல், to spit the saliva from the mouth.

எச்சில் தோஷம், குழந்தைகளுக்குச் சில சமயம் காணு மோர்வகைத் தோஷம். இதுவே குளித்தவள் எடுத்த தோஷம். இதனல் தலை யெடுக்கக் கூடாத மயக்கம், முலையுண்ணுமை, அற்பபேதி, இமை யொட்டல், சுரம், சீறி யழுதல், முதலிய குணங்கள் காணும், a morbific diathesis in children arising sometimes from extraneous circumstances. It is supposed to be caused by the touching of children other than her own, by a woman in her menses. It is marked by giddiness and inability to lift the head, disinclination to suckle, purging of milk, adhesion of the eyelids, fever, screaming, etc.,

எச்சிற்காறி யுமிழ்தல், சளியைத் தொண்டையினின்று வெளிப்படுத்தித் துப்பல், to force up phlegm and spit it out.

எச்சிற் சுரப்பு, உமிழ் நீரூறல், secretion of saliva; salivation.

எச்சிற் படுத்தல், புண்ணுக்குதல், causing a wound or a sore; 2. கன்னி முத்திரை யழித்தல், அதாவது கன்னிகையின் கற் பழித்தல், to deprive a matured girl of her virginity by causing rupture of the hymen.

எச்சிற் பருக்கை, உண்ட சோற்றின் மிகுதி, the remains after eating.

எச்சிற் பேய், பெருந் தீனிக்காரன், a glutton; 2. உச்சிட்ட தேவதை, a demon.

எச்சிற் றழதவணை, உடம்பில் தினவெடுத்து, வளை யத்தைப் போல் பலவிடங்களிலும் தழும்பு தழும்பாக்க காணு மோர்வித்தத் தொத்து நோய், a contagious disease of the skin marked by the formation of ring-shaped elevated patches covered with vesicles or scales. It spreads all over the body with an itching sensation. It is an aggravated form of ringworm—Tinea imbricata. See தழுதணை.

எச்சிற் றடிப்பு, உடம்பில் பலவிடங்களில் தடிப் புகளை எழுப்புமோர் வகைப் படை, brownish eczematous patches in several parts of the body said to be due to the poisonous effects of some morbific matter of animals.

எச்சிற் றழும்பு, உடம்பில், பற்பல விடங்களில், பிறருடைய வாய்நீ ரொழுக்கலினும், அல்லது பல்லி முதலிய பிராணிகளின் மலசல தோஷத்தினலும், உண்டாகு மோர் வகை சரும நோய், a contagious disease of the skin due to the saliva of others or other morbific matter from domestic animals or creatures such as the excrements of lizards, etc., coming into immediate contact with the skin of the body—Ringworm; 2. தழுதணை அதாவது தின வோடு கூடிய படர்மேகத் தடிப்பு, a skin disease developing elevated patches extending all over the body with intense itching.

எச்சிற் றூப்பு, எச்சில்நீ ரூறும் நோய், excess of secretion of saliva—Abnormal salivation.

எச்சிற் றேமல், உடம்பில் பற்பல இடங்களில் மஞ்சள் நிறமான படைகளை உண்டாக்கு மோர் சரும நோய், a skin disease with yellowish patches spreading all over the body.

எச்சினி, ஏழா மாதம், the seventh month, as in pregnancy.

எஞ்சல், குறைதல், diminishing or decreasing; 2. சுருங்கல், contracting; shrinking; 3. மிஞ்சுதல், remaining.

எஞ்சி நிற்றல், மிஞ்சி நிற்குதல், to fall to the bottom of a vessel as a sediment or any substance held in solution—Precipitate.

எஞ்சிய வுப்பு, அடியில் நிற்கு முப்பு, saline residue.

எஞ்சுதல், see எஞ்சல்.

எடு, வெளிக்குக் கொண்டுவா, (*In medicine*) bring out, as in வாந்தி யெடு, வாயிலெடு, to vomit.

எடுத்தடி வைத்தல், பாதத்தைத் தூக்கி வைத் தல், the raising and planting of the foot slowly as do debilitated or sick persons; 2. தளர் நடையாய் நடத்தல், taking a light walk.

எடுத்தல், நிறுத்தல், weighing in a balance; 2. வெளிப் படுத்தல், to eject or throw out from the mouth as in வாயி லெடுத்தல், vomiting; 3. உண்டாதல், as in வலி யெடுத்தல், aching; 4. பற்றிக்கொள்ளல் as in வெறி யெடுத்தல், becoming intoxicated; 5. குணப் படுத்தல், as in சுளுக் கெடுத் தல், to cure sprain; 6. நீக்குதல் as in மயிரெடுத்தல், removing the hair.

எடுத்துக் கட்டல், நழுவிய அல்லது முறிந்த எலும்பைச் சீர்திருத்திக் கட்டல், bandaging after setting right a bone or bones in dislocation or fracture.

எடுத்துக் காட்டல், நோயுற்ற காலத்தில் குணம், குறி முதலியவைகளை வெளிப் படையாகக் காட்டுதல், indicating or exhibiting symptoms prominently by a suffering patient.

எடுத்துக் கூட்டுதல், பல மருந்துகளை அளவின் படி எடுத்து ஒன்றுகக் கலத்தல், (*In Medicine*) composing or mixing up several medicines or ingredients in due proportions; 2. இரண்டு எலும்புகளை ஒன் றுய்ப் பொருத்துதல், uniting or causing to join the two ends of bones; setting a bone right.

எடுப்

எடுத்துக் கொள்ளல், உட் கொள்ளல், to take in, as in பேதிக்கெடுத்துக் கொள்ளல், taking in a purgative.

எடுத்துப் பிடித்தல், தூக்கிப் பிடித்தல், lifting and holding aloft, as is done with a patient in bed sometimes.

எடுத்துப் பேசுதல் உறக்கப் பேசுதல், talking loudly; 2. பிரலாபப் பேச்சு, a peculiar kind of talk observed in delirious or insane persons.

எடுத்துப் போடல், see எடுத்து விடல்.

எடுத்துப் போடுதல், மேலுக்கு வாங்கி யிறக்குதல், as in குழந்தைக்கு வலி வெடுத்துப் போடல், alternate contraction and relaxation, as of intercostal muscles in children affected with spasm.

எடுத்து விடல், வேரோடு களைதல், (*lit*) to root out or to eradicate; 2. நோயை கொஞ்ச மேனு மில்லாமல் குணப்படுத்தல், (*In Medicine*) curing a disease completely.

எடு படல், எடு படுதல், } அழிந்து போதல், being eradicated or being destroyed; 2. நீக்கப் படுதல், to be removed from the natural position or place as, in removal of the hair from the body.

எடு பட்டவன், சோரத் தனத்தால் குடும்பத்தி லிருந்து விலக்கப் பட்டவன், a woman expelled from the family on account of her immorality.

எடுபட் டோடல், உடம்பை விட்டு முழுவதும் நீங்கல், "தள்ளுமேக மெடுபட் டோடுமே" (தேசை. 100), to disappear from the body as do diseases sometimes.

எடுப்பல், தூங்குபவரை யெழுப்புதல், waking one up from sleep; rousing one from sleep. See எழுப்பல்.

எடுப்பார் பிடிப்பார், நோயாளிக்குத் துணையாளர், person sattending or waiting upon the patient, as in

"எடுப்பார் பிடிப்பா ரிருத்தால்
இடுப்புங் கடுப்பு மெத்த வுண்டு."

the more a patient is attended upon, the more would he be prone to want it.

எடுப்பு, தூக்கல், prominent, as in பல் லெடுப்பு, projecting tooth.

எட்கி

எடுப்புப் பிள்ளை. இரகசியமாக மாற்றி வைக்கப்பட்ட பிள்ளை, a child substituted by trick in place of the genuine child—Supposititious or substituted child; 2. கண் டெடுத்த பிள்ளை, a child found without a parent or any one to take care for it—Foundling; 3. கை விடப் பட்ட பிள்ளை, a child left without resources—Forlorn child; 4. வாங்கி வளர்த்த பிள்ளை, a child received in adoption and treated as one's own child.—Adopted child.

எடை, தூயி லெழுப்புதல், rousing one from sleep; 2. ஓர் அளவு, a weight of 25 pallams; 3. விறகின் நிறையளவு, 54 lbs a weight used in weighing fuel.

எடைக் கெடை, இடைக் கிடை, அதாவது சம னிடை, equal weight.

எடை பாகம், நிறுத்தலின் முறை, the process of weighing; 2. இராம தேவர், செய்த வைத்ய வாத நூல், a treatise on Alchemy in Tamil compiled by Ramadeva a Siddha.

எட்கடை, எட்கிடை, } என் பிரமாணம், as small as a gingelly seed; 2. என் னளவு, exceedingly small.

எட்கம், பனை, தென்னை முதலியன, palm species. i.e, palmyra, cocoanut, etc.

எட்கை, see எட்கம்.

எட்சம், ஈருள்ளி, onion—Allium cepa.

எட்சி, எட்சினி, } see எட்சினி.

எட்சி தோஷம், குழந்தைகளுக்கு இரத்தத்திற் கொதிப்புக் கண்டு, கண்ணிற் பீளை கட்டி, உடல் வற்றி, கனல் மீறி, மயங்கிக் கிடக்கச் செய்யு மோர் நோய். இது எட்சி யென்னும் பெண் பிசாசின் குற்றத்தினு லேற்படுவதாகச் சொல்லப் படும், a morbific diathesis in children arising from the heated condition of the blood in the system. It is marked by muco-purulent discharge from the eyes, emaciation, giddiness etc., It is supposed to be due to the evil influence of devil acting up to planetary conditions.

எட்சினி, ஓர் பெண் பிசாசு. இது அழகிய வடிவத்தையும் உடம்பையும் வாய்ந்த பெண்

நீப்போல் தோன்றி, நர மனிதருடன் புணர்ச்சி செய்வதாகக் கருதப்படும், a demoness or a female fiend assuming the characteristics of a sylph or a fairy or a woman of graceful and slender proportions. It is supposed to have sexual intercourse with mortals ; 2. ஓர் சால வித்தை, a magic performed with the aid of a female demon, attached to the service of Durga or Kali.

எட்டடிப் பறவை, see எண் காற்புள்.

எட்டடி விரியன், கடித்ததும் எட்டு அடி போவதற்கு முன் ஆளைக் கொன்று விடும் விரியன் பாம்பு, a kind of Viper—Viperidae. Its bite is supposed to prove fatal hardly before the victim walks a distance of eight paces.

எட்டவிருத்தல், தூரமாய்ப் போதல், அதாவது மாதவிடாயினல் பெண்கள் தூரமாக விருக்கை, seclusion of women during their menses periods; 2. சம்போகிக்காமை, keeping off from sexual act.

எட்டாங் காய்ச்சல், எட்டுத்தடவை கரைத்துத் தெளி விறுத்துச் சுத்தி செய்த வெடியுப்பு, nitre which was cleansed eight times by the process of dissolution and filtration ; 2. வாரத்திற் கொரு முறை வரு மோர் சுரம், a fever occurring every eigth day or at intervals of seven days—Octan fever.

எட்டாங் குட்டம், எட்டாம் படியைக் கடந்த குட்ட நோய். இது அசாத்தியம், leprosy which has successively passed the eight stages. It is said to be incurable.

See குட்டம்.

எட்டாந் தாய்ச்சி, எட்டாவது தடவை கருப்பமா யிருக்கும் பெண், a woman pregnant for the eighth time—Octigravida.

எட்டா மாறல், see எட்டாங் காய்ச்சல்.

எட்டாவது, எட்டாவது பிறந்த பின்னே, a child given birth to, for the eighth time; the eighth child.

எட்டி, எட்டி மரம், இது சம வுயர முள்ளது. இலேகள் மிருதுவாயும், பளபளப்பாய் மிருக்கும்; 3 முதல் 5 நரம்புகள் மத்தியி லோடும். பூக்கள் சிறியவை, வெளிர் பச்சை; திருவனந்தபுரம், கொரகாடு, முதலிய விடங்களில் வளரும்; காடுகளில் அதிகமாக வுண்டு. அடி மரம் குட்டையாயும், சிறிது வளைந்து மிருக்கும். இளேகளின் பட்டை சாம்பல் வர்ணம்;

சட்டையும் கசப்பா யிருக்கும், drug-bane; Indian poison tree–Strychnos nux vomica. Tree of middling size; leaves, smooth and shining, 3 to 5 nerved; flowers small, and greenish white; found in Travancore and the Coromandel; common in dry forests. Trunk, short, and often crooked with smooth ash-coloured bark. The wood of this tree is exceedingly bitter.

எட்டிகம், சிங்கில், moon-creeper—Menispermum cordifolium ; 2. லெக்கி, spider, so called from its eight legs ; 3. ஓர் குருவி, a kind of sparrow.

எட்டிக் கசப்பு, மிகக் கசப்பு, extreme bitterness.

எட்டிக் காய், எட்டி மரத்தின் காய், இது உருண்டையாயும், மிருதுவாயும், சிறிய ஆப்பில் பழ மளவுள்ளதாயு மிருக்கும். பழுத்தால், செவ்விரிமா யிருக்கும், இதில் சதைப் பற்றும், அனேகம் கொட்டைகளு முண்டு, the berry of the nux-vomica tree. It is round, smooth, and about the size of a small apple; orange-coloured when ripe; many seeded and pulpy.

எட்டிக் கொடி, சிங்கிற் கொடி, see எட்டிகம்.

எட்டிக் கொட்டை, எட்டி மரத்தின் கொட்டை. இக் கொட்டை தட்டையாயும், $\frac{1}{4}$ ரூபாயைப்போல் வட்டமாயும், ஒருவருப்பான வாசனே யுள்ளதாயும், கசப்பாயு மிருக்கும். இது ஒரு அங்குலம் குருக்களவும், கழியும் பொருக்கியுள்ளது. ஒரு பக்கம் சிறிது குழியாயும், வெளிப் பக்கம் சாம்பல் வர்ணமாயும், முகமுகப்பாயும், உட்பக்கம் கடினமான பாகமுள்ளதாயு மிருக்கும். இதற்கு நஞ்சுத் தன்மை உண்டு. இக் கொட்டையை பழத்தினின்று எடுக்கப்படும். இது அபினியைப் போல் மிரு மிருப்புள்ளது. மரத்திற்கும் பட்டைக்கும் நஞ்சுத்தன்மை யுண்டு. மருந்தில் மிக்க வுபயோகப்படும். கொட்டைகளைப் பொடித்து வேப் பெண்ணெயிற் கலந்து பலத்திக்காகச் சிறிதளவாய் கொடுப்ப துண்டு. இதற்குத் துவர்ப்புக் குணமுண்டு, மிக்க வளவிற் கொடுத்தால், நஞ்சுத் தன்மையுடையதாகி, சன்னியையும், பின்னர் மரணத்தையு முண்டாக்கும். இவை போதையைத் தரக்கூடியதால், சாராயத்திற் கலப்ப துண்டு. காம விச்சையைத் தூண்டுவதால், சிலர் இக் கொட்டையைச் சிறிதளவி லிருந்து நாளுக்கு நான் உயர்த்திக் கொண்டே வந்து, கடையிலாய் ஒரு கொட்டையை முழுவதும்

உபயோகிப்பர்கள்.

அரிஷ்டம், ஆசவம் முதலான மருந்து களைத் தயாரிக்க வேண்டி இவைகளை வெளி நாட்டுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். வாதப் பிடிப்புக்கு, இக் கொட்டையை முட்டையின் வெள்ளை அம்பிலியோடு சேர்த்து நரைத்துப் பற்றுகப் போட வீக்கத்தைக் கேழ்க்கும்.

குட்டம், பாரிசவாயு, பாம்பு கடி, முதலானவைகளுக்கும் உபயோகிப்ப துண்டு. ஒன்று அல்லது இரண்டு கொட்டையைத் தின்னப் பழக்கப்பட்டவர்களுக்கு பாம்பு கடித்தாலும் விஷ மேறாது. இக் கொட்டையின் விஷத்திற்குப் புகையிலையின் கஷாயந்தான் முறிவு; the nut of the tree—Nux-vomica. Seeds are round, flattish, about the size of a quarter rupee with a nauseous smell and an intense bitter taste. It is about an inch in diametre, umbilicated and slightly convex on one side; exterternally of an ash-gray colour, thickly covered with short satiny hairs, internally transluscent, tough and horny. The seed contains a virulent poison and it is removed from the pulp.

It has alkaline properties like morphia. The tree and also the bark contain the poisonous principle. It is much used in medicine. The nut when finey pounded and mixed with margosa oil, is considered a tonic and an astringent. It is given in minute doses, but a virulent poison in over does, death taking place after tetanus.

The seeds are employed in the distillation of country spirit (arrack) to render them more intoxicating. As an intoxicant and as an aphrodisiac, they are habitually taken and those who do so gradually become so far accustomed to the poison that they come to take one seed daily; they cut it into small pieces and chew them with betel and arecanut. As they are useful in the preparation of tinctures and infusions, they are exported to foreign countries on a large scale.

Tamil Vaidyans recommend it in chronic rheumatism and blended with the white of an egg, they employ it as a repellant.

The seeds are given in leprosy, paralysis and bites of venomous serpents, and when one is accustomed to take one or two seeds every day, his body is rendered immune to bites of poisonous cobras. Tobacco decoction is an antidote to this kind of poison.

NOTE.—It is a remedy of great value in neuralgic affections, in atonic diarrhoea, in habitual constipation dependent on torpor of colon, in prolapsus of the rectum, in incontinence of urine, in spermatorrhea and in several other cases referrible to debility or inactivity of the spinal system of nerves.

It has also been used with alleged benefit in intermittent fevers, epilepsy, diabetes, anaemia, chlorosis and other affections.

It is also useful in dyspepsia and dysentery. Dose of the powdered seeds is from 2 to 3 grs, and gradually increased to 10 grs. or more, twice or thrice daily.

It acts as a stimulant like opium in very small doses and is used by the lower classes of people. In veterinary practice, the nut when partially burnt (without reducing it to ashes) and powdered, is used to cover long-standing ulcers.

எட்டிக் கொட்டைச் சத்து, எட்டிக் கொட்டையின் சாரம், the poisonous principle *strychnine*, contained in the nux-vomica.

எட்டிக் கொட்டைத் தைலம், இப் பழத்தின் கொட்டையி னின்று வடிக்கும் எண்ணெய். இதை மேலே பூசுவதனல் நரம்பு வியாதி, வாத நோய், சரும நோய், குஷ்டம் முதலானவைகள் குணமாகும். இப் பட்டைச் சேர்ந்த தைலத்தைக் குஷ்டம், மேகம், புண், புரை முதலியவைகளுக் குபயோகிப் பார்கள், an oil prepared from the fresh nut (nux-vomica). It is used as an external application in nervous complaints and in rheumatic pains and also in several kinds of skin diseases including leprosy. The medicated oil prepared from the bark is commonly used by Vaidyans as a local application in leprosy, syphilis and other obstinate skin eruptions.

எட்டிச் சத்து, எட்டிக் கொட்டையி னின்று எடுக்கும் சத்து. இது ஆங்கில வைத்தியத்தில் அடியிற் கண்டவாறு செய்யப்படும்

எட்டிக் கொட்டையை மெதுவாகு வரையில் புட்டஷியலாக வேக வைத்து, உட னே எடுத்துக் காயவைத்துப் பொடித்து, மறுபடியும் அத்தூளைச் சாராயத்தில் கசப் புப் போகும் வரை வேக வைத்து வடிக்கட் டிப் பிறகு வாலியி லிட்டிறக்கி யெடுக்க வேண்டும், இது குடற் கோளாறுகளை குணப் படுத்தும், extract of nux-vomica. — Extractum Nucis vomicae.

(*In English medicine*) The nux-vomica is subjected to steam until it is thoroughly softened; it is then taken out, dried rapidly and reduced to powder.

The powder is then exhausted by boiling it with successive portions of spirit until it comes off nearly free from bitterness. The spirit is then strained and again distilled.

Doses from—$\frac{1}{4}$ to 2 grs. A valuable preparation in intestinal affections due to want of nervous energy.

எட்டிச் சிமிழ், பண்டைக் காலத்தில், கார முள்ள ஆக்கிராண முதலிய சூரணங்களைக் காரம் போகாதபடி எட்டி மரத்திலுறை செய்து, மருந்தடைக்க வுபயோகித்து வந்த சிமிழ். இது மாதிரியே பேய்ச்சுரைக் குடுக் கையிலும் அடைப்ப துண்டு, a small round case made out of nux-vomica tree and used formerly as a receptacle for astringent and alkaline powders to prevent them from losing their efficacy. The dried shell of a snake-gourd was also being used in the same way.

எட்டிச் சுறு, இதுவே குரங்கன் சுறு, fawn-coloured shark; dog-fish — Chiloscyllium indicum alias Hemiscyllium malayanum.

எட்டித் திரவச் சத்து, எட்டிக் கொட்டையி னின்று தயாரிக்கும் ஓர் சத்து நீர், a strong liquid extract of nux-vomica.

எட்டித் தைலம், see எட்டி யெண்ணெய்.

எட்டிப் பட்டை, எட்டி மரத்தின் பட்டை, இம் மரத்தின் பட்டையின் வெளிப் பக்கம் சொர சொரப்பாயும், சிறிய தக்கையைப் போன்ற குருக்கள், மேலே யெழும்பியு மிருக்கும். இதனின்றும் எண்ணெ யெடுத்து நோய்களுக் குபயோகப் படுத்துவ துண்டு. இப்பட் டையை மற்ற மருந்தெண்ணெய் தயாரிக்கும் போது கூடச் சேர்ப்பது முண்டு. இதற்கும் விஷத்தன்மை யுண்டு, the bark of this nux-vomica tree will be rough and marked by numerous light coloured elliptic corky warts. It forms the principal ingredient in the preparation of several other medical oils which are also poisonous.

NOTE.—In Europe, it found its way in the name of "False Augustura bark". It is sometimes employed in infusion or weak decoction as a tonic and a febrifuge.

எட்டிப் பழம், எட்டி மரத்தின் பழம். இது சிறிய ஆப்பில்பழ வளவிருக்கும், இதற்கு விஷத்தன்மை யிராது. பறவைக ளிதைப் புசிக்கும், ஆனல் மனிதருக் குதவாது,

"எட்டிப் பழுத்தென்ன
ஈயாதான் வாழ்ந்தென்ன"

என்பது பழமொழி, the fruit of strychnine tree. When ripe it will be about the size of a small apple. The poison is not restricted to the fruit and the pulp is quite harmless and birds eat it greedily, but it is not in any way useful to men as is evident from the stanza quoted above.

எட்டிப் பாவனத் திரவம், எட்டிக் கொட்டையை வெல்லத் தண்ணீரில் போட்டுப் புளிக்க வைத் தெடுத்த வோர்வகை யரிஷ்டம். இது ரம்பிற்கு வலுவைத் தரும், a tincture of nux-vomica obtained by fermentation of nux-vomica in a solution of jaggery. It is a nervine stimulant.

NOTE—In Allopathic medicine, it is prepared by a peculiar process of treating it in rectified spirit and then obtaining the tincture by maceration, percolation and filtration.

Doses 10 to 20 drops as a nervine stimulant and from 5 to 10 drops as a tonic.

எட்டிமரம், see எட்டி.

எட்டி மேற் புல்லுருவி, a parasite on nux-vomica; mistletoe—Viscum monoicum.

எட்டி யிலை, எட்டி மரத்தி னிலை. இது மிருது வாயும், பளபளப்பாயு மிருக்கும். இலை நடுவில் 3 முதல் 5 நரம்புகள் வரையில் ஓடியிருக்கும். இதன் கஷாயம் பாரிச வாயுவுக்கும், வாத வீக்கத்திற்கும், வெளிப் பிரயோகம் பண்ண உதவும். இலையைக் கஷாயத்தில் சேர்த் துப் புண்களைக் கழுவ வுதவும். இதன் சாற் றைத் தலை வலிக் குபயோகிக்கலாம். உள் ளுக்குக் கொண்டால் விஷத் தன்மையைக் காட்டும், the leaf of the strychnine tree. It is smooth and shining, with from 3 to 5 nerves running through. A decoc-

tion of the leaves is used *externally* in paralysis, in rheumatism and rheumatic swelling and for cleaning wounds or ulcers. The juice from the leaves is applied in head-ache. If taken *internally* it is poisonous.

எட்டி யுப்பு, எட்டிக் கொட்டையி லின்று எடுக்கும் உப்பு. இது சிறு மணலைப் போலவும், பழுப்பு நிறமாயும், கசப்பாயு மிருக்கும். இதற்கும் கொட்டையைப் போல் விஷத் தன்மை யுண்டு.

இது பக்க வாதங்களுக்கும், தந்நி ரோகம், சுரம், இருமல், அக்கி சுரம், முதலியவைகளுக்கு முபயோகப்படும். அன்றியும் ஈயத்தின் விஷம், பாம்பு கடி, சூனோரபாதம், சாராயம், அபினி முதலியவைகளினு ஞண்டான விஷம் முதலியவைகளையு முறிக்கும், salt of nux-vomica. It is extracted from the nut by a special process—Strychnine salt.

It resembles sand in colour and shape, and tastes bitter. Its properties are the same as those of the nut from which it is extracted. It is useful in paralytic affections of an asthenic type, diphtheria or other diseases of the throat, fever, cough, evening or night fever, nervous exhaustion etc. Moreover, it proves an effective antidote in lead poisoning, snake-bite, chloroform-poisoning and opium-poisoning.

NOTE—(*In Modern Chemistry*) It is an alkaloid obtained from nux-vomica—Strychnine. It is colourless and inodorous. It occurs in the form of prisms. In amaurosis, nyctalopia, chorea, intermittent fevers and other affections, it has been used with alleged benefit.

எட்டி யுப்பு செயநீர், எட்டி யுப்பைத் தனியாக வாவது, மற்றச் சரக்குகளுடன் சேர்த்தாவது, பனியில் வைத்து இறக்கிய கார நீர், a strong liquid preparation obtained by exposing the strychnine salt either singly or in combination with other drugs, to the night's dew.

எட்டியூறற் கஷாயம், எட்டிக் கொட்டையை யிடித்துக் கொதிக்கும் தண்ணீரி லிட்டு ஊற வைத்து இறுத்த கஷாயம். இதைப் பலவீனப் பட்டவர்களுக்குச் சிறிதளவில் கொடுக்கப் பலத்தை யுண்டாக்கும். பாண்டு நோய்க்கும் கொடுப்ப துண்டு, an infusion of nux vomica. It is obtained by putting the bruised seeds of nux-vomica into boiling water, allowing it to remain there, covered for an hour and then straining it.

It is a valuable bitter tonic, especially adapted to debilated states of the system and dropsical affections.

எட்டி வெண்ணெய், எட்டிக் கொட்டையைப் புதிதாக வெடித்து நறுக்கி அதனின்று வடிக்கு மெண்ணெய், இது வாதநோய்க் குபயோகப்படும், an oil extracted from the fresh nut (nux-vomica) bruised. It is used in rheumatism.

எட்டி லொன்றுக் காய்ச்சல், மூன்றைகளைத் தண்ணீரி லிட்டு, எட்டிலொரு பங்காகச் சுண்டும்படிக் காய்ச்சி யெடித்தல், boiling an infusion down to a quantity, ⅛ of of the original.

எட்டி விரியன், ஓர்வகை விரியன் பாம்பு, a kind of viper.

எட்டி வேர், எட்டி மரத்தின் வேர். இது சூலைப் பிடிப்புக்குப் பூசு மருந்தாக உபயோகப்படும், the root of the nux-vomica tree—Paode solar. It is useful in gout if the part affected is rubbed over with it.

எட்டி வேர்ப் பட்டை, எட்டி மரத்தின் பச்சை வேர்ப் பட்டை. இதன் ரசத்தைப் பிழிந்து, அதில் சில துளிகள் வாந்தி பேதிக்கும், சீத பேதிக்கும் கொடுப்ப துண்டு. உலர்ந்த பட்டையில் எலுமிச்சம் பழ இரசம் விட்டரைத்து, மாத்திரைகளாகச் செய்து கொடுக்க வாந்திபேதி குணமாகும், the juice of the fresh bark of the root of nux-vomica tree is given in doses of a few drops in cholera and acute dysentery. The dried root-bark ground into a paste in lime juice, and made into pills and given, is equally efficacious in cholera.

எட்டு, இறந்த எட்டாம் நாள் செய்யும் கருமம், the ceremony done or performed on the eigth day of the funeral.

எட்டுக் காற்பூச்சி, சிலந்திப் பூச்சி, an eight-legged insect remarkable for spinning webs for trapping its prey—Spider; 2. எட்டுக் கால்களையுடைய பூச்சிகளுக்குப் பொதுப் பெயர், a common name to all the eight-legged insects belonging to the class of Arachnidae—Octopads.

எட்டுச் சித்தி, see அஷ்டமா சித்தி.

எட்டுடை யாதி, காட்டெருமை, wild buffalo.

எட்டு பின், (எட்டு + பின் = அ + பின்) அபின், opium. Here the prefix எட்டு which connotes eight, stands for the Tamil numerical letter அ, which denotes 8 and hence the word is figuratively so termed.

எட்டு மாற்றுப் பொன், கலப்புப் பொன், an alloy of gold eight mathu (fineness) equivalent to 22 carats; 2. சவரன் பொன், sovereign gold.

எட்டு வயது, எட்டு மாற்றுப் பொன், which see; 2. எட்டு வருஷம் கடந்தது, eight years old.

எட்டு வரி விரியன், எட்டு வரிகள் உடம்பிற் பொருந்தி யுள்ள வோர்வகை விரியன் பாம்பு, a kind of viper with eight bands or stripes on the body.

எட்டேகா லட்சணம், அவ லட்சணம், repulsive appearance; 2. கழுதை, a term figuratively used for ass as in,

"எட்டேகா லட்சணமே
ஏமனேறும் பரியே"
(தனிப்பாடற் றிரட்டு)

எட்டொன் றாக்கல், எட்டி லொரு பங்காகச் செய்தல், making into $\frac{1}{8}$th part; 2. எட்டொன்றாய்க் காய்ச்சல், which see.

எட்டொன்றாய்க் காய்ச்சல், கஷாய முறைப்படி எட்டிப் பங்கு தண்ணீரை ஒரு பங்காகச் சுண்டும்படிக் காய்ச்சுதல், boiling down decoction so as to reduce it to the proportion of $\frac{1}{8}$ to what it was i.e., 8 : 1.

எட்டொன்று, எட்டி லொரு பங்கு, $\frac{1}{8}$ of a part.

எட்பாகு, எள்ளுத் துவையல், a pastry made of gingelly-seeds mixed with spices.

எட்பிரமாணம், எள்ளின் அளவு, the size of a gingelly seed equivalent to $\frac{1}{8}$ of a grain.

NOTE.—It is one of the standards of S. Indian measure:—8 sesamum seeds = the length of a grain of paddy and 8 paddy seeds = the length of 1 inch.

எணம், மான், deer.

எண், எள், sesamum seed; 2. எட்டு, eight; 3. மருந் துண்ணுங் காலத்தை நிர்ணயிக்கு மோர் நூல், a science dealing with the duration, period etc., for taking medicine; 4. சோதிட நூல், astrology; astronomy; 5. விசாரம், distress; care; 6. எண்ணுகை intention; thought; 7. வலி, strength; 8 வரை யறை, the utmost limit; 9. மதிப்பு, estimation; 10. எண்ணம், thought; 11. மனம், mind; 12. அறிவு, knowledge; 13. மாற்று, purity of gold or silver as tested on the touch-stone.

எண்கனப் பூடு, வெங்காயப் பூடு, onion plant.

எண் காஞ்சான், புனுகு, musk.

எண் காற் பறவை, சரபம், a fabulous eight-legged bird inhabiting snowy mountains. It is regarded as the foe of the lion.

எண் காற் புள், சரபம், சிம்புள், a monstrous bird in Hindu Mythology with eight legs; see எண் காற் பறவை.

எண்கு, கரடி, a bear.

எண் கேதனம், நிலம் புரண்டி, a kind of plant with psychic properties (*unidentified*).

எண்சா ணுடம்பு, மானிட தேகம், the human body of eight span in height when measured by one's own hand.

எண் சாண் இல்லம், see எண்சா ணுடம்பு.

எண்ணக் குறிப்பு, நினைவு, thought; 2. உள்ளாசை, internal desire; inward affection; 3. கருத்து, intention.

எண்ணத் தப்பு, நினைவு மயக்கம், misleading of the mind—Delusion; 2. மதி கேடு, loss of sense.

எண்ணப் படுதல், நினைவிற் றோன்றல், an unreal vision presented to the bodily or the mental eye—Illusion; 2. நினைக்கப் படுதல், to be thought over.

எண்ணம், கருத்து, intention; 2. மதிப்பு, estimation; 3. நம்பிக்கை, belief; 4. நினைவு, thought; 5. விசாரம், care.

எண்ணல், நினைத்தல், to think; 2. கவலைப் படல், to be care-worn; 3. குறித்தல், to mean.

எண்ணெய், நல் லெண்ணெய், gingelly oil.

எண்ணேற் பலம், 8 × 4 = 32 பலம் அல்லது 8 + 4 = 12 பலம்.

எண்ணென், உளுந்து, black gram.

எண்ணெ யூற்றல், எண்ணெய் வடித்தல், extracting oil by boiling the oil-seeds.

It refers to the home-made oil extracted from the seeds of castor plant and not the one derived from the oil-press or oil-machine. See ஊற்றின விளக் கெண்ணெய்.

எண்ணெ யூற்று மரம், எண்ணெய்ச் சத்து எடுக்கும் மரம், a tree from which oil is extracted; e.g. sandal, eucalyptus, etc.

எண்ணெ யெரித்தல், கொதிக்க வைத்துத் தைல மிறக்கல், boiling medicated oil; 2. சூடுண்டாக்கி எண்ணெய்ச் சத்து வடித்தல், expressing oil from any seeds or plants by application of heat.

எண் ணெய், (எள் + நெய்) எள்ளி னின்று இறக்கும் நெய், (*lit*) a vegetable ghee extracted from the gingelly seed; see எள் நெய்; 2. எண்ணெய்ப் பொது அதாவது எல்லா விதப் பூண்டு அல்லது மரத்தினுடைய பூ, பட்டை, விதை, பருப்பு, மரம் முதலியவை களி னின்று வடிக்கும் நெய்ச் சத்து, oil in general, a common term referring to any oil extracted from the seed, kernel, flower, bark of any plant or tree, etc; 3. மூலிகைகளி லிருந்தாவது அல்லது மூலி கைகளை எண்ணெயி லிட்டாவது வடிக்கும் தைலம். இது உள்ளுக்குக் கொடுக்கவும் மேற் பூச்சுக்கு முதவும், any oil extracted either from herbs or herbaceous plants or one derived from the herbs steeped in any kind of oil intended to be used whether internally or externally—Medicated oil; 4. எண்ணெய் மரம், Malabar oil tree—Dipterocarpus indicus; 5. மண் ணெண்ணெய், rock-oil; kerosene or any mineral oil; 6. மீ னெண்ணெய், fish-oil especially cod liver oil.

NOTE.—It is to be noted that although the term specially refers to gingelly oil, yet it is used colloquially for all oils obtained from the vegetable, the animal and the mineral kingdoms.

See தைலம்.

எண்ணெய், ஜீவன் அல்லது தாது வர்க்கங் களி னின்று பிரித்தெடித்து வடிக்கும் நெய்ப் பசையுள்ள திரவியச் சத்து. இவ்விதமாக வடிக்கும் எண்ணெய்களை வகுக்குங்கால், பிராணிகளின் எண்ணெய், தாவர யெண் ணெய், தாதுக்களின் எண்ணெய் என மூன் று விதமாகப் பிரிக்கப் பட்டுள்ளன—any unctuous liquid expressed or drawn from various substances both organic and inorganic i.e., mineral.

In classification, the oils thus prepared are first divided into three main classes according to the kingdoms of nature whence they are derived i.e., Animal, Vegetable and Mineral.

I. முதலாவது, தென்னிந்தியாவில் வழங்கப் படும் பிராணிகளின் எண்ணெய்கள் அடி யிற்கண்டபடிப் பலவகைப் படும்—The following are the principal animal-oils of S. India:—

1. ஆமை யெண்ணெய், turtle-oil from sea-turtle.
2. விச்சுளி யெண்ணெய், boochy bird oil.
3. காட்டுப் பாம்பு எண்ணெய், wild serpent oil.
4. மீ னெண்ணெய், fish-oil or Malabar oil — Oleum piscis. Made in west coast from livers of skates, saw-fishes, rays, oil-sardines etc. similar to cod-liver oil.
5. மயி லெண்ணெய், peacock's fat.
6. பசு மாட்டுக் காலெண்ணெய், neat's foot-oil.
7. சுரு வெண்ணெய், shark-liver oil.
8. ஆட்டுக் கொழுப்பு, mutton suet prepared from sheep's fat.
9. மான் கொழுப்பு, deer's lard.
10. புலிக் கொழுப்பு, tiger's fat.
11. தவளைக் கொழுப்பு, frog's fat.
12. கரடி நெய், bear's grease.
13. மெழுகு எண்ணெய், wax oil.
14. பன்றி நெய், hog's lard.
15. ஓணன் நெய், lizard's fat.
16. உடும்பு நெய், guana fat.
17. காக்கை நெய், crow's fat.

etc., etc.

II. இரண்டாவது தாவர வர்க்கங்களி னின்று பிரித் தெடுக்கும் முக்கியமான எண்ணெய் களாவன—The following are the vegetable oils of some of the important kinds which are obtained from:—

(*a*) பூண்டுகளின் விதைகளி லிருந்து எடுக்கு மெண்ணெய், oil from the Seeds of plants—

1. ஆமணக் கெண்ணெய், castor-oil.
2. எள் ளெண்ணெய் gingelly-oil.
3. கடலை யெண்ணெய், ground-nut oil.
4. பருத்தி யெண்ணெய், cotton-seed oil.

5. இலுப் பெண்ணெய், Mohwah (Bassia) oil.
6. புன் கெண்ணெய், Poongam (Dalbergia) oil.
7. கடுகு எண்ணெய், mustard-oil.
8. வால் மிள கெண்ணெய், cubeb-oil.
9. ஓம வெண்ணெய், Indian dill-seed oil.
10. சோம் பெண்ணெய், oil of anise.
11. வேப் பெண்ணெய், margosa-oil.
12. சாதிக் காய் எண்ணெய், nutmeg or myristica oil.
13. கசகசா வெண்ணெய், oil of poppy seeds.
14. நேர்வாள யெண்ணெய், croton-oil.
15. ஆழி விதை எண்ணெய், அல்லது சிறு சணல் எண்ணெய், linseed-oil.
16. கிராம்பு எண்ணெய், oil of cloves.
17. சாதி பத்திரி எண்ணெய், oil of mace.
18. குருக் கத்தி விதை யெண்ணெய், oil of madablota.
19. பிரதண்டி விதை யெண்ணெய், coorook oil.
20. செந்துருக்கம் எண்ணெய், oil of curdy oil-plant (safflower).
21. முந்திரி யெண்ணெய், cashew-nut oil.
22. பேய்க் கொம்மட்டி யெண்ணெய், oil of colocynth (from bitter water-melon).
23. சேங் கொட்டை யெண்ணெய், marking-nut oil.
24. வெள்ளரி விதை யெண்ணெய், cucumber-oil.
25. கஞ்சா விதை யெண்ணெய், hemp-seed oil.
26. நீரடிமுத் தெண்ணெய், marothy or Hydnocarpus oil.
27. எட்டிக் கொட்டை யெண்ணெய், nux-vomica oil.
28. பின்னைக் கொட்டை யெண்ணெய், common poon-oil.
29. புரசம்பித் தெண்ணெய், oil of Bengal kino-tree or palaus oil.
30. காட் டாமணக் கெண்ணெய், physic-nut oil.

31. பூ வெண்ணெய், oil of Poovana tree. (Sargostigma kleinii).
32. பாகல் விதை யெண்ணெய், oil of Paugal seed (bitter-gourd).
33. பூ வந்திக் கொட்டை யெண்ணெய், soap-nut oil.
34. காட்டு ஜீரக வெண்ணெய், wild jeerah-oil (Vernonia).
35. பூசினி விதை யெண்ணெய், oil of pumpkin seed.
36. நாய் வேளை விதை யெண்ணெய், oil of viscid cleome.
37. அம்பர் எண்ணெய், oil of amber.
38. ஏல வெண்ணெய், oil of cardamom.
39. இலவங்கப் பட்டை யெண்ணெய், oil of cinnamon.
40. கொத்தமல்லி விதை யெண்ணெய், oil of coriander.

etc., etc., etc.

(b) காய், கனிதப் பற்று, தோல் இவைகளிலிருந்து எடுக்கு மெண்ணெய், oil from the fruits and kernels :—

1. சைதூன் எண்ணெய், olive oil (from fruit).
2. தேங்கா யெண்ணெய், cocoanut oil.
3. வாதுமை எண்ணெய், almond oil (from kernal).

etc., etc.

(c) இலை பூ முதலியவைகளி லின்று பிரிக்கு மெண்ணெய், oil from rinds leaves, flowers, barks etc.—

1. கிச்சிலித்தோ லெண்ணெய், oil of orange peel (from rind).
2. எலுமிச்சை யெண்ணெய், oil of lemon (from leaves).
3. ரோஜா வெண்ணெய், oil of rose (from flowers).
4. சூரிய காந்தி யெண்ணெய், sun-flower oil (from flowers).
5. மல்லிகை யெண்ணெய், oil of jasmine (from flowers).
6. நாரத்தை யெண்ணெய், neroli oil (from flowers).
7. சந்தன வெண்ணெய், sandal wood oil (from wood).
8. சிறு பின்னை யெண்ணெய், calaba oil (from the gum).
9. காட்டுக் குருந்து அல்லது காட் டெலுமிச்சை யெண்ணெய், oil of wild lime tree (from the berry).

10. புல் (சுக்குநாரிப் புல்) எண்ணெய், oil of citronella (from leaves).

11. கற்பூர வெண்ணெய், eucalyptus oil (from leaves).

12. மல்லிகை எண்ணெய், oil of jasmine (from flowers).

13. அருவதன் அல்லது சதாப்பிலே எண்ணெய், oil of rue (from leaves).

etc., etc., etc.

III. மூன்றுவது தாது வர்க்கங்களினின்று கிடைக்கும் எண்ணெய்கள் வருமாறு, the mineral oils found are:—

1. மண் ணெண்ணெய், mud oil from (Mangalore).

2. சிலா வெண்ணெய், rock-oil or kerosine (from Burma).

3. மண் தைலம், petroleum (from Burmah).

NOTE.—1. The other varieties unknown to Tamilians are :—oil of cajuput, oil of caraway, chaulmoogra oil, carbolic oil, cod liver oil, oil of marjoram etc.

NOTE.—2. Oils according to their nature are divided into *fixed* or fatty and *volatile* or essential the latter being diffusible into vapour by heat. Fat oils form the ordinary bulk of the oils used; whereas drying oils dry quickly on exposure to the atmosphere. *Fixed* oils communicate a permanently greasy stain to paper or cloth, but *volatile* oils do not communicate such stain being dissipated by heat. The volatile oils are otherwise known as ethereal oils and they can be distilled without decomposition and are principally used in perfumery and medicine.

NOTE—3. Oils in general spread through the entire system immediately after being drunk or rubbed. They tend to expand the bone-joints and contribute to their free and easy movements. They act as spermatopoietics, purify the skin, improve the memory and impart softness to the skin. They also increase the firmness of the body.

NOTE—4. The Dravadian sciences show the prevalence of so many kinds of oil as enumerated above in S. India. There appears to be many more and information about them could not be gathered for want of sufficient time and books of reference as well. The uses of these oils are also not described here for want of space, but they are seperately dealt with under their respective heads. The oils are of course used for culinary purposes, in medicine, and for various other commercial advantages.

எண்ணெய்க் கசடு, எண்ணெயின் அடிவண்டல், the sediment deposited at the bottom of the oil after its preparation—Dreg of oil.

எண்ணெய்க் கசிவு, எண்ணெய் வடிதல், the oozing or percolation of oil through the pores of the body or any vessel.

எண்ணெய்க் கடுது, see எண் ணெய்க் கசடு; 2. தைல வண்டல், residue of medicated oil.

எண்ணெய்க் கஷாயம், தைலம், medicated oil obtained after boiling oil with drugs; 2. தைலம் வடிக்கும்போது சேர்க்குங் கஷாயம், decoction added while preparing medicated oils.

எண்ணெய்க் கரை, கரு வேப்பிலே, curry leaf tree—Murraya koenigii; 2. கரு வேம்பு, grey downy balsam tree — Garuga pinnata.

எண்ணெய்க் கரை மரம், கரு வேம்பு, (oil + stain + tree) so called from its dark-brown bark; Black neem — Garuga pinnata.

எண்ணெய்க் கவாள், பேரா மணக்கு, a large variety of the seed of the castor plant —Ricinus communis (major).

எண்ணெய்க் கவிழ்த்த முகம், எண்ணெய்க் கசிவுற்ற முகம், face coated over with oil derived from percolation through the pores of the skin — Oily face; 2. எண்ணெய் பூசிய முகம், face smeared with oil.

எண்ணெய்க் காப்பிடல், எள் நெய்யால் அபிஷேகம் செய்தல்; எண்ணெய் வழியும்படித் தேய்த்தல் அல்லது ஊற்றல், rubbing or pouring oil on the surface of the body or on any idol so as to overflow.

எண்ணெய்க் காறல், நாட் சென்ற எண்ணெயை உபயோகிப்பதனல் தொண்டையி லேற்படும் விரு விருப்பு, a peculiar sensation caused in the throat by the use of an oil kept long, i.e., by the use of very old or stale oil.

எண்ணெய்க் குத்தல், எண்ணெயைச் சிறுகச் சிறுக விடல், to let or drop oil little by little; 2. எண்ணெயில் மூழ்க விடல், to steep in oil; 3. வாத நோய்களுக்கு எண்ணெய் அல்லது தைலத்தைச் சிறுகச் சிறுக விட்டுத் தேய்த்தோ அல்லது காவினுல் பிழித்துத் தலைதோ செய்யுமோர் சிகிச்சை, (*In Medicine*) a treatment resorted

to in rheumatic affections by the process of kneading, rubbing or pressing the affected parts of a person's body with medicated oil poured on them, in order to bring relief or effect a cure. See உழிச்சல்.

எண்ணெய்க் குத்தி, எண்ணெய் ஊற்றி வைக்கும் சிறு குப்பி, a vial or small bottle for holding oil.

எண்ணெய்க் கோவை, கருங் கோவை, a black variety of Indian caper—Coccinea indica.

எண்ணெய்ச் சத்து, எண்ணெய்ச் சாரம், essence of oil.

எண்ணெய்ச் சிகுண்டு, எண்ணெய்ச் சிக்கல், } see எண்ணெய்ச் சிக்கு.

எண்ணெய்ச் சிக்கு, எண்ணெய் நாட் பட்டிருப்பதால் அதாவது மிகப் பழையதாக விருப்பதா லேற்படும் பிசு பிசுப்பு, the viscid state of any oil due to its long age; 2. எண்ணெய்ப் பண்டம் செரியாமல் வயிற்றினுட் தங்குவதா லேற்படும் அசீரண நோய், indigestoin due to unassimilated oily food or other oleaginous articles of fare; 3. எண்ணெய்ப் பற்று, oil-sediment.

எண்ணெய்ச் சீலை, புண்களுக் கிடும் மருந் தெண்ணெயி லூட்டிய துணி, a piece of cloth steeped in medicated oil, used in surgical dressing—Oil-plaster.

எண்ணெய்ச் சுண்டு, see எண்ணெய்ச் சிக்கல்; 2. மருந் தெண்ணெய் அல்லது தைலம் காய்ச்சும் போது அடியிற் பற்றியது, the oily sediment that sticks or adheres to the bottom of the vessel while boiling medicated oils.

எண்ணெய்ச் சொக்கி, கோனியப் பூடு, a kind of plant (*unidentified*).

எண்ணெய்ச் சோர்தல், எண்ணெய் கசிதல், percolation of oil through the pores of a substance or through small openings.

எண்ணெய்த் தண்டு, எண்ணெய் ஊற்றி வைக்கும் மூங்கிற் குழாய், a bamboo tube intended for preserving oil in olden days.

எண்ணெய்த் திரி, ஆசனவாயிற் புகட்டும் ஆமணக் கெண்ணெய் அதாவது வினைக் கெண்ணெயிற் பிரட்டி யெடுத்த சீலைத் திரி, a twisted piece of cloth soaked in castor oil for purposes of introducing it into the rectum especially of children—Suppository.

NOTE—A similar thing made with glycerine etc., is also introduced in the vagina or the urethra.

எண்ணெய்த் தேய்த்தல், எண்ணெய் முழுக் காட்டல், rubbing oil on the head and all over the body just before giving a bath; 2. கட்டி, வீக்கம் முதலியவைகளுக்குத் தைலத்தைப் பூசுதல், external application of oil to an abscess or a swelling or other affected parts of the body to effect a cure.

எண்ணெய்ப் பசை, எண்ணெய்ச் சத்து, essence of oil; 2. எண்ணெய்ப் பற்று, oil residue; 3. எண்ணெய் வழ வழப்பு, the glutinous nature of an oil.

எண்ணெய்ப் பழகிய சட்டி, எண்ணெயிட்டு உபயோகித்த மட் பாண்டம், an earthen vessel which absorbed oil in the usual course from its use in preserving oil or in preparing oily substances.

எண்ணெய்ப் பற்று, எண்ணெய் வண்டல், oil-sediment; 2. மருந்துச் சரக்குகளே எண்ணெய் அல்லது தைலங்களி லிட்டுக் குழப்பி புண், புரை, கட்டி முதலானவைகளுக்குப் போடும் பற்று, any soft unctuous substance used as an external application on any sore, abscess etc.; ointment or unguent; 2. எண்ணெய்ப் பூச்சு, which see; 3. எண்ணெய்ச் சிக்கு, which see.

எண்ணெய்ப் பாம்பு, எண்ணெய்ப் பளபளப்புள்ள பனை மரியன் பாம்பு, a kind of small viper with oily appearance, found on palmyra trees — Bungarus carulens.

எண்ணெய்ப் பிசுக்கு, see எண்ணெய்ப் பற்று.

எண்ணெய்ப் பிணக்கு, எண்ணெய் தேய்த்து முழுகுவதனால் சில சமயம் ஏற்படுங் காய்ச்சல், fever due sometimes to oil-bath or oil-anointing.

எண்ணெய்ப் பூசல், மருந் தெண்ணெய் அல்லது தைலத்தைச் சிரங்கு, புண், வீக்கம் முதலிய விடங்களில் பூசுதல், external application of medicated oil or other unguents to itches or sores, swellings etc.

எண்ணெய்ப் பூச்சு, உடம்பில் நோய் அல்லது புண், வீக்கம் முதலியவைகள் ஏற்பட்டிருந்

கும் இடங்களில் தைலம் அல்லது மருந் தெண்ணெயைப் பூசுதல், the smearing of any soft unctuous substance particularly over the body or over a diseased part of it having sore, abscess, swelling etc; the external application of medicated oil.

எண்ணெய்ப் பொருத்துதல், மருந் தெண்ணெய் அல்லது தைலம் பூசுதல், besmearing the head or other parts of the body with medicated oil. See also எண்ணெய்ப் பூசுதல்.

எண்ணெய்ப் போக்கி, சீயக்காய், soap-pod—Acacia concinna. It is so called from its removing the oily matter from the hair on the head or on the body; 2. மல்லிகை, jasmine (flower) —Jasminum sambuc; 3. உவர் மண், fuller's earth from its removing the oily or dirty matter from the clothes; 4. இலுப்பைப் பிண்ணாக்கு, see அரைப்பு.

எண்ணெய் மரம், மலையாளத்தில் வளரும் ஓர் எண்ணெய் மரம், see எண்ணெய்.

எண்ணெய் முறித்தல், பழுக்கக் காய்ச்சிய இருப்புக் கரண்டியி லிட்டாவது, இரும்பைப் பழுக்கக் காய்ச்சி எண்ணெயிற் தோய்த்தாவது, எண்ணெயின் நீர்க் கலப்பு முதலிய தோஷங்களை நீக்கல், to remove the admixture of water or other bad qualities in oil, by pouring it into a well-heated large spoon or small vessel made of iron or by dipping into it a piece of red-hot iron.

எண்ணெய் முறியிலை, சதாப்பிலை, common rue or herb of grace—Ruba graveolens (angustifolia).

எண்ணெய் மெழுகு, உறைந்த இலுப்பெண்ணெய் அல்லது தேங்கா யெண்ணெய், vegetable wax. It is a name or a term used for solidified cocoanut oil or *Iluppai* oil.

எண்ணெய் மேகம், மேக மூத்திரம்; எண்ணெய் கலந்தது போலும் அல்லது எண்ணெயைப் போலும், அடிக்கடி நீரிறங்கு மோர் வித நீரிழிவு, albuminuria attended with a frequent discharge of urine loaded with oily nutritive matter.

எண்ணெய் வடித்தல், see எண்ணெ யூற்றல்; 2. எண்ணெயைத் தெளி விடுத்தல், filtering oil from impurities.

எண்ணெய் வழக்கு, எண்ணெய்ப் பிசு பிசுப்பு, viscidity or stickiness of oil; 2. மினுமினுப்பு, glossiness.

எண்ணெய் வழக்குள்ள, மிருது வாயும், வழ வழப்பாயு முள்ள, having an even, smooth and glossy surface, as of the body.

எண்ணெய் விரியன், ஓர்வகை விரியன் பாம்பு, oil-viper; see எண்ணெய்ப் பாம்பு.

எண்ணெய் வெங்காரம், ஓர்வகை வெங்காரம், a kind of borax.

எண்ணேயம், (எள் + நேயம் = எள் + நெய்) see எண்ணெய்.

எண்ணை, see எண்ணெய்.

எண்பத, அயம், இரும்பு, Iron.

எண் பெற்றி, எண் குணம் வாய்ந்தோன், one possessing eight qualities — Siva; 2. எட்டுப் பிள்ளை பெற்றவள், a woman who has borne eight children—Octipara.

எண் பொருள், see எண்வகைப் பொருள்.

எண் வகை தோஷம், இரசத்திற்கு இயல்பிலேயுண்டான எட்டுவகைக் குற்றங்கள், the eight kinds of defects natural to mercury.

எண்வகைத் தேர்வு, நோயாளியை எட்டு விதமாகச் செய்யு மாராய்ச்சி, the eight methods of examining a patient.

See அஷ்டவித பரிட்சை.

எண் வகை பதார்த்தம், ஆயுள் வேதப்படி மூலிகைச் செடிகளின் எட்டு வகைப் பிரிவுகள் அவையாவன:—வேர், பட்டை, கட்டை, இரசம் அல்லது சாறு, இலை, பூ, காய் அல்லது பழம், விதை, (*In Ayurveda*) the eight constituent parts of a plant viz—root, bark, wood, juice, leaf, flower, berry or fruit, and seed.

எண் வகைப் பொருள், தமிழ் வைத்தியத்தின் படி மரம் அல்லது செடிகளின், எட்டு விதப் பிரிவுகள் அவையாவன:— வேர், பட்டை, கிழங்கு, பிசின், இலை, பூ, கனி, வித்து, (*In Tamil Medicine*) according to botanical classification, the eight parts or products of a tree or a plant viz:—root, bark, bulbous root, gum, flower, leaf, fruit and seed; 2. தமிழ் நூலின்படிப் பொதுவாகத் தாவர வர்க்கங்களின் வகுப்பு அவையாவன:— நிலை, மொக்கு, குலை, நார், மா, இலை, தளிர், பால், கொட்டை, எண்ணெய், மூலை, பாலை, குழாய், கொம்பு, தாய்

முதலியன. According to the Dravidian (Tamilian) system of botanical terminology, the different parts or products of plants and trees are ;—branch, bud, bunch, fibre, flour, foliage, greens, milk, nut, oil, shoot, spathe, tuber, twig, unripe fruit etc.

எண் வகை யாராய்ச்சி, see எண் வகைத் தேர்வு; 2. உடம்பின் பேதங்களைக் கூறும் ஓர் நூல், a treatise on the right methods of diagnosis.

எண் வித மூலம், எட்டு வித மூல நோய்கள், the eight kinds of piles. See மூலம்.

எதகம், see எதம்.

எதண்டம், சிலந்தி நாயகம், a plant applied to ulcers and venereal boils.

எதம், திப்பிலி, long-pepper—Piper longum.

எதளா, புளிய மரம், tamarind tree—Tamarindus indicus.

எதளாரி, எதளார, } see எதளா.

எதிரது, கொடுத்தல், விஷத்திற்குப் பிரதி விஷம் கொடுத்து மாற்றல், to prescribe a poison as an antidote against another poison ; to counter-act the poison;2. சத்தருச் சரக் கால்கொள்ளுதல், (*In alchemy*) rendering any substance inactive or inert with the aid of counter-acting agents.

எதிரது கொள்ளல், விஷத்தைக் கொல்ல மருந்துட் கொள்ளல், taking medicine internally as an antidote to poison already in the system.

எதிரழற்சி, ஒருபக்க முண்டா யிருக்கும் அழற்சியை நீக்க வேண்டி மற்றொரு பக்கம், சொற்பமாக வுண்டாக்கும் அழற்சி, the superficial irritation which is intended to relieve the existing irritation—Counter-irritation ; 2. எரிச்சலை யுண்டாக்கு மருந்து, irritants or counter-irritants.

எதிரிடை, எதிர், opposite; contrary.

எதிரிப் படை முறித்தான், மீன்கொளி, a swift bird of the genus of Halcyonidae ; see also மீன் கொத்தி.

எதிருக் களித்தல், see எதிர்க் களித்தல்.

எதிருக் கெடுத்தல், see எதி ரெடுத்தல்.

எதி ருறை, நோயா லேற்பட்ட குணத்திற்கு மாறுதலான குணத்தை யுண்டாக்கும்படிக் கொடுக்கும் மருந்து, medicine having counter-effects to the symptom exhibited by a disease. c.f. ஒப்புறை.

எதிருறைச் சிகிச்சை, நோயினுல் ஏற்பட்ட குணத்திற்கு மாறுதலாகக் குணத்தை யுண்டாக்கும்படி மருந்து கொடுத்துச் செய்யும் சிகிச்சை, a treatment which consists in the curing of a diseased action by inducing a *different or opposite* kind of action in the body through medicine having counter-effects. It is opposed to ஒப்புறை, a treatment by drugs with effects on the body similar to the symptoms of the disease.

NOTE.—Allopathy consists in the curing of diseases by using medicines which produce or tend to produce in the system a condition different from or opposite to the disease. It is opposed to Homeopathy in which diseases are cured by drugs producing effects *similar* to the symptoms of the disease.

எதி ரெடுத்தல், வாக்கி யெடுத்தல், to vomit ; 2. ஏப்ப மிடுதல், to belch ; 3. தேக் கெடுத்தல், அதாவது உண்டது மேலுக்கு வருதல், ejection of food or acid fluid, very common in children.

எதிரோறு, வல்லமை, strength.

எதி ரேற்றல், எதிர்த்தல், counter-acting ; 2. தடுத்தல், preventing.

எதிர் கால வுணர்ச்சி, வருவதை யுணரும் பேரறிவு, the knowledge of coming events; knowing beforehand what is to take place—Foresight.

எதிர் காற்று, நேராக அடிக்குங் காற்று, wind blowing in the opposite direction; direct breeze; opposite wind ; 2. குறுக்கே யடிக்குங் காற்று, cross-wind.

எதிர்கொண் டெடுத்தல், see எதி ரெடுத்தல்.

எதிர்க் களித்தல், மித மிஞ்சிச் சாப்பிடுவதாலும், பித் தாதிக்கத்தினுலும், குன்மத்தினுலும், உண்ட வுணவு மேல் நோக்கி வரத் தலைப்படல், a mild eructation arising from consuming food in excess of what is usually taken or arising from biliousness or dyspepsia and other disorders of the stomach ; the casting up of undigested food ; the rising up of some of the contents of the stomach to the mouth—Regurgitation. See எதி ரெடுத்தல்.

எதிர்க் காற்று, நோய அடிக்குங் காற்று. இது நோயாளிக் குதவாது, a direct current of air moving through an inclosed space —Draught. This is quite unsuitable to patients' health.

எதிர்க் குறி, மாறுபாடான குறி, contra-indication; 2. தீக் குறி, counter-symptom; bad or unfavourable symptom.

எதிர்க் கெடுத்தல், see எதிர்க் களித்தல்; 2. குமட்டல், to feel nausea or an inclination to vomit.

எதிர்த்தவன், சோர பாஷாணம், a kind of prepared arsenic.

எதிர் நிலை, கண்ணாடி, mirror.

எதிர்ப் பாஞ்சான், see எதிர்ப் பாய்ஞ்சான்.

எதிர்ப் பாய்ஞ்சான், தண்ணீர் ஓட்டத்திற்கு எதிராகப் பாய்ந் தோடு மீன், fish rushing or swimming against the current of water.

எதிர் மீன், see எதிர்ப் பாய்ஞ்சான்.

எதிர் வலி, எதிர்க்கும் வல்லமை, the natural power of the organism to resist iujury or diseases—Vis conservatrix.

எதிஷ, see எதனா.

எதுகைப்பா, தேரையர் செய்த வோர் தமிழ் நூல், a Tamil treatise on medicine compiled by Therayar, a great physician.

எதுக் களித்தல், see எதிர்க் களித்தல்.

எத்தணையும், எவ்வளவி லேனும், in any quantity or degree.

எத்தளாச் சுண்ணம், ஈரற் சுண்ணம், which see.

எந்தாவாசம், கஸ்தூரி, musk.

எந்திரத் தைலம், எள், வேர்க் கடலை, முதலிய வைகளி னின்று செக்கு முதலிய இயந்திரங்களைக் கொண் டெடுக்குந் தைலம், oil in general, extracted from the oil-seeds such as gingelly, ground-nut etc, with the aid of oil-presses, oil-machines, etc.; 2. இயந்திரங்களின் உதவியைக் கொண்டு மூலிகைச் சாரக்கு, மூலிகைச் சத்து முதலியவை களி னின்று வடிக்கும் மருந் தெண்ணெய்கள், (*In Medicine*) medicated oils or ointments prepared from drugs or their essentials with the aid of oil-machines; 3. மந்திர யந்திரத் தகடுகளின் மேற் பூசும் ஐங்கோலத் தைலம் முதலிய கருத்தைலம், (*In Magic*) it is an oil with psychic virtues prepared from the first-born fetus of a woman and smeared over the diagram carved on a metallic plate. This is done with a view to attain success sooner in the performance of magic as the oil is considered to have efficacy in bringing about quicker results.

எந்திரம், இயந்திரம்; மந்திர சக்கிரம், mystical diagram or figure cut out or engraved on metals and to which are ascribed wonderful effects. It is generally worn as a charm or an amulet. See also இயந்திரம்.

எமக்கடலிங் கட்டி, காசுக் கட்டி, a brown-red colouring matter obtained from arecanut—Catechu.

எம தூதம், அத்தி, fig.

எம தூதன், காகப் பாம்பின் மேல் வரிசை கடைப் பற்கள் இரண்டினுள் ளொன்று, one of the two poisonous fangs in the upper row in the mouth of a cobra. It is so calledfrom the death resulting by the bite caused with the said fang.

எம நாசம், ஓமம், bishop's weed — Sison ammi; 2. ஊமத்தை, dhatura—Dhatura stramonium.

எம நாபி, எம நாமம், } ஊமத்தை, dhatura—Dhatura alba.

எமபதி, குங்கிலியம், male frankincense—Boswellia serrata (glabra).

எம பதியம், மலை யத்தி, mountain fig—Ficus macrocarpa.

எம பத்திரம், see எம பதியம்.

எமலி, மாந்திரீக மை, as in

"ஆமப்பா பிரமியிலே எமலி போடு
ஆமப்பா மாமுனிகள் தேவர் காணும்".

a black magic paint used in crystal-gazing.

எமனி தங்கி, கொத்தான், a plant. See எருமைக் கொத்தான்.

எமனுதி மூலி, எழுத்தாணிப் பச்சிலை, which see.

எமனூர் வள்ளி, இலவ மரம், silk-cotton tree.

எமன், see எம தூதன்.

எமன் கற்பம், ஆடுதின்னாப் பாலை, worm-killer —Aristolochia bracteata.

எம்பாரி, கெந்தியுறு பாஷாணம், a kind of prepared arsenic — Yellow oxide of arsenic.

எம்புகம், கிலக் கடம்பு, cadamba—Justicia acaulis.

எம்மாலி, வெள் ளுமத்தை, common datura, or white Asiatic thorn-apple—Dhatura fastuosa (alba).

எம்மாலிகம், see எம்மாலி.

எயம், ஏலம், cardamom — Elettaria cardamomum.

எயலாடி, கோவணம், a long piece of cloth used ordinarily by Indians for covering the male organ.

எயி றதைப்பு, பல்லி னடி வீக்கம், swelling of the gums through inflammation — Gingivitis.

எயி றலத்தல், see எயி றலைப்பு.

எயி றலைப்பு, பல்லை நற நற வென்று கடித்தல், gnashing of the teeth ; to make a noise by repeated rapid clashing of the teeth ; striking or dashing the teeth together and thereby making a sound; chattering of the teeth—Odonterism.

எயி றழற்சி, பல் லடியிற் காணு மழற்சி, a deep-seated inflammation of the alveolar process—Interstitial gingivitis.

எயிறு, பல், tooth ; 2. பல்லின் விளிம்பு, the border or margin of the tooth ; 3. யானைக் கொம்பு, the tusk of an elephant.

எயிறு கட்டி, பல் வேறண்டை உண்டாகுங் கட்டி, an abscess formed near the gum of the teeth or more exactly in the tooth-socket—Parulis.

எயிறு கரை, பல்லீறு, the hard fleshy substance that invests the teeth.

எயிறு கறை, பல்லீறி லுண்டாகும் மாசு, the incrustation that forms on neglected teeth—Tartar.

எயிறு காரை, பற்காரை, the cemental part covering the root of the teeth.

எயிறு தின்றல், பற் கடித்தல், gnashing the teeth as in pain or as in sleep or as in some disease such as, tetanus, excess of fever etc.

எயிறு புண், see எயிற்றுப் புண்.

எயிறு வலி, பல்வலி, tooth-ache—Odontalgia.

எயிற் றழற்சி, பல்லுக் கேற்படும் தாபிதம் inflammation of a tooth—Odontitis.

எயிற்றுக் கண்ணன், துரிசு, copper sulphate but more correctly copper acetate.

எயிற்றுக் கழலை, பல்லி னுட் சதைப் பாகத்தில் தாடை யண்டை ஏற்படும் கழலை, a tumour of the gums usually seated on the bone of the jaw—Epulis.

எயிற்றுப் புண், பல்லீறி லுண்டாகும் புண், a sore of the gum as the result of an abscess or an ulcer—Gum-boil.

எயிற்று வலி, பல்லீறு வளர்தலால் உண்டாகும் வலி, pain caused from the swelling of the gum.

எய், முட் பன்றி; முண்மா. இது இரண்டடி நீளம், உடம்பில் முட்கள் பரவி யுள்ளது, an animal about 2 ft. long covered with long erectile spines which serve for defence—Porcupine.

எய்து மாலன், திப்பிலி, long-pepper—Piper longum.

எய்த்தல், இளைத்தல், to emaciate, as in diseases ; 2. மெலிதல், to grow weak and thin for want of food.

எய்ப் பன்றி, முட் பன்றி, see எய்.

எய்ப்பு, இளைப்பு, weariness ; failing in strength ; 2. பலவீனம், weakness.

எய்ப் போத்து, ஆண் முள்ளம் பன்றி, male porcupine.

எய்மா, முண்மா, அல்லது காட்டுமா, see எய்.

எரல், சமுத்திர சுண்டி அல்லது கடற் சிப்பி, sea-shell. See ஏரல்.

எரி, எரித்தல், to burn, to ignite ; 2. தீ, நெருப்பு, fire ; 3. நரகம், hell ; 4. பிரகாசம், வெளிச்சம், brightness; 5. எரிச்சல், burning as in a sore; 6. கந்தம், smell; 7. மிளகாய், chilly — Capsicum frutescens ; 8. கொடி வேலி, lead-wort—Plumbago Zeylanica ; 9. எரிச்சற் காணும் மேக வெட்டை, a venereal complaint accompanied by burning sensation ; 10. சீரணிப் பித்தல், causing digestion by extraordinary means or methods, as by medicines or incantations ; 11. மருந் தெரித்தல், preparing medicines by application of heat or by calcination; 12. கொல்லிக் காய் கந்தகம். இது எல்லா வகைகளையும் விடச் சுத்தமானது, myrobalan gandhac ; sulphur which occurs in crystalline

pieces like those of alum. It is considered the purest of all kinds met with in bazaars.

எரி கடுப்பு, எரிச்சலே யுண்டாக்கு மோர் வகை வலி, pain marked by burning sensation; irritation.

எரி கணம், குழந்தைகளுக்கு உடம்பு முழுவதும் எரிச்சல் கண்டு, வாய் வழியாக மூச்சு விட்டு, நித்திரை பிடிக்காமல் வருத்து மோர் வகைக் கண நோய், a wasting disease in children marked by burning sensation all over the body, breathing through the mouth, sleeplessness etc.

எரி கவண, see எரி கணம்.

எரி கண், கச்சுக் கண், evil eye; 2. எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைக் கண்ணோய், an eye disease accompanied by burning sensation.

எரி கரும்பு, விறகு, fuel so called from its use in burning or feeding fire.

எரிகல், கந்தகம், brim-stone; 2. எரியுந் தன்மை யுள்ள ஓர்வகைக் கல். இது கருப்பாயும், நாற்ற முடையதாயும், நெருப்பிற் கொளுத்தப் பற்றுந் தன்மை வாய்ந்ததாயும், தண்ணீர் தெளிக்கச் சுவாலே விட்டெரியவும், எண்ணெய் தெளிக்க அவியவும் கூடிய தன்மையு மூன்றது. இதற்கு 'இஜரே ஜாயி' என்ற யூனானிப் பெயர் வழங்கும், a stone with extraordinary qualities. It is black with an offensive smell and takes fire when ignited; burns with a flame when sprinkled with water and is put out by sprinkling oil over it. It is called 'Ijaray jayee' in Unani.

எரி கறி, சுண்டற் கறி, a mixture of the remnants of different curries used in the day and warmed up or heated sufficiently for use.

எரி காசு, அகிற்கூட் டைந்து வகையி லொன்று அதாவது காசுக் கட்டி, one of the five aromatic ingredients for perfuming the hair; catechu (the juice of young arecanuts inspissated); 2. கிரியாசப் பாற் செடி, downy-foliaged cutch; java storax—Aithingia excelsa.

எரி காய்ச்சல், உடலில் எரிச்ச லுண்டாகும் படிக் காயும் சுரம், fever marked by burning sensation due to excessively high temperature—Hyper-pyrexia; 2. உடலைத் தகிக்கும் சுரம், severe fever.

எரி காவணுப்பு, காட்டாமணக்குச் செடியை எரித்து, அதனின் றெடுத்த வோர்வகை யுப்பு, salt obtained from the ashes collected after burning the wild Croton-plant.

எரி காவன், காட்டாமணக்கு, wild croton-oil plant—Croton polyandrum alias Jatropha curcas; 2. வெள்ளைப் பாஷாணம், white arsenic; 3. வெள்ளை யாதலை, அல்லது வெள்ளைக் காட்டாமணக்கு, white croton plant – Jatropha grandulifera.

எரிகாவன் பால், காட்டாமணக்குப் பால், the milky juice of the wild croton plant.

எரி காலி, எரி காவல, } see எரி காவன்.

எரி கிருமி, மலத்தி லுண்டாகு மோர் வகைப் பூச்சி, a worm in the intestines.

எரி குஞ்சி, சிகப்பு மயிர், the red or fiery hair; 2. மயிர்ச் சிகைப் பூடு, a plant resembling peacock's crest (*unidentified*).

எரி குடலன், மிக்கப் பசி யுடையோன், a man of voracious hunger; 2. குன்ம நோயாளி, a dyspeptic patient; 3. குட லெரிச்சலே யுடையவன், one suffering from burning sensation in the stomach, which may be due either to hunger or to diseases.

எரி குடல், மிகுந்த பசி, canine appetite; 2. எரிச்ச லுடைய குடல், burning sensation in the bowels.

எரி குட்டம், ஓர்வகைக் குட்டநோய், a form of leprosy attended with burning sensation.

எரி கும்ப வாயு, வயிற்றில் எரிச்சலே யுண்டாக்கும் ஓர் நோய், inflammation of the stomach—Gastritis.

எரி குழி, வயிறு, stomach, which digests things that are put into it.

எரி குளிரான், எரிச்சலைத் தணித்து உடம்பை குளிரப் பண்ணும் பூடு அதாவது கருநொச்சி, a black variety of vitex or chaste plant, which allays the burning sensation and cools the system.

எரி குன்மம், ஓர்வகைக் குன்ம நோய். இதனால், அடி வயிற்றில் எரிச்சல், குடல் பிரட்டல், வாயில் நீரூறல், தலை சுழற்சி, வயிற் றுப்பிசம், இரைச்சல், புளி யேப்பம், மயிர்க் கால்களில் வியர்வைப் பெருக்கு, பேதி, உடம் பினைப்பு, இருமல், சோறு செல்லாமை, முதலிய குணங்க ளுண்டாகும், a form of dyspepsia, marked by the following symptoms

viz.—burning sensation in the stomach, functional disturbance of the large intestine, unusual secretion of saliva, vertigo, distension of the abdomen, rumbling noise in the stomach, sour belching, perspiration, diarrhoea, emaciation, cough, loathting of food, etc.

எரிகை, காட்டுப் பச்சிலை, bastard rose-wood —Dalbergia lanceolaria.

எரி கொள்ளி, கொள்ளிக் கட்டை, fire-brand.

எரிக்குத்தக் காரி, கலை மான், a male deer; a hart.

எரிக் கொடி, முடக் கொற்றான், balloon-vine —Cardiospermum canescens.

எரி சாவை, நீர் மேல் நெருப்பு. இதனால் முன்னிசிவு, பின் னிசிவு, சூலை, கீல் வாயு, திமிர் வாத முதலிய வாத நோய்கள் போம், water-fire, a medicinal plant curing all rheumatic complaints, such as arthritis, etc and tetanus including opisthotonos and emprosthotonos.

எரி சிங்கி, நாக்கி லுண்டாகும் எரிச்சலுடன் கூடிய வோர் வ்ரண நோய், small painful ulcers on the tongue attended with burning sensation.

எரி சிலந்தி, எரிச்சலை யுண்டாக்கும் சிலந்தி அல்லது பரு, ulcer causing burning sensation.

எரி சுடர், நெருப்பு, fire; 2. விளக்கு, lamp.

எரி சுரம், கொடிய சுரம், severe fever—Hyper-pyrexia, see எரி காய்ச்சல்.

எரி சுரை, சூடான சாராயம், ardent spirit.

எரி சூதகம், அமலைப் பூடி, see அமலை; 2. எரிச்சலை யுண்டாக்கு மோர் வகைச் சூதக நோய், painful menstruation.

எரி சூலை, நெஞ்சு, தொண்டை, வயிறு இவ்விடங்களில் குத்தலையும், எரிச்சலையு முண்டாக்குவதுடன், புளித் தேப்பம் முதலிய குணங்களையுங் காட்டு மோர் வகைக் குன்ம சூலை, heart burn, burning sensation in the esophagus and the stomach with sour eructation due to acid dyspepsia; water-brash—Pyrosis.

எரிச்ச கறி, see எரி கறி.

எரிச்சல், எரிவுத்தம், burning senstion; 2. உடம் பெரிச்சலை யுண்டாக்கு மோர் நோய், a condition marked by the sensation of intense burning pain — Thermalgia; 3. பசியால் ஏற்படும் எரிச்சல், sensation in the stomach through hunger; 4. அழற்சி, inflammation; 5. உறைப்பு, acridity; 6. பெருங் காயம், asafoetida; 7. நெருப்புச் சுட்ட அல்லது சூடு பட்ட வ்ரணத்தினால் ஏற்படும் எரிச்சல், burning sensation due to a lesion caused by fire or heat; 8. சதை வழுவுண்டதனு லேற் படும் எரிச்சல், burning sensation arising from an injury caused by violent rubbing or friction; abrasion.

எரிச்சல் விஷ பாகம், விஷத்தினு லுடம்பிலேற் பட்ட வோர் வித நோய். இதனால் வாயினின்று இரத்தம் விழல், உடம் பெரிச்சல், கோழை தள்ளல், மேல் மூச்சு, மாரடைப்பு, வ்ரண சதை வளர்ச்சி, நெஞ்சில் கட்டி போல் புரளல், பேதி, வீக்கம், முதலிய குணங்களுண்டாகும், a morbid condition due to local action of a chemic or external poison in the system.

It is marked by bleeding from the mouth, burning sensation in the body, mucous discharge from the throat, hard breathing, affection of the chest, localised lesion, feeling of obstruction in the thoracic region, diarrhoea, swelling etc.

2. உட்கொள்ளுவதனாலும் அல்லது உட் சுவாசத்தாலும் அல்லது உடம்பினுள்ளே பிறத்தலாலும் ஏற்பட்ட விஷத் தன்மை, (*literally*) the morbid condition produced by a poison ingested or inhaled or developed within the body followed by a functional disturbance attended chiefly with burning sensation as experienced in copper poisoning, etc.

எரிச்சற் புண், நெருப்பினு லேற்படும் புண், a lesion caused by the contact of heat—Burn; 2. வழுவுண்ட புண், a wound caused by friction—Brush burn; 3. பொதுவாக எரிச்சலை யுண்டாக்கும் புண், any sore, wound or ulcer causing burning sensation.

எரிச் சினப்பு, எரிச்சலை யுண்டாக்கும் இனையைப் போன்ற சிவந்த சிறிய பருக்கள் அல்லது வேர்க்குருக்கள், an acute inflammation of the sweat glands characterised by the formation of small red papules like millet-seeds or vesicles with intense itching and burning of the skin —Miliaria rubra.

எரிச் சிவனப்பு, see எரிச் சினப்பு.

எரி தயிலம், அடுப்பி லிட்டு எரித்துக் காய்ச்சி வடித்த மருந் தெண்ணெய், medicated oil prepared by boiling oil on an oven; 2. காய்ச்சிய எண்ணெய், heated oil; 3. எரிச்சலே யுண்டாக்கு மோர் மருந்துத் தைலம், a medicated oil causing irritation or burning sensation.

எரிதல், அனற்றல், burning inwardly in a suppressed state as in fever etc.— Smouldering; 2. நெருப்பு சுவாலித்தல், burning with flame; 3. பிரகாசித்தல், glowing; 4. எரிச்ச லுண்டாதல், to burn as does a sore or as it does in hunger etc; 5. காமம் அல்லது இச்சையினுல் எ ரிச்ச லுண்டாதல், to be inflamed with passion or desire.

எரித்தல், எரியச் செய்தல், causing to burn; 2. புடம் போடல், to calcine medicines or chemicals even as metals are calcined; 3. கொதிப்பிக்கச் செய்தல், causing to boil as in தைல மெரித்தல், extracting medicinal oils; 4. சீரணித்தல், digesting.

எரி நகை, வெட்சி மலர், Cupid's arrow— Ixora coccinea.

எரி நோவு, ஆட்டிற்கு வரு மோர்வகைத் தொத்து நோய், an infectious disease in sheep.

எரி படுவன், எரிச்சலே யுண்டாக்கும் தோலைப் பற்றிய வோர் நோய், an inflammatory skin disease attended with itching and burning of the part affected; 2. எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைச் சிலந்தி, an ulcer or other open sore with pain and burning sensation.

எரி பாண்டு, எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைப் பித்தப் பாண்டு, dropsy from bilious causes, attended with burning sensation.

எரி பிடாரி, உக்கிர மா காளி, a ferocious female demon.

எரி பித்தம், ஓர் வகைப் பித்த நோய். இது அடித் தொடை, பாதம், கண், உள்ளங் கால், உள்ளங் கை இவைகளி லெரிச்சல், காது, மூக்கு இவ்விடங்களில் வறட்சி, முழங்கை, முழங் கால்களில் விரு விருப்பு, குளிர்ச்சி யான விடம், குளிர்ந்த காற்று முதலியவை களி லிருக்க விருப்பங் கொள்ளல், ஆகிய கு ணங்களே யுண்டாக்கும், a disease due to bilionsness or the deranged condition of bile in the system. It is characterised by the following symptoms — Burning sensation in the upper thighs, foot, eyes, soles of the feet, and palms, parched condition of ears and the back, a thrilling pain in the elbows and in the knees, a desire for cool breeze and cool places, etc; 2. பித்த வெரிச்சல், a burning sensation from bilious causes in general.

எரி பிளவை, எரிச்சலே யுண்டாக்கும் பிளவை, carbuncle attended with burning sensation.

எரி புண், அழற்சியால் எரிச்சலே யுண்டாக்கும் புண், a burning sore or a burning ulcer through inflammation. See எரிச் சற் புண்.

எரி புத்து, எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைச் சிலந்தி, a cancer with burning sensation.

எரி புழு, தொட்டால் எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைப் புழு, a yellow cater-pillar causing irritation by its mere touch or contact; 2. கருப்பு மயிர்க் குட்டி, a worm destructive to trees and plants — Canther-worm.

எரி புழுகு, சவ்வாது, a substance taken from the anal glands of the civet-cats. It is a perfume.

எரி பூச்சி, தொட்டால் எரிச்சலே யுண்டாக்கு மோர்வகைக் கம்பளிப் பூச்சி, an insect which on contact emits a moisture that causes a burning sensation and discolouration of the skin. It is found on brinjal leaves—Carabas bimaculatus.

எரி பூண்டு, வெள்ளைப் பூண்டு, garlic.

எரி பைத்தியம், கொடிய பைத்தியம், dangerous lunacy.

எரி பொழுது, செவ்வான மிட்டு இலக்கும், பொழுது, the twilight of the setting sun when the sky is found red.

எரிப் பரங்கி, எரிச்சலே யுண்டாக்கு மோர் வகைப் பரங்கிப் புண், syphilis attended with burning sensation. The other kinds are—வெடிப் பரங்கி, தீராப் பரங்கி, etc.

எரிப்பு, எரித்தல், burning; 2. கார்ப்பு, pungency; 3. நெஞ் செரிவு, heart-burn

எரிப்புத் திட்டம், புடம் வைப்பதற்கு வேண்டிய சூட்டின் அளவு, the intensity or the relative degree of heat required for calcining medicine; 2. மருந் தெரிப்பதற்கு வேண்டிய நெருப்புத் திட்டம். இது தமிழ் வைத்தியத்தில் மூன்று விதமாகக் கொள்ளப்படும். அடியிற் கண்ட செய்யுளாலிது இனிது விளங்கும்,

"மூடியே வாலுகையின் மேலே யேற்றி
முசியாதே ஒருவிறகு தீப மாகும்
நாடியே இருவிறகு கமல மாகும்
நால்விறகு காடாக்கினி யாகும் பாரு
சாடியே விறகினிட திட்டம் கேளு
சாணீளம் இரண்டிவிரற் கனதி யாகும்".

the quantity of heat required for burning medicinal preparations on the oven. According to Tamil Medical science, it is classified under three heads as enumerated in the above stanza viz:—

1. தீ பாக்கினி, moderate fire spreading with flames.
2. கம லாக்கினி, a slow and small fire burning with flame of the shape of a lotus.
3. கா டாக்கினி, wild or spreading fire.

எரிப்பு மா, கார்ப் புள்ள ஓர்வகை மாம் பழம், an inferior variety of mango which is pungent to the taste.

எரிப் பூ, நெருப்பைப் போன்ற நிறமுள்ள பூ, a flower with the colour of fire; a red flower.

எரி மருந்து, புடமிட் டெடுத்த மருந்து, calcined medicine; 2. உறைப்பான மருந்து, a medicine pungent or corrosive; 3. அடுப்பி லிட்டு எரித்த தைலம் முதலிய மருந்துகள், medicated oils and medicines prepared by heating on an oven; 4. பாஷாணம், poisons or poisonous compounds; 5. உள்ளுக்குச் சாப்பிட அழற்சியையும் அல்லது வெளியிற் பூச எரிச்சலையு முண்டாக்கு மருந்து, a medicine causing inflammation when taken internally or burning sensation when applied externally.

எரி மலர், கலியாண முருக்கன் பூ, the flower of the Indian coral-tree.— Erythrina indica; 2. செந் தாமரை, red lotus — Nelumbium speciosum.

எரி மலை, கல்லும் மண்ணும் கலந் தருகிப் பிழிந்து, தீப்பற்றி எரியு மோர் மலை, a burning mountain in which stones and mud are converted and thrown out into a molten state called lava—Volcano.

எரிமலைத் தனம், எரிமலைகளின் சமீபத்தில் அகப்படும் கெந்தகம், sulphur which is particularly found in the neighbourhood of volcanoes.

எரி மாந்தம், குழந்தைகளுக்குச் செரியாமையினால் எரிச்சல் காணு மோர்வகை மாந்த நோய், indigestion in children accompanied with burning sensation of the body.

எரி முகம், சிவந்த முகம், red face; 2. சேங் கொட்டை, see எரி முகி; 3. கோப முகம் angry face or blushed face.

எரி முகி, சேங் கொட்டை மரம், marking-nut tree—Semicarpus anacardium. It is so called from the blistering nature of the nut.

எரிமுகி நெய், சேங் கொட்டையினின் றிறக்கு மோர் வகை மருந் தெண்ணெய். இது குட்டத்திற் குதவும், a medicinal oil prepared from marking-nut mixed with other ingredients and used in leprosy; 2. சேங் கொட்டை யெண்ணெய், oil extracted from the marking-nut.

எரி முட்டை, எரிப்பதற்காகத் தட்டிக் காய வைத்த பசு அல்லது எருமையின் சாணம், dried cow-dung cake used as fuel in Indian house-hold. See எரு முட்டை.

எரி முட்டை பீநாறி, வெதுப் படக்கி, a plant—Ballota disticha.

எரி முலை, பெண்களின் முலைக்காம்பு வெடித்து எரிச்சலை யுண்டாக்கு மோர் நோய், a disease in which the nipples are marked by fissures attended with a burning sensation—Mammillitis.

எரி முள்ளி, ஓர்வகை முள்ளி, a kind of solanum.

எரி மூத்திரம், உஷ்ணத்தினால் எரிச்சலோடு கூடி வெளி வரும் சிவந்த மூத்திரம், a high-coloured urine passed with burning sensation owing to excess of heat in the system; 2. எரிப்பு அல்லது காரமான மூத்திரம், alkaline urine; urine with a strong smell.

எரி மூலிகை, பட்ட விடத்தில் எரிச்சலை யுண்டாக்கு மோர் மூலிகை, a herbaceous plant whose touch or contact would cause burning sensation; 2. பச்சையாகப்

பிடுங்கிக் கொணர்ந்த அடுப்பிலிட எரியும் மூலிகை, a plant which can be burnt immediately after it is plucked i. e. even when it is green.

See அன் தெரிந்தான் பூண்டு.

எரி முன்று வர்ணத்தி, பன்றி முன், the spine of the porcupine. It is so called from its three colours viz.,-black,white and brown and from its causing burning sensation when pricked with.

எரியர், ஆடு தின்னுப் பாலே, which see.

எரியல், எரிதல், burning.

எரிய விட்ட மருந்து, நீற்றின பற்பம் அல்லது சிந்தூரம், a calcined oxide or red-oxide; 2. கெருப்பி லிட்டு எரித்த மருந்து, a medicine prepared by heating.

எரிய விழித்தல், கோபத்தோடே பார்த்தல், looking angrily.

எரி யாருடவசம், செய்யான், செம் பூரான், a species of venomous reptile—Centepede.

எரி யிடல், எரிய வைத்தல், to cause to burn; 2. கெருப்பு வைத்தல், to set fire; to kindle fire; 3. புட மிடல், to calcine a medicine.

எரி யிடுதல், see எரி யிடல்.

எரி யெண்ணெய், பிறருடைய கெட்ட பார்வை தன்னைத் தாக்காதபடி உபயோகிக்கும் காய்ச்சிய கல் லெண்ணெய். இவ் வெண்ணெயைக் காய்ச்சிய பிறகு, சோற்றி லூற்றி எரியும் போது தலையைச் சுற்றிப் பிறகு நாய்க் கிடப் படும், boiled gingelly oil used by the superstitious to get rid of the effect of an evil eye. It is generally poured into boiled rice and while burning in it, it is circled round and round the head thrice and then thrown to the dog for consuming it. See கண்ணெச்சிற் கழிக்கு தல்.

எரி யொளி மழுங்குதல், ஆகாயத்தில் சூரி யனைப் பார்க்கும் போது கண் கனத்துக் கலங்கி, நீர் வடித்து, புருவம், மூக்கு இவை களில் வலியை யுண்டாக்கு மோர் கண் ணோய், a disease of the eye marked by a feeling of heaviness and congestion of the eyes followed by a watery discharge with pain at the eye-brows and the nose. It is said to be caused by sun-light or by the gazing at the sun.

எரி வகல், அசம தாகம், which see.

எரி வண்டு, கண்ணி லடிக்கும் கருப்பு வண்டு. இது ஒரு அங்குல நீளம், ½ அங்குலம் அகலம், ஒரு விதமான மஞ்சள் நிறம் வரப்பெற்றது; மேலே 3 வரிகளும், 3, 4 புள்ளிகளு மிருக்கும். பட்ட விடத்தில் எரிச்ச லுண்டாகிக் கொப்பளிக்கும். இதைச் சாதாரண மாய் வெண்டைச் செடியில் காணலாம். இது கண் விழியி லடித்து வேதனையை யுண்டாக்கும். இது பட்ட விடமெல்லாம் எரிச்சலை யுண்டாக்குவதா லிதற் கிப்பெயர்.

நமது நாட்டில் அனேக விதமான எரி வண்டுகளுண்டு. அதைப் போலவே ஐரோப்பாவிலும் எரி வண்டுக ளுண்டு. அவைகளி லின்று தான் 'அக்னிப் பிளாஸ்திரி' என்று சொல்லும் எரிவண்டுக் களிம்பு செய்வதுண்டு. தமிழ் வைத்தியத்தில் இவ் வினத்தைப் புள்ளி வண்டு, கொழுஞ்சியடி வண்டு, குரு வண்டு, குழி வண்டு, நீரிற் சுழல் வண்டு, எரி வண்டு, கழுதை வண்டு என்ற ஆறு வகை களாகப் பிரிக்கப் பட்டுள்ள விஷயங்களும், அவைகளை வாதமுறையி லுபயோகிக்கும் விதங்களும் கூறப் பட்டுள்ளன, Telini fly or Blistering beetle.—Mylabris cichorii. The insect is about an inch long and ⅓ inch broad; the wing-case is of an obscure yellow colour with three large transverse black bands and 3 or 4 spots. It has medicinally irritant and vesicant properties. It feeds on the flowers of plants and especially on those of the common Vendy plant known as Lady's fingers. It strikes against the eye-ball causing severe smarting. It is so called from its blistering effect. There are several species of this in our country, even as there are in European countries. It is from some of these that the plaster of cantharides is prepared. Tamil Alchemical science deals with several species of this fly, such as the six-spotted beetle, the beetle living on orange trees, king-beetle, whirling-beetle, donkey-beetle and so on, and their uses in Alchemy and medicine.

NOTE.—The active principle contained in this fly is the same as that of the officinal cantharides and hence it is substituted for the Spanish fly.

The other species of this fly are the following:—Mylabris indica; M. melanura; M. humeralis; M. proxima; M. orientalis; Lytta assamensis; Epicauta nepalensis.

எரி வண்டுக் களிம்பு, அக்கினிக் களிம்பு, எரி வண்டையும்,ஒலிவை யெண்ணெயையும், மஞ்சள் மெழுகு,குங்கிலியம் முதலியவைகளையும் சேர்த்துக் காய்ச்சிய களிம்பு. இதை இரணங்க ளுண்டாக்கப் போடுவ தண்டு, an ointment of Cantharides consisting of Cantharides powder, yellow wax and olive oil—Unguentum Cantharidis.

It is prepared by infusing the cantharides in olive oil in a covered vessel for 12 hrs. and then placing it in boiling water for about ½ hr., to be strained and added to melted wax later on.

It is an irritant dressing for causing blisters and in issues.

எரி வண்டுக் காடி, எரி வண்டைப் பொடித்துக் காடியி லிட்டு வடித்த தெளிவு, vinegar of cantharides prepared by mixing the powdered cantharides in acetic acid and transferring the ingredients to a percolator—Acetum Cantharidis. It is employed only externally as a vesicant.

எரிவண்டு பிளாஸ்திரி, அக்கினிப் பிளாஸ்திரி. இது எரி வண்டைத் தூளாக்கி, மஞ்சள் மெழுகு, கொழுப்பு இவைகளை யுருக்கி அதிலிட்டு ஊட்டிய சீலை மருந்து, இதை இரணங்களை யுண்டாக்க வுபயோகிக்கலாம். அன்றியும், இருமலுக்கு மார்பிலும், பித்த மயக்கத்திற்குப் பிடரியிலும்,தலையிலும்,காது நோய்க்குக் காதின் பின் புறத்திலும், மண்ணீரல் வீக்கத்திற்கு வயிற்றிலும், கை, கால் கணுக்கள் முதலியவைகளின் வலிக்கு மூட்டுகளிலும், ரசம்பு வலிக்கு அவ்வவ் விடங்களிலும், வாத நோய்களில் கையிலானுல் பிடரியின் பேரிலும், காலிலானுல் முள்ளந் தண்டின் பேரிலும், போடுவ தண்டு. இதனுல் ரசம்பு இறுகும், a plaster steeped in cantharides powder, melted yellow wax, prepared lard and resin — Emplastrum Cantharidis. It is ordinarily used as a blistering agent. In cases of cough, it is used on the chest, in biliousness on the nape of the neck and on the head, for ear-ache on the back of the ear, for enlargement of the spleen, on the abdomen, for pain in the limbs on the joints, and for nervous complaints, on the affected organs or parts. In rheumatic pains of the limbs, it is applied on the nape of the neck if the arm is affected and on the vertebral column if the legs are affected. The unguent stregthens the nervous system.

எரி வந்தப் பரு, எரிச்சலே யுண்டாக்கும் சிலந்தி அல்லது பிளவை, carbuncle attended with burning sensation.

எரிவந்தம், எரிச்சல், burning sensation; 2. எரிவு, blistering heat; 3. மிக வெரிச்சலே யுண்டாக்கு மோர் நோய், any disease, such as carbuncle, biliousness etc., accompanied by burning sensation.

எரி வனம், சுடு காடு, cremation ground.

எரி வாதம், எரிச்சலே யுண்டாக்கு மோர் வகை வாத நோய், rheumatism accompanied by burning sensation.

எரி விரியன், கடிப்பதனுல் எரிச்சலே யுண்டாக்கு மோர் விரியன் பாம்பு, a kind of viper whose bite excites a burning pain.

எரிவு, எரிச்சல், which see; 2. உடம் பெரிவு, burning sensation felt all over the body in some diseases such as, biliousness diabetes etc. or in a particular organ or organs, such as the eyes, the hands, the feet etc. 3. அழற்சி, inflammation; 3. உடற் காந்தல், heat in the system.

எரி வுறல், கோபித்தல், to get angry.

எரு, சாணம், dung as of a cow; 2. வயலுக் கிடு மெரு, manure; 3. எருது, bull; 4. எரு முட்டை, cow-dung cake.

எருக்கங் கரி, எருக்கஞ் செடியி னடிக் கட்டையைக் கொளுத்தி அணித் தெடுத்த கரி, the charcoal obtained by burning the stem of Madar tree.

எருக்கங் காய், எருக்கன் செடியின் காய், the green fruit of the Madar plant.

எருக்கங் கொழுக் கட்டை, பிசைந்த அரிசிமாவை மூன்று அங்குல நீளமாக அடை தட்டி, சர்க்கரையும், திருவின தேங்காயும் கலந்த, வெந்த பருப்பு அல்லது பயறை அதனுள் வைத்து மடித்து அவித்த ஓர்வகைப் பல காரம், a pastry or tart, baked in steam. The rice flour is doughed into a paste, pressed flat and then expanded into a thin sheet about three inches in diametre. Baked dholl or other grains mixed with cocoanut and sugar is placed on it, covered and then steamed.

எருக்கங் கோல், மருந்து அல்லது மருந்துச் சரக்குகளை வறுப்பதற்காக வுபயோகிக்கும்

எருக்கன் செடியின் கொம்பு, a twig of the madar plant used for roasting medicine or other drugs.

எருக் கடி, எருக்கின் வேர், the root and the stem of the madar plant.

எருக் கத்தி, குருக் கத்தி, delight of the woods —Hiptage madablota.

எருக்கம், see எருக்கு,

எருக்கம் பஞ்சு, எருக்கங் காய் முற்றி வெடிப் பதனால் அதனின்று எழும்பிப் பறக்கும்பஞ்சு, the fine silky floss which surrounds the seeds of the madar plant. It springs out of the dried fruit when it bursts— French cotton.

எருக்கம்பா லடித்தல், புண், புரை முதலியவை களுக்கு எருக்கம்பா லிடல், applying the milk of the madar plant to wounds, sinuses etc.

என் பணி, உட்காதி னுள் பகுதி, அதாவது கம்பு. இது கேள்விக்கு ஓர் பிதானமான கருவி, a bony structure in the internal ear resembling a snail-shell — Cochlea. It contains the essential auditory organs.

என் பாதல், எலும் பாதல், formation of bone; 2. எலும்பாக மாறுதல், conversion into a bone—Ossification; 3. இசைத்தல், to be reduced to a skeleton.

என் பிணக்கி, see எலும் பிணக்கி.

என் பியல், எலும்பிற்கு இயற்கையான விதிகளைப் பற்றிக் கூறும் நூல், that branch of science which treats of the nature of bones and bony tissues—Osteology.

என் பியற்கை விதி, see என் பியல்.

என் பிலி, எலும் பில்லாத பிராணி, a small creeping creature without limbs or bones; 2. புழு, worm.

என்பு, see எலும்பு ; 2. புல், grass.

என்புக் கடினம், எலும்பு கெட்டி யாதல், the hardening of a bone—Osteosclerosis.

என்புக் கணு, see என்புப் புடைப்பு.

என்புக் கரி, எலும்பு சுட்ட கரி, see எலும்புக் கரி.

என்புக் கழலை, எலும்பிற் காணும் கழலை, a tumor developing on a bone—Osteoma.

என்புக் குழி, தொடைச் சந்துப் பொருத்து, the cavity which receives the head of the thigh bone—Acetabulam.

என்பு தின்றி, கழுதைக் குடத்தி, hyæna feeding chiefly on bones and putrified bodies; 2. ஓர் வகைப் பூடு, a small plant (*unidentified*); 3. எலும் புருக்கி, which see.

என்புத் தாபிதம், எலும்புக்குக் காணு மழற்சி, inflammation of a bone—Osteitis.

என்பு பற்பம், சுடுகாட்டில் பிணஞ் சுட்ட சாம்பல், the white earthy residue of bones which have been calcined—Bone-earth or bone-ash.

என்பு போஷணம், எலும்பு பருத்தல், எலும்பு புஷ்டி, nutrition of bone—Osteotrophy.

என்புப் பசை, எலும்புப் பசை, a glue obtained from bone; bone-glue—Osteocolla.

என்புப் புடைப்பு, எலும்பின் மேலுள்ள கணு, a broad eminence on a bone—Tuberosity; 2. எலும்பு புடைத்துக் காணல், a bony growth prejecting outward from the surface of a bone—Exostosis.

என் புருக்கி, see எலும் புருக்கி; 2. ஓர் வகைப் பூடி, a plant (*unidentified*) probably so called from its causing or curing disintegration of bones; 3. எலும்பைத் தின்றுக் கொண்டே போதல், eating up of bone; atrophy of bone—Osteanabrosis.

என்பு வளர்ச்சி, எலும்பு வளர்ந்து பருத்தல், hypertrophy or a morbid growth of the bone—Hyperostosis; abnormal ossification or formation of a bone or a bony substance—Osthexia. See also எலும்புப் புடைப்பு.

என்பு வாதம், எலும்புக்குக் காணும் வாத வலி, pain in a bone—Ostalgia.

என்பு வாதம், நாடி நரம்புகளுக்கு வியாதி காணுவதால் அதனருகேயுள்ள எலும்பின் கோளாறினால் தான் ஏற்படுவதாகக் கொள்ளும் ஓர் சம்வாதம், the logic of a disease of the bones. It is a theory which traces the derangement in the nerves and the blood vessels to defects in the bones adjoining them—Osteopathy.

என்பு விளக்கம், எலும்பின் விவரத்தைக் கூறும் நூல், that science which relates the description of the bones.

என்பு வெட்டி, எலும்பைத் தறிக்கு மோர் கருவி, an instrument for cutting bones.

என் புளுத்தல், எலும்பு உளுத்து அழிதல், soft necrosis and decay of the bone—Osteolysis.

என்புறி, கருஞ் சிந்தில், a black variety of moon-creeper—Tinospora cordifolium.

என் றவன், சூரியன், the sun.

என்றூழ், கோடை, summer; 2. சூரியன், the sun; 3. வெயில், sunshine.

என்ன வேர் விழியான், பத்திராட்சி, evening jasmine—Mirubilis jalappa.

ஏ

ஏக, ஒன்முன அதாவது ஒன்று அல்லது தனி மையைக் குறிக்க வரும் ஓர் உப சருக்கம், *uni* or *mono*, a prefix denoting one or single; 2. பௌதிக நூலில் ஏக வணுவைக் குறிக்கும், (*In Chemistry*), it means combining with one atom as in. ஏக பஸ்மிகாமிலம்; 3. இரண்டல்லாது ஒன்று அதாவது ஒரே பாகத்தைக் குறிக்கும் முதன் மொழி, a prefix indicating one or what is limited to only one part in contradistinction to two; 4. முழுமையான, forming the whole; wholly.

ஏகக் கம்பி, ஏகம்பச் சாரம், which see.

ஏக சக்தி, ஒரே சக்தி வாய்மை, the state or condition of having only one potency—Univalence.

ஏக சக்திகம், ஒரே சக்தி வாய்ந்தது, having the valency or potency of one — Monovalent.

ஏக சரம், காண்டா மிருகம், the rhinoceros.

ஏக சரும குட்டம், இது உடம்பு முழுவதிலும் தோலைத் தடிக்கச் செய்வதா லிப்பெயர். இதனால் உடம்பின் தோல் யானைத் தோலைப் போற் தடித்தும், தோலுரிந்து சிவந்தும், சொர சொரப்பாயும், திமிர், சர்வாங்க வீக்கம் முதலிய குணங்களோடு கூடிப் பார்வைக்கு விகாரமாயு மிருப்பதுடன், கை கால்களி லுள்ள விரல்கள் கனத்தும், குறைந்தும் காணும். இதையே சடைக் குட்ட மென்றும், யானைக் குட்ட மென்றும் அல்லது பெரு வியாதி யென்றும் கூறுவ துண்டு, a form of leprosy so called from the thickened patches of skin all over the body like the skin of an elephant. It is a constitutional disorder due to dryness and roughness of the skin and is marked by exfoliation of the epidermis, swelling and loss of sensation in the affected parts, wasting away or mutilation of the digits, etc.

NOTE—It is also said that in this form of leprosy the patches are very large and of a dark brown colour, oblong like the scales of a fish and rough like elephant's skin. Although it is a form of true leprosy — Elephantiasis graecerum, it also seems to include the symptoms of ichthyosis known as fish-skin disease.

ஏக சித்தம், ஒன்றின் பேரிலேயே வுள்ள நோக்கம், fixedness of purpose; concentration on one single object; 2. ஒரே மனது, one and the same thought.

ஏக சிந்தை, ஒரே மனது, oneness of the mind; uniform nature; 2. ஒரே நினைவு, only one thought—a condition in which the mind is preoccupied by one idea to the exclusion of others—Hyperprosexia.

ஏக சிருங்கம், see ஏக சரம்.

ஏக சுபாவம், ஒரே சுபாவம், one nature.

ஏக சூத்திரம், ஓர் வகை வைரியம், a variety of chalcedony much esteemed as a gem.

ஏகச் சாரம், see ஏகம்பச் சாரம்.

ஏக திருட்டி, see ஏக திருஷ்டி.

ஏக திருஷ்டி, காக்கை, the crow which has a look rather one-sided—Corvus splendens; 2. ஒற்றைக் கண் பார்வை, single-sightedness.

ஏக தேகம், யௌவனம், juvenility, youth; 2. பிரமசாரி, bachelor.

ஏகத் துவம், ஒருமைப் பட்டிருக்குந் தன்மை, the state or quality of being one—Oneness; unity.

ஏக நிற வுப்பு, see எவட் சாரம்.

ஏக பஸ்மிக, ஆண் சாரக்குச் சக்தி வாய்ந்த having but one base—Monobasic.

ஏக பஸ்மி காமிலம், உப்புச் சத்துக் குறைந்த திராவகம், an acid containing only one atom replaceable by hydrogen—Monobasic acid.

ஏக பத்திரிகை, வெண் டுளசி, white-basil.

ஏக பத்தினி விரதம், தன் பெண்சாதி யல்லாது வேறு பெண்டிரை நோக்குவ தில்லை யெனக் கொள்ளும் நிண்ணயம் அல்லது உறுதி, a vow taken by a husband not to face any woman except his own wife for purposes of sexual intercourse.

ஏக பந்தனம், ஏக சல வாயு சம்பந்த வஸ்து, a univalent radical or element—Monad.

ஏக பலம், ஒரே காயைக் கொடுக்கும் செடி, a plant yielding but one fruit; 2. ஒரே தடவை காய்க்கு மரம், a tree bearing fruit only once; 3. ஒரு பலம், one palam.

ஏக பாதம், ஓர் வித மதுன லீலை, (*In Erotic Science*) a kind of coitus or a posture in a sexual embrace in which the parties stand on one leg; 2. ஒரே பாதம் அலலது கால், a single foot or leg.

ஏக பாத வாதனம், நிஷ்டை நிலையி லொன்று அதாவது ஒரே காலில் நின்று கொடுந்தவம் புரிதல், a peculiar and rigorous posture in yoga-practice in which the yogi stands on one leg only during contemplation.

ஏக பானம், ஒரு வேளை மருந்து, one dose of medicine.

ஏக பிண்ட கருப்பம், கருப்பத்தில் ஒரே பிள்ளை யுண்டா யிருத்தல், pregnancy with a single fetus—Monocyesis.

ஏக புத்திரகம், ஒரே குஞ்சு பொரிக்கும் ஓர் பறவை, a species of bird laying one egg and hatching it but once.

ஏக போகம், இருவரு மொத்த போகம், (*In Erotic Science*) the sexual enjoyment felt by both with equal pleasure; 2. ஒருத் தன்மையான இன்பம், oneness of pleasure experienced by both; 3. சுக துக்கங்களைச் சமமாக அதாவது ஒன்றுக நினைத்தல், an ascetic or a mendicant who treats or looks upon pleasure and pain alike and is indifferent to both; 4. இன்ப துன்பங்களால் மாற்ற மடையாமை, to be unmoved by joy or grief; 5. நேரும் சம்பவங்களை விகற்பமின்றி அனுபவிக்கும் தன்மை, the act of quietly submitting to what happens without complaint about fate; 6. உடம்பிற்காவது மனதிற்காவது ஏற்படும் துன்பத்தைப் பற்றி உணர்ச்சி யற் றிருத்தல், insensibility to bodily or mental pain—Stoicism; 7. மனதின்படி அனுபவித்தல், enjoying wholly; enjoying to heart's content.

ஏக போசனப் பிரியம், ஒரே விதமான உணவின் மேற் கொண்ட இச்சை, the desire for only one kind of food; 2. ஒரே வேளை யுண்ணப் பிரியப்படல், desire to take meal only once in a day.

ஏக போசனம், ஒரே வேளை புசித்தல், the eating only of one meal a day—Monophagia; 2. தனிமையா யுண்ணல், eating alone; eating not in company but singly.

ஏகப் பிறவி, ஒரே பிள்ளையைப் பெறுதல், giving birth to only one offspring at a time—Single birth; 2. ஒரே தடவை பிறத்தல், (*In Philosophy*) to be born but once i.e., remaining without re-birth; 3. சகோதரர்களோடு பிறக்காது தனியாய் நிற்றல், இதை சாதாரணமாக 'ஒரி' எனச் சொல்வதுண்டு, to be born singly without brothers or sisters. See ஒரி.

ஏக மதி, ஒரே நினைவு, concentration of mind on a single subject. See ஏக சிந்தை; 2. பரிச வுணர்ச்சி, one sense as of touch as in ஓரறி வுயிர், which see; 3. ஒரே மாதம், only one month.

ஏக மயக்கம், ஒரே மயக்கம், monomania having only one delusion—Intellectual monomania.

ஏக மலடி, ஒரு பிள்ளையைப் பெற்று மலடியான பெண், a woman who had borne but one child—Unipara. See ஒற்றை மலடி.

ஏக மலடு, ஒரே பிள்ளையைப் பெற்றுப் பிறகு பிள்ளை யில்லா திருத்தல், giving birth to only one child and none afterwards. See கதலி மலடு.

ஏக மித்திரம், காரம், alkali.

ஏக மூலி, மாதுளை, pomegranate — Punica granatum.

ஏகம், திப்பிலி, long-pepper—Piper longum; 2. தனிமை, solitary; 3, ஒன்றிப்பு, unity; 4. ஒன்று, one; 5. முழுவதும், entireness.

ஏகம்பச் சாரம், வாத முறையில் உபயோகிக்கும் ஓர் வைப்புச் சரக்கு. தமிழ் நூலின்படி வெடியுப்பு கல்லுப்பு, அமுரி யுப்பு, சோற்றுப்பு, காசிச் சாரம், முதலியவைகளை யானை மூத்திரத்தில் கரைத்துப் பதமாய் எரித்திடச் சுண்டி அடியிற் பூர்த்து நிற்கும் உப்பு, an efflorescent salt used in alchemy. It is a prepared salt. It is obtained by dissolving saltpetre, rock salt, urine salt, common salt, and the mineral salt 'Kasicharam' (காசிச் சாரம்) in elephant's urine and boiling it up to a prescribed temperature, when a powder of salt will be left behind.

ஏகம்பச் சூலி, see ஏகம்பச் சாரம்.

ஏகம்பட் சாரம், ஓர்வகைத் தாதுப் பொருள், a mineral salt found in its native state.

ஏகம்ப பாஷாணம், see ஏகம்பச் சாரம்.

ஏக யாமம், உடம்பின் ஒரு பாகத்தை மட்டும் முற்றிலும் தாக்கு மோர் வாத நோய், paralysis of only one side or part of the body—Hemiplegia.

ஏக யிட்சிகம், எருக்கு, which see.

ஏக யோனி, ஒரே கருவிற் பிறந்த, born from the same womb or of the same mother

ஏகரம், முத்து, pearl ; 2. மருந்து, medicine.

ஏகல புச்சன், பைத்தியக் காரன், a mad man.

ஏகலாகிகம், திப்பிலி, long-pepper — Piper longum.

ஏகலிங்கச் செடி, ஆண் பூவாவது பெண் பூவாவது மட்டும் தனியாக வுண்டாகும் செடி, any plant having distinct unisexual flowers ; 2. ஆண் பூ ஒரு செடியிலும் பெண் பூ மற்றொரு செடியிலு முண்டாகும் செடிகள், plants having the unisexual male and female organs of flowers on different plants i.e, stamens on one plant and pistils on another—Dicœcians. It is opposed to Moncecian a plant having both the male and female flowers on the same plant.

ஏகலியம், கீரைக் கொட்டி, a plant (*unidentified*).

ஏகவத் தனிட்சியகம், பிர புண்டரீகம் அதாவது அல்லிக் தாமரை, white Indian water-lily—Nymphae lotus.

ஏகவத்தன், see ஏகவீத் தனிட்சியகம்.

ஏக வட்சி, see ஏகாட்சி.

ஏக வண்ணை, ஒரே நிறமான, having only one colour—Monochromic.

ஏக வறை, ஒற்றறை, that which has only one compartment—Unilocular.

ஏக வாசம், ஆல மரம், banyan tree—Ficus bengalensis; 2. தனித் திருத்தல், solitary life as that of a hermit. See also ஏகாந்தம் ; 2. ஏகவுணவு அதாவது ஒரு வேளை புசித்தல், taking food only once in a day ; one day-meal ; 3. முழுவதும் பரவிய வாசனை, smell spread all over ; diffused scent ; 4. ஏக மந்திரம், the sacred monosyllabic mantram 'OM'.

ஏக வாந்தி, ஒருமிக்கச் செய்யும் வாந்தி, vomiting taking place at a stretch ; 2. உட் கொண்ட மருந்தை அல்லது உண்ட வுணவை முழுவதும் வாந்தி செய்தல், vomiting medicine or food wholly.

ஏக விரிந்தம், ஓர் தொண்டை நோய், a disease of the throat.

ஏக வீக்கம், உடம்பு முழுமையும் பரவிய வீக்கம், an extensive swelling of the body.

ஏகவீரக் கள்ளி, மான் செவிக் கள்ளி, a kind of spurge, the leaves of which resemble the ear of a deer.

ஏக வீரம், மான், deer ; 2. ஓர் மரம், see ஏக வீரக் கள்ளி.

ஏக வைத்திய பாகம், எல்லா விதக் நோய்களுக்கும் பரிகாரமாக ஒரே மருந்தைப் பிரயோகித்தல், treatment by administering one and the same medicine as a curative for all kinds of diseases; 2. ஒரே மருந்தைப் பல விதக் நோய்களையும் கண்டிக்கும்படி த் தயாரிக்கு முறை, the process of preparing one potent medicine capable of curing many diseases.

NOTE—Such medicines are generally given by Vaidyans in different vehicles or mediums.

ஏகாகாரம், பொன், gold ; 2. ஒரே விதமான வுணவு, only one kind of food ; 3. ஒரு வேளை கொள்ளும் உணவு, see ஏக வாசம்.

ஏகாகி, தனித் திருப்போன், one who lives singly or seclusively.

ஏகாகிக சுரம், அன்று தோன்றி அன்றே நீங்கும் சுரம், a slight fever lasting only a day; transient fever—Ephemeral fever.

ஏகாகித சுரம், see ஏகாகிக சுரம்.

ஏகாக்கம், காக்கை, crow—Corvus splendens.

ஏகாக்கிர சித்தம், ஒரே நாட்டம், mind concentrated on only one object ; 2. மன வொருமை, oneness of mind.

ஏகாக் கிரம், see ஏகாக் கிரதை, one-pointedness i.e., fixing one's attention upon one object.

ஏகாக் கிருதை, ஒன்றிலேயே மனம் நாட்ட மடைதல், concentration of mind on one object in view.

ஏகாங்கம், சந்தனம், sandal — Santalum album ; 2. உடம்பின் பிரதான அவயவம், the most important member of the body i.e., the head; 3. தனிமை, solitude; retirement, 4. உடல் முழுமை, bood as a whole.

ஏகாங்க வாதம், ஒரே வுறுப்பைப் பற்றிய வாத நோய். வடமொழியில் இதற்குப் 'பட்சகாத வாதம்' என்று பெயர், paralysis of but a single part or limb—Monoplegia; 2. பக்க வாதம், paralysis of one side of the body —Hemiplegia ; 3. இளம் பிள்ளை வாதம். இது கர்ப்பக் கோளாறு அல்லது பிறவிக் குற்றத்தினால் குழந்தைகளுக் கேற்படும், hemiplegia taking place at birth or during intra-uterine life—Infantile hemiplegia. It is commonly known as birth palsy.

ஏகாங்கி, தனித் திருப்போன், one who leads a solitary life; an ascetic.

ஏகாங் குலம், மூத்திரம், urine.

ஏகாஞ் சலி, கை கொண்ட அளவு, handful.

ஏகாட்சர கக்கிசம், ஓர் மாந்திரீக நூல், a book on magic treating about only one mantric letter i.e., 'OM'.

ஏகாட் சரம், ஓம் என்னும் பிரணவ எழுத்து, the sacred mono-syllable 'OM' which is the one-lettered mantram.

ஏகாட் சரி கட்சம், ஓர் மந்திர நூல், a treatise on incantations. See ஏகாட்சரி கக்கிசம்.

ஏகாட்சி, ஒற்றைக் கண்ணன் அல்லது ஒற்றைக் கண்ணி, one having a squint-eye; 2. ஒற்றைக் கண் பார்வை, a deviation of one of the eyes from its proper direction, so that the visual axes cannot both be directed simaltaneously at the same objective point—Strabismus; 3. காக்கை, a crow with an oblique look.

ஏகாட்டிலா, வெள் ளெருக்கு, white-flowered giant swallow-wort — Calotropis gigantea (albiflora).

ஏகாதச ருத்திரக் குளிகை, சன்னிபாத சுரத்திற்குக் கொடுக்கும் மாத்திரை, a pill prescribed for typhoid fever or other kinds of fever involving delirium.

ஏகாத் துமம், அத்துவிதம், the doctrine of one universal spirit; the unity of spiritual essence.

ஏகாத்தும வாதம், அத்துவிதக் கொள்கை, the doctrine that only one being exists — Monism, as opposed to துவைதம், Dualism. See also அத்துவித வண்மை.

ஏகாந்த சிந்தை, தனித் திருக்கும் போ தண்டாகும் மனக் கருத்து, contemplation in solitude.

ஏகாந்த செந்தூரம், காந்தம் ஒன்றையே கொண்டு செய்யும் செந்தூரம், a red-oxide prepared from magnet alone.

ஏகாந்த சேவை, தனித் திருந்து வழிபடுதல், the solitary ritual worship.

ஏகாந்தச் செயல், தனிமையான இடத்தில் ஒண்டியாக விருந்து செய்யுந் தொழில், அதாவது யோகம், that which is done or practised in solitude namely yoga.

ஏகாந்தத் தியானம், தனிமையாக விருந்து செய்யும் தியானம். இதனால் ஐம்புலன்களின் தொழில்கள் இயக்க மடைந்து மனது பிரவிர்த்திக்காமல் நிலை பெறும். ஆகவே ஐம்

புலக் கதவு அடை படும். பிறகு தன்னையும் உலகத்தையும் மறந்து நிற்க, பிரகிருதி சுபாவ மேனீட்டினால் அனேக சித்திகள் கை கூடும். இதுவே சமாதிக்கு அடுத்த தாகையால் இத்தகைய நிலைக்கு வருவது சாதாரண மனிதருக்கு அசாத்தியமான காரியமாக முடியும். இந்நிலை யடைந்தவர்கள் மிகச் சிலரே, meditation in solitude. In this, the functions of the senses are inhibited and there comes a dead stop to the outward flow of mind and so the gates of the senses are closed to him. The adept forgets himself and the outside world and psychic powers bow down before him as the soul attains all powers of nature.

It is next to Samadhi and so it is indeed an uphill task for man to rise to the heights of meditation and realise his soul. Very few only have been able to accomplish this.

NOTE—Ancient history records the fact that great Seers such as Sri Krishna, Buddha, Kapila, Jesus and a few others only dived deep within themselves while following the introspection method of meditation.

ஏகாந்த நிட்டை, தனிமை யான இடத்திலிருந்து மனது அசை வற்றிருக்க அப்பியாசித்தல். இதனால் மனது வசப்பட்டுக் கவனத்தைத் தகுந்த வழியிற் செலுத்தி ஒருமையை யுண்டாக்க ஏது வாகும். இத்தகைய நிலையினால் மனது தன்னிலையி லிருந்து ஏற்ற மடைவதனால், சற்சித்தனேக ரூபித்து ஆத்மானந்தம் மேலிட்டுத் தன்னை மறந்து நிற்கும் நிலைமை ஏற்படும், concentration in solitude so as to bring about fixedness of the mind. It is that intellectual state in which the mind voluntarily surrenders itself to its own reflections and tends to excite a disposition to think and direct the attention to proper objects. This kind of profound medidation in solitude and silence no doubt exalts the mind above its own level and produces the most refined and sublime conceptions so as to make the soul experience the purest and most refined delight and almost lose the idea of existence in the intellectual pleasure it receives.

ஏகாந்த நித்திரை, யாரு மற்ற விடத்தில் தனிமையாக இருந்து கொள்ளும் நித்திரை அல்லது துறவறத்திற் புரியும் யோக நித்திரை.

நிதில் மனது வெளி விஷயங்களில் பிரவிர்த்திக்க இடமில்லாத காரணத்தினால், யாதொரு விகற்பமும் மடையாமல் தனது இயல்பை விட்டுப் பெயர்த்து நிற்கும். ஆகவே இதற்கும், இல்லறத்தில் அதாவது வீட்டில் பந்து மித்திரர்களுக்கு இடையே கொள்ளும் தூக்கத்திற்கும், பிக்க விந்தியாச முண்டு. ஏனெனில், இத்தகைய நித்திரையால் மனது நின்மல மடைந்து, நானா வட்டத்தில் பிரமத்தில் ஒடுங்கும் காலத்தில் அதீவு வினக்க மடைந்து, தன்னைத் தானறிய ஏது வுண்டாகும். ஆதலால் மனதை அசை வற்றிருக்கச் செய்து மெய்மறந் திருத்தலே யோக நித்திரையாகும். ஆகவே இதை, மனிதர் சாதாரணமாகக் கொள்ளும் நித்திரைக்குச் சமமாகச் சொல்ல எவ் வகையிலேனும் பொருந்தாது, silent sleep in solitude. It is quite distinct from that in the dome of the domestic society for, it is a perfect state of sleep in which the mind is completely withdrawn from external objects and it adapts to its own reflections and to the dictates of its own ideas.

It is a deep sleep in which the mind is carried away gradually to Brahmam and becomes identified with the truth and so the adept gets to his own Self. Therefore, sleep in solitude is to be regarded as the suspension of *psychoses*. It is a state of calmness of existence and thus it is differentiated from an ordinary sleep in the midst of Society.

ஏகாந்த நிலை, உலகத்தாரின் சம்பந்தத்தை விட்டுத் தனிமையாக விருக்குந் தன்மை. இதனுல் முழுவதும் துறந்து விடுதலெனப் பொருந்தாது, ஏனெனில், நாட்டினும் அல்லது அதைச் சார்ந்த கிராமங்களினு மிருந்து கொண்டும் இந்நிலையைச் சாதிக்கக் கூடும். கவனத்தை நல்ல வழியில் செலுத்துவதால் மனிதருடைய ஒழுக்கங்களினு லேற்பட்ட உண்மை யறிவு இன்னதென நன்கு விளங்கும். ஆகவே நமது நாட்டில் சித்தர்கள் ரிஷிகள் முதலிய மகான்க ளெல்லாம் தனிமையாக இருந்தே பெயரும் கீர்த்தியும் பெற்றார்கள். மேலெட்டினும், இவ்விதமாகவே சில பெரியோர்களும் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது, the state of remaining alone and that remote from Society. It does not necessarily mean to imply a total retreat from the world and its concerns. It may indeed exist amidst the tumultuous intercourse of an agitated city as well as in the peaceful shades of rural retirement. A true knowledge of human character is most likely to be acquired by directing the attention to proper objects.

The lives of great men such as the Siddhars, the Rishis and the others, remind us that they all gained their glory in solitude. Even among Western Scholars, Newton, Wordsworth, Pericles, etc. have all laid the foundation of their greatness in Solitude.

NOTE.—When the mind is not properly employed in this state, the dangerous passions rise into fermentations and produce a variety of eccentric ideas and irregular desires. So, it is essential to elevate one's thoughts above the mean consideration of sensual objects.

ஏகாந்தப் பிரியம், உலக விவகாரத்தை விட்டுத் தனிமையாக விருத்தற்குக் கொள்ளும் இச்சை. இது சாதாரணமாக ஆசாபாசங்களை அறுத்துப் பந்தத்தி னின்றும் விடுதலை யடைய வேண்டு மென்ற ஊக்கம் மேலிடுவதனுல் மனதிற் கேற்படும் ஓர் மனோ விச்சை. இத் தகைய விச்சையை மேனாட்டார் ஓர் வியாதி எனக் கருதுவார்கள், a desire for solitude from aversion to Society. It is a condition of mind in which one is looking forward to absolute freedom, as he cannot find any pleasure in earthly ties and relations and therefore does not hesitate to transcend them and begin to live a life of complete indifference to the environments.

In Western Science, it is looked upon as a sort of disease in which a man entertains such morbid desires—Apanthropy.

ஏகாந்தப் பேறு, ஓரிடத்தில் தனித் திருப்பதனுல் மன வொருமை யுண்டாகி அதனுல் ஏற்படும் பலன்கள். இவைகள் பல உள, அவையாவன, the advantages of solitude derived from the concentration of the mind. They are numerous, viz.—

1. அறிவை மூடிய அஞ்ஞானம் ஒழியும், the veil which obscured the intellect suddenly falls away.
2. மதியைக் கவர்ந்துள்ள இருள் நீங்கி, ஞானம் உதயமாகும், the clouds which dimmed the light of reason disappear.

3. ஆன்மாவைப் பற்றிய சஞ்சித கருமம் அதாவது கட்டுப் பட்ட வினை இலகு வாகும்,the painful burden of Karma which oppressed the soul is alleviated.

4. கவலை அறவே ஒழிந்து, சித்தனை மேலிடக் காரணை காட்சி யெல்லாம் கண்களுக்குப் புலப் படும், care flies away; imagination becomes more vivid and agreeable and interesting scenes present themselves to our view.

5. ஐம்புலக் கதவு அடை படும். ஆகவே பந்தத்தினின்று ஆன்மா விடு படும், the senses remain undisturbed and no external object agitates the soul.

ஏகாந்தமா யிருத்தல் தனிமையா யிருத்தல், to be secluded ; to be alone.

ஏகாந்தம், தனிமையான அல்லது தனித் திருக்கு மிடம்,

"இனித இனித ஏகாந்த மினித,
அதனினு மினித ஆதியைத் தொழுதல்"
(ஔவை.)

ஆகவே தனிமையில் வசிப்பதனால், குணம், நடை முதலிய ஒழுக்கங்கள் சீர்திருத்தப் பட்டு, மனதி லுதிக்கும் எண்ணங்கள் ஒரு மைப்பட ஏது வாகும்,அன்றியும்,நல்லொழுக் கம், பக்தி,முதலியவைகள் கை கூடுவதுடன், மனதான து பரிசுத்த நிலையை யடைந்து, மனே பாவனை மேன் மேலும் விருத்தியாகிச் சாதாரண மனிதர்களின் அறிவிற்கு எளி தில் உதிக்காத எண்ணங்க ளெல்லா முதிப்ப தூடன், மேம்பட்ட சக்திகளும் சித்தி யாகும். ஏகாந்தத்தினாலே கடவுளிடத்தும் தேவர் களிடத்தும் சம்பந்த மேற்படும், solitary or secluded place -- Solitude. The above is a stanza quoted from Avvaiyar, a celebrated poetess in Tamil and it advocates that solitude is sweet and pleasant, and more would it be when meditated on the Supreme Being.

So, solitude is the only place in which the character of men can be properly developed. It extracts the various propensities of the human heart and unites them into one. It creates simplicity of manners and leads the mind to meditation and to those sources whence the grandest conceptions are most likely to flow. It elevates the mind and inspires one with notions too refined and exalted for the level of common life. Solitude is th soul's opportunity to commune with God and Angels.

NOTE.—Renouncing all kinds of business and employment, the Gymnosophists, the most ancient solitary sect of India, retired to mountains or the silent banks of rivers where they lived in contemplation of philosophic truths.

ஏகாந்த வட்சரம், ஓம் என்னும் மந்திர வெழுத்து, the sacred mono-syllabic letter 'OM',

"ஏகாந்த வட்சரத்தை லட்சம் ஓத"

ஏகாந்த வாழ்வு, துறவியின் வாழ்க்கை, the life of an ascetic ; 2. தனித் திருத்தல், solitary life; life in seclusion.

ஏகாந்த விச்சை, see ஏகாந்தப் பிரியம்.

ஏகாந்த வினமை, see ஏகாந்த வின்பம்.

ஏகாந்த வின்பம்,தனிமையா யிருத்தலா லுண்டாகும் அக மகிழ்ச்சி. இது பல விதமாகக் கொள்ளப்படும் அவை யாவன :—the pleasures of solitude. They are several viz.—

1. சித்தின்பத்தை விட்டுப் பேரின்ப மடைதல், experiencing the knowledge of the Higher-self and the sacrifice of the lower-self.

2. வியாகுலத்தை அறவே ஒழித்து மனே சாந்த மடைதல், attaining the peace of mind which is the highest happiness or enjoyment in this world.

3. ஆயுள் விருத்தியாகி நீடித்து வாழல், prolonging the duration of existence.

ஏகா யநன், ஒரே மன துடையோன், one having oneness of thought ; 2. அசையா மன துடையவன், one with firmness of mind.

ஏகாயிக சுரம், தினம் காணும் சுரம், fever attacking daily.

ஏகாரம், பொன், gold ; 2. பலா மரம், jack-tree—Artocarpus integrifolia ; 3. பாகல், spiked bitter cucumber — Momordica charantia ; 4. பழு பாகல், bristly balsam pear—Momordica dioica.

ஏகார வல்லி, பழு பாகல், balsam pear—Momordica dioica ; 2. பலா, jack tree — Artocarpus integrifolia ; 3. பாகல், bristly balsam pear, See ஏகாரம்.

ஏகாரியம், வெக்காலி, a tree (*unidentified*).

ஏகார்த்தம், ஒரே வஸ்து, one and the same object.

ஏகாலி, சவர்க்காரம், fuller's earth; 2. சோப்பு, soap.

ஏகி, கைம் பெண், a widow so named from her being left solitary.

ஏகிட பாகம், see ஏகிடா வகம்.

ஏகீ பவம், ஒருத் தன்மை, oneness; the state or quality of being one.

ஏ கேந்திரியச் செயல், கன்மேந்திரியங்களுக்குச் செல்ல வொட்டாது, மனதைத் தடுத்தல், (*In Philosophy*) the act of preventing or shutting out the mind from entering the sense organs.

ஏகை, இரேகை, (*In Palmistry*) the lines on the palm.

ஏகோபித்தல், ஒரு மனப் படுதல், union in feelings, sentiments, etc.—Concordance.

ஏகோன் மத்தம், ஒரே வஸ்து அல்லது விஷயத் தில் மனது பிரவேசித்தலினு ளுண்டாகும் மனப் பிரமை, that form of mania in which the mind is absorbed by one idea —Monomania.

ஏக்க மயக்கம், ஏக்கத்தினு லேற்படும் மயக்கம், the stupor caused by anxiety or mental distress—Essential vertigo.

ஏக்கம், ஒரே விஷயத்தில் மனது நாட்ட மடைந்து அடையும் துன்பம், mental distress with regard to a particular thing; a morbid anxiety; 2. சஞ்சலம், to wear away with a kind of misery; 3. சோர் வு, languishing; 4. கவலை, care; nervous anxiety; 5. திடுக்கிடல், sudden fear; 6. அதிர்ச்சி, a trembling of the limbs, as in paralytic affections—Trepidation; 5. மன மயக்கம், stupor caused by grief.

ஏக்கம் பிடித்தல், தக்கம் மிகுதல், to be overpowered by grief; 2. ஏங்குதல், languishing at the death of one; to wear away with any kind of misery; 3. மனந் தளர் தல், to be in low spirits.

ஏங்கல், குழந்தை கட்கு வரு மோர் வகைக் காச நோய், a kind of asthma affecting the children; 2. ஏக்கம், which see; 3. ஏங்கு தல், pining; depression of spirits by grief.

NOTE.—The term is generally used for children who pine away thinking of the mother or the others they are fond of and whom they badly miss.

ஏங்குதல், இளைத்தல், getting emaciated through anxiety and mental distress; pining; 2. அழுதல், weeping; 3. இரக் கல், wailing. It is said of a devotee whose mind is always longing for God, as in

"ஏங்குதே நெஞ்ச மய்யோ"

(தாயுமானவர்).

ஏங்குறல், விசன மடைதல், the state of being sorrowful or thoughtful.

ஏசம், வெண் கலம், bell-metal.

ஏசவம், சண்பகம், golden-flowered champak; Indian Magdolina—Michelia champaca.

ஏசி, இளி, parrot—Palacoriniae.

ஏசிடாவகம், அதி மதுரம், Indian liquorice root.

ஏ டகணி, ஓலை யீர்க்கு, the nerve or the rib of a palmyra leaf.

ஏ டகப்பை, ஏடு அல்லது வண்டலை வழிக்க வுபயோகிக்கு மகப்பை, a ladle used for removing the scum of liquids —Skimmer.

ஏடகம், ஆட்டுக் கடா, the he-goat; 2. தென்னை, cocoanut tree; 3. பூ விதழ், the leaf or the petal of a flower; 4. பனை மரம், palmyra tree; 5. ஆண் பனை, palmyra tree (male) bearing no fruit—Borassus flabellifer.

ஏடலகம், அதி மதுரம், Indian liquorice root; 2. குன்றி, crab's eye—Abrus precatorius.

ஏடல், கருத்து, intention; thought.

ஏடன், செவிடன், a deaf man.

ஏடணம், வைத்தியப் பரிட்சை, medical examination.

ஏடு, கண்ணிமை, the eye-lid; 2. பூ விதழ், the petal of a flower; 3. ஆடை, scum; 4. பா லாடை, cream; 5. உடம்பு, body; 6. பூ, flower; 6. பனை யேடு, the leaf of the palmyra treee.

ஏடு கட்டல், ஏடி படர்தல், formation of a scum on the surface of any liquid.

ஏடுக முருங்கை, மலை முருங்கை, hill moringa —Hedysarum sennoides.

ஏடு தயிர், ஆடை நீக்காத் தயிர், curd from which cream is not removed.

ஏடு படர்தல், ஆடை யுண்டாதல், formation of coating on the surface of any liquid.

ஏ டெடுத்த பால், ஆடை யெடுத்த பால், skimmed milk.

ஏடேகப் புண்டரீகம், ஒரிதழ்த் தாமரை, monopetalous flower — Ionidium suffruticosum. Lotus with lateral petals appearing as one.

ஏட்டை, ஆசை, desire; 2. தளர்வு, weakness or reduced strength; 3. இளைப்பு, pining; growing lean with longing for something.

ஏட்டைப் படல், இளைத்தல், to be reduced.

ஏட்டைப் பருவம், இளம் பருவம், the period of youth; youth-hood; 2. தளர்ந்த பருவம், helpless state; the time of adversity.

ஏணகம், ஓர்வகைக் கருப்பு மான், a species of black deer.

ஏணக் கரி, என்புக் கரி, bone-black; ivory black.

ஏண பற்பம், எலும்பு நீறு, bone-ash.

ஏணம், பெருங் கண்களையுடைய கருப்பு மான், a black deer having prominent large eyes; 2. மான் தோல், deer-skin; 3. வலி, strength; power.

ஏண சினம், மான் தோல், the skin of a deer.

ஏணி, மான் கன்று, the young of a deer; 2. மான், an antelope.

ஏணிச் சீகு, ஓர் வகைப் புல், a kind of millet grass—Milium romosum.

ஏணி பாதம், ஓர் பாம்பு, a kind of snake; 2. ஓர் விஷப் பூச்சி, a poisonous insect. Title probably from their foot resembling the rung of a ladder.

ஏணி வைத்த தன்மை, மேலேறுதற்குச் சுலபமான வழி யுண்டாக்குந் தன்மை, the method of facilitating the ascension as in Spiritual attainment or advancement.

ஏணை, ஆடு, sheep.

ஏண், வலி, strength, power.

ஏதகசம், தகரை, ring-worm plant — Cassia Tora.

ஏதம், மான், deer; 2. துன்பம், suffering, distress; 3. ஆடு, sheep.

ஏதனம், மூச்சு விடல், respiration; discharging air from the lungs; 2. அரிதாரம், orpiment.

ஏது, காரணம், cause; origin; final cause.

ஏதுகம், குழந்தை கட்குக் காணு மோர் வகை ஆசனப் புற்று, a peculiar blister at the anus in children probably Pemphigus due to congenital syphilis; 2. சங்கஞ் செடி, a shrub—Monetia barlerioides.

ஏத்தம், இடவாகம், which see.

ஏத்திரி, சாதி பத்திரி, mace or the pulp of nutmeg—Myristica fragrans.

ஏந்தல், மலை, mountain; 2. சலோதர சன்னி பாதம், a delirious fever in cases of dropsy or in pneumonia from ascites; 3. வாதம், rheumatism; 4. ஓர் மதன லீலை (*In Erotic Science*) a posture in sexual intercourse.

ஏந்திரம், கண் கட்டு வித்தை, magic.

ஏந்துகல், ஆமணக்கு, which see.

ஏந்து குழந்தை, கைக் குழந்தை, child in arms.

ஏந்து கொம்பு, யானைக் கொம்பு, elephant's tusk so called from its curvature upwards.

ஏந்தெழில், மிக்க வழகு, excessive beauty.

ஏப்பச் சுரம், ஓர் வகைச் காய்ச்சல். அது ஏப்பம், வாந்தி, மார் பெரிச்சல், தலை வலி, தாகம், நெஞ் சுலர்வு, பிரமை, மந்தாக்கினி, மல பந்தம், தலைக குத்தல், கண்ணில் வலியுடன் நீர் வடிதல், முதலிய குணங்களைக் காட்டும், a fever characterised by gastric disturbances such as constant belching, vomiting, burning pain in the chest, head-ache, stupor, dull appetite, constipation, neuralgic pain in the head and the eyes, painful discharge of water from the eyes etc.

ஏப்ப மெடுத்தல், see ஏப்பம் விடல்.

ஏப்பம், தேக் கெறிவு, noisy eructation of gas after a meal, belch.

ஏப்பம் பறிதல், see ஏப்பம் விடல்.

ஏப்பம் விடல், ஏப்பம் விடுதல், to eject as of wind, from the mouth—Eructate.

ஏமகாரி, கொக் இறகு, crane's feather.

ஏமங் கோலா, மயில் மீன், grey peacock-fish; — Histiophorus immaculatus; 2. ஓர் வகைக் கடல் மீன், grey sword-fish—Histiophorus breviostris.

ஏம சிங்கி, மிருதார சிங்கி, litharge or oxide of lead—Plumbi oxidum; 2. இரத்தச் சிங்கியோடு மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் வகை வைப்புப் பாஷாணம், a poisonous compound prepared from red-lead mixed with other ingredients.

ஏமசிங்கி வைப்பு, தாரம், லிங்கம், கெந்தி, துரிசு, கார்காசம் இவைகளைப் பொடித்துச் செப்பினில் மூடி யெரிக்க வுண்டாகு மோர் வைப்புப் பாஷாணம், (மச்ச. 800.), a poisonous compound of lead obtained by burning orpiment, red sulpheret of mercury, sulphur, copper acetate and black lead in a closed vessel.

ஏம சித்தி, வாத முறையில் உண்டாகும் சித்தி, success attained in alchemy.

ஏம சிலை, உபரசச் சத்தி லொன்று அதாவது பொன் னிமிளை, one of the 120 kinds of natural substances enumerated in Tamil Medical Science. It is a kind of gold-ore used formerly in Alchemy.

ஏம சீவன், சவர்க்காரம், fuller's earth which is a life-giving factor in gold.

ஏம தங்கி, பத்மினி சாதிப் பெண், the first of the four classes of women divided according to lust.

ஏம தூத்தம், கொக் இறகு, stork's feather; 2. பொன் தூத்தம், gold sulphide.

ஏம தூரி, பொன் னூமத்தை, yellow-coloured datura, see ஊமத்தை.

ஏமத்தி, பொற் றொட்டிப் பாஷாணம், a poisonous compound prepared in a gold cup, c.f. செப்புத் தொட்டிப் பாஷாணம்.

ஏமத் திரவம், பொன் னீர், gold fluid; 2. பொன் சத்து, essence of gold; 3, ஏலம், cardamom — Elettaria cardamomum; 4. வாதத்திற் குபயோகிக்கும் செய நீர், a pungent liquid employed for preparing a universal solvent used in the transmutation of base metals into gold.

ஏமத்திற் பிறந்தோன், பொன்னில் உற்பத்தி யான வுப்பு அதாவது ஏகம்பச் சாரம், a salt probably so termed for the reason that it is said to be found among ores in gold mines.

ஏமத் தூரி, பொன் னூமத்தை, yellow-coloured datura.

ஏமத்தூர், காட் டாமணக்கு, physic-nut — Jatropha curcas.

ஏமத்தைத் தங்க மாக்கி, பொன் னூமத்தை, இது மாற்றுயர்வு வேதைக் குபயோகப் படுவதினு லிப் பெயர், gold-coloured datura. It is so called because the plant is said to be capable of converting alloy gold (22 carats) into a refined gold of a higher standard, prabably 24 carats.

ஏம நாமம், பொன் னூமத்தை, see ஏமதூரி.

ஏம நிமிளை, பொன் னிமிளை, gold-pyrites; yellow-coloured bismuth.

ஏமந்தம், பனி காலம், dew season.

ஏம பங்கம், கிச்சிலி, orange—Citrus aurantium (nobilis).

ஏம பத்திரம், மலை யத்தி, downy climbing cluster fig — Ficus macrocarpa. Title from its yellow leaves; 2. மலை யாத்தி, a mountain tree—Bauhinia Malabarica.

ஏம பரிதம், குதிரை, horse.

ஏம பாதிதம், கள்ளி, spurge — Euphorbia (genus).

ஏம புட்பம், பொன் முல்லை, golden jasmine — Jasminum humile; 2. அசோகு, which see; 3. செண்பகம், yellow champak—Michelia champaca; 4. மலை முல்லை, mountain jasmine—Jasminum angustifolium.

ஏம புட்பி, ஆவாரை. இதற்கு மஞ்சட் பூ வள்ள தாலிப் பெயர், tanner's cassia—Cassia auriculata; title from its yellow flowers.

ஏம பேதி, கற்கடக பாஷாணம், a mineral poison. It is one of the 64 kinds contemplated in Tamil Medical Science.

ஏம மணல், பொன் மணல், gold ore; gold alluvium.

ஏம மலை, பொன் னிளையும் மலை, mountain containing gold-ore.

ஏம மாட்சிகம், பொன் னிமிளை, gold-pyrites.

ஏம மாஞ்சன், சூத பாஷாணம், a poisonous mercurial compound forming one of the 64 kinds described in Tamil Medicine.

ஏமம், இராத்திரி, night; 2. உன்மத்தம், bewilderment; any illusion; 3. பொன், gold; 4. மயக்கம், stupor; giddiness; 5. தங்கம், refined gold; 6. விபூதி, sacred ashes.

ஏம ரசக் களங்கு, அயச் செம்பும் அதற்குப் பாதி வங்கமும் நாகமும் சேர்த்துக் கார மிட்டு உருக்க மூன்று மொன்றாய் உருகி யுண்டாகுங் களங்கு. இது வாதத்திற் குபயோகப்படும், the product obtained by melting an alloy consisting of two of copper (extracted from a compound of iron by a special process), one of lead and one of zinc with borax, in a strong crucible to a required temperature. It is used in Alchemy for transmuting metals.

ஏம ரசத் தூறை, ஏம ரசம் வைப்பு முறை, the secret method of preparing an alchemical compound with mercury as a chief ingredient. It is capable of converting base metals into gold; 2. பொன், இரசம் இவைகள் சேர்ந்த ஓர் உயர்ந்த செந்தூரம், a superior red-oxide prepared with gold and mercury.

ஏம ரசம், நெருப்பிற்கு ஓடாத படிச் செய்து முடித்த இரச வெண்ணெய், mercury converted into a semi-solid state so as to stand the test of fire; a kind of colloid mercury used in Alchemy.

ஏமரச வெண்ணெய், சூத வெண்ணெய், mercury converted into a semi-solid for using it in alchemy—Colloid mercury.

ஏமலி, see எமலி; 2. திலகம், a mark put on the forehead.

ஏமல், முதிரை, அதாவது அவரை, கொள் முதலியன, grain-plant, such as bean. gram etc — Cereal; 2. மனக் கலக்கம், confusion of mind.

ஏம வதி, கடுக்காய், gall-nut — Chebulic myrobalan; 2. வசம்பு, sweet-flag — Acorus calamus.

ஏம வாரி, மலைக் காளான், hill fungus.

ஏம வித்து, நாக மணல், zinc-ore; 2. ஈய மணல், tin-ore.

ஏமற் கோனியம், முதிரைக் கடலை a species of pulse like bengal gram.

ஏமனூ, see எருமை விருட்சம்.

ஏமனூ ருதை, எருமை, buffalo. Title from being used as a means of conveyance by Yama, the God of death.

ஏம னீர், குமரி நீர், menstrual blood of a young woman; 2. பொன் னீர், any fluid containing gold in solution; 3. மஞ்சள் நிறமான மூத்திரம், higy-coloured urine; 4. இழிந்த வுலோகங்களைப் பொன்னாக மாற்றக் கூடிய காய சித்தியானவர்களின் மூத்திரம், urine capable of transmuting base metals into gold. It refers only to the urine of those who have rejuvenated their system by habitually taking internally chemic-poisons.

ஏமன் கலப்பு, ஆடு தின்னாப் பாளை, worm-killer—Aristolochia bracteata.

ஏமாங்கம், பொன்னிறம், gold colour; 2. கருடன், Brahminy kite; 3. பருந்து, hawk.

ஏமாங் கிஷம், பொன் னிமிளை, iron-pyrites occurring in dark yellow nodules with a golden lustre.

ஏமாந்த கோங்கை, விம்மிய முலை, a distended breast through lust or by the mere touch of a male.

ஏ மாப்பிரகம், பொன் னப்பிரகம், gold-coloured mica—Phlogophite.

ஏமின் கோலா, ஓர் வகைக் கோலா மீன், a garfish or garpike.

ஏரகம், ஆடு, sheep.

ஏரகை, பெண் ஆடு, she-sheep.

ஏரங்கம், ஓர் வகை மீன், a kind of fish?

ஏரஸ் மரம், ஓர் வகை மேனாட்டு மரம், cedar-wood tree.

ஏரணம், ஆமணக்கு, castor plant — Ricinus communis.

ஏரண்டத் தைலம், ஆமணக் கெண்ணெய் அல்லது விளக் கெண்ணெய், castor-oil.

ஏரண்டத் தைல யோகம், ஆமணக் கெண் ணெயை உட்கொள்ள வேண்டி அத்துடன் பருகும் சிற்சில முட்டிக் கஷாயம், a preparation consisting of a mixture of the decoction of galangal and castor oil for taking internally.

ஏரண்ட புட பாகம், ஆமணக்கு விதைகளின் பருப்பைப் பசும்பாலில் வேகவைத் துலர்த்தி மாவு போலரைத்து நெய்யிற் கலந்து கடைச் சரக்குகளைச் சம இடையாகச் சேர்த்துச்சர்க் கரைப் பாகில் இளறி அப்பிரக பற்பத்தோடு உட்கொள்ளுவதற்காகத் தயாரிக்கப் பட்ட

வோர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic preparation forming a vehicle intended to be taken with calcined talc. It is prepared in the folloiwng way—the kernals of the castor seeds required for the purposes are boiled in cow's milk. They are then dried and made into a fine powder to which are added ghee and the prescribed bazaar drugs in equal weight to the original powder and the whole is then boiled in syrup sufficiently.

ஏரண்ட மூலாதிக் கியாழம், ஆமணக்குக் காய், ஆமணக்கு வேர், இவைகளுடன், வேறு மூலிகைகளின் வேர்களையும், கடைச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரித்த கஷாயம், a decoction prepared with castor seed, and castor-plant root as chief ingredients along with the roots of other prescribed plants and bazaar drugs.

ஏரண்டம், ஆமணக்கு, castor plant; 2. கண்ட பேரண்டம், the two-headed bird supposed to have lived in olden days ; 3. வழலை, (*In Alchemy*) a secret term for elixir prepared from fuller's earth.

ஏரண்டாகி, பே ராமணக்கு, see under ஆமணக்கு.

ஏரண்டாதிக் கியாழம், ஆமணக் கெண்ணெயுடன் பருகுவதற்காகத் தயாரிக்கும் கஷாயம், decoction intended to be taken along with castor oil.

ஏரண்டி, see ஏரண்டை.

ஏரண்டை, திப்பிலி, long-pepper — Piper longum.

ஏரத்தை, பிடரிக் காம்பு, a shrub (*unidentified*).

ஏரம், சத்திச் சாரம், a powerful alchemical salt prepared as per process laid down in Tamil Medicine. It is opposed to சிவ சாரம், which see.

ஏ ரரத்தை, பே ரரத்தை, greater galangal—Alpinia galanga (major).

ஏரலி, கொடிக் கள்ளி, a kind of spurge known as creeping milk-hedge—Sarcostemma brevistigma.

ஏரல், இளிஞ்சல், a bivalve shell-fish — Mussel.

ஏரா, see ஏராக் கள்.

ஏராக் கள், பனை மரத்துப் பாளையி லிருந்து இறக்கும் பனஞ் சார், அல்லது பதனி. இது தித்திப்பாயும், நீராகாரத்தைப் போலு மிருக்கும், கள்ளைப் போல் மயக்க மூண்டாக் காது. இதற்கு மருந்துக் குண மூண்டு. இதை வெயிற் காலத்திற் குடிக்கக் குளிர்ச்சியைத் தரும், a sweet sap extracted from the spathe of the palmyra tree. It is mild and resembles rice-water but possesses medicinal virtues. It forms a cool-drink in summer.

ஏரிக் கரைக் காட்டா மணக்கு, ஓர் வகைக் காட்டா மணக்கு, adul-oil plant—Jatropha glandulifera. See under ஆமணக்கு.

ஏரி நீர், ஏரியின் நீர், இது வாயுவை விருத்தி செய்யும், lake water which tends to increase the wind in the system ; 2. ஐங் காலச் செய நீர், an unknown liquid-preparation used in alchemy.

ஏரிப் பிண்டம், காக்காய்ச் சிப்பி, black oyster—Rock-oyster.

ஏரியல், வன்னி மரம், suma tree — Prosopis spicigera.

ஏரிய வீரி, சவ்வீர பாஷாணம், a poison equivalent to corrosive sublimate — Hydrargyrum chloridum.

ஏரியால், கல் உப்பு, natural sea-salt.

ஏரியில் வளர்ந்த பிண்டம், கும்பிடு சிப்பி, a bi-valve shell-fish commonly found in tank beds.

ஏரி வாவா, ஏரிகளி லுள்ள ஓர் வாளை மீன், a water-fish found in lakes — Wallago atten.

ஏர், அழகு, beauty ; 2. சற் சீரகம், cummin seed—Cuminum cyminum.

ஏலக் காய், ஏலம், அதாவது ஏலச் செடியின் காய்கள். இது கடையில் விற்கு மோர் வாசனைச் சரக்கு, இதன் தோல் வெண்மையாயும், விதை கருப்பு அல்லது சாம்பல் நிறமாயும், வாசனை பொருந்தியதாயு மிருக்கும், the seed of the cardamom plant—Amonum cardamomum. It is an aromatic drug sold in bazaars. The capsules are white and the seeds inside are either black or gray.

ஏலக் கை, கற் கோவை, a hard species of caper—Bryonia (genus).

ஏலத் துவயம், மலை ஏலம், a large species of cardamom; hill cardamom; 2. இரு வகை யேலம், the two kinds of cardamoms.

ஏலபிலி, கடுகு, mustard-seed — Sinapis niger.

ஏலம், ஏலக் காய், இதன் செடி 6-9 அடி உயரம், இலை 1-2 அங்குல நீளம். பூக்கள் தனித் தனியா யிருக்கும். விதைகள் தோலி னுல் மூடப்பட் டிருக்கும். ஒவ்வொரு காய்க் குள்ளும் அனேக அரிசிக ருண்டு. இது பயிராக்கப் படும் சில விடங்களில் இது தானு கவு முளைக்கும். கா யுண்டாக, கான்கு வரு ஷம் செல்லும், பிறகு ஏழு வருஷம் வரையி லும் பலன் கொடுக்கும்.

நிறம், இடம் முதலியவைகளைக் கருதி இதில் பற்பல தினுசுகள் இருப்பினும், பொதுவாக இது காட்டேலம் அல்லது பெரிய ஏலம், சிற் றேலம் அல்லது ஏலரிசி யென அடியில் கண்டபடி இருவகைப் படும். பெரிய ஏலத் தின் அரிசி சிகப்பாய் இருக்கும். சிற் றேலம் சில நிறமாயும், சில சமயங்களில் சாம்பல் அல்லது கருப்பு நிறமாயும், மிக்க வாசனை யுள்ளதாயு மிருக்கும். காட்டேலம், கல்கத் தா, ஜகராபாத், பம்பாய் முதலிய வடதே சங்களிற் கிடைக்கும். சிற் றேலமோ, தென் தேசங்களுள் மலையாளத்தில் மிகுதியாகப் பயிராகும். கடைகளிலும் விற்கப் படும்.

இதைக் கறி வகைகளிற் சேர்ப்ப துண்டு. ஏலரிசி மருந்துகளில் மற்றச் சரக்குகளோடு சேர்க்கப்படும். தாம்பூலத்துடனும் அருந் தலாம். குடல் நோய்க்கும், வாந்தியை நிறுத் தவும் கஷாயமாக உபயோகிக்கலாம். வாச னைக்காகப் பலகாரங்களிலும் சேர்ப்ப துண்டு. இது வாய் காற்றத்தைப் போக்குவ தும ன்றி, வயிற்றுப் பொருமல், உஷ்ண பேதி, பித்தா திக்கம், முதலியவைகளையும் சாந்தப் படுத் தும், cardamom — Elletaria cardamomum. The plant is 6-9 ft, high; enveloped in sheaths; leaves 1-2 in. long; flowers alternate and solitary at each point; pale greenish-white; seeds numerous; cultivated or gathered wild. It takes the plant four years to attain its full height when it begins to bear fruits and continues to yield till the seventh year.

Although there are different kinds considering the colour, the place of origin etc., it generally consists of only two varieties viz—the greater or the jungle cardamom and the smaller cardamom, as mentioned below. The seeds of the first kind are red and those of the second kind are brown or sometimes grey or black with slight bitter taste and camphor smell. The bigger variety will be found in Calcutta, Hyderabad, Bombay and other places in the North, while the other smaller variety is grown in S. India chiefly in Malabar. They are sold in bazaars.

Cardamoms are much esteemed in condiments. As a cordial and stimulant they are frequently used in medicine and also in conjunction with other drugs. They are chewed with betel and areca-nut and are also used in decoction for bowel complaints and to check vomiting. The capsules are used to flavour sweet meats and cooked dishes and also in foul-breath. They are found useful in several complaints such as rumbling noise in the stomach, diarrhoea, biliousness etc.

The different kinds are:—

1. சிற் றேலம், small cardamom — Elleteria cardamomum.

2. பேரேலம், அல்லது காட்டேலம், greater cardamom or wild cardamom—Amomum subulatum.

NOTE.—No. 1 is commercially known by different other names such as, true cardamom, lesser cardamom, Officinal cardamom, cluster cardamom, white cardamom, round cardamom, long Malabar cardamom and cardamon of the Greeks; No. 2 by Ethiopian cardamom, Raven cardamom and jungle or hill cardamom.

NOTE—2. It is reckoned as an anti-emetic. Greenish-white cardamom grows abundantly both as wild and under cultivation in the moist shady mountain forests of North Canara. It is wild in Travancore and Cochin forests.

A volatile oil is produced from the seeds and from this, Semina cardamomi minoois and Fructus cardamomi are prepared by chemists.

ஏலம், மயிர்ச் சாந்து, a home-preparation for perfuming the hair; 2. சடா மாஞ்சில்

Indian spikenard—Cyperus stolaniferous; 3. இசங்கு, mistletoe berry-thorn—Azima tetracantha; 4. முதிரை, satin wood.

ஏலம் பிரதி, பிசின் பட்டை, common tallow laurel—Litsaea sebifera.

ஏலரிசி, செடியிலே காய்கள் வெடித் துதிர்ந்த வரிசி. இதுவே ஏலக்காய்க் குள்ளிருக்கும் விதை, seeds of cardamom scattered under the plant—Amomum cardamom. See ஏலக்காய்.

ஏல வாலுகம், ஏலம், வெட்டி வேர், வால் மிளகு முதலியவைகள் சேர்ந்த வேர் வாசனைத் திரவியம், an aromatic preparation consisting of cardamom, khus khus root, tail-pepper etc. as chief ingredients; 2. முசு முசுக்கை, rough bryony—Mukia scabrella; 4. வெள்ளி லோத்திரப் பட்டை, the fragrant bark of a tree—Feronia elephantum.

ஏல வாலுகை, பே ரேலம், greater cardamom. See ஏலம்.

ஏலன், தினை யரிசி, millet—Panicum italicum.

ஏலா, see ஏலம்; 2. பே ரேலம், greater cardamom—Amomum subulatum.

ஏலாகம், குறுக்குக் கொடி, a creeper (*unidentified*).

ஏலாதி, ஏலம் சேர்ந்த மருந்து. இதில் கடிகம், கிருதம், வடகம், சூரணம் எனப் பலவகைகளுண்டு, medicine in which cardamom forms the chief ingredient. It is prepared in different forms such as tablets, electuary, oil, powder, etc.

ஏலாதிக் கணம், ஏலம், வெட்டி வேர், நாகப் பூ, கருவாப் பட்டை முதலிய இருபத் திரண்டி சரக்குகளின் கலப்பு, a preparation consisting of a mixture of twenty-two drugs such as cardamom, khus khus root, Ceylon iron-wood, Ceylon cinnamon, etc.

ஏலாதிக் கியாழம், ஆமணக் கெண்ணெ யுடன் உட்கொள்வதற்காக, ஏலக் காய், யவட்சாரம், இந்துப்பு, இவைகளைக் கொண்டு தயாரிக்கும் கஷாயம், a decoction prepared from cardamom, nitrate of potash and rock salt for the purpose of taking it with castor-oil.

ஏலாதிக் கிருதம், ஏலத்தை முதன்மையாகக் கொண்டு மற்றக் கடைச் சரக்குகளோடு தயாரிக்கும் மருந்து நெய், a medicated ghee prepared from several bazaar drugs with cardamom as the chief ingredient.

ஏலாதிச் சூரணம், ஏலக் காயை ஆதியாக அதாவது முதன்மையாகக் கொண்டு, மற்றக் கடைச் சரக்குகளுடன் சேர்த் திடித்துத் தயாரித்த சூரணம் அல்லது தூள். இதைப் பொதுவாகப் பல நோய் களுக்குக் கொடுக்கப் படும், ஆனால் கூட்டுச் சரக்கு களுக்குத் தக்கவாறு நோய்களைக் கண்டிக்குமெனக் கருதப்படும், a medicinal powder prepared with cardamom as the chief ingredient, along with other bazaar drugs and prescribed by Veidyans in various ways according to the nature of the disease. The efficacy is said to depend upon the nature of the drugs employed with, for the purpose.

ஏலாதிச் சூரணம், ஏலம் முதலிய சரக்குகளைக் கொண்டு செய்யு மோர் வகைச் சூரணம். ஆயுள் வேதத்தில் இது பற்பல விதமாகத் தயாரிப்பினும், தமிழ் வைத்தியத்தில், ஏலக்காய், சடா மாஞ்சில், கிராம்பு, சுக்கு, திப்பிலி, முதலிய இருபத்து ஆறு கடைச் சரக்குளைச் சமனிடையாகக் கொண்டு இடித்து, அதற்குச் சமன் சர்க்கரை சேர்த்துப் பசு நெய்யில் கலந்து கொடுப்ப தண்டு. இதனால், தாபம், கோபம், சுரம், சளி, இருமல், விக்கல், காமாலை, பலவீனம், முதலிய நோய்கள் அணுபானங் கண்டு கொடுக்க நீங்கும், a common name for cardamom powder mixed with other drugs. In Ayurveda, although this is prepared in several ways, in Tamil medicine, it is a medicinal powder with cardamom as the chief ingredient mixed with other twenty-six bazaar drugs such as Indian spike-nard, cloves, dried ginger, long-pepper etc., taken in equal weights and powered. The powder is mixed with an equal quantity of sugar and then taken macerated in cow's ghee. It is given in different vehicles according to the nature of the diseases such as, thirst, fatigue, fever, asthma, cough, hiccough, jaundice, weakness or debility etc.

ஏலா பத்திரம், தக்கோலம், one of the aromatics chewed with betel, such as cardamom.

ஏலா பரணி, பறங்கிச் சக்கை, China root—Smilax China ; 2. அரத்தை, cardamom-leaved galangal—Alpinia galangal.

ஏலா வாலுகம், பே ரேலம், greater cardamom—Amomum subulatum ; 2. வால் மிளகு, tail-pepper—Piper cubeba.

ஏலா வாலுகை, see ஏலா வாலுகம்.

ஏலி, கள், toddy ; 2. சங்கஞ் செடி, see ஏலு.

ஏலீகை, சிற் றேலம், see ஏலம்.

ஏலு, ஏலுகம், } சங்கஞ் செடி, mistletoe berry-thorn—Azima tetracantha alias Monetia tetracantha ; 2. ஓர் வாசனைச் சரக்கு, a fragrant substance.

ஏலை, see ஏலம்.

ஏல், இளிஞ்சில், a bivalve shell-fish ; 2. துயி லெழுதல், to wake from sleep.

ஏல்வை, காலம், time ; 2. நாள், day ; 3. பொழுது, period.

ஏவல், பிசாசைப் பகைவர் மேல் ஏவி விடுதல், a black art in which the devils or other evil spirits are invited and induced to prevail upon one's enemies — Witch-craft ; 2. காளியின் ஏவற் காரப் பேய், a demon who serves the Goddess Kali as a messenger ; 3. ஓர் தேவதை, the name of a Deity.

ஏவல் தோஷம், ஏவலினு லேற்பட்ட குற்றம், evils or morbid conditions in human beings arising from witch-craft.

ஏவல் வினை, சூனியத் தொழில், witch-craft.

ஏவறகன், அசம தாகம், which see.

ஏவறுகன், அதி மதுரம், which see.

ஏவறை, ஏப்பம், eructation; belch.

ஏவா கனம், see ஏவாங் கனம் ; 2. சங்கஞ் செடி, see ஏலு.

ஏவாங்கம், see ஏவாங் கனம் ; 2. ஓமம், omum plant—Anthum soma.

ஏவாங் கனம், அசம தாகம், which see.

ஏவாலுகம், கச்சோலம், the bark of cardamom tree.

ஏவி, தூதுவளை, three-lobed night-shade—Solanum trilobatum.

ஏவி விடல், பேயைத் தூண்டி மனிதரை அதட்டிப் பய முறுத்தி வரும்படிச் செய்தல், the act of invoking an evil spirit and deputing it to frighten people, see ஏவல்.

ஏவு, வருத்தம், pain.

ஏழகம், ஆடு, sheep ; 2. செம்மறி யாடு, ram or ewe of the common sheep ; 3. துரு வாட் டேறு, a ram of the species of sheep called 'Duruvadu' (துருவாடு), a fleecy sheep.

ஏழற் பவன, மாஞ் சாரை, croton indigo—Agrostistachys longifolia.

ஏழாங் காய்ச் சலுப்பு, ஏழுதரம் தெளி விறுத் துக் காய்ச்சித் தீட்சை செய்த கல்லுப்பு, sea-salt dissolved, filtered and evaporated seven times ; a refined sea-salt subjected to dissolution, filtration and evaporation seven times in the ordinary course.

ஏழாங் குட்டம், கழுத்தின் கீழ், கோ தமையைப் போல் சிவக்து தோன்றி மாறிப் பிறகு உடம்பு முழுவதும் உண்டாகு மோர் குட்டம், leprosy associated at the beginning with red-coloured patches below the neck and then with lesions spreading throughout the body.

NOTE.—The term literally means the seventh stage of leprosy. According to Tamil Medical science, leprosy consists of ten stages and the symptoms at each stage vary according to the development of the disease.

ஏழிலை, சரக் கொன்றை, Indian laburnam—Cassia fistula ; 2. ஏழு பிரிவுகளை யுடைய இலை, a leaf with seven divisions or forks in it.

ஏழிலைக் கிழங்கு, மர வள்ளிக் கிழங்கு, arrow-root or tapioca plant—Manihot utilissima.

ஏழிலைத் தும்புரு, பல் வலிக்கார உபயோகப் படும் ஓர் கொடி, a velvetty seven-leaved tooth-ache climber—Xanthoxylom tetraspermum.

NOTE—This should not be confused with the Indian tooth-ache tree—Xanthoxylom alatum also called தும்புருச் செடி.

ஓச்சு, உடம்பு வலிவு, vital power of the body; 2. மனித வுடம்பிற்கு வேண்டிய வைரப் பொருளடங்கிய வல்லமையையும், புஷ்டியையுங் கொடுக்கும் அருமையான ஓர் வகைத் தாதுப் பொருள். இது நிணம், இரத்தம், சதை, எலும்பு, மச்சை முதலிய தாதுக்களில் மறைந்து நிற்கும். இதை வடமொழியில் 'ஓஜஸ்' எனக் கூறுவர், it is a Dhatu lying diffused in the human organism. It is present in the reproductive energy that lies latent in every organic principle viz., lymph, blood, muscles, bone, marrow etc., and in the male and the female reproductive elements- It is this which imparts strength and vitality to the human system and without which it is said that no human being or animal can maintain existence. *c.f.* ஓசம்.

NOTE.—Probably it refers to animal starch (glycogen) in the parlance of Western science.

ஓஜஸ், see ஓச்சு; 2. ஓர் உப தாது, albumen; 3. சத்து, potency.

ஓஜோ தாதுக சுரம், உடம்பி லுள்ள 'ஓஜஸ்' என்னும் தாதுப் பொருள் தடை படுவதனாலும், அல்லது மிகுதியாதலாலும், ஏற்படும் காய்ச்சல், a fever due to an obstruction or an overwhelmed condition of one of the fundamental principles named 'ojo-dhatu' of the organism in the human body; a fever supposed to be due to the presence of an abnormally high percentage of animal starch (glucose) in the system.

ஓடகப் புங்கு, மணிப் புங்கு, soap-nut tree of Southern India — Sapindum trifoliatus.

ஓடகம், செங் கருங்காலி, cutch sundra — Acacia catechu (sundra).

ஓடதி, ஒரே தரம் காய்த்துப் படி மரம், a tree that dies after once bearing fruit; 2. கொடி, a creeping plant in general; 3. மரமுதன் மருந்து, a general term for different surgical medicaments; 4. மருந்திற் குரிய பூடு, a medicinal drug or herb; 5. வருஷத்திற் கொரு முறை இலை யெல்லாம் முதிர்ந்து போகும் மரம்; a tree having leaves that fall in autumn; an annual

plant—A deciduous tree or plant; 6 மரம், செடி, கொடி, புல் முதலியன, a common term for different herbs such as, trees, plants, creepers, grass, etc.

ஓடதிக் கூறு, மூலிகைச் செடிகளிற் காணப்படும் பல அங்கங்கள் அதாவது பிரிவுகள், the several constituent parts found in the structure of herbs and herbaceous plants viz:—

1. பூங் கதிர், a species of inflorescence in which the flowers are sessile along a common axis — Spike.
2. பூவடி யிதழ், an irregularly developed leaf at the base of a flower —Bract.
3. பூ மடல், the outer covering of a flower.
4. பூ லிங்கம், அதாவது பூ விதழினுள் விருக்கும் ஆண் அங்கம், the male organ in plants within the petals—Stamen.
5. பூ முகிழ், பூந்தாதடைய தாள், the essential part of the stamen containing the pollen.
6. பூந் தாது, pollen of flowers.
7. மகரத்தப் பொடி, pollen and anther of a flower.
8. பூந் தூள், பூவின் நடுவில் மயிர் போன்ற தூள், the downy substance on plants—Pubescence.
9. மொக்கு, bud.
10. பாளை, the flower sheath or spathe.
11. பூ, flower as a whole.
12. இலை, leaf.
13. இலை நரம்புக் கூட்டம், pedicle.
14. இலை நரம்புத் தொகுதி, foot-stalk.
15. மெல் விழை, filament.
16. புற விதழிலை, sepals.
17. சிற் றிலை, leaflet.
18. காம் பிலை, pinnate leaves.
19. பூங் கொத்து, raceme.
20. காம்பு, peduncle.
21. புற விதழ் அல்லது மொக்குள், calyx.
22. வேர்க் கொடி, rhizome.
23. காய், பழம், fruit (ripe and unripe)

24. கொட்டை அல்லது ஓடு, nut or shell.

25. தான், தண்டு, stalk.

26. அடி மரம், stem.

27, வேர், root.

28. கிழங்கு, bulbous root.

29. வேர்ப் பட்டை, root-bark.

30. பட்டை, bark of the stem.

31. விதை, seed.

32. சதைப் பற்று, pulp of the fruit.

33. தளிர், shoot.

34. தழை, foliage.

35. கொழுந்து, tender leaf.

36. முளை, sprout.

37. புரணி, legumen.

38. கோது, pod.

39. படர் கொடிக் கூந்தல், tendril.

40. படர் கொடி, creeper.

ஓடதீசம், கற் பூரம், camphor.

ஓடமார், தேள் கொடுக்கி யிலை, leaves of the plant called Scorpion sting -- Heliotropium indicum.

ஓடம், செங் கருங்காலி, red catechu—Acacia catechu (sundra).

ஓடலாய், இலுப்பை, which see.

ஓடல், ஆவியாய்ப் போதல், escaping or passing off as vapour or fumes as does mercury when heated ; 2. ஆனை நார் அல்லது வக்கு நார் மரம், elephant rope tree—Sterculia villosa ; see தணக்கு.

ஓட விடுதல், புட மிடுதல், to purify as is done with gold by melting.

ஓட வைத்த பொன், புடமிட்ட மாற்றுயர்ந்த பொன் அதாவது தங்கம், refined gold obtained by getting rid of its impurities by melting.

ஓட வைத்தல், உருக்கிச் சாய்த்தல், melting in a furnace or in a crucible and casting in moulds.

ஓடன், ஆமை, tortoise. It is so called from its having a shell.

ஓடன் கொடி, ஓடங் கொடி, spindle climber--Hippocratea indica.

ஓடாங் கொடி, ஓங்காரங் கொடி, which see.

ஓடாச் சரக்கு, கெருப்பிற்கு ஓடாத பொன், வெள்ளி, முதலிய சரக்குகள், gold, silver etc. which cannot be volatilized or made to pass into vapour when heated.

ஓடி, வன நெல், wild paddy.

ஓடிகம், மகர வாழை அதாவது காட்டு மல்லிகை, wild jasmine—Jasminum angustifolium.

ஓடிகை, see ஓடி.

ஓடிப் பாயும் புண், ஆழ்ந்த புண், deep-seated ulcer ; 2. ஊடுருவிச் செல்லும் புண், penetrating wound.

ஓடிய வோடம், இளிஞ்சில், bivalve ; conch-shell.

ஓடி யுறைதல், படிப் படியாய் இறுகுதல், thickening by degrees as in decoction; 2. கருவிற் பாய்ச்சின உருக்கு ஆதிக் கெட்டிப் படல், the solidification of any melted substance cast into moulds.

ஓடி விறைத்தல், உடம்பு முழுவதும் விறைத்தல், getting stiffened throughout the body; the stiffness of the body and the limbs.

ஓடு, மண்ணி னோடு; உடைந்த மண் பாண்டம், a piece of broken pot or earthenware ; 2. மண்டை யோடு, skull ; 3. திரு வோடு அல்லது இரந் துண்ணும் ஓடு, mendicant's bowl ; 4. வித்து முதலியவற்றி னோடு, the shell of a nut or a pod; 5. முட்டை யோடு, the shell of an egg ; 6. ஆமை முதலிய பிராணிகளின் ஓடு, the shell of a tortoise or other animal.

ஓடு கட்டி, உடம்பில் பல விடங்களிற் காணும் கட்டி, running abscess, appearing in several parts of the body one after the other ; 2. ஒரு பக்கத்தில் உற்பத்தியாகி மற்றொரு பக்கம் எழும்பும் கட்டி, an abscess that burrows into the tissues and finally points at a considerable distance from the place where it started from—Wandering abscess.

ஓடு கரப்பன், குழந்தைகளுக்கு உடம்பில் ஒரு விடத்தி லிருந்து மற்றொரு விடத்திற்கு மாறும் கரப்பன் நோய், a severe type of rash shifting from one part of the body to another in children ; a form characterised by fugitive eruptions — Strophulous volaticus.

ஓடு கழலை, உடம்பின் ஒரு பக்கத்தி லிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாறும் கழலைக் கட்டி, a tumour that has become detached from its original location and has become fixed in some other place—Migratory tumour.

ஓடு கொப்புளம், உடம்பில் ஓரிடத்தி லிருந்து மற்றொரு விடத்திற்கு மாறும் கொப்புளம், a blister that shifts from place to place —Ambulent blister.

ஓடு சூலை, உடம்பில் பல மூட்டுகளிலும் மாறி மாறிக் காணும் சூலைப் பிடிப்பு, rheumatic gout appearing in several joints alternately.

ஓடுஞ் சரக்கு, நெருப்பி லிடப் புகையாக வெழும்பி மறையும் இரசம், கந்தகம், பாஷாணம் முதலிய சரக்குகள், substances such as mercury, sulphur, arsenic etc., which pass off as vapour or fumes when heated.

ஓடு பித்தம், ஓர்வகைப் பித்தநோய். அது எழுந் தெழுந் தோடல், பிதற்றல், திட்டல், பல்லைக் கடித்தல், கண் சிவந்து மூடிமூடித் திறத்தல், கூச்சலிடல், கூத்தாடல், குதித்தல், முதலிய பைசாச குணங்களைக் காட்டும், a kind of bilious disease. It is attended with irritability and mental disturbances and the following are the other symptoms, namely —suddenly getting up, frequent rising up from bed, raving, abusing, grinding the teeth, inflamed eyes, constant winking, running shouting, dancing, and jumping with several other devilish characteristics.

ஓடும் பாம்பை பிடிக்கும் வயது, வாலிபம், young age.

ஓடும் பித்தம், see ஓடு பித்தம்.

ஓடு வாதம், உடம்பில் பல விடங்களிலும் குத்தலும், குடைச்சலுங் கண்டு, மாறி மாறி ஓடி, உளைத்து, அதனால் பலங் குறைத்து, காவரண்டு, தின்புழுத்து மோர் வகை வாத நோய், a rheumatic attack attended with acute and boring pain passing from one joint to another in the system, loss of strength, parched tongue, etc.

ஓடு வாயு, வாயு கோளாறுகளால் உடம்பில் பல விடங்களில் மாறி மாறிக் கட்டியைப் போல் வீங்கிச் சிவந்து குத்தலை யுண்டாக்கித் தின்புழுத்து மோர் நோய், rheumatism in which inflammation, pain and swelling affecting one portion of the body suddenly shifts to another part due to the deranged condition of Vayu (wind) in the system.

There is also a cattle disease of this type.

ஓடு விசர்ப்பி, உடம்பில் பல விடங்களிலும் குருக்கள் உண்டாகித் தினவு, எரிச்சல், முதலானதைக் கண்டு, பிறகு ஓரிடத்தி னின்று மற்றொரு விடத்திற்கு மாறியும் காணுமோர் விதவிசர்ப்பி நோய், a form of erysipelas, marked by eruptions in several parts of the body accompanied by intense itching and burning.

NOTE.—When eruptions recur at various points, it is called Ambulant erysipelas, and when the morbid process disappears successively from various parts of the body, to reappear elsewhere, it is called Wandering erysipelas or Erysipelas migrans.

ஓடு வித்திரதி, உடம்பின் நரம்புகளின் வழியாகப் பல விடங்களில் ஓடி ஆங்காங்கு மாறி மாறி ஏற்படும் கட்டி, a deep-seated abscess, which travels through the course of the nerves from one place to another in the system — Wandering abscess. See ஓடு கட்டி.

ஓடு விப்புருதி, எலும்புக் கழற்சி கண்டு அதனால் உடம்பில் எலும்பு ஊர்தல்போ லுணர்ச்சி கண்டு, இரத்தஞ் சூழ்ந்து, இரண்டு கட்டியாக வெழும்பி, இரணமாகிச் சீழ்கட்டிப் புரை யோடி, உடம்பில் பல விடங்களிலும் வெளிக் காணும் ஓர் வகை விப்புருதிக் கட்டி, a cold abscess filled with a cheesy liquid like pus. It generally burrows through the soft parts until it opens externally by a sinus or a fistula. It occurs in several parts of the body and is due to the chronic inflammation of the periosteum and the surrounding tissues; 2. உடம்பில் சதைப் பாகங்களிற் பல விடங்களிலும் காணும் விப்புருதி, a form of cancer affecting the skin and arising in the several parts of the body; 3. விஷத் தன்மையால் உடம்பில் இரத்த முறிந்து அதனால் பல விடங்களிற் காணும் கட்டி, abscess or multiple abscesses in various parts of the body due to pyemia — Pyemic abscess.

ஓடை, உலவை மரம், which see; 2. ஓடைக் கொடி, oval-leaved wheel-creeper—Combretum ovalifolium; 3. கிது கிதுப்பை, rattle-wort — Crotolaria verrucosa; 4. குளம், tank; 5. சீ ரோடை, a large water-course; 6. ஓர் வகை மரம், stout reed-bamboo—Ochlandra travancorica; 7. உடை, which see.

ஓடை மரம், உடை மரம், silver-thorned acacia — Acacia latronum.

ஓட்டச் சிதை, see ஓடை.

ஓட் டடை, இலேசான சட்டப்பம், a thin rice-cake.

ஓட் டத்தி, see ஓட்டுத் தத்தி.

ஓட்ட பல்லவம், மே லுதடு, upper lip.

ஓட்டம், உதடு, lip; 2. மே லுதடு, upper lip; 3. உருக்கிச் சுத்தி செய்தல், purifying by melting, as is done with gold.

ஓட்டல், உட் செலுத்தல், to insert; 2. திணித்தல், to thrust into, as a lint is thrust into a sinus.

ஓட்டவம், பொறிக் காளான், a yellow mushroom.

ஓட் டறுதல், உருக்கி அசுத்தத்தைப் போக்காமல் இயற்கையிலேயே சுத்தமா யிருத்தல், to be naturally pure without being subjected to refining process; 2. உருக்கிச் சுத்தி செய்தல், to purify by melting. See ஓட்டம்.

ஓட்டாங் கச்சி, சிரட்டை, cocoanut shell; the term is a misnomer for ஓட்டாங் குச்சு.

ஓட்டாங் கிளிஞ்சில், ஓர் வகை மீன், a kind of shell-fish; 2. உடைந்த சிப்பி, broken oyster-shell.

ஓட்டாங் குச்சு, மண் கல வோடு, the broken piece of a pot; 2. தேங்கா யோடு, cocoanut shell.

ஓட்டாங் குச்சுத் தைலம், படை, சிரங்கு, புண் முதலியவைகளுக் கிடுவதற்காகத் தேங்கா யோட்டைச் சுட்டு, அதனின் நிறக்கும் தைலம், a strong oil derived from a burnt cocoanut shell and applied to ringworm, sores, etc.

ஓட்டாம் பாரை, ஓர் வகை மீன், a kind of small sea-fish; olive-coloured horse-mackerel—Scomber aculcatus; 2. இளைத்துச் சீர் குலைந்த பெண் பிள்ளை, a weak and ugly woman.

NOTE.—A contemptuous term used for a woman who is emaciated or otherwise grown lean and ugly in appearance through disease.

ஓட்டியம், பலித்த வுடன் படும் வாழை, the plantain tree which bears fruit but to die.

ஓட்டி யெறும்பு, ஓர்வகைச் சட்டெறும்பு, driver's ant, common in Africa, see ஓட் டெறும்பு.

ஓட்டிரம், உற்கல தேசம், Orissa. see also ஓட் டியம்.

ஓட்டுக் காந்தம், ஓர்வகைக் காந்தம், a kind of thin magnet. c. f. ஓட்டுக் காந்தம்.

ஓட்டுத் தத்தி, ஓர் வகைத் தத்தி. இது ஓர் மூலிகைச் செடி. இலைகள் வட்டமாயும், 3–4 பிரிவாகவும், மிருதுவாயும் இருக்கும், 5–7 நரம்புகள் வாய்ந்தன. பூக்கள் சம அளவு, சிகப்பு, மழைக் காலங்களிற் பூக்கும், angle-leaved burr mallow—Urena lobata. It is a herbaceus plant. Leaves roundish with 3 or 4 obtuse lobes more or less velvetty; 5 to 7 nerved flowers, middle-sized, rose-coloured, flowering from August to October.

ஓட்டு மீன், ஓடு கவர்ந் துள்ள மீன், உப்பங் கழிகளிலும், நல்ல தண்ணீர் ஏரிகளிலும் காணலாம். (literally) a shell-fish; Crustacean. It is so called from crust-like shell covering the body and the legs. It is found in lagoons and fresh-water lakes; 2. நண்டு, crab.

ஓட்டு முத்து, உள்வயிர மற்ற முத்து, a pearl without solid portion; 2. போலி முத்து, pearl of inferior quality; 3. சிப்பியில் ஒட்டிய முத்து, pearl adhering to the oyster.

ஓட்டெழுத்து, தலை யெழுத்து, destiny.

ஓட்டை, துவாரம், opening; orifice; 2. உடம்பி லுள்ள ஒன்பது துவாரங்கள், the nine openings in the body; 3. பெண் குறி, a slang term for the genital especially the vagina.

ஓட்டைக் குடல், எளிதில் மலம் போகக் கூடிய குடல், bowels easily moved by purgatives ; loose bowels. It is opposed to கற் குடல், hard bowels.

ஓட்டைச் சூத்தன், எப்பொழுதும் கழிந்து கொண்டே இருப்பவன், one who is always purging.

ஓட்டைச் சூத்து, பெண் குறி, அடிக்கடி ஏற் படும் ஒழுக்கினு லிதற் கிப் பெயர், a slang term for the vagina so called from frequent discharges.

ஓட்டைச் செவி, கேள்வி தரிக்காத காது, ear that fails to retain what it hears.

ஓட்டை நெஞ்சு, ஞாபக மறதி, absent-mindedness.

ஓட்டைப் பல், மூளியான அல்லது உடைந்த பல், broken tooth; 2. குறைந்த பற்களை யுடைய பல் வரிசை, a row of teeth in which some teeth are lacking.

ஓட்டைப் பொத்துதல், பெரும் பாட்டைக் குணப் படுத்தல், to cure one suffering from menorrhagia ; 2. சூதக வொழுக்கைச் சீலைத் துண்டினு லடைத்தல், to plug the vaginal orifice with a piece of cloth to receive the menstrual flow.

ஓட்டை மனம், விஷயங்கள் பதியாத மனம், mind that could not retain facts; 2. இள நெஞ்சு, tender heart.

ஓட்டை முத்து, சிப்பியில் ஒட்டிய தாழ்ந்த முத்து, pearl of inferior quality found adhering to the oyster. See ஒட்டு முத்து.

ஓட்டை மூக்கு, சில்லி மூக்கு அதாவது இரத் தம் வடியும் மூக்கு, a bleeding nose ; 2. சளி ஒழுகும் மூக்கு, a running nose.

ஓட்டை யொழுக்கு, சூதக வொழுக்கு, menstrual discharge ; 2. நவத் துவாரங்களி லேதேனு மொன்றில் ஏற்படும் ஒழுக்கு, any discharge from any of the nine openings such as, the ears, the eyes, etc.; 3. பெரும் பாடு, abnormally profuse menstruation—Menorrhagia.

ஓட்டை வாயன், கண்டபடிப் பிதற்று வோன், one talking indiscriminately.

ஓஷதி, see ஓடதி.

ஓஷதியம், கொடி, creeper; 2. கள், toddy.

ஓஷத்தி ராஜன், சோமப் பூடு. ஆயுள் வேதத் தில், இது மூலிகைகளுக் கெல்லாம் இராஜன் எனச் சொல்லப்படும். இதில் 15 இலைகள் இருக்கும். அவைகள் தேய் பிறையில் ஒவ் வொன்றாகக் குறைந்து கொண்டும், வளர் பிறையில் ஒவ் வொன்றாக வளர்ந்து கொண் டும் வரும். இதை வடமொழியில் 'சோமா' வென்றும் சொல்வர். இதற்குச் சரியான தமிழ்ப் பெயர் இன்ன தென்று விளங்க வில்லை. தமிழ் வைத்தியத்தில் இதைப் பற்றி ஒன்றும் கூறப்பட வில்லை, soma plant which is known in Ayurveda as theking of the herbaceous plants. It is supposed to have fifteen leaves, each of which drops off every day in the waning of the moon, but the growth is resumed in the same way during the waxing period. In Sanskrit it is called 'Soma' but the corresponding Tamil name cannot be traced. It is even doubtful if any mention is made about this plant in Tamil Medical science.

ஓஷம், காய்தல், drying;

ஓஷ்டக் கிரந்தி, உதட்டில் வரும் ஓர் கிரந்தி நோய், ulceration, chiefly of the mouth and the lips.—Cancrum oris.

ஓஷ்டம், see ஓட்டம்.

ஓஷ்ட ரோகம், see ஓஷ்டக் கிரந்தி.

ஓஷ்டி, கோவைக் கனி, fruit of Indian caper —Bryonia grandis.

ஓணனெய், ஓணனி லிருந் தெடுக்கப் பட்ட கொழுப்பு. இது பிடரி வலி முதலிய வாத வலிகளுக் குபயோகப்படும், fat extracted from blood suckers or chameleons. It is applied for pain in the nape of the neck and also in other neuralgic pains.

ஓணன், ஓந்தி, இதன் தலை சிறியதாயும், சிறிது சப்பையாயு மிருக்கும், நாக்குத் தடித்துள் ளது ; வால் நீளம், தூனியில் கூர்மை. உடம்பு முழுவதிலும், செதில்கள் பாய்ந்துள்ளது ; பற்கள் தாழ் வாயை யொட்டி யுள்ளது. இது தனக்குத் தானே நிறத்தை மாற்றக் கூடிய தன்மையு முள்ளது, அன்றியும் இதற்குத் தலை எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருக் கும். ஆகவே இதற்கிப் பெயர். இதில் அனேக விதங்களுண்டு. அடியிற் கண்டின் னவை தென்னிந்தியாவி லகப்படக் கூடிய முக்கியமான இனங்கள்—lizard and blood-sucker, or chameleon—Calotes versicolor. Its head is small and a little flat;

tongue thick; tail long and tapering; body full of scales; teeth implanted in the edges of the jaw-bones.

It is so called from its nature of changing colour when excited and also from the motion of its head up and down, as if in the act of prayer.

There are different kinds, but the following are the representative species of South India:—

1. ஓணன், most common lizard — Calotes versicolor.
2. கரட் டோணன், rough lizard.
3. சீத்தி யோணன், an inferior or weak lizard—Sitana Minor.
4. சிவப் போணன், red blood-sucker—Calotes optiomachus alias C. viridis.
5. *பச்சை யோணன், green blood-sucker—Broncholeela jubata.
6. வேலி யோணன், hedge lizard — Calotes rouxii; title from its frequenting hedges.
7. கரும் புள்ளி யோணன், dark lizard—spotted lizard—Sitana ponteceriana. Title from series of dark spots along the middle of the back.
8. மர யோணன், tree-lizard—Calotes nemoricola.
9. மலை யோணன், Rock-lizard — Charasia dorsalis.
10. தொத் தோணன், a tree-lizard jumping from branch to branch — Dracones or dragons.

*NOTE.—This (பச்சை ஓணன்) blood-sucker has to be distinguished from பச் சோந்தி, Chamaleon which is quite a different species—Chameleo vulgaris. The faculty of changing colour, possessed by chameleons, although common to numerous other lizards, has become proverbial in this species and is here so much developed that one side may assume a colour different from that of the other.

Many of this species are land lizards, of which some are living in trees or bushes and others in rocks and plains. They are mostly insectivorous but some feed on vegetables.

The aequatic reptiles of the lizard kind are known by the common name water-lizards and they are of various species and consequently named differently as guana, crocodile, alligator, gavial, etc.

ஓணன் குத்தி, ஓர் பருந்து; இராசாளி, a kind of hawk feeding on lizards and blood suckers.

ஓணன் கொடி, see ஊரண்.

ஓணன் கொத்தி, see ஓணன் குத்தி.

ஓணன் தலை, ஓணானைப் போல் சதா ஆடிக் கொண்டிருக்கும் தலை, head always shaking like that of a blood-sucker.

ஓணன் லேகியம், வீரிய விர்த்திக்காக வேண்டி ஓணானின்று தயாரிக்கும் ஓர் வகை லேகியம், an electuary prepared out of the blood-sucker with other ingredients, and prescribed for promoting the sexual power.

ஓதகக் காலி, எருமைக் கணிச்சான், which see.

ஓதக் காரன், அண்டவாத முடையோன், a person suffering from hydrocele or hernia; 2. அண்டம் பருத்தவன், one having a large scrotum.

ஓதக்காலி, see ஓதகக்காலி; 2. யானைக் காலியுடைய பெண், a woman with elephantiasis of the leg.

ஓதக் கால், யானைக் கால், elephantiasis of the leg; 2. பருத்த கால், a large leg.

ஓதக் குட வண்டம், குட வண்ட விருத்தியில் நீர் தங்கி அதனை மேற்படும் ஓதம், distension of the hernia with a fluid — Hernial hydrocele.

ஓதப் பிடுக்கு, பிடுக்கினுள்ளே வாத நீர் பெருகிப் பருத்துக் காணுமோர் வகை அண்ட வாதம், collection of fluid through deranged 'Vatha' especially in the scrotum—Hydrocele (Scrotal); 2. விதையை யருகேயுள்ள தசைப் பாகங்களில் வாத நீர் தங்கிப் பருத்துக் காணு மோர் வாத நோய், a collection of fluid diffused in the loose connective tissue of the spermatic cord — Diffused hydrocele; see நீர் அண்டம். 3. வாதத்தினுல் இன நீர்த் தசை தடைப் பட்டுப் பிடுக்கின் சதைப் பாகங்கள் தடித்துக் காணு மோர் அண்ட வாதம், a disease of the scrotum characterised by inflammation and obstruction to the lymphatics and the morbid enlargment or growth of the skin—Elephantiasis scroti. See வளிப் பிடுக்கு.

ஓத மிறங்கல், பீசத்திற்குள் வாத நீர் சேருதல், a circumscribed collection of lymphatic fluid in the scrotum.

ஓதம், நீர் அண்ட வாதம், scrotol hydrocele; 2. அண்ட வீக்கம், a general swelling of the scrotum through any cause; 3. விதை வாயு, inflammation of the testis — Orchitis; 4. தசை யண்டம், abnormal growth or thickening of the skin of the scrotum; 5. கடல், sea; 6. ஈரம், moisture.

ஓதல், மந்திரஞ் செபித்தல், to chant mantrams or incantations; to spell.

ஓதளம், see ஓதனா.

ஓதவா, ஓதனா மரத்தி னின்று எடுக்கும் காசுக் கட்டி, black catechu or medicinal catechu —Acacia catechu (typica); 2. தணக்கு, see ஓதல்.

ஓதவா, (ஓதம் + அனா, moisture + to preserve). ஓர் மரம், இது 30—40 அடி உயரம், பட்டை கபில நிறம். காய் மெல்லியதாயும், தட்டையாயும், அதனுள் 4—8 விதையுள்ளதாயு மிருக்கும். பூச் சிறியது, வெள்ளை அல்லது வெளிர் மஞ்சள் நிறம். இது காசுக் கட்டியைப் போன்றது. இதன் நீர்த் திரவம் கரிய துவர்ப் புள்ள வஸ்து. இம் மரத்தி னின்று வெளிர் மஞ்சளான பிசின் வடியும். இத் துவர்ப்பு வஸ்துவாகிய ஓத னாயும் வெண்ணீப் போளமுங் கலந்து, பிரசவித்த பெண்களுக்குப் பல முண்டாகும் படிக்கும், பால் சுரக்கவும் கொடுப்ப துண்டு. இது பிக்கத் துவர்ப்புக் குணம் வாய்ந்தது. இம் மரம் மலையாளத்தில் தருசு நிலங்களில் மிகுதியாக வனையும். Black acacia — Acacia catechu alias A. polyacantha; 30–40 ft. high; bark, dark brown; legumes thin and flat; 4 to 8 seeded; flowers small and white or pale yellow. It is closely allied to Acacia sundra. The watery extract is the black cutch. The tree also yields a pale yellow gum. A mixture of cutch and myrrh is given to women after confinement as a tonic and also to promote the secretion of milk. It is a powerful astringent. It is chiefly found in Malabar in dry soils.

ஓதல், தணக்கு, elephant rope-tree — Sterculia villosa.

ஓதனம், சோறு, boiled rice; 2. உணவு, food in general.

ஓதி, ஓந்தி, a kind of lizard; 2. பூனை, cat; 3. ஞானம், wisdom; spiritual perception. 4. பெண் மயிர், women's hair; 5. மலை, mountain; 6. பச் சோந்தி, green lizard—Chameleon.

ஓதிமம், அன்னம், swan; 2. மலை, mountain; 3. குன்று, hill; 4. கவரி மான், yak—Bos grunniens; 5. புளிய மரம், tamarind-tree —Tamarindus indicus.

ஓதிமன் விழி, எட்டு, eight.

ஓது, பூனை, cat.

ஓதுதல், see ஓதல்.

ஓதை, மலை, mountain; 2. ஒலி, sound; பே ரொலி, uproar.

ஓதை வனிதம், நீலத் தாமரை, blue waterlily—Nymphae stellata.

ஓத்தி, (ஓத்து + இ, that which prays) ஓந்தி, ஓணன், lizard or bloodsucker. It is so called from the motion of its head up and down as if in the act of prayer.

ஓத்திரம், வெள்ளி லோத்திரம், the bark of a tree—Simplocos racemosa.

ஓநாய், see ஓணய்.

ஓநாய்ப் போலாதல், இளைத்தல், to get emaciated.

ஓந்தி, ஓணன் வகை, a common term for lizards embracing different varieties.—Agamoides; 2. பச் சோந்தி, chameleon—Chamaeleo vulgaris; 3. ஓணன், blood sucker—Calotes versicolour.

ஓம காஞ்சனம், சிறு நாகப்பூ, Ceylon ironwood—Mesua ferrea.

ஓம கேர்ப்பம், நந்தியா வட்டம், eye-flower — Tabernaemontana coronaria.

ஓமக்கினி, ஓமம் விதை, ajwan seed—Carum copticum.

ஓமங் கலந்த பசு, ஆடு, sheep,

ஓம சாந்தி, ஓமம் வளர்த்துச் சாந்தி செய்தல், mitigating the evil effects of *Karma* prevailing upon a man, with the aid of ceremonial fire-offerings.

NOTE.—This is generally the method adopted by Aryans for ceremonial purification, but the same is effected by the Dravidians by means of கழிப்பு, which see.

ஓமச் சூரணம், ஓமத் தோடு மருந்துச் சரக்கு களுஞ் சேர்த்துத் தயாரித்த வேர் வகைச் சூரணம், a medicinal powder composed of Bishop-weed and other bazaar drugs as ingredients.

ஓமத் தண்ணீர், ஓமம் ஊறற் கஷாயம், infusion of omum seeds.

ஓமத் திராவச் சத்து, ஓமத் தண்ணீரின் சத்து liquid extract of omum (Ajwan).

ஓமத் திராவகம், ஓமத்தினின்று வாலையி லிறக்கிய தீ நீர். இது வாயுவைப் போக்கு மருந்து. இத் திராவகம் குழந்தைகளுக்கும் மற்றும். பெரியவர்களுக்கும் அசீரணத்தைப் போக்க வுபயோக மாகும். இது கடைகளில் விற்கப் படும். இது குடி வெறி மயக்கம், இருதய ரோகம் முதலியவைகளை நீக்கும். வெகுட்ட லான மருந்தின் வாசனையைப் போக்கவும், வயிற்றைப் பிரட்டிக் குமட்டலை யுண்டாக் காத படிக்கும் இதை உபயோகிப்ப தண்டு, omum water or water distilled from the omum seeds—Aqua ptychotis. It is a valuable carminative, bothfor adults and for children and it is prepared and sold in bazaars. It is employed with advantage in cases of alcoholic intoxication, giddiness, heart disease, etc. It is useful in disguising the taste of nauseous drugs and in obviating their tendency to cause griping.

ஓமத் தீ நீர், see ஓமத் திராவகம்.

ஓமத் தவயம், see ஓமம், 2. குரோசாணி ஓமம், omum or omum imported from Khurasan —Hyoscyamus niger.

ஓமத் தைலம், ஓமத்தினின்று காய்ச்சி வடிக்கும் எண்ணெய், இது நாக்கிற்கு கிரு கிருப்பா யிருக்கும், the oil obtained by distillation from the omum seeds.—Oleum ptychotis. It has an acrid burning taste.

NOTE—It is a crystalline essential oil, smelling like carbolic oil and substituted for pepper-mint, caraway oil and aniseed oil.

ஓமப் பால், ஓமத்தை இடித்துப் பிழிந்த ரசம், the juice obtained by grinding the seeds of omum soaked in water.

ஓமப் பொடி, திரு நீறு, holy ashes, obtained from the sacrificial fire; 2. தின் பண்ட வகை, confectionery; 3. ஓமத் தூள், omum powder.

ஓமப் பொட்டு, ஓமத்தின் மேற் தோல், the outer covering or layer of omum seeds.

ஓமம், அசமதாகத்தைப் போன்ற வேர் காரமான சரக்கு. இதற்குப் பிரம தர்ப்பை, அக்கினி வர்த்தனம், தீப்பியகம், உக்கிர கந்தம் முதலான பல பெயர்க ளுண்டு. இது மலச் சிக்கலைப் போக்கக் கூடியதால் இது யுனானியில் "தாலிபுல் கப்ஸ்" என வழங்கும், இச்செடியின் பூக்கள் வெண்மை, விதைகள், சிறிது காரமாயும், வாசனையாயு மிருக்கும், இவ் விதையைக் குன்மம், அசீரண பேதி, முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். நமது நாட்டு வைத்தியர்கள் இதை வயிற்றுக் கோளாறுகளுக்கும், இருதய நோய்களுக் கும் கொடுப்பார்கள். உடம்பிற்குச் சுட்டை யுண்டாக்கும், ஆகையால் இதை ஒத்தடம் கொடுக்கவும், வாந்தி பேதிக்கும் உபயோகப் படுத்தலாம். அருவருப்புள்ள சரக்குகளின் வாசனையை மாற்று வதற்கும், குமட்டலைத் தடுப்பதற்கு முபயோகிப்ப தண்டு. கடுகு, பெருக்காயம், நில வேம்பு முதலியவை களுக் குண்டான குணங்கள் இவ் வோமத் திற்கு முண்டு. இதன் கஷாயம் வாய் கொப்பளிக்கவு முதவும், இது அடியிற் கண்டபடிப் பலவகைப் படும்:—

Omum plant — Carum Copticum or Sison ammi. It is called by several names—Brahma's coosham, Indian dill, Sison cordial plant, Ethiopian cumin, etc. In Arabic, it is termed "tali bul kubs" from its cure from costiveness. The flowers of this plant are white and the seeds are small, warm and aromatic.

The seeds are medicinally stimulant, and antispasmodic, and are useful in atonic dyspepsia and diarrhoea. Veidyans prescribe it in cases of indigestion and for heart disease.

It lends warmth to the system and as such is used in fomentation. It forms an ingredient in some medicines prescribed for cholera. It is useful in disguising the taste of nauseous drugs and obviating their tendency to cause griping.

The seeds have also the properties of mustard, asafoetida, and ground-neem. The decoction of the seed is used as a gargle.

The following are the different varieties;—

1. ஓமம், Indian dill seed — Carum copticum or Sison ammi.

2. அசமதாகம், ajmood ajwaun — Carum roxburghianum or Pimpanella involucrata.

3. குராசாணி யோமம், Persian ajwaun. — Hyoscyamus niger alias H. Agrostis.

4. சோரி யோமம், another variety.

NOTE.—Nos. 1 & 2 although different, they are synonymously used without distinction. No. 2 is a distinctive South Indian species. No. 3 is the one exported from Khorasan. The plant is a powerful narcotic and its capsules, leaves and seeds are used extensively in medicine and they produce effects similar to opium. It dilates the pupil in diseases of the eye. Another species Muticus or mountain hemp is sometimes used in smoking. Sesseli indicum or Indian meadow saxifrage is also known by this name and the seeds of this are used as medicine for cattle.

ஓமம், அப்பிரகம், mica — Talcum ; 2. தாளகம், orpiment—Auri pigmentum; 3. சத்திசாரம், a prepared salt with a burning and acrid taste ; 4. நெய், ghee ; 5. அசமதாகம், Indian dill.

ஓமயம், முட்டை, egg.

ஓம யெண்ணெய், ஓமத்தி னின்று வடித்த யெண்ணெய், இது ஆயியாய்ப் போகுந் தன்மையதும், வாசனை பொருந்தியது மானது ; வாயுவைப் போக்கும் குணமும் வாய்ந்தது. the oil of Ajwaun or omum — Oleum ptychotis. It is a volatile oil, which is aromatic and also a carminative. See ஓமத் தைலம்.

ஓம லேகியம், ஓமத்தோடு கடைச் சரக்குகளைச் சேர்த்துக் கிண்டி யெடுத்த வோர் வகை லேகியம், an electuary in which the omum forms the chief ingredient with some other bazaar drugs mixed with it.

ஓம வல்லி, மூட்டை ராதிச் செடி, country borage.

ஓம வுப்பு, ஓமத்தி னுப்பு, salt extracted from omum.

ஓமாக்கினி, ஓமத் தீ, fire in which omum is burnt.

ஓமாதி, பல், tooth.

ஓமாலிகை, முழுகுவதற் குரிய நன் னீரிலே இடப்படும் முப்பத் திரண்டு சுகந்தப் பொருள்கள், thirty-two aromatic drugs steeped in water intended for bathing or drinking ; perfumed water.

ஓமான், ஓங்கி, which see.

ஓமி, நெருப்பு, fire ; 2. நெய், ghee ; 3. நீர், water.

ஓமை, மாமரம், mango tree—Mangifera indica ; 2. இலுப்பை, which see ; 3. உகா which see.

ஓமைக் கொட்டை, மாங் கொட்டை, mango-seed or its shell.

ஓம், பிரணவம், இது அ+உ+ம் என மூன் றெழுத்துச் சேர்ந்தது, இதில் அ. என்பது சிவனையும், உ. என்பது சக்தியையும், ம். என்பது சிவ சக்தியையும் குறிக்கும், இச் சிவசக்தி சொரூபமே வரி வடிவில்—

1. 'ஒ' எனவும், பின்னையார் சுழியாகிய 'உ' எனவும்,

2. வழிபடுங் குறியாக நிறுத்தப் படுங் கால், 'சிவ லிங்கம்', எனவும்,

3. ஒலி யெழுத்தாகச் சொல்லப் படுங்கால் 'ஓங்காரம், பிரணவம்' என்றும்,

தொன்று தொட்டு ஆன்றோரால் வழங்கப் பட்டு வருகின்றது. இவ் வுண்மையைத் தெரிந்து கொள்ளற் பொருட்டே திருமூல நாயனார் திருமந்திரத்தில்,

"ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவரும்
ஓமெனு ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு ஓங்காரம் ஒன்முத்தி தித்திமே"

என்று அருளிச் செய்தார். மாண்டேக்கிய உபநிடதமும் 'இது அழியாப் பொருள், இதுவே எல்லாம்' எனக் கூறும். கடவல்லிய வுபநிடதமும் இவ்வாறே கூறும். அன்றியும், இது திரு மூர்த்தியையுங் குறிக்கும் சொல் எனவும் கொள்ளப்படும்.

இது தியானத்திற் கேற்றது, ஆகவே இதைச் செபிப்பதனல் அனேகம் சித்திகள் வாய்க்கும். உடம்பினுள் செய லற்றுக் கிடக்கும் சக்திகளையும் எழுப்பும், a symbol representing the union of the three in one. It is a mono-syllabic letter with the combination of three sounds viz, A+U+M., in which A, represents Siva, U, Sakthi and M, Sivasakthi. This form of Sivasakhti is represented—

(1) in writing, by the sacred letter ஓ and by உ known as Pillayar suzhi.

(2) in worship, as Siva lingham.

(3) in pronounciation as 'Om'.

This principle is held from time immemorial by our ancestors and the truth of this is well-explained by the Great Saint Thirumoolar in his verse as mentioned above. Thus, Om represents the whole phenomena of sound-producing and as such, it is the matrix of all the various sounds. Around this 'Om' are centred all the different religious ideas in India and so, it has become the one symbol for the religious aspirations of the vast majority of human beings. Mandookya Upanishad also asserts that 'om' is indestructible and eternal and is everything in the Universe and the same is re-affirmed in Gadavalya Upanishad.

It is also said to refer to the Indian Triad or Trinity, thus expressing the union of three gods in one God-head. It plays an important part in meditation. A constant repetition of this sacred letter leads to the attainment of miraculous powers. It is said to rouse the latent powers in man.

NOTE.—Om is an antiquated form of ayam which means that one or He. Originally is meant the combination or a set of three letters forming a unity and to a Unity in an unmanifested condition. The three letters are therefore the sounds of creative Wisdom which called into existence the whole manifested Universe.

NOTE 2.—This tri-literal *aum* or *om* is a primitive mantram having extraordinary power in gayatri. The vibrations set up by the repetition of this letter are so powerful that if persisted in, they would bring down even the largest buildings to the ground.

NOTE 3.—It begins and ends all the mantras of worship with. It transforms every atom in one's body, setting up new vibrations and conditions and awakening the sleeping forces in the body. This is called the *purification* from an occult standpoint.

NOTE 4.—Om is of the Hindus just as Jehova is of the Jews, Allah of the Muhamadans, Amen of the Christians and so on. It signifies god in his every aspect and it should be prononnced in such a manner that the final 'm' is made to sound like 'hum' or vibrate in the throat like the humming of the bee and hence its name உட் தேம்.

ஓம்பல், பாதுகாத்தல், taking care of; protecting; 2. வெளுத்த பிசின், white gum.

ஓம்பூலக் கன்னி, வெற்றிலே, betel leaf.

ஓமா மீலம், சில ஆவரை, Tinnevelly senna — Cassia angustifolia.

ஓய்ச்சல், தளர்ச்சி, (கைகால் சோய்ச்சல்) becoming tired, as in the limbs of the body. —Debility.

ஓய்தல், தளர்தல், becoming weak or tired, as in limbs of the body; 2. இளைப் பாறல், to rest.

ஓய்ந் திருத்தல், ஆறி யிருத்தல், to be quiet or still; 2. வேலை யொழிந் திருத்தல், to cease from action or work of any kind.

ஓய்வு, சாதல், dying; ceasing to exist; 2. தளர்வு, becoming weak; 3. முடிதல், termination; ending.

ஓரக் கண், சாய்ந்த பார்வை, deviation of one of the eyes from its proper direction, so that the visual axes cannot both be directed simultaneously at the same objective point; squint-eyed—Strabismus.

ஓரக் கண்ணன், சாய்ந்த பார்வை யுடையோன், one who is looking obliquely; a squint-eyed man.

ஓரடி வாலி, பெருங் குரிஞ்சா, scammony swallow wort—Secamone emetica.

ஓரட்டாங் கை, இடக்கை, left hand, which is used with more dexterity than the right. See ஓரட்டிக் கை.

ஓரண்டம், ஆமணக்கு, which see.

ஓரண்ட வாதம், பிடரின் ஒரு விதையில் வாத நீர் தங்கிப் பருத்துக் காணு மோர் நோய், single hydrocele affecting one of the seeds in the scrotum.

ஓரண்ட வித்து, கொட்டை முத்து, castor seed — Ricinus communis; 2. பிடரி துள்ள ஓர் விதை, one of the testis in the scrotum.

ஓரம், சத்தி சாரம், a prepared burning and acrid salt; 2. கார சாரம், acid and alkali; 3. பெண் குரி, the genital of a female —Pudenda muliebres.

ஓரைக் கண், see ஓரக் கண்.

ஓர வுப்பு, சத்தி யுப்பு, a kind of prepared salt.

ஓரளா யிந்தம், இலுப்பை, which see.

ஓரறி வுயிர், பரிச வுணர்ச்சி யொன்றனையே யுடைய புல், மரம் முதலியனவாம், living organisms, like plants etc., supposed to have only the sense of touch.

ஓரா, ஓர்வகைக் கடல் மீன், a kind of sea-fish — Tenthis cancalenata; 2. முள்ளு பலாச்சி மீன், a grey fish—Diaden hystrix.

NOTE.—It consists of different varieites of various colours such as grey, brown etc. and named Tenthis vermiculata; T. Java, and T. oramin alias oliva cesus.

ஓராண்டு மூலி, சித்தர்க ளுண்ணு மூலிகை. இதைச் சாப்பிடுவதால் ஒரு வருஷம் வரையில் பசி யெடுக்காதெனக் கொள்ளப்படும், a drug taken by siddhars to keep them off from hunger for about a year.

NOTE.—This is a rare drug unknown in the present day, and usually taken by Yogis so as not to be disturbed from hunger during their meditation in Yoga practice. Another drug called இரு தாண்டி மூலிகை, is said to keep off one from hunger for about 20 years or so.

ஓராத்து வேஷ, பெருங் கும்மட்டி, bitter gourd—Cucumis colocynthis.

ஓரி, ஆ ணரி, (ஆண் + நரி) male jackal; 2. ஆண் மயிர், the hair of a male i.e., of a man: 3. ஆண் முசு, the male of a species of red monkey, 4. கிழ நரி, old jackal; 5. புற மயிர், hair on the body; 6. விலங் கேற்றின் பொது, male of beasts in general; 7. நீல நிறம், blue colour; 8. ஓர் வகைக் குதிரை, a kind of horse; 9. கரு டன், hawk or Brahminy kite; 10. சகோத ரர்களில்லாது தனிமையாய்ப் பிறந்த பெண் அல்லது ஆண், one (a male or a female) without brothers or sisters.

ஓரிட்சு, கரும்பு, sugar-cane — Saccharum officinarum.

ஓரி தலம், சவுட்டு மண், fullers's earth.

ஓரிதழ்க் கல், ஓர் வகைக் கல், (lit) one-petalled stone probably a mineral stone (*unidentified*).

ஓரிதழ்க் கல் சன்னம், ஓர் வகைக் கல் பொடி, minute particles of a stone of the above variety.

ஓரிதழ்த் தாமரை, இது ஓர் சிறிய பூண்டு. இதில் அனேகமாய்த் தண்டிராது, இலைகள் மாறி மாறி இருக்கும், பூ ஒற்றை, ரோஜாப் பூநிறம். வெகு சிறியது. இது சதா பூர்த்திக்கொண் டே யிருக்கும். இது பள்ளத் தாக்குகளில் ஈரமான இடங்களில் முளைக்கும், வேர் சிறி யது, மஞ்சளா யிருக்கும்; 3–4 அங்குல நீளம், இதற்கு மிருதத் தன்மை உண்டு. குளிர்ச்சி, வலிவுண்டாக்கல், நீர் பிரித்தல் முதலிய குணங்களும் வாய்ந்தது. இதன் இலைச்சாறு மருந்திற்கு மிக்க வுபயோகப்படும். இது தலைக்கு மிக்கக் குளிர்ச்சியைத் தரும்; வேர் நீரை வடிக்கும், இலையும் தண்டும் கஷாயத் திற்கும், லேகியத்திற்கு முதவும். சமூலம் வாதம், மூத்திர நோய், மூலம், நீர்ச் சுருக்கு இவைகளை நீக்கும், சுக்கிலத்தையும் அழ கையு முண்டாக்கும்; மேகம், கிரகணி இவை களையும் நீக்கும், இப் பூண்டை அரைத்துப் பசு மோரில் கலக்கி கொடுக்கப் பாலில்லா மாதருக்குப் பால் சுரக்கும், one petal lotus. (lotus with lateral petals appearing as one). monopetalous flower — Ionidium suffruticosum.

It is a perennial plant; stem scarcely any; leaves alternate; one-flowered; shorter than leaves; flowers small and rose-coloured; flowering nearly all through the year; grows abundantly in low and damp places. The plant is sold in bazaars; roots are yellowish-white; 3–4 inches long.

The whole plant is medicinally demulcent, refrigerant, tonic and diuretic. Veidyans use the whole plant in decoction and electuary. Mixed with oil it is used in preparing cooling liniment for the head; the root in infusion is diuretic. It is also used beneficially in cases of rheumatism, urinary complaints, piles etc. It increases beauty and develops the secretion of semen. It is also useful in venereal disorders and chronic dysentery; the plant if pulverised and given to women mixed in milk, promotes the secretion of milk.

ஓரிதழ் மூலம், ஓரிதழ்த் தாமரையின் வேர், see ஓரிதழ் தாமரை.

ஓரிதழ் வசனம், see ஓரிதழ்த் தாமரை.

ஓரிதாமியம், காத் தொட்டி, Ceylon sticky-mallow — Pavonia Zeylanica.

ஓரிலை, சிற்றுமல்லி, a plant,

ஓரிலைத் தாமரை, சற்ப வகையி லொன்று, a small plant ; one-leaf lotus. It is one of the several drugs used by Siddhars for rejuvenation ; c.f. ஓரிதழ்த் தாமரை ; 2. கருப் பிண்டம், foetus.

NOTE.—Although this plant is generally considered the same as the one-petal lotus (ஓரிதழ்த் தாமரை), it is very much doubted if it could be so, for the reason that it is treated as a 'kalpa moolikai'.

ஓரிலைத் தாமரைக் குளம், சுத்த சலம், pure water ; 2. பனிக் குடம் (fig) the sac containing the amniotic fluid — Amniotic sac.

ஓரிலைத் துத்தி, ஓர்வகைத் தத்தி, a species of mallow — Lida acuminata.

ஓரீற்ரு, ஓரீற்றுப் பசு } முதற் தடவை கன்று போட்ட பசு, a cow that calved but once.

ஓ ருப்பு, சத்தி யுப்பு, a kind of prepared salt contemplated in Tamil Medical Science. For preparation, see under its proper head.

ஓருள்ளிப் பூடு, ஒரே பல்லுடைய பூடு, a garlic not divided into cloves, but containing only one solid root. See ஒருதலைப் பூண்டு.

ஓரெரிப்பா யெரித்தல், சிந்தூரம், தைலம் முதலியவைகளைத் தயாரிக்குங் கால், ஒரு தடவை யா யெரித்தல், heating uniformly at a stretch ; heating continuously without interruption, as in preparing medicines such as medicated oils, chindurams (red-oxides) etc.

ஓரெரிப்பு, ஒரு தடவை யெரித்தல், heating but once.

ஓரெழத் தீசன், ஈ, fly.

ஓரே தண்ணீராய்க் காய்ச்சல், மறுபடியும் தண்ணீர் விட்டுக் கலக்கா திருக்கும்படிப் போதுமான சூடனவாகக் காய்ச்சுதல். இது சாதாரணமாய் நோயினின் றெழுந்தவர்களைக் குளியலாட்டு முறை, heating water but once sufficiently so that the necessity may not arise toadd cold water to it subsequently for bathing or drinking. This is the method usually followed while giving bath to convalascents or patients just recovered from illness.

ஓரை, ஐந்து நாழிகைப் பொழுது, a duration of two hours ; 2. 2½ நாழிகைப் பொழுது, a period of one hour or 60 minutes ; 3. கூகை, owl ; 4. சமயம், opportunity.

ஓரொரு தாளி, நெருஞ்சி, small caltrope — Tribulus terrestris.

ஓரோசனி, கடுக்காய், gall-nut — Terminalia chebula.

ஓர் கட் புள், ஒரு கண் பார்வையை யுடைய பறவை, one-yed bird ; 2. காகம், crow.

ஓர்ச் கண், see ஒற்றைக் கண்.

ஓர்க் கண்ணன், ஒரு கண் பார்வை யுடையவன், a man blind of one eye ; 2. சாய்ந்த பார்வை யுடையவன், a squint-eyed man.

ஓர்க் கண் பிராணி, ஒரே கண்ணை யுடைய பிராணி, an animal having but one eye—Monoculous being.

ஓர் கரண்டி, see ஒரு கரண்டி.

ஓர்க் கோஹ, ஓர் வாசனைப் பண்டம், அதாவது மீனம்பர், gray amber; i.e. an ash-coloured substance used in perfumery—Ambergris.

ஓர்ச்சி, உணர்ச்சி, feeling : consciousness.

ஓர்தி லிங்கு, கோங்கிலவு, yellow-flowered silk-cotton — Cochlospermum Gossypium.

ஓர் நதிக் கிளிஞ்சில், அண்ட வுப்பு, which see.

ஓர்ப் பலம், ஒரு பலம் இடை, one palam in weight ; 2. கோங்கு, see ஓர்தி லிங்கு.

ஓர்ப் பிலந்தை, காட்டிலந்தை, wild jujube—Zizyphus rugosa.

ஓர்ப்பு, ஆண் பிள்ளைகளுக் குரிய நான்கு குணங்களி லொன்று அதாவது கருமம் முடிக்குந் திணிவு, one of the four qualities of men viz —determination or perseverence in accomplishing actions, the other three qualities being fortitude, firmness and decision.

ஓர் மதுரம், கெந்தக நாற்றம், the smell of sulphur ; 2. பிசின், gum, or resin ; 3. ஆடு, sheep ; 4. மான், deer.

ஓர்மம், மனோ திடம், firmness of mind.

ஓர் மரந் தூங்கி, தேவாங்கு, sloth.

ஓலைக்

ஓர் மருந்து, அரத்தை, galaugal — Alpinia galanga.

ஓர் வாசல், யோனி, vagina.

ஓர் விதைப் பூடு, ஒரே விதையை யுடைய பூடு, a plant having but a single seed-lobe—Monochlamydeous.

ஓர் வுப்பு, சத்தி யுப்பு, a kind of prepared salt.

ஓல மிடல், அழுதல், weeping; 2. கத்தல், crying.

ஓலமிடு மரம், சுணங்கன் விருட்சம், a tree which makes a buzzing sound (*unidentified*).

ஓலம், கடல், sea, ocean. It is so called from its noisy waves; 2. ஒலி, sound, noise; 3. பாம்பு, snake.

ஓலன், ஓர் வகைக் குழம்புக் கூட்டு, a kind of vegetable preparation, much in vogue in Malabar.

ஓலை, தெங்கு, கமுகு, தாழை, பனை முதலிய வற்றின் இலை, the leaf of the cocoanut, the arecanut, the pine-apple, the palmyra and the leaves of the other kinds of palm-trees—Cadjan; 2. பனை யோலை, palm-leaf especially that used for scraping or collecting medicines when grinding; 3. பேய் முன்னை, charcoal tree — Convolvulus speciosus; 4. நறுக்கு, a piece cut off from a palm leaf, for preserving civet, collyrium etc.; 5. ஏடு, palmyra leaf especially that for writing upon; 6. காதணி, palmyra leaf worn generally in the lobes of ears by women.

ஓலைக்க ணூட்டு, ஓலைத் தளிர், the tender leaf of palm trees.

ஓலைக் கால் நண்டு, ஓர் வகைக் கடல் நண்டு, a kind of sea-crab — Neptunus pelagicus.

ஓலைக் கிழித்தல், (lit, to tear off one's life's page.) இறக்கச் செய்தல், to bring about the death.

ஓலைக் கிளிஞ்சில், ஓலையைப் போல் தட்டையான கிளிஞ்சில் சங்கு, a kind of flat conch resembling a palm-leaf.

ஓலைச் சக்கரம், தாளிப் பனை, talipot — Corypha umbraculifera.

ஓலைச் சீறகு, பாதிப் பனை யோலை, one-half of a palmyra leaf.

ஓலைப் பாம்பு, (ஓலை + பாம்பு, cadjan + snake) Chameleon snake — Tropidonotus stolatus.

ஓலைப் பால், பனங்கள், palmyra toddy.

ஓலைப் பிரண்டை, ஓர்வகைத் தட்டைப் பிரண்டை, a kind of flat adamant creeper of the species of Vitex quadrangularis.

ஓலைப் பூ, தாழம் பூ, fragrant screw-pine —Pandanus odoratissimus.

ஓலை மூங்கில், தட்டையான மூங்கில், flat bamboo.

ஓலை வாங்கல், சாதல் to die.

ஓலை வாளை, சாவாளை மீன். இது ஓலையைப் போல் மிளமாயும், மெல்லியதாயும், பார்வைக்கு வெண்மையாயும், பள பளப்பாயு மிருக்கும், a silvery cutlas-fish — Trichiurus savala. It is thin, flat and soft, like a palm-leaf and is white and glossy; 2. ஓர் வகை வாளை மீன், Cutlas-fish—Trichiurus hanmela.

ஓவல், வருத்தல், suffering.

ஓவாப் பிணி, தீராத நோய், an incurable disease; 2. மாறுத துன்பத்தை யுண்டாக்கும் நோய், any disease not subject to variation in giving pain.

ஓவாய், பற்கள் போனவாய், பொக்கு வாய், mouth lacking teeth.

ஓவாய்ப் பல், see ஒறுவாய்ப் பல்.

ஓவிய காயம், புலி, tiger, so called from its body appearing as if painted.

ஓற் பலம், see ஓர் பலம்.

ஓனாய், கோனாய், wolf — Canis lupus alias C. pallipes.

ஓனாய் மீன், ஓர் கடல் மீன், a fierce and voracious salt-water fish — Wolf-fish.

ஔ, பாம்பு, snake ; 2. பூமி, earth ; கடித்தல், biting.

ஔகாசம், சோதிப் புல், a shining grass ; grass shining in the dark.

ஔசரம், சோடாங் கல், a mineral stone ; 2. இரும்புக் கல், iron stone or iron ore.

ஔசாதிகம், மிளகு, pepper — Piper nigrum.

ஔசாலகம், பூவந்தி, soap-nut tree — Sapindus emarginatus.

ஔசீரம், கவரிமான் மயிர், the hair of the yawk ; 2 படுக்கை, bed.

ஔசுமாபக வாதம், see அவுசுமா பக வாதம்.

ஔடணம், மிளகு ரசம், pepper-water.

ஔடத கந்த சுரம், see அவுடத கந்த சுரம்.

ஔடத கரணம், மருந்துகளைத் தயாரிக்கும் வகையில், மூலிகை அல்லது வேறு சரக்குகளின் போக்கு, the action of herbs or other drugs on the chief ingredients in the preparation of a Pharmaceutical product ; 2. நோய்களைக் கண்டித்துக் குணப்படுத்தும் வகையில் மருந்துச் சரக்குகளுக் குண்டான போக்கு, the effect of drugs in curing diseases ; Therapeutic action of drugs in the human system.

ஔடத கரண விதி, மருந்துகளைப் பற்றியும், அவைகளின் உபயோகம், செய்யு முறை, கொடுக்கு முறை, இவைகளைப் பற்றியும் கூறும் நூல், an authoritative treatise describing the preparations of the several kinds of medicines, with their uses and the manner of application—Pharmacopoeia.

ஔடத குங்குமம், குங்கும நிறம் போன்ற சிவந்த மருந்து, அதாவது, செந்தூரம், medicine which is red, like the red powder worn by women on the forehead —Red oxide.

ஔடதக் கிரமம், ஒரு நோய்க்குப் பல மருந்துகளைக் கொள்ளுங் காலத்தில் அனுசரிக்க வேண்டிய வரிசை முறை, the method generally followed or order generally prescribed by Veidyans while using several medicines from time to time for a particular disease.

ஔடதக் கூறு, மூலிகை யல்லது மருந்துச் சரக்குகளின் தன்மை, the nature of drugs or other medicines.

ஔடதச் செயல், மருந்துகளின் தொழில், the action of drugs.

ஔடத டாப்பு, மருந்து நியமம், a medical direction of remedies for a disease and the manner of using them — Prescription.

ஔடத நாமாவளி, மருந்துகளின் பெயர்களையும் அவைகளின் விவரங்களையும் சொல்லும் அட்டவணை, the vocabulary of names or technical terms in medicine.

ஔடத நூல், மூலிகை அல்லது மருந்துச் சரக்குகளைப் பற்றி பொதுவாகக் கூறும் நூல், any treatise on herbs or other drugs.

ஔடதப் பட்டோலை, மருந்தின் கூட்டுமுறை விவரம், a medical prescription containing the details of ingredients of a particular medicine by a formula— Recipe.

ஔடப் பரீட்சை, மூலிகை அல்லது மருந்துச் சரக்குகளின் சோதனை, examination of drugs or other medicines.

ஔடதப் பிரயோகம், மருந்து கொடுத்தல், administration of medicine to a patient.

ஔடதப் போக்கு, பொதுவாக மருந்துகள் உடம்பினுள் தொழில் நடத்தும் விதம். இது பல வகைகளாகக் கொள்ளப்படும், characteristic actions of drugs in general in the system. It consists of various kinds viz :—

1. ஓர் நோய்க்கு மருந்தைப் பிரயோகிக்குங் கால், அது உடம்பி னூறிக் குணப் படுத்தும் தொழில், the *therapeutic* action of the remedies employed in the treatment of a particular disease.

2. உடம்பிற்குச் சீதளம், உஷ்ணம், சுறு சுறுப்பு, பசி, தாகம், நித்திரை முதலியவைகளை உண்டாக்கும் தொழில், the *physiological* action of drugs in giving rise to chillness, heat, stimulation, hunger, thirst, sleep etc.

3. ஆத்தும தத்து வத்தை, எழுப்பிச் சித்திகளே யடையச் செய்யும் தொழில், the *psychological* action of drugs in relation to soul and the body leading to the attainment of supernatural powers.

4. காய கற்பத்தினால், நரை திரை மாற்றம், யௌவனம், நீண்ட ஆயுள் முதலியவைகளே இயற்றும் தொழில், the *biological* action of drugs in relation to life-features of human beings.

5. மருந் துட்கொள்ளுங் காலியில் பத்தியக் கேட்டினால் உடம்பில் மாறுபாடுகளே யுண்டாக்கும் தொழில், the *reflex* action of drugs inducing several nervous affections in the system.

6. சதை, எலும்பு இவைகளுக்குக் காயம் ஏற்பட்ட காலத்தில் அவைகளே ஒன்று படுத்தும் தொழில், the action of drugs resulting in the union of torn muscles and of fractured bones.

7. உடம்பிற்கு ரிரணம் கண்ட காலியில், அதனால் வேறுபிரதக் கெடுதல் ஏற்படா வண்ணம் கார்க்கும் தொழில், the *antiseptic* action of drugs in preventing decay or putrefaction of wounded tissues.

8. வசிய முதலிய மருந் தீட்டினால் தன் வச மாக்கச் செய்யும் தொழில், the *magnetic* action of drugs in attracting persons to one's side and making them do things as one desired.

9. தூக்கம், மயக்கம், சித்தப் பிரமை முதலிய குணங்களே யுண்டாக்கும் தொழில், the *hypnotic* action of drugs inducing sleep, giddiness etc.

10. மூலிகை களுக்குக் காப்புக் கட்டி, உரு ப்போட்டு, பேய், பில்லி, சூனியம் முதலியவைகளே இயற்றும் தொழில், the *magical* action of drugs in bringing about devilry, witchcraft, sorcery etc.

ஔடத முறிப்பு, மருந்து வேகங்களே முறித்தல், neutralising the action of drugs.

ஔடத முறை, மருந்துகளைத் தயாரிக்கும் விதத்தையும், பிறகு அவைகளைக் கொள்ளுங் கிரமத்தையும் பற்றிக் கூறும் விஷயங்கள், particulars regarding the direction for the preparation and administration of a remedy.

ஔடதம், மருந்து, medicines or medicinal preparations in general; 2. ஆற்று மருந்து, a medicament; 3. மூலிகை, a drug or drugs.

ஔடத ரகசியம், மூலிகை அல்லது மருந்துச் சரக்குகள் சாதாரணமாக வைத்தியத்தில் லல்லாமல், சோதிஷம், வாதம், மாந்திரீகம், காய கற்பம், கவன குளிகை, முதலிய வேறு வகையான செயல்களிலும் உபயோகப்படும் விஷயத்தைப் பற்றிய இரகசியங்கள், the secret of the psychological virtues of plants, drugs etc. and their usefulness as such, in many ways such as in Astrology, Alchemy, Magic, Rejuvenation etc.

ஔடத வகுப்பு, மூலிகை அல்லது மருந்துச் சரக்கு முதலியவைகளின் பாகுபாடு. இவைகளில் தாது வர்க்கம், தாவர வர்க்கம், சீவ வர்க்கம் ஆகிய மூன்று வர்க்கங்களி லின்றும் சேகரிக்கப் பட்ட மருந் தினங்களுக் குரிய செய்கையானது, ஒன்றுக் கொன்று வெவ் வேறுகவும், குண குணங்களுக்குத் தக்கவாறு விதியாசம் பொருந்திய தாகவும் இருக்கும். ஆகவே, செய்கையில் ஒத்திருக்கும் ஔடதங்க ளெல்லாம் ஒரே வகுப்பி லடங்கும். இவ் விதமாகப் பிரிக்கப்பட்ட வகுப்புகள் அனேக முண்டு, அவற்றுள் முக்கியமான சில வகுப்புகளே மாத்திரம் அடியிற் கூறப் பட்டுள்ளன, the classification of drugs or other medicines. The various plants and drugs collected from the mineral, the vegetable and the animal kingdoms differ in their therapeutic actions according to the nature and properties inherent in them and so they are grouped under several heads consistent with their actions when employed in diseases. The following are the chief of such classifications:—

A. ஆயுள் வேத நூற்படி, *According to Ayurveda:*—

1. அங்காகருஷ்ண நாச காரி — சன்னி, இசிவு, வலி, முதலிய வாத நோய்களைக் கண்டிக்கு மருந்துகள், those which relieve nervous affections —Antispasmodics viz:—

அபினி, opium ; பெருங்காயம், asafoetida ; சடா மாஞ்சி, valerian root ; கஞ்சா, ganjah ; ஓமம், sison ammi ; ஊமத்தை, dhatura ; புகையிலை, tobacco ; மருக் கொழுந்து, maid's love ; காய்க் கடுகு, dog-mustard ; ஆடா தோடை, Malabar wintercherry ; புனுகு, civet etc.

2. உதர வாத ஹரி—வயிற்றி லுள்ள வாயுவைப் போக்கிப் பரி யுண்டாக்கு மருந்துகள், drugs which relieve flatulence and assuage pain — Carminatives viz :—

ஓமம், sison ammi ; ஏலம், cardamom ; இராம்பு, clove ; இலவங்கப் பட்டை, cinnamon bark; சோம்பு, aniseed ; சுக்கு, dried ginger ; மிளகு, black pepper; திப்பிலி, long-pepper ; சாதிக் காய், nut-meg ; வசம்பு, sweet flag ; அரத்தை, galangal ; பேய் மருட்டி, Malabar cat-mint ; மருக் கொழுந்து, maid's love ; வெற்றி லை, betel-leaf ; சீரகம், cumin seed ; கஸ்தூரி மஞ் சல், round zedoary ; பெரிய எலு மிச்சை, large lemon fruit etc.

3. உஷ்ண காரி — உடம்பில் காக்கையை அதிகப் படுத்து மருந்துகள், drugs of heat-making potency or agents producing stimulation — Stimulants viz :—

கஞ்சா, ganjah leaf ; சாராய வினங் கள், arrack and other liquors ; சடா மாஞ்சில், valerian root ; நொச்சி, vitex (Nochi); கற்பூரம், camphor ; மிளகு, pepper ; ஓமம், sison ammi ; சுக்கு, dried ginger ; திப்பிலி, long-pepper ; கடுகு, mustard ; குங்குமப் பூ, English saffron ; இலவங்கம், clove ; இலவங்கப் பூ, clove flower etc.

4. கதி நாச காரி—கட்டிகளைக் கரைக்கும் மருந்துகள், agents that promote the dissipation of a pathologic growth—Resolvents viz :—

